யிருந்தால், 30 ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. "இன்டென்சிவ் காம்ப்" என்ற முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது பத்தாயிரம் பேருக்கு இந்த அறுவைச் சிகிச்சை செய்வது என்று மாவட்ட ஆட்சியாளர் மூலமாகத் தீவிரமான முறையில் இது நடத்தப்படுகிறது. அந்த முனைப்பு இயக்கத்தில் ஒவ்வொருவருக்கும் ரூ. 100 செலவிடலாம் என்று அனுமதித்திருக்கிறது. அந்த நேரத்தில், 60 ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு இந்த உதவித் தொகை தரப்படுகிறது. ஆறு நாள் தங்கி, உணவு முதலியவைகளுக்கு ரூ. 20 எடுத்துக்கொள்ளப்படுகிறது. மருந்து, மற்ற செலவுகளுக்கு ரூ. 20 செலவழிக்கப்படுகிறது. எனவே, அந்தக் காலகட்டத்தில் மட்டும் ரூ. 60 அளவுக்கு அவர்கள் உதவித் தொகை பெற்றுக் கொண்டு ஆறு நாட்கள் தங்கியிருந்து நல்ல உடல் நலத்தோடு திரும்ப வழி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சுருக்குவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற அறுவைச் சிகிச்சை முறைதான் முழுமையும் கையாளப்படுகின்றது. பண்டைய மூதாதையோர் தன்னடக்கத்தோடு சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு வாழ்ந்த காரணத்தினாலே அவர்கள் குறிப்பிட்ட காலத்திலே குழந்தைகள் பெற்றுக்கொண்டு பெற்ற குழந்தைகளும் நல்ல திடகாத்திரமாக வாழ்ந்தார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். அவற்றை ஆராய்ச்சி செய்து அப்படிப்பட்ட முறைகளைக் கல்வித் துறையின் மூலமாக மக்களிடம் பரப்ப அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மன அடக்கம், தன்னடக்கம் என்பனவற்றை உத்தமர் காந்தியடிகள் எடுத்துச்சொன்னார்கள். புலனடக்கம் பற்றி வள்ளலார் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். வேறு பெரியவர்களும் இவற்றைப் பற்றியெல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பெரியவர்கள் எடுத்துக் காட்டியவற்றை பெரும்பாலும் நடைமுறைக்குக் கொண்டுவர இயலாமை காரணமாகத்தான் நாம் இந்த அறுவை சிகிச்சை முறைகள் மூலமாக நாட்டு மக்களுக்கு பாதுகாப்புத் தேடுகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன்: அறுவைச் சிகிச்சையைப் பொறுத்த வரையில் இந்திய துணைக்கண்டத்திலேயே தமிழகத்திலேதான் ஜனத்தொகை அடிப்படையிலே பார்த்தால் முதன்மையாக இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்கிறார்களே அது உண்மையா?

[1972 டிசம்பர் 12

இதிலே சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ஊக்குவிக்கின்ற முறை இருப்பதாகத் தெரிகிறது. அது செயல்படுகிறதா என்பது தெரியவில்லை.

திரு. எ. க. துரைசாமி : ஒருவார இருவார விழாக்கள் என்ற முறையில் நடத்துகிறோம், சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காக அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக செய்ததைப்போல தமிழகம் முழுவதுமாக ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் அமைச்சர் எல்லோரும், மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் வந்திருந்து மக்களை ஈர்க்கின்ற முறையிலே ஏற்பாடு செய்து அங்கே நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னால் இப்பொழுது செய்வதைவிட நல்ல பலன் விளையும் என்று அரசு கருதுகிறதா? அப்படியானால் ஒரு குறிப்பிட்ட நாளை குறித்து செயல்பட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரே ஒரு நாளில் திருவிழா கொண்டாடிவிட்டு மிச்ச நாட்களில் உறங்குகின்ற பழக்கம் நம் நாட்டு பழக்கம் ஆகும். இப்பொழுது ஒரு வார இருவார விழா என்ற முறையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். அப்பொழுது கிட்டத்தட்ட 10 நாட்கள், 15 நாட்கள் நல்ல பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. இதைத்தவிர முனைப்பு இயக்கம் நடத்துகின்ற பொழுதும் 20–30 நாட்கள் இந்தத் திட்டத்தின் நல்ல கருத்துக்களை பிரச்சாரம் செய்கின்றோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் இவர்களை யெல்லாம் அழைத்துத்தான் முனைப்புத் திட்டம் என்ற முறையிலே விழா நடைபெறுகிறது. அப்படி நடைபெறுகின்ற பொழுது உறுப்பினர் அவர்களும் அதிலே பங்குகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, அறுவைச் சிகிச்சையில்லாமலே சித்த மருத்துவ முறையிலே பல மருந்துகள் ஆராய்ச்சிகள் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டு அவை மூலமாக கர்ப்பத் தடை செய்யலாம் என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி அரசு முயற்சிசெய்து இருக்கிறார்களா? செய்யாவிட்டால் இனிமேலாவது செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள குடும்பக் கட்டுப்பாட்டு மருந்துகள் ஆராய்ச்சித் துறையினர், ஆயுர்வேத மருந்துகள், சித்த மருந்துகள் இவற்றையெல்லாம்



1972 டிசம்பர் 12]

ஆராய்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். வேறு சில மாத்திரைகளையும் பயன்படுத்தமுடியுமா என்ற ஆராய்ச்சியையும் மேற்கொண்டிருக்கிறார்கள். சில மருத்துவமனைகளிலே அந்த மாத்திரைகள் பயன்படுத்தப்பட்டு புள்ளிவிவரங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றைப்பற்றித் திட்டவட்டமாக தெரிவிக்கின்ற வாய்ப்பு இல்லை. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் 100-க்கு 100 வெற்றி, 100-க்கு 95 வெற்றி, 100-க்கு 50 வெற்றி *Proportionate success of family planning as to the various methods* என்று அந்தந்த மருந்துக்கு ஏற்ப அமைந்துவிடுகின்றன. 100-க்கு 40 அல்லது 100-க்கு 50 என்ற அளவிலே பல அமைப்பையும் Conventional contraceptives விட Vasectomy, tubectomy முறைதான் அறுவை சிகிச்சை முறைதான்—செம்மையான முறையிலே பயன் அளிக்கும் என்ற கருத்து நிலவி வருகிறது.

திரு. வீ. மலைக்கண்ணன் : ஆஸ்திரேலியாக் கண்டத்தில் ஒரு பூ இருப்பதாகவும் அதைப் பெண்கள் புசித்தால் கருத்தரிப்பதில்லை என்று சொல்லப்படுகிறதே, அதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆஸ்திரேலியாக் கண்டத்திற்கு பூவிற்காகச் செல்லத் தேவையில்லை. தமிழ்நாட்டு வேப்ப எண்ணைக்கே அந்த வகைப் பயன் இருக்கிறது. அதைப் பயன்படுத்துகிறவர்களுடைய திறமையைப் பொறுத்தது.

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

* 123 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை தொகுதி, அம்மூர் பேரூராட்சியில், ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, அம்மூர் ஒரு பேரூராட்சி; அதன் சுற்றுவட்டாரத்திலே நல்ல வைத்திய வசதிகள்

[1972 டிசம்பர் 12

இல்லாத காரணத்தினால் இந்த முயற்சியை அரசு இனியாவது எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அம்மூர் பேரூராட்சியில் அது சார்ந்துள்ள வாலாஜா ஒன்றியத்தில் லாலாப் பேட்டையில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அம்மூர் பேரூராட்சியே முன்வந்து வேறு டிஸ்பென்சரி நடத்தலாம். அப்படி முன்வந்து உதவித்தொகை கேட்டால் அரசாங்கம் பரிசீலிக்கும். அம்மூரைப்போல் எத்தனையோ அம்மூர்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. எனவே ஒரேயொரு அம்மூரைப்பற்றித் தனியாகக் கவலைப்பட அரசால் இயலவில்லை.

* 124 வினா.—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், சங்கராபுரம் பிரதம சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(அ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு கொண்டு வரப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி வட்டம் சங்கராபுரம் ஒரு சென்டரான இடமாக இருப்பதால் அதைச் சுற்றிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. இப்பொழுது அமைச்சரவர்கள் சொன்னார்கள், அங்கு பிரதம சுகாதார நிலையத்திற்குப் பதில் அரசாங்க மருத்துவமனை திறக்கும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அங்குள்ள கிராம மக்கள் எந்த அளவிற்குக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் அதிகம் எடுத்துச் சொல்வதற்கில்லை. ஏனென்றால் மீண்டும் இந்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து அந்த சென்டருக்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே ஏற்பட்ட கருத்து வேற்றுமை கேள்வி கேட்ட முறையில் தோன்றிய தாகும். கேள்வியில் சங்கராபுரம் பிரதம சுகாதார நிலையம் என்று



1972 டிசம்பர் 12]

இருக்கிறது. சங்கராபுரத்தில் பிரதம சுகாதார நிலையம் இப்பொழுது இல்லை. அதுதான் பதிலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சங்கராபுரம் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரி இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஆணை யிட்டு இருக்கிறது.

## இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மீனவர்கள்

* 125 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில், நாட்டுப் படகு வைத்து மீன் பிடிப்பவர்களுக்கும், விசைப்படகு மூலம் மீன் பிடிப்பவர்களுக்கு மிடையில் தகராறு ஏற்பட்டு, விசைப்படகினர் நாட்டுப் படகினர் போடும் வலைகளைச் சேதப்படுத்துவதும், நாட்டுப் படகினர் இதனால் பாதிக்கப்படுவதுமாக இருப்பதைத் தவிர்க்கவென எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இராமநாதபுரம் மாவட்ட நாட்டுப் படகு மீனவ சங்கத் தலைவரையும் அவர்களைச் சேர்ந்த சிலரையும் மீன்துறை உதவி இயக்குநர், சிவகங்கை, அவர்கள் நேரில் பேசி நாட்டுப் படகுக்காரர்களும், விசைப்படகுக் காரர்களும் மீன் பிடிப்பது சம்பந்தமாக மீன்துறை இயக்குநரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் கலந்து பேசி ஒரு முடிவு எடுக்கும் வரை அமைதியாக இருக்கும்படியும் எவ்வித வன்முறையில் இறங்க வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவரவர்களே, நாட்டுப்படகுகளின் மூலம் மீன் பிடிப்பவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக அந்தத் தொழிலை நடத்துகிறார்கள். விசைப்படகுகளில் மீன் பிடிப்பவர்கள் அதை வாணிபமாக, அதாவது லாப நோக்கத்தோடு செய்கிறார்கள். எனவே, வாழ்க்கைக்காகத் தொழில் செய்யும் அந்த மக்களுக்கு அடிக்கடி இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுகின்றன. எனவே, அதை வரையறுத்து விசைப்படகு வைத்திருப்பவர்கள் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் சென்றுதான் மீன் பிடிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, ஏற்கெனவே விசைப்படகுகாரர்கள் 5 மைல்களுக்கு அப்பால் சென்றுதான் மீன் பிடிக்க வேண்டுமென்றும், நாட்டுப் படகுக்காரர்களும், கட்டுமரக்காரர்களும், 5 மைல்களுக்கு உள்ளே மீன் பிடிக்க வேண்டுமென்றும் முறையிருக்கிறது. அதை மீறுவதால்தான் இப்படிப்பட்ட சச்சரவுகள் ஏற்படுகின்றன. அதைக் கண்காணிக்க காவல் ரோந்துப் படைகள் விடப்படுகின்றன. இருந்தாலும் இரு சாரரும் எல்லையை மீறிவிடுகிறார்கள். அதனால்தான் சண்டைகள் ஏற்படுகின்றன.

*Central Government assistance for drought-affected areas*

*126 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) the details of grants received from the Central Government for the drought-affected areas in Tamil Nadu during 1972: and

(b) the districts in which they have been distributed,

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செலவிட, நடப்பு நிதி யாண்டு 1972–73-ல், இந்திய அரசிடமிருந்து எந்தவித மானியத்தையும் மாநில அரசு பெறவில்லை. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் மத்திய அரசு பொறுப்பேற்று நடத்தும் திட்டமான "வறட்சி பீடிக்கும் பகுதிகள் திட்டம்" குறித்து, இந்திய அரசு 1972–73-ல் ஆகும் செலவின் ஒரு பகுதிக்காக 25—8—1972-ல் ரூ. 18 லட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தலைவரவர்களே, இந்தப் பதில் தயாரிக்கப்பட்ட பிறகு, தமிழ் நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக மத்திய சர்க்காரிடம் நாம் நிதி உதவி கோரியிருந்தோம், மத்திய சர்க்கார் 1.5 அதாவது 1½ கோடி ரூபாய் நிதி உதவி அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இந்தியத் துணைக்கண்டத்திலிருக்கும் சில மாநிலங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அதிலே தமிழகமும் ஒன்று என்பதையும் பிரதம மந்திரி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஆந்திரத்தில் ஒரு இடத்தில் குறிப்பிட்டார்கள். அதை எதிர்பார்த்து மாண்புமிகு டாக்டர் கலைஞர்



1972 டிசம்பர் 12]

அவர்கள் ஒரு கோடி ரூபாயை முன்பணமாக ஒதுக்கி இருந்தார்கள். எதிர்பார்த்த அளவிற்கு மத்திய அரசைத் தொடர்ந்து நமது அரசு வற்புறுத்தி மானியத்தைப் பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 6 கோடி ரூபாய்க்கு வறட்சி நிவாரண வேலைகளுக்காகப் பணம் தர வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டோம். மத்திய அரசிலிருந்து ஒரு குழு வந்து பார்த்தார்கள். அவர்கள் வந்து பார்த்த பிறகு 1½ கோடி ரூபாய் கொடுப்பது என்று மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. பணம் வந்திருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்பொழுது மத்திய அரசு 1½ கோடி ரூபாய் வரையில் மானியம் கொடுத்துள்ளதாகச் சொன்னார்கள். திருச்சி மாவட்டத்தில், கரூர் அரவக்குறிச்சி, தாந்தோனி போன்ற வட்டங்கள் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டவை. அவைகளுக்கு ஏதேனும் செலவிடப்பட்டதா? அப்படியில்லை யென்றால் உதவித் தொகை கொடுக்க வழி செய்வதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. கே. சுந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது என்றும் கண்டிராத அளவில் வெள்ளம் ஏற்பட்டு, புயலால் பாதிக்கப்பட்டு மக்கள் அவதிப்படுகிறார்கள். பெருத்த அளவில் உயிருக்கும், உடைமைக்கும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. வெள்ள நிவாரணம் அளிப்பதைப்போல் இது குறித்தும் மத்திய அரசிடமிருந்து கணிசமான பணத்தை நிவாரண நிதியாக வாங்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப்பற்றி நேற்றைய தினம் மாண்புமிகு முதல்வரவர்கள் விவரமான அறிக்கையை மன்றத்திலே படித்திருக்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய அரசிடமிருந்து 1½ கோடி ரூபாய் வந்திருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். பொதுவாக கோவை மாவட்டத்தில் பல்லடம், அவிநாசி போன்ற பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. எனவே அந்த இடங்களுக்கு விசேஷமாக நிதி ஒதுக்கப்படிருக்கிறதா? இல்லையென்றால் இனிமேலாவது ஒதுக்கப்படுமா ?

'[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எவ்வளவு என்ற விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை என்று சொன்னேன். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, வறட்சி நிவாரணத்திற்காக 2 கோடி திட்டம் என்ற பெயரால் ஊராட்சி ஒன்றியங்களிலே சில வேலைகளை எடுத்துக்கொள்ளுமாறு அரசு உத்தரவிட்டிருந்தது. அதன்படி ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டு சில ரோடுகள் பராமரிப்பதற்காகப் பணம் செலவிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சாலை வேலைகள் அரைகுறையாக நடந்துகொண்டிருக்கும்பொழுது, பணம் வரவவில்லை என்று உத்தரவிட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. அவைகளைத் தொடர்ந்து செய்வதற்கு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டுமென்று இருந்ததோ அதற்கும் மேலாகச் செலவிடப்பட்டிருப்பதாக அங்கு சென்ற குழு தகவல் கொடுத்திருக்கிறது. மத்திய அரசு எவ்வளவு ஒதுக்கியுள்ளதோ அதையும் அளிக்கிறோம். மேற்கொண்டும் அரசால் இயன்ற அளவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது மாண்புமிகு அங்கத்தினருக்கும் தெரியும். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களுக்கும் தெரியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Revenue, the total amount that has been set apart for Dharmapuri in general and for Hosur and Denkanikota taluks in particular in regard to drought relief works?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே தர்மபுரி மாவட்டத்திற்கு 2 கோடி ரூபாய் மத்திய அரசு தந்திருப்பதிலிருந்து ஒதுக்கியிருக்கிறது. அடுத்த ஆண்டு 4 கோடி ரூபாய்க்குப் பொறுப்பேற்று, அடுத்த இரண்டு ஆண்டுகளில் பணிகள் நடைபெற இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்தில் எல்லா வேலைகளும் பூர்த்தியாகும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்பொழுது மத்திய அரசு அளித்திருக்கும் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வறட்சி நிவாரணத்திற்குத் தந்திருப்பதாகச் சொன்னார்கள். அதை வெள்ள நிவாரண நிதிக்குப்



1972 டிசம்பர் 12]

பயன்படுத்திக்கொள்ள அனுமதி பெற்றுச் செய்ய நமது அரசு முயற்சியெடுக்குமா ? அதோடுகூட முன்பெல்லாம் வெள்ளப் பணிகளுக்காக.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு துணைக் கேள்வி கேளுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வெள்ளப் பணிகளுக்காக 3 டிவிஷன்கள் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்று படித்தார்கள். வெள்ள நிவாரணப்பணி வேறு, வறட்சி நிவாரணப் பணி வேறு. வறட்சி நிவாரணப் பணிக்காக மத்திய அரசிடமிருந்து $1\frac{1}{2}$ கோடி ரூபாய் பெற்றோம். வெள்ள நிவாரணப் பணிக்காக எழுதுவதாக இருக்கிறோம். நிச்சயமாக, கணிசமான தொகையைப் பெற்று அந்தப் பகுதி வேலைகளையெல்லாம் கவனித்துச் செய்வோம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக மாண்புமிகு முதல்வரவர்கள் ஒரு கோடி ரூபாயைத் தமிழக அரசாங்க நிதியிலிருந்தும் ஒதுக்கியிருக்கிறார்கள்.

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தின் வறட்சித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ஒதுக்கிய நிதியிலிருந்து நமது அரசு நிதி ஒதுக்கித் தந்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் அதே திட்டத்தின்கீழ் ஆங்காங்கு சாலைகள் செப்பனிட வேண்டுமென்பதற்காகக் கற்கள் சேகரிக்கப்பட்டு ஓராண்டுக் காலமாகப் பரப்பப்படாமல் இருக்கிறது. நமது அரசாங்கம் அதிக நிதியைத் தந்து அதைப் பரப்புவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதைத்தான் துவக்கத்திலேயே சொன்னேன். மத்திய அரசு எது எதற்கு, எவ்வளவு எவ்வளவு ஒதுக்க வேண்டுமென்று இரண்டு கோடி ரூபாய்த் திட்டத்தைக் கொடுத்தார்கள். அப்படிச் சொல்லப்பட்டதற்கு அதிகமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் துவக்கத்திலேயே செலவழித்துவிட்டார்கள். மத்திய அரசு அதை ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டு பணத்தை மத்திய அரசுதான் கொடுக்க வேண்டும். அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

[1972 டிசம்பர் 12

*Abolition of capital punishments*

* 127 Q.—THIRU N. DENNIS :

THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased state—

(a) whether the Union Government has sought the views of the State Government on the question of abolition of capital punishments: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை. ஆனால், இப்பொருள் குறித்து சட்ட ஆணைக்குழு செய்திருக்கும் பரிவுரைகள் மாநில அரசால் பரிசீலிக்கப்பட்டன. மரண தண்டனை ஒழிக்கப்படக் கூடாது என்று சட்ட ஆணைக்குழு செய்திருந்த பரிவுரையை இந்த அரசு ஏற்றுக்கொண்டது.

திரு. என். டென்னிஸ் : லைஃப்க்கு லைஃப் என்றிருப்பதை விட ரெஃபர்மேட்டரி ஃபனிஷ்மென்டை செயல்படுத்தும் முறைபற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தண்டனை பெற்றதற்குப் பின்னால்தான் அந்தக் கைதிகளை எப்படிச் சீர்திருத்துவது என்பது பற்றிப் பரிசீலிக்கப்படும். இப்போதுள்ள சட்டப்படி ஆயுள் தண்டனையும் இருக்கலாம், மரண தண்டனையும் இருக்கலாம். மரண தண்டனை நீக்கப்படக்கூடாது என்ற கருத்துத்தான் இன்று நிலவி வருகிறது.

திரு. எம். தேவராசன் : நேற்று ராஜ்ய சபாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள மசோதாவில் மரண தண்டனை இருக்கும், ஆனால் எக்ஸ்ட்ரீம் கேஸ்களில்தான் இருக்கும். மற்றபடி இருக்கக் கூடாது என்ற முறையில் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை வைத்துக்கொண்டு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு செய்தி வந்துள்ளது. இப்போதுள்ள சட்டப்படியே எல்லாக் கொலைகளுக்கும் மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்பதல்ல. இப்போதுள்ள சட்டப் படியே ஆயுள் தண்டனை கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அதைச் சற்று விரிவுபடுத்தும் கருத்துடன்தான் அந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.



1972 டிசம்பர் 12]

கூட்டுத்துறையில் தொடங்கப்பட்ட தொழில்கள்

* 128 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு, தனியார் கூட்டுத்துறை திட்டத்தின்கீழ் 1970, 1971-ஆம் ஆண்டுகளில் என்ன என்ன தொழிற்சாலைகள் திறக்கப் பட்டன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1970, 1971-ஆம் ஆண்டுகளில் கூட்டுத்துறையில் கீழ்க்கண்ட தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன:

1970-ல்—எந்தத் தொழிற்சாலையும் நிறுவப்படவில்லை.

1971-ல்—1. தமிழ்நாடு இரசாயனப்பொருட்கள் தொழிற்சாலை (*Tamil Nadu Chemical Products Limited*).

2. தூத்துக்குடி கார இரசாயனப்பொருட்கள் தொழிற்சாலை. (*Tamil Nadu Alkali Chemicals Limited*).

திரு. சு. துரைசாமி : மேற்படி இரண்டு திட்டங்களிலும் அரசாங்க முதலீடு எவ்வளவு போடப்பட்டிருக்கிறது ? அதில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடம் இல்லை.

*Apprenticeship training*

* 129 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the names of the Catering Establishments in Madras City which have recruited apprentices under the Apprenticeship Training Act, 1961 during the years 1970–71–72; and

(b) the total number of candidates selected by them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1970–71—ஒன்றுமில்லை.

1972—1. ஓட்டல் அசோகா.

2. ஓட்டல் தாசப்பிரகாஷ்.

3. க்வீன்ஸ் ஓட்டல்.

4. ஓட்டல் சவேரா.

5. ஓட்டல் ஸ்வாகத்.

[1972 டிசம்பர் 12

6. சாந்தி விஹார்.
7. ஓட்டல் ஸ்வர்கா.
8. ஓட்டல் விக்டோரியா.
9. ஓட்டல் கன்னிமரா.
10. ஓட்டல் ஸ்ரீலேகா.
11. உட்லண்ட்ஸ் ஓட்டல்.
12. ஓட்டல் மெட்ராஸ் இண்டர்நேஷனல்.

(இ)—22.

திரு. என். டென்னிஸ் : அவ்வாறு தொழில் பழகியுள்ளவர்களை எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சஸ் மூலம் நியமிப்பது பயனுள்ளதாக இருக்குமாதலால் அவ்வித முறை கையாளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்ரென்டிஸ் திட்டத்தின்கீழ் எந்த அளவிற்கு அதிகமாகச் சேர்க்க முடியுமோ அந்த அளவிற்குச் சேர்க்கும் முயற்சியைப் பின்பற்றி வருகிறோம். அது இலாக்கா மூலம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சஸ் மூலம் எடுக்கப்படுகிறதா என்பதுபற்றித் தகவல் இல்லை.

*Sheriff of Madras*

* 130 Q.—Thiru K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state the powers and functions of the Sheriff of Madras?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : The Sheriff is in charge of service of summons and execution of writs, decrees, warrants, etc., of the High Court. In the discharge of these administrative functions, the Sheriff is assisted by a Deputy Sheriff, who is borne on the establishment of the High Court. The Sheriff has to be present on all ceremonial occasions in the High Court. For this purpose, he can appoint a Honorary Under Sheriff, subject to the conditions that the nominee is acceptable to the Chief Justice. The Sheriff can convene public meetings on matters of public interest, provided they are not of a political or controversial nature or detrimental to public welfare.



1972 டிசம்பர் 12]

திரு. எம். தேவராசன் : இந்த ஷெரீப் பதவியானது வெறும் அலங்காரமாக அமைந்திருக்கிறது என்று கூறுகிறார்கள். இது எந்த அளவிற்கு உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது ஒருவகைப்பட்ட கருத்து.

திரு. ஆ. பரந்தாமன் : இந்த ஷெரீப் பதவியை எடுத்துவிடுகிற யோசனை ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

*Ponds scheme for Ammanpalayam*

* 131 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to form ponds in Ammanpalayam near Velliangadu, Uthukuli Firka, Erode taluk, Coimbatore district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கன்னிமார் கோவில் ஏரி சீரமைக்கும் திட்டம் ரூ. 92,000 செலவில் தற்சமயம் முடிக்கப் பட்டுள்ளது. அம்மன்பாளையத்தில் ஒரு குட்டை அமைத்தால் கன்னிமார்கோவில் ஏரியின் பாசனம் பாதிக்கப்படும். எனவே இத் திட்டம் செயல்படுத்தச் சாத்தியக்கூறு இல்லை.

*Bridge across Vettaru*

* 132 Q.—Thiru A. RAJAMANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to reconstruct the very old bridge across Vettaru near Nagore?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

*Arumanai-Kuzhithurai road*

* 133 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to enforce the proposals for locating an alternative road at Kuzhithurai to the Arumanai Kuzhithurai Road during floods in Kanyakumari district?

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குழித்துறையில், அருமனை குழித்துறை சாலைக்கு ஒரு மாற்று சாலை அமைக்கும் செயற் குறிப்பு தற்பொழுது இல்லை.

திரு. என். டென்னிஸ் : மழை காலங்களில் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதால் அதன் அவசியம் மிகவும் அதிகமாக ஆகிறது. ஆதலால் அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த மாற்றுச் சாலை அமைப்பதற்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : குழித்துறைத் தாலூகா ஹெட்க்வார்ட்டர்ஸ், நீதி மன்றங்கள், பல பொது காரியாலயங்கள் உள்ள இடமாகும். மழை காலங்களில் இந்த ரோடில் வெள்ளம் நிரம்பிவிடுகிற காரணத்தினல் பொது மக்கள் இந்த அலுவலகங்களுக்குச் செல்வ தற்கு வழி இல்லாமலிருக்கிறது. எனவே இதன் அவசியத்தை உணர்ந்து ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒத்திவைக்காமல் நமது நிதி ஆண்டுத் திட்டத்தில் உட்படுத்திச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வி கேட்கப் பட்டிருப்பது பை பாஸ் பற்றி. அதற்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது, அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறேன். ஊருக்குச் செல்லும் சாலையைப் பொறுத்தவரையில் துணை மேம் பாட்டுப்பணிகளை அரசு செய்யும்.

ஆயக்காரன்புலம் கூட்டுறவு விவசாய வங்கி.

* 134 வினா.—திரு. மா. மீனட்சிசுந்தரம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஆயக்காரன்புலம் கூட்டுறவு விவசாய வங்கி கலைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1972 டிசம்பர் 12]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) இந்த வங்கியில் 1965–66-ல் ஏற்பட்ட முறை கேடு காரணமாக அது கலைக்கப்பட்டது.

திரு. மா. மீனட்சிசுந்தரம் : மீண்டும் அந்தக் கிராமத்தில் கூட்டுறவு நாணயச் சங்கத்தை அமைக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கம் இப்போது லிக்விடேஷனில் இருக்கிறது. அதற்குப் பதிலாக புதிய வேறு சங்கம் அமைப்பதுபற்றித் தக்க நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

திரு. த. சோனையா : நிலவள வங்கி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திற்கும் ஒன்று அமைக்கப்படும் என்று முன்பு தெரிவிக்கப்பட் டிருந்தது. இன்னும் சில ஊராட்சி ஒன்றியங்களில் நிலவள வங்கி அமைக்கப்படவில்லை. அவை மீண்டும் தொடர்ந்து அமைக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கிட்டத்தட்ட எல்லா ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும், ப்ளாக்குகளிலும், நிலவள வங்கி அல்லது நிலவள வங்கியின் கிளைகள் திறக்க அரசு ஆணையிட் டிருக்கிறது.

*Agro-Engineering and Service Co-operative Centre, Thandarampet*

* 135 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether an Agro-Engineering and Service Co-operative Centre has been introduced in Thandarampet in North Arcot district during April 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) இந்தக் கூட்டுறவுக் கழகம் வேலையில்லாத என்ஜினியர் களுக்கு வேலை கொடுப்பதற்காக மத்திய அரசு திட்டப்படி தொடங்கப்பட்டது. தெளிப்பான்கள் மற்றும் வேளாண்மை இயந்திரங்களைப் பழுதுபார்ப்பது கிணறு வெட்டி பம்ப்செட்ஸ் அமைப்பது ஆகிய பணிகளை இந்தக் கூட்டுறவுக் கழகம் செய்கிறது.

திரு. என். டென்னிஸ் : வாட்டாரி ப்ராஜக்ட் உள்ள இடங்களில் இப்படிப்பட்ட நிலையங்கள் அதிக அளவில் அமைக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

HON THIRU SI. PA. ADITANAR : What I have stated now is that the Agro-Engineering and Service Co-operative Centre has been commenced in accordance with the scheme settled by the Centre and one of the activities of the Engineering Centre is to engage itself in minor irrigation, that is digging of wells and installing pumpsets.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : தண்டராம்பட்டு வேளாண்மைப் பொறியியல் செப்பனிடு கூட்டுறவு நிலையத்தின் தலைவர் என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கழகம் பூச்சி தெளிக்கும் மெஷின்களை ரிப்பேர் செய்து வருகிறது. உரங்கள் எல்லாம் விற்பனை செய்து வருகிறது.

*Central Farm at Chengam*

* 136 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Central Farm at Chengam in North Arcot district has gone into production; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் செங்கம் மத்திய அரசுப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. பண்ணை ஆரம்பிக்கப்பட்டு அதற்கான இயந்திரச் சாதனங்கள் வரப்பெற்ற உடனே பண்ணைக்கான முதல் நிலை வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அங்கு மிக மோசமான வறட்சி நிலை நிலவி வந்தது. அவ்வாறு இருந்தபோதிலும் சில பயிர்கள் பயிரிடப்பட்டன. அதில் 16.90 ஏக்கர் பரப்பில் அறுவடை செய்யப்பட்டுவிட்டது. மேலும் நிலச் சீர்திருத்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே நிலச் சீர்திருத்த வேலைகள், மற்றும் கிணறுகள் வெட்டும் வேலைகள் முடிந்த பின் பெரிய அளவில் சாகுபடி செய்யப்படும்.

திரு. என். டென்னிஸ் : வேறு இடங்களுக்கும் இம்மாதிரிப் பண்ணைகள் அமைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது மத்திய அரசின் துணையோடு நடத்தப்படுகிற பண்ணையாகும். இதற்கு ஏறத்தாழ



பத்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு மேல் தேவைப்படுகிறது. நல்ல தண்ணீர் வசதியும் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைக்குட்பட்டு வேறு இடம் இருப்பதாகக் கருதப்படுமானால், அது பற்றிக் கவனிக்கப்படும்.

*Production of Khadi Cloth*

* 137 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Food be pleased to state the value of cloth produced by the Khadi Department in this State during 1971-72?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : ரூ. 198.17 லட்சங்கள்

திரு. என். கிட்டப்பா : உத்தமர் காந்தியார் வழிவந்தவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் உற்பத்தியான கதர்த் துணியின் அளவையும், விற்பனையான கதர்த் துணியின் அளவையும்விட, தென்னாட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணா வழியில் வந்த டாக்டர் கலைஞர் ஆட்சியில் கதர் உற்பத்தி அதிகமாகி இருக்கிறதா ? அதைப் போலவே விற்பனையும் அதிகமாகி இருக்கிறதா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : விற்பனை அதிகம் என்ற அளவில் இல்லாவிட்டாலும் விற்பனை குறையாமல் இருக்கிறது. இதற்கு முன்பு விற்றது 80 சதவிகிதம் கடனாகவும் 20 சதவிகிதம் ரொக்கமாகவும் விற்கப்பட்டது. இப்போது கடனை விற்பதைக் குறைத்து ரொக்கமாக விற்பதை அதிகப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, இப்போது உற்பத்தியும், விற்பனையும் ஓரளவு சீராக இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கதர்த் தொழிலுக்கு ஆக்கம் கொடுக்கின்ற வகையில் இந்த இலாக்காவை ஏற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதர்த் துணியை அணிந்து இந்த நாட்டுக்கு வழி காட்டுவார்களா ?

மாண்புமிகு மன்னை. திரு. ப. நாராயணசாமி : முழுக்க முழுக்க கதர் கட்டிக் கொண்டிருந்தவன் நான். அண்ணா அவர்கள் கைத்தறித் துணியைக் கட்ட வேண்டுமென்று சொன்ன பிறகு, கடந்த பத்தாண்டுகளாக கைத்தறியையும், கதரையும் கலந்து கட்டுகிறேன். பாதி அளவு கைத்தறியும், பாதி அளவு கதரும் கட்டி வருகிறேன்.

திரு. ந. தருமலிங்கம் : மில் துணிகளிலும், பட்டு வேட்டிகளிலும் அகலமாக கறுப்பு சிவப்பு கரை போட்ட வேட்டிகள் வருவது போல் கதர் வேட்டிகளிலும் அந்த மாதிரி கரை போட்ட வேட்டிகள் உற்பத்தி செய்யப்படுமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : இப்போது யார் யார் என்ன விரும்புகிறார்களோ அந்தந்தக் கலரில் போடும் முயற்சி நடந்து வருகிறது.

*New hotel at Mahabalipuram.*

*115 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Tamil Nadu Tourism Development Corporation has proposed to construct a new hotel at Mahabalipuram with all modern amenities; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) மகாபலிபுரத்தில் நல்ல வசதிகள் அடங்கிய ஒரு ஓட்டலைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. உணவு விடுதி, ஸ்விம்மிங் பூல், டார்மிட்டரி பிளாக் ஆகியவை இணைந்திருப்பதற்கான ஏற்பாடு களும் உள்ளன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சமீபகாலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு வரக்கூடிய கூட்டத்தைப் பார்க்கும்போது அதுவே ஒரு சுற்றுலாக் கேந்திரமாக மாறிவிட்டதுபோல் இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு நவீன ஓட்டல், ஸ்விம்மிங் பூல், விளையாடுவதற்கான இடம் ஆகியவற்றை எல்லாம் உருவாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சட்டமன்ற விடுதிக்கு அருகில் கூவம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்தியாவிலேயே இல்லாத பெரிய "ஸ்விம்மிங் பூல்" கட்டப்பட்டுள்ளது. அதை அங்கத்தினர் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. எம். தேவராசன் : உதகையில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் உல்லாசக் குடில்களின் வேலை முடிந்து விட்டதா ? எப்போது சுற்றுலாப் பயணிகளுக்குத் திறந்து விடப்படும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உதகையில் புதிதாகக் கட்டப் பட்டு வரும் உல்லாசக் குடில்களின் வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. விரைவில் பொதுமக்களுக்குத் திறந்து விடப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : சென்னையில் அமைய இருக்கிற சுழலும் ஓட்டல் எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. த. சோனையா : தமிழ்நாட்டில் இருந்தும், அகில இந்தியா விலிருந்தும் இராமேஸ்வரத்திற்கு நிறைய சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அங்கு ஒரு புதிய ரக ஓட்டலைக் கட்ட அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இராமேஸ்வரத்தில் ஒரு சுற்றுலா விடுதியைக் கட்ட 6 லட்சம் ரூபாயை மத்திய அரசிடத்தி லிருந்து சுற்றுலா கார்ப்பரேஷன் பெற்றிருக்கிறது. 1½ லட்சம் ரூபாய் செலவு செய்து பாதைகள் அமைக்கப்பட்டு விட்டன. கடந்த 19-ஆம் தேதி அங்கு சுற்றுலா விடுதிக்கு அடிக்கல் நாட்டு விழாவில் என்னுடைய தலைமையில் மத்திய அரசு சுற்றுலா அமைச்சர் சரோஜினி மகிஷி உரை ஆற்றினார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. இராசமாணிக்கம் : வேளாங்கண்ணிக்கு அகில உலகத்தி லிருந்தும் மக்கள் வருகிறார்கள். அங்கு சுற்றுலா விடுதி ஒன்று கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருத்தலங்கள் இருக்கிற எல்லாப் பகுதிகளிலும் இப்படிப்பட்ட சுற்றுலா விடுதிகள் அமைக்கப் பட வேண்டுமென்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. வேளாங் கண்ணியில் சுற்றுலா விடுதி கட்டப்படுவது அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. இரா. இராமலிங்கம் : தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் பெரிய ஓட்டல் ஒன்று கட்ட டூரிசம் டெவலப்மெண்ட்

[1972 டிசம்பர் 12

கார்ப்பரேஷனிடம் திட்டம் இருக்கிறதா? தனி நபர்கள் ஓட்டல் கட்ட முன்வந்தால் அரசு உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனி நபர்கள் சுற்றுலா விடுதிகள், ஓட்டல்கள் கட்ட முன்வந்தால் தமிழ்நாடு "இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன்" உதவி கொடுத்து வருகிறது. இப்போது இருக்கிற சுற்றுலா கார்ப்பரேஷன் எல்லா மாவட்டங்களிலும் எந்தெந்த இடங்களில் விடுதிகளை அமைக்கலாம், ஓட்டலை அமைக்கலாம் என்ற பரிசீலனையில் ஈடுபட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சி முடிந்தால் தூத்துக்குடியும் பயன் பெறும்.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : சாத்தனூர் அணையைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அங்கு இப்பேர்ப்பட்ட விடுதிகளைக் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாவட்டங்கள்தோறும் இந்த ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு சாத்தனூர் பற்றியும் கவனிக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : அதே கேள்வி—கல்லணையில் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கல்லணைக்கும் அதே பதில் தான்.

*Air service for tourists*

*138 *Q*.—THIRU N.K. PALANISWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether this Government has represented to the Centre to give permission to import small planes for the inter-district travels of the tourists; and

(*b*) if so, whether any reply has been received therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : நம்முடைய நாட்டின் தென்கோடியில் இருக்கும் கன்னியாகுமரிக்கு பிரதமரும், குடியரசுத் தலைவரும்,



1972 டிசம்பர் 12]

கிறார்கள். ஆகவே, மதுரைக்கும் கன்னியாகுமரிக்கும், திருவனந்தபுரத்திற்கும் கன்னியாகுமரிக்கும் இப்படி ஒரு சிறு விமான சர்விஸைத் தொடங்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது அப்படிப்பட்ட ஆலோசனை இல்லையென்று சொன்னாலும் உலகம் வளர்ந்து வருகின்ற நிலைமையைப் பார்க்கும்போது அப்படிப்பட்ட விமானங்கள் விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. சமீபத்தில் பிரிட்டனில் சிறு விமானங்களை உற்பத்தி செய்கிறார்கள். பதினைந்து மைல் போகக் கூடியவை, விலைகூட அதிகம் இல்லை. 80,000 ரூபாய் (250 பவுண்டு) என்று சொல்லுகிறார்கள். அதெல்லாம் தயாரான பிறகு திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்கும், மதுரையிலிருந்து கன்னியாகுமரிக்கும், சிறு விமானங்களை விடுவதோடு கயத்தாற்றிலும் ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்து முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழகத்தில் சிலபல நாட்களாக ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதத்தினை இங்கே சட்டமன்றத்தில் பணியாற்றி வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் சென்று நேரடியாகப் பார்ப்பதற்கு பஸ் வசதியோ அல்லது ரயில் வசதியோ இல்லாது துண்டிக்கப்பட்டு விட்ட காரணத்தாலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சிறு விமானம் மூலம் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பி அந்த இடங்களைப் பார்த்து வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது சுற்றுலா சம்பந்தப்பட்ட கேள்வி. சட்டமன்ற உறுப்பினர்களைச் சுற்றுலா அனுப்பத் தயாராக இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகள் நீலமலைக்குச் செல்வதற்காக, கோவையிலிருந்து உதகைக்கு ஒரு ஹெலிகாப்டர் வசதி செய்து தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட எண்ணம் தற்போது அரசிடம் இல்லை.

*Sale of milk in Madras*

* 139 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there was any increase in the off-take of milk in Madras from the Milk Project during May-June 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) அண்டு (இ) 1972 மே திங்களில் சென்னைப் பால்பண்ணைத் திட்டத்திலிருந்து பால் விற்பனை 21,35,520 லிட்டராக இருந்தது; அது 1972 ஜூனில் 21,53,716 லிட்டராக உயர்ந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் பால் பண்ணையில் பாலைக் கொண்டு வந்து கொடுப்ப வர்கள் தரக்குறைவான பாலைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டால், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இன்றுள்ள சட்டப்படி அந்தக் கூட்டுறவுப் பால் பண்ணையின் தலைவர் தண் டனைக்கோ அல்லது அபராதத்திற்கோ ஆளாக வேண்டிய நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி சென்னை நகரத்தைப் பொறுத்தது.

திரு. என். கிட்டப்பா : நான் ஒரு கூட்டுறவுப் பால் பண்ணைச் சங்கத்தின் தலைவராக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர் களைத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்வதெல்லாம், இதை மாற்றி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கூட்டுறவுப் பால் சங்கங்களின் மூலம் சேகரிக்கப்படும் பால் கெட்டுப் போகுமானல், அந்தச் சங்கத்தின் தலைவர் அந்தச் சங்கத்திற்கு பொறுப்பு இருக்கிற காரணத்தால், அவரையே அந்தப் பால் கெட்டுப் போனதற்கும் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று நாம் விதிமுறைகளை வகுத்து இருக்கிறோம்.

DR. H. V. HANDE : Is it not a fact that quite a number of times we find the quality of milk from these projects are sub-standard, and recently also is it not a fact that I gave a complaint to the Hon. Minister showing that in a particular bottle of milk a





rat, dead rat, was found and I had the sample also and gave a specific complaint with Depot number, etc., and is it not a fact that such complaints come quite a number of times and what steps has this Government taken or is going to take to prevent such sub-standard quality and the presence of dead animals in those bottles of milk?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் ஏராளமான புகார்கள் இது பற்றி வரவில்லை. 2–3 நாட்களுக்கு முன்னல் டாக்டர் ஹாண்டே ஒரு புகார் கொடுத்து இருப்பதாகச் சொன்னர்கள். அது பற்றி தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்குச் சொல்லி இருக்கிறேன். இப்படிப்பட்ட புகார்கள் வருவதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தற்போது பால் பாட்டில்கள் சீல் போட்டு விநியோகிக்கப்படுகின்றன. சீல் உடை படாமல் இருப்பதற்கும் பிளாஸ்டிக் பைகளில் பாட்டல்களைப்போல் போட்டு விநியோகம் செய்யலாமா என்று யோசித்து வருகிறோம். பம்பாயில் இந்த முறையில் செய்து வருகிறார்கள். அது பற்றி நம் முடைய அதிகாரிகளும் முயற்சி எடுத்து வருகிறார்கள். அது வெற்றி கரமாக இருக்குமானல் சென்னை நகரிலும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வரலாம்.

DR. H. V. HANDE : My presumption is that it is quite possible that in these bottles which are kept dry or empty, the rat might have entered and not come through the pipes and if so, will it not be possible to see that the bottles are kept clean so that no foreign body is in that bottle?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சுகாதார மான முறையில்தான் அந்த பாட்டில்கள் அங்கே கழுவப்படுகின்றன. பாட்டல்களை சுத்தப்படுத்துவது, பால் நிரப்புவது, சீல் வைப்பது எல்லாமே இயந்திரங்கள் தான் செய்கின்றன. பாலை சுத்தமாகத் தான் அனுப்புகிறோம். ஆனல் இப்படி ஏதாவது ஒரு சில தவறுகள் ஒரு நாள் ஏற்படலாம். அவற்றையும் தவிர்ப்பதற்கு நாம் முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம் குழாய்கள் மூலமாகப் பால் விநியோகிக்கிற திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை.

*Milk production in Dharmapuri district.*

* 140 Q.—THIRU A. SUBRAMANIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is a proposal for stepping up milk production and dairy development in Dharmapuri district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காகவும் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காகவும் கால்நடை வளர்ப்புத் துறையால் மேற்கொள்ளப்படும் வழக்கமான நடவடிக்கைகள் கால்நடைகளை வாங்கவும் பாலைக் கையாளவும் பால் உற்பத்தி கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவுவதற்காகவும் பாற்பண்ணைத் துறையால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் தவிர, பால் உற்பத்தி வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டம் எதுவும் தருமபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளக் கருதப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் *வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. நடைமுறைக் கேள்விகள்

(அ) பத்திரிகைகள் அவை நிகழ்ச்சிகளைக் கூட்டியும் குறைத்தும் வெளியிடுதல் குறித்து.

(ஆ) வானொலி தவறான செய்திகளைத் தருவது குறித்து.

(இ) பேரவைத் தலைவர் தீர்ப்பளிக்கும்போது ஓர் உறுப்பினர் குறுக்கிடுவது குறித்து.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தப் பேரவையின் நடவடிக்கைகள், பேரவையின் உறுப்பினர்கள் ஈடுபட்டு நடத்தப்படுகிற விவாதங்கள் அல்லது அவர்கள் ஆற்றுகிற உரைகள் வெளியிலே பத்திரிகையிலே வருகிற நேரத்தில் ஒன்று அவைகள்



1972 டிசம்பர் 12] [டாக்டர் மு. கருணாநிதி]

முழுமையும் வெளியிடப்பட்டால் அதிலே கவலையில்லை. ஆனால் அந்த உரைகள் எல்லாம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிற நேரத்தில் படிப்பவர்கள், பொது மக்கள், சந்தேகப்படுகிற அளவுக்கும், இப்படி இருக்குமோ என்று எண்ணுகிற அளவுக்கும் செய்திகள் பிரசுரிப்பது முறையும் அல்ல, அதை இந்த மன்றத்தின் விதிகளும் அனுமதிக்காது என்றே நான் கருதுகிறேன்.

குறிப்பாக, சில குற்றச்சாட்டுகளுக்குப் பதில்கள் வழங்கப்படும்போது குற்றச்சாட்டுகளும், அதற்கு அளிக்கப்பட்ட பதில்களும் முழுமையாக இருந்திட வேண்டும். அவைகள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவது அப்படியில்லாமல், பத்திரிகைகளில் குற்றச்சாட்டை மாத்திரம் விரிவாகக் கூறிவிட்டு, அதற்கு அளிக்கப்பட்ட பதில்களை அரைகுறையாகப் பிரசுரிப்பதன் மூலமாக அந்தக் குற்றச்சாட்டுகள் வலிவுள்ளனவாக பொதுமக்களால் கருதப்படக் கூடும். தன்னைப்பற்றி திரு. ஜேம்ஸ் எழுப்பிய ஒரு பிரச்னைமீது, நேற்றைய தினம் திரு. அரங்கண்ணல் அவர்கள் ஒரு விளக்கத்தை இந்தப் பேரவையில் தந்தார். அது பத்திரிகைகளில் வெளி வந்திருக்கிறது. அதனை ஒட்டி, நேற்று மாலையிலே நம்பிக்கை கோருகிற தீர்மானத்திற்கான பதில் உரையில் நான் இன்கம்டாக்ஸ்—எக்சைஸ் என்போர்ஸ்மெண்ட் நிறுவனங்களில் உள்ளவர்கள் அரசியல் ரீதியில் வேறு கட்சியில் இருக்கிற சில பேரைக் களங்கப்படுத்த வேண்டுமென்பதற்காக அவர்களுடைய வீடுகளில் சோதனை நடத்துவது. ஆனால் அந்தச் சோதனையின் செய்திகள் பத்திரிகைகளில் பலவாறாக வரும். அதன் மூலம் கட்சியின் முக்கிய தளபதிகளாக இருப்பவர்களை களங்கப்படுத்துவது, கட்சியைக் களங்கப்படுத்துவது என்ற திட்டத்தின் அடிப்படையில் சில காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்று குறிப்பிட்டேன். அவை பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுக் கூறப்பட்டன. அப்படிக் குறிப்பிடும்போது திரு. அரங்கண்ணல் தன் வீட்டில் நடைபெற்ற சோதனையில் வருமான வரி இலாக்கா அவர்களுக்குத் தந்து விட்டுப் போய் இருக்கும் ரிப்போர்ட்டில் வெறும் ரூ. 60 தான் அங்கே இருந்தது என்று எழுதி கையெழுத்துப் போட்டு விட்டுப் போய் இருப்பதைப் படித்துக் காட்டினார். அதை என்னுடைய பேச்சில் குறிப்பிட்டேன். கோவை மாவட்டம் இராசமாணிக்கம், எம்.எல்.சி. அவர்கள் வீட்டில் சோதனையிட்டதில் ஆயிரம் ரூபாய் ரொக்கம் இருந்தது என்றும், ரூ. 5,000—6,000-க்கு நகைகள் இருந்தது என்றும், அவர்களுடைய வீடு வாங்கிய பத்திரம் மாத்திரம் இருந்தன என்றும் எடுத்துச் சொல்லி வேறு

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 டிசம்பர் 12

மு.ப. 10-00 தகராறு உள்ள எதுவும் இல்லை என்றும் நான் இங்கே குறிப்பிட்டேன். இன்று காலையிலே "ஹிந்து" பத்திரிகையிலே அந்தச் செய்தி அரை குறையாகப் போடப்பட்டதன் காரணமாக பொது மக்கள் தவறாகக் கருதுகின்ற அளவுக்கு அது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

'Mr. Karunanidhi said some months ago officials of the Enforcement Directorate and Income-tax Department searched Mr. Rama Arangannal's house. The search was played up by newspapers and wild rumours were spread in the City. Even the Governor had asked him whether there had been a raid on Mr. Arangannal's house and whether a sum of Rs. 20 lakhs had been seized from his house. Recently, the house of Mr. Rajamanickam, a prominent D.M.K. Member in Coimbatore had been searched and he was harassed.' இந்த அளவுக்குச் செய்திகளைப் போட்டிருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் 20 லட்சம் ரூபாய் அரங்கண்ணல் அவர்களுடைய வீட்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார் என்றும், வேறு சிலர் ரூ. 14 லட்சம், 15 லட்சம் என்று செய்தி வெளியிட்டார்கள் என்றும், உண்மையில் அரங்கண்ணல் அவர்கள் வீட்டிலிருந்து எடுக்கப்பட்ட ரொக்கம் வெறும் ரூ. 60 என்றும் நான் நேற்றுக் குறிப்பிட்டேன். திரு. ராஜமாணிக்கம் அவர்களுடைய வீட்டில் நடைபெற்ற சோதனையைப் பற்றியும் விவரங்களை அளித்திருக்கிறேன். ஆனால், அந்த விவரங்களைப் போடவில்லை. ஒரு பேச்சின் முழுப் பகுதியும் வந்துவிட வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை, நான் அப்படிச் சொல்லவும் இல்லை. இது போன்ற முக்கியமான விஷயங்களில், சந்தேகத்திற்குரியது என்று கருதப்படுகின்ற விஷயங்களில், ஒருவரை களங்கப்படுத்த வேண்டும் என்று செய்யப்படுகின்ற விஷயங்களில் வெளியிடப்படுகின்ற கருத்துக்கள் முழுமையாக வெளியிடப்பட வேண்டும். அதை முழுவதுமே போடாமல் இருந்துவிட்டால் அதைப்பற்றி கவலை இல்லை. ஆனால் "இந்து" பத்திரிகையில் இதைப்பற்றி இப்படி ஒரு செய்தி வெளியிட்டிருப்பது வருந்தத்தக்கதாகும். "இண்டியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையிலும் அப்படியே தான் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. "தினமணியில்" திரு. அரங்கண்ணல் விவகாரத்தை வெளியிட்டு, அவர்களுடைய வீட்டில் ரொக்கம் இருந்தது என்ற அளவோடு நிறுத்தி விட்டார்கள். நல்ல வேளையாக என்னுடைய பேச்சில் நான் குறிப்பிட்டபடி ரூ. 60 எடுக்கப்பட்டது அவர் வீட்டிலிருந்து என்று தினமணியில் பிரசுத்திருக்கிறார்கள். நாங்கள் இவைகளை யெல்லாம் உரிமைப் பிரச்னை என்ற அளவிலே எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.



1972 டிசம்பர் 12] [டாக்டர் மு. கருணாநிதி]

ஏனென்றால் திருத்திக் கொள்ளும் சுபாவம் பத்திரிகைகளுக்கு இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பத்திரிகைகளுக்கு தங்கள் மூலம் நீங்கள் அறிவுறுத்த வேண்டும் என்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை இந்த மன்றத்தில் வைக்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, while on the point raised by the Hon. Chief Minister, namely, that the newspapers must reflect the discussion in the House in the right manner as it exactly happens, there are quite a number of newspapers which distort it in a different manner. Yesterday, when we walked out from the House we stated that we were doing so because we felt that there was no relationship between the majority that the D.M.K. enjoys in this House and the unpopularity that the Government are having outside and that we were walking out as a protest. Then as we were walking out, the Hon. Chief Minister said that we were walking out because we did not want to vote against them. We made it clear that we wanted to show our protest and that we were against this Government. In stronger words we attacked this Government and we explained the reason for doing so. But in to-day's 'Dina Thanthi' only what the Hon. Chief Minister had stated had been published and not what I and the hon. Member Thiru Ponnappa Nadar had stated. I am not saying this as tit for tat.

This newspaper 'Dina Thanthi' has wide and maximum cirulation and it has got a large number of branches in Tamil Nadu. Even an important point of view expressed on behalf of the Opposition is not published that paper and it has become an out-and-out or almost D.M.K. organ. This morning that paper has published the entire speech of the Hon. Chief Minister and the speech of Thiru Ponnappa Nadar has not been properly published. Of course, we cannot force that paper to publish it because as the Speaker of the Lok Sabha has stated, every paper has got the right to publish news in its own way. But the point is that there are newspapers which completely distort news and so we must view this matter in its proper perspective. That is my contention

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : செய்திகளைப் போடாமல் இருப்பதுபற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். போடப்படுகின்ற செய்திகள் தவறான முறையில் மற்றவர்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு அமையக் கூடாது என்பதைப்பற்றித்தான் நான் சொல்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 டிசம்பர் 1.

இங்கே இன்னொரு விஷயத்தைக்கூட நான் குறிப்பிட விரும்பு கிறேன். தங்களுடைய அனுமதியோடு. நேற்று முன்தினம் நடை பெற்ற நம்முடைய பேரவையின் நிகழ்ச்சியில் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும், அமைச்சர் மாதவன் அவர்களுக்கும், "சக்தி பைப்ஸ் நிறுவனத்தைப் பற்றி ஒரு விவாதம் நடந்தது. இருவரும் பேசி முடித்த பிறகு சபை வேறு நடவடிக்கையில் ஈடுபட்டது. ஆனால் வானொலியில் செய்தி சொல்கின்ற நேரத்தில்; சக்தி பைப்ஸ் நிறு வனத்தைப்பற்றி விவாதங்கள் எழுந்தன. ஹாண்டே அவர்களும், மாதவன் அவர்களும் நீண்ட நேரம் விவாதித்தார்கள். இருவரும் திருப்தி அடையவில்லை", என்று சொல்கிறார்கள். இவர்கள் திருப்தி அடைகிறார்களோ, இல்லையோ, வானொலி நிருபருக்கு திருப்தி ஏற்பட வில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளில்தான் செய்திகள் வெளியிடப் படுகின்றன.

திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது தினத்தந்தி பத்திரிகையில் தாம் இங்கே வெளிநடப்புச் செய்த நேரத்தில் எடுத்துச் சொன்ன கருத்தினை, வெளியிடவில்லை என்பதாகும். நான் இங்கே "இந்து" பத்திரிகையின் மீது சொல்கின்ற புகார், சொல்லப்பட்ட கருத்தை வெளியிட்டுவிட்டு, ஆனால் படிக்கின்றவர்கள் சந்தேகப்படுகின்ற அளவுக்கு அது பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொடர்பான பேச்சில் கருத்துக்கள் திருத்திக் கூறப்படுவது கூடாது என்பது என்னுடைய வாதம். பேசிய பேச்சை வெளியிடவில்லை என்பது டாக்டர் ஹாண்டே அவர்களுடைய வாதம். ஆகவே, பொதுவாக பத்திரிகைகளெல்லாம்—பொதுவாக எல்லாப் பத்திரிகை களுக்கும் தான் சொல்கிறேன்—செய்தியை போடாமல் இருந்து விட்டால் பரவாயில்லை. போடுகின்ற செய்தி மேலும் ஒரு சந்தே கத்தை எழுப்பக்கூடிய அளவுக்கு அமைந்துவிடக் கூடாது என்பதைத் தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் சக்தி பைப்ஸ் விவகாரத்தைப் பற்றி திருப்தி அடையவில்லை. அமைச்சர் அவர்கள் என்னுடைய வாதத்தில் திருப்தி அடையவில்லை.

This is a different matter. The other day the All India Radio also gave full coverage to the Hon. Chief Minister and it is practically pro-Government completely and it announced ' Mr. Karunanidhi ' ' Mr. Karunanidhi ' several times and gave only D.M.K. news. By saying this, I am not supporting or condemning it. The point is sometimes when I do not expect my statement to be pub-



1972 டிசம்பர் 12] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

lished the newspapers publish it and when I expect it, it is not published. Further, what I want to point out is that the paper should have published both the speeches of the Hon. Chief Minister and my speech as they form one full piece. Otherwise for a casual observer it may give a wrong impression. So I fully agree with the Hon. Chief Minister that the whole discussion must be truly presented. Through the discussion on this matter, we will be able to tell the outside world what we feel about the presentation of news...........

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறிய ஒரு கருத்து ஒரு பத்திரிகையிலே சரி யாக வெளியிடப்படவில்லை, வெளியிடப்படாமல் விடப்பட்டது என்று சொல்கின்ற கருத்தில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. பத்திரிகைகள் அந்தக் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்பதில் ஆட்சியில் உள்ளவர்களுக்கு மறுப்பு இல்லை. ஆனால், முதல் அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டிய கருத்து "distortion of facts" என்ற அடிப்படையில் "உண்மை மறைப்பு" குற்றச்சாட்டைச் சார்ந்தது. உண்மை மறைப்பு—முதல் அமைச்சர் பேசிய வார்த்தைகள் விடப்பட்டுவிட்டது என்பது அல்ல. வார்த்தை கள் சில விடப்படலாம். அது எந்தவிதமான பாதகத்தையும் விளை விக்க முடியாது. முழு பேச்சும் வெளிவரத் தேவையில்லை. அது பத்திரிகை ஆசிரியர்களின், நிருபர்களின் உரிமை. ஆனால் பத்திரிகை களுக்கு ஒரு முக்கியமான கடமை இருக்கிறது. உண்மை மறைக்கப் படும் வகையில் வெளியிடுவது என்பது கூடாது.

By distortion of facts they have given a different version and opinion to the public which may give the impression that the Chief Minister was not able to defend his colleagues on facts.

உண்மையின் அடிப்படையில் முதல் அமைச்சர் அவர்களுடைய வாதத்தில், சரியாக இல்லை, அங்கத்தினர் மீது ஏதோ குற்றம் இருக் கிறது என்று தவறான உணர்ச்சி ஏற்படுகின்ற விதத்தில், "இந்து" பத்திரிகையில் ஒரு பகுதி, உயிர்நாடியாக இருக்கக்கூடிய பகுதி விடப் பட்டிருக்கிறது. ஆகவே, "distortion of facts" என்பது "Privilege of the house" என்ற அடிப்படையில் வரும். அதற்கு இடமில்லாத வகையில் ஒரே பிரச்னையில் இருவிதமான கருத்துக்கள் சட்டசபையில் அளிக்கப்படு மானால், டாக்டர் ஹாண்டே சொன்ன கருத்துக்கள், முதலமைச்சர் சொன்ன கருத்துக்கள், இந்த இரண்டு கருத்துக்களும் இடம் பெறத் தக்க வகையில் பத்திரிகைகள் நடந்து கொள்ள வேண்டுமென்பது தான் எங்களுடைய வேண்டுகோளாகும்.

[1972 டிசம்பர் 12

DR. H. V. HANDE : 'Dhinathanthi' also had distorted facts by suppressing my statement and by publishing only one portion, i.e., Chief Minister's speech alone. That is my contention.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்துப் பத்திரிகை வெளியிட்ட செய்தியைப் பொறுத்து நான் உரிமைப் பிரச்னை கொண்டு வர முடியும். டாக்டர் ஹாண்டே தினத்தந்தியில் வெளிவராத செய்தியைக் குறித்து உரிமைப் பிரச்னை கொண்டு வர முடியுமா ? இந்துப் பத்திரிகை வெளியிட்ட செய்தி உரிமைப் பிரச்னைக்குரியது. உரிமைப் பிரச்னை கொண்டு வராமல், ஒரு வேண்டுகோளாக பேரவையின் துணைத்தலைவர் விடுக்க வேண்டும் என்ற அளவில் நான் இங்கே என் கருத்துக்களை எடுத்துச் சொன்னேன். பேராசிரியர் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, இந்த இரண்டு பத்திரிகைச் செய்திகளில், இந்துப் பத்திரிகையின் செய்தி உரிமைப் பிரச்னையாக இங்கே கொண்டு வந்து விவாதிக்கப்படக் கூடிய அளவுக்கான செய்தி என்பது என் கருத்தாகும். அதற்குப் பிறகு உரிமைப் பிரச்னை இருக்கிறதா என்பது பேரவைத் தலைவரவர்கள் தீர்மானித்து அவை எடுக்க வேண்டிய முடிவாகும். ஆனால் டாக்டர் ஹண்டே அவர்கள் தினத்தந்தியில் தன் பேச்சு வெளியிடப் படவில்லை என்பது உரிமைப் பிரச்னைக்குரியதா என்பதை யோசிக்க வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தினத்தந்தி பத்திரிகைச் செய்தி உரிமைப் பிரச்னைக்குரியது அல்ல என்றால் இந்துப் பத்திரிகை உரிமைப் பிரச்னைக்குரியது அல்ல. நீங்கள் சொன்ன facts-ஐ தவறாகப் போடவில்லை. மதிப்பிற்குரிய அரங்கண்ணல் பேசியிருக்கிறார்கள். முதலமைச்சர் பேசியிருக்கிறார்கள். அதிலே சில facts-ஐ போட்டிருக்கிறார்கள். சில facts-ஐ போடவில்லை. இதைப் பார்க்கும் போது, படிக்கும்போது ஒரு distortion ஆக ஏற்படலாம். ஆனால் நீங்கள் பேசியதை உண்மைக்குப் புறம்பாக அவர்கள் கூறவில்லை. ஆகவே நான் சொல்லுகிறேன். தினத்தந்தி உரிமைப் பிரச்னைக்குரியது அல்ல என்றால், இந்துப் பத்திரிகை உரிமைப் பிரச்னைக்குரியது அல்ல என்பது என் வாதம். இந்துப் பத்திரிகை உரிமைப் பிரச்னைக்குரியது என்றால், தினத்தந்தி பிரசுரித்தது உரிமைப் பிரச்னைக்குரியது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கனம் முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்திலோ, அல்லது கனம் ஹாண்டே அவர்கள் கூறிய கருத்திலோ நிச்சயமாக கருத்து வேற்றுமை இருக்க முடியாது. ஜனநாயகத்தைப்



1972 டிசம்பர் 12] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பேணிக் காக்கின்ற பொறுப்பில் பத்திரிகைகளும் முதலிடம் பெற்றிருக்கின்றன என்பது சந்தேகத்துக்குரிய விஷயமல்ல. இங்கே நான் கூறுவதெல்லாம் இங்கே சட்டமன்றத்தில் நடைபெறுகின்ற விஷயங்களைத் திருத்திக் கூறுவது பத்திரிகை தர்மம் அல்ல என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு முறையில் பிரசுரிக்கின்றது என்று முதலமைச்சர் கூறினார்கள். சில பத்திரிகைகள் தனக்கு வேண்டிய முறையில் இந்தச் செய்திகளை விளம்பரம் செய்கிறார்கள். சில பத்திரிகைகள் சாதாரணமாக முழுச் செய்திகளையும் விளம்பரம் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. உண்மையாக இந்து, தினமணி, இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகள் முழுமையாகப் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. முதலமைச்சர் கூறியது போல இந்தப் பத்திரிகைகள் வேண்டுமென்றே செய்திகளைத் திருத்திக் கூறவில்லை. ஆனால் நிலைமை இவ்வாறு இருக்க முதலமைச்சர் கூறியதிலிருந்து ஏதோ பத்திரிகைகளுக்கு ஒரு எச்சரிக்கை கூறுவது போல இருந்தது. அந்த எச்சரிக்கை பத்திரிகை சுதந்திரத்தை பாதிக்கின்ற முறையில் அமையக் கூடாது. ஏதோ அவர்கள் வேண்டுமென்றே செய்திருக்க முடியாது. முதலமைச்சர் கூறி இருக்கும்படி இது பெரிய விவாதத்திற்குரிய உரிமைப் பிரச்னையாக எழுப்ப வேண்டிய தேவையில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் இந்த அவையில் என்னுடைய விவாதத்தையும், டாக்டர் ஹாண்டே அவர்கள் விவாதத்தையும் கேட்டுக் கொண்டு தான் இருந்தார். இதில் உரிமைப் பிரச்னையாகக் கொண்டு வந்து யாரும் விவாதிக்கவில்லை. உரிமைப் பிரச்னையாக வர வேண்டிய விஷயமாக இருந்தாலும், அந்தப் பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் நான் சொன்னேன். திருத்திக் கொள்ளக் கூடியவர்கள் என்கின்ற வகையில் அந்தப் பத்திரிகைக்கும், மற்ற பத்திரிகைகளுக்கும் பேரவையின் துணைத்தலைவரவர்கள் ஒரு அறிவுரை கூறவேண்டும். அறிவிப்புச் செய்ய வேண்டுமென்கின்ற அளவில் தான் நான் இதை எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

டாக்டர் ஹாண்டே அவர்கள் தன் பேச்சு வெளியிடப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் சொல்லுவது என் பேச்சு வெளியிடப்பட்டு, அது பாதியோடு நின்றுவிட்ட காரணத்தினால், சொன்ன கருத்து முழுமையாகப் பிரசுரிக்கவில்லை என்பதாகும். 20 லட்சம் ரூபாய் அரங்கண்ணல் வீட்டிலிருந்து எடுத்து விட்டார்களாமே என்று கவர்னர் என்னிடம் கேட்டார் என்று அத்தோடு நிறுத்தி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியதிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. இங்கே இருக்கின்ற 170, 180 மக்கள் பிரதிநிதிகளின் கருத்தை மக்கள் கருத்தாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்கிறார். அப்படியானால் இங்கே பேசுகின்ற ஹாண்டே அவர்களின் கருத்தும் பூங்கா நகர்ப் பகுதி மக்களின் கருத்தாக இருக்க முடியாது என்பதை அவர் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, இந்த அளவிலே இந்த விவாதத்தை விட்டுவிட்டு, தங்கள் தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

DR. H.V. HANDE : I asked about 'Dhinathanthi'. Strictly speaking, it should be a matter of grave breach of privilege.

(Thiru K. A. Wahab stood in his seat)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள், ஒவ்வொரு கட்சி சார்பிலும் சொல்லியாகிவிட்டது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பத்திரிகைகளைப் பற்றிய விவாதம் இங்கே எழுந்துள்ளதால் நானும் ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசியதாக ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. அது முஸ்லிம் லீக் கட்சியைக் குறை கூறுவதாக இருந்தது. நான் அதைப்பற்றி உடனடியாகக் கேட்டபோது திரு. ஹாண்டே அவர்கள் அப்படிப் பேசவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அலை ஓசைப் போன்ற பத்திரிகைகளில் தவறான செய்திகள் வருகின்றன. எந்தப் பத்திரிகையிலும் எந்தக் கட்சியைப் பற்றியும் தவறான செய்திகள் பிரசுரிக்கப்படக் கூடாது. தவறான செய்திகள் பிரசுரிக்கப்படுவதினால் கட்சிக்கும் கட்சித் தலைமைக்கும் பாதகம் ஏற்படுகிறது. ஆகையால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். இது உரிமைப் பிரச்னைக்குரிய விஷயமாக இருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு மேலும் எந்தப் பத்திரிகையும் இம்மாதிரியான தவறான செய்தியை அல்லது இப்படிப்பட்ட அரைகுறைச் செய்தியை வெளியிடக் கூடாது என்று தங்கள் மூலமாக அறிவிப்பு விடச் சொல்கிறார்கள். இதுபற்றி தாங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கிளப்பிய பிரச்னை, பத்திரிகை ஒரு செய்தியை வெளியிடக் கூடாது என்பதல்ல. இங்கே பேசிய நம்முடைய திரு. ஜேம்ஸ் அவர்களும் பத்திரிகைகளின் சுதந்திரம் பாதிக்கப்படாத வகையில் இதுமாதிரியான செய்திகளைப் பிரசுரிக்கக் கூடாது என்று பத்திரிகைகளுக்கு ஓர் அறிவிப்புக் கொடுத்தால் போதும் என்று சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை விடக் கூடாது என்று சொன்னார்கள்.

கடந்த சில நாட்களாகப் பேரவையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், அவை பிரசுரிக்கப்படும் முறைகளையும் நாம் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பத்திரிகைகளில் மட்டுமல்ல, வானொலியில்கூட அப்படித்தான் செய்கிறார்கள். ஆக, பத்திரிகைகளையும், வானொலி நிகழ்ச்சிகளையும் கேட்கும் நமக்கே, இந்த மன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளா அவை என்று சந்தேகப்படக்கூடிய அளவிலே இருக்கின்றன. பத்திரிகைகள் செய்தி வெளியிடுவதில் தவறில்லை. ஆனால் தவறான நோக்கு ஏற்படும் வண்ணத்தில் வெளியிடுவது தவறு. பத்திரிகைகள்தான் தவறு செய்கின்றன என்றால், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்ற வானொலியும் தவறு செய்கிறது. நான் ஏற்கெனவே இந்த அவையில் ஒரு சமயம் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகளில் வெளியிடவோ அல்லது வானொலியில் ஒலிபரப்பவோ கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருந்தும் அது மீறப்பட்டது நமக்குத் தெரியும். முன்பே............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இடையிலே குறுக்கிடுவதற்குப் பொறுத்தருள வேண்டுகிறேன். நேற்றைய தினம் இந்தச் சட்டமன்றம் எட்டு மணி வரை நடைபெற்றிருக்கிறது. ஆனால் வானொலியில் ஏழு மணிக்கு சபை முடிந்துவிட்டது என்று அறிவித்ததாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்பதை தங்கள் மூலமாக விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துவிட வேண்டுமென்ற அவசரத்தில் அறிவித்திருப்பார்கள். வானொலி நிலையத்திற்கு அதுபற்றி எழுதிக் கேட்கலாம்.

[1972 டிசம்பர் 12

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே நேற்று 7¼ மணி நியூசில் கிட்டத்தட்ட 8 மணி வரை நடைபெற்ற இந்த அவை 7 மணிக்கு முடிந்துவிட்டது என்று அறிவித்தார்கள். மேலும் இவ்வாறு தவறுகள் நடைபெறக் கூடாது என்பதைத் தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பேரவை உட்பட இந்திய நாட்டிலே இருக்கக்கூடிய எல்லாப் பேரவைகளுக்கும் ஒரே விதிதான். ஆனால் தமிழ்நாட்டிலே இருக்கின்ற பத்திரிகைகளும் வானொலியும் அதற்கு மாறான கருத்துக் கொண்டிருக்கின்றன என்று நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எழுப்பியப் பிரச்னைக்கு நான் இன்னும் தீர்ப்புச் சொல்லவில்லை. அதற்கு இந்த அவையிலே இதற்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றை முன் மாதிரியாகக் காட்ட விரும்புகிறேன். இந்தப் பேரவையில் திரு. கிருஷ்ணராவ் அவர்கள் தலைவராக இருந்தபோது திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் இதேமாதிரியான ஒரு பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பத்திரிகைகள் செய்திகளை வெளியிடும்போது தவறான நோக்கம் கற்பிக்காமல் முழுவதையும் வெளியிட வேண்டும் அல்லது வெளியிடாமல் இருந்துவிட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். இப்போது இங்கே எழுப்பப்பட்டிருக்கின்ற பிரச்னைக்கும் அந்தத் தீர்ப்பையே வழங்குகிறேன். "டிஸ்டார்ஷன் ஆஃப் ஃபாக்ட்ஸ்" என்ற முறையில் செய்திகளை வெளியிடக் கூடாது. பத்திரிகைகள் இதைச் சரியாகக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : What about Murasoli?

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, please resume your seat.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the hon. Member DR. Hande cannot rise up like this always and interrupt. If he has any privilege issue, let him bring in a motion. He cannot get up and interrupt the proceedings as he likes.

DR. H. V. HANDE : Can I not give my views?

MR. DEPUTY SPEAKER : The hon. Member Dr. Hande should not give some random ideas when I am giving my ruling.

THIRU M. A. LATHEF : Sir, I submit that when you are giving an impartial and fair ruling, the hon. Member should not interrupt you.



1972 டிசம்பர் 12]

டாக்டர் எச். வி. ஹாண்டே : முரசொலி பத்திரிகை எப்ப... நடைபெறுகிறது. முழுக்க முழுக்க சீஃப் மினிஸ்டர் கண்ட்ரோலி... தானே நடக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சீஃப் மினிஸ்டர் கன்... ரோலில் என்னென்ன இருக்கிறது? முரசொலி பத்திரி... முதலமைச்சர் கட்டுப்பாட்டில் இல்லை. அது கட்சிப் பத்திரிகை... அதில் முதலமைச்சரின் பேச்சைப் போடுகிறார்கள். "தமிழரசு... பத்திரிகை ஒன்றுதான் அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னுடைய பேச்சை... போடுவது கிடையாது. முழுக்க முழுக்க முதலமைச்சரின் படத்தை... பேச்சைத்தான் போடுகிறார்கள். நான் எழுதிக் கொடுத்தக் குறிப்பை... கூட போடவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாளையிலிருந்து ஹாண்டே... அவர்களுடைய படத்தை பெரிதாகச் செய்திகளோடு போட... சொல்லவா?

டாக்டர் எச். வி. ஹாண்டே : உங்களுடைய பேச்சு முழுவதை... யும் போடவில்லை என்பதற்காகத்தானே இந்த விவாதமே... இப்போது நடைபெறுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னுடைய பேச்சை... போடவில்லை என்ற காரணத்திற்காக அல்ல. ஒரு போர்ஷனை... போட்டுவிட்டு மறு போர்ஷனைப் போடவில்லை. அதனால்... மக்களிடத்தில் தவறான எண்ணம் ஏற்படும் என்பதற்காகத்தான் நான்... இந்தப் பிரச்சனையை எழுப்பியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டாக்டர் ஹாண்டே அவர்... களுடைய பெயர் ஒரு சுவரிலே எழுதப்பட்டு, அவருடைய படமு... ஒட்டப்பட்டிருக்கிறது. அந்தச் சுவரும் அவருக்குச் சொந்தமில்லை... அந்தத் தெருவுக்கும் அவர் இருக்கும் இடத்திற்கும் சம்பந்தமுமில்லை... அதைப்பற்றியப் பிரச்னையும் இல்லை; யாரும் அதைப்பற்றி... கேட்கவும் இல்லை. அதைப்போன்று எந்தப் பத்திரிகையில் யாருடைய... பேச்சு வருகிறது என்பதல்ல பிரச்னை. வரக்கூடியச் செய்தி கூறப்... பட்ட கருத்து அடிப்படை மாறாது வந்துள்ளதா என்பதுதான்... கேள்வி. அந்தந்தக் கட்சி நடத்தக்கூடிய பத்திரிகையில் அந்தக்... கட்சியைப் பற்றியச் செய்திக்குத்தான் முதலிடம் கொடுப்பார்கள்.

[திரு. க. அன்பழகன்] [1972 டிசம்பர் 12

இராஜாஜியின் படத்தையே போட்டு கல்கி ஏடு வரவில்லையா? காமராஜர் படத்தையே போட்டு, நவசக்தி பத்திரிகை வரவில்லையா? அதைப் போன்றுதான் முரசொலியும். அந்தந்தக் கட்சிப் பத்திரிகைகள் அவர்கள் கட்சித் தலைவரைப் பாராட்டி எழுது வதில் தவறு இருக்க முடியாது. அப்படி எந்தத் தலைவரையாவது போற்றுவதற்கு என்று ஒரு பத்திரிகையும் இல்லை என்றால் அது அவர்கள் கட்சியின் குறைபாடே தவிர, அவரைப் போற்றாத பத்திரிகையின் குறை அல்ல (சிரிப்பு).

மு.ப.
10-30 திரு. எம். ஏ. லத்தீப்: சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எழுந்து ஒரு கருத்தை எடுத்து விளக்கிக் கொண்டிருக்கும்போது, தங்கள் அனுமதியுடன் ஒரு உறுப்பினர் எழுந்து குறுக்கே பேசுகின்றார். ஆனால் சபாநாயகரே எழுந்து ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக் கும்போது, அதுவும் நீண்ட விவாதத்திற்குரிய ஒன்றுபற்றி தம் முடிவை ஒரு தீர்ப்பு வடிவம் கொடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும் போது, அதுவும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் பொதுவான ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது—இடையில் ஒருவர் எழுந்திருந்து, "வாட் எபவுட் முரசொலி" என்று கேட்பது சபாநாயகர் அவர்களையே அவமதிக்கிறார், அதன்மூலம் இந்த அவையையே அவமதிக்கிறார், இது சபாநாயகர் முரசொலிப் பத்திரிகையினிடத்தில் பாரபட்சம் காட்டுவது போன்ற உட்கருத் தைப் பிரதிபலிக்கச் செய்கிறார் என்ற முறையில் இதைக் கடுமையாக நான் ஆட்சேபிக்கிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்திருந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து உட் காருங்கள். இப்போது நாம் எடுத்துக்கொண்டுள்ள பிரச்சினைபற்றி என்னுடைய கருத்தைத் தெளிவாக அறிவித்திருக்கிறேன். பத்திரிகை கள் அவையில் நடக்கும் நிகழ்ச்சிகளை வெளியிட மறுப்பது அவர்கள் உரிமை. ஆனால் அவை நிகழ்ச்சிகளை வெளியிடும்போது அதைக் கூட்டியோ குறைத்தோ வெளியிடக் கூடாது. இப்படி வெளியிடுவது அவை உரிமையை மீறிய செயலாகும். திரு. ஹாண்டே, திரு. லத்தீப் எல்லோருக்கும் சொல்லிக்கொள்கிறேன். இதே நிலைமை நாளைக்கு எந்த உறுப்பினருக்கும் வரலாம். அவைத் தலைவருக்கே கூட வரலாம். ஒரு நேரத்தில் இருக்கிற அரசியல் சூழ்நிலையை வைத்துக் கொண்டு பத்திரிகைகள் இதுபோல அவை நிகழ்ச்சிகளைத் தங்கள்



1972 டிசம்பர் 12] [பேரவைத் துணைத் தலைவர்]

தங்கள் விருப்பம்போல கூட்டியோ, குறைத்தோ வெளியிட நாம் ஒருவகையில் அனுமதித்துவிட்டால் அது நம்முடைய பெரிய உரிமையை நாமே இழந்துவிடுவதுபோல ஆகும். ஆகவே எல்லா உறுப்பினர்களும் பேரவைத் தலைவருடன் இதுபற்றி ஒத்துழைக்க வேண்டும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல இந்துப் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் அவை நிகழ்ச்சிக் குறிப்பு—டிஸ்ட்டார்ஷன்தான். இத்தகைய முறையில் செய்திகளை வெளியிடுவது தவறாகும் என்று தெரிவித்துக்கொண்டு......

டாக்டர் எச். வி. ஹாண்டே: தினத்தந்தி சார்......

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றியும் தாங்கள் இன்றைக்கே ஒரு தீர்ப்பை கொடுத்தாக வேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் தொடர்ந்து இந்த அவைக்குக் களங்கம் கற்பித்து வருகிறார். அதுவும் குறிப்பாக திரு. லத்திப் அவர்கள் குறிப்பிட்டது போல பேரவைத் தலைவர் தம் தீர்ப்பை எந்தவிதமான பாரபட்சமும் அற்ற முறையில் அறிவித்துக் கொண்டிருக்கும்போது—திரு. ஹாண்டே அவர்கள் குறுக்கிட்டு வாட் எபவுட் முரசொலி என்கிறார். இதுபோல அவர் தொடர்ந்து செய்து வருகிறார். இதற்கு ஒரு வழிமுறை வகுக்காவிட்டால், அவரைப்போலவே இந்தப் பக்கத்தில் உள்ளவர்களும் பேச ஆரம்பித்துவிடுவார்கள். பேரவை நிகழ்ச்சி அப்புறம் ஒழுங்காக நடைபெற முடியாது போகும். யார் வேண்டுமானாலும் தலைவரை எதிர்த்துப் பேசலாம் என்று போய்விடும். திரு. ஹாண்டே அவர்கள் தாங்கள் தீர்ப்பு அளிக்க எழுந்திருப்பதற்கு முன்பே சொல்ல வேண்டிய தம் கருத்துக்களை எல்லாம் நிறையச் சொல்லிவிட்டார். பிறகும் அவர் குறுக்கிட்டு குறுக்கிட்டுப் பேசுவது இந்த அவை உரிமையை மீறியதாகும். இதற்குத் தாங்கள் ஒரு வழிமுறையைக் காணாவிட்டால் அவர் இந்த அவையை ஒழுங்காக நடத்தவிட மாட்டார் என்றே கருதுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: என்னைப் பொறுத்தவரையில் நான் முன்பே தெளிவாகச் சொன்னேன். துணைச் சபாநாயகரிடத்தில் எனக்கு மிக்க மரியாதை உண்டு.

(ஆளும் தரப்பில் இருந்து திரு. என். கணபதி, மு. சின்னசாமி எழுந்திருந்தார்கள்.)

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். நான் திரு. ஹாண்டே அவர்களைச் சுருக்கமாக தம் கருத்தைச் சொல்ல அழைக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: துணைச் சபாநாயகர் வழங்குகிற தீர்ப்பு முழுமையானதாக இருக்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நான் எழுந்திருந்து அதனைக் குறிப்பிட்டேனே தவிர, துணைச் சபாநாயகரை அவமரியாதை செய்யும் முறையில் எழுந்து குறிப்பிடவில்லை. துணைச் சபாநாயகர் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருக்கும்போதுதான் திரு. லத்தீப் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பினார். அதைத்தொடர்ந்து நான் பேசினேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது உண்மைக்கு மாறான ஒரு விஷயத்தைச் சொல்கிறார்......

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் பேசிக்கொண்டே இருக்கும்போது தாங்கள் இடைமறித்துப் பேச ஆரம்பிப்பது நியாயமா? நான் கேட்கிறேன், இது நியாயமா?

(கூச்சல், குழப்பம்)

நான் சொன்னது எல்லாம் துணைச் சபாநாயகருடைய தீர்ப்பு முழுமையானதாக, நல்லமுறையில் அமைய வேண்டும் என்கிற நல்லெண்ணத்தில்தான் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பு வழங்கத் தொடங்கி பேசிக் கொண்டிருக்கும்போது டாக்டர் ஹாண்டே அவர்கள்தான் "வாட் எபவுட் முரசொலி?" என்றார்கள். அதன்பேரில் திரு. லத்தீப் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார். அதைவிட்டு, திரு. லத்தீப் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார், அதைத் தொடர்ந்து நான் பேசினேன் என்பதாக உண்மைக்கு மாறாகப் பேசுவது முறை அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் துணைச் சபாநாயகர் அளிக்கின்ற தீர்ப்புக்கு உதவியாகத்தான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமைகளை மற்றவர்கள் மதிக்கின்ற அளவில் இங்குள்ள உறுப்பினர்களும் நடந்து



1972 டிசம்பர் 12] [திரு. என். கணபதி]

கொள்ள வேண்டும் என்பது ஒரு மரபு. இங்கே இருக்கிற உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பாற்றக்கூடிய சபையின் கண்ணியத்தையே குலைக்கக்கூடிய வகையில் தொடர்ந்து பேரவைத் தலைவரையும், பேரவையையும் அவமதிக்கக்கூடிய வகையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் நடந்து கொள்வது மிகமிக வருந்தத்தக்க முறையாகும். எனவே, இப்படி அவை நிகழ்ச்சிகளுக்குத் தொடர்ந்து இடையூறு விளைவித்து வருகிற டாக்டர் ஹாண்டே அவர்களை இன்றைக்கு ஒரு நாள் தாங்கள் சஸ்பெண்டு செய்ய வேண்டுமென்ற என் கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கணபதி அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் அவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட பிரச்சினை பற்றி நான் ஏற்கனவே என் தீர்ப்பை வழங்கி விட்டேன். அந்தப் பிரச்சினை இதோடு முடிகிறது.

## (4) அறிவிப்பு.

### (அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்தச்) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்தச்) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரித் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்ட காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move

That the Tamil Nadu District Police (Amendment) Bill * 1972 be taken into consideration.

Section 41 of the Madras City Police Act, 1888, empowers the Commissioner of Police or subject to his orders any police officer above the rank of a head constable to regulate assemblies, meetings and processions in public places in the Madras City. There is no such provision in the Tamil Nadu District Police Act, 1859. Section 54-A of the District Police Act, 1859 provides for extension of the provisions of the City Police Act, 1888 mentioned in the schedule to that Act to any town. It does not provide for the extension of the provisions to the local areas, other than towns, in the districts.

Section 41 of the Madras City Police Act is also not now one of the sections mentioned in the schedule to the District Police Act. In the interest of public peace and safety, it is considered necessary to empower the police officers to exercise the aforesaid powers conferred by Section 41, in any local area in the State.

The Bill seeks to achieve the above object.

Sir, I request the House to accept the motion.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, this particular Bill wants to bring in another medium, viz., that any police officer above the rank of a head constable has the power to regulate meetings and processions of public nature.

* Published in the *Tamil Nadu Governmen Gazette* Extraordinary dated 28th November 1972.



1972 டிசம்பர் 12] [Dr. H. V. Hande]

I am rather surprised that this particular amending Bill has come at this political climate, at this political juncture, when the entire political climate is surcharged with emotion on behalf of certain parties. It is rather curious at this particular juncture, this amending Bill has been brought in. I would not have attributed any particular motive to Government, if this had been brought three or four months earlier. Now after the split in the ruling party, there is lot of confusion outside. There is breakdown of law and order here and there and a number of parties want to conduct meetings. I do not know whether this amending Bill is necessary now. Why can't the *status quo ante* be there, and things alllowed to remain where they are so that the power to conduct meetings will be at the higher level? If the Opposition party wants to hold a public meeting at a particular place, the ruling party comes to know of the fact and there is always the possibility of the ruling party going to police station and requesting permission to hold another meeting. The ruling party may forestall and the Opposition party may then not be able to hold meeting. Such a possibility of forestalling may be given full chance according to this amending Bill. Will it not be possible for this Government not to bring this amendment at all and to allow things to stand where they are, particularly at this political juncture? That is my submission.

The Hon. Minister may not be now in a position to withdraw the Bill. He had made up his mind to introduce the measure. At least will it not be possible for the Hon. Minister to give a categorical assurance not an empty assurance but one which would be followed by all police officials, that in the matter of granting permission to hold meetings or processions, all the parties, Opposition as well as Ruling Party will be treated alike and that no distinction will be made in respect of any one party.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா வானது தமிழகத்திற்கு, இன்று தேவையா என்பதனைப் பற்றி அரசாங்கம் நன்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே இருந்த சட்டமானது நகரங்களில் கூட்டங்களை ரெகுலேட் செய்வதற்கும், ஊர்வலங்களை நடத்துவதற்கும், ஆக ஊர்வலங்கள். கூட்டங்கள் போன்றவற்றை ரெகுலேட் செய்வதற்காகப் போலீஸ் இலாகாவிற்கு அந்த

[Thiru M. A. Latheef] [1972 டிசம்பர் 12

us. But just 10 or 15 persons, goondas and rowdies start disturbing the entire peace in the meeting, they throw strones upon the speakers. In the circumstances, it is very necessary that a person who is in the lower rungs of the officialdom in the police, just higher than the police constable should be vested with the power of regulating the conduct of the meetings. He is not going to control the meeting or stipulate that the meeting should be or should not be held. Only thing is that the officer will be duty bound to see that noramlcy is kept, that speeches are made at the meeting without hindrance or violence. This is a very welcome measure and I as a public man and a platform speaker accept and support this amending Bill.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்
வாயிலாக, நகரப்புறங்களிலே மட்டும் இருந்து வந்த சட்டம்
கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடிய முறையிலே கிராமங்
களிலே ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்று நான் கருதுகிறேன்.
கிராமம் என்பது 50 பேர்கள் கொண்ட கிராமமும் இருக்கிறது.
ஐந்து ஆயிரம் பேர்கள் கொண்டதும் ஒரு கிராமம்தான். பத்தாயி
ரம் பேர்கள் கொண்டதும் கிராமம்தான். அந்தக் கிராமங்களிலே
யெல்லாம் கூட்டங்கள் நடத்துவதற்கு போலீஸ் அனுமதி தேவை
யில்லை என்று இருந்தது. ஒரு பகுதியிலே ஒரு கட்சி கூட்டம் நடத்திக்
கொண்டிருக்கும்பொழுது இன்னொரு பகுதியிலே இன்னொரு கட்சி
கூட்டம் நடத்துகின்றபொழுது கலவரங்கள் நடக்கக்கூடிய சூழ்நிலை
கள் ஏற்படலாம். அதை யெல்லாம் தடுக்கக்கூடிய முறையிலே
கூட்டங்கள் நடத்த வேண்டுமானால் போலீஸ் அனுமதி பெற்றுத்
தான் நடத்த வேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால்
இந்தச் சட்டம் கிராமப்புறங்களிலேகூட நல்ல ஒரு சூழ்நிலையை
உருவாக்குகிற சட்டம் என்பதைக் கூறி இந்தச் சட்டத்தை
வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த
மசோதாவின் மூலமாக இரண்டு கருத்துக்கள் கொண்டுவரப்
பட்டிருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் போலீஸ் சட்டத்தின் கீழ், சிடி
போலீஸ் சட்டத்தின்கீழ் உள்ள பிரிவுகளை மாவட்டங்களில் உள்ள
ஊர்களுக்கும் அமல்படுத்தக்கூடிய ஒரு திருத்தம். செக்ஷன் 41-ஐ
அமல்படுத்த வேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்
அடுத்தது 54-ஏ பிரிவிலே, ஒரு



1972 டிசம்பர் 12] [திரு. செ. மாதவன்]

உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அதோடு லோக்கல்
ஏரியா என்பதையும் சேர்த்து இருக்கிறோம். சிறிய பஞ்சாயத்தாக
இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும் அந்தப் பகுதிகளிலும்
அமலாக்கப்படக்கூடிய வகையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது.
பொதுக்கூட்டங்கள் கூடுகின்ற உரிமையைத் தடைசெய்வதற்
காகவோ அல்லது ஊர்வலங்களைத் தடை செய்வதற்காகவோ
கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று யாரும் எண்ணக் கூடாது.
இருக்கின்ற உரிமைகளை எப்படி முறைப்படுத்திச் செய்யலாம்
என்பதற்கான அதிகாரத்தைத்தான் நாம் இதிலே பெறுகிறோம்.
நகரத்தில் மட்டுமல்ல, பேரூராட்சிகளில் மட்டுமல்ல, கிராமங்களிலே
யும் எதிர்க்கட்சிகளுக்கும், ஆட்சியை எதிர்ப்பவர்களுக்கும் இது
பயன்படும். எந்த எந்த நேரங்களிலே, எந்த எந்த இடங்களிலே,
யார் யார் கூட்டங்கள் போடலாம் என்பதை நாம் முறைப்படுத்து
வதற்குத்தான் இது பயன்படுமே தவிர, எதிர்க்கட்சியை அடக்கு
வதற்காகப் பயன்படும் என்று நினைக்கத் தேவையில்லை.

நகரங்களிலேதான் ஒழுங்கு காப்பாற்றப்படவேண்டும்; கிராமங்
களிலே ஒழுங்கு தேவையில்லை என்று சொல்வது பொருத்தமாகாது.
இந்தச் சட்டத்தை எதிர்க்காவிட்டாலும்கூட இந்தச் சட்டத்தின்
மூலமாக நியாயமான உரிமைகள் பறிக்கப்படாமல் இருக்கவேண்டு
மென்பதற்கான உத்திரவாதம் கொடுப்பார்களா என்று கேட்டார்
கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்படிப்
பட்ட உத்திரவாதம் கேட்பது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.
இருபது ஆண்டு காலமாக எப்படி எப்படியெல்லாம் உத்திரவுகள்
பிறப்பிக்கப்பட்டன, சட்ட மன்றத்திலே அவற்றைப்பற்றியெல்லாம்
எதிர்த்து முழக்கம் அன்றைக்குச் செய்தவர் இன்றைக்கு எங்களைப்
பார்த்து அப்படிக் கேட்பது உண்மையிலேயே வேடிக்கையாக இருக்
கிறது. அவர்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும், அப்பொழுது
என்ன என்ன செய்தார்கள் என்பது. ஒரு முறை கூட்டம் போடு
வதற்கு அனுமதி கொடுத்ததற்குப் பிறகு போலீஸ் அலுவலர்கள்
எங்களிடம் வந்து சொன்னார்கள், அனுமதி கொடுத்திருக்கிறோம்,
ஆனால் பேசும்பொழுது அன்றைக்கு ஆட்சியில் உள்ளவர்களைப்
பற்றிப் பேசமாட்டோம் என்று எழுதிக் கொடுத்தால்தான் பேச
விடுவோம் என்றெல்லாம் சொன்னார்கள். அந்த நிலைமை எல்லாம்
இருந்தது அந்த ஆட்சியில். ஆனால் இன்றைக்கு எங்களுடைய
அமைச்சர்களையெல்லாம் தரம்தாழ்த்தி இழிசொற்களால் அவர்
களைத் தாக்கி, எங்களுடைய வீட்டிலேயுள்ள பெண்டுபிள்ளைகளை

யெல்லாம் கூட இழுத்து பேச்சுக்களைப் பேசுகின்ற பரிபூரணமான உரிமையைப்பெற்ற—ஜனநாயகத்திலே உரிமைபெற்ற காலமாக இந்தக் காலம் இருக்கிறது.

சுவற்றிலே சுவரொட்டிகள் ஒட்டும்பொழுது, எழுதும்பொழுது, ஊர்வலங்கள் செல்கின்றபொழுது எழுப்புகின்ற கோஷங்களில் எல்லாம் எவ்வளவு இழிவான வார்த்தைகள் பயன்படுத்தப்படு கின்றன, அமைச்சர்களைப்பற்றி மட்டுமல்ல, அரசாங்கத்திலே பணி யாற்றுகின்ற அதிகாரிகள், அவர்களுடைய பெண்டுபிள்ளைகளைக்கூட கேவலமாகப் பேசுகின்ற, எழுதுகின்ற அந்த பூரண ஜனநாயகம் இந்த ஆட்சியிலே இருக்கிறது. ஐந்தாண்டுக் காலமாக இருக்கிறது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் வெளியிலே சொல்லா விட்டாலும் உள்ளத்திலே உணருவார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் கேட்கின்ற உத்திரவாதம் இல்லாமலே எல்லாம் நடை பெற்றுவருகின்றன. அப்படிப்பட்ட பேச்சுக்களையெல்லாம் தாங்கிக் கொண்டு, எதையும் தாங்கிக்கொண்டு, அப்படிப்பட்ட எதிர்ப்புக் கிடையேதான் வளர வேண்டுமென்று வளர்ந்து கொண்டு வருகின்ற அரசாங்கம் இது. ஜனநாயக உரிமைகளை அளவுக்கு மீறி அளித்து வருகிற அரசாங்கம் இது, ஆகவே உத்திரவாதம் தேவையில்லை, அப்படிப்பட்டவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற முறையில் அதை டாக்டர் ஹாண்டே அவர்கள் வற்புறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

எனவே இது ஆளுங்கட்சிக்கா, எதிர்க்கட்சிக்கா என்பதல்ல, பொது மக்களின் நன்மைக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சந்தர்ப்பம் சரியில்லை என்று சொன்னார்கள். எவ்வளவு மோச மானவர்கள் உங்கள் கட்சியிலே இருந்தார்கள் என்பதை மறைமுக மாக, அவர்கள் சந்தர்ப்பம் சரியில்லை என்று சொல்வதன்மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே இந்தத் திருத் தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மாவட்ட காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்".



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள், 2, 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Tamil Nadu District Police (Amendment) Bill 1972 be passed".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு விவசாய வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தங்கமணி அவர்கள் இருக்கையில் இல்லை. அவர்கள் தீர்மானம் முன்மொழியப் படவில்லை. அடுத்து அமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஆய்வுக் குழுவால் திருத்தி அமைக்கப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 37/1972) ஆய்வுக்குழு திருத்தியமைத்தவாறு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

இந்தச் சட்ட வரைவைப் பரிசீலனை செய்வதற்கென நியமிக்கப் பட்ட இம்மன்ற ஆய்வுக் குழு, சட்டமன்ற மேலவை உறுப்பினர் களில் எண்மரை இக்குழுவின் விவாதங்களில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தது.

*4—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 டிசம்பர் 12

இந்த ஆய்வுக் குழு நான்கு முறை கூடியது. பதிவாகிய சாட்சியத்தையும், எழுத்துமூலமாக பல்வேறு முறையீடுகளையும் கருதிப் பார்த்த பிறகு, இக்குழு விவாதங்கள் நடத்தி, இக்குழு உறுப்பினர்கள் ஒருமனதாக எடுத்த தீர்மானங்களுக்கிணங்க, இந்தச் சட்ட வரைவை மீண்டும் திருத்தி வரைவதென்று முடிவெடுத்தது.

ஆய்வுக் குழுவால் திருத்தியபடியுள்ள இந்தச் சட்ட வரைவில் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :—

ஆய்வுக் குழுவால் திருத்தப்பட்ட இந்தச் சட்ட வரைவில் 2-வது பகுதி, சாதாரண ஏக்கர் "ஸ்டாண்டர்டு ஏக்கரா" மாற்றப்படுவது தொடர்பாகக் கூடுதலான சலுகைகள் வழங்குவதற்கு வகை செய்கிறது ; அவை பின்வருமாறு :—

(1) தற்போதுள்ள சட்டத்தில் பாக்கு பயிரிடப்படும் 1/6 ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமானது என்று இருப்பதற்கு மாறாக, 1/3 ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாகும்.

(2) இந்தச் சட்ட வரைவில் வகை செய்துள்ளவாறு, அரசுப் பாசன வாயிலிலிருந்து பாசனம் பெறாமல், கரும்பு பயிரிடப் பயன்படுத்தப்பட்டு வருகிற 2/3 ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமம் என்றிருப்பதற்கு மாறாக, அரசுப் பாசன வாயிலிலிருந்து பாசனம் பெறாமல் கரும்பு பயிரிடப் பயன்படுத்தப்பட்டு வருகிற ஒரு ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாகும்.

(3) இந்தச் சட்ட வரைவில் வகை செய்துள்ளவாறு, அரசுப் பாசன வாயிலிலிருந்து பாசனம் பெற்று, வேர்க்கடலை அல்லது பருத்தி பயிரிடப் பயன்படுத்தப்படும் 3/4 ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமம் என்றிருப்பதற்கு மாறாக, அரசுப் பாசன வாயிலிலிருந்து பாசனம் பெறப்பட்டு, வேர்க்கடலை அல்லது பருத்தி பயிரிடப் பயன்படுத்தப்படும் ஒரு ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாகும்.

(4) இந்தச் சட்ட வரைவில் வகை செய்துள்ளவாறு, அரசுப் பாசன வாயிலாயிராத வேறு ஒரு வாயிலிலிருந்து பாசனம் பெற்று வேர்க்கடலை அல்லது பருத்தி பயிரிடப் பயன்படுத்தப்படுகிற ஒரு ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்குச் சமம் என்பதற்கு



1972 டிசம்பர் 12] [திரு. ப. உ. சண்முகம்]

மாறாக, அரசுப் பாசன வாயிலாயிராத வேறு ஒரு வாயிலிலிருந்து பாசனம் பெறப்பட்டு, வேர்க்கடலை அல்லது பருத்தி பயிரிடப் பயன்படுத்தப்பட்டு வருகிற $1\frac{1}{2}$ ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாகும்.

(5) அரசுப் பாசன வாயிலிலிருந்து பாசனம் பெறுவதாயினும், அல்லது வேறு வகையில் பாசனம் பெறுவதாயினும் தென்னை பயிரிடப் பயன்படுத்தப்பட்டு வருகிற 3/4 ஏக்கர் நிலம், ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமம் என்று மூலச் சட்டத்தில் தற்போது வகை செய்திருப்பதற்கு மாறாக, அரசுப் பாசன வாயிலிலிருந்து பாசனம் பெற்று தென்னை பயிரிடப் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமம் ஆகும் ; மற்றும், அரசுப் பாசன வாயிலிலிருந்து பாசனம் பெறாமல் தென்னை பயிரிடப் பயன்படுத்தப்படும் இரண்டு ஏக்கர் நிலம் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமம் ஆகும்.

(6) அரசுப் பாசன வாயிலிலிருந்து பாசனம் பெற்று எந்த வகைப் பயிராவது பயிரிடப் பயன்படுத்தப்படும் ஒரு நிலம், அத்தகைய அரசுப் பாசன வாயிலிலிருந்து முழுவதும் பாசனம் பெற்று, அந்தப் பயிர் பயிரிடப்படுவதாயிருந்தால் மட்டுமே அவ்வாறு பாசனம் பெறுவதாகக் கருதப்பட வேண்டும்.

ஆய்வுக் குழுவால் திருத்தப்பட்டுள்ள சட்ட வரைவின் 5-வது பகுதியில் கருதப்பட்டுள்ள சட்டத்தின் 65-வது பிரிவு, சட்ட வரைவில் மலைத் தோட்டப் பயிர் குறித்து வரி இணக்கம் செய்துகொள்வது குறித்து 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வகை செய்திருப்பதற்கு மாறாக, 50 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வரி இணக்க வசதிக்கு வகை செய்கிறது. மேலும் இது, ஒருவருக்கு ஒரு முறை வரி இணக்கம் செய்துகொள்ளக் கொடுக்கப்பட்ட அனுமதி, அவர் 65-வது பிரிவைச் சேர்ந்த (8) உட்பிரிவின்படி வேளாண்மை வருமானத்தைப் பற்றிய விவரக் கணக்கு கொடுக்க விருப்பம் தெரிவிக்கிற வரையில் தொடர்ந்திருக்கவும் வகை செய்கிறது.

(ஆய்வுக் குழுவால் திருத்தப்பட்டுள்ள சட்ட வரைவில் 6-வது பகுதியில் கருதப்பட்டுள்ள) இச்சட்டத்தின் விவர அட்டவணையின் 2-வது பகுதி, கீழ்க்காணும் வரி இணக்கத் திருத்தக் கட்டண வீதங்களை வரையறுக்கிறது:—

| பரப்பளவு | ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்கான வீதம். | |
|---|---|---|
| | ரூ. | காசு. |
| முதல் 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | ஒன்றுமில்லை | |
| அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 15 | 00 |
| அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 25 | 00 |
| அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 35 | 00 |
| அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 45 | 00 |
| அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 60 | 00 |
| அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 75 | 00 |
| அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 90 | 00 |
| அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 105 | 00 |
| எஞ்சியுள்ள ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | 120 | 00 |

தலைவரவர்களே, இதனை இம்மன்றம் ஏற்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திருத்தக்குழு ஏகமனதாக இதை நிறைவேற்றியது. ஆனால் இதை நிறைவேற்றியதற்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் ஒரு கடிதத்தை எழுதியனுப்பினார்கள். அதில் திருத்தம் தனக்கு "டிஸ்ஸெண்ட்" என்று சொன்னார்கள். அவர் சொன்ன கருத்தைப்பற்றியும் சேர்த்தே சொல்லிவிட வேண்டுமென்று விரும்புகிறேன்.

வருமான வரிச் சட்டத்தில், ஒரு டிரஸ்ட் சம்மந்தமாக அதற்கு எவ்வளவு வருமானம் வருகிறதோ அதில் அந்த டிரஸ்ட்டிற்குச் செல வழிக்கப்பட்டது போக மிச்சமுள்ளதற்குத்தான் வரி போட வேண்டு மென்று பொது வருமான வரிச் சட்டத்தில் இருக்கிறது. அதை அப்படியே விவசாய வருமானத்திற்கும் எடுத்து வைத்திருக்கிறோம். எவ்வளவு வருமானம் என்று கணக்கிட்டு, அந்த டிரஸ்ட் சம்பந்தமான காரியங்களுக்கு அந்த வருமானத்திலிருந்து எவ்வளவு செலவழிக்கப் படுகிறதோ அதைக் கழித்துக் கொண்டு மிச்சம் இருப்பதற்கு வருமான வரி போட வேண்டுமென்று சட்டத்தில் போட்டிருக்கிறோம். ஆனால் அழகர்சாமி அவர்கள் கொடுத்துள்ளது என்னவென்றால், செலவழிப்பதைக் கழிக்கக்கூடாது, எவ்வளவு வருமானம் வருகிறதோ அது முழுவதற்கும் வரி போட வேண்டுமென்று சொல்கிறார்கள்.



அதுதான் அவர்கள் பின்னால் எழுதிக் கொடுத்த ஒன்று. அதைத் தவிர திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், கலந்துகொண்ட உறுப்பினர்கள் அத்தனைபேரையும் நான் வேண்டிக்கொண்டேன், எத்தகைய கருத்து வேறுபாடும் இல்லாமல் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதை ஒத்துக்கொண்டு ஏகமனதாகத்தான் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்டத்தை மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே,
மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் பேசும்பொழுது மூன்று நான்கு
தடவைகள் ஏகமனதாக, அனைத்துக்கட்சி நண்பர்களும் ஏற்றுக்
கொண்டிருக்கிறார்கள் என்று வலியுறுத்திக் கூறினார்கள். அதன்
தாத்பரியம் என்னவென்றால் இந்த மசோதாவை எதிர்த்து எந்தக்
கருத்தையும் இங்கே தெரிவிப்பது அவ்வளவு பொருத்தமாக
இருக்காது என்பதற்காகச் சொல்லியிருப்பார்கள் என்று கருது
கிறேன். இருந்தாலும் விவசாயிகள் பலரைச் சந்தித்து, அவர்களை
அணுகி, இதைப்பற்றி விவாதித்த நேரத்தில் இன்னும் சில கருத்துக்
களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதை இந்த மன்றத்தில் சுருக்க
மாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இந்த மசோதா பலமுறை இந்த அவைக்குக் கொண்டுவரப்
பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படிக் கொண்டு வரும்
நேரத்தில் இந்த மசோதாவினாலே விவசாயிகள் மிகவும் பாதிக்கப்
படுகிறார்கள் என்பதை நாங்கள் வலியுறுத்திக்கொண்டிருந்தோம்.
நாங்கள் முதல் தடவை சொன்ன நேரத்தில் அதற்கு அரசாங்கம்
செவி சாய்க்கவில்லை. ஏதோ எதிர்க்கட்சிகளின் சார்பில் சொல்
கிறார்கள் என்று நினைத்திருப்பார்களோ என்னவோ தெரியவில்லை.
ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் கட்சியிலே இருக்கும் விவசாயிகள்,
கிராமங்களில் பணியாற்றும் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள்
அவர்கள் எல்லோரும் இந்த ஆளுங்கட்சியில் இருப்பவர்களை வற்
புறுத்திச் சொல்லியிருப்பார்களோ என்னவோ தெரியவில்லை. பிறகு
சில கோளாறுகள் இருக்கின்றன. முதலிலே கொண்டுவரப்பட்ட
அந்த மசோதா அதேமாதிரி அந்த வடிவத்திலேயே சட்டமாக்கப்
பட்டால் அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற

உண்மையை உணர்ந்து மீண்டும் ஒரு முறை அந்த மசோதா கொண்டு வரப்பட்டது. அப்பொழுதும் நாங்கள் கடுமையாக இந்த மசோதாவை எதிர்த்து இதிலுள்ள பல கோளாறுகளைக் கூறினோம்.

பிறகு இந்த செலக்ட் கமிட்டியைப் போட்டார்கள். அப்படிப் போடப்பட்டதை வரவேற்கின்ற அதேநேரத்தில் அதில் இருக்கும் சிக்கலைச் சொல்ல விரும்புகிறேன். செலக்ட் கமிட்டி அரசியல் சூழ் நிலை சரியாக இல்லாத நேரத்தில் கூட வேண்டிய நிலையேற்பட்டது. இவ்வளவுதூரம் ஆர்டினன்ஸ் வரும் என்று எதிர்பார்க்கவில்லை. இது ஆர்டினஸ்க்காகக் கொண்டுவர வேண்டியதா என்று பரவலாகப் பேசப்பட்டது. கோர்ட்டிலேகூட விவகாரத்தைச் சொன்னார்கள். நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. இருந்தாலும் இதை அவசரம் அவசரமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று ஒரு எண்ணம் விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று முறை கூடி செலக்ட் கமிட்டியில் பேசி முடிவெடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று விவசாயிகள் நினைக்கிறார்கள், என்னிடத்திலும் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, செலக்ட் கமிட்டியில் நானும் ஒரு உறுப்பினன் என்ற முறையில் அவசரம் அவசரமாக அங்கு நாங்கள் கூடிப் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். மூன்று முறை கூடிப் பேசி எல்லா உறுப்பினர்களும் ஏக மனதாக ஏற்றுக் கொண்டதற்குப் பிறகுதான் அதை நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்து கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் செலக்ட் கமிட்டி பற்றி ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. அரசியல் சூழ்நிலை காரணமாக செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள்..............

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : பொறுக்குக் குழுவைப் பொறுத்தமட்டில் உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது. இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, உள்நோக்கம் கற்பிக்காமல் இருப்பது நல்லது. தங்கள் பொறுப்பு களை உணர்ந்துதான் செய்திருப்பார்கள் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.



Dr. H. V. HANDE : That is why I am very careful and I do not want to cast any aspersion on them and they are perfect gentlemen. I am only trying to explain that we are victims of circumstances and that is what I have said.

பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஆர்டினன்ஸ் ஆக வந்தது இப்போது சட்டமாகக் கூடிய நிலைக்கு வந்திருக்கிறது. 1972-ம் ஆண்டு ஏப்ரலிலிருந்து இதை நடைமுறைக்குக் கொண்டு வர திட்ட மிட்டிருக்கிறார்கள்.

'This Ordinance may be called the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Ordinance, 1972. (2) It shall be deemed to have come into force on the 1st April 1972.'

இப்போது நாம் டிசம்பரில் இருக்கிறோம். பழைய கணக்கை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் பல சங்கடங்கள் வரும். ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றி யமைக்க வேண்டும். இதனால் பல சிக்கல்கள் வரும் என்ற காரணத் தால் விவசாயிகள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இதை 1974-ஆம் ஆண்டு ஏப்ரலுக்குத் தள்ளி வைக்க முடியாதா என்றுதான் கேட்கிறார்கள். ரொம்ப சின்ன கோரிக்கை. அமைச்சர் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" 'Exempted extent of land ' means 10 standard acres " என்று இருக்கிறது. இதற்கு ஒரு சிறு திருத்தம் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

" 'Exempted extent of land ' means 15 standard acres or 12.5 standard acres ".

பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இப்போது இருப்பதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றோ, 12.5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றோ மாற்ற முடியாதா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

The increase of Rs. 15 may be maintained above 50 acres, and till then, the increase should be only Rs. 10.

15 ரூபாய் வருகிறது. 50 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்து கொள்ள முடியாதா என்ற கோரிக்கையை வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

50 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை 10 ரூபாய்; அதற்கு மேல் 15 ரூபாய் என்று செய்ய வேண்டுமென்று எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களிடமும் விவசாயிகள் சார்பில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்களும் இதை வரவேற்பார்கள். நான் விவசாயி அல்ல; ஆனாலும் நம்முடைய நாடு விவசாய அடிப்படையில் இருக்க வேண்டிய நிலையில் எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு வரிகளின்மூலம் கொடுக்கின்ற தொல்லைகளைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்க வேண்டுமென்பதை யோசனையாகத் தெரிவித்துக்கொண்டு, அரசாங்கம் நான் கோரிய கன்செஷனைக் கொடுத்தால் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன் என்று கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த மசோதா ஏற்கனவே இந்த சட்ட மன்றத்தில் கொண்டு வரப்பட்டு மூன்றாவது ரீடிங் வரை நிறைவேற்றப்பட்டு, அந்த நேரத்தில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக திரும்ப பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டது.

இன்றையதினம் பொறுக்குக் குழுவின் சில மாறுதல்களோடு இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தருணத்தில் நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—அன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில கன்செஷன்களை அளிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில வாக்குறுதிகளை அளித்தார்கள். அந்த வாக்குறுதிகள் பல இன்று இந்த மசோதாவில் காணப்படவில்லை. அன்று பாக்குத் தோட்டங்களுக்கு அளித்த கன்செஷனுக்கு மாத்திரந்தான் எதிர்க் கட்சியில் இருந்தும் ஆளும் கட்சியில் இருந்தும் எதிர்ப்பு வந்ததே தவிர, மற்றப்படி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கன்செஷன்களை இந்த மன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. அப்படிப்பட்ட சில நன்மைகள்கூட இன்று இந்த மசோதாவில் இடம் பெறவில்லை என்பதைப் பார்க்கும்போது எந்த அளவுக்கு ஏழை விவசாயிகள், சிறு விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பொதுமக்கள் கருத்தை அறிவதற்காக பொறுக்குக் குழு சிறந்த முறையில் தன் சேவையைச் செய்தது என்றாலும்கூட நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக பல்வேறு விவசாயிகள் தங்கள் கருத்துக்களை, தங்கள் குறைகளை, தங்கள் தேவைகளை அந்தப்





பொறுக்குக் குழுவிடம் நேரடியாகச் சென்று சொல்வதற்கோ, மனுக்கள் கொடுப்பதற்கோ முடியாத சூழ்நிலை இருந்தது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

பல விவசாயிகள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறமுடியாத காரணத்தால் இந்த மசோதாவில் முன்பு அளிக்கப்பட்ட நன்மைகள் இப்போது இடம் பெறவில்லை என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ரப்பரைப் பொறுத்தவரை ஐந்தில் இரண்டு ஏக்கர் அதாவது 40 சென்ட் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று போட்டிருக்கிறார்கள். ரப்பர் விவசாயிகளைப் பொறுத்தவரை சிறு விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். ஐயாயிரம் ரூபாய் வருமானம் வரவேண்டுமென்றால் சாதாரண ஏக்கர் பத்து ஏக்கரில் விவசாயம் செய்தால்தான் வரமுடியும். ஆகவே, இப்போது அதைப் பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொன்னால் விவசாயிகள் நன்மை பெற முடியாத நிலை இருக்கிறது. சாதாரண பத்து ஏக்கருக்கு அவர்களுக்கு விதிவிலக்கு அளித்தால்தான் ஐயாயிரம் ரூபாய் வருமானம் வரும். ஆகவே, ஒரு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற முறையில் திருத்தி அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில் இதோடு மேலும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரசாங்க நீர்ப்பாசனம் உள்ள திராட்சைத் தோட்டங்கள் கால் ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கராகவே அமைக்கப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசனம் இல்லாத வாழைத் தோட்டங்கள் ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கரா என்று அமைத்திருக்கிறார்கள். அதேபோல் நீர்ப்பாசனம் இல்லாத ஷுகர்கேனுக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்று வகை செய்திருக்கிறோம். க்ரவுண்ட் நட்டுக்கு ஒரு ஏக்கருக்கு ஒன்றரை ஏக்கர் என்று வகை செய்திருக்கிறோம். அதேபோல் காட்டனுக்குச் செய்திருக்கிறோம். இதேபோல் நீர்ப்பாசனம் இல்லாத தென்னந் தோட்டங்களுக்கு இரண்டு சாதாரண ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த விவசாயங்களிலிருந்து கிடைக்கும் வருவாயையும் சிறு ரப்பர் தோட்டங்களில் இருந்து கிடைக்கக்கூடிய வருவாயையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஐயாயிரம்

ரூபாய் வருவாய் வரவேண்டுமென்று சொன்னுல், சாதாரணமாக பத்து ஏக்கர்களில் பயிர் செய்தால், அது கிடைக்க முடியும் ரப்பரிலிருந்து, ரப்பர் தோட்டங்களுக்கு நீர்ப்பாசனம் நாம் அரசாங்கத் துறையிலிருந்து செய்வதில்லை. அதற்குப் பதிலாக....................

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ரப்பர் சாதாரண ஏக்கர் ஒன்றிலிருந்து எவ்வளவு வருமானம் வரும் என்பதை ஜேம்ஸ் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் குறிப்பிடுவது சிறிய ரப்பர் தோட்டங்கள் வைத்திருப்பவர்களை, குடியானவர்கள் ரப்பர் தோட்டங்கள் வைத்திருப்பதைப்பற்றி கூறுகிறேன். கம்பெனியார்கள், ஆங்கிலேயேர்கள் இந்த நாட்டில் இருந்தபோது பெரிய பெரிய கம்பெனிகளை ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் ரப்பர் பயிர் செய்துக் கொண்டிருந்தார்கள். அந்தத் தோட்டங்கள் வர்ஜின் ஸாயிலில் அமைந்து அதிக வருவாய் வருகின்ற வகையில் அவர்கள் ரப்பர் பயிரிட்டு வந்தார்கள். அதோடு நல்லமுறையில்—தேவையானமுறையில் மன்யூரிங்க்கும் செய்து வந்தார்கள். நிலத்தைப் பண்படுத்தி சீராக பார்த்து வந்த காரணத்திஞல் அதிக வருவாய் கிடைக்கும் நிலைமை இருந்தது. ஆனுல் சிறிய விவசாயிகளுக்கு அந்த அளவிற்கு வருமானம் கிடைப்பதில்லை. சிறிய விவசாயிகளுக்கு ஒரு ஏக்கரில் சாதாரணமாக 500 ரூபாய்தான் வருமானம் கிடைக்கும் என்று என்னிடம் கூறுகிருர்கள். ஓரளவிற்கு அது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆனுல் கம்பெனியாரின் தோட்டங்களில் சாதாரண ஏக்கர் ஒன்றிலிருந்து ஆயிரம் ரூபாய் வருமானம் வரும் என்று சொல்லப்படுகிறது. காரணம் அவர்களுக்கு நல்ல முறையில் மான்யூரிங் செய்ய வசதி இருக்கிறது. வர்ஜின் ஸாயில் என்ற நிலையும் இருக்கிறது. ஆனுல் சாதாரண விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட வசதிகள் இல்லை, வேறு பயிர்கள் செய்யப்பட்டிருந்த நிலங்களில் ரப்பர் பயிரிடும்போது அதிலிருந்து கிடைக்கக் கூடிய வருமானம் பெரிய தோட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தை விட குறைவாகத்தான் இருக்க முடியும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சிறு ரப்பர் விவசாயிகள் என்று சொன்னுல் எவ்வளவு ஏக்கர்கள் விவசாயம் செய்பவர்களை சிறு ரப்பர் விவசாயிகள் என்று சொல்கிருர்கள் என்பதையும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.



திரு. ஜே. ஜேம்ஸ் : ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரையில் ஆண்டு வருமானம் உள்ளவர்களைத்தான் சிறு ரப்பர் விவசாயிகள் என்று கூறுகிறேன். ஐயாயிரம் ரூபாயிலிருந்து பத்தாயிரம் ரூபாய் வரை வருமானம் வரவேண்டுமென்ருல் குறைந்தது பத்து ஏக்கர்களிலாவது ரப்பர் பயிர் செய்தால்தான் அந்த அளவிற்கு வருமானம் கிடைக்கும். குறைந்தது பத்து சாதாரண ஏக்கர்களிலாவது பயிரிட வேண்டும் அந்த அளவிற்கு வருமானம் கிடைப்பதற்கு. ஆகவே, பத்து சாதாரண ஏக்கர் அளவிற்காவது விதிவிலக்கு அளித்தால்தான் அவர்களுக்கு நன்மை கிடைக்க முடியும். நாம் கேட்கிற அளவிற்கு விதிவிலக்கு அளிக்க முடியாவிட்டால் ரப்பர் போர்ட் கோட்டயத்தில் இருக்கிறது, இந்த விஷயங்களைப் பற்றி அவர்களிடமிருந்து நிச்சயமாக தெரிந்துகொள்ளலாம். அவர்கள் சொல்வதன் அடிப்படையில் செய்தால் சிறு விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே சிறு ரப்பர் விவசாயிகளுக்கு இந்த மசோதாவிஞல் நன்மை ஏற்பட வேண்டுமென்ருல் ஒரு ஏக்கருக்கு ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அமைத்துத் தர வேண்டும். மேலும் இந்த ரப்பர் விவசாயத்திற்கு அதிகப்படி செலவாகும் என்பதையும் நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனெனில் ப்ளான்ட் செய்வதற்கு அதிக செலவாகிறது. பயிர் செய்து ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு அதிலிருந்து வருமானம் வருவதிற்கில்லை. பத்து ஆண்டுகள் கழிந்த பிற்பாடுதான் அது பலன் தருகிறது. அதோடுகூட அதில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு அவர்கள் பிளான்டேஷன் தொழிலாளர்களாக இருப்பதால் அவர்களுக்கு என்று ஊதியம் வழங்கும் சட்டத்தின் அடிப்படையில்தான் ஊதியம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. மற்ற சாதாரண விவசாயத் தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு இரண்டரை அல்லது மூன்று ரூபாய் கூலி என்ருல் ரப்பர் ப்ளான்டேஷனில் வேலை செய்யும் ஒரு தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே சிறிய ரப்பர் தோட்டங்கள் வைத்திருப்பவர்கள் இந்த அளவிற்கு தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க வேண்டிய நிர்பந்த நிலையில் இருக்கிருர்கள். ஆகவே இவற்றையெல்லாம் கணக்கில்கொண்டு இந்த ஸ்டாண்டர்ட் ஏக்கராவை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்தக் கணக்குகள் வைக்கிற நிலையில் பொதுவாக விவசாயிகள் கணக்கு வைப்பதில் பல சிரமங்கள் உள்ளன என்று சொல்கிருர்கள். ஒருவேளை அதிகப்படியாக விவசாயம் செய்கிறவர்கள்

ஒரு கணக்கப்பிள்ளையை வைத்துக்கொள்ளலாம். அதற்கான மற்ற வசதிகளும் அவர்களுக்கு உள்ளன. ஆனல் ஐந்து ஏக்கர் பத்து ஏக்கர்களில் விவசாயம் செய்பவர்களுக்கு அதற்காகத் தனிக் கணக்கு வைக்க இயலாது, அப்படிக் கணக்கு வைக்காத நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அந்நிலையில், கணக்கு வைக்கவேண்டுமென்று சொல்லும்போது அவர்கள் வருமான வரி அதிகாரிகளின் தயவிலும், கர்ணத்தின் தயவிலும் இருக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இவற்றை எல்லாம் மாற்றியமைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை அமைச்சர் அவர்கள், இந்தப் பொறுக்குக் கமிட்டி சுற்றிவந்தபோது ரப்பரைப் பொறுத்தவரையில் யாரும் மனு கொடுக்கவில்லை, இதற்காக யாரும் ஒன்றும் கூறவில்லை என்றிருந்தாலும்கூட இந்த மசோதா இந்த மன்றத்திற்கு வருவதற்கு முன்பாகவே சிறிய ரப்பர் விவசாயிகள் சங்கம் சார்பில் ஒரு மனு அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இவைபற்றி மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவினை வரவேற்று என் கருத்துக்களை இங்கு சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

இந்த மசோதாமீது எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ரப்பர் தோட்ட முதலாளிகளுக்காக இவ்வளவு வக்காலத்து வாங்கியதைப் பார்க்கும்போது எனக்கு மிக மிக ஆச்சரியமாக இருக்கிறது. ரப்பர் தோட்ட முதலாளிகளுக்கு இவ்வளவு தூரத்திற்கு வக்காலத்து வாங்கியவர்கள் நாங்கள் சோஷலிஸ்ட்கள் என்று சொல்லிக்கொள்வதைப் பார்க்கும்போது இங்கு அவர்கள் முதலாளிகளுக்காக வாதாடுகிறார்களா அல்லது ஏழை விவசாயிகளுக்காக வாதாட இங்கு வந்திருக்கிறார்களா என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் ஏழை விவசாயிகளுக்காக உள்ளபடியே பாடுபடுபவர்கள் என்றால் நெல் பயிரிடுபவர்கள், கடலைக்காய் பயிரிடுபவர்கள் இவர்களுக்காக வாதாடியிருக்க வேண்டும். அவர்களுக்குச் சலுகைகளைப் பெற்றுத் தர வேண்டும். ஆனல் அவைப்பற்றிக் கேட்கவில்லை. மாறாகக் கரும்பு பயிர் வைத்திருப்பவர்கள், ரப்பர் பயிர் வைத்திருப்பவர்கள், திராட்சைப் பயிர் வைத்திருப்பவர்கள், இவர்களுக்குச் சலுகைகள் வேண்டுமென்று கேட்டார்கள்.





இந்த நேரத்தில் நெல் பயிரிடுகிறவர்கள்பற்றி நான் என் கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். ஒருபோகம், இரண்டு போகம், மூன்று போகத்திற்கெல்லாம் கவர்ன்மெண்ட் ஸோர்சிலிருந்து தண்ணீர் பெறுகிறார்கள். ஒருபோகத்திற்குமட்டும் கவர்ன்மெண்ட் ஸோர்சிலிருந்து தண்ணீர் பெறக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. இரண்டு போகங்களுக்கு அப்படித் தண்ணீர் பெறக்கூடிய நிலங்களும் இருக்கின்றன. கவர்ன்மெண்ட் ஸோர்சிலிருந்து மூன்று போகங் களுக்கும் தண்ணீர் பெறக்கூடிய நிலங்களும் இருக்கின்றன. ஆனல் ஒரு போகம் வைத்தாலும்சரி. இரண்டு போகம் வைத்தாலும்சரி, அல்லது மூன்று போகம் வைத்தாலும்சரி, கவர்ன்மெண்ட் சோர்சி லிருந்து தண்ணீர் பெறும் நிலங்கள் என்றால் ஒரு ஏக்கர் என்பதை ஒன்றரை ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற கணக்கில் எடுத்துக்கொள் கிறார்கள். அதே மாதிரி இரண்டு போகம் வைப்பவர்களுக்கும் அந்தக் கணக்குத்தான். மூன்று போகம் வைப்பவர்களுக்கும் அந்தக் அந்தக் கணக்குத்தான். ஒரு போகம் வைத்திருப்பவர்களுக்கும் அந்த வகையிலே மாற்றி அமைக்க வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலைக்காயைப் பொறுத்தவரையில் இந்த மாதிரிப் பல இடங் களில் இருக்கிறது. மூன்று போகம் கடலைக்காய் சர்க்கார் தண்ணீர் பெற்று வைக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஒரு போகம்மட்டும் சர்க்கார் தண்ணீர் பெற்று வைக்கக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. இப்படி வித்தியாசங்கள் இருக்கிறபோது அவர்கள் கணக்கு வைத்து, ரூ. 5,000-க்கு மேல் வருமானம் இல்லை என்று காட்டாவிட்டாலும் அவர்களும் வரி செலுத்த வேண்டும். எதற்காகச் சலுகை காட்டப் பட்டதோ, அந்தச் சலுகையின் பயன் விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போய்விடும். கணக்கு வைத்துக்கொள்வது இருக்கட்டும். ஒரு போகம், இரண்டு போகம் என்ற வித்தியாசத்தை யார் யாருக்கு அந்தச் சலுகை காட்ட வேண்டுமோ, அந்தச் சலுகைகளை இந்த சட்டத்தில் இணைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, இந்த விவசாய வருமான வரி சம்பந்தமாகச் சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1972 டிசம்பர் 12

நானும் அந்தக் கூட்டுக் கமிட்டியில் இருந்ததால் எல்லோருடைய அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. நண்பர் ஹாண்டே அவர்கள் இரண்டு யோசனைகளைச் சொன்னார்கள். எதிர்க்கட்சியாக இருக்கக்கூடியவர்கள் கொள்கை ரீதியாகச் சொல்ல வேண்டிய குறைகளைச் சொல்வதன்மூலமாக மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய நிலைமையில் அவைகள் இருந்தால் அது வரவேற்கப்பட வேண்டியதுதான்.

ஒன்று 10 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராக ஆக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் நான் விவசாயியும் அல்ல, விவசாய மக்களிடத்திலே கேட்டு, இந்தக் குறிப்பைக் கொடுத்தேன் என்று சொன்னார்கள். எப்போதும் வக்கீலாக வரக்கூடியவர்கள் விவரம் தெரிந்து சொல்லவேண்டும். அவர்கள் சொல்வது மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய வகையில் இருக்கவேண்டும். அப்படிச் செய்தால் மக்களும் அவர்கள் கட்சியை வரவேற்பார்கள். வருடத்திற்கு ரூ. 5,000-க்கு மேல் வருமானம் பெறக்கூடியவர்கள் விவசாய வருமான வரி கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது முதல் 10 ஏக்கருக்கு வரி இல்லை. மேற்கொண்டு உள்ள 5 ஏக்கருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் ரூ. 75 கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ரூ. 5.000-க்கு மேல் வருமானம் பெறுபவர்கள் ரூ. 75 வரி கட்டுவதால் என்ன வந்து விடப் போகிறது? எதற்காகச் சலுகை கேட்கிறார்கள்? எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர்கள் "ஹெல்தி கிரிடிசிசம்" சொல்ல வேண்டும். ஏதோ சொல்லவேண்டும், என்ற மனப்பான்மையில் பேசக் கூடாது. இன்று 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் உள்ள 5 ஏக்கருக்கு சர்க்காருக்குக் கிடைப்பது ரூ. 75. ரூ. 5,000-க்கு மேல் வருமானம் வருபவர்கள் ரூ. 75 கொடுப்பதில் என்ன தயக்கம் ஏற்படும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் மசோதா நல்ல அம்சம் பொருந்தியதாக இருக்கிறது என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, அவர்கள் சொன்னது, 1972-முதல் அமல் நடத்த வேண்டுமென்று சொல்வதை 1974-க்கு மாற்ற வேண்டுமென்பதாகும். இதன்மூலமாக இரண்டு வருடத்திற்கு அரசாங்கத்திற்கு வரி வராமல் போய்விடுகிறது. சர்க்கார் மக்களுக்குத் தேவையான திட்டங்கள் பலவற்றை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இன்று வெள்ளத்தால்



1972 டிசம்பர் 12] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

ஏற்பட்ட நஷ்டத்தைப் பார்க்கிறபோது அரசாங்கம் கோடிக்கணக் கான ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கும் என்று தோன்றுகிறது. பணப்பயிர்களுக்கு வரி போடுவதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டியதுதான். விவசாயிகள் ரூ. 5,000-க்கு மேல் வருமானம் வருவதற்குத்தான் வரி கட்டப் போகிறார்கள். அதுவும் பணப்பயிர்களுக்குத்தான் அதிக வரி போட்டிருக்கிறோம். சாதாரண நெற்பயிர்களுக்கு வரி குறைவு, சர்க்கார் நீர்ப்பாசனப் பயிர்களுக்கு நாம் ஜாஸ்தி போட்டிருக்கிறோம். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் வாழையை எடுத்துக்கொள்ளலாம். ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்று போட்டிருக்கிறோம். அதிலே இரண்டு வித்தியாசம் காட்டியிருக்கிறார்கள். "இர்ரிகேடட் பை கவர்ன்மெண்ட் சோர்ஸ், இர்ரிகேடட் பை நான்-கவர்ன்மெண்ட் சோர்ஸ்" இது ரொம்பவும் வரவேற்கக்கூடியது. பாடுபடுகிறவர்களுக்கும், நன்றாய் உழைப்பவர் களுக்கும் ஒரு சலுகை காட்டப்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்க தயவில் நீர்ப்பாசனம் செய்கிறவர்களுக்குச் செலவு குறைவு. அரசாங்க தயவு இல்லாமல் அவர்களுடைய சொந்த முயற்சியால் கிணறு வைத்திருப்பவர்கள், அதன் மூலமாகப் பயிர் செய்பவர்களுக்கு ஒரு சலுகை தரப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான ஒரு பாகு பாட்டை இந்த அரசைத் தவிர வேறு யாரும் செய்யமாட்டார்கள். இர்ரிகேஷன் என்று ஒரு வார்த்தையில் போட்டுவிடுவார்கள். இப்படி அவர்கள் பாகுபாடு செய்திருப்பதன் மூலமாக உண்மையில் கஷ்டப்படும் விவசாயிகளுக்கு அரசாங்கம் சலுகை அளித்திருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். குற்றம் சொல்லவேண்டும், அரசாங்கத் திடம் மேலும் சலுகை கேட்க வேண்டுமென்பதற்காகச் சொல்வது சரியல்ல.

தென்னையை எடுத்துக்கொண்டால், அதைக்கூட இரண்டாகப் பிரித்து இருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் சோர்ஸில் வரும் தென்னைக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்று போட்டிருக்கிறார்கள். மற்ற சோர்ஸாக இருந்தால், மானாவாரியாக இருந்தாலும் இரண்டு ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்று வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பிரித்துக்கொடுத்து, தகுந்த வரி வீதத்தை நிர்ணயம் செய்திருக் கிறார்கள். அதன்மூலமாக வருவாய் வருவதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கும், மக்களுக்கும் நன்மையும் ஏற்படுகிறது.

இந்தக் கூட்டுக் கமிட்டியில் இருந்தவர்கள் ஏதாவது முட்டுக் கட்டைபோட்டு, டிஸ்ஸென்டிங் மினிட் கொடுக்கவேண்டுமென்று பார்த்தார்கள். அமைச்சர் அவர்கள் என்ன சலுகை வேண்டுமானாலும் தருகிறேன். விவசாயிகளுக்கு, மக்களுக்கு வேண்டிய சலுகை கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னதால் ஒரு விதமான டிஸ்ஸென்டிம் நோட்டும் கொடுக்க முடியவில்லை. நண்பர் அழகர் சாமி அவர்கள் ஏதோ ஒன்றைச் சொல்லி வைக்கவேண்டுமென்று ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். என்னிடம் 50 பேர்களுக்கு மேல் வந்து இருப்பார்கள். அந்தக் குறை இருக்கிறது. இந்தக் குறை இருக்கிறது என்று சொன்னார்கள். அத்தனைக் குறைகளையும் அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்து, இன்று எல்லோராலும் வரவேற்கத்தக்க வகையில் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, விவ்சாய வருமான வரிச் சட்டத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த விவசாய வருமான வரிச் சட்டம் முதன் முதலாக சட்டப் பேரவையில் விவாதிக்கப்பட்டபோது, இங்கே விவசாயிகள் கணக்கு வைத்துக்கொண்டு, அந்தக் கணக்குகளைக் காட்ட முடியாது என்று ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. நாங்கள் எல்லோரும்கூட நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் விவசாயிகள் கணக்கு வைத்துக்கொள்வது என்பது நடக்கக்கூடிய காரியம் அல்ல என்று சொன்னோம். ஆகவே, ஒட்டுமொத்தமாக ஒரு தொகையை வரியாக வைத்தால் அவர்களுக்குச் சௌகர்யமாக இருக்கும் என்று சொன்னோம். அந்தக் கணக்கு வைக்கும் முறை கூடாது என்றும் சொன்னோம். அந்த நேரத்தில் கணக்கு வைக்காமல் ஒட்டுமொத்தமாக வரி செலுத்துவதற்குக் கம்பௌண்டிங் சிஸ்டத்தில் வரி செலுத்துவதற்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வரப்பட்டது. அதிலேகூட பல சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே, எத்தனை ஸ்டாண்டர்டு ஏக்கராக இருந்தாலும் சரி, அந்த வரி செலுத்த வேண்டுமென்று சொன்ன நேரத்தில், கணக்குக் காட்டாமல் கம்பௌண்டிங் சிஸ்டத்தில் ஒட்டுமொத்தமாக வரிக் கட்டுவதற்கு எங்களுக்குச் சலுகை தரவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். நாங்கள் கேட்டுக்கொண்டதை, அமைச்சர்





அவர்களும், அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு அதற்கான ஒரு திருத்தத்தை வருமான வரிச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு விவசாயிகளின் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு நாம் பணப்பயிர்களுக்கு வரி செலுத்தவேண்டுமென்ற முறை கொண்டு வந்திருக்கிறோம். அந்த வரியைக் கொண்டுவந்து, அமல்படுத்துகிற நேரத்தில் அதிலே பல சிரமங்கள் விவசாயிகளுக்கு இருக்கின்றன. அந்தச் சிரமங்களை நீக்குகிற வகையில் பல வழிவகைகளை அவர்கள் செய்ய வேண்டும். செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் இந்த செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டில் அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நாங்கள் ஒரு பாரம் தருவோம். அவர்கள் அந்தப் பாரத்தில் எந்தெந்தப் பயிர்களைப் பயிர் செய்கிறோம் என்று குறிப்பிட்டு, உரிய அதிகாரிகளுக்கு அதை அனுப்பினால், அவர்கள் வந்து அதைப் பார்வையிட்டு, அவர்கள் இன்ன பயிர் செய்து வருகிறார்கள் என்று சொல்வார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதேகூட விவசாயிகள் அப்படித் தான் செய்துகொண்டிருக்கிறார்கள். அதிலே பல சிரமங்கள் இருக் கின்றன. விவசாயிகளிடம் அதற்கான ரிக்கார்டு இருக்க வேண்டும். அதிகாரப் பூர்வமான ரிக்கார்டு இருக்க வேண்டும். அதற்கு வழி வகை செய்யும் முறையில், ஒரு பாஸ் புத்தகம் கொடுக்க வேண்டும். ஒரு விவசாயி 10 ஏக்கரில் பயிர் செய்கிறார் என்றால், எந்தெந்தப் பயிர்களை எவ்வளவு ஏக்கரில் பயிர் செய்து இருக்கிறார் என்று உடனடியாகத் தெரிந்து கொள்ளக்கூடிய முறையில் அந்தப் பாஸ் புத்தகத்தில் அதிகாரிகள் எழுதி கையெழுத்துப் போட்டு விவசாயிகளிடத்தில் கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பயிர் கெட்டுவிடுகின்ற நேரத்திலும் அந்த அதிகாரிகளிடத்தில் அவர்கள் முறையிடமுடியும். இரண்டு ஏக்கர் பருத்தி விவசாயம் செய்திருந்தால், பருத்தி கெட்டு விட்டது, இரண்டு ஏக்கர் கெட்டுவிட்டது என்று உடனே அதிகாரிகளிடம் முறையிட முடியும். அதிகாரிகள் வந்து பார்க்க முடியும். எத்தனை ஏக்கர் இன்னென்ன விவசாயம் செய்யப்பட்டிருக்கிறது என்று பயிர்வாரியாக அந்த பாரத்தில் ஏழுதிக்கொடுத்துவிட்டாலும், விவசாயிகளிடத்திலும் அதுபற்றி ஒரு குறிப்பு இருந்தால்தான் அது நிச்சயம் பயன்படும். விவசாய வருமான வரி விதிக்கப்படுவதற்கும் இந்தக் குறிப்பு விவசாயிகளிடத்தில் இருந்தால், எந்தவிதமான

மாறுதல் செய்தாலும் அது தெரியும். அதிகாரிகளும் விவசாயிக
ளிடத்தில் "புத்தகத்தில் இம்மாதிரி எழுதியிருக்கிறது. நீங்கள் அதை
ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள்" என்று சொல்ல முடியும்.

அது மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு அடிக்கடி விவசாயத்திற்கு
வேண்டிய உரங்கள், மருந்துகள் பயிர்ப் பாதுகாப்புக்காகக் கொடுக்
கிறோம். அவர்களிடத்தில் இம்மாதிரி ஒரு பாஸ் புத்தகம் இருந்தால்,
தங்களுக்கு வேண்டிய உர வகைகள், மருந்துகள், மற்றவைகளை
விவசாயிகள் சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே, நம்
முடைய அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு இந்த முறையைச்
செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்
பொழுதுதான் விவசாயிகளின் சிரமங்களை அவர்கள் நீக்க முடியும்
என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதை
அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகச் செய்து தருவார்கள் என்று நான்
நம்புகிறேன்.

பயிர்வாரியாக நாம் வருமான வரிப் போடுகிறோம். பயிர்கள்
கெட்டுவிட்டால், என்ன பயிர் கெட்டு விட்டது என்று அதிகாரி
களுக்கு ஒரு அறிக்கையை நாம் தருகிறோம். அப்படித் தருகின்ற
நேரத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஒவ்வொரு தனி
விவசாயியின் நிலத்தைச் சென்று அதிகாரிகள் பார்வையிடுவது
என்பது நடக்கக்கூடிய காரியம் அல்ல. ஆகவே, ஒரு கிராமத்தில்
பயிர் கெட்டுவிட்டது என்று சொன்னால், விவசாயிகள்மட்டும்
அறிக்கை அனுப்பாமல், கிராமத்திலுள்ள அதிகாரிகளும் இன்னென்ன
கிராமங்களில் இன்னென்ன பயிர்கள் கெட்டுவிட்டன என்று தெரிவித்
தால், அங்குள்ள ஊராட்சி மன்றத் தலைவர் அல்லது மற்றக் கிராம
அதிகாரிகள் அப்படித் தெரிவிக்கின்ற நேரத்தில் அதிகாரிகள் அங்கு
வந்து பார்வையிட்டு இன்னென்ன பயிர்கள் இந்தக் கிராமத்தில்
கெட்டிருக்கின்றன என்று ஒட்டுமொத்தமாகக்கூட நிலைமையை
ஆராய்ந்து அறிந்துக்கொள்ளலாம். இதற்கான வழிவகைகளை நம்
முடைய அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு ஸ்டாண்டர்ட் ஏக்கர் பிரித்த முறையில்
தென்னைக்குப் பாசனம் கிடைக்கக்கூடிய தண்ணீராக இருந்தால் ஒரு
ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றும், பாசனம் இல்லாதிருந்தால்
ஒரு ஏக்கர் $\frac{1}{2}$ ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றும் கணக்கிடப்படும் என்று
குறிப்பிடப்பட்டிருக்கிறது. தென்னையைவிட பருத்தி, வேர்க்கடலையில்





நிச்சயம் அதிகமான வருமானம் வராது. தென்னைக்குக் கொடுத்த சலுகையை நிச்சயம் பருத்தி, வேர்க்கடலைக்குத் தரவேண்டும். என்னுடைய பகுதியில் வேர்க்கடலை நிறைய பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். தென்னைக்கு அதிகமாக நோய் வராது. பருத்தி, வேர்க்கடலைக்கு அதிகமாக நோய் வருகிறது. ஒரு வருடம் அதிகமாக வருமானம் வரலாம், ஆனால் இன்னொரு வருடம் பயிர் கெட்டு விடலாம். சாதாரணமாக 3 வருடங்களுக்கு சராசரியாக கணக்கு எடுத்தால் தென்னையைவிட அதிகமான வருமானம் பருத்தி, வேர்க்கடலைக்கு வராது, ஆகவே, தென்னைக்கு கொடுத்த சலுகையை பருத்தி, வேர்க்கடலைக்கும் கொடுக்க வேண்டும். பாசனம் இல்லாத பயிர்களுக்கு இரண்டு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன கருத்தை நிச்சயம் செய்து தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, இந்த மசோதா முதலில் நம்முடைய அவைக்கு வந்து, பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, பிறகு இங்கே வந்திருப்பதை நாம் அறிவோம். எக்ஸெம்ப்ஷன் லிமிட் $7\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்தது. அது மிக அதிகம் என்று சொல்லப்பட்டது. அடுத்து வரியானது ஸ்லாப் சிஸ்டத்தில் முதலில் ரூ. 25 என்று போடப்பட்டிருந்தது. அதுவும் அதிகம் என்று சொல்லப்பட்டது. இது பொறுக்குக் குழுவுக்குச் சென்று அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்த சாட்சிகளெல்லாம் என்ன சொன்னார்களோ, அவை அத்தனையையும் ஏற்று ரொம்ப தாராள மனப்பான்மையுடன் இந்த மசோதாவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். முதலில் $7\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு மேல் இருக்கக்கூடிய நிலத்திற்கு வரி விதிக்கப்பட்டது. அதை இப்பொழுது 10 ஸ்டாண்டர்டு ஏக்கராக ஆக்கியிருக்கிறோம். அதற்கு மேல் வருமான வரி ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ரூ. 25 என்று முதலில் இருந்தது. அதை இப்பொழுது அமைச்சர் அவர்கள் ரூ. 15-ஆகக் குறைத்திருக்கிறார்கள். இதிலே இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்கள். கவர்ன்மெண்டு சோர்ஸ் என்று சொல்லும்பொழுது 12 மாதங்களுக்கும் தண்ணீர் பாய்ந்தால் தான் அது கவர்ன்மெண்டு சோர்ஸாக சட்டத்தில் கருதப்படும் என்று இடம் கொடுத்திருக்கிறார்கள். எங்கேயும், எந்தப் பயிருக்கும் 12 மாதங்களும் கவர்ன்மெண்டு சோர்சிலிருந்து தண்ணீர்

பாயாது. அதன் காரணமாகக்கூட நமக்கு சந்தேகம் வரவேண்டிய தில்லை. அதைக்கூட ரொம்ப தாராள மனப்பான்மையோடு விவசாயிகளுக்கு செய்திருக்கிறார்கள். ஒரு ஏக்கர்கூட கவர்ன்மெண்டு ஸோர்சின்கீழ் வந்ததாக கண்டுபிடிக்க முடியாது. உதாரணமாக, வாழைக்கு 12 மாதம் ஆகும். 10 மாதம் ஒரு வாய்க்காலில் தண்ணீர் வரும். இரண்டு மாதங்களுக்கு வராது. இரண்டு மாதங்களுக்கு தண்ணீர் வரவில்லை என்றால், அது கவர்ன்மெண்டு சோர்ஸ் ஆகாது. அது இண்டிவிஜுவல் சோர்ஸ் என்ற கணக்கில் வரும். ஆகவே, விவசாயிகளுக்கு எப்படிச் செய்தால் நன்மை வருமோ, எவ்வளவு தாராள மனப்பான்மையோடு இந்த சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள். முதலில் ரூ. 25 என்று இருந்ததை ரூ. 15 ஆகக் குறைத்திருக்கிறார்கள். 11 ஏக்கர் வாழை போட்டிருப்பவர்களுக்கு சாதாரணமாக எங்கள் பக்கத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ. 2,000 ரொக்கக் குத்தகை கிடைக்கும். 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு, 11 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு நிச்சயம் சுமார் ரூ. 15,000 வருமானம் வரும். அந்த விவசாயி 10 ஸ்டான்டர்டு ஏக்கருக்கு மேல் ஒரு ஏக்கருக்கு ரூ. 15 தான் வரி கொடுக்க வேண்டும். இது ரொம்ப சாதாரணமாகக் கொடுக்கக் கூடிய வரி. முதலியார் அவர்கள்கூட இதை இங்கே ரொம்ப தாராளமாக வரவேற்று பேசினார்கள். அங்கேகூட எவ்வளவெல்லாம் நன்மையாகச் சொல்ல முடியுமோ அவ்வளவையும் சொன்னார்கள் திரு. பொன்னப்ப நாடாரும், மற்றவர்களும் பொறுக்குக் குழுவில் இருந்து ஏகமனதாக அனுமதித்த ஒன்று இது.

இந்த மசோதாவைப்பற்றிக் கூறுகையில் கணக்குப் பிள்ளை விவகாரத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் கணக்குப் பிள்ளையிடம்கூட போக வேண்டாம். கணக்குப்பிள்ளை எழுதிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. அடங்கல் புத்தகத்தில் வேறு ஏதாவது எழுதி வைத்திருந்தால், அதைத் தவிர்க்கக்கூடிய முறையில், நேரிடையாக யார் பயிரிடுகிறார்களோ, அவர்களுக்கு ஒரு ஃபாரம் அனுப்பி, உங்கள் நிலத்தில் என்ன பயிரிடுகிறீர்களோ அதை எழுதினால் போதும், அதை வைத்து அஜ்மாஷ் பண்ணி நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம் என்று தாராள மனப்பான்மையில் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மசோதா மிக நல்ல மனப்பான்மை





யோடு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதனால் அரசுக்கு சில கோடி ரூபாய் வருமானம் வந்தாலும், நல்ல முறையில் வருகின்ற வருமானம் என்ற எண்ணத்தில் நான் இந்த மசோதாவை ஆதரித்து, அமர்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாய வருமான வரியைப்பற்றிய இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற கூட்டத் தொடரில் இந்த மசோதா இந்த அவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஃபர்ஸ்டு ரீடிங், செகண்டு ரீடிங், தேர்டு ரீடிங் என்ற அளவுக்கு வந்து, மசோதா நிறைவேற்றப்படுகிற நேரத்தில் இந்த அவையின் எண்ணத்திற்கு இணங்க இந்த மசோதா கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டு, அந்தக் குழுவில் இந்த மசோதா மிக விரிவாகவும், விவேகத்துடனும் ஆராயப்பட்டு, நல்ல முறையிலே இந்த மசோதா திருத்தப்பட்டு நம் முன்னிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. தேர்டு ரீடிங் என்ற அளவுக்கு வந்தும்கூட, அந்த நேரத்தில் எதிர்க்கட்சியினர் கூறிய கருத்துக்களை ஏற்று, கூட்டு ஆய்வுக் குழுவுக்கு விடுகின்ற ஒரு ஜனநாயக மனப்பான்மையை இந்திய திரு நாட்டிலேயே தமிழகத்திலே இருக்கிற இந்த ஆட்சியில்தான் காண முடியும் என்பதை நான் இந்த மன்றத்தில் மெத்த மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாய வருமான வரி எவ்வளவு தூரம் நியாயமானது, விவசாயிகளெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அந்தக் கால கட்டத்தில் விவசாய வருமான வரியை நாம் விதிப்பது முறைதானா என்று ஒரு சில ஐயப்பாடுகள் இங்கே எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால், வளர்ந்து வருகின்ற பொருளாதார கட்டத்திலே, கடந்த 20 ஆண்டுகளாக, குறிப்பாக அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, கடந்த 6, 7 ஆண்டுகளாக தமிழ்நாட்டிலிருந்து பொது நிதியிலிருந்து கோடான கோடி ரூபாய் நம்முடைய கிராமங்களில் செலவழிக்கப்பட்டிருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிட முடியாது. (public money) செலாவணியில் அதிகமாக விடப்பட்டது நம்முடைய கிராமங்களில் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்திய நாட்டிலே பொதுவாக பார்க்கப்போனால் பெரும்பான்மை மக்கள் வாழ்கின்ற இடங்கள் கிராமங்கள்தான் அவர்கள் செய்கின்ற

தொழிலும் விவசாயத் தொழில்தான். ஆகையினால் (majority of the people) பெரும்பான்மையான மக்கள் ஈடுபட்டிருக்கின்ற ஒரு தொழிலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்திட வேண்டுமென்பதற்காக அதிகமான அளவில் பணத்தை நாம் கிராம வளர்ச்சிக்காகவும், விவசாய வளர்ச்சிக்காகவும் செலவழித்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி கிராம வளர்ச்சிக்காக பணம் செலவழிக்கப்படும்போது. ஏராளமான பணம் (circulation) -க்கு விடப்படுகிறது. செலாவணியில் நாம் விடுகிறோம். அப்படி செலாவணிக்கு விடப்படுகின்ற பணம், அந்தப் பணத்தினால் பொருளாதாரத்திலே ஏற்படுகின்ற வளர்ச்சி, பொருளாதாரத்திலே முன்னேற்றம், அந்த வளங்களின், அந்த முன்னேற்றங்களின் அறிகுறியாக கிராமப்புறங்களுடைய விவசாயத் துறையில் அரசுக்கு ஒருவிதமான பங்கு கிடைக்க வேண்டுமென்பது பொருளாதார நிபுணர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு தத்துவம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் காட்ட ஆசைப்படுகிறேன். பொதுவாக ஒரு நிதி தத்துவம் என்று சொன்னால் (fiscal policy) அந்த (fiscal policy) எப்படி வகுக்கப்பட வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு ஒரு வருமானம் மட்டும் அந்த (fiscal policy) யின் அடிப்படையில் கிடைக்க வேண்டும் என்பது நோக்கமாக இருக்கக் கூடாது. அந்த (fiscal policy) வருமானம் கிடைக்கின்ற வழிகளில் வகுக்கப்பட்டாலும், பண வீக்கத்தை குறைப்பதற்கான வழிகளில் வகுக்கப்பட வேண்டும். விலையேற்றத்தை தடுக்க, விலையை நிர்ணயிக்கும் அளவில் அந்த fiscal policy ஏற்பட வேண்டும். (to keep a check on price level and to keep inflationary tendencies under check) என்று சொல்வார்கள். இந்த இரண்டு, மூன்று அடிப்படைகளை வைத்து (fiscal policy) -ஐ நாம் நிர்ணயிக்கிறோம். அப்படிப் பார்த்தால் கிராமங்களில் அதிகமாக செலாவணிக்கு விடப்பட்ட பணம், அந்தப் பணம் சாதாரணமாக அப்படியே விட்டு விடப்பட்டு விட்டால், இந்த விலை நிர்ணயம் செய்யக்கூடிய, விலை (level, piece level) என்று சொல்லுகிறோமே, அந்த (price level அதனையும் செய்யக் கூடியவர்களாக இருக்கிறோம். (Inflationary tendencies) நாட்டில் பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக கருதப்படுகிறது, அப்படித்தான் நிலைமை இருக்கிறது. அந்தப் பண வீக்கத்தை நாம் கட்டுப்படுத்த வேண்டுமானால், அதன் வாயிலாக விலையேற்றங்களை





தடுக்க வேண்டுமானால், நம்முடைய நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மேற்கொண்டிருக்கின்ற விவசாயத் தொழிலுக்கு இந்த fiscal policy அதற்கு ஏற்ற முறையில் நாம் பொறுத்தி நடாத்தட வேண்டும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அப்படிப் பார்க்கும்போது இந்த விவசாய வருமான வரி இன்று தமிழக அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்த விவசாய வருமான வரி ஒரு நல்ல பொருளாதார அடிப்படையில் on sound economic principle என்று சொல்லுவார்கள்; அப்படி நல்ல ஒரு ஆரோக்கியமான பொருளாதார அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய நாட்டிலே இப்போது பொருளாதார வளர்ச்சி developing economy வளர்ச்சி பெற்றிருக்கிறது. அதுவும் rural economy is fastly developing அப்படி dojəʌəp ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் பொதுவாக பல காரணங்களால் கிராம மக்களுக்கு தொல்லைகள் ஏற்படுகின்றன. கிராம மக்களுடைய வாழ்க்கையில் வறுமை இன்றைக்கும் ஒழிக்கப்படவில்லை. அவர்கள் பல காரணங்களை உத்தேசித்து கடன் வாங்கக் கூடியவர்களாகவும், அதுவும் விவசாயக் காரியங்கள் நிறைவேற்றுவதற்கு போதிய அளவுக்கு நிதிபெற்றவர்கள் என்று சொல்லக்கூடிய அளவில் இல்லாத வர்களாகவும் இருப்பது உண்மை தான். இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அப்படி இருக்கின்ற காரணத்தினால் தான் இன்றைக்கு இந்த மசோதாவை வெளியிட்டதை நாம் பார்க்கிறோம். முன்னால் Commercial crop என்று சொல்லுகிறோமே, அப்படி ஒரு விவசாயி அதிகமாக வருமானம் செய்து, அதனால் அந்த profit என்று சொல்லுகிறோமே, அந்த Commercial துறையில் அதிகமாக இந்த வரியை விதிப்பதற்கு மசோதா வழி செய்கிறது. இது இந்த மசோதாவில் ஒரு நல்ல அம்சம் என்று நான் கருதுகிறேன்.

அதேநேரத்தில் இந்த மசோதாவில் அருமை நண்பர்களெல்லாம் சுட்டிக் காட்டியதுபோல சாதாரண சிறு விவசாயிகள், Commercial crops -ஐ தவிர்த்து, மற்ற சாதாரணமாக இருக்கின்ற, பொதுவாக இருக்கின்ற நெல் போன்றவைகளை பயிரிடக் கூடிய சிறு விவசாயிகள் எந்த விதமான ஒரு பாரமும் இல்லாமல் நல்ல முறையில் இந்த மசோதா வழி செய்திருப்பதை நான் மெத்த மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன். ஆகையினால்தான் இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன் என்று கூறி,

இதிலே சில அனுபவ பூர்வமான practical difficulties இருக்கின்றது. விவசாயிகளுக்கு எப்படியெல்லாம் practical difficulties அனுபவ பூர்வமான இடைஞ்சல்கள் ஏற்படலாம் என்பதை அருமை நண்பர்களெல்லாம் சுட்டிக் காட்டினர்கள். சாதாரணமாக பி.காம். படித்து வரக்கூடிய ஒரு பட்டதாரிகூட எம்.காம் படித்துவிட்டு கணக்கை எப்படி வைக்க வேண்டும், எப்படியெல்லாம் நாம் அதற்கான திட்டங்களை வைக்க வேண்டுமென்று இருக்கின்றவர்கள்கூட சில தவறுகளை இழைத்து விடுகிருர்கள் என்கின்ற உண்மையை இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்ட், சேல்ஸ்டாக்ஸ் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் செய்கின்ற இந்த கணக்கு ஆய்வு முறையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அந்தத் துறை அமைச்சராக இருக்கும் தங்களுக்கு அவை நன்ருகத் தெரியும். நானும் ஏற்கெனவே பல தடவை சொல்லியிருக்கிறேன். அவர் ஒரு வியாபாரி. ஒரு நல்ல சிறந்த வியாபாரி. ஆகையினுல் வியாபாரிகளெல்லாம் கணக்கை எப்படித் தான் வைத்தாலும், என்ன நல்ல முறையில் வைத்தாலும் வருகின்ற அதிகாரிகள் அதிலே ஒரு புள்ளி வைத்து விடுவது சாதாரண நிலை இன்றைக்கு இருக்கிறது. அதற்கு புள்ளி வைக்காவிட்டால் அவருக்கு வயிறு நிறையாது. புள்ளி வைக்க முடியாத நிலையில் அவர்கள் கணக்கை செய்து விட்டால் வியாபாரிகளுக்கும் வயிறு நிறையாது. இந்த நிலைமை நாட்டில் இருந்து வருகின்றது. இந்த complicated process, complicated method இதில் இருக்கிறது. ஆகையினுல் சாதாரண பாமர மக்களாகிய நம் விவசாயிகள் ஒவ்வொரு வருடமும் பருவநிலை காலங்களில் பல விதமாக Commercial crops மற்ற crops அவர்கள் பயிரிடும்போது அதற்கான ஒரு உரிய முறையில் கணக்கை சரியான முறையில் வைத்து, அதிகாரிகளிடம் காட்டி, அசெஸ்மெண்ட் செய்யப்பட்டு, அதனுல் ஒரு நியாயமான முறையில் வரிகள் பெற்றுக் கொள்ளப்படும் என்ற உத்திரவாதத்தை இந்த அவையில் அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்ன அந்த practical difficulties ஐ எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அவர்களை மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவனக இருக்கின்றேன். இந்த அளவில் இந்தக் குறைகளெல்லாம் அகற்றப்பட்டால் இந்த மசோதா மிகவும் ஒரு சிறந்த மசோதா. குறிப்பாக, அதிகாரிகள் நம்முடைய விவசாயிகளை அணுகும்போது Business men வணிகர்கள் முறையில் அல்லாமல், விவசாயிகளை ஒரு தனிப்பட்ட அன்போடும், தனிப்பட்ட ஒரு அனுதாபத்தோடும் அணுகக் கூடிய முறையில் வரிவசூல் முறைகளை மாற்றி அவர்கள் அமைக்க



Rules will be framed after the Bill is passed under the provisions of the Act. So, the Rules will be framed in such a manner as to give the least difficulties to the farmers and assessees. என்னுடைய வேண்டுகோள். ஆகையினுல் தயவு கூர்ந்து அந்த rules ஐ frame பண்ணும்போது அந்த வகையில் frame பண்ண வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொண்டு இந்த மசோதா நல்ல மசோதா, ஒரு sound economic principle என்று சொல்லுவார்களே அதன் அடிப்படையில் உள்ள மசோதா, இந்த மசோதா விலைவாசி உயர்வை தடுப்பதற்கு பயன்படும், பண வீக்கத்தை தடுப்பதற்கு பயன்படும், விவசாயப் பெருங்குடி மக்கள், கிராம மக்கள் நாட்டு வளர்ச்சிக்காக அவர்களை contributors களாக இருக்கிருர்கள் என்ற ஒரு உணர்ச்சியை sense of participation in the governance of the country அந்த sense-ஐ ஏற்படுத்தும். அது ஒரு நல்ல முறை என்று கூறி இதை மனதார வரவேற்று இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் பொதுவாக இந்த வருமான வரித் திருத்தச் சட்டத்தை வரவேற்ருர்கள். பொறுக்குக் குழுவுக்கு இந்தச் சட்டத்தை அனுப்புகின்ற நேரத்திலேயே மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் இந்தச் சட்டம் ஏகமனதாக நிறைவேற வேண்டும். அதற்கு ஏற்றவகையில் அனைவரின் கருத்துக்களையும் அறிந்து, தக்க முறையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று சொன்னுர்கள். அந்த வகையில்தான் இந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின்மீது பேசுகின்றபோது நம்முடைய சுதந்திராக் கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை 1—4—1974 முதல் அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர் அப்படிச் செய்தால் விவசாயிகளுக்கு பயன் கிடைக்கும் என்ற வகையில் சொல்லியிருப்பார் என்று கருதுகிறேன். உண்மையில் 1—4—1974 முதல் இந்தத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்தினுல் விவசாயிகளுக்குப் பெருத்த பாதகம் தான் ஏற்படும். ஏற்கெனவே 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில்

இதிலே சில அனுபவ பூர்வமான practical difficulties இருக்கின்றது. விவசாயிகளுக்கு எப்படியெல்லாம் practical difficulties அனுபவ பூர்வமான இடைஞ்சல்கள் ஏற்படலாம் என்பதை அருமை நண்பர்களெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். சாதாரணமாக பி.காம். படித்து வரக்கூடிய ஒரு பட்டதாரிகூட எம்.காம் படித்துவிட்டு கணக்கை எப்படி வைக்க வேண்டும், எப்படியெல்லாம் நாம் அதற்கான திட்டங்களை வைக்க வேண்டுமென்று இருக்கின்றவர்கள்கூட சில தவறுகளை இழைத்து விடுகிறார்கள் என்கின்ற உண்மையை இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்ட், சேல்ஸ்டாக்ஸ் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் செய்கின்ற இந்த கணக்கு ஆய்வு முறையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அந்தத் துறை அமைச்சராக இருக்கும் தங்களுக்கு அவை நன்றாகத் தெரியும். நானும் ஏற்கெனவே பல தடவை சொல்லியிருக்கிறேன். அவர் ஒரு வியாபாரி. ஒரு நல்ல சிறந்த வியாபாரி. ஆகையினால் வியாபாரிகளெல்லாம் கணக்கை எப்படித் தான் வைத்தாலும், என்ன நல்ல முறையில் வைத்தாலும் வருகின்ற அதிகாரிகள் அதிலே ஒரு புள்ளி வைத்து விடுவது சாதாரண நிலை இன்றைக்கு இருக்கிறது. அதற்கு புள்ளி வைக்காவிட்டால் அவருக்கு வயிறு நிறையாது. புள்ளி வைக்க முடியாத நிலையில் அவர்கள் கணக்கை செய்து விட்டால் வியாபாரிகளுக்கும் வயிறு நிறையாது. இந்த நிலைமை நாட்டில் இருந்து வருகின்றது. இந்த
complicated process, complicated method
இதில் இருக்கிறது. ஆகையினால் சாதாரண பாமர மக்களாகிய நம் விவசாயிகள் ஒவ்வொரு வருடமும் பருவநிலை காலங்களில் பல விதமாக Commercial crops மற்ற crops அவர்கள் பயிரிடும்போது அதற்கான ஒரு உரிய முறையில் கணக்கை சரியான முறையில் வைத்து, அதிகாரிகளிடம் காட்டி, அசெஸ்மெண்ட் செய்யப்பட்டு, அதனால் ஒரு நியாயமான முறையில் வரிகள் பெற்றுக் கொள்ளப்படும் என்ற உத்திரவாதத்தை இந்த அவையில் அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்ன அந்த practical
difficulties ஐ எல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அவர்களை மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். இந்த அளவில் இந்தக் குறைகளெல்லாம் அகற்றப்பட்டால் இந்த மசோதா மிகவும் ஒரு சிறந்த மசோதா. குறிப்பாக, அதிகாரிகள் நம்முடைய விவசாயிகளை அணுகும்போது Business men வணிகர்கள் முறையில் அல்லாமல், விவசாயிகளை ஒரு தனிப்பட்ட



அன்போடும், தனிப்பட்ட ஒரு அனுதாபத்தோடும் அணுகக் கூடிய
முறையில் வரிவசூல் முறைகளை மாற்றி அவர்கள் அமைக்க
Rules will be framed after the Bill is passed under the pro-
visions of the Act. So, the Rules will be framed in such a manner
as to give the least difficulties to the farmers and assessees.
என்னுடைய வேண்டுகோள். ஆகையினால் தயவு கூர்ந்து அந்த
rules ஐ frame பண்ணும்போது அந்த வகையில்
frame பண்ண வேண்டும் என்று இந்த நேரத்தில் நான்
கேட்டுக்கொண்டு இந்த மசோதா நல்ல மசோதா, ஒரு sound
economic principle என்று சொல்லுவார்களே
அதன் அடிப்படையில் உள்ள மசோதா, இந்த மசோதா விலைவாசி
உயர்வை தடுப்பதற்கு பயன்படும், பண வீக்கத்தை தடுப்பதற்கு
பயன்படும், விவசாயப் பெருங்குடி மக்கள், கிராம மக்கள் நாட்டு
வளர்ச்சிக்காக அவர்களை contributors களாக இருக்கிறார்கள்
என்ற ஒரு உணர்ச்சியை sense of participation in the governance of
the country அந்த sense- -ஐ ஏற்படுத்தும். அது
ஒரு நல்ல முறை என்று கூறி இதை மனதார வரவேற்று இத்துடன்
என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இங்கே
பேசிய உறுப்பினர்கள் அனைவரும் பொதுவாக இந்த வருமான வரித்
திருத்தச் சட்டத்தை வரவேற்றார்கள். பொறுக்குக் குழுவுக்கு
இந்தச் சட்டத்தை அனுப்புகின்ற நேரத்திலேயே மாண்புமிகு முதல்
அமைச்சரவர்கள் இந்தச் சட்டம் ஏகமனதாக நிறைவேற வேண்டும்.
அதற்கு ஏற்றவகையில் அனைவரின் கருத்துக்களையும் அறிந்து, தக்க
முறையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.
அந்த வகையில்தான் இந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின்மீது பேசுகின்றபோது நம்முடைய சுதந்திராக்
கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தத் திருத்தச்
சட்டத்தை 1—4—1974 முதல் அமல்படுத்த வேண்டும் என்று
கேட்டுக்கொண்டார்கள். அவர் அப்படிச் செய்தால் விவசாயிகளுக்கு
பயன் கிடைக்கும் என்ற வகையில் சொல்லியிருப்பார் என்று கருது
கிறேன். உண்மையில் 1—4—1974 முதல் இந்தத் திருத்தச்
சட்டத்தை அமல்படுத்தினால் விவசாயிகளுக்குப் பெருத்த பாதகம்
தான் ஏற்படும். ஏற்கெனவே 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில்

நிறைவேற்றிய சட்டத்தை திருத்தி விவசாயிகளுக்கு சலுகை அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. திரு. ஹாண்டே அவர்கள் கூறுகிறபடி 74 வரை இந்தச் சட்டத்தை அமுல் படுத்தாமல் இருந்தால் பழைய முறையிலேயே விவசாயிகள் வரி செலுத்தவேண்டும். அதனால் பாதகம் தான் ஏற்படும். ஆகவே 1—4—1972 முதல் இந்தச் சட்டத்தை அமல் படுத்துவதுதான் விவசாயிகளுக்கு நன்மை பயக்கும்; அவர்களுக்கு சலுகை அளிக்கும்.

அதிலும் 1—4—1972 முதல் சட்டத்தை அமல் படுத்தினாலும், 1—4—1971 முதல் 31—3—1972 வரையில் என்ன பயிர் வைத்திருந்தார்களோ அந்தப் பயிரின் அடிப்படையில்தான் கணக்குப்பார்த்து, வரிவிதிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் இதிலே எந்தவிதமான சிக்கலும் ஏற்பட வழியில்லை.

திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது ரப்பர் தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு இன்னும் அதிகமான சலுகை அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு ஒரு காரணத்தையும் சொன்னார்கள். சிறிய சிறிய விவசாயிகள்தான் பெரும்பாலும் இரப்பர் தோட்டம் வைத்திருக்கிறார்கள்; ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் தான் வருமானம் கிடைக்கிறது, என்ற காரணத்தைச் சொன்னார்கள். ஆனால் அரசாங்கக் கணக்குப்படி பார்த்தால் ஒரு ஏக்கருக்கு 1250 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. 10 சாதாரண ஏக்கர் வரை இரப்பர் தோட்டத்திற்கு வரி விதிக்கக்கூடாது என்று சொன்னார்கள். 10 சாதாரண ஏக்கர் ரப்பர் தோட்டம் வைத்திருப்பவர்கள் சிறிய விவசாயியாக இருக்க முடியாது. முதல் 10 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு வரி இல்லை. அதற்குப் பின்னால் படிப்படியாக ஸ்லாப் வைத்து வருமான வரி வைத்திருக்கிறோம். அதிலும் முன்பு 25 ரூபாய் என்று இருந்ததற்கு இப்போது 15 ரூபாய் என்றும், முன்பு 35 ரூபாய் என்று வைத்திருந்ததற்கு இப்போது 25 ரூபாய் என்றும்—இப்படிக் குறைத்திருக்கிறோம். இதற்கு மேலும் சலுகை காட்டவேண்டுமென்றால் இப்போதைக்கு அது இயலாது.

இன்னொன்றையும் இங்கே கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை முதலிலே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் அழகர்சாமி அவர்கள் வரவேற்பதாகத் தெரிவித்தார்கள். அதற்குப் பின்னால்





திரு. தங்கமணி அவர்கள் இந்தச் சட்டம் விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் இல்லை என்று இப்போது அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தினால் முதலாளிகளுக்குத்தான் லாபம் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது அளிக்கப் பட்டிருக்கும் இந்தச் சலுகையைவிட இன்னும் அதிகமாகச் சலுகை அளிக்க வேண்டுமென்றால் அவர்களுடைய மறுப்பு அறிக்கைக்கு—அவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு வலுவூட்டுவதாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திரு. சண்முகசுந்தரம் அவர்கள் பேசும்போது விவசாயிகளுக்கு பயிர்வாரி அடிப்படையில் பாஸ்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். விவசாயிகளுக்கு பாஸ்புக் கொடுக்கும் முறையை நாம் ஏற்கனவே அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இத்திட்டம் பரமக்குடியில் முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப் பட்டது. அதிலே விவசாயியினுடைய நிலத்தின் அளவு, நிலத்தின் தன்மை, நிலத்தில் செய்யப்படும் பயிர், வரக்கூடிய வருமானம், செலுத்த வேண்டிய வரி ஆகிய எல்லாவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, இப்போதைக்கு வேறு ஒரு பாஸ் புத்தகம் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு வருமான வரி கட்டுவதற்கு வேண்டிய பாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பாரத்தில் கேட்டிருக்கும் விபரங்களை நிரப்பி அனுப்பினால் போதுமானது. அந்த பாரத்தை அவர்களால் சரியாக நிரப்ப முடியாது என்று தெரிந்தால், சம்பந்தப் பட்ட அதிகாரிகளை அணுகினால் அதிகாரிகளே நிரப்பிக் கொடுப்பதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்து, பயிர் கெட்டுப்போய்விட்டால், அந்தக் காலத்திற்கு வரி வசூலிக்கக் கூடாது என்று தெரிவித்தார்கள். "ரூல்ஸ் பிரேம்" பண்ணும்போது இந்தக் கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அவைகள் எல்லாம் உரிய முறையில் கவனிக்கப்படும். ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் வைக்கப்பட்டிருந்த பயிர் நோயினால், மழை இன்மையினால், அல்லது தண்ணீர் பாய்ச்சல் இன்மையால் கெட்டுப்போய்விட்டது என்று எழுதி அதிகாரிகளுக்கு அனுப்பினால் 15 நாட்களுக்குள்ளாக அதிகாரிகள் வந்து பார்த்து, அஜ்மாஷ் செய்யும்போது அதைக் குறைத்துக்கொள்வார்கள். அதனால் அதைப்பற்றிய பயம் கனம் அங்கத்தினர்களுக்கு வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இதிலே பேசிய எல்லா உறுப்பினர்களுக்கும் பதில் சொல்ல முடியாவிட்டாலும்—காலம் போதாமையினல்—பொதுவாக இதை எல்லோரும் வரவேற்றிருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் சொல்லிய கருத்துக்கள் தக்கமுறையில் பரிசீலிக்கப்படும். இன்னும் ஏழு, எட்டு சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதால் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி, "தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாய வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) (ஆய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு ஆய்வுக்குழு திருத்தியமைத்தவாறு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

*Clause 2.*

MR. DEPUTY SPEAKER : The question is—

"That clause 2 do stand part of the Bill".

THIRU J. JAMES : Sir, I move—

"In clause (vv) of section 2 of the Principal Act, for item (iv) the following item shall be substituted, namely—

'(iv) one acre of land used for growing rubber'.

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஜேம்ஸ் அவர்கள் ரப்பர் தோட்டத்திற்குச் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே அளித்த விளக்கத்தில் இதற்கும் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கும் சலுகைக்கு மேல் மேற்கொண்டும் சலுகை அளிக்க இயலாது. வேறு ஏதாவது சங்கடங்கள் இருக்குமானல், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், பரிசீலிக்கப்படும். எனவே, இந்தத் திருத்தத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு, சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகிறபோது ரப்பர் தோட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 1,250 ரூபாய் வருமானம் அரசாங்கத்தின் கணக்குப்படி வருவதாகச் சொன்னர்கள். எந்த அடிப்படையிலே அந்தக் கணக்கு வந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, பொதுவாக அரசாங்க இலாக்காவில் கணக்கு எங்கிருந்து வரும் என்பது அவருக்குத் தெரியாததல்ல. கணக்கப்பிள்ளை, மணியக்காரர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆர்.டி.ஓ., டி.ஆர்.ஓ., கலெக்டர் வழியாக அரசாங்க செக்ரட்டரிக்கு வந்து, பின் அமைச்சருக்கு வந்து, பின் அமைச்சரவைக்கு வந்து அதன்பின் இந்த மன்றத்திற்கு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 3, 4, 5, 6 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

*Clause 7.*

MR. DEPUTY SPEAKER : The question is—

"That clause 7 do stand part of the Bill".

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"In clause 7, for the expression, 'the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*', substitute the expression "21st Novemberfl 1972".

The amendment was put and carried.

Clause 7, as amended, was put and carried.

Clause 8 was put and carried.

*New Clause 9.*

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move the following be added as new clause 9—

"9. *Repeal.*--The Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Ordinance, 1972 (Tamil Nadu Ordinance 3 of 1972) is hereby repealed."

The amendment was put and carried.

New Clause 9 was put and carried.

Clause-1.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.

THIRU J. JAMES : Sir, I move the following amendment—

'For sub-clause (2) of clause 1, substitute the following :

"(2) It shall come into force on the 1st April 1973".

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் ஏற்கனவே விளக்கம் தந்தேன். 1971-ல் இருந்தே அமலுக்கு வருவதாகச் செய்தால் விவசாயப் பெருமக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஆகவே 1972-ல் இருந்து வருவதே நியாயமாக இருக்கும். திரு. ஜேம்ஸ் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் தம்முடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லையாதலால் அது பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 1, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

முகப்புரை, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

'That the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 37 of 1972) as amended, be passed.'

* 4—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்டமுன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) தற்போதுள்ள 18(3) பிரிவின்படி, உபரி நிலம், 18(1) பிரிவின்கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து அரசிடம் உரிமை நிலை பெறுகிறது. இவ்வறிவிப்பு. நடைமுறை மரபுகளை எல்லாம் பின் பற்றிய பிறகே வெளியிடப்படுகிறது. இச்சட்டத்தின் தொடக்க நாளுக்குப் பிறகு, உச்ச வரம்புப் பரப்புக்கு மேல் எவரும் நிலத்தைத் தமது உடைமையாக வைத்திருக்கக் கூடாது என்று இச்சட்டத்தின் 7-வது பிரிவு தடை செய்வதாயிருந்தாலும், இச்சட்டத்தின் தொடக்க நாளுக்குப் பிறகும், உபரி நிலம் அரசிடம் உரிமை நிலை பெறும் நாளுக்கு முன்பும், உபரி நிலத்தைப் 18-வது பிரிவின் (3) உட்பிரிவில் சொல்லியுள்ளதன் காரணமாக, நிலத்தின் சொந்தக்காரர் தொடர்ந்து வைத்திருப்பவராகிறார். சில தேர்வுகளில், இந்தக் கால அளவு பல ஆண்டுகளுக்கும் நீடிக்கிறது. இந்த இடைக் காலத்தில், நிலச் சொந்தக்காரர் உபரி நிலத்தைத் தொடர்ந்து அனுபவித்து வருகிறார். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் உட்கருத்தின்படி, பொருத்தமான அதிகாரியால் முடிவாக அறிவிக்கப்படும் உபரி நிலம் உச்ச வரம்புப் பரப்பளவை நிச்சயிப்பதற்கான முக்கியமான நாளாகிய இச்சட்டத்தின் தொடக்க நாளிலிருந்தே, அரசிடம் உரிமை நிலைபெற வேண்டும் என்றும், நிலத்தின் சொந்தக்காரரோ, அதிலிருந்து உடைமையில் வைத்திருந்த காலத்திற்கு நிலத்தைப் பயன்படுத்தி அனுபவித்து வந்ததற்கு இழப்பீடாக ஒரு தொகையை அரசுக்குச்

* 4—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

செலுத்த உட்பட்டவராக வேண்டுமென்கிற கருத்தறிவிக்கப் பட்டுள்ளது. இந்நோக்கத்தை எய்துவதற்கு இச்சட்ட வரைவில் 3(2) பகுதி விழைகிறது.

இச்சட்டத்தின் தொடக்க நாளுக்குப் பிறகு, ஆனால் அறிவிப்பு நாளுக்கு முன்பு செய்யப்பட்ட நில மாற்றம் எதுவும், இச்சட்டத்தின் விதித் துறைகளை முறியடிப்பதாயின், அந்த மாற்றம் செல்திறன் உடையதல்ல என்று அனுமதி பெற்ற அதிகாரியால் 22-வது பிரிவின் படி அறிவிக்கப்படுகிறது. 10 (4) பிரிவின்படி, நிலத்தின் சொந்தக் காரர் தாம் வைத்திருக்கக்கூடிய உச்சவரம்புப் பகுதிக்குள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய நிலத்தை அவரே தெரிந்தெடுத்துக் கொள்ள லாம். பல நேர்வுகளில், 22-வது பிரிவில் சொல்லிய காலத்தில் நில மாற்றம் செய்துள்ள நிலத்தின் சொந்தக்காரர்கள், அவ்வாறு மாற்றம் செய்து, அம்மாற்றம் செல்திறனுடையதல்ல என்று அறிவிக் கப்பட்ட நிலத்தை உபரி நிலமாக அரசால் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்கிற தங்கள் விருப்பத்தைத் தங்கள் நிலச் சொத்து விவரக் கணக்கில் குறிப்பிட்டுள்ளனர். இதனால் நிலச் சொந்தக் காரர்களுக்கு இரட்டை அனுகூலம் உண்டாகிறது. அதாவது நிலத்தை விலைக்கு வாங்கியவரிடமிருந்து இவர் பெறுமானத் தொகை பெற்றுக்கொண்டதோடு அந்த உபரி நிலத்திற்காக அரசிடமிருந்தும் இழப்பீடு பெறுவதற்கு உரியவராகிறார். இத்தகைய கருதாப் பலன் நிலச் சொந்தக்காரருக்குப் போய்ச் சேரக்கூடாது என்றும் 22-வது பிரிவின்படி நிலமாற்றம் செல்திறன் உடையது அல்ல என்று அறிவிக் கப்பட்ட நிலங்கள் சொத்து மாற்றம் பெறுபவரது உரிமைகள் பாதிக்கப்படாமல் சொத்து மாற்றுபவரது உச்சவரம்புப் பரப்பள வுக்குள் அனுமதி பெற்ற அதிகாரியால் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டுமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. இதனால் விளையும் பலன், நிலத்தை விலைக்கு வாங்கியவர் நிலத்தை வைத்துக் கொள் வதில் தொல்லையிராது; சொத்து மாற்றுபவர் இழப்பீடு எதுவும் பெறுதற்கு உரியவர் ஆகார். இச்சட்ட வரைவில் 3(1) பகுதி இந் நோக்கத்தை நிறைவேற்ற விழைகிறது.

இதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்லிவிடலாம் என்று நினைக் கிறேன். இந்தச் சட்டத்தின்படி ஆதரைஸ்டு ஆபீசர்களுக்கு தங்களிடம் உள்ள உபரி நிலம் எவ்வளவு என்பதை நிலச் சொந்தக் காரர்கள்தான் சொல்ல வேண்டும். இந்த இந்த நிலங்கள் என்னுடைய சொந்த நிலங்கள், இன்ன இன்ன நிலங்கள் உபரி



நிலங்கள் என்று நிலச்சொந்தக்காரர்கள் தாம் சொல்ல வேண்டும், தம்முடைய சொந்த நிலத்தை இன்னது என்று பொறுக்கி எடுத்துக் கொள்ள உரிமை இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக சிலர் என்ன காரியம் தவறாகச் செய்கிறார்கள் என்றால் இவர்கள் சொல்லி நிலத்தை ஆதரைஸ்டு அதிகாரிகள் எடுத் துக் கொள்வதற்கு இடைப்பட்ட காலத்தில் உபரி நிலத்தை விற்று விடுகிறார்கள். பின்னர் அதிகாரிகளிடம் விற்கப்பட்ட நிலம் தான் உபரியானது, தம்மிடம் இருப்பவை தம்முடைய சொந்த நிலங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். உபரி நிலங்கள் என்று விற்கப்பட்ட நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறபோது அந்த நிலத்தை வாங்கியவர் பாதிக்கப்படுகிறார். அதேசமயம் நிலக்காரர்களுக்கு நிலத்தை விற்றபோது ஒரு ஆதாயம் கிடைக்கிறது, அரசாங்கம் உபரி என்பதாக எடுத்துக்கொள்கிறபோது நஷ்டஈட்டுத் தொகை வேறு கிடைக்கிறது. இதனால் நிலத்தை வாங்கியவர்கள்தான் பாதிக் கப்படுகிறார்கள். அதைத் தவிர்க்கவேண்டும் என்கிற காரணத்தினால் தான் தம்முடைய உபரி நிலங்கள் எவை, சொந்த நிலங்கள் எவை என்பதை தீர்மானித்துக்கொள்வதற்கு நிலச்சொந்தக்காரருக்கு இது வரை கொடுக்கப்பட்டிருந்த உரிமை அகற்றப்படுகிறது, உபரி நிலங் களை விற்று இருந்தால் அவர்களிடம் இருக்கும் சொந்த நிலமே உபரி நிலமாக கருதப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் கருத்து. இதனால் நிலத்தை வாங்கியவர்களுக்கு ஒரு பாதுகாப்பு, உச்சவரம்புச் சட்டத்தில் இருந்து தப்பி அரசாங் கத்தை மோசம் செய்ய நினைக்கிறவர்களுக்கு இடமிருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) மூன்றாவது திருத்தச் சட்ட வரைவின் 3 (8) பகுதியால் திருத்தப்பட்டுள்ள 21-எ பிரிவின்படி 1970 பிப்ரவரி 15-ம் நாளுக்கும், 1970 அக்டோபர் 2-ம் நாளுக்குமிடையில் பாகப் பிரிவினை அனுமதிக்கப்படத்தக்கதாகும். இச்சட்டத்தின் செயல் நோக்கத்தை முறியடிக்க 1970 அக்டோபர் 2-ம் நாளுக்குப் பிறகும், 22-வது பிரிவில் சொல்லிய காலத்திலும் செய்யப்பட்ட பாகப் பிரிவினையும் அனுமதிக்கப்படக்கூடாது என்பதுதான் இதன் நோக்க மாகும். இந்நோக்கத்தை இச்சட்ட வரைவின் 4-வது பகுதி எய்த முனைகிறது.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 டிசம்பர் 12

எந்த நிலம் குறித்த மாற்றம் 22-வது பிரிவின் படிச் செல்திற னுடையதல்ல என்று அறிவிக்கப்பட்டதோ அந்த நிலங்களை, சொத்து மாற்றுபவரது உபரி நிலங்களாகக் கொண்டு, அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தங்கள் சொத்து விவரக் கணக்கில் குறிப் பிட்டுள்ளவர்களுக்குத் தண்டனையளிக்க வகை செய்து, 88-எனும் புதிய பிரிவு இந்நோக்கத்தை நிறைவேற்ற இந்தச் சட்ட வரைவின் 5-வது பகுதி விழைகிறது.

இதுவரை நிலச்சட்டத்தில் பீனல் கிளாஸே கிடையாது. பீனல் கிளாஸை இப்பொழுது நாம் சேர்க்கின்றோம். கால அளவைப் பயன் படுத்திக்கொண்டு, ஏமாற்றுகின்றவர்களுக்குத் தண்டனை கொடுக் கின்ற பீனல் கிளாஸ் இப்பொழுது இருக்கிறது. எனவே, இந்தச் சட்டங்கள் சமுதாய சீர்திருத்தத்திற்காக வந்த சட்டங்கள் என்ற வகையில் இப்பேரவை ஏகமனதாக இவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலமாக கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத் திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/72) ஆய்வுக்கு எடுத்துச் கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—
"That the Bill be passed".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.



1972 டிசம்பர் 12]

(உ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 44/72.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1972) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொது பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் பயிரிடும் குத்தகைக்காரர் ஒருவருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்னும் உச்சவரம்பிற்கு உட்பட்டு, ஒரு பொதுப் பொறுப்புக் கழகம் தன் வசமுள்ள 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு மேலிருக்கும் நிலங்களை பயிரிடும் குத்தகைக்காரருக்கு குத்தகைக்குவிட வேண்டும். பல நேர்வுகளில், பொதுப் பொறுப்புக் கழகங்கள் ஐயத்திற்கு இட மான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனால் இச்சட்டத்தின் நோக்கத்தையே தோல்வியுறச் செய்யும் வகையில் நிலங்களைப் பகிர்ந் தளிக்கின்றன என்று முறையீடுகள் வந்துள்ளன. நிலங்களைக் குத்தகைக்கு விடும் அதிகாரம் பொதுப் பொறுப்புக் கழகங்களிடமே உள்ளது. சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு, நிலங்களைக் குத்தகைக்கு விட அதிகாரமில்லை. எனவே, கீழ்க்காணும் நேர்வுகளில், பொதுப் பொறுப்புக் கழகங்களின் சார்பாக நிலங்களைப் பயிரிடும் "குத்தகைக் காரர்களுக்குக்" குத்தகைக்குவிட, அனுமதி பெற்ற அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்த முடிவு செய்யப் பட்டுள்ளது. அவையாவன :—

(அ) சட்டத்தின் விதித்துறைகளுக்கு ஏற்ப பொதுப் பொறுப்புக் கழகங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விடாதபோது;

(ஆ) பொதுப் பொறுப்புக் கழகமே சொந்தமாகப் பயிரிடு கின்ற நிலம் சரிவர நிர்வகிக்கப்படாதபோது ;

* 4—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

(இ) பொதுப் பொறுப்புக் கழகத்தினால் நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருந்து, அத்தகைய குத்தகை உண்மை நிலையை காட்டாத போது;

சட்டத்தின் 7-வது பிரிவின் கீழ், பயிரிடும் குத்தகைக்காரார் ஒருவர் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்பட்டு வைத்திருக்கும் நிலங்கள் பொதுப் பொறுப்புக் கழகத்திற்கு மாற்றப்படும். பயிரிடும் குத்தகைக்காரார் ஒருவர், உச்சவரம்பு அளவிற்கு மேற்பட்டு வைத்திருக்கும் நிலங்கள் பொதுப் பொறுப்புக் கழகத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்று மட்டுமே அனுமதி பெற்ற அதிகாரி அறிவிக்கலாம் என்றும், ஆனால், நில உடைமையை வலுக்கட்டாயமாக எடுத்துக் கொள்ள முடியாது என்றும், பயிரிடும் குத்தகைக்காரார் நிலத்தின் உடைமையை பொதுப் பொறுப்புக் கழகத்திடம் ஒப்படைக்க மறுத்தால் மேற்படி கழகம் அந்த நிலத்தின் உடைமையை எடுத்துக் கொள்ள சிவில் நீதி மன்றத்திடம் முறையிட வேண்டும் என்றும் 1365/66-ம் ரிட் மனுவில் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இத்தகைய நடவடிக்கையினால், பொதுப் பொறுப்புக் கழகத்திற்கு வீணான தொல்லைகள் ஏற்படுவதோடு இச்சட்டத்தை முறையாகச் செயற்படுத்துவதில் சிக்கலையும் ஏற்படுத்தும். எனவே, பயிரிடும் குத்தகைக்காரார்கள், நில உச்சவரம்பு அளவிற்கு மேல் வைத்திருக்கும் நிலங்களின் உடைமையை அனுமதி பெற்ற அதிகாரிதானே மேற் கொண்டு பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் ஒப்படைக்க இயலும் வகையில் சட்டத்தின் விதித்துறைகளைச் செய்ய முடிவு செய்யப் பட்டுள்ளது.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

இச்சட்டத்தின் 2(6) பிரிவில், பயிரிடும் குத்தகைக்காரார் ஒருவர் வைத்திருக்கும் நிலத்தின் உச்சவரம்பு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தின் ஒவ்வோர் உறுப்பினரின் பெயரிலும் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுப் பதன் மூலம் இந்த விதித்துறையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வகை ஏற்படுகிறது என்றும் அதன் மூலம் இச்சட்டத்தின் நோக்கம் தோல்வியுற வாய்ப்பு ஏற்படுகிறது என்றும் முறையீடு வந்துள்ளது. எனவே, ஒருவர் அவரது மனைவி, வயது வராத மகன், திருமண மாகாத மகள், பயிரிடும் குத்தகைக்காரார் என்ற முறையில் அல்லது



சொந்தக்காரர் அல்லது சுவாதீன அடைமானதாரர் என்ற முறையில் வைத்துவரக்கூடிய நிலத்தின் மொத்தப் பரப்பளவு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படக்கூடாது என்பதற்கிணங்க விதித் துறை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் பயிர் செய்யக்கூடாது என்று இப்பொழுது சட்டம் இருக்கிறது. சட்டத் தைப் பயன்படுத்திக்கொண்டு மனைவியின் பேரிலும் தன்பேரிலும் பிள்ளைகளின் பேரிலும் ஆளுக்கு 5 ஸ்டாண்டர்டு என்று பிரித்துப் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது கூடாது ஒரு குடும்பத்திற்கு 5 ஏக்கர் இருக்கவேண்டுமென்று நாம் இப்பொழுது சட்டத்தை திருத்திக் கொண்டு வருகிறோம்.

இச்சட்டத்தின் 51-வது பிரிவு பழத் தோட்டங்களாக அல்லது தோப்புகளாக அல்லது பாக்குத் தோட்டங்களாக மாற்றப்பட்ட நிலங்களுக்கு மேற்படி சட்டத்தின் விதித்துறைகளிலும் விலக்களிக் கிறது. பழத் தோட்டங்கள், தோப்புகள் என்னும் சொற்களுக்கு சட்டத்தின் முறையே 2 (18) 2 (29) பிரிவுகள் பொருள் விளக்கம் கூறுகின்றன. வாழை பயிரிடப்பட்டுள்ள நிலங்கள் சட்டத்தில் விவரித்துள்ளதுபோல் பழத்தோட்டங்கள் என்பதன்கீழ் வருமா என்பது பற்றி வாழை ஒரு மரம் என்று ஒரு கருத்தும், அது மரம் இல்லை என்று மற்றொரு கருத்தும், இவ்வாறு இதில் கருத்து வேறு பாடு உள்ளது. வாழையை மரமாகக் கருதினால் வாழை பயிரிடப் பட்டுள்ள நிலங்கள், பழத்தோட்டங்கள் தோப்புகள் என்பதன்கீழ் வருவதோடு சட்டத்தின் விதித்துறைகளின்றும் அவற்றிற்கு விலக்கு அளிக்கப்படும். வாழையை ஒரு மரமாகக் கருதக்கூடாது என்பதே நோக்கமாகும். இந்த நோக்கத்தைத் தெளிவாக்கும் பொருட்டு, வாழை பயிடப்படும் நிலங்களை பழத்தோட்டம், தோப்பு என்றும் பொருள் விளக்க வரம்பிலிருந்து நீக்கும் வகையில் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "பழத்தோட்டம்", "தோப்பு" என்னும் சொற்களின் பொருள் விளக்கங்களைத் திருத்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

வாழை மரம் அல்ல என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய நோக்கம்.

இச்சட்ட வரைவு மேற்கண்ட நோக்கங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

இச்சட்ட வரைவை இப் பேரவை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கத்தை வரவேற்றாலும்கூட, இதிலே இருக்கிற சில கோளாறுகளை இங்கே எடுத்துக் கூறுவது எனது கடமை என்று கருதுகின்றேன். இந்த மசோதாவில், ஆதரைஸ்டு ஆபீசருக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. டிரஸ்டுகள் தங்கள் சொத்துக்களை குத்தகைக்கு விடுவதில் செய்கின்ற தவறுகளை தவிர்ப்பதற்காக ஆதரைஸ்டு ஆபீசர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற, அதாவது, 14(எ) பிரிவில் சுயோ மோட்டோவாக, ஆதரைஸ்டு ஆபீசர் தானாகவே, டிரஸ்டு பிராப்பர்ட்டிகள் எங்கெங்கே தவறுதலாக கையாளப்படுகிறதோ, அங்கே ஆக்ஷன் எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு வழிவகை இந்த மசோதாவில் இடம் பெற்றிருக்கிறது. இதுபோன்ற ஒரு சட்டம், நமது மாநிலத்தில், அதாவது, ரெக்கார்ட் ஆப் டெனன்சி ஆக்ட் ஒன்று இருக்கிறது. அதற்கும் ஆதரைஸ்டு ஆபீசர், அந்த அதிகாரிக்கு இதுபோன்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரியால், இந்த நாட்டில், எவ்வளவு சீர்கேடுகள், சிக்கல்கள், ஏழைக் குத்தகைதாரர்களுக்கு, எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று பார்க்கும்போது அதுபோன்ற துன்பங்கள் இங்கும் ஏழைக் குத்தகைக்காரர்களுக்கு ஏற்படும் என்ற ஐயப்பாடை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சாதாரணமாக, குத்தகைக்காரர்களுக்கும் நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும் சுமுகமான ரிலேஷன்ஷிப் இருக்கும்போது, இந்த
பி.ப. அதிகாரி, அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிற சுயோ மோட்டோ
12-30 அதிகாரத்தைப் பயன்படுத்தி எங்கெங்கு குத்தகை இருக்கிறது என்று தேடிப்பிடித்து அதன்மீது ஆக்ஷன் எடுப்பதன் காரணமாகதான் நல்ல ரிலேஷன்ஷிப் இல்லையென்று குத்தகைதாரர்களுக்கும், அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற கோளாறுகள் போன்று, இந்த மசோதாவில்கூட, ஆதரைஸ்டு ஆபீசர்களுக்கு



வழங்கப்பட்டிருக்கிற அதிக அதிகாரம் துஷ்பிரயோகப்படுத்தப்ப
என்ற ஐயப்பாட்டை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக்கொண்
வர விரும்புகிறேன்.

எங்கோ ஒரு டிரஸ்டில் தவறு ஏற்படும்பொழுது அ
டிரஸ்டுக்குச் சொந்தக்காரராக ஆதரைஸ்டு ஆபீசர் சென்று, அ
நிலத்தை குத்தகைதாரர்களிடமிருந்து எடுக்கவோ அல்லது அ
டிரஸ்டிடமிருந்து எடுத்து குத்தகைதாரர்களுக்குக் கொடுக்
அதிகாரம் அவர்களுக்கு இங்கு வழங்கப்பட்டிருக்கிறது. இ
அதிகாரம், உண்மையாக, நேர்மையாக, நல்ல முறையில் செ
படுத்தப்படுமா என்பது எனக்கு மிகுந்த ஆச்சர்யத்தைக் கொ
கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு
விரும்புகிறேன்.

மூன்றாவது பிரிவில்கூட ஸுயோ மோட்டோ அதிகா
கொடுக்கப்பட்டிருக்கிறது. இ
ஆதரைஸ்டு ஆபீசர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இ
ஸுயோ மோட்டோ அதிகாரம் என்று எங்கெங்கே வருகிற
அவற்றை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அது சாதாரணம
துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது, மிஸ்யூஸ் செய்யப்படுகி
என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொ
வருகிறேன். ஸுயோ மோட்டோ அதிகாரம் வழங்கப்படா
இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஸுவோ மோட்
அதிகாரம் ஆதரைஸ்டு ஆபீசர்களுக்கு வழங்கக்கூடாது எ
சொல்கிறார்கள். அது வழங்கப்படவேண்டும். அதைப்பற்
பெரிய சரித்திரமே இருக்கிறது. நான் அதனுடைய முழு வி
களையும் எடுத்துச் சொல்லாவிட்டாலும்கூட சுருக்கமாகச் சொ
விரும்புகிறேன். பல மாவட்டங்களிலே நிலச்சுவான்தாரர்
நிலத்தை பினாமி என்ற பெயரால் எடுத்துக்கொண்டு அனுபவித்
கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே வலிவலம்தே
என்பவர் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலத்தையெல்லாம் அ
உழுதுகொண்டு அனுபவித்துக் கொண்டு வருகிறார். அதை மீண்
ஆலயத்திற்குச் சொந்தமாக்கி வேறு ஒருவருக்குக் கொடுக்க மு
செய்தும் முடியாமல் போய்விடுகிறது, அது நீதிமன்றத்தி
இப்பொழுது இருக்கிறது, அது வேறு பிரச்னை. ஆனால் அ
ஒருவருக்காகத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று

வேண்டாம். இந்த நாட்டில் பல்வேறு இடங்களில் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் பினாமியாக சிலர் வைத்துக் கொண்டு அனுபவித்து வருகிறார்கள். 1,000 ஏக்கர், 2,000 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னால், பண்ணையாள் குத்தகைதாரர் பெயரில் போட்டு அதையெல்லாம் அவர்கள் அனுபவிக்காமல் வேறு ஒருவர் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது அதைத்தவறு என்று கண்டுபிடித்தால்கூட அதை இன்னொருவருக்கு எடுத்துக்கொடுக்கிற அதிகாரமும் ஆதரைஸ்டு ஆபீசர்களுக்கு இல்லாமல் இருந்தது. விசாரணை என்று வந்தால்தான் இவையெல்லாம் தெரியும். உழுகின்றவர்கள்கூட இந்த விவரங்களையெல்லாம் வந்துசொல்லப் பயப்படுகிறார்கள். நிலச்சுவான்தாரர்கள் அவர்களை மிரட்டுகிறார்கள். நாங்களே கூட விசாரித்தோம். நிலம் எங்கள் பெயரில் இருக்கிறது என்றாலும் எங்களுக்கு நிலம் சொந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். நிலங்கள் யார் பெயரில் குத்தகைக்கு இருக்கிறதோ அவர்களுக்கே அது தெரியாது. இப்படிப்பட்ட தவறுகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் சுயோ மோட்டோ அதிகாரத்தை கொடுத்தால்தான் பினாமிதாரர்களை ஒழிக்கமுடியும். இல்லாவிட்டால் ஒழிக்கமுடியாது. நிலச் சட்டத்திலிருந்து தப்பிப்பதற்கும், குத்தகைச் சட்டத்திலிருந்து தப்பிப்பதற்கும், பினாமிதார்களை கண்டுபிடிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது முதல் கட்டம் தான். இதிலே பல கட்டங்கள் இருக்கின்றன. திரு. ஜேம்ஸ் அவர்கள் அதற்கு ஒத்துழைப்பார்கள் என்று நினைக்கிறேன். பினாமிதார்கள் என்ற பெயரால் ஒருவரே நிலங்களை அனுபவித்துக்கொண்டு இருப்பதை யாரும் அனுமதிக்கமுடியாது. இந்தச் சட்டத்தில் வலிவேற்றவேண்டுமென்று சொல்லவேண்டுமே தவிர இருக்கின்ற அல்லது பெறுகின்ற வலிவைக் குறைக்கக்கூடாது. பினாமிதார்கள் யார் என்பதைக் கண்டுபிடித்தால் அந்த நிலத்தை வேறு யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்பதிலேகூட அதிகாரம் தருகின்ற உரிமை அளிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் தர்மகர்த்தாகளுக்கு வேண்டியவர்களுக்கு அவர்கள் கொடுத்துவிடுவார்கள். சமுதாய சீர்திருத்தம் என்ற முறையிலே இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜேம்ஸ் அவர்கள் பினாமிதாரர்களை அழிப்பதற்கு





அரசாங்கத்தோடு ஒத்துழைப்பார்கள் என்று நம்பி இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**பிரிவு 5.**

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

**"பிரிவு 5 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".**

THIRU J. JAMES : Sir, I move the following amendment—

'In the proposed New Section 14-A—

(a) in sub-section (1) after the words "authorised officer may" omit the words "either *suo motu or*";

(b) in sub-section (3) after the words "officer is satisfied" omit the words "either *suo motu* or".'

The amendment was duly seconded.

வேண்டாம். இந்த நாட்டில் பல்வேறு இடங்களில் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் பினாமியாக சிலர் வைத்துக் கொண்டு அனுபவித்து வருகிறார்கள். 1,000 ஏக்கர், 2,000 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னால், பண்ணையாள் குத்தகைதாரர் பெயரில் போட்டு அதையெல்லாம் அவர்கள் அனுபவிக்காமல் வேறு ஒருவர் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அதைத்தவறு என்று கண்டுபிடித்தால்கூட அதை இன்னொருவருக்கு எடுத்துக்கொடுக்கிற அதிகாரமும் ஆதரைஸ்டு ஆபீசர்களுக்கு இல்லாமல் இருந்தது. விசாரணை என்று வந்தால்தான் இவையெல் லாம் தெரியும். உழுகின்றவர்கள்கூட இந்த விவரங்களையெல்லாம் வந்துசொல்லப் பயப்படுகிறார்கள். நிலச்சுவான்தாரர்கள் அவர்களை மிரட்டுகிறார்கள். நாங்களே கூட விசாரித்தோம். நிலம் எங்கள் பெயரில் இருக்கிறது என்றாலும் எங்களுக்கு நிலம் சொந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். நிலங்கள் யார் பெயரில் குத்தகைக்கு இருக் கிறதோ அவர்களுக்கே அது தெரியாது. இப்படிப்பட்ட தவறுகளை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் சுயோ மோட்டோ அதிகாரத்தை கொடுத்தால்தான் பினாமிதாரர்களை ஒழிக்கமுடியும். இல்லாவிட்டால் ஒழிக்கமுடியாது. நிலச் சட்டத் திலிருந்து தப்பிப்பதற்கும், குத்தகைச் சட்டத்திலிருந்து தப்பிப் பதற்கும், பினாமிதார்களை கண்டுபிடிப்பதற்கும் நடவடிக்கை எடுப் பதற்கும்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது முதல் கட்டம் தான். இதிலே பல கட்டங்கள் இருக்கின்றன. திரு. ஜேம்ஸ் அவர்கள் அதற்கு ஒத்துழைப்பார்கள் என்று நினைக்கிறேன். பினாமி தார்கள் என்ற பெயரால் ஒருவரே நிலங்களை அனுபவித்துக்கொண்டு இருப்பதை யாரும் அனுமதிக்கமுடியாது. இந்தச் சட்டத்தில் வலி வேற்றவேண்டுமென்று சொல்லவேண்டுமே தவிர இருக்கின்ற அல்லது பெறுகின்ற வலிவைக் குறைக்கக்கூடாது. பினாமிதார்கள் யார் என்பதைக் கண்டுபிடித்தால் அந்த நிலத்தை வேறு யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்பதிலேகூட அதிகாரம் தருகின்ற உரிமை அளிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் தர்ம கர்த்தாகளுக்கு வேண்டியவர்களுக்கு அவர்கள் கொடுத்துவிடுவார் கள். சமுதாய சீர்திருத்தம் என்ற முறையிலே இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜேம்ஸ் அவர்கள் பினாமிதாரர்களை அழிப்பதற்கு





அரசாங்கத்தோடு ஒத்துழைப்பார்கள் என்று நம்பி இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

## பிரிவு 5.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

**" பிரிவு 5 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும் ".**

THIRU J. JAMES : Sir, I move the following amendment—

' In the proposed New Section 14-A—

(a) in sub-section (1) after the words " authorised officer may " omit the words " either *suo motu or* ";

(b) in sub-section (3) after the words " officer is satisfied " omit the words " either *suo motu* or ".'

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு விளக்கம் ஒன்றும் தேவையில்லை என்று கருதுகிறேன். ஜேம்ஸ் அவர்கள் திருத்தத்தை வற்புறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 6, 7, 8 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

'That the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agriculture Lands) Amendment Bill, 1972 (L.A. Bill No. 44 of 1972) be passed'.

* திரு. கு. இராசமாணிக்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று விவசாயிகள் சம்பந்தமான என் கருத்தைத் தெரிவிக்கிறேன். குத்தகை விவசாயிகள் சம்பந்தமாக சில பிரச்னைகளைச் சொல்ல விரும்புகிறேன். குத்தகைக்குக் கொடுக்கப்படுகின்ற நிலத்தில் ஒரு விவசாயி இறந்துவிட்டால் அவருடைய மனைவி மக்களுக்குத்தான் அந்த நிலத்தைக்கொடுக்கவேண்டும். அப்படியில்லாமல் அந்த டிரஸ்டிலே மற்றவேறு யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று இருக்கிறது. இதனால் முன்சாகுபடி செய்த அந்த விவசாயியின் குடும்பத்திற்கு வேறு வழியில்லாமல் போய்விடுகிறது. ஒரு போகம், இரு போகம் இவற்றிற்கு குத்தகை நிர்ணயிப்பதில் ஒரு வரம்பு நிர்ணயிக்கவேண்டும். ஒரு போகத்திற்கு என்ன குத்தகை விதிக்கப்படுகிறதோ அதே குத்தகையையே இரு போகத்திற்கும் விதித்து ஒரே சீரான குத்தகையை நிர்ணயிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும். அந்த நிலைமையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: குத்தகை பாதுகாப்புச் சட்டத்திலேயே அப்படிப்பட்ட பாதுகாப்பு எல்லாம் கொடுக்கிற விதிகள் இருக்கின்றன. ஒருவர் இறந்துவிட்டால் அந்த நிலத்திலே அவர் உழைப்பைக் கொடுத்திருக்கிற அந்த நிலத்திலே அவருடைய குடும்பத்தாருக்குத்தான் உரிமை கொடுக்க வேண்டுமென்ற பாதுகாப்பு ஏற்கனவே இருக்கிறது. மேற்கொண்டு அவசியம் ஏற்பட்டால் கொண்டுவரலாம், இப்பொழுது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. செ. கந்தப்பன்): பேரவை முன்னுள்ள கேள்வி:

“தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/72) நிறைவேற்றப்படவேண்டும்”.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஊ) 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு 45/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, “1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்”.

1899-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் 64-வது பிரிவின்படி நீதிபதியானவர் அப்பிரிவினில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்கு ரூ. 5,000 வரையில் அபராதம் விதிக்க வழிவகை உள்ளது. இக்குற்றங்களின் மூலம் ஒரு பத்திரத்தில் அரசினரால்

* 4—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 டிசம்பர் 12

இழக்கப்படும் முத்திரைக் கட்டணத் தீர்வையை வசூலிப்பதற்கு அச் சட்டத்தினில் வழிவகை எதுவும் இல்லை. எனவே, இக்குற்றங்களின் மூலம் அரசினரால் இழக்கப்படும் முத்திரைக் கட்டணத் தீர்வையை நீதிபதியானவர் Magistrate பிரிவு 64-ன்கீழ் விதிக்கப்படும் அபராதத்துடன் சேர்த்து வசூலிப்பதற்கு வகை செய்யும் வழியில் புதிய 64-ஏ பிரிவை அச்சட்டத்தினில் சேர்த்துக் கொள்ளக் கருதப் பட்டுள்ளது.

இச்சட்டமுன்வடிவை இப்பேரவை ஏற்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவரவர்களே, ஏற்கனவே யாராவது சொத்து வாங்கி சொத்து மதிப்பைக் குறைவாகக் கொடுத்தால் நீதிபதி 5,000 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கலாம் என்றிருக்கிறது. ஆனால் அரசாங் கத்திற்கு நியாயமாக வர வேண்டிய கட்டணத்தை வசூலிப்பதற்கு வழிவகை இல்லை. எனவே, இனிமேல் நியாயமாக வர வேண்டிய கட்டணத்தையும் வசூலிக்க வேண்டுமென்பதற்காக, வசூலித்துக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடுவதற்காக இந்தச் சட்டம். எனவே, இதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72) நிறைவேற்றப் பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.



1972 டிசம்பர் 12]

(4) அறிவிப்பு—(தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு:

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. செ. கந்தப்பன்): பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/72) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள் ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(எ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1972) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

சில நிலங்கள் குறித்துச் செலுத்த வேண்டிய ஆண்டுத் தீர்வை யைப் போன்று 20 மடங்குத் தொகையை அல்லது சலுகை வீதத்தில் தீர்வை செலுத்திய பின்னர் 1859-ம் ஆண்டு முதல் அவை வரி யில்லாத நிலங்களாக வைத்து வரப்படுகின்றன. இந்த நிலங்கள் வரியில்லா நில உடைமைகள் என அழைக்கப்படுகின்றன. இந்த நிலங்கள் ரயத்துவாரி நிலங்களேயாகும்.

இதில் என்ன நிலைமை என்றால் ஒருவன் அவனுக்குச் சொந்தமான நிலத்திற்குக் கட்ட வேண்டிய தீர்வையை, 20 மடங்குத் தீர்வையை மொத்தமாகக் கட்டினால் அந்த நிலத்திற்கு காலாகாலத்திற்கும் வரி யில்லாமல் போகும் என்ற நிலை இருக்கிறது.

* 4—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 டிசம்பர் 12

இதில் சிறு வேறுபாடு உண்டு, அதாவது ஏனைய ரயத்துவாரி நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட ஆண்டுத் தீர்வையைச் செலுத்தக் கடமைப்பட்டவராவர். ஆனால் வரியில்லா நில உடைமைகளின் சொந்தக்காரர்கள் தீர்வை ஏதும் செலுத்த வேண்டியதில்லை. அல்லது சலுகை வீதத்தில் மட்டுமே தீர்வை செலுத்த உட்பட்டவராவர். இம்மாநிலத்தில் பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் வரியில்லா நில உடைமைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலத்திற்கு மொத்தமாகத் தீர்வை செலுத்துவதன் அடிப்படையில் கடந்த காலத்தில் இந்த நிலங்கள் வரியில்லா நில உடைமைகளாக இருப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதற்குக் காரணம் எதுவாயிருப்பினும் நிலத்தில் தற்போதைய சொந்தக்காரர்கள் இந்த நிலங்களை நில வரியில்லா நில உடைமைகளாகக் காலவரையறையின்றி வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கக் காரணம் ஏதுமில்லை. எனவே, இம்மாநிலத்திலுள்ள வரியில்லா நில உடைமைகள் அனைத்தும், மேல் வரியுடன் ஆண்டுத் தீர்வை செலுத்தும் வாலாயமான ரயத்துவாரி முறையின் கீழ்க் கொண்டுவரப்பட இயலும் வகையில் மேற்படி நில உடைமைகள் அனைத்தையும் நீக்க அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்ட வரைவு, மேற்கண்ட நோக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

இச்சட்ட முன்வடியவ இச்சட்டப் பேரவை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, திரு. வகாப் அவர்கள்கூடச் சொல்லுவார்கள், அதைப்போன்று நௌலக் போன்ற இடங்கள் நிறைய இருக்கின்றன. இவைகளுக்கு யார் சொந்தக்காரர்கள், யார் உழுகிறார்கள் என்று கண்டுபிடித்து, உழுபவர்கள் 12 ஆண்டுகளுக்கு மேல் உழுதிருந்தால் அவர்களுக்குச் சொந்தமாக்கப்படும். ரயத்துவாரிய நிலமாக இருந்தால் யாருக்குச் சொந்தமோ அவரிடம் கொடுத்து ஆண்டுதோறும் கட்ட வேண்டிய நிலத் தீர்வையை வசூலிக்க வழிவகை செய்கிறது.

அடுத்து, முக்கியமான இரண்டு விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதில் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஜாக்கள் சேர்க்கப்படவில்லை. அரியக்கவுண்டன் ஜா, சடையக் கவுண்டன் ஜா, குறும்பக் கவுண்டன் ஜா இதில் சேர்க்கப்படவில்லை. நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது.



1972 டிசம்பர் 12] [திரு. ப. உ. சண்முகம்]

அடுத்து, குமாரபாளையம் அக்ரஹாரம் பூமி என்று சொல்லப்படுவதும் இதுபோன்றதுதான். அதற்கு ஒரு விசித்திரமான கதையே இருக்கிறது. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குமாரபாளையம் அங்கே ஒரு காலத்தில் ஒரு ஐயர் தங்க நாணயங்களை வசூலித்து மைசூர் மகாராஜாவிற்குக் கொடுத்து விட்டாராம். உடனே அதைப் பெற்றுக்கொண்டு, இந்த நிலம் முழுவதும் உனக்குச் சொந்தம், வரி கட்டத் தேவையில்லை என்று சொன்னதாகவும், அதைப் பிறகு திப்பு சுல்தானும் அனுமதித்து ஏற்றுக்கொண்டதாகவும் சொல்கிறார்கள். குமாரபாளையம் அக்ரஹாரம் இப்படித்தான் வரியில்லாமல் இருக்கிறது. அங்குள்ள உழவர் குடி மக்கள், அங்கே வாழும் மக்கள் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றிருப்பதால் நாம் பின்னால் கொண்டு வந்திருக்கும் அப்பெண்டிக்ஸ் சேர்க்கப்படவில்லை. ஆனால், சேர்க்க வேண்டுமென்பதற்கு அதிகாரத்தை வைத்திருக்கிறோம். எப்பொழுது வேண்டுமானாலும் சேர்க்கலாம். எனவே, 20 ஆண்டுக்காலத் தீர்வையை கட்டிவிட்டால் காலாகாலத்திற்கும் வரி கட்டக்கூடாது என்ற நிலையை மாற்றியமைத்து ரயத்துவாரியாக மாற்றுவதற்கான சட்டம். எனவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, உழுபவர்களுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் சொல்லவில்லை. நிலம் ஒருவருக்குச் சொந்தம் என்றும், ஃப்ரீ ஹோல்ட் என்றும் கொடுக்கப்பட்டது. ஆனால் சில இடங்களில் நிலச் சொந்தக்காரரே யார் என்று தெரியவில்லை. நிலச் சொந்தக்காரர் என்று பட்டா புத்தகத்தில் இருக்கும். ஆனால் 20, 30 ஆண்டுக்காலமாக எதுவுமே சம்பந்தமில்லாமல் யாராவது அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். 12 ஆண்டுகள் உழுதுகொண்டிருந்தால், அதற்கு ஏதேனும் தஸ்தாவேஜி, ஆதாரம் காட்டினால் சொந்தமாக்கப்படும் என்ற அடிப்படையில்தான் சொன்னேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நமது அரசு உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

இதில் சிறு வேறுபாடு உண்டு, அதாவது ஏனைய ரயத்துவாரி நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட ஆண்டுத் தீர்வையைச் செலுத்தக் கடமைப்பட்டவராவர். ஆனால் வரியில்லா நில உடைமைகளின் சொந்தக்காரர்கள் தீர்வை ஏதும் செலுத்த வேண்டியதில்லை. அல்லது சலுகை வீதத்தில் மட்டுமே தீர்வை செலுத்த உட்பட்டவராவர். இம்மாநிலத்தில் பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் வரியில்லா நில உடைமைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலத்திற்கு மொத்தமாகத் தீர்வை செலுத்துவதன் அடிப்படையில் கடந்த காலத்தில் இந்த நிலங்கள் வரியில்லா நில உடைமைகளாக இருப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதற்குக் காரணம் எதுவாயிருப்பினும் நிலத்தில் தற்போதைய சொந்தக்காரர்கள் இந்த நிலங்களை நில வரியில்லா நில உடைமைகளாகக் காலவரையறையின்றி வைத்துக்கொள்வதற்கு அனுமதிக்கக் காரணம் ஏதுமில்லை. எனவே, இம்மாநிலத்திலுள்ள வரியில்லா நில உடைமைகள் அனைத்தும், மேல் வரியுடன் ஆண்டுத் தீர்வை செலுத்தும் வாலாயமான ரயத்துவாரி முறையின் கீழ்க் கொண்டுவரப்பட இயலும் வகையில் மேற்படி நில உடைமைகள் அனைத்தையும் நீக்க அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்ட வரைவு, மேற்கண்ட நோக்கத்திற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

இச்சட்ட முன்வடியவ இச்சட்டப் பேரவை ஏற்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, திரு. வகாப் அவர்கள்கூடச் சொல்லுவார்கள், அதைப்போன்று நௌலக் போன்ற இடங்கள் நிறைய இருக்கின்றன. இவைகளுக்கு யார் சொந்தக்காரர்கள், யார் உழுகிறார்கள் என்று கண்டுபிடித்து, உழுபவர்கள் 12 ஆண்டுகளுக்கு மேல் உழுதிருந்தால் அவர்களுக்குச் சொந்தமாக்கப்படும். ரயத்துவாரிய நிலமாக இருந்தால் யாருக்குச் சொந்தமோ அவரிடம் கொடுத்து ஆண்டுதோறும் கட்ட வேண்டிய நிலத் தீர்வையை வசூலிக்க வழிவகை செய்கிறது.

அடுத்து, முக்கியமான இரண்டு விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இதில் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 3 ஜாக்கள் சேர்க்கப்படவில்லை. அரியக்கவுண்டன் ஜா, சடையக் கவுண்டன் ஜா, குறும்பக் கவுண்டன் ஜா இதில் சேர்க்கப்படவில்லை. நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறது.



அடுத்து, குமாரபாளையம் அக்ரஹாரம் பூமி என்று சொல்லப்படுவதும் இதுபோன்றதுதான். அதற்கு ஒரு விசித்திரமான கதையே இருக்கிறது. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குமாரபாளையம் அங்கே ஒரு காலத்தில் ஒரு ஐயர் தங்க நாணயங்களை வசூலித்து மைசூர் மகாராஜாவிற்குக் கொடுத்து விட்டாராம். உடனே அதைப் பெற்றுக்கொண்டு, இந்த நிலம் முழுவதும் உனக்குச் சொந்தம், வரி கட்டத் தேவையில்லை என்று சொன்னதாகவும், அதைப் பிறகு திப்பு சுல்தானும் அனுமதித்து ஏற்றுக்கொண்டதாகவும் சொல்கிறார்கள். குமாரபாளையம் அக்ரஹாரம் இப்படித்தான் வரியில்லாமல் இருக்கிறது. அங்குள்ள உழவர் குடி மக்கள், அங்கே வாழும் மக்கள் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றிருப்பதால் நாம் இன்னால் கொண்டு வந்திருக்கும் அப்பெண்டிக்ஸ் சேர்க்கப்படவில்லை. ஆனால், சேர்க்க வேண்டுமென்பதற்கு அதிகாரத்தை வைத்திருக்கிறோம். எப்பொழுது வேண்டுமானாலும் சேர்க்கலாம். எனவே, 20 ஆண்டுக்காலத் தீர்வையை கட்டிவிட்டால் காலாகாலத்திற்கும் வரி கட்டக்கூடாது என்ற நிலையை மாற்றியமைத்து ரயத்துவாரியாக மாற்றுவதற்கான சட்டம். எனவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

61586

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: தலைவரவர்களே, உழுபவர்களுக்கே நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: தலைவரவர்களே, உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் சொல்லவில்லை. நிலம் ஒருவருக்குச் சொந்தம் என்றும், ஃப்ரீ ஹோல்ட் என்றும் கொடுக்கப்பட்டது. ஆனால் சில இடங்களில் நிலச் சொந்தக்காரரே யார் என்று தெரியவில்லை. நிலச் சொந்தக்காரர் என்று பட்டா புத்தகத்தில் இருக்கும். ஆனால் 20, 30 ஆண்டுக்காலமாக எதுவுமே சம்பந்தமில்லாமல் யாராவது அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். 12 ஆண்டுகள் உழுதுகொண்டிருந்தால், அதற்கு ஏதேனும் தஸ்தாவேஜி, ஆதாரம் காட்டினால் சொந்தமாக்கப்படும் என்ற அடிப்படையில்தான் சொன்னேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: தலைவரவர்களே, நமது அரசு உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் இருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 டிசம்பர் 12

இந்த மசோதா ஒருசில நிலங்களுக்கு இப்பொழுது வரி விலக்கு இருக்கிறது. ஆகவே, அந்த வரி விலக்கை ரத்து செய்து மற்றவர்கள் வரி கொடுப்பதைப்போல இந்த நிலங்களுக்கு வரி சுமத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையில் வந்திருக்கிறது என்று உணருகின்றேன். நமது அரசாங்கம் நில வரியையே ரத்து செய்ய வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் இருக்கின்றபொழுது, ஏற்கனவே சுமத்தப்பட்ட வரி இருக்கிறதே அந்த வரியையே ரத்து செய்ய கொள்கையின் அடிப்படையில் இருக்கும்பொழுது, இதனுல் ஏற்கனவே ஒரு பகுதிக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, அவற்றிற்கு மீண்டும் வரியைச் சுமத்த வேண்டுமென்ற நிலையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று கூறும்பொழுது, அது நிச்சயமாக கொள்கைக்கு உகந்ததாக இல்லை என்பதை இந்த மன்றத்தில் கூற விரும்புகிறேன்.

இங்கிருக்கும் "டிஸ்பேரிட்டி"யை அகற்ற வேண்டுமென்று விரும்புகிறுர்கள், அப்படியானுல் யார் யார் இப்பொழுது வரி கட்டிக் கொண்டு இருக்கிறுர்களோ, அவர்களுக்கு வரி விதிவிலக்கு அளிக்க வேண்டுமே தவிர, விதிவிலக்கைப் பெற்றுக் கொண்டிருக்கின்றவர்கள், அந்த நலன்களை அடைந்துகொண்டிருப்பவர்கள் மீது வரி சுமத்துவதால் மட்டும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் கொள்கையை அமலாக்கியவர்களாகக் கருத முடியாது. ஆகவே, நில வரியை ரத்து செய்வதற்கு வழிவகைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமே தவிர, இம்மாதிரியான மசோதாக்களைக் கொண்டுவருவதாலே மட்டும் நமது கொள்கையை அமல் நடத்துவதாகக் கூற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவரவர்களே, நிலவரியை ரத்து செய்வது தனி விவகாரம். அது மொத்தமாகத் தமிழ்நாட்டில் எப்பொழுது வருகிறதோ, அப்பொழுது இவர்களுக்கும் சேர்த்து வரும். அதைப்பற்றிப் பிரச்சினை இல்லை. 5 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு அடிப்படைத் தீர்வையில்லை, புஞ்சையாக இருந்தால், அடிப்படைத் தீர்வையில்லை என்று இருக்கிறது. அந்தச் சலுகை இந்த ரயத்துவாரி நிலங்களுக்கும் வரும், உரியவர்களாக இருந்தால். ஆனுல் இப்பொழுது உள்ள பிரச்சினை, 20 ஆண்டுக்காலத்திற்கு மொத்தமாக வரி கட்டிவிட்டால், 200, 300 வருஷங்களுக்கு வரியே கட்ட ... மாற்றத்



1972 டிசம்பர் 12] [திரு. ப. உ. சண்முகம்]

தான் சட்டம் கொண்டு வருகிறேம். எனவே, இந்தச் சட்டத்தைப் பற்றி எந்தத் தவறும் இல்லை. ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திருமதி ஜோதி வெங்கடாசலம் :</u> இந்த ஃப்ரீ ஹோல்ட்ங்சில் இருக்கக்கூடிய நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> பின்னுல் அப்பெண்டிக்சில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேண்டுமென்றுல் பின்னுல் புள்ளி விவரத்தைச் சேகரித்துக் கொடுக்கிறேன். அதிலே கூட சில திருத் தங்கள் இருக்கின்றன. திருத்தங்களை அங்கத்தினர்களுக்கு சர்குலேட் செய்யச் சொல்லியிருக்கிறேம். திருத்தங்களைப் பிரேரேபிக்க இருக் கிறேன். முடிந்த பிறகு மொத்தமாகக் கொடுக்கிறேன்.

<u>மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. செ. கந்தப்பன்) :</u> பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 முதல் 24 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

<u>அட்டவணை</u>

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி :

"அட்டவணை இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் படவேண்டும்".

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன் :—

In the Schedule,—

1. In Part I,—

(1) in column (3), against Dharmapuri in column (1), for the word "Bottanugalam", substitute the word "Bottanugalalam";

(2) in column (4), against Anaimalai Hills village in column (3) and Coimbatore in column (1) insert the figure " 2 " below the figure " 1 " ;

(3) in column (5), against serial number 5 in column (4) and Coimbatore in column (1) for the figures and letter " 6A1 " , substitute the figures and letters " 6A1A ";

(4) in column (6) against serial number 100 in column (4), Kodaikanal in column (3) and Madurai in column (1), for the figure " 0.5 ", substitute the figures "0.55 ";

(5) in column (4) below serial number 192, against Kodaikanal in column (3) and Madurai in column (1), for the figures " 123 ", substitute the figures " 193 ";

(6) in column (5) against serial number 257 in column (4), Kodaikanal in column (3) and Madurai in column (1), for the figures and letters " 278-B1A ", substitute the figures and letters " 378-B1A ";

(7) in column (6) against Adukkam village in column (3) and Madurai in column (1), for the figures " 1-7.61 " denoting the total, substitute the figures " 127.61 ";

(8) in column (6) against Adukkam village in column (3) and Madurai in column (1), for the figures " 2,069–0 " denoting the Grand Total, substitute the figures " 2069.30 ";

(9) in column (2) against Chingleput in column (1) for the word " Sidapet ", substitute the word " Saidapet ";

(10) in column (6) against serial number 4 in column (4), St. Thomas Mount in column (3) and Chingleput in column (1), for the figures " 2.10–63 ", substitute the figures " 2.10263 ";

(11) in column (6) against serial number 5 in column (4), St. Thomas Mount in column (3) and Chingleput in column (1), for the figures " 0.11–86 ", substitute the figures " 0.11586 ",

(12) in column (6) against serial number 7 in column (4) St. Thomas Mount in column (3) and Chingleput in column (1), for the figures " 0.3939 ", substitute the figures " 0.13939 ";



(13) in column (3) under the heading Nawab Gardens against Tiruchirappalli in column (1), for the word " Thamalvarubayam ", substitute for the word " Thamalavarubayam ";

(14) in the heading to column (5) against serial number 13 in column (4), pernambut in column (3) and North Arcot in column (1) for the words " Suevey number " substitute the words " Survey number ";

(15) in column (6) against serial number 43 in column (4), Ootacamund (Town) in column (3) and the Nilgiris in column (1) for the figures " 0.35 ", substitute the figures " 0.30 ";

(16) in column (6) against serial number 2 in column (4), Kodanad in column (3) and The Nilgiris in column (1), for the figures " 2.17 " substitute the figures " 2.07 ";

(17) in column (6) against serial numbers 19, 35, 36, 37, 39, 40 and 41 in column (4), Coonoor (Town) in column (3) and The Nilgiris in column (1) for the figures, " 0.33 ". " 0.50 6/16 ", " 0.87 2/16 ", " 3.70 15/16 " " 0.32 12/16 ", " 0.78 3/16 " and " 0.05 " substitute respectively the figures "0.03 ", " 0.50 ", " 0.87 3/16 ", " 3.70 2/16 " " 0.32 " 6/16 ", " 0.78 12/16 " and " 0.05 15/16 ";

(18) in column (1) against Yercaud sub-taluk in column (2) for the word " alem ", substitute the word " Salem ";

2. In Part II, in column (5) against serial number 44, for the figures " 1.66 " substitute the figures "1066 ";

3. In the *Abstract* at the end for the word " Kumbakouam ", substitute the word " Kumbakonam ".

திருமதி ஜோதி வெங்கடாசலம்: 20 ஆண்டு காலத்திற்கு வரி கொடுத்து விட்ட காரணத்தால், இனிமேல் ஃப்ரீ ஹோல்டிங்ஸ் நிலங்களுக்கு வரி கொடுக்க வேண்டியதில்லை என்று இருக்கிறது. அதையும் இப்போது மறுபடியும் கொண்டு வந்து சேர்த்து வரி கட்ட வேண்டுமென்று சொன்னால், அதனால் வரக்கூடிய வருவாய் எவ்வளவு இருக்கும்? அவர்களுக்கு எக்ஸம்ப்ஷன் கொடுத்துவிட்டு மறுபடியும் அவர்கள் வரி கட்ட வேண்டுமென்று சொன்னால் எப்போதிருந்து வரி கட்ட வேண்டும்?

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வரி கட்டாது இருந்த காலத்திற்கு வரி வசூலிக்கப்பட மாட்டாது. இந்தப் பசலியிலிருந்து கணக்குக்கு வரும். பழைய வரியை வசூலிக்க மாட்டோம். இதிலே அரசாங்கத்திற்கு எவ்வளவு வரி வருகிறது என்பது முக்கியமல்ல. தமிழ்நாடு முழுவதும் பல ஜில்லாக்களில் இந்த முறை இருக்கிறது. சேலம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பல மாவட்டங்களில் இருக்கின்றன. அவற்றை எடுத்துவிடத்தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறதே தவிர, இதிலே பணம் முக்கியமல்ல, கொள்கைதான் முக்கியம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

அட்டவணை, திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold Lands Bill, 1972, as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended was passed, into law.

## (ஏ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு) எண் 50/72

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு குதிரைப் பந்தய (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1972) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

* 8—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1972 டிசம்பர் 12] [திரு. ப. உ. சண்முகம்]

குதிரைப் பந்தய வரிக்கு மேல்வரி விதிக்க வகை செய்வதற்காக தமிழ்நாடு 1935-ம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1935), தமிழ்நாடு 1972-ம் ஆண்டு 44-வது சட்டத்தால் 1971-ல் திருத்தப்பட்டது. மேல்வரி 1972 ஜனவரி 1-ம் நாளிலிருந்து விதிக்கப்பட்டுள்ளது. "பந்தய கணிப்புப் பொறி வரி" (totalizator tax) மீது மேல்வரி விதிப்பதற்கு 1971-ம் ஆண்டு சட்டம் வகை செய்யவில்லை. ஆனால், "பந்தய கணிப்புப் பொறி வரி" மீதும் 1972-ம் ஆண்டு ஜனவரி 1-ம் நாளிலிருந்து மேல்வரி வசூலிக்கப்பட்டது. இவ்வாறு வசூல் செய்ததற்கு செல்திறன் அளிக்கப்பட வேண்டியிருந்தது. மற்றும், "பந்தய கணிப்புப் பொறி வரி"க்கும் தொடர்ந்து மேல்வரி விதிக்கப்பட வேண்டுமென்பது தான் குறிக்கோள். எனவே, இக்குறிக்கோளுக்கிணங்க, சட்டத்தை ஏற்றவாறு திருத்துவது அவசியமெனக் கருதப்பட்டது. மேற்கண்ட குறிக்கோளை எய்துவதற்காக தமிழ்நாடு 1972-ம் ஆண்டு குதிரைப் பந்தய (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1972) 1972 நவம்பர் 21-ம் நாளன்று சாற்றுரைக்கப்பட்டது.

அவையின் முன்னுள்ள இச்சட்ட முன்வடிவு, சட்ட மன்றத்தின் ஒரு சட்டத்தின் மூலம் மேற்சொன்ன அவசரச் சட்டத்தை ரத்து செய்ய விழைகிறது.

தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை இப்பேரவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன. பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir I move—

"That the Tamil Nadu Betting Tax (Second Amendment) Bill 1972 be passed.

The motion was put and carried and the Bill was passed.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.57 மணிக்கு ஒற்றிவைக்கப்பட்டது.

## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders

' Nil '

B. Reports, Notifications and Other Papers.

@ 28. The Mettur Township, Courtallam Township and Bhavanisagar Township (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 49 of 1972).

@ 29. Annexure to the Madras City Municipal Corporation and the Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 48 of 1972).

@ Despatched to Members on 9th December 1972.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1972 டிசம்பர் 13

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### ஊத்துக்கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்

* 141 வின.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாகக் கட்டடங்கள் அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊத்துக்கோட்டை அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிக்கு ரூ. 25,000 மதிப்பீட்டில் துணைக் கட்டிடம் கட்டுவதற்கு, 1971 பிப்ரவரி மாதம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ் வேலைக்கு ரூ. 6,000 நன்கொடை வழங்க பள்ளிக் கட்டிடக் குழு வாக்களித்திருந்தது. இதுவரை பிலும் ரூ. 3,000 கொடுத்துள்ளது. மீதித் தொகையை பள்ளிச் சிறப்புக் கட்டணம் மற்றும் இடைநிலைக் கல்வி நிதியிலிருந்து எடுத்துச் செலவிட சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் நடவடிக்கை எடுத்து வருகிறார். மேற்படி செயற் குறிப்புகளின் மேல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதும் வேலை துவக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, 1971-ஆம் ஆண்டிலே 25,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு, அந்தப் பள்ளிக் கட்டிடக் குழு 3,000 ரூபாய் கொடுக்காத காரணத்தால் இது தடைப்பட்டு வேலை நடைபெறாமல் இருக்கிறது. பள்ளி தொடங்குவதற்குமுன் ஏற்கெனவே அவர்கள் அதிகமாக நிதி வசூலித்துவிட்ட காரணத் ால், இந்தத் தொகையை வசூலிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஆகவே, இதை ஒரு சிறப்பு வழக்காக எடுத்துக் கொண்டு எப்படியேனும் இந்தக் கட்டடத்தை இந்தக் கல்வி ஆண்டிலேயே முடிப்பதற்கான வழிவகையை அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும்பாலான இடங்களில் சாதாரணமாக மொத்தத்தில் ஆகக் கூடிய செலவில் பாதித் தொகையைக் கட்டிடக் குழு ஏற்றுக் கொள்கிறது. மறு பாதித் தொகையை அரசாங்கம் வழங்குகிறது. ஆனால் இந்தப் பள்ளியைப் பொறுத்த வரையில், 25,000 ரூபாயில் 19,000 ரூபாய் அரசு வழங்குகிறது. 6,000 ரூபாய் கட்டிடக் குழு தருவதாக வாக்குறுதி தந்தது. ஆனால், அந்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றாமல், 3,000 ரூபாய்தான் தந்தார்கள். மீதி 3,000 ரூபாயைச் செலுத்தாத காரணத்தால், பிறகு வேறு எந்த வகையில் ஈடு கட்டலாம் என்ற அளவுக்கு இப்பொழுது பள்ளிக் கட்டட சிறப்பு நிதியிலிருந்து 2,000 ரூபாயும், மற்றும் இடைநிலைக் கல்வி நிதியிலிருந்து ஆயிரம் ரூபாயும் எடுத்து, ஆக மூவாயிரம் ரூபாயைச் சரிக்கட்டி கட்டடத்தை முடிப்பதற்கு முயற்சி எடுக்கலாம் என்று கூறியதன் பேரில் இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன், கட்டடம் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் இவ்வளவு சலுகைகளோடு இதை ஏற்றுக்கொள்வதற்கு நன்றி. இப்போது உள்ள மழைக் காலங்களில் மாணவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு படித்து வருகிறார்கள். ஆகவே, அடுத்த கல்வியாண்டு ஜூன் ஆரம்பத்திலாவது மாணவர்கள் கட்டடத்தில் அமர்ந்து படிக்கக்கூடிய வகையில் வகை செய்வதற்கு பொது மராமத்து இலாகாவை அணுகி இந்த வேலையை உடனடியாக எடுத்துக் கொண்டு முடிப்பதற்கு அரசு சிறப்பு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான முறைப்படிதான் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றன. பள்ளிச் சிறப்புக் கட்டணம் மற்றும் இடைநிலைக் கல்வி நிதியிலிருந்து செலவழிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று குறிப்பிட்டிருப்பதால், முறைப்படி எடுக்க வேண்டும். எடுத்தவுடன் கட்டட வேலை துவக்கப்படலாம்.



திரு. ப. முத்துசாமி : இந்த ஆண்டு பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கிய தொகையை மாவட்டவாரியாகப் பிரித்து ஆணையிடப்படாததால் பல கட்டட வேலைகள் தாமதப்படுவதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா ? அப்படியானால் அதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விவரங்கள் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

திரு. வீ. மலைக்கண்ணன் : ஆங்காங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான கூடத்திற்கு ரூ. 40,000, பள்ளிக் கட்டடத்திற்கு ரூ. 20,000 என்று வழங்கப்பட்டு பல கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மாணவர்கள் கூடுதலாக வரும்போது அவர்களைச் சேர்ப்பதற்கு வசதி இல்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே மாணவர்கள் அதிகமாக வரும்போது கூடுதல் கட்டடங்கள் கட்டப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒதுக்கப்படுகிற நிதியிலிருந்து ஓரளவிற்குச் செய்ய முடியும். பொதுமக்களும் கட்டடங்கள் கட்ட ஓரளவு நிதி உதவ முன் வருவார்களானால் விரைவில் அப் பணிகள் நிறைவேற வழிவகை ஏற்படும்.

திரு. கு. காமாட்சி : அரசுக்குச் சொந்தமான உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் இவைகளுக்கெல்லாம் கட்டடங்கள் கட்டுவதற்குத் தனியாக ஒரு வாரியம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களின் கீழேயுள்ள துவக்கப் பள்ளிகளைப் பொறுத்துக் கட்டடங்கள் கட்டத்தான் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தனி வாரியம் அமைத்தால் நிதி உதவி பெறலாம் என்று வழிவகை இருப்பதால் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

## நகராட்சிகள் திரைப்படக் கொட்டகைகள் நடத்தல்.

* 142 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகள் திரைப்படக் கொட்டகைகளை நடத்த அரசு அனுமதி வழங்க உத்தேசித்துள்ளதா?

[1972 டிசம்பர் 13

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பயன்தரும் தொழில்களின் ஒன்றாக திரைப்பட அரங்குகளை நகர மன்றங்கள் கட்டிக் கொள்வதற்கு தடையேதும் இல்லை. கட்டப்படும் திரைப் பட அரங்குகள் பயன் (ஆதாயம்) தருவதாகவும், விதிமுறைகளுக்கு ஒப்பானதாகவும் இருக்க வேண்டும். அவற்றைக் கட்டுவதற்கு முன், அரசிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : பல நகராட்சிகள் நிதிப்பற்றாக்குறை காரணமாக அல்லல்பட்டு வருவது நம் அரசுக்கு நன்கு தெரியும். எனவே, அத்தகைய நகராட்சிகள் இம் மாதிரியான சினிமாக் கொட்டகைகள் நடத்த வேண்டுமென்று முன்வரும்போது நிதிப் பற்றாக்குறை உள்ள நகராட்சிகளுக்கு அரசு மானியத் தொகை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கென்று தனி யாக மானியத் தொகை வழங்குவதற்கில்லை. பயன்தரும் சந்தைகள், தினசரி வார அங்காடிகள், பஸ் நிலையங்கள் உள்ளும் வெளியேயும் அமைக்கும் கடைகள் மூலம் ஓரளவிற்குக் கணிசமான நிதி வரக் கூடும் என்று கருதி அம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. திரை அரங்குகள் பொறுத்த வரையில் நகராட்சி மன்றங்களுக்குப் போதுமான நிதி இருந்து அந் நிதி மூலம் திரைப்பட அரங்கு கட்டிக் கொள்ள முடியும் என்றால் அனுமதி வழங்கப்படுகிறது. திரைப்பட அரங்கு கட்டுதல், வேறு பல அங்காடிகள் வைத்தல், கடைகள் கட்டுதல் போன்றவற்றிற்கு நிதி வழங்குவதற்குத் தனியாக ஒரு பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்று முனிசிபாலிட்டிகளுக்கு மட்டும் வைத்து அதன் மூலம் பல்வேறு வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றிலிருந்து கடன் வாங்க முடியுமா என்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப் : பொருளாதார வசதி உள்ள பேரூராட்சிகள் இப்படிப்பட்ட திரைப்பட அரங்குகளை அமைக்க முன்வந்தால் அவற்றிற்கு அரசு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : விண்ணப்பித்துக் கொண்டால் அனுமதி அளிக்கலாம். தர்மபுரி, மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.



1972 டிசம்பர் 13]

திரு. கா. வேழவேந்தன் : அப்படி பேரூராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படுமானால்—நகராட்சி மன்றங்களுக்கு இப்படி நிதிவசதி தருவதற்கு வாரியம் ஆய்ந்து கொண்டிருப்பதால் அந்தமாதிரி ஆயுள் காப்பீட்டுக் கழகம் அல்லது வேறுபல நிதி ஆதாரமுள்ள ஏஜென்சி களிடமிருந்து நிதி உதவி பெற பேரூராட்சிகளுக்கு வழிவகை செய்து தர ஆணைப் பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நகராட்சிகளே அல்லல்படும்போது பேரூராட்சிகளால் இயலுமா என்பது ஐயப் பாட்டிற்கு உரிய ஒன்று. நகராட்சிகளுக்கு இத்தகைய முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சிகளைப் பொறுத்து எடுத்துக் கொள்ளும் முயற்சி வெற்றி பெற்றால் பின்னர் பேரூராட்சிகள்பற்றி கவனிக்க முயற்சி செய்யலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : கேளிக்கை வரி மூலம் வசூலிக்கும் பணத்தில் பத்தில் ஒரு பங்கை வைத்துக் கொண்டு அரசாங்கமே சினிமாக் கொட்டகைகள் கட்டலாம் என்று டெல்லி அமைச்சர் திரு. குஜரால் அவர்கள் தெரிவித்திருக்கிறார்களே, அந்த யோசனையை நம் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விவரக் குறிப்பு இல்லை ; தனிக் கேள்வி போடவும்.

திரு. ஏ. க. துரைசாமி : நகராட்சிகளின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு இந்த வினா எழுப்பப்படுகிறது. நகராட்சிகளுக்கு நிதிப் பற்றாக்குறை இருப்பதற்குக் காரணம் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் காரணமாக அமைகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு அப்பள்ளி களை நகராட்சிகளிடமிருந்து எடுத்து அரசே ஏற்று நடத்த முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதிப்பற்றாக்குறை காரணமாக அல்லல்படுகிற நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அர சாங்கமே ஏற்றுக் கொள்வது என்ற கொள்கை மேற்கொள்ளப்பட்டு இந்த ஆண்டு பத்துப் பள்ளிகள் நகராட்சிகளால் நடத்தப்பட்டவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு படிப்படியாக நகராட்சிமன்றங்களின் உயர்நிலைப் பள்ளிகள் எடுத்துக் கொள்ளப் படும். எந்தெந்த உயர்நிலைப் பள்ளிக்கூடங்களை நகராட்சி மன்றங்கள் தங்களால் நடத்த முடியும் என்று கருதுகிறதோ அவைகள் மட்டும் அவைகளிடத்தில் விடப்படும்.

[1972 டிசம்பர் 13

திரு. ந. தருமலிங்கம் : திரைப்படக் கொட்டகைகளை தேசியமய மாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. கு. காமாட்சி : திருச்சி நகராட்சிக்குச் சொந்தமான தேவர் மன்றம் திருத்தியமைக்கப்பட்டு திரைப்பட அரங்காக மாற்றுவதற் கான அனுமதியைக் கேட்டு அரசுக்கு வந்துள்ளதா ? அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

THIRU K.S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education the amount required for constructing a cinema theatre, not a palatial but simple and useful one?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நகராட்சி மன்றங்கள் திரைப்படக் கொட்டகைகள் கட்டுவது என்றால் ஆடம்பர மான வகையில் கட்டப்படுகிற வகையில் அமையாது. ஓரளவு தேவையை நிறைவேற்றுகிற வகையில், அதன் மூலம் கிடைக்கும் வரு மானம் நகராட்சி மன்றத்தின் நிதி வசதியைப் பெருக்குகிற வகையில் அமைய வேண்டுமென்ற கருத்தினை மனதில் கொண்டுதான் இத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

திரு. குப்பல். கே. எஸ். ராமகிருஷ்ணன் : பேரூராட்சிகள், ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள் இவை சொந்தத் தியேட்டர்கள் கட்டிக் கொள்வதில் யாதொரு தடையும் இல்லை என்று சொன்னார்கள். அப்படித் தடை இல்லாதபோது எவ்வளவு பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் கொட்டகை கள் கட்டியிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் விண்ணப் பித்து அரசாங்கமே அனுமதி பெற்று கட்ட வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. தர்மபுரி, மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றங்களுக்கு திரைப்பட அரங்குகள் கட்ட அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது.



1972 டிசம்பர் 13]

திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : நிதி வசதியுள்ள ஊராட்சி ஒன்றி யங்கள் அவர்களாகவே முன்வந்து அவர்கள் செமி-பெர்மெனன்ட் தியேட்டர்கள் கட்டிக்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் குறிப் பிட்டது நகராட்சிமன்றங்கள் பற்றி, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூ ராட்சிகள் பற்றித் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

## சமுதாய வளர்ச்சித் துறை சீரமைப்பு.

* 143 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) சமுதாய வளர்ச்சி பிளாக் நிர்வாக அமைப்பில் மாற்றங்கள் செய்து, அதிகாரிகளின் பொறுப்புக்களை பிரித்தமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம், எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் பற்றிய, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 3—8—1971 நாளிட்ட 1805 எண் அரசாணையின்படி* 9—2—1972–ஆம் நாளிட்ட 236 எண் அரசாணையின்படி, அவை களுக்கு வெளியிடப்பட்ட திருத்தங்களுடன், பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது சமுதாய அமைப்பிற்கும், ரெவின்யூ அமைப்பிற்கும் தொடர்பு இல்லாத, முறையில் இப்போது ஆர்.டி.ஓ. போன்றவர்கள் சமுதாய வளர்ச்சி அமைப்பு போன்றவற்றையும் கவனித்து வருகின்றதை மாற்றி, சமுதாய வளர்ச்சிக்கென தனியாக அலுவலர்களை நியமிக்க அரசு யோசனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் வருவாய்த் துறை பிரிவிற்கும், சமு தாய வளர்ச்சித் துறை பிரிவிற்கும் எந்த முறையில் நிர்வாக

*170–191-ம் பக்கங்களில் இணைப்பு—1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1972 டிசம்பர் 13

அமைப்பை மாற்றியமைக்கலாம் என்பதை ஆராயும்படி நிர்வாக சீரமைப்புக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய அறிக்கை விரைவாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதனுடைய அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன், அரசு அதை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சித் துறையில் உள்ள ஒன்றியங்களைச் சீரமைக்கும் நிலையில், இப்போது இருக்கும் ஒன்றியங்களில் சிலவற்றில் 60–70 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. சிலவற்றில் 10–15 பஞ்சாயத்துக்கள்தான் இருக்கின்றன, இவைகள் எப்படி இப்படி பிரிக்கப்பட்டன என்பது சந்தேகமாக இருக்கின்றது—ஒரு திட்டவட்டமான முடிவு எடுத்து எல்லா ஒன்றியங்களையும், ரெவின்யூ வட்டங்கள் ஒரே நிலையில் இருப்பது போல்—40 பஞ்சாயத்துகள் இருக்கும் ஒன்றியங்களாக மாற்ற வேண்டுமென்று ஏதாவது சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுபற்றியும் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் கருத்து எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் இது குறித்தும் ஆராயும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் அறிக்கை கிடைத்த பிறகு, அதன் மீது அரசு ஆராய்ந்து தக்க முடிவினை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மக்கள் தொகை பெருக்கத்தை முன்னிட்டும், மத்திய அரசின் உதவியைக் கூடுதலாகப் பெறும் பொருட்டும், தற்போதுள்ள ஒன்றியங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மத்திய அரசு ஏற்கனவே ஒரு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியங்களுக்கும் நிதி உதவி செய்து வந்திருக்கிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும், அதன் எண்ணிக்கையை அதிகமாக்கக் கூடாது என்ற உத்தரவாதத்தின் பேரில்தான் நாம் நிதி உதவி பெற்று வருகிறோம். அதனால் எண்ணிக்கையைப் பெருக்க முடியாமல் இருக்கிறோம். 1—2 ஆண்டுகளுக்குள் இந்த நிலை சரியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிர்வாக சீர் அமைப்புக் குழுவும் இது குறித்து ஆராயும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய கருத்து அரசுக்குக் கிடைத்த பிறகு அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்.



1972 டிசம்பர் 13]

*Technical Education for Women.*

* 144 Q.—THIRU R.R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that a number of women students have applied for B.E. course during 1972–73; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) இவ்வாண்டு பொறியியற் கல்லூரிகளில் சேர 33 மாணவிகள் மனுச் செய்தனர். அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஏற்கனவே பெண்கள் யாரும் பி.இ. பட்டம் பெற்று இருக்கிறார்களா? அப்படி அவர்கள் பி.இ. பட்டம் பெற்று இருந்தால், எந்தெந்தப் பகுதிகளில் அவர்கள் பொறியாளர்களாக வேலை செய்கிறார்கள் அல்லது பொறியாளர் வேலைக்குச் செல்லாமல் திருமணம் செய்து கொண்டு குடும்பத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்களா என்று விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கனவே பி. இ. பட்டம் பெற்ற மாணவிகள் இருக்கிறார்கள். அவர்கள் வேலை பார்க்கிறார்களா அல்லது தனியாக இருக்கிறார்களா என்ற விவரக் குறிப்பு இல்லை. அது தனியாகத்தான் ஆராயப்பட வேண்டும்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, இப்போது பெண்கள் பி.இ. பட்டம் படிக்க மிகவும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கல்லூரிகளில் உணவு விடுதி இல்லாததால் அவர்கள் வருவதற்குத் தயங்குகிறார்கள். விடுதி தனியே கட்டித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய விண்ணப்பம் வருமானால் கவனிக்கப்படும்.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, இப்போது தமிழ்நாட்டில் எத்தனை பெண்கள் பி.இ. படித்து பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்கு முன்பு எத்தனை பேர் படித்து இருக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. இந்த ஆண்டு 33 பேர் விண்ணப்பம் செய்தார்கள். 33 பேரும் முதல் ஆண்டு பொறியியல் வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, பி.இ. படித்த பெண்கள் நல்ல முறையில் பணிபுரிகிறார்கள். வீட்டு வசதி வாரியத்தில் கூட ஜார்ஜ் என்ற அம்மையார் நல்ல முறையில் பணி புரிந்து வருகிறார்கள். பெண்கள் குறைவான அளவில் படிப்பதால் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தரவும் அரசு முன் வருமா? எல்.சி.இ. போன்ற படிப்பு படித்த பெண்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அரசு உதவி செய்ய முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஆண்டு 33 பேர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு இவ்வளவு பேர் சேர்க்கப்படவில்லை. அவர்களின் தகுதி, நிலைமைகளுக்கேற்ப வேலை வாய்ப்புத் தருவதில் மற்றவர்களுக்கு எப்படித் தரப்படுகிறதோ அந்த முறையில் அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, already there are hundreds of engineers who do not have opportunities of joining departments. Now we are admitting women candidates also. May I know whether the Government would consider the employment opportunities for these candidates before giving admission to these women?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 2–3 ஆண்டுகளுக்கு முன்னால் படித்த பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதில் சிரமம் இருந்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியதற்குப் பின்னாலே இப்போது அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. அதைத் தவிர, வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு நிதி உதவி செய்யும் அடிப்படையில் 2–3 பொறியாளர்கள் சேர்ந்து ஒரு தொழில் ஆரம்பிக்க வாய்ப்பு அளிக்கும் வகையில் சலுகை கொடுத்து இருக்கிறோம். அதைத் தவிர பெரிய தொழிற் சாலைகளில் இரண்டாண்டு காலம் அப்பிரண்டிஸ் என்ற முறையில் பணியாற்றுவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது அந்தத் துறையில் நெருக்கடி இல்லை.



*145 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether B.Com. Degree Course is to be introduced in Government Polytechnics in this State ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது மகளிர் பல்தொழிற் பயிற்சிக் கூடங்களில் மூன்று ஆண்டு படிப்பு கொண்ட வணிக இயல் பட்டயப் படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து ஒரு ஆண்டு பி.காம். பட்டயப் படிப்பு நடத்தப்படுவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

செவிலியர் பயிற்சி.

* 146 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ஆம் ஆண்டு, சென்னையில் நர்சு பயிற்சிக்காக சேர்க்கப்பட்ட பெண்கள் எத்தனை பேர்?

(இ) ஆண்கள் எத்தனை பேர்?

(உ) அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 65.

(இ) ஒருவருமில்லை.

(உ) அவர்களது பயிற்சிக் காலம் இன்னும் முடியவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது கிராமப் புறங்களில் அல்லது தாலூக்கா தலைநகரில் உள்ள ஹாஸ்பிடல்களில் போதிய நர்ஸ் வசதியில்லை, குறைவாக இருக்கிறது என்று அறியப் படுகிறது. அதற்காக இன்னும் அதிகமான பெண் நர்ஸ்கள் சேர்க்க வசதி செய்யப்படுமா? ஆண்கள் நர்ஸ் பதவிக்குச் சேர்க்கப் படுவதில்லை என்பதற்கான காரணத்தையும் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, செவிலியர்களாக பணியாற்றுவதற்குப் பெண்கள் தான் அதிகமான சிறப்புத் தகுதியை இயல்பாகப் பெற்று இருக்கிறார்கள். செவிலியர்களாகப்

[1972 டிசம்பர் 13

பணியாற்றுவதற்குரிய அந்தச் சிறப்பு இயல்பு ஆண்களிடத்தில் அவ்வளவாக இல்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆகவே, சில ஆண்டுகளாக ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பயிற்சி பெற்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாக இல்லை. ஏறத்தாழ 500 பேர் பயிற்சி பெற்றவர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, 1971-ல் பயிற்சி பெற்ற பல பேர் வேலையில்லாமல் இருப்பதால், அந்தத் துறையில் பயிற்சி தருவதை ஒத்தி வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சிலவிதமான பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதே நேரத்தில் அதிகமான பேர்கள் வேலையில் இல்லாமல் இருக்கும் நிலையையும் உண்டாக்கக் கூடாது. எனவே தான் ஏறத்தாழ சில ஆண்டுகளுக்கு முன்பு 200 பேர் பயிற்சி பெற்று வந்தார்கள். அதை 125 ஆகக் குறைத்து இப்போது பயிற்சி தரப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுகிறவர்கள் பயிற்சியின் போதே பணியாற்றுகிற வாய்ப்பு இருப்பதால் —கல்லூரிகளில், மருத்துவமனைகளில்—பயிற்சியும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பயிற்சி 3½ ஆண்டுக் காலம் தரப்படுகிறது. இந்தப் பயிற்சியின் விளைவாக அவர்களுக்கும், அந்தத் துறையைச் சார்ந்த அந்தப் பணிக்கும் உதவிகரமாக இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : துணைத் தலைவரவர்களே, மருத்துவமனைகளில் செவிலியர்களின் எண்ணிக்கை போதாது என்று சொல்லப்படுகிறதே, அதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் எந்த அளவுக்கு அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு அவ்வப்போது செய்யப்பட்டு வருகிறது.

*Conservancy work at Madras.*

*147 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether bullock carts used for conservancy work at Madras are to be given up; and

(b) if so, the details thereof?



1972 டிசம்பர் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மாட்டுவண்டிகளுக்குப் பதிலாக மோட்டார் வாகனங்களை உபயோகப்படுத்தும் பெரிய அளவிலான ஒரு திட்டம் மாநகராட்சியின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

*New protein-rich infant food.*

*148 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that protein-rich infant food has been developed at the Institute of Rural Health and Family Planning at Gandhigram in Madurai district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) காந்தி கிராமத்தில் உள்ள கிராம நலம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு நிறுவனம், வறுத்த கம்பு மாவு, வறுத்த பச்சை பருப்பு மாவு, வறுத்த கடலை பிண்ணாக்கு மாவு, மூன்றையும், வெல்லத்துடன் கலந்து வின்ஃபுட் (Warifood) என்ற பெயரில் குழந்தைகளுக்கான புதிய உணவு ஒன்றை கண்டு பிடித்திருக்கின்றது.

*Physiotherapist Course*

*149 Q.—Thiru D.S.A. SIVAPRAGASAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether applications were invited for admission to the Physiotherapist Course in the Madras Medical College this year?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்தப் பயிற்சிக்கான விண்ணப்பங்களுக்கு எந்தெந்தப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது? எவ்வளவு பேர்கள் விண்ணப்பம் செய்தார்கள்? எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 6—5—72 அன்றும், மெயில் பத்திரிகையில் 4—5—72 அன்றும், அரசாங்கத்தினுடைய தமிழரசு ஏட்டில் 15—5—72

[1972 டிசம்பர் 13

அன்றும் விளம்பரம் செய்யப்பட்டது. 175 பேர்கள் விண்ணப்ப ஃபாரம்களைப் பெற்றார்கள். 76 விண்ணப்பத் தாள்கள் இலாக்காவிற்குக் கிடைத்தன. 58 பேர்கள் அந்த விண்ணப்பதாரர்களில் தகுதி உடையவர்களாக இருந்தார்கள். 10 இடங்களுக்கு ஸ்டைபெண்டு உண்டு. அந்த 10 இடங்களுக்கு இந்த விண்ணப்பம் செய்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களில் செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள்.

* 150 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 22—4—71-ல் நடந்த வடஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் செயற்கை முறையில் கால்நடைகள் கருத்தரிக்கும் வசதியை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தீர்மானித்து அரசை கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும், உடனடியாக ஏற்பாடு செய்ய தற்போதுள்ள நிதி நிலைமையில் இயலவில்லை. என்றாலும், முன்னுள் மையக் கிராமத் திட்டங்கள் கால்நடை அபிவிருத்தி தீவிரத் திட்டங்கள், நகர்புறச் செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்கள் முதலியன செயலாற்றி வந்த இடங்களிலிருந்த செயற்கை முறை கருத்தரிப்பு வசதிகள் அனைத்தும் தொடர்ந்து செயலாற்றப் படுகின்றன. அவற்றின் அருகாமையில் உள்ள மருத்துவ மனைகளுக்கும் இந்த வசதி, விந்து இருப்புச் சாதனங்கள் முதலியவற்றைப் பொறுத்து விரிவாக்கப் பெற்றுள்ளன. செயற்கை முறைக் கருவூட்டல் வசதி செய்து கொடுக்கப் பெறாத மருத்துவ மனைகள் சிலவற்றில், இயற்கை பொலிவுக்காக காளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவைகள் எந்த அளவிற்குப் பொது மக்களால் பயன் படுத்தப்படுகின்றன என்பது கவனிக்கப்பட்டு வருகின்றது. தேவைக் கேற்ப இவ் வசதிகள் விரிவாக்கப்படும். இந்த விவரங்கள் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளருக்கு வளர்ச்சி மன்றக் குழுவின் தகவலுக்காக தெரிவிக்கப்பட்டுள்ளது.



1972 டிசம்பர் 13]

திரு. கே. எ. வகாப்: கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் கருத்தறிக்கும் முறையானது அவ்வளவு வெற்றிகரமாக செயல் படவில்லை என்பது உண்மையா? அப்படியிருந்தால், இயற்கை முறையில் கருத்தரிக்கும் முறையைக் கைக்கொண்டு இதைக் கைவிட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த முறையைப்பற்றி இந்த அவையிலே உள்ள அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மேல் நாட்டு உயர்ந்த காளைகள், ஜெர்ஸி போன்ற இனக் காளைகள் கொண்டுவரப்பட்டு, அவைகளுடைய விந்து மூலம் செயற்கை முறையில் கருத்தரிக்க பல பசுக்கள் உட்படுவதற்குப் வாய்ப்புத் தரக் கூடிய முறை இருக்கிறது. இயற்கை முறையில் பல என்ற எண்ணிக்கை ஒரு சில என்பதாகக் குறையும். இயற்கை முறையில் கருதரிக்கும் முறையினால் ஏராளமான பசுக்களுக்கு உயர்இனக் கன்றுகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவேதான் செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறை மேல்நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையில் சில நேரங்களில் அதனுடைய பலன் கிடைப்பதில்லை. மறுபடியும் பசுவுக்கு எப்பொழுது வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்பொழுது செயற்கை முறையைக் கையாண்டு கருத்தரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அவற்றை இந்தத் துறையில் உள்ள மருத்துவர்கள் கவனித்து வருகிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன்: செயற்கை முறையில் கருத்தரிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்ற நேரத்தில் உயர்ந்த ரகக் கால்நடைகள் போன்ற முர்ரா போன்றவைகளின் விந்து போதிய அளவு கிடைப்ப தில்லை என்று சொல்கிறார்கள். அதைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எந்த அளவுக்கு முர்ரா எருமைகளும், அதைப்போல சிந்தி அல்லது ஜெர்ஸி போன்ற உயர்ந்த இன காளைகளும் கிடைக்கின்றனவோ அந்த அளவுக்கு அதனுடைய விந்துவைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்து, கலப்பு இன முறையை வளர்ப்பதற்கு, உயர் இனக் கால்நடைகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எந்த ஒரு பகுதியிலே போதுமான அளவுக்கு கிடைப்பதில்லை என்று தெரிந்தாலும், அங்கு கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் முடிந்த அளவுக்கு முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது.

[1972 டிசம்பர் 13

திரு. என். கிட்டப்பா : செயற்கை முறையில் கருத்தரிக்க வைக்கக் கூடிய இந்த முறை கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று மொத்தமாகக் கூறப்பட்டுள்ளது. இது ஆடு களுக்கும் பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆடுகளுக்கு இந்த முறை இது வரையில் மேற்கொள்ளப்படவில்லை. ஆனாலும் மேல் நாட்டு இன ஆடுகள் இங்கே கொண்டுவரப்பட்டு, அந்த ஆடுகளோடு சேர்ந்து நம்முடைய நாட்டு ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்கான முறையில் கூட்டுப் கலப்பு இனங்கள் பெருக்கப்பட்டு வருகின்றன. அப்படிப் பெருக்கப்பட்டு வருவது பெரும்பாலும் அரசாங்கப் பண்ணைகளில் தான் நடைபெற்று வருகிறது.

*Plantation Labour Advisory Committee.*

*151 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have reconstituted the plantations Labour Advisory Committee; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அரிசனக் காலனிகளுக்கு நீர் வழங்கல்

*152. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆய்வு செய்யப்பட்டு தற்போது முடிக்கப்பெறாமல் இருக்கும் அரிசனக் காலனிகளின் குடி நீர்த் திட்டங்கள் எவை எவை?

(இ) இவை எப்போது நிறைவடையும்?

*192–194ம் பக்கங்களில் இணைப்பு—2 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1972 டிசம்பர் 13]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) நடப்பு ஆண்டில் (1972–73) அடியிற் கண்ட 6 அரிசனக் காலனிகளுக்குக் குடிநீர் வசதி யளிக்க வேலைகள் தொடங்கப்பட்டன:—

| விபரம். | மதிப்பீடு ரூபாய். |
|---|---|
| 1. இலச்சிவாக்கம் அரிசன காலனிக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ... ... ... | 9,500 |
| 2. வடமதுரை அரிசன காலனிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ... ... ... ... | 10,000 |
| 3. தொழவேடு அரிசன காலனிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ... ... ... ... | 10,000 |
| 4. கோட்டைக்குப்பம் அரிசன காலனிக்குக் குழாய் கிணறு அமைக்கும் திட்டம் ... ... ... | 4,500 |
| 5. கிளாம்பாக்கம் அரிசன காலனிக்குக் குழாய் கிணறு அமைக்கும் திட்டம் ... ... ... ... | 4,000 |
| 6. பாலவாக்கம் அரிசன காலனிக்குக் குடிநீர்க்கிணறு ஆழப்படுத்தும் திட்டமும் அதற்கு மேடை கட்டும் திட்டமும் ... ... ... ... ... | 2,500 |
| மொத்தம் ... | 40,500 |

(இ) மேற்கண்ட வேலைகள் 3 மாதத்திற்குள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் அறிவித்த இந்த 6 திட்டங்களும் ஏறக்குறைய 3 ஆண்டுகள் ஆய்விலே இருந்தன. இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இருந்தாலும் உண்மையாக அங்கே வேலைகள் இன்னும் தொடங்கப்பெறா நிலைமை உள்ளது. ஆகவே, இதற்குரிய அதிகாரிகளை அதிகமாக ஆக்கி, அந்த வேலைகளை இந்த ஆண்டிலேயே முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1972 டிசம்பர் 13

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கிணறு வெட்டும் பணியை நலத்துறை எடுத்துக் கொள்ளவில்லை. இதைப் பஞ்சாயத்து யூனியன்கள் செயல்படுத்துகின்றன. அவர்கள்தான் இந்தப் பணிகளை நிறைவேற்றுகிறார்கள். நலத் துறையின்மூலம் நிதி ஒதுக்கீடு செய்து, பணம் கொடுக்கப்பட்டு, வேலைகளை அவர்கள் செய்து முடிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கிருக்கிற அதிகாரிகளைக் கண்டு விரைவிலே இதைச் செய்து முடிக்க வேண்டும் என்று வலியுறுத்துவார்களேயானால், விரைவிலே செய்து முடிக்கலாம்.

திரு. ச. அ. சின்னராசு: எல்லா ஊர்களுக்கும் மின்னொளி வழங்குவதற்குத் திட்டம் உள்ளதைப்போல, பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லா அரிசன காலனிகளுக்கும் குறிப்பிட்ட வருஷத்திற்குள் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நேற்றைய முன்தினம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது விரைவிலே அப்படிப்பட்ட ஒரு திட்டம் அரிசன காலனிகளுக்கு மாத்திரம் அல்ல, பொதுவாக எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் கொடுக்கின்ற திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான ஒரு வரைவுத் திட்டம் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

திரு. கா. வேழவேந்தன்: இந்த மாவட்டத்தில், ஏராளமான அரிசன காலனிகளில், அதிகமாக அரிசன மக்கள் தொகை இருக்கிற காலனிகளில் குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. அவைகளை ஆய்வு செய்வதற்குக்கூட நலத் துறையில் அதிகாரிகள் இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீசருக்குத் துணையாக இந்தப் பணிகளைக் கவனிப்பதற்கு இன்னும் அதிகாரிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான திட்டம் இந்த அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இந்தக் குடிநீர் வழங்குகின்ற திட்டத்தின்கீழ் நலத் துறையிலே கிணறு வெட்டுகின்ற அல்லது ஆழப்படுத்துகின்ற அந்த வேலையைச் செய்வது கிடையாது. நலத்துறைக்குப் பணம் ஒதுக்குகின்ற பொறுப்புதான் இருக்கிறது. எனவே, பஞ்சாயத்து யூனியன்கள் அந்த வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும். தாமதம் அங்கேதான் ஏற்படுகிறது. எனவே,





நலத் துறையில் அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்புதான் எனக்கு இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் அந்த வேலைகளை விரைவு படுத்துவதற்கு நலத்துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி உறுப்பினர் அவர்களும் அந்த வேலைகளை விரைவு படுத்துமாறு கேட்டுக்கொண்டால், வேலைகள் விரைவிலே முடியும். நான் கூறிய ஆறு இடங்களிலும் மூன்று மாத காலத்தில் அந்த வேலைகள் முடிந்துவிடும் என்று கூற விரும்புகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, there are a large number of villages where drinking water wells are required for Harijans. The Panchayat Unions are not able to provide them in a quick manner. Our Government have taken extraordinary measures to extend electricity to all the villages within a specified time by spending a lot of money. Similarly, may I know from the Hon. Minister, whether there is any scheme with the Government to dig wells for the Harijans in all the villages in the State within a specified time?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட ஆலோசனையும் நலத் துறையில் இருக்கிறது. இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. முடிவு எடுக்கப்பட்டு விட்டால் நலத் துறை இதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, அப்படிப்பட்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. அ. தேவேந்திரன்: வருகின்ற மனுக்களை எடுத்துக்கொண்டு போய் பரிசீலிப்பதற்கு சூப்பர்வைசர்கள் என்று சொல்கிறார்களே அப்படிப்பட்ட அதிகாரிகள்கூட அங்கே இல்லை. இவர்களை அதிகப் படுத்துகிற செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிற நேரத்தில், வெல்பேர் ஆபீஸர்ஸ் பணம் கொடுத்துவிட்டாலும், அந்த வேலைகளையெல்லாம் ஊராட்சி மன்றங்கள்தான், ஊராட்சி ஒன்றியங்கள்தான் நிறைவேற்றுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில இடங்களில் சரியாக அவை நிறைவேற்றப் படவில்லை. அந்த வெல்பேர் ஆபீசர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இதைக் கொண்டுவர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதைச் சற்று முன்னால்கூட எடுத்துச் சொன்னேன். தாமதங்கள் ஏற்படுகின்றன. தவறுகள்கூட பல இடங்களில் ஏற்படுகின்றன. அரிசன காலனிகளை

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 டிசம்பர் 13

விட்டுவிட்டு, வேறு இடங்களிலே கிணறுகளை வெட்டிவிடுகிறார்கள். அதற்குப் பணம் ஒதுக்குகின்ற வாய்ப்பு இந்த அரிசன நலத் துறையிலே இருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது அவைகளை எடுத்துக் கொள்ளலாமா என்று. அரிசன நலத் துறையே அரிசன காலனிகளில் நேரிடையாகக் கிணறு வெட்ட வாய்ப்பினை ஏற்படுத்துவது நலமாக இருக்கும்.

திரு. ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அரிசனக் காலனிக் கிணறுகளை அரசு மேற்கொண்டுள்ளது? இன்னும் மேற்கொள்ளப்பட இருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள் எத்தனை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் கிணறு வெட்ட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இருக்கின்ற நிதி நிலைமையைப் பொறுத்து எல்லாவற்றையும் உடனடியாகச் செய்ய முடியாது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நலத்துறை மூலமாகக் கிணறு தோண்டுவற்கும், சாலைகள் போடுவதற்கும், மானியங்கள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக, அரிசன காலனிகள் இருக்கின்ற பகுதிகளில் இப் பணிகளைத் துவக்குவதற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அளிக்கும் மானியம் போக மீதப் பணத்தை ஆங்காங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களே ஒதுக்கிக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அரிசன காலனிகளுக்கு ரோடுகள் போடுவதிலும், கிணறுகள் வெட்டுவதிலும் தடை ஏதும் இல்லை.

* 153 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether the Government have approved a scheme during 1970–71 to dig 7 new drinking water wells for Harijans in Chennimalai Firka of Erode taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 154 மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளிற்கிணங்க தள்ளிப்போடப்பட்டுள்ளது.



1972 டிசம்பர் 13]

*Nylon Project.*

* 155. Q.—THIRU N. V. GURUSWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to establish a Nylon Project in the Vaigai Dam area in Madurai district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் நிறுவக் கருதியுள்ள நைலான் தொழிற்சாலை மதுரை மாவட்டத்தில் தேவையான அளவு தண்ணீர், மின்சாரவசதி, போக்குவரத்து வசதியுள்ள தகுதிவாய்ந்ததொரு இடத்தில் அமைக்கப்படும்.

(இ) இத்தொழிற்சாலை 1975-ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங்கும் என்று தற்போதைக்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நெல்லை மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 156 வினா : திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 1971–72 நிதியாண்டிலும், 1972–73 நிதியாண்டில் இதுவரையிலும் புதிதாக எத்தனை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) அதே கால அளவில் எத்தனை சங்கங்கள் மூடப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1971–72-வது நிதியாண்டில் ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1972–73-வது நிதியாண்டில் ஒன்றுமில்லை.

(இ) 1971–72-வது நிதியாண்டில் ஒரு சங்கம் மூடப்பட்டது. 1972–73-வது நிதியாண்டில் ஒன்றுமில்லை.

[1972 டிசம்பர் 13

*Working conditions of handloom workers.*

* 157. Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Santhanam Committee constituted to enquire into the conditions of the handloom workers have submitted its report; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, விரைவாக அறிக்கை பெற ஏற்பாடு செய்யப்படுமா? இன்னும் எவ்வளவு நாட்களில் அறிக்கையை அனுப்புவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இன்னும் சில மாதங்களில் அறிக்கை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*Lands around Alangulam Cement Factory.*

*158. Q.—THIRU K. SUPPU: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the lands around the Tamil Nadu Cements, Alangulam have been affected by the smoke produced by the factory; and

(b) if so, the steps taken by the Government to help the affected land owners?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 159-ம், 160-ம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளிற்கிணங்க தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



1972 டிசம்பர் 13] [Mr. Deputy Speaker]

(2) அறிவிப்பு.

தமிழ்நாடு உயர்நீதி மன்றம் பேரவைத் துணைத் தலைவருக்கு அனுப்பி யுள்ள நோட்டீஸ்குறித்து.

MR. DEPUTY SPEAKER: I have to inform Hon. Members that I have been served with a notice by the High Court of Tamil Nadu in Writ Petition No. 3137 of 1972 and W.M.P. No. 4711 of 1972 in Thiru K. A. Mathialagan vs. the Deputy Speaker and others.

Article 212 of the Constitution states as follows:—

(1) The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure.

(2) No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers.

The Legislature, the Judiciary and the Executive are the three limbs of the Constitution and the three organs of the State. The Judiciary and the Legislature are each sovereign and supreme in their respective spheres. Each must have complete confidence in the other to function properly and must treat the other with due respect. Doubtless this House holds the Judiciary in the highest esteem with great respect and affirms its great faith and confidence in the independence and impartiality of the Judiciary.

With due respect to the Judiciary, I feel, that in view of the provisions in Article 212, I cannot be and I do not propose to be subjected to the authority of any Court in the exercise of my powers and in the performance of my functions. (Cheers)

(3) புயல் சேதங்களைப்பற்றிய விவரங்களை அளிக்குமாறு உறுப் பினர்களுக்கு முதலமைச்சரின் வேண்டுகோள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்கள் வாயிலாக ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். அண்மையில் ஏற்பட்ட

பெரும் மழையினாலும் காற்றினாலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய விபரங்களை எல்லாம் இந்த மன்றத்திலே நான் எடுத்துக்கூறி, அதுசம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகளையும் கூறினேன். மேலும் இதுபற்றிய முழு விபரங்களையும் அறிவதற்காக வருகிற 19-ம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றை சென்னையில் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நானும் மற்ற அமைச்சர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிய முடிவினை ஆராயவும் இருக்கிறோம். அதனால் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதியில் ஏற்பட்டுள்ள சேதங்களைப்பற்றித் தகவல் சேகரித்துத் தலைமைச் செயலகத்திலுள்ள தலைமைச் செயலாளர் அவர்களுக்கோ அல்லது முதலமைச்சர் அலுவலகத்திற்கோ அனுப்பி வைக்க வேண்டுமென்று அனைவரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 47/72).

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

நகராட்சிப் பணியாளர்களின் வகைப்பாடு, பணிக்குச் சேர்த்துக் கொள்ளும் முறைகள், பணி நிபந்தனைகள், சம்பளம், படிகள், பணியாளர்களின் ஒழுக்கம், நடத்தை ஆகியவற்றை முறைப்படுத்துவது குறித்து தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள்

* 5—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 77-ஏ, பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படவிருக்கும் வரைவு விதிகள் மேற்படிச் சட்டத்தின் 305-ஏ பிரிவின்கீழ் மாற்றத்துடனோ மாற்றமின்றியோ சட்ட மன்றம் ஒப்புதல் வழங்குவதற்காக இரு அவைகளின் முன்பும் இன்றைய நிலையில் வைக்கப்பட வேண்டும். இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரே இவ்விதிகள் பிறப்பிக்கப்படலாம். இச்சட்டத்தின்கீழ் வகுக்கப்படும் ஏனைய விதிகளுக்கு இச்சட்டத்தின் 304-வது பிரிவின் கீழ் சட்டமன்றத்தின் இரு அவைகளின் பின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. அரசுப் பணியாளர் தொடர்பான விதிகள் திருத்தப்படும் போதெல்லாம், நகராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகளும் திருத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனவே, நகராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகள் அடிக்கடி திருத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இத் திருத்தம் வாலாயமான திருத்தமாயிருப்பினும், அதற்கு 305-ஏ பிரிவில் கொடுத்துள்ள விரிவான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியுள்ளது. நகராட்சிப் பணியாளர்களின் நலனைக் கருதி இத் திருத்தம் கூடிய விரைவில் செய்யப்பட வேண்டியது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளதால், சட்டத்தின் 305-ஏ பிரிவில் கொடுத்துள்ள விரிவான நடைமுறையைக் கைவிட்டுவிட்டு 304-வது பிரிவில் கொடுத்துள்ள நடைமுறையைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. மேற்கண்ட நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க இச்சட்ட வரைவு விழைகிறது.

இச்சட்ட வரைவினை இம்மாமன்றம் ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

* 5—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, " தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/72) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன் "

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) 1972-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/72).

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, " 1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மதுரை மாநகராட்சி, (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 48/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 5-வது பிரிவில் விதிக்கப்பட்டுள்ளவாறு, சென்னை மாநகராட்சி மன்றத்தில் நூற்று இருபது உறுப்பினர்கள் உள்ளனர் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மாநகரம் நூற்று இருபது டிவிஷன்களாகப் பிரிக்கப்படுவதற்கு மேற்சொன்ன சட்டத்தின் 45-வது பிரிவு வகைசெய்கிறது. சென்னை மாநகரின் நகராட்சிக் காரியங்களுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் வட்டம் (Circle) என்பது சென்னை மாநகரத்திலுள்ள

* 6—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை ஒட்டி வரையறுக்கப்பட்டுள்ளது. 1967-ல் நடைபெற்ற பொதுத் தேர்தல்களுக்கு முன்னர் சென்னை மாநகரில் சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகள் 10 மட்டுமே இருந்தன. அந்த வகையில் 10 வட்டங்களும், ஒவ்வொரு வட்டத்திலும் 10 டிவிஷன்கள் விதம் 100 டிவிஷன்கள் இருந்தன. தேர்தல் தொகுதிகள் எல்லை வகுக்கும் ஆணைக்குழுவால் தொகுதிகள் வரையறுக்கப்பட்டதன் விளைவாக சென்னை மாநகருக்கான சட்டப்பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 10-லிருந்து 12 ஆக உயர்ந்தது. எனவே, 1967-ல் மூலச் சட்டத்தைத் திருத்தி தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு 7-வது சட்டத்தின் வாயிலாக டிவிஷன்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்த்தப்பட்டது. 5-வது பிரிவால் வரையறுக்கப்பட்ட மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையும் 120 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது சென்னை மாநகரில் 12 வட்டங்களும் 120 டிவிஷன்களும் உள்ளன. தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு 22-வது சட்டத்தால், வட்டம், மத்தியக் குழுக்கள் இவற்றிற்குப் பதிலாக அவ்வச் செயல்களுக்கான குழுக்களை (Functional Committee) அமைத்துக் கொண்டதன் மூலம் சென்னை மாநகராட்சி நிர்வாக அமைப்பு மாற்றப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மன்றம் தற்போது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளது:—

(i) வட்டங்கள் நீக்கப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கைக்கு நிகராக வட்டங்கள் அமைக்கும் கொள்கையும் கைவிடப்பட வேண்டும்.

(ii) மாநகராட்சி டிவிஷன்களின் எண்ணிக்கை 120-லிருந்து 150-ஆக உயர்த்தப்பட வேண்டும். அரசு மேற்சொன்ன கருத்துக்களை ஏற்றுக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு சீராக இருக்குமாறு செய்வதற்காக பெரும்பாலும் மாநகராட்சி டிவிஷன்கள் அனைத்தின் எல்லைகளையும் மாற்றியமைப்பது அவசியமெனக் கருதப்படுவதால், அதற்கிணங்கச் சட்டத்தைத் திருத்த அரசு முடிவு செய்துள்ளது. அதன் விளைவாக மாநகராட்சி மன்றத்திலுள்ள அரிசனங்கள் அல்லது பழங்குடி மக்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 6-லிருந்து 8 ஆக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சிக் கூட்டத்துக்கான குறைவெண் 33 என்றிருப்பதை 50 ஆக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 டிசம்பர் 13

1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 4/1919) 6-டி பிரிவைச் சேர்ந்த (2) (டி) உட்பிரிவும், 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 15/1971) 9-வது பிரிவைச் சேர்ந்த (3) (டி) உட்பிரிவும், மாநகராட்சியின் கணக்குகள்குறித்த நிலைக்குழு நகராட்சி சொத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பெதுவும் அல்லது காலப்போக்கில் ஏற்படும் மதிப்புக் குறைவு எதுவும் மீட்க முடியாதது என்று அக்குழு கருதினால் அத்தொகையை மட்டும் கணக்கிலிருந்து நீக்கி விட கணக்குகள் நிலைக்குழுவுக்கு அதிகாரமளிக்கின்றன. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், இதற்குத் தொகை வரம்பு ஏதும் இல்லை. ஆனால், மதுரை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், ரூ. 1,000 வரைக்கும் மட்டுமே இவ்வாறு நீக்கலாமென இவ்வதிகாரத் திற்கு வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குச் சேர வேண்டிய ஏதாவது வரி, கட்டணம் அல்லது ஒப்பந்தமொன்றின்கீழ் அல்லது பிறவகையில் மாநகராட்சிக்குச் சேர வேண்டிய ஏனைய தொகை அல்லது அவை தொடர்பாகச் செலுத்தத்தக்க ஏதாவது தொகை வசூலிக்கப்பட வியலாததென்று மேற்சொன்ன குழுவுக்குத் தோன்றினால், அவற்றைக் கணக்கிலிருந்து நீக்கிவிட மேற்சொன்ன விதித்துறைகள் அக்குழுவுக்கு அதிகாரமளிக்கவில்லையாதலால், தமிழ் நாடு 1919-ஆம் ஆண்டு 4-வது சட்டத்தையும், தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு 15-வது சட்டத்தையும், தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் எண் 5/1920) அடங்கி யுள்ள விதித்துறைகளையொட்டி அவற்றிற்கிணங்க திருத்தக் கருதப் பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இத் தீர்மானத்தை நிறைவேற்றி வைக்குமாறு பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1972-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை வரவேற்கிற முகத்தான் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.



1972 டிசம்பர் 13] [திரு. கே. எ. வகாப்]

இந்த நாட்டிலே நடைபெறுகிற தமிழக அரசு, ஜனநாயக முறையில் நடக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருப்பது இந்த ஒரு சட்டம். ஒரு காலத்தில் சென்னை மாநகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை நூறு ஆக இருந்தது. இன்றையதினம் மாநகராட்சிக்கு உட்பட்ட பிரதேசங்கள் மிகவும் விரிவு அடைந்திருக்கின்றன. விரிவு அடைந்திருப்பதற்கு ஏற்றவகையில் பல பணிகளும் செய்யப்பட வேண்டியதாக இருக்கின்றன. அதன் காரணமாக அங்கங்கே பல குறைபாடுகள் இருக்கக்கூடும். அந்தக் குறைபாடுகள் அகற்றப்பட வேண்டுமென்றால் மக்களுடைய பிரதிநிதிகள் அவ்வப்போது அதை மாநகராட்சி மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தாக வேண்டி யிருக்கிறது. ஒரு உறுப்பினருடைய ஏரியா மிகவும் விரிந்ததாக இருக்குமானால் அதை அவரால் அடிக்கடி பார்க்க முடியாது போகலாம். ஆனால் இன்றுள்ள நிலைக்கேற்ப மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 120-ல் இருந்து, 150 ஆக உயர்த்த அரசு இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருப்பதற்கு நான் என் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குச் சட்ட மன்றத் தொகுதிக்கேற்ப மாநகராட்சி வார்டுகள் அமைக்கப்பட்டிருக் கின்றன. 120 மாநகராட்சி இடங்கள் 150 ஆக ஆகிறபோது சட்டமன்றத் தொகுதி எண்கள் அதிகரிக்கக்கூடும். ஆனால் குடும்பக் கட்டுப்பாடு காரணமாக மக்கள் தொகை குறைவதன்மூலம் சட்ட மன்றத் தொகுதி எண்ணிக்கை குறைந்துவிடக்கூடிய அபாயம் ஏற்படா திருக்கவும் வேண்டும். இப்படிப் பாராளுமன்றத் தொகுதி எப்படி ஆகுமோ என்று இருக்கிற நிலையில் ஜனநாயகத்தில் மிக்க நம்பிக்கை கொண்டு செயலாற்றி வருகிற நம் அரசு மாநகராட்சியின் எண்ணிக்கையை 150 ஆக உயர்த்தியிருப்பது மிகமிகப் பாராட்டத் தக்கதாகும். அதோடு எந்தக் கொள்கைக்காகத் தமிழக அரசு இயங்கிக்கொண்டு வருகிறதோ அந்தக் கொள்கையின் அடிப் படையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடத்தை 12 இல் இருந்து 15 ஆக உயர்த்திருப்பதையும் நான் மிகமிகப் பாராட்டுகிறேன். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் என்று பேசப்படுகிற இந்த நாளுக்கேற்றாற்போல அவர்களுக்கும் நல்ல சந்தர்ப்பம் கொடுக்க முன்வந்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டி, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர் களே, திரு. வகாப் அவர்கள் இந்தச் சட்டத்தை வரவேற்றுக் கூறி [illegible] தெரிவித்துக்கொள்கிறேன்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 டிசம்பர் 13

அவையின் கவனத்திற்கு ஒரே ஒரு குறிப்பைமட்டும் சொல்ல விரும்புகிறேன். மாநகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 120-ல் இருந்து 150 ஆக உயர்வதற்கு நிர்வாகத்தைப் பரவலாகவும், விரிவாகவும், எளிமையாகவும் செய்கிறோம் என்பதுதான் பயன். இதன் காரணமாகச் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாநகராட்சிக்குள் பத்தில் இருந்து 15 ஆகிவிட்டது என்று பொருள் படாது. சட்டமன்றத் தொகுதி நிர்ணயிப்பதற்காக மத்திய அரசு ஒரு குழு அமைக்கிறார்கள். அந்தக் குழுவினால்தான் சட்டமன்ற இடங்கள் நிர்ணயிக்கப்படும். பாராளுமன்றத்தின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்ட ஒன்று. ஒரு பாராளுமன்றத் தொகுதியில் ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது சட்டமன்றத் தொகுதிகள்கூட இருக்கலாம்.

இங்கே நாம் கொண்டுவந்திருப்பது முன்னே சட்டமன்றத் தொகுதிக்கு ஏற்றாற்போல மாநகராட்சி மன்ற வார்டுகள் பிரிக்கப் பட்டிருந்தன. மாநகராட்சி மன்ற வார்டுக்கும் சட்டமன்றத் தொகுதிக்கும் சம்பந்தம் இல்லை. மாநகராட்சி மன்ற விரிவுக்கு ஏற்றுப்போல வார்டுகளைப் பிரித்து, 120 உறுப்பினர் எண்ணிக்கையை 150 ஆக உயர்த்தவே இந்த சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



[1972 டிசம்பர் 13

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். தலைவரவர்களே, "1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/72) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) 1972-ம் ஆண்டு, மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானி சாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72).

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

நகரியங்களை நிர்வகிப்பதற்காக அமைக்கப்படும் நகரியக் குழுக்களில் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் லோக் சபை உறுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று துணைச் சட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. அரசு மேற்சொன்ன பரிவுரையை ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கிணங்க, தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 1940-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1940) 1954-ஆம் ஆண்டு குற்றாலம் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1954) 1954-ஆம் ஆண்டு பவானிசாகர் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1954) ஆகிய சட்டங்களைத் திருத்த முடிவு செய்தது.

நகரியக் குழு உறுப்பினர்கள் நகரியக் குழுவில் தாம் அவ்வாறு உறுப்பினர்களாக இருப்பதனாலேயே சட்டப் பேரவை அல்லது சட்ட மேலவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு

* 7—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

1972 டிசம்பர் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அல்லது அவ்வாறு உறுப்பினராயிருப்பதற்கு தகுதியற்றவர்களாகிவிட மாட்டார்கள் என்பதற்கும் இச்சட்ட வரைவில் விதித்துறை செய்யப் பட்டுள்ளது.

மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க இச்சட்ட வரைவு விழைகிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட வரைவைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு பேரவையை வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1972-ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம் மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1972-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம் மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/72) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டு மென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.



1972 டிசம்பர் 13]

## (5) அரசினர் தனித்தீர்மானம்.

### பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, தமிழ்நாடு பேரவையின் இசைவுக்கு வந்துள்ள 1972-ம் ஆண்டு அரசிய லமைப்பு (30-வது திருத்த) சட்ட முன்வடிவு குறித்து.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1972-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (30-வது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ்வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது." என்று நான் முன்மொழிகிறேன். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ள 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (முப்பதாவது திருத்தச்) சட்ட வரைவானது, சொத்துரிமை (சிவில்) வழக்குகளில் தலைமை உயர் நீதிமன்றம் மேல் முறையீட்டு விசாரணை அதிகா ரத்தைச் செலுத்துவதற்கு வழக்கிலுள்ள சொத்தின் மதிப்பினை அடிப்படையாகக் கொள்வதை நீக்கும் பொருட்டு அரசியலமைப்புச் சட்டத்தின் 133 (1) பிரிவைத் திருத்த விழைகிறது. இத்திருத்தச் சட்ட வரைவு, அரசியலமைப்புச் சட்டத்தின் 368-வது பிரிவைச் சேர்ந்த (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் மாநிலச் சட்ட மன்றத்தின் இசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 133 (1) பிரிவின் (ஏ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 20,000 என்ற குறைந்த அளவு வரம்பானது 1950ஆம் ஆண்டில் அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் சமயத்தில் முடிவு செய்யப்பட்டது. ரூபாயின் நாணய மதிப்பில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக இந்த வரையறை மிகக் குறைவு என்றும் பெருந்தொகை சம்பந்தப்பட்ட வழக்கிலன்றி ஏனைய வழக்குகள் தலைமை உயர்நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படக் கூடாது என்றும் 1969ல் கருதப்பட்டது. இந்த வரையறையை ரூபாய் ஒரு லட்சத்திற்கு உயர்த்த வகைசெய்யும் சட்ட வரைவு 1969-ல் முகவுரைக்கப்பட்டது. இது குறித்து சட்ட ஆணைக்குழு கலந்து ஆலோசிக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 133 (1) பிரிவைச் சேர்ந்த (சி) பகுதியின்கீழ் உயர்நீதிமன்றம் வழங்கும் தகுதிச் சான்றிதழின் அடிப்படையில்தான் மேல் முறையீடு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் (ஏ) (பி) பகுதிகள் விடப் படலாம் என்றும் சட்ட ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 டிசம்பர் 13

எனினும், இச்சட்ட வரைவு 1970 ஆகஸ்டு திங்களில் ராஜ்ய
சபையினால் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர், மக்கள்
பேரவை கலைக்கப்பட்டதால் இச்சட்ட வரைவு காலங்கழிந்ததாகி
விட்டது. சட்ட ஆணைக்குழு இது குறித்து மீண்டும் கலந்தா
லோசிக்கப்பட்டது. வழக்குகள் மதிப்பு குறித்த வரையறை, நீதி
வேண்டி தலைமை உயர்நீதிமன்றத்திற்குச் செல்வதில் ஏழைகளுக்குப்
செல்வந்தர்களுக்குமிடையே நியாயமற்ற வேறுபாட்டினை உருவாக்கு
கிறது என்று சட்ட ஆணைக்குழு கருத்துத் தெரிவித்தது. இத
குறித்து நடவடிக்கை எடுக்குமுன் இது மீண்டும் ஆலோசனைக்கு
எடுத்துக்கொள்ளப்பட்டு டாக்டர் பி. பி. கஜேந்திரகட்கா
தலைமையின்கீழ் புதிதாக அமைக்கப்பட்ட சட்ட ஆணைக்குழுவிற்கு
அனுப்பப்பட்டது. ஒரு வழக்கில் பொது முக்கியத்துவம் வாய்ந்த
சட்டப் பிரச்சினை பெரிதும் அடங்கியுள்ளது என்று உயர்நீதி
மன்றத்தின் கருத்துப்படி அப்பிரச்சினை தலைமை உயர்நீதி மன்றத்
தினால் முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் உயர்நீதி மன்றப்
சான்றளிக்கும் வழக்குகளில் மட்டுமே மேல் முறையீடு செய்த
கொள்ளும் உரிமை அனுமதிக்கப்படவேண்டும் என்றும் புதிய சட்ட
ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளது. உயர்நீதி மன்றம் முடிவு
செய்யும் ஒவ்வொரு வழக்கிலும் தலைமை உயர்நீதி மன்றத்திற்கு
மேல் முறையீடு இருக்கக் கூடாது : எத்தகைய வழக்குகளில் மேல்
முறையீடு செய்து கொள்ளப்படலாம் என்பதை வரையறுக்க ஓ
எல்லைக்கோடு வகுக்கப்பட வேண்டும். ஆனால், மேல்முறையீட்டில்
அடங்கியுள்ள பிரச்சினைகளைக் கவனிக்காமல் சொத்து மதிப்பின்
அடிப்படையிலேயே இந்த எல்லைக்கோட்டை வகுப்பதென்பது
இயல்புக்கு ஏலாத ஒன்றாகும். மேலும் செல்வம் படைத்தவ
களுக்கும் வறியவர்களுக்குமிடையே பொருந்தா வேற்றுமை ஒன்றை
அது உருவாக்குகிறது. இந்நிலையை தவிர்ப்பதே தற்போதைய
திருத்தத்தின் நோக்கமாகும். ஒரு வழக்கில் பொது முக்கியத்துவம்
வாய்ந்த சட்டப் பிரச்சினை பெருமளவில் அடங்கியுள்ளது என்றால்
அவ்வழக்கின் சொத்து மதிப்பு எவ்வளவிலிருப்பினும் அதைக்
கருத்திற்கொள்ளாமல், அவ்வழக்கு குறித்து தலைமை உயர்நீதி
மன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம் என்று உயர்நீதிமன்றம்
சான்றளிக்கலாம். சொத்து மதிப்பு குறித்த வரையறை அறவே
எடுத்துவிடப்படுவதால் மேல்முறையீடு செய்து கொள்வதற்கு
சொத்து மதிப்பு முட்டுக்கட்டையாக இராது. சட்டவரைவில்
இடைக்கால விதித்துறைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. செய்ய
கருதியுள்ள திருத்தம் (1) அது செயல்படத் தொடங்குகிற நாளில்



1972 டிசம்பர் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தலைமை உயர்நீதிமன்றத்திடம் விசாரணையில் உள்ள மேல் முறையீட்டிற்கும் (2) உயர்நீதி மன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பாணை அல்லது இறுதி ஆணை குறித்து அரசியலமைப்பில் நிருத்தப்படாது உள்ள இப்பகுதியின்கீழ் சான்றிதழ் ஒன்று முன்னரே பெறப்பட்டிருந்தால் அத்தகைய தீர்ப்பாணைக்கும் அல்லது இறுதி ஆணைக்கும் பொருந்தாது.

தலைவர் அவர்களே, இத் தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றுமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கணபதி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் மிக முக்கியமான சமுதாய சீர்திருத்த கொள்கையை நிறைவேற்றுவதாக இருப்பதால் அதை நான் வரவேற்கிறேன். இதற்கு முன்பாக உச்ச நீதி மன்றத்தில், உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்ய வேண்டும் என்றால், சிவில் வழக்குகளில் அப்பீல் செய்ய வேண்டும் என்றால் அந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட சொத்தின் மதிப்பு இருபதாயிரம் ரூபாய் என்ற அளவில் இருக்கவேண்டும். சொத்தின் மதிப்பு இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் உடனடியாக அந்த வழக்குகளில் உள்ள பிரச்னைகளை எல்லாம் விட்டு விட்டு சொத்தின் மதிப்பு இந்த அளவு இருப்பதாலேயே அதை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக் கூடிய வசதி இருந்தது. அதனால் ஏற்பட்ட சிக்கல் மிக முக்கியமான சட்டப் பிரச்னை உள்ள வழக்குகளில் சொத்தின் மதிப்பு சில நேரங்களில் குறைவாக இருந்தால் உச்ச நீதி மன்றத்தில் செல்ல முடியாத நிலைமை இருந்தது.

சாதாரணமாக சொத்தின் மதிப்பு இருபதாயிரம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் பெரும் பெரும் பணக்காரர்கள் மட்டுமே ஈடுபட்டு நடத்திக் கொண்டிருந்தார்கள். இருபதாயிரத்திற்குக் கீழ்ப்பட்ட சொத்து வழக்குகளை எல்லாம் சாதாரணமாக ஏழைகள் நல்ல நியாயத்தைப் பெற முடியாத நிலைமை இருந்தது. அந்த நிலையைப் போக்க உயர்நீதிமன்றத்தில் உச்ச நீதி மன்றத்தில் விசாரிக்கக் கூடியது என்று சர்டிபிகேட் ஒன்று கொடுத்துவிட்டால் அது உச்ச நீதி மன்றத்தில் கொண்டு செல்ல ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் சரி சமமாக நீதியும் நியாயமும் கிடைக்கக் கூடிய நிலையில் இந்த அரசியல் சட்ட திருத்தம் இருக்கிறது. எனவே சோஷலிச சமுதாயம் என்று பேசுகிற இந்த நாட்களில் இந்த

முக்கியமான சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையைக் கடைப்பிடி கின்ற வகையில் அமைந்திருக்கின்ற இந்த அரசியல் அமைப்புச் சட்ட திருத்தத்திற்காக சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நான் பாராட்டை தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

THIRU M. A. LATHEEF: This amendment Bill has beer welcomed both in the Rajya Sabha and the Lok Sabha and associate myself with the sentiments expressed by members o Parliament as well as by Mr. Ganapathy here in this House This amendment Bill seeks to do away with the criterion undei which the appellate jurisdiction of the Supreme Court was sought to be invoked to give an adjudication in monetary cases. As Mr. Ganapathy felt this is indeed a very welcome measure, because in these days of socialism under this it is provided that equal opportunities be given to all sections of the Community.

Justice, equity are the criteria which govern both social and judicial matters and these criteria have now been accepted as norms which should govern the social activities of the modern community. As such, in so far as the Bill seeks to provide equal opportunities to all sections of the community-both poor and rich, whoever it may be, this is a welcome measure.

Now this Amendment seeks to do away with the value criterion visualised in Article 133 (1). This amendment has been brought forward as a result of the report of the Law Commission and even in 1969 the Amendment was proposed in the Parliament and in fact the Amendment Bill was passed by the Rajya Sabha which lapsed on account of the dissolution of the Parliament in 1971. The value criterion fixed in 1950 for the Appellate jurisdiction of the Supreme Court was Rs. 20,000. We know what was the money value in 1950 and what is the money value now when inflationary tendencies have become the order of the day. The difference between the money value in 1950 and 1972 is obviously remarkable and as such the sum of Rs. 20,000 was felt rather too low as to invite the appellate jurisdiction of the Supreme Court. Even as per the 44th Report of the Law Commission, this value criterion provided in Article 133 was sought to be upheld. But this Amendment seeks to do away with the concept of value criterion and now



the Supreme Court is made available to all the sections of the community in India and so this is a welcome measure.

In this connection, I would also submit to the consideration of the Hon. Minister for Education who has brought forward this Resolution that it is high time that we must also give some legal aid to the poor litigants. Even though we are having provisions in the Civil Procedure Code wherein poor litigants could file suits called '*informa pauperis*' to recover their monetary claims, many of the litigants who have got valid claims do not go to the court because they happen to be poor and they cannot bear the expenses of litigation. Therefore, it is high time that both the Central and State Government should see that some relief is given to the poor litigants for instituting appropriate monetary claims before the courts and get their claims recovered from the persons who owe them. With these observations I associate myself with the sentiments expressed by the hon. Member, Thiru Ganapathi and the Members of Parliament. This is a welfare measure which will further the concept of social welfare. As this is based on equity, justice and good conscience, this Resolution should be welcomed by all.

*திரு. கா. வேமவேந்தன்: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்த அரசியல் சட்டத் திருத்தம் பற்றிய தீர்மானத்தை நானும் முழு மனதோடு ஆதரிக்க விரும்புகிறேன்.

சமுதாயத்திலே, எல்லோருக்குமே சமமான நீதி வழங்க வேண்டு மென்ற அடிப்படையில் இந்த 30-வது திருத்தச் சட்டம் பாராளு மன்றத்திலே நிறைவேறி நம்முடைய கருத்துக்காக அனுப்பப் பட்டிருக்கிறது. இதிலே இருக்கிற சிறப்பான அம்சங்கள் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னதுபோல, முன்பெல்லாம் ரூ. 20,000 சம்பந்தப்பட்ட வழக்குகளை. பணம் படைத்தவர்கள். வசதி படைத்தவர்கள் மட்டும் சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டு போக வேண்டும் என்ற நிலையை மாற்றி, question of law என்று சொல்லக் கூடிய அந்த அம்சம் மட்டும் இருக்குமானால் உயர்நீதிமன்றம் எல்லா வழக்குகளையும் அனுப்ப முடியும் என்ற இந்தத் திருத்தச் சட்டத்தை உரிய நேரத்தில் கொண்டு வந்திருக்கிற பாராளுமன்றத்தை, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புகிற இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. என். கணபதி] [1972 டிசம்பர்

முக்கியமான சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையைக் கடைப்பிடி கின்ற வகையில் அமைந்திருக்கின்ற இந்த அரசியல் அமைப்புச் சட்ட திருத்தத்திற்காக சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நான் பாராட்டை தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித் முடித்துக்கொள்ளுகிறேன்.

THIRU M. A. LATHEEF: This amendment Bill has be welcomed both in the Rajya Sabha and the Lok Sabha and associate myself with the sentiments expressed by members Parliament as well as by Mr. Ganapathy here in this Hous This amendment Bill seeks to do away with the criterion und which the appellate jurisdiction of the Supreme Court was sougl to be invoked to give an adjudication in monetary cases. A Mr. Ganapathy felt this is indeed a very welcome measure, becaus in these days of socialism under this it is provided that equa opportunities be given to all sections of the Community.

Justice, equity are the criteria which govern both social an judicial matters and these criteria have now been accepted as norm which should govern the social activities of the modern community As such, in so far as the Bill seeks to provide equal opportunitie to all sections of the community-both poor and rich, whoeve it may be, this is a welcome measure.

Now this Amendment seeks to do away with the value criterion visualised in Article 133 (1). This amendment has been brought forward as a result of the report of the Law Commission and even in 1969 the Amendment was proposed in the Parliament and in fact the Amendment Bill was passed by the Rajya Sabha which lapsed on account of the dissolution of the Parliament in 1971. The value criterion fixed in 1950 for the Appellate jurisdiction of the Supreme Court was Rs. 20,000. We know what was the money value in 1950 and what is the money value now when inflationary tendencies have become the order of the day. The difference between the money value in 1950 and 1972 is obviously remarkable and as such the sum of Rs. 20,000 was felt rather too low as to invite the appellate jurisdiction of the Supreme Court. Even as per the 44th Report of the Law Commission, this value criterion provided in Article 133 was sought to be upheld. But this Amend- -ent seeks to do away with the concept of value criterion and now



1972 டிசம்பர் 13] [Thiru M. A. Latheef]

the Supreme Court is made available to all the sections of the community in India and so this is a welcome measure.

In this connection, I would also submit to the consideration of the Hon. Minister for Education who has brought forward this Resolution that it is high time that we must also give some legal aid to the poor litigants. Even though we are having provisions in the Civil Procedure Code wherein poor litigants could file suits called '*informa pauperis*' to recover their monetary claims, many of the litigants who have got valid claims do not go to the court because they happen to be poor and they cannot bear the expenses of litigation. Therefore, it is high time that both the Central and State Government should see that some relief is given to the poor litigants for instituting appropriate monetary claims before the courts and get their claims recovered from the persons who owe them With these observations I associate myself with the senti- ments expressed by the hon. Member, Thiru Ganapathi and the Members of Parliament. This is a welfare measure which will further the concept of social welfare. As this is based on equity, justice and good conscience, this Resolution should be welcomed by all.

*திரு. கா. வேமவேங்கன்: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்த அரசியல் சட்டக் திருத்தம் பற்றிய தீர்மானத்தை நானும் முழு மனதோடு ஆதரிக்க விரும்புகிறேன்.

சமுதாயத்திலே. எல்லோருக்குமே சமமான நீதி வழங்க வேண்டு மென்ற அடிப்படையில் இந்த 30-வது திருத்தச் சட்டம் பாராளு மன்றத்திலே நிறைவேறி நம்முடைய கருத்துக்காக அனுப்பப் பட்டிருக்கிறது. இதிலே இருக்கிற சிறப்பான அம்சங்கள் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னதுபோல, முன்பெல்லாம் ரூ. 20.000 சம்பந்தப்பட்ட வழக்குகளை. பணம் படைத்தவர்கள். வசதி படைத்தவர்கள் மட்டும் சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டு போக வேண்டும் என்ற நிலையை மாற்றி, question of law என்று சொல்லக் கூடிய அந்த அம்சம் மட்டும் இருக்குமானால் உயர்நீதிமன்றம் எல்லா வழக்குகளையும் அனுப்ப முடியும் என்ற இந்தத் திருத்தச் சட்டத்தை உரிய நேரத்தில் கொண்டு வந்திருக்கிற பாராளுமன்றத்தை, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புகிற இந்த நேரத்திலே பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அறிஞர் அண்ணு அவர்கள்தான் ஓர் முறை குறிப்பிட்டார்கள். சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; அந்த விளக்கு சில பேருக்குத்தான் கிடைக்கிறது என்று பழைய திரைப் படத்திலே எழுதும்பொழுதும், அவருடைய வாதங்களிலும் எடுத்துச் சொன்ஞர்கள். அதைப் போல் சுப்ரீம் கோர்ட் என்ற நீதிமன்றம் சுப்ரீம் ஸ்டேட்டஸ் இருக்கிற சில பேருக்குத்தான் அமைகிறது என்ற நிலையை மாற்றி, இப்பொழுது, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற பிரதிநிதிகள், இந்திய அரசியல் சட்டத்திலே அமைந் திருக்கிற சமுதாய அமைப்பினை ஒத்துக்கொள்கிருர்கள். ரூ. 20,000 வரையில் பணம் இருக்கிற, சம்பந்தப்பட்ட வழக்குகளை மட்டும்தான் கொண்டு போக வேண்டுமென்ற நிலையை O mt செய்து, அதை நீக்கி, இன்றையதினம் இந்தத் திருத்தத் தீர்மானம் பாராளு மன்றத்திலே கொண்டு வரப்பட்டிருப்பதும், நம்முடைய கருத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதும், மிகுந்த முறையானது என்பது மட்டுமல்ல, பாராட்டுக்குரியது. 30-வது திருத்தம் இந்த நல்ல நோக்கத்திற்காக வந்திருப்பது; இதுபோல் நூருயிரம் கொண்டு வந்தாலும் அவற்றை வரவேற்கக் காத்திருக்கிருேம் என்று சொல்லி, இந்தத் திருத்தத்தை நாங்களெல்லாம் முழுமனதோடு வரவேற் கிருேம் என்று சொல்லி முடிக்கிறேன்.

<u>திரு. ப. முத்துசாமி</u>: தலைவர் அவர்களே, இந்த அரசியல் அமைப்பு சட்ட திருத்தத் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைக் கூறுகிறேன்.

இந்தத் திருத்தத் தீர்மானத்தை, சோஷலிச கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் எந்த அரசியல் கட்சியும் நிச்சயமாக மனப்பூர்வமாக வரவேற்கும் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு, இந்தியா முழுதும் எந்த மாநிலத்தை எடுத்துக் கொண்டாலும், இந்தத் திருத்த தீர்மானம் எல்லாக் கட்சிகளாலும் வரவேற்கப்படும் என்று நான் கருதுகிறேன். ஏனென்ருல், இதிலே ஏழைக்கும் பணக்காரனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை, ஏழைகளுக்கும், சாதாரணமாக, சமுதா யத்தின் உச்சக் கட்டத்திலே இருக்கிற பணக்காரர்களுக்கும் இருக்கிற வேறுபாட்டைக் களைகின்ற நல்ல அம்சமாக இது இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திருத்தத் தீர்மானம் நீண்ட நாட்களுக்கு முன்னுலே வந்திருக்குமானுல் இது இன்னும் நல்லபடியாக இருந்திருக்கும் ன்பதுதான் இன்றைக்கு இருக்கிற கருத்தே தவிர, இன்றைக்காவது



வந்திருப்பதற்கு நாம் நிச்சயமாக முழுமனதோடு ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிருேம். இந்தத் தீர்மானம் வந்திருப்பதன் மூலம் இன்றைக்குச் சாதாரண மக்கள். ஏழை மக்கள், எளிய மக்கள், எந்த அளவிற்குச் சட்டத்தின் வாயிலாக உரிமைகள் பெறுகிருர்களோ, அதே போல், எவ்வளவு வசதிகள் படைத்திருந்தாலும் அவர்களுக்கும் அதே உரிமைகள் தான் என்று வரையறை வகுத்து இருப்பதை நிச்சயமாக நாங்கள் வரவேற்கிருேம்.

அரசாங்கம், பொதுக்காரியங்களுக்காக பல நடவடிக்கைகளை எடுக்கிற நேரத்தில், சொத்துரிமை அதிகமாக இருக்கிற காரணத் திஞலே, பல கட்டங்களில், வசதி படைத்தவர்கள், சுப்ரீம் கோர்ட்டுக்கு அவைகளைக் கொண்டுசென்று அதன் மூலமாகப் பொதுக் காரியங்கள் நீண்ட நாட்களுக்குத் தடைப்படுவதற்கு முன் பிருந்த சட்டத்திலே இருந்த நிலை இந்தத் திருத்தத்தின் மூலமாக உடைத்தெறியப்படுகிறது என்பதை நாம் மனபூர்வமாக ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிருேம்.

இதைக் குறிப்பிடுகின்ற நேரத்தில், இது போன்ற திருத்தங்களைக் கொண்டு வந்து, நீதி மன்றத்திலே இருக்கிற பலவற்றை இன்றைக்கு நாம் மாற்றி அமைப்பதற்கும் வரையறை கொண்டு வரவேண்டு மென்று இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன் வெள்ளைக்காரன் காலத்தில் கோர்ட்டிலே இருக்கிற வழக்குரைஞர்கள் அங்கே கவுன் அணிந்து, மேலே ஒரு கோட்டும் அதற்கு மேலே ஒரு கோட்டு அணிந்து செல்கின்ற அந்தப் பழக்கம் வெள்ளைக்காரன் காலத்திலே இருந்தது. இன்றைக்கு அந்த முறைகளை யெல்லாம் மாற்ற வேண்டுமென்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நீதிபதிகளை அட்ரஸ் செய்கிறபொழுது மைலார்ட் என்றும் மற் முறைகளிலும் அழைக்கிருர்கள். வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டுவரப்பட்ட இவற்றையெல்லாம் போக்கக்கூடிய முறையில் அடிமைத்தனத்தைக் காட்டுவதாக அமைந்து இருக்கின்றவற்றை யெல்லாம் மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முப்பதாவது அரசியலமைப்புச் சட்டத்தை ஆமோதிக்கக்கூடிய அளவுக்கு இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தத்தை நான்

முழுமனதோடு ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

இதிலே, இருபதாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட பிரச்னையாக இருந்தால்தான் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகக்கூடிய நிலைமை என்று இருந்ததை மாற்றியமைத்து, அதற்குக் குறைவாக இருந்தாலும்கூட ஒரு பிரச்னையை சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டுபோக முடியும் என்ற அளவுக்குத் திருத்தம் வந்திருக்கிறது. இதிலே ஒரு முக்கியமான விஷயத்தை சரியான வகையிலே கவனிக்க வேண்டு மென்று கருதுகிறேன். ஒரு ஏழை, 10 ஆயிரம் ரூபாய்க்கு—அவர் ஹைகோர்ட்டிற்குச் சென்று அவருக்கு அந்த வழக்கிலே சரியான தீர்ப்புக் கிடைக்கவில்லை என்றால்—அவர் சுப்ரீம் கோர்ட்டிற்குத்தான் போக வேண்டிய நிலை இருக்கும். அவர் அப்படிச் செய்யவேண்டு மென்றால் தமிழ் நாட்டிலே உள்ள சென்னையிலிருந்து டெல்லிக்குப் போகவேண்டும். அவருடைய வழக்கை வாதாடுவதற்காகத் தமிழ் நாட்டிலே ஒரு பெரிய ஆள் இருந்தால் அவரைப் பிடிக்க வேண்டும், அல்லது சுப்ரீம் கோர்ட்டிலேயே பேசிப்பேசி வாதாடி பழக்கம் இருக்கின்ற வழக்கறிஞரைப் பிடித்துத்தான் அவர் வழக்கு நடத்த வேண்டும். இந்த நிலையில் அவருடைய தொகை 10 ஆயிரமாக இருந்தாலும், அதைப் பெறுவதற்கு சுப்ரீம் கோர்ட்டிலே வாதித்துத் தான் அவர் பெறவேண்டிய நன்மைகளைப் பெற வேண்டுமென்ற நிலையில் ஹைகோர்ட்டிலே தனக்குக் கிடைத்த பாதகமான தீர்ப்பை அவர் சுப்ரீம் கோர்ட்டிற்கு எடுத்துச் சென்று அங்கே தனக்குச் சாதகமான தீர்ப்பைப் பெறக்கூடிய நிலைமையில், அவர் அந்த வழக்கறிஞருக்கு எவ்வளவு பீஸ் கொடுக்க வேண்டும், அவர் டெல்லிக்குப் போய்வர எவ்வளவு ரூபாய் செலவாகும் என்பதை யெல்லாம் பார்க்க வேண்டும். ஏறக்குறைய மற்ற செலவுகள் அவருக்கு 5 ஆயிரம் பத்தாயிரம் கிட்டத்தட்ட செலவாகும். அதற்குக்கூட அவருக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய நிலையை, வழிவகையை ஏற்படுத்த வேண்டும். இந்தத் திருத்தத்திலே நாம் அதைப்பற்றி ஒன்றும் செய்யமுடியாது. நாட்டிலே உள்ள ஒவ்வொரு சட்ட மன்றத்திலும் இதற்கு ஏதாவது செய்யமுடியுமா என்பதைச் சிந்திப்பதற்காக நாம் இதை ஒரு வாய்ப்பாகக் கருத வேண்டும்.

பாராளுமன்றத்திலே இருக்கக் கூடியவர்கள் காதிலேயும் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கக்கூடியவர்கள் காதிலேயும் அப்பொழுதுதான் அது எட்டும். இல்லையென்றால் இதைக் கொண்டுவந்தாலும் ஏழை



எளிய மக்கள் பயனடைய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லிட்டிகன்ட்ஸ் பயனடைய வேண்டுமானால் அவர் களுக்கு ப்ரீ லிடிகேஷன் எய்ட் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இப்பொழுதுகூட அதற்கு வழி இருக்கிறது என்று சொல்லலாம். காகித அளவில் இருக்கலாமே தவிர அதை நாம் நடைமுறையில் பார்க்க முடியாது. ஏழை எளிய மக்களுக்கு முதற் கட்டமாக சுப்ரீம் கோர்ட் போய் வாதாடுவதற்கு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் என்ன சலுகை செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கும் நாம் இதை ஒரு வாய்பாகக் கருதிக்கொள்ள வேண்டும். அதையெல்லாம் இந்தச் சட்டத்திலே போட முடியாது.

நான் யாரைப்பற்றியும் தாரதம்மியமாகச் சொல்லவில்லை, யாரை யும் கெட்டிக்காரர், கெட்டிக்காரர் இல்லை என்று சொல்லவில்லை. இப்பொழுது நம்முடைய உறுப்பினர் திரு. கணபதி இருக்கிறார், அவர் சட்டசபையில் சாமார்த்தியமாக வாதாடுகிறார், அதைப் போலவே லத்திப் அவர்கள் இருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கு பீஸ் கொடுத்தாக வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு தொழில் செய்கிறார்கள். எல்லோரும் ப்ரீயாக செய்ய முடியாது, முழுமையாக ப்ரீயாகச் செய்ய முடியாது. ஓரளவிற்குச் சலுகை காட்ட முடியும். வழக்கறிஞராக இருந்தாலும் டாக்டராக இருந்தாலும், ஒரு 10 சத வீதம் 15 சதவீதம் இலவச உழைப்பைக் கொடுக்கலாம். நான் செய்துகொண்டுதான் இருக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினராக வருவதற்கு முன்பிருந்தே திருப்தியாகச் செய்து கொண்டிருக்கிறேன். எனவே இதற்காக ஆகின்ற செலவில் ஒரு பாதி அளவையாவது அரசாங்கம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் பயன் இருக்காது.

The amount in question, even if it is Rs. 5,000 now he can go to Supreme Court.

என்று இருந்தால் போதாது. ஒருவர் சுப்ரீம் கோர்டிற்குப் போக வேண்டுமென்றால் இங்கிருந்து டெல்லிக்குப் போகவேண்டுமென்றால் கூட தேர்ட் கிளாஸில் போனாலும்கூட எவ்வளவு ரூபாய் செல வாகும் என்பதைப் பார்க்கவேண்டும். லிடிகேஷனுக்கு ஆகிற செலவில் ஒரு போர்ஷன் அல்லது அந்தத் தொகையை அரசாங்கம் கொடுத்து உதவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லா விட்டால் பொதுமக்களை ஏமாற்றக்கூடிய நிலைமைதான் ஏற்படும். இதோ சோஷலிஸ சமுதாயம் கொண்டுவந்துவிட்டோம் என்று சொல்வது எல்லாம் ஏமாற்றமாகத்தான் இருக்கும். உண்மையாக நன்மை செய்ய வேண்டுமென்றால் என்ன செய்திருக்க வேண்டும்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1972 டிசம்பர் 13

பாரளுமன்றத்திலேயும் உறுப்பினர்கள் எல்லாம் இதைப்பற்றி ஓரளவிற்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள், பதிலளித்த அமைச்சர் அவர்களும் ஓரளவுக்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒரு விஷயத்தை திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். எவ்வளவு அமவுண்ட் ஆக இருந்தாலும் சரி, சுப்ரீம் கோர்டிலே வாதாடுவதற்காக ஆகின்ற லிடிகன்ட்ஸ்க்கு ஆகின்ற செலவை, ப்ரீ சர்வீஸாக ஆகக்கூடிய முறையில், அரசாங்கமே கொடுக்கக்கூடிய முறையிலே இந்தச் சட்டசபையிலேயே நாம் முதலிலே முடிவு செய்தாக வேண்டும். நான் சொல்வது ஒரு பெரிய இஷ்யூ. இதை இந்தச் சட்டசபையிலே செய்ய முடியாது. இதையெல்லாம் பாராளுமன்றத்திலே கான்ஸ்டிட்யூஷனல் அமெண்ட்மெண்ட் கொண்டுவருவதன் மூலம்தான் செய்யமுடியும். நிர்மாணச் சட்டமாக இருந்தாலும் முதலிலே அவர்கள் பாராளுமன்றத்திலே விவாதித்து முடிவு செய்ததற்குப் பிறகுதான் இங்கே வருகிறது. அப்படியில்லாமல் முதன்முதலாக இங்கே வந்தால் அது இதைவிட நல்ல ஆர்வத்தோடு கொஞ்சம் காரமாக விவாதங்கள் நடப்பதற்கு வசதியாக இருக்கும். அப்படியில்லாமல் எல்லா மாநிலச் சட்ட மன்றங்களிலும் முதன்முதலாக விவாதித்து முடிவுசெய்துவிட்டு பிறகு அங்கே இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு டெல்லியில் இருக்கக்கூடியவர்கள் முடிவு செய்வதற்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும். அப்படியில்லாமல் இதைப் பாராளுமன்றத்திலே விவாதித்துவிட்டு ராஜ்ய சபாவிலே முடித்துவிட்டு பிறகு கையெழுத்துப் போட்டுக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே மாநில சட்ட மன்றத்திற்கு வருகிறது.

From top something is executed and then the whole think is presented as a *fait accompli*.

இந்த நிலையில் நாங்கள் இங்கே என்ன பேசி என்ன லாபம்? நிர்மாணச் சட்டத்தை பாராளுமன்றம் நிறைவேற்றினால் அவற்றில் சில மாத்திரம் மாநில சட்டசபைகளுக்கு வரவேண்டும் என்று இருக்கிறது. முதலிலே இங்கே ஏன் வரக்கூடாது? தமிழ்நாட்டு சட்டசபையிலோ அல்லது வேறு எந்த மாநிலச் சட்டசபையிலோ உள்ள அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்காகத்தான் இங்கே வருகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களுடைய அபிப்பிராயத்தை மாத்திரம் பெற்றுவிட்டால் போதும் என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால் 6 எம்.எல்.ஏ.க்கள் இருக்கின்ற ஒரு தொகுதி பாராளுமன்றத் தொகுதி. ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு



1972 டிசம்பர் 13] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

இருக்கிற வாய்ப்பைவிட அந்தத் தொகுதியில் உள்ள எம்.எல்.ஏ.க்களுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. மக்களுடன் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அதைவிட கார்ப்பரேஷன் உறுப்பினர்களுக்கு இன்னும் நெருங்கிய தொடர்பு மக்களிடத்திலே இருக்கிறது. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் பொதுமக்களோடு தொடர்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே, பொதுமக்களின் கருத்தை அறிந்து கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களைவிட சட்டசபை உறுப்பினர்களுக்கு அதிகமான வாய்ப்பிருக்கிறது என்பதால் சட்டசபைக்கு அனுப்பி அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பை இந்த நிர்மாணச் சட்டம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. முதலில் நம்முடைய அபிப்பிராயத்தை, சட்டசபை உறுப்பினர்களின் அபிப்பிராயத்தைப் பெற்று அதன் அடிப்படையில் திருத்தம் வரவேண்டுமே தவிர, திருத்தி முடித்துவிட்டு, ஃபுல்ஸ்டாப், கமா எல்லாம் வைத்து விட்டு கையெழுத்துப் போட்டுக் கொடுப்பதற்காக அனுப்புவது என்பது வெறும் கண்துடைப்பிற்காக, சட்டசபையின் அபிப்பிராயத்தை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்று சொல்வதற்காக இருக்குமே தவிர வேறல்ல. அப்படியில்லாமல் முதலிலேயே அபிப்பிராயத்தைப் பெற்றிருந்தால் நல்லது.

உதாரணத்திற்கு நான் ஒரு கருத்தைச் சொன்னேன். அதாவது ஏழை எளியவர்களுக்கு வாதாட ஃபீஸ் கொடுக்க, சலுகை கொடுக்க அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைச் சொன்னேன். முதலிலேயே கேட்டிருந்தால் அந்தக் கருத்தை இந்த நிர்மாணச் சட்டத்திலே போட்டிருக்கலாம். இப்பொழுது அந்த வாய்ப்பில்லை. ஏனென்றால் முடிந்து விட்டது, மீண்டும் திருத்துவதற்கு வாய்ப்பில்லை. திருத்த வேண்டியவர்கள் பார்லிமெண்ட். நம்முடைய அபிப்பிராயத்தை அறிந்து கொண்டு திருத்த வேண்டுமே தவிர, திருத்திவிட்டுக் கேட்டால் அது தலைகீழாக இருக்கிறது. இந்தியாவில் கான்ஸ்டிட்யூஷனில் இது பெரிய கோளாறு என்று சொல்லக்கூடிய அளவிலே தலைகீழாக, முரண்பாடாக இருக்கிறது. இதற்கு நிச்சயமாகக் கருத்து வேற்றுமையிருக்க முடியாது. இந்தப் பேரவையிலுள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் ஏகமனதான கருத்து இருக்கும் என்று நினைக்கிறேன். Taking the sentiments of the House என்று சொல்லக்கூடிய அளவிலே நம்முடைய கருத்துக்களை மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சரவர்கள் புரிந்துகொண்டு இதையும் பதிலில் சொல்வார்கள்

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1972 டிசம்பர் 13

என்று நிச்சயமாக நினைக்கிறேன். எனவே, உங்கள் அபிப்பிராயத்தை அறிவோம் என்று நமக்குக் கொடுத்து, நம்முடைய அபிப்பிராயத்தை அறிந்து, அதற்குப் பிறகு அவர்களேதான் செய்யட்டும், நாம் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. ஆகவே அப்படி அறிந்து செய்ய வேண்டுமே தவிர, செய்துவிட்டு அபிப்பிராயத்தை அறிய வேண்டு மென்பது தலைகீழாக, ஜனநாயகத்திற்கு அப்பாற்பட்ட செயல் என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

இன்னொரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இருபதாயிரத்தைப் பொறுத்தவரையில் இங்கு வந்திருக்கிறது. ஹைக்கோர்ட், சுப்ரீம் கோர்ட்டைப் பொறுத்தவரையில் இன்னொரு பிரச்னை. பல கான்ஸ்டிட்யூஷன் அமெண்ட்மெண்ட்ஸ், பல ரிட்கள் இம்மாதிரி particular article-ஐ violate செய்திருக்கிறார்கள் என்று ஏராளமாக ரிட்கள் வருவதைப் பார்க்கிறோம். அப்படி வரும் பொழுது ஹைகோர்ட்டுக்கு வந்த பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்கு வருவதா அல்லது நேரடியாகவே ரிட் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக உரிமை இருக்கிறதா என்ற பிரச்னையைக்கூட கான்ஸ்டிட்யூஷன் அமெண்ட்மெண்ட் மூலமோ அல்லது வேறு வழியிலோ அழுத்தந் திருத்தமாக இம்மாதிரி இருந்தால்தான் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகலாம் என்ற நிலை இருக்க வேண்டும். செல்வாக்கு அதிகமாக இருந்தால், செல்வம் அதிகமாக இருந்தால், வாதாடக்கூடியவர்கள் இருந்தால் நேரடியாக சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகக்கூடிய சௌகரியத்தை நாம் பார்க்கிறோம். பல பேருக்கு அப்படிப்பட்ட சௌகரியம் இல்லாமல் ஹைகோர்ட்டுக்குப் போய் தள்ளுபடியான பிறகு வேறுவகையிலே இன்னொரு கட்டமாக சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகும் காட்சியைப் பார்க்கிறோம். அதற்கு ஏதாவது திட்ட வட்டமான வகையிலே ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். நிர்மாணச் சட்டத் திருத்தத்தின் மூலம்தான் செய்ய முடியும். அம்மாதிரி செய்தால் இங்கிருப்பவர்கள் எவ்வளவு பணக்காரர்களாக இருந் தாலும் சரி, எவ்வளவு ஏழைகளாக இருந்தாலும் சரி சரியான வகையிலே, சிஸ்டமேட்டிக்கான வகையிலே போகலாம்.

எனவே, இந்த மூன்று விஷயங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து அதற்குத் தங்கள் கருத்துக்களையும் சொல்லி, என்னுடைய கருத்துக்களுக்கு வலிவு ஏற்படக்கூடிய கருத்துக்களைச் சொல்லி அந்தக் கருத்துக்களை மேலேயிருக்கக்கூடியவர்கள் பார்க்கக் கூடிய அளவில் அமைய வேண்டுமென்ற எண்ணத்தோடு, இந்த



1972 டிசம்பர் 13] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

30-வது திருத்தத்தை வரவேற்று, சுதந்திரா கட்சியின் சார்பில் வரவேற்று என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொண்டு விடை பெறுகிறேன்.

THIRU M. A. LATHEEF: In pursuance of the arguments advanced by my learned friend Dr. Hande, I would like to draw the attention of the Hon. Minister that recently some advocates have created a 'Poor Aid Cell'. A separate movement has also been started by some of the Advocates of the High Court. I would submit that Government may appoint either the Advocate-General or Government Pleader or Public Prosecutor to administer the cell. Let the Government themselves create the 'Poor Aid Cell'.

MR. DEPUTY SPEAKER: The hon. Member cannot talk twice. First you gave some explanation and I can take it as personal explanation. You cannot further your argument by making a second speech.

THIRU M. A. LATHEEF: This is only in furtherance of my arguments so that there may be proper submission to the Hon. Minister and so that in his reply he can throw light on those points.

With regard to jurisdiction of High Court as well as Supreme Court and the plea that some influential people go directly to Supreme Court for filing writs, I may say that Article 226 is there for moving a writ in High Court and Article 32 is there for moving writs in Supreme Court. Both have concurrent jurisdiction. Therefore if you want to have the concurrent jurisdiction to be taken out, it could be done only by constitutional amendment. That is my submission. Dr. Hande's point that it could be done by an executive order or administratively is not correct. It could be done only by constitutional amendment. So long as Article 32 and Article 226 are there both the Courts, High Court and Supreme Court have concurrent jurisdiction. That is the point.

(Dr. H. V. Hande rose.)

MR. DEPUTY SPEAKER: I am afraid we are setting a bad precedent. The hon. Member cannot talk twice.

DR. H. V. HANDE: This is only by way of personal explanation, so that there may not be any ambiguity. As far as I am concerned I am aware of Article 226 and Article 32. I had clearly

said that it could be done only by constitutional amendment. தீர்மானச் சட்டத் திருத்தத்தின் மூலம்தான் செய்ய முடியும் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். That is what I said in Tamil. I know the feelings of members here, I am glad Mr. M. A. Latheef agrees with me that there should not be distinction between person and person with regard to the facility and fecility with which one can approach the Supreme Court. It could be done only by constitutional amendment. The Hon. Minister can reflect in his reply the sentiments expressed in the House by members. In the matter of litigation there should be greater facility for one to go to Supreme Court.

Now you have brought unanimity in the matter of amount. In the same way unanimity should be brought down in the matter of filing of writs also. Now only one with influence could move the Supreme Court directly by writs. I want that distinction to be removed.

MR. DEPUTY SPEAKER : Don't make a second speech. You said that you are going to give some clarification. I think we should not set up precedent of a member making a second speech.

DR. H. V. HANDE : Sir, let us not give an impression to others that we have not discussed this properly. The other point is this. What I said was that there may be some facility, but I am not satisfied with that. It should be like a hospital. If a person went to a Hospital, that patient can get all services, specialist's services and even the poorest patient can get that today in our State. Similarly I want a situation where the poorest litigant would get not only the highest legal advice that he seeks, but that would be available easily. Whichever person he wants for advice should be available to him. That is what I want.

MR. DEPUTY SPEAKER : What about the difficulties of lawyers?

DR. H. V. HANDE : Whatever it is, I would like the clients to have whatever advice he seeks and wants.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 30-வது அரசியல் சட்டத் திருத்தம் மாநிலங்களுடைய அங்கீகாரத்திற்காக தற்போது இந்த மாமன்றத்தின்



முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின்மீது நான் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாதம் ஒருமுறை தமிழகத்தில் ஒரு சினிமாப் படம் வெளியாவதைப் போல் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு தொடர் கூட்டத்திலும் ஒரு அரசியல் சட்டத் திருத்தம் வந்து கொண்டிருக்கிறது. இதுவரையில் 30 திருத்தங்கள் வந்துவிட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் . நாடாளுமன்றத்தைப் பற்றி இப்படிக் குறிப்பிடக் கூடாது.

திரு. துரைமுருகன் : திருத்தங்கள் வந்து கொண்டே இருக்கின்றன என்பதற்காகக் குறிப்பிட்டேன். அரசியல் சட்டத்தின் ஒரிஜினலே போய் இனிமேல் திருத்தங்கள்தான் இருக்குமென்று தெரிகிறது.

இது மகத்தான திட்டம். ஏழை எளியவர்கள் எல்லாம் இந்த நாட்டின் உயர்ந்த நீதி மன்றம் வரை போய் நீதியைப் பெற வழிவகை செய்கிறது, சோஷலிசப் பாதையை வகுக்கிறது என்றெல்லாம் பெருமையாகப் பேசுகிறார்கள். "எட்டாத சுவருக்கு எட்டடி சுவர் எழுப்பி உள்ளே ஆடுது காளி, வேடிக்கை பார்க்க வாடி" என்று சொல்லுவது போல் தலைமை நீதிமன்றத்தை டில்லியில் வைத்துவிட்டு கன்னியாகுமரியிலுள்ள குளச்சலில் இருக்கக்கூடிய ஏழை எப்படி டில்லிக்குப் போய் நீதியைப் பெறமுடியும்? எந்த வகையிலே இது ஏழைக்கு உதவுகிற திட்டமாக இருக்கப் போகிறது? ஏழைகளுக்கு உதவுகிற திட்டம் என்று சொல்கிறார்கள். 20, 25 ஆண்டுக் காலமாக இந்த மாதிரி திட்டங்களையெல்லாம் ஏன் கொண்டு வரவில்லை? மத்திய சர்க்கார் எல்லாவற்றிலுமே கொஞ்சம் ட்யூப் லைட்தான். பாங்க் நாஷனலிசேஷனானாலும் சரி, ராஜ மானிய ஒழிப்பானாலும் சரி, உடனடியாகச் செய்கிற எண்ணம் அவர்களுக்கு வருவதில்லை.

நாட்டு மக்கள் அவர்களுடைய கொள்கைக்குக் குழி தோண்டுகிறார்கள் என்று தெரிந்த பிறகு ஏழைகளின் மீது முதலைக் கண்ணீர் வடிக்கும் நிலைமையில் சில திட்டங்களை வெளியிடுகிறார்கள். இப்போது கொண்டு வந்திருக்கின்ற திருத்தத்தைப் பார்க்கும்போது இது ஏட்டளவில்தான் ஏழைக்கு உதவுகிற திட்டமாக இருக்கும் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

சென்னையில் இருக்கும் ஏழை சட்ட நுணுக்கத்தின் அடிப்படையில் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்றால் நேராகப் போய்

டில்லியில் இருக்கும் வக்கீல்களைப் பார்த்து விளக்க முடியாது முதலில் எங்களைப் போன்ற உயர்நீதி மன்ற வக்கீல்களைப் பிடிக்க வேண்டும். இந்த வக்கீல்களுக்கு அங்கு ஒரு காண்ட்ராக்ட் இருக்கும்

* * ** *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போது * * * என்று சொன்னார்கள். அந்த வாக்கியத்தை சபை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் பேசும்போது இன்னும் சிறிது எச்சரிக்கையாகப் பேசும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : அடுத்து, நான் சொல்ல விரும்புவது, தலைமை உயர்நீதிமன்றம் டெல்லியில் இருப்பதால் இங்கு தென்னகத்தில் இருந்து சென்று வருவது என்பது கடினமானதாக இருக்கிறது; செல விற்குரிய ஒன்றாகவும் இருக்கிறது. நாம் எப்படி இங்குள்ள உயர்நீதி மன்றத்திற்கு கன்னியாகுமரி, இராமநாதபுரம் போன்ற இடங்களில் உள்ளவர்கள் அடிக்கடி வந்து போகும் செலவைக் குறைப்பதற்காக மதுரையில் ஒரு பெஞ்ச் வைக்க வேண்டுமென்ற திட்டத்தை வைத்தி ருக்கிறோமோ அதேபோல் இந்தியத் தலைமை நீதிமன்றத்தின் ஒரு பெஞ்சை தென்னகத்தில் வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதை சென்னையில் வைத்தாலும் சரி, பங்களூரில் வைத்தாலும் சரி, ஹைதராபாத்தில் வைத்தாலும் சரி, அல்லது திருவனந்தபுரத்தில் வைத்தாலும் சரி, தென்னகத்தில் சுப்ரீம் கோர்ட்டின் ஒரு பெஞ்ச் நடைபெற வேண்டும். அப்போதுதான் இங்கிருந்து செல்லும் வழக்குகளின் செலவு குறையும், இப்படி இங்கிருந்து அங்கு செல்லக்கூடிய ஏழைகளுக்கு ஆகும் செலவைக் குறைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு எதை நிறைவேற்ற வேண்டுமென்று கருதுகிறோமோ, அந்த நோக்கம் நிறைவேறும். ஏழைகளுக்கு நல்லதொரு வழிவகை செய்கிற இந்த மசோதாவினை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள இந்த 30-வது திருத்த மசோதாவை ஒரு வகையில் ஆதரித்தாலும்கூட —எனக்கு முன்பு பேசிய திரு. துரைமுருகன் அவர்கள் கூறியதுபோல்

*** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



ப்ராபர்ட்டி வால்யூவை வைத்துப் போவது என்றிருந்ததை மாற்றி யமைத்து ஏழைகளும் சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருப்பதுபற்றி இரண்டுவிதமான அபிப்பிராயம் இருக்க முடியாது. பாராளுமன்றத்தில் சட்ட அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். திரு. துரைமுருகன் அவர்களும் கூறியிருக் கிறார்கள். உதாரணமாக கன்னியாகுமரியில் இருப்பவர்களுக்கு லீகல் எய்ட் கொடுக்க வேண்டுமென்றால் எப்படிக் கொடுப்பது? மத்திய சட்ட அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் லெவலில் மட்டுமல்ல, தாலூகா லெவலில் இருக்கக்கூடிய மக்களுக்கும் ஹெல்ப்லெஸ் புவர்-க்கு லீகல் எய்ட் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எவை சுப்ரீம் கோர்ட்டுக்குப் போக வேண்டும், போக முடியும் என்பதுபற்றி யெல்லாம் ஏழைகளுக்கு ப்ரீ லீகல் எய்ட் கொடுக்க வேண்டியது அத்தியாவசியமாகும். நாம் எடுத்துக் கூறக் கூடிய ஒரு வாய்ப்பு மட்டுமல்ல.

It strengthens the argument of the Law Minister who has stated " I never claim, possibly cannot claim, that the present amendment is the be all and end all ஆகவே, எல்லோரும் சொல்லி யிருக்கக்கூடிய ஒன்று it has become a fait accompli- நமக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை Opinion of the State could have been obtained என்று கூறுகிற அளவில் அந்தத் திருத்தத்தைப் பாஸ் செய்த பிறகு அது இங்கு வந்திருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியதைப் போல் நமது மாநிலத்தின் ஒப்பினியனைக் கேட்டிருக்கலாம். " இப்படி பில் வருகிறது, உங்கள் சட்டசபையில் வைத்து உங்கள் சட்டசபை உறுப்பினர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டுச் சொல்லுங்கள் " என்று முதலில் கேட்டிருக்கலாம் தமிழ் நாடு அரசிடம். அப்படிக் கேட்காவிட்டாலும்கூட, இன்றும் ஒன்றும் மூழ்கிவிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : கான்ஸ்டிட்யூஷனல் ப்ரொவிஷன் அப்படி. பார்லிமெண்டில் பாஸ் செய்த பிறகுதான் நமக்கு வரும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போதும் ஒன்றும் மூழ்கிவிட வில்லை. நமக்கு நம் கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்பிருக்கிறது. It shall come into force on such date as the Central Government may by notification appoint in the Official Gazette. என்றிருக் கிறது. அதற்குச் சமயம் இருக்கிறது. நமது சட்டசபையில்

உள்ள உறுப்பினர்களின் அபிப்பிராயங்கள் இவ்வாறு இருக்கின்றன என்று கூறவேண்டும். சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் ஒன்றை இங்கு ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். அப்படியில்லாவிட்டாலும் "ப்ரீ லீகல் எய்ட்" கொடுக்க வேண்டியது அத்தியாவசியம். அதை வற்புறுத்தி எடுத்துக்கூற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. KANDASAMY: Mr. Deputy Speaker, Sir I as a member belonging to a party which believes essentially in socialism, I am bound to support, not only support but I express my gratitude and congratulations to those who were responsibile to introduce the Bill and pass it in both the Houses of Parliament.

Here, Sir, it is a measure, very boldly brought forward, to establish socialism that has been brought forward by Thirumathi Indra Gandhi and now it has been brought before this House to be discussed and accepted by way of ratification. As hon. Members have already stated, it is definitely a measure which eradicates the distinction and discrimination shown based on economic status. Formerly, properties pertaining to disputes the value of which was above Rs. 20,000, when brought before High Court and if certified to by the High Court concerned alone will be sent to the Supreme Court. That meant only those who were well-off or the properties which were the subject-matter of a dispute in a particular court were of a particular value alone can be taken to the Supreme Court, for further redressal of the grievances seeking natural justice.

But according to the present amendment, it seeks to delete sub-clauses (a) and (b) under Clause 1 of Article 133 of the Constitution of India, which gives equal opportunity to each and every member of the Indian Nation, to go on appeal to the Supreme Court, seeking redressal of grievances in their case. Therefore, it is definitely a bold venture of the Central Government and that is being discussed in this House. Still, I feel it is a belated action of the Centre. During the time of Shri Jawaharlal Nehru he repeatedly declared and pronounced in all platforms and wrote in all papers that the Government of India was wedded to socialism and it will take all possible steps to establish equality before law removing economic disparities in India. It remained more or less a pronouncement



alone and it was not translated in to action. Now it is done under the leadership of Srimathi Indra Gandhi, though belated. It is not sufficient to stop with this. This is only one of the bold measures to eradicate inequalities. Still, there are fundamental and essential changes which have to be brought forward to give real protection to the helpless and downtrodden people.

Now, coming to this amendment, I appreciate those who were responsible for the introduction of this measure.

Coming to the views expressed by Dr. Hande, I am very glad to note that powerful as the influence of this House is and tremendous as the influence of this House is, it has been capable of changing the views of Dr. Hande. For, it was only some months ago that he opposed very vehemently the Bill which sought to nationalise the Bus Transport in our State and which was introduced by Dr. Kalaignar Karunanidhi.

But to-day I am glad and I appreciate his spirit of socialism. He has also openly told the Honourable House that though the Amendment gives equal opportunities to the poor and the rich, the poor cannot afford to engage legal practitioners to argue their case effectively in the Supreme Court and therefore he wanted that the lawyer community must extend their help free of cost, that is free service. I do not know how many lawyers extend free service, but on my part I extend all possible help to the poor clients.

But I want to know from Dr. Hande whether he extends free 11-00 மு.ப.
medical aid to the poor sickly patients. Leaving that apart, I welcome his sense of expression of sympathy to the poor and his request to the lawyers to extend free help to them. So, taking the view of the Members, the Government may set up an ad hoc body or a panel of lawyers to help the poor clients in civil cases taken up in the Supreme Court also.

Then, the hon. Member, Dr. Hande told the Honourable House the other day that he was not only the President of the Tamil Nadu Swatantra Party but also the Secretary of the All India Swatantra Party and I want to know whether he will use his good offices to persuade the Swatantra Party of Tamil Nadu to pass a unanimous resolution in favour of the Socialist policy of the present Government. If he does so, I on my behalf and on

behalf of the Forward Block, would appreciate and welcome hi venture.

Then he made the observation that the Bill having been passe in both the Houses of the Parliament, it was sent for ratificatio in this House by way of courtesy and not to give effect to th views expressed in this House. I do feel and I do hope that befor a Bill is introduced in both the Houses of Parliament, it would b much better and useful to the Parliament also if it is brought for ward in the first instance in all the Legislative Assemblies so tha the view of the Members and Ministers of the respective Legis lature could be ascertained.

Then, as regards the suggestion of Thiru Durai Murugan that there should be a Bench of the Supreme Court either in Madras or in Bangalore or in any part of the Southern States, I do feel that this suggestion should be sent to the Central Government for consideration. This will help the poor persons who may not afford to go to Delhi and spend money to engage lawyers in the Supreme Court, to attend the court and also engage the lawyers here. Not only the poor litigants but also the lawyers will appreciate if a Bench of the Supreme Court sits in any part of the Southern States.

With these observations, I congratulate the Hon. Minister who has brought forward this Resolution and the Forward Block whole-heartedly supports it. Thank you, Sir.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டு, இந்தச் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்புச் (30-வது திருத்த) சட்டத்தின் வரைவுக்கு ஆதரவு தெரிவித்து இப்பேரவையின் உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களைச் சீரிய முறையில் வழங்கியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட வரவேற்று இருப்பது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். "Opposition parties used to oppose" எதிர்க்கட்சி என்று இருப்பது எதிர்ப்பதற்காக என்று இல்லாமல் எதையெதை ஆதரிக்க வேண்டுமோ அதை அதை ஆதரிப்போம் என்ற முறையில் ஆதரவு தெரிவிக்கும் வகையில் எதிர்க் கட்சியைச் சார்ந்த



உறுப்பினர்களும் இந்தத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கருத்துக்களை வழங்கியிருப்பது மிக, மிகப் பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

பாராளுமன்றத்தில் இந்தத் திருத்தச் சட்டமானது வந்தபோது எல்லாக் கட்சியினரும் தங்களுடைய பேராதரவினை பாராளு மன்றத்தில் வழங்கியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் உட்கருத்தை மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் மிகத் தெளிவான வகையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ரூ. 20,000-க்கு மேற்பட்ட மதிப் புள்ள வழக்குகள் தான் தலைமை நீதிமன்றத்திற்குச் செல்லலாம் என்று இருந்தது. ரூ. 20,000-க்கு உட்பட்ட வழக்குகள் உயர் நீதி மன்றத்தோடு நின்று விடவேண்டுமென்று இருந்தது. ஏற்கனவே இருந்த முறைகளுக்கும் 1969-ஆம் ஆண்டில் ஒரு முடிவு செய்தார்கள். அதாவது, 1950-ஆம் ஆண்டில் அரசியல் அமைப்புச் சட்டம் நிறை வேற்றப்படும் சமயத்தில் ரூ. 20,000 என்று உச்சவரம்பு கட்டப் பட்டது. 20 ஆண்டுகள் ஆன பிறகு எங்கும் விலைவாசி ஏறிவிட்டதன் காரணமாக அதை மாற்றி ரூ. 1 லட்சத்திற்கு உயர்த்த வகை செய்யும் சட்டவரைவு ஒன்றை 1969-ஆம் ஆண்டில் முகவுரைத்தார்கள். அது ராஜ்ய சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் திருத்தம் நிறை வேறுவதற்கு முன்னால் லோக் சபை கலைக்கப்பட்டு விட்டது. ஆகவே, சட்ட வரைவும் காலங்கழிந்ததாகிவிட்டது.

பிறகு அதை சட்ட நிபுணர் குழு ஒன்று ஆராய்ந்தது. பொருள் களின் அடிப்படையை வைத்து தலைமை நீதிமன்றத்திற்குச் செல்ல லாம் என்பது பொருந்தாது. சமதர்மக் கொள்கைக்கு பொருந்தி வராது என்ற கருத்தின் அடிப்படையில், இந்தக் கருத்தை ஆராய தனிக் குழு அமைக்கப்பட்டது. முன்னாள் தலைமை உயர் நீதிபதி கஜேந்திரகட்கர் அவர்கள் தலைமையின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட சட்ட ஆணைக்குழுவிற்கு இது அனுப்பப்பட்டது. அவர்கள் ஆராய்ந்து என்ன சொன்னார்கள் என்றால், ரூபாயின் மதிப்பீட்டை வைத்து தலைமை நீதிமன்றம் செல்லலாம், 1 லட்ச ரூபாய்க்கு மேல் வரும் வழக்குகள்தான் தலைமை நீதிமன்றத்திற்குச் செல்லலாம் என்று சொல்வது பொருந்தி வராது, ஒரு வழக்கில் பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்னை பெரிது அடங்கியுள்ளது என்றும், உயர்நீதி மன்றத்தின் கருத்துப்படி அப்பிரச்னை தலைமை உயர்நீதி மன்றத்தினால் முடிவு செய்யப்பட வேண்டுமென்றும் உயர்நீதி மன்றம் சான்றளிக்கும் வழக்குகளில் மட்டுமே மேல் முறையீடு செய்து கொள்ளும் உரிமை

அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், புதிய சட்ட ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

உயர்நீதி மன்றம் முடிவு செய்யும் ஒவ்வொரு வழக்கிலும் தலைமை உயர்நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு இருக்கக்கூடாது, எத்தகைய வழக்குகளில் மேல் முறையீடு செய்து கொள்ளப்படலாம் என்பதை வரையறுக்க ஓர் எல்லைக்கோடு வகுக்கப்பட வேண்டும்; ஆனால் மேல் முறையீட்டில் அடங்கியுள்ள பிரச்சினைகளைக் கவனிக்காமல் சொத்து மதிப்பின் அடிப்படையிலேயே இந்த எல்லைக் கோட்டை வகுப்பதென்பது இயல்புக்கு ஏலாத ஒன்றாகும். ஒரு வழக்கில் பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்சினை பெருமளவில் அடங்கியுள்ளது என்றால், அவ்வழக்கில் சொத்து மதிப்பு எவ்வளவு இருப்பினும் அதைக் கருத்திற்கொள்ளாமல், அவ்வழக்கு குறித்து தலைமை உயர்நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம் என்று உயர்நீதி மன்றம் சான்றளிக்கலாம். இந்தக் கருத்தை ஒட்டித்தான் இந்த 30-வது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்படிச் சொல்லப்பட்டதால் எல்லா வழக்குகளுமே தலைமை உயர்நீதி மன்றத்திற்குச் சென்றுவிட முடியுமா? 5,000 ரூபாய், 10,000 ரூபாய், 10 லட்ச ரூபாய், 20 லட்ச ரூபாய் வழக்குகள்—போய்விட முடியும் என்று சொல்ல முடியாது. இப்போது என்ன சொல்கிறார்கள் என்றால் ...

'An appeal shall lie to the Supreme Court from any judgment, decree or final order in a civil proceeding of the High Court in the territory of India if the High Court certifies—

(a) that the case involves a substantial question of law of general importance; and

(b) that in the opinion of the High Court the said question needs to be decided by the Supreme Court. என்று சொல்லியிருக்கிறார்கள்.

எந்த வழக்குகள் செல்லலாம் என்று சொன்னால் உயர்நீதி மன்றம் அனுமதி அளிக்கின்ற வழக்குகள் மட்டும் தான் செல்லலாம். அது ரூ: 5,000 வழக்காக இருந்தாலும் சரி, 5 லட்ச ரூபாய் வழக்காக இருந்தாலும் சரி, 5 கோடி ரூபாய் வழக்காக இருந்தாலும் சரி, அது எப்படி இருக்க வேண்டும் என்றால், அதிலே பொதுத்தன்மை வாய்ந்த சட்டப் பிரச்சினை இருக்கிறது, அந்த சட்டப் பிரச்சினையின் பேரில் தலைமை நீதி மன்றம் தான் தீர்ப்பு அளிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று உயர் நீதிமன்றம் சான்றிதழ் அளிக்க வேண்டும்.



அப்படிப்பட்ட வழக்குகளைத் தான் அனுப்பி வைக்கலாம். அல்லது தலைமை நீதி மன்றம் இதைப்பற்றி தீர்ப்பு அளிப்பது தான் முறையாக இருக்கும், பொருத்தமாக இருக்கும் என்று உயர்நீதி மன்றம் கருதுகின்ற அப்படிப்பட்ட வழக்குகள்தான் தலைமை நீதி மன்றத்திற்கு அனுப்பப்படலாம். சில வழக்குகள் 5 லட்சம் ரூபாய் வழக்குகளாகக் கூட இருக்கலாம். உயர்நீதி மன்றம் அதைத் தலைமை நீதி மன்றத்திற்கு அனுப்பத் தேவையில்லை, சட்டப் பிரச்சினை இதில் இல்லை என்று கருதுமேயானால், அப்படிப்பட்ட 5 லட்ச ரூபாய் வழக்குகள் கூட உயர்நீதி மன்றத்தோடு நிறுத்தப்பட்டு விடும்.

ஆகவே, உயர்நீதி மன்றம் சான்றிதழ் தருகின்ற அப்படிப்பட்ட வழக்குகள்தான் தலைமை நீதிமன்றத்திற்குச் செல்ல முடியும். மற்ற வழக்குகள் தலைமை நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாது என்ற பொதுப்படையான நீதியினுடைய அடிப்படையில்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது பாராளுமன்ற இரு அவைகளிலும் பெரும்பான்மையான ஆதரவோடு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த வகையிலேதான் இதற்கு இங்கே எல்லோரும் இந்தத் திருத்தச் சட்டத்திற்கு முழு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

எல்லாவித ஏழைகளும் வழக்காடப் போகிறார்கள் என்ற நிலை இதன் மூலம் ஏற்பட்டு விடாது. ஏழைகளாக இருப்பவர்கள் உயர் நீதிமன்றத்தில் தங்களால் வழக்குகளை எடுத்து நடத்த முடியவில்லை என்று விண்ணப்பித்தால், அவர்களுக்கு உயர்நீதி மன்றம் வழக்கறிஞர்கள் ஏற்படுத்தித் தந்து, அவர்கள் கிரிமினல், சிவில் வழக்குகளை நடத்துவதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. சுப்ரீம் கோர்ட்டைப் பொறுத்த வரையில், கிரிமினல் வழக்குகளாக இருந்தால், தாங்கள் மிக ஏழை, தங்களுடைய கொலை வழக்குகள், மற்ற வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டில் வந்துவிட்டால் தங்களால் வாதாட முடியாது என்று கேட்டுக்கொண்டார்களேயானால், அப்படிப்பட்ட ஏழைகளுக்கு வழக்கறிஞர்களை வைத்துக் கொடுக்க இப்பொழுதும் சுப்ரீம் கோர்ட்டில் கிரிமினல் வழக்குகளைப் பொறுத்த வரையில் வாய்ப்பு இருக்கிறது. சிவில் வழக்குகளைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. அப்படிப்பட்ட வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு தலைமை நீதி மன்றத்தினிடம்தான் இருக்கிறது. அங்கே செல்லத் தக்க அளவுக்கு கீழ்க் கோர்ட்டுகளைத் தாண்டி, உயர்நீதி மன்றத்தையும் தாண்டி, தலைமை நீதிமன்றத்திற்குச் செல்கின்ற அத்தகைய வாய்ப்பு வசதிகள் அல்லது பிடிவாதமாக

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 டிசம்பர் 13

மற்றவர்கள் கொண்டு செல்கின்ற நிலை குறைவாக இருக்கிற காரணத்தினால், சிவில் வழக்குகளைப் பொறுத்த வரையில் தலைமை நீதி மன்றத்தில் அப்படிப்பட்ட வாய்ப்பு, வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்று கருதுகிறேன்.

எப்படியானாலும் இந்தச் சட்டமன்றத்தில் நாம் அதைப்பற்றி கருத்து தெரிவித்து, அதை ஏற்றுக்கொள்கிற நிலைமை ஏற்படவில்லை. 30-வது அரசியல் திருத்த சட்டத்தை ஆதரிக்கிறோமா, இல்லையா என்பதுதான் சட்டமன்றத்தில் இன்றைக்கு இருக்கிற கேள்வியாக அமைந்திருக்கிறது. தலைமை நீதிமன்றம் தான் இறுதியாக இதைப் பற்றி ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது.

மற்றொன்றும் இங்கே எடுத்துக் கூறப்பட்டது. இப்படிப்பட்ட சட்டங்கள் அங்கிருந்து இங்கே வருவதைவிட இந்தச் சட்டமன்றமும், மற்ற சட்டமன்றங்களும் தங்கள், தங்கள் கருத்துக்களை தெரிவித்த பிறகு பாராளுமன்றத்தில் இதை நிறைவேற்றுவது முறையாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தின் 368-வது விதியின் கீழ் இந்தத் திருத்த சட்டம் அங்கே பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்டு, இந்தச் சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த விதியின் கீழ்

"Provided that if such amendment seeks to ma!ke any change in—

(a) article 54, article 55, article 73, article 162 or article 241, or

(b) Chapter IV of Part V, Chapter V of Part VI, or Chapter I of Part XI, or

(c) any of the Lists in the Seventh Schedule, or

(d) the representation of States in Parliament, or

(e) the provisions of this article,

the amendment shall also require to be ratified by the Legislatures of not less than one-half of the States by resolutions to that effect passed by those Legislatures before the Bill making provision for such amendment is presented to the President for assent."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு விதி இருக்கிற காரணத்தினால், அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி மாநில சட்ட மன்றங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். மொத்தம்



1972 டிசம்பர் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இருக்கிற மாநில சட்டமன்றங்களில் பாதி சட்டமன்றங்களுக்கு மேல்
இதற்கு ஆதரவு தந்தால்தான் இந்தத் திருத்த சட்டத்தைப் பாராளு
மன்றம் நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். பாதிக்கு மேல்
உள்ள சட்டமன்றங்கள் இதற்கு ஆதரவு இல்லை என்று தீர்மானித்தால்
இந்தத் திருத்தச் சட்டத்தை பாராளுமன்றம் நடைமுறைக்குக்
கொண்டு வர முடியாது. மறுபடியும் அப்படி ஒரு சட்டத்தைக்
கொண்டு வர வேண்டும். ஆனால், டாக்டர் ஹாண்டே அவர்கள்
கூறிய கருத்து வரவேற்கத்தக்க ஒன்றாகத்தான் இருக்கிறது. இம்மாதிரி
திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அரசியல் நிர்ணய சட்டத்தை
மாற்ற வேண்டுமானால் அந்தப் பொறுப்பு இப்பொழுது பாராளு
மன்றத்திற்குத்தான் இருக்கிறது. அப்படி ஒரு திருத்தச் சட்டத்தைக்
கொண்டு வந்து, ஷரத்துக்களை நிறைவேற்றியதற்குப் பிறகு, அதை
ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்று தீர்மானிக்கின்ற வாய்ப்புதான்
இப்பொழுது சட்டமன்றங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்
டில் ஒன்று, இதை ஏற்றுக்கொள்ளுகிறோமா, இல்லையா என்று
சொல்லக்கூடிய வாய்ப்பு தான் இப்பொழுது இந்தச் சட்டமன்றத்
திற்குத் தரப்பட்டிருக்கிறது. அதற்குத் தான் இங்கே உறுப்பினர்கள்
எடுத்துச். சொன்ன கருத்துக்களும், விளக்கங்களும் பயன்படுமே
தவிர, இந்தத் திருத்தச் சட்டத்தை இந்த மன்றம் ஏற்றுக்கொள்
கிறதா, இல்லையா என்று தெரிவிக்கின்ற வாய்ப்பு தான் இப்பொழுது
நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்களும், மற்றவர்களும் எடுத்துச்
சொன்னது போல், முதலில் பாராளுமன்றம் சட்டத்தை இயற்றி,
பாதி சட்டமன்றங்களுக்கு மேல் அதை ஏற்றுக்கொள்கிறதா,
இல்லையா என்று கருத்தறிய அனுப்பப்படுவதற்குப் பதிலாக, சட்ட
மன்றங்களின் கருத்துக்களை முதலில் பெற்று, அதற்குப் பிறகு
சட்டத்தை உருவாக்குகின்ற பொறுப்பை பாராளுமன்றம் ஏற்றுக்
கொள்ளலாம் என்ற கருத்து வரவேற்கத் தக்க ஒன்றாகும். மாநில
சட்டமன்றங்கள் அப்படிப்பட்ட திருத்த சட்டங்களில் தங்களுடைய
கருத்துக்களை முதலில் அளித்த பிறகு பாராளுமன்றம் முடிவெடுக்கக்
கூடிய நிலைமையை ஏற்படுத்துவது வரவேற்கக்கூடியது என்றாலும்,
அந்தக் கருத்தை பாராளுமன்றம்தான் நடைமுறைக்குக் கொண்டு வர
வேண்டும். மத்திய அரசு அந்தக் கருத்தை ஏற்று, அதற்கான
அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில்
கொண்டு வரவேண்டும். பார்லிமெண்டில் இருக்கின்ற உறுப்பினர்
கள் அரசியல் அமைப்புச் சட்டத்தை இந்த வகையில் திருத்துவதற்கு

திருத்தச் சட்டம் ஒன்று கொண்டு வருவதற்கு அங்கே போய் வழி வகைகள் செய்ய வேண்டும். அதுவும் இந்தச் சட்டமன்ற அதிகார வரம்பிற்குள் இதைத் திருத்துவதற்கு அல்லது தீர்மானம் கொடுப்பதற்கு வழிவகை ஏற்படவில்லை. இந்தக் கருத்து வரவேற்கத்தக்க கருத்து. பார்லிமெண்டில் இருக்கிற எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் அங்கே கொண்டு போய் இதற்கான வழி வகைகளைச் செய்வதற்கு, முயற்சிகளில் ஈடுபடுவதற்கு, இங்கே எடுத்து சொல்லப்பட்ட கருத்துக்கள் பயன்படும். இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது இந்தத் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளலாமா, இல்லையா என்பது தான் கேள்வி.

இந்த 30-வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்திற்கு எல்லோரும் ஏகமனதாக ஆதரவு தந்து, இந்த சட்டமன்றம் இதற்கு ஆதரவாக இருக்கிறது என்ற கருத்து ஒரு முற்போக்கான கருத்து. அந்தக் கருத்து வரவேற்க வேண்டிய கருத்து. அதன் மூலம் இந்த மாமன்றம் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி வைப்பது மிக பொருத்தமானது. இதன் மூலம் முற்போக்கான இப்படிப்பட்ட கருத்தை நாம் வரவேற்கிறோம் என்று இந்தியாவுக்கே எடுத்துக் காட்டுகிறோம். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவைத் தெரிவித்த எல்லா உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இதை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1972-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (30-வது திருத்த) சட்ட முன் வடிவினுல் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசை வுடன் உறுதிப்படுத்துகிறது."

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.





## (6) தகவல் கோரல்—உயர் நீதிமன்றத்தின் நோட்டீஸ்படி பேரவைத் துணைத்தலைவர் அங்கு சென்று தம் கருத்துக்களைத் தெரிவிப்பது குறித்து.

DR. H. V. HANDE : Sir, Article 212, sub-clause (2) says as follows :—

"No Officer or member of the Legislature of a State in whom powers are vested by or under the Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers."

Under that sub-clause (2) the Hon. Deputy Speaker, who has been called to appear before the High Court, has declined to appear before that Court. At the same time I would like to invite your attention to sub-clause (1) of Article 212. It says :—

"(1) The validity of any proceedings in a Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure."

But the proceeding of this House has been called in question in that Court. The High Court has also admitted the writ with regard to proceedings of this House. Once the High Court has admitted the writ petition, will it not be advisable for you, Sir, to go before the Court, appear before them and withstand or be prepared to give your comments? I am only seeking your clarification.

THIRU M. A. LATHEEF : A very substantial question of law . . .

MR. DEPUTY SPEAKER : I would like to invite your attention to Article 211 which says :—

'No discussion shall take place in the Legislature of a State with respect to the conduct of any judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties.'

THIRU M. A. LATHEEF : Regarding myself I am well aware of Article 211. I do submit that Dr. Hande has raised a substantial question of law. Particularly this question has been raised and you have given your observation about the jurisdiction of the Court in summoning the Presiding Officer of the House to appear

[Thiru M. A. Latheef] [1972 டிசம்பர் 13

before the Court or submit himself to some judicial proceedings before the Court.

With regard to the implications of clause 1 and clause 2 of Article 212, I differ from the expression of opinion of Dr. Hande. Of course, Dr. Hande has not given a definite opinion, but he has raised certain doubts and it is my duty as a member of this House to bring to the notice of the Chair and members of this House the position as I understand it.

Now, clause 1 of Art. 212 clearly states that the validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure. Clause 2 of the Article says that no officer or member of the Legislature of a State in whom powers are vested by or under the Constitution for regulating procedure or the conduct of business or for maintaining order in the Legislature, shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers.

With regard to the incidents or happenings, though the proceedings were duly conducted by you, Sir, after the legal removal of the then Speaker on the 2nd of this month . . .

MR. DEPUTY SPEAKER: Mr. Latheef, be brief.

THIRU M. A. LATHEEF: I am not going into the discussion. Now the point at issue is this . . .

MR. DEPUTY SPEAKER: I am afraid I am too liberal and so many precedents are created in this House. This morning I have announced my decision that I am not going to the Court. The High Court itself had been very careful in sending the summons to the Secretary to be placed before me. The intention of the High Court is to ask the Hon. Deputy Speaker to give an affidavit or appear through his lawyer. I have clearly stated my position and there is a precedent. Dr. Krishna Rao when he was the Presiding Officer here, refused to appear before the Court and refused to oblige the orders of the Court. It is clearly stated in Art. 212 of the Constitution that the proceedings of this House shall not be called in question in the High Court. What Dr. Hande raised was whether it was proper with reference to clause 1 it should be raised.



1972 டிசம்பர் 13]

DR. H. V. HANDE: What I said was this. Even though there was clause (1) of Article 212, in spite of that, the Court has admitted the petition of Mr. Mathialagan. Therefore. . .

MR. DEPUTY SPEAKER: No, no. It is a very delicate matter. If you proceed, it will create a discussion and there will be opinions and counter-opinions. And there is Article 211 and that will create a more delicate situation. Therefore, I would like Hon. Members not to proceed further and close this matter with these observations.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவடைகின்றன, பேரவை நாளைக் காலை 9 மணியளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 11-24-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## (7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders*

*'Nil.'*

### *B. Reports, Notification and Other Papers.*

30. Notification issued with G.O. Ms. No. 2823, Revenue, dated the 28th October 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the bonds to be issued in connection with the floating of an open market loan by the Madras Port Trust.

@ 31. The Tamil Nadu Betting Tax (Second Amendment) Bill, 1972 (L.A. Bill No. 50 of 1972).

@ 32. Annexure to the Mettur Township, Courtallam Township and Bhavanisagar Township (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 49 of 1972).

@Despatched to Members on 11th December 1972.

[1972 டிசம்பர் 13

115

## இணைப்பு—1.

[11-ம் பக்கத்தில் 143-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித்துறை.

அரசு ஆணை எண் : 1805. நாள் : 3—8—1971.

## சுருக்கம்.

சமுதாய வளர்ச்சித் திட்டம்—தமிழ்நாடு—வளர்ச்சி வட்டார நிலையில் நிர்வாகத் துறையினை சீரமைத்தல்—வளர்ச்சி வட்டாரத்திலுள்ள பல்வேறு பணித் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு ஆட்சி எல்லை, செயல்முறை அதிகார வரம்பை ஏற்படுத்தல்—ஆணைகள்—பிறப்பிக்கப்பட்டன.

1953ஆம் ஆண்டில் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டதும், திட்ட வளர்ச்சிப் பிரிவாக வளர்ச்சி வட்டாரம் ஏற்படுத்தப்பட்டது. வளர்ச்சிப் பணியாளர்கள் குழுவினருக்கு திட்டமிடும் அதிகாரியாகவும், ஒருங்கிணைக்கும் அதிகாரியாகவும் வட்டார வளர்ச்சி அதிகாரியைக் கொண்டு ஒரு வளர்ச்சித் துறை நிறுவனமாக தற்போதுள்ள வட்டார வளர்ச்சித்துறை அச்சமயத்தில் உருவாக்கப்பட்டது. பல்வேறு துறைச் செயல்களை ஒருங்கிணைக்கும் அதிகாரியான வட்டார வளர்ச்சி அதிகாரி, வளர்ச்சிப் பணியாளர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் திட்டங்களைப் பெற்று, அத்திட்டங்களை ஒருங்கிணைத்து, தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரியும் ஊர் நல ஊழியர்கள் மூலம் அத்திட்டங்களைச் செயல்படுத்துவார். வளர்ச்சி வட்டாரம் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களை ஏற்படுத்துதல், அதிகார நிறுவனங்களிடமிருந்து அதிகாரங்களைப் பிரித்து மக்களின் நேரடிப் பிரதிநிதிகள் மன்றத்துக்கு அளித்தல் போன்ற முக்கிய பல மாறுதல்கள் வட்டார வளர்ச்சியின் நிறுவன அமைப்பிலும், நிர்வாகத்துறையிலும் கொண்டுவரப்பட்டன. இதன் அடிப்படையில், ஒன்றியத் தொடக்கக் கல்விக்கு நிதிவசதி ஏற்படுத்துதல், சாலைகள், ஏரிகள் முதலியவற்றைப் பேணுதல் போன்ற பல கூடுதல் ஒழுங்குமுறைகள், சட்டவரம்பான செயல்கள் ஆகிய அதிகாரங்கள் பிரித்தளிக்கப்பட்டன. தொடக்கத்தில் மேற்கூறிய பணிகளைக் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. இத்துடன், மாநிலக் கடன் வசூல்கள், சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு,



1972 டிசம்பர் 13]

கொள்முதல் முதலிய பல தனிப்பட்ட திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்டன. இத்தகைய காரியங்கள் அனைத்தினாலும் வளர்ச்சி வட்டாரத்தின் முதல் அமைப்பு, தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தினால் கொண்டுவரப்பட்ட பல்வேறு பணிகளின் நடைமுறைகள் ஆகியவற்றில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

2. தற்போதைய வளர்ச்சி வட்டாரத்தின் நிர்வாக அமைப்பில் வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு அனைத்துத் திட்டங்களின் முழுப் பொறுப்பும், அதிக அளவில் அலுவலக பணி தொல்லையும் உள்ளது. எனவே, வட்டார வளர்ச்சி அதிகாரி தன்னுடைய செயல்களையும் கடமைகளையும் திறம்பட நிறைவேற்ற வேண்டுமெனில், தற்போதுள்ள வளர்ச்சி வட்டார நிர்வாக அமைப்பிலுள்ள வளர்ச்சிப் பணி அதிகாரிகளிடையே அவர்கள் செயல்கள், கடமைகள் ஆகியவற்றை பிரித்தளிக்க வேண்டியது அவசியமாகும். வளர்ச்சிப்பணி அமைப்பு என்ற முறையில் வளர்ச்சி வட்டாரத்தின் மூலக் கோட்பாடு மாறிவிட்டது. பல்வேறு வளர்ச்சித் துறைகளில் வளர்ச்சித் திட்டங்களை வேகமாகவும், திறம்படவும் செயல்படுத்தும் பொறுப்புடன் வளர்ச்சி வட்டாரத்தின் புதிய நடைமுறையில், ஊராட்சி ஒன்றியம் சில சட்டவரம்பான ஒழுங்குமுறைச் செயல்களையும் புரிய வேண்டியுள்ளது. வட்டார வளர்ச்சி அதிகாரியின் பணிச்சுமை அதிகரித்திருப்பதும், மாறுபட்ட சூழ்நிலைகளும், வளர்ச்சி வட்டாரத்தின் நிர்வாக அமைப்புகளைச் சீரமைப்பதை அவசியமாக்கியுள்ளன.

3. வளர்ச்சி வட்டாரத்தின் தற்போதைய நிர்வாக அமைப்பில் ஊர் நல உதவியாளர்கள் நூற்றுக்கு நூறு வேளாண்மைத் துறைப் பணியாளர்களாக இருக்கவேண்டும். ஆனால், நடைமுறையில் குடும்பக் கட்டுப்பாடு, வசூல், கொள்முதல் முதலியவற்றுக்கான சிறப்பு இயக்கங்கள் போன்ற காரியங்களுக்காக அவர்களது வேலை நேரத்தில் பெரும்பகுதி செலவழிக்கப்படுகிறது. இதனால் வேளாண்மைத் துறைத் திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு முதலியன உள்ளிட்ட வேளாண்மைத் துறைக்குத் தொடர்பான பணிகளில் மட்டுமே ஊர் நலப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றிருந்தும், அவர்களை வேளாண்மைக்குத் தொடர்பில்லாத பிற கடமைகள், பொறுப்புகளிலிருந்து விடுவிக்க எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்று புது டில்லியில் 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் நாள் நடைபெற்ற சமுதாய வளர்ச்சி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கூறப்பட்டது. ஊர் நலப் பணியாளர்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் தங்கள் நேரத்தை வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கு செலவிட வேண்டும் அல்லது

[1972 டிசம்பர் 13

ஊர் நலப் பணியாளர்களில் 75–80 சதவீதப் பணியாளர்களை வேளாண்மைக் காரியங்களுக்கு மட்டுமே ஈடுபட செய்யவேண்டும். மற்ற பணியாளர்கள் வேளாண்மை அல்லாத பிற பணிகளில் தொடர்ந்து ஈடுபடலாம் என்று இந்திய வேளாண்மைத் துறையை நவீனப்படுத்துவதற்கான நிபுணர் குழு பரிவுரை செய்திருப்பதாகவும் சமுதாய வளர்ச்சி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் குறிப்பிடப் பட்டது. எனவே உற்பத்தித் துறைச் செயல்களுக்கு மட்டும் ஈடுபட தனியாக ஊர் நல உதவியாளர்களை நியமிக்க வேண்டிய அவசிய மேற்பட்டுள்ளது.

4. மேற்குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளையொட்டி, வளர்ச்சி வட்டாரத்தில் நிர்வாக அமைப்பை சீரமைப்பதற்கும் உற்பத்தித் துறை செயல்களில் மட்டும் ஈடுபட தனியாக ஊர் நல உதவியாளர் களை நியமிப்பது குறித்தும் சென்னை கிராம வளர்ச்சித் துறை இயக்குநருடன் கலந்து இதுபற்றிய குறிப்பை அரசு கவனமாக பரிசீலித்தது. அதன்படி வளர்ச்சி வட்டார நிர்வாக அமைப்பைச் சீரமைக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகப் பணியாளர்கள் பிரிவை நான்கு கிளைகளாக அதாவது (1) பொதுப் பிரிவு, (2) உற்பத்திப் பிரிவு, (3) கல்விப் பிரிவு, (4) பணிப் பிரிவு என பிரிக்க வேண்டும் என்றும் வளர்ச்சி வட்டாரத்தின் பல்வேறு பணித்தரத்தைச் சேர்ந்த அதிகாரிகளின் ஆட்சிப் பகுதி செயல் அதிகார வரம்பு இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு இருக்க வேண்டும் என்று கட்டளையிடப் பட்டுள்ளது. மேலும் இவ்வாணையின் இணைப்பில் "II. பல்வேறு பிரிவுகளுக்கு வளர்ச்சிப்பணி அதிகாரிகளை நியமித்தல்—அவர்களின் கடமைகள், பொறுப்புகள்—6. உற்பத்தி பிரிவு, பொதுப் பிரிவுகளில் ஊர் நல உதவியாளர்களை பிரித்து நியமித்தல்" என்னும் இனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உற்பத்திப் பிரிவு பொதுப் பிரிவு ஆகியவற்றில் வளர்ச்சி வட்டாரத்தில் தற்போது பணிபுரியும் ஊர் நல உதவியாளர்களை நியமிக்கவேண்டும் என்றும் கட்டளையிடப் பட்டது.

5. மேற்சொன்ன திட்டத்தைச் செயல்படுத்த விரைவில் பொருத்த மான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இதற்கிடையில் மாநிலத் தில் அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் நிர்வாக அமைப்பை சீரமைத்து முடித்தல் குறித்து அரசுக்கு அறிக்கை ஒன்று அனுப்பு மாறும் கேட்கப்பட்டுள்ளது.



1972 டிசம்பர் 13]

6. இவ்வாணை கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் சான்று அனுப்ப வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. திரவியம்,
அரசுச் செயலாளர்
(பொறுப்பு).

(தமிழாக்கம்)

இயக்குநர்,
பொதுத் (மொழிபெயர்ப்பு)
துறை.

பிற்சேர்க்கை

**வட்டார அலுவலகத்தில் நிர்வாக அமைப்பும் அலுவல் அமைப்பும்.**

**I. வட்டார அலுவலகத்தில் பல்வேறு பிரிவுகள்.**

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாளரமைப்பு பொதுப் பிரிவு, உற்பத்திப் பிரிவு, கல்விப் பிரிவு, பணிகள் பிரிவு என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். (1) பொதுப் பிரிவு ஊராட்சி ஒன்றியப் பொறுப்பதிகாரியின் பொறுப்பில் இருக்கும். (2) உற்பத்தி பிரிவு ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரியின் பொறுப்பில் இருக்கும். (வேளாண்மை) வளர்ச்சி அதிகாரி ஒருவருக்கு மேற்பட்டு பலர் இருப்பின், (வேளாண்மை) வளர்ச்சி முதுநிலை அதிகாரி அல்லது வேளாண்மை மாவட்ட அதிகாரியால் நியமனம் செய்யப் பட்ட ஒருவர் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரியாக இருப்பார். (3) கல்விப் பிரிவிற்கு (கல்வி) வளர்ச்சி அதிகாரி பொறுப்பு வகிப்பார். இவர் ஒன்றிய கல்வி அதிகாரியாகப் பெயர் மாற்றம் செய்யப்படுவார், (4) பணிகள் பிரிவிற்கு ஒன்றியப் பொறி யாளர் பொறுப்பு வகிப்பார்.

**1. உற்பத்திப் பிரிவு.**

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீனளம், கூட்டுறவு ஆகிய வற்றின் உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்திற்கும் இப்பிரிவு பொறுப்பு வகிக்கும். வெவ்வேறு துறைகள் கொடுக்கும் பல்வேறு திட்டங் களுடன், அரசு, வேளாண்மை மானியத்திலிருந்து ஊராட்சி ஒன்றி யங்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியத் தொகையைக் கொண்டு வேளாண்மை தொடர்பான உரமிடுதல் மும்முரத் திட்டத்திற்கு மட்டும் கடன்கள் கேட்டு வரும் கடன் விண்ணப்பங்களையும் இப்பிரிவு

[1972 டிசம்பர் 1

முறைப்படுத்தும். புதிய கிணறு உதவித்தொகை திட்டம், நிலவ வங்கிக் கடன்கள், போன்ற ஏனைய கடன்கள் குறித்து இப்பிரிவு பிர சாரம் செய்யும்; ஆனால், இது தொடர்பாக விசாரணை செய்வது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது போன்ற பணிகளை (கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி கவனிப்பார். இதற்காகப் பொதுப் பிரிவிலுள் ஊர் நலப் பணியாளர்கள் இவருக்கு உதவி செய்வர். நீண்டகால கடன்களை முறைப்படுத்துவதில் அவசியமான அளவுக்கு உதவ் செய்து வரும் துறை கூட்டுறவுத் ' துணைப்பதிவாளர்களுக்கு (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரி உதவி செய்வார்.

2. கல்விப் பிரிவு.

தொடக்கக் கல்வி தொடர்பாக உள்ள அனைத்தையும் இப்பிரிவு கவனிக்கும். இத்துடன், கிராம வானொலி மன்றங்கள், இளம் குடி யானவர் சங்கங்கள் போன்ற சமூகக் கல்வி நடவடிக்கைகள் அனைத் திற்கும் இப்பிரிவு பொறுப்பு வகிக்கும்.

3. பணிகள் பிரிவு.

வளர்ச்சி வட்டாரப் பகுதியில் "பணிகள்" திட்டங்கள் அனைத் திற்கும் இப்பிரிவு பொறுப்பு வகிக்கும்.

4. பொதுப் பிரிவு.

ஊராட்சி ஒன்றியக் குழு தொடர்பாகவுள்ள அனைத்தையும் இப் பிரிவு கவனிக்கும். இதோடு, இப்பிரிவு பின்வருவனவற்றையும் கவனித்து வரும்:—

(1) பொதுவான ஒழுங்குமுறை.

(2) ஊராட்சி ஒன்றியக்குழு.

(3) ஊராட்சி நிர்வாகம், தணிக்கை.

(4) திட்டங்கள்.

(5) கணக்குகள், தணிக்கைப் பிரிவு.

(6) கடன்கள்—புதிய கிணறுகள் உதவித்தொகை திட்டம், நிலவள வங்கி முதலியன.

(7) குடும்ப நலத் திட்டம்.

(8) சுகாதாரம்.

(9) சிறப்பு இயக்கங்கள்.

(10) மகளிர் நலன்.

(11) கிராமத் தொழில்.

**(12) ஏனைய பிரிவுகளுக்கு ஒதுக்கப்படாத பிற திட்டங்கள்.**



1972 டிசம்பர் 13]

## II. வெவ்வேறு பிரிவுகளில் வளர்ச்சி அதிகாரிகளை அமர்த்துதலும் அவர்களுக்குள்ள கடமைகளும் பொறுப்புகளும்.

1 கீழ்க்காணும் வளர்ச்சி அதிகாரிகள் உற்பத்திப் பிரிவின்கீழ் பணியாற்றுவர் :—

(a) ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரி.

(b) வளர்ச்சி அதிகாரி (வேளாண்மை).

(c) வளர்ச்சி அதிகாரி (கால்நடை வளர்ப்பு).

(d) வளர்ச்சி அதிகாரி (கூட்டுறவு).

(கால்நடை வளர்ப்பு) வளர்ச்சி அதிகாரியும், (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரியும் ஊராட்சி ஒன்றியப் பொறுப்பதிகாரிக்கு நேரடி சார்நிலைப் பணியாளர்களாக உற்பத்திப் பிரிவில் பணி யாற்றுவர். ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரி, (வேளாண்மை) வளர்ச்சி அதிகாரி, (கால்நடை வளர்ப்பு) வளர்ச்சி அதிகாரி, (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரி ஆகியோர் அந்தந்த மாவட்டத் துறைத் தலைவர்கள் தொடர்பான தொழில் நுட்பப் பொருள்களுக்கு முற்றிலும் பொறுப்புடையவராவர். துறைத் தலைவர்கள் தற்போது இவர்கள்மீது கட்டுப்பாடு அதிகாரம் செலுத்துவது தொடர்ந்து நீடிக்கும்.

கீழ்க்காணும் அதிகாரிகள் அவர்களுக்கெதிரே குறிப்பிடப் பட்டுள்ள பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கு முழுப் பொறுப்பு வகிப்பர்.

(a) உற்பத்திப் பிரிவு.

(i) ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரி.—இவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியைப் பொறுத்தமட்டில் வேளாண்மைக்குப் பொறுப்புடையவராவார்; அதோடு இப்பிரிவிற்கு முழுப் பொறுப் புடையவரும் ஆவார்.

(ii) (வேளாண்மை) வளர்ச்சி அதிகாரி.—ஒதுக்கப்பட்ட பகுதியில் வேளாண்மைக்குப் பொறுப்புடையவராவார்.

(iii) (கால்நடை வளர்ப்பு) வளர்ச்சி அதிகாரி—கால்நடை வளர்ப்புத் திட்டம், மீனளத் திட்டம் அனைத்திற்கும் பொறுப்புடையவ ராவார்.

(iv) (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரி.—கூட்டுறவுத் திட்டங்கள், அனைத்திற்கும் பொறுப்புடையவராவார்.

(b) கல்விப் பிரிவு.

(கல்வி) வளர்ச்சி அதிகாரி.

(c) பணிகள் பிரிவு.

ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.

(d) பொதுப் பிரிவு.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்.

2. ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரி, (வேளாண்மை) வளர்ச்சி அதிகாரி ஆகியோரின் பங்கும் பொறுப்புகளும் பின் வருமாறு :—

(a) வட்டார வளர்ச்சிப் பகுதி ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரிக்கும் (வேளாண்மை) வளர்ச்சி அதிகாரிக்கு மிடையே பிரித்துக் கொடுக்கப்பட்டு இவ்விரு அதிகாரிகளும், அவரவர் பகுதியில் நடைபெறும் பணிக்குப் பொறுப்புடையவராவர்.

(b) வரையறுக்கப்பட்ட இலக்குகள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரிக்கும் (வேளாண்மை) வளர்ச்சி அதிகாரிக்கு மிடையே பிரித்துக் கொடுக்கப்பட்டு அவரவருக்கு வரையறுக்கப் பட்டுள்ள இலக்குகளுக்குப் பொறுப்புடையவராவர்.

(c) ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரி வளர்ச்சி அதிகாரிகளிடமிருந்து தகவல்களைப் பெறுவார். அதோடு குறித்த காலத்திற்கொருமுறை தயாரிக்கப்படும் அறிக்கைகள் ஆகியவற்றைத் தொகுத்து அவை உரிய காலத்தில் அனுப்பப்படுகின்றனவா என்பதையும் பார்த்துக்கொள்வார்.

(d) ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரி வேளாண்மை சம்பந்தப்பட்ட கடிதத் தொடர்பு அனைத்திற்கும் பொறுப்புடையவ ராவார்.

(e) (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரியும், (கால்நடை வளர்ப்பு) வளர்ச்சி அதிகாரியும் அவரவர் பிரிவுகள் சம்பந்தப்பட்ட வரையில் இதுபோன்ற பொறுப்பை உடையவராவர்.

(கம்போஸ்ட்) குழி உர மேம்பாட்டு ஆய்வாளரும் பிற பணி யாளர்களும் ஊராட்சி ஒன்றிய வளர்ச்சி அதிகாரியின்கீழ் பணி யாற்றுவர்.



வேளாண்மைப் பொருள் விற்பனை நிலையம் ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரியின் அதிகாரத்தின்கீழ் இருக்கும். பின்வருவன குறித்து அவர் பொறுப்பு வகிப்பார் :—

(a) போதுமான இருப்புகள் வைத்து வரப்படுகின்றனவா என்பதைப் பார்த்துக்கொள்ளுதல்.

(b) இருப்பையும், ரொக்கத்தையும் திடீரெனச் சோதனை யிடுதல்.

(c) மூன்று திங்களுக்கு ஒருமுறை இருப்புகளைச் சரிபார்த்தல்.

பொறுப்பதிகாரி மூன்று திங்களுக்கு ஒருமுறை இருப்பைச் சோதனையிடுவது அவசியமில்லை.

3. நிலைப்பணியாளர் பின்வருமாறு அமர்த்தப்படுவர் :—

| | | |
|---|---|---|
| 1. உற்பத்திப் பிரிவு | உதவியாளர் ஒருவர் | (விற்பனை நிலைய எழுத்தர்/உதவி யாளருடன் கூட) |
| 2. கல்விப் பிரிவு | தலைமை எழுத்தர் | 1 |
| | எழுத்தர் | 1 |
| 3. பணிகள் பிரிவு | உதவியாளர் | 1 |
| | எழுத்தர் | 1 |
| 4. பொதுப் பிரிவு | மேலாளர் | 1 |
| | கணக்கர் | 1 |
| | காசாளர் | 1 |
| | எழுத்தர்கள் | 4 |

வெவ்வேறு பிரிவுகளில், அமர்த்தப்பட்ட சம்பந்தப்பட்ட நிலைப் பணியாளர்கள், பிரிவுகளுக்குப் பொறுப்பு வகிக்கும் அலுவலருக்கு அறிக்கைகளை அனுப்புவர். கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு தொடர் பான அறிக்கைகள் முறையே (கூட்டுறவு) வளர்ச்சி அதிகாரிக்கும், (கால்நடை வளர்ப்பு) வளர்ச்சி அதிகாரிக்கும் அனுப்பப்பட வேண்டும். பொதுப் பிரிவைப் பொறுத்தமட்டில், அறிக்கைகள் மேலாளர் மூலமாக ஊராட்சி ஒன்றியப் பொறுப்பதிகாரிக்கு அனுப்பப்படும்.

4. பிரிவுகளுக்குப் பொறுப்பு வகிக்கும் அலுவலர்கள், பிரிவு களுக்கு முழுப்பொறுப்பு வகித்து வருவதோடு கீழ்க்காணும் அலுவல்களையும் நிறைவேற்றுவர்:—

(a) அவர்கள், வட்டார வளர்ச்சி அதிகாரி/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சார்பாக வரைவுக் குறிப்புகளுக்கும் உண்மை நகல் களுக்கும் ஏற்பளிப்பதோடு, கொள்கை சம்பந்தப்பட்ட அறிக்கைகள், வட்டார வளர்ச்சி அதிகாரி—ஊராட்சி ஒன்றியப் பொறுப்பதிகாரி பார்க்கும் அவசியமான அறிக்கைகள் நீங்கலாக ஏனைய கடிதங்கள்

குறித்த காலத்திற்கொருமுறை தயாரிக்கப்படும் அறிக்கைகள் ஆகியவற்றை அனுப்புவர்.

(b) பிரிவில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்கள் அனைவருக்கும் தற்செயல் விடுப்பு அளித்தல்.

(c) அவர்கள், பிரிவில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்கள் தொடர்பான ரகசியப் பதிவேடுகளைத் தொடங்குவர். (வேளாண்மை) வளர்ச்சி அதிகாரி, ஊர் நலப் பணியாளர்கள் தொடர்பாக ரகசியப் பதிவேடுகள் தொடங்கும் பணியைத் தற்போது செய்கிறார்.

(d) அவர்கள், பிரிவில் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்வர்; ஆயினும் பொறுப்பதிகாரி அல்லது வருவாய்க் கோட்ட அதிகாரி தமக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு பணியாளர்களுக்குத் தண்டனை விதிக்கின்றனர்

5. வட்டார வளர்ச்சி அதிகாரி மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் பொறுப்புகள் பின்வருமாறு :—

(1) திட்டங்கள், நடவடிக்கைகள் அனைத்திற்கும் ஊராட்சி ஒன்றியப் பொறுப்பதிகாரி முழுப் பொறுப்பு வகிப்பதோடு, முறையான திட்டங்கள் வகுக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் செயல் படுத்தப்படுகின்றனவா என்பதைப் பார்த்துக்கொள்வார்.

(2) வெவ்வேறு நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள், வளர்ச்சி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து திட்டங்களை அவர் வகுத்து அவை ஊராட்சி ஒன்றியக் குழுவினால் நிறைவேற்றப்பட்டு பின்னர் செயல்படுத்தப்படுவதையும் பார்த்துக்கொள்வார்.

(3) ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வளர்ச்சி அதிகாரிகள், ஏனைய பணியாளர்கள்மீது நிர்வாகக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை ஆணையாளர் தொடர்ந்து செலுத்துவார்.

(4) ஆணையாளர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தற்போதைய நிர்வாக, நிதி அதிகாரங்களைத் தொடர்ந்து செலுத்தி வருவார்.

6. உற்பத்திப் பிரிவிலும் பொதுப் பிரிவிலும் ஊர் நலப் பணியாளர்களைப் பரவலாக நியமித்தல்.

ஊர் நலப் பணியாளர்கள் உற்பத்திப் பிரிவின்கீழும் பொதுப் பிரிவின்கீழும் அமர்த்தப்படுவர். உற்பத்திப் பிரிவைச் சேர்ந்த



ஊர் நலப் பணியாளர்கள் உற்பத்திப் பிரிவு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மட்டுமே கவனிப்பர். பொதுப் பிரிவைச் சேர்ந்த ஊர் நலப் பணியாளர்கள் உற்பத்தி நீங்கலாக ஏனைய நடவடிக்கைகள் அனைத்தையும் கவனிப்பர்.

மூன்று வகை வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. அவை பின் வருமாறு:—

(i) மும்முர வளர்ச்சி வட்டாரங்கள்.—வேளாண்மை மும்முர வளர்ச்சித் திட்டம், தஞ்சாவூர்.

(ii) ஓரளவு மும்முர வளர்ச்சி வட்டாரங்கள்.—செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகியவற்றில் வேளாண்மைப் பகுதி மும்முரத் திட்ட வளர்ச்சி வட்டாரங்கள்.

(iii) சாதாரண வளர்ச்சி வட்டாரங்கள்.—மும்முர வளர்ச்சி வட்டாரங்களில் ஊர் நலப் பணியாளர்கள் 20 பேரும் ஓரளவு மும்முர வளர்ச்சி வட்டாரங்களில் ஊர் நலப் பணியாளர் 10 பேரும் கிராம நலப் பணியாளர் 5 பேரும் சாதாரணமான வளர்ச்சி வட்டாரங்களில் ஊர் நலப் பணியாளர் 10 பேரும் உள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் "உற்பத்திப் பிரிவிலும்" "பொதுப் பிரிவிலும்" பின்வருமாறு அமர்த்தப்படுவர் —

| | உற்பத்திப் பிரிவு | பொதுப் பிரிவு |
|---|---|---|
| (i) மும்முர வளர்ச்சி வட்டாரங்கள். | ஊர்நலப் பணியாளர் 15 பேர். | ஊர்நலப் பணியாளர் 5 பேர், |
| (ii) ஓரளவு மும்முர வளர்ச்சி வட்டாரங்கள். | ஊர்நலப் பணியாளர் 5 பேர். இவர்களுடன் கிராம நலப் பணியாளர்கள் 5 பேர். கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களில் கிராமநலப் பணியாளர் பயிற்சி பெற்றவுடன் அவர்கள் ஊர்நலப் பணியாளர்களாவர். | ஊர்நலப் பணியாளர் 5 பேர். |
| (iii) சாதாரண வளர்ச்சி வட்டாரங்கள். | ஊர்நலப் பணியாளர் 5 பேர் | ஊர்நலப் பணியாளர் 5 பேர். |

உற்பத்தி நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, நேர்விற்கேற்ட வளர்ச்சி வட்டாரம் 15, 10 அல்லது 5 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஊர் நல உதவியாளர் ஒருவர் அல்லது ஊர் நலப் பணியாளர் ஒருவர் ஒவ்வொரு தொகுதிக்கும் நியமிக்கப்படுவார்.

உற்பத்திப் பிரிவுக்கு நியமிக்கப்பட்ட ஊர் நல உதவியாளர்கள் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு, மீனள நடவடிக்கைப் பணிகளை மட்டும்தான் கவனிப்பார்கள். அவர்களுக்கு வேறெந்தப் பணியும் கொடுக்கப்படக்கூடாது.

"பொதுப் பிரிவுக்கென" நியமிக்கப்பட்ட ஊர் நல உதவியாளர்களைப் பொறுத்தவரை, வளர்ச்சி வட்டாரம் ஐந்து தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவர் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு ஊர் நல உதவியாளர் பொறுப்பாக நியமிக்கப்படுவார்.

## III உற்பத்திப் பிரிவில் செய்ய வேண்டிய பணி நடைமுறை.

ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரி, வளர்ச்சி அதிகாரி (கால்நடை வளர்ப்பு), வளர்ச்சி அதிகாரி (கூட்டுறவு) ஆகிய உற்பத்தி பணியாளர்கள் உட்பட உற்பத்திப் பிரிவில் உள்ள ஊர் நல உதவியாளர்கள், ஏனைய பணியாளர்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை தனிப்பட்ட பணியாளர் கூட்டத்தில் கூடுவர். அக்கூட்டத்தில் ஊராட்சி ஒன்றிய முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்படும். வளர்ச்சி வட்டார அதிகாரியால் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் தலைமை தாங்கப்படும் கூட்டங்களில் வரப்போகிற 15 நாட்களுக்கான திட்டங்கள் முடிவு செய்யப்படும்.

பணியாளர் கூட்டங்களை, வளர்ச்சி வட்டார அதிகாரி—ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் கூட்டும்போது, கல்விப் பிரிவு, பணிப் பிரிவு, பொதுப் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளின் கூட்டங்களுக்குக் காலையிலும், உற்பத்திப் பிரிவின் கூட்டத்தில் மாலையிலும் தலைமை தாங்குவார்.

முந்தைய இருவாரங்களில் செய்யப்பட்ட ஆய்வுப் பணியுடன், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீனளம், கூட்டுறவு ஆகியவற்றின் எல்லா பணிகளும் விவாதிக்கப்படும்.





## IV. கோப்புகளைப் பெறுவதும் அனுப்புவதும்

1. வளர்ச்சி வட்டார அதிகாரி/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தபால்கள் அனைத்தையும் திறந்து பார்த்துவிட்டு மேலாளருக்கு அனுப்புவார்.

2. பல்வேறு பிரிவுகளுக்கொப்ப தபால்களை மேலாளர் பிரித்து ஒவ்வொரு பிரிவிற்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகளுக்கு அவர்கள் தலைமையிடத்தில் இருக்கிறபோது அனுப்பி வைப்பார்.

3. ஒவ்வொரு பிரிவிற்குப் பொறுப்பாக உள்ள அதிகாரி தபால்களைப் பரிசீலித்துவிட்டு அவைகளை மேலாளருக்கு அனுப்பி வைப்பார்; அவர் அதைப் பிரித்து அனுப்புவார்.

4. பகிர்வுப் பதிவேட்டில் பதிவாகிய பின்னர், பல்வேறு பிரிவுகளில் உள்ள உதவியாளருக்கும்/எழுத்தருக்கும் அவர்களுடைய கையொப்பத்தை பகிர்வு பதிவேட்டில் பெற்ற பின்னர் அவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

5. எழுத்தர்/உதவியாளர் அவைகளை தன் பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு பிரிவின் பொறுப்பில் உள்ள அதிகாரிக்கு அல்லது பொதுப் பிரிவின் நேர்வில் மேலாளருக்கு அக்கோப்பினைப் பணிந்தனுப்புவார்.

6. தட்டச்சரைக் கொண்ட உண்மை நகல் பிரிவு மேலாளரின் கீழ் பணிபுரியும், உண்மை நகல் எடுப்பதற்கான கோப்புகள், உதவியாளர்களிடமிருந்து/எழுத்தர்களிடமிருந்து இப்பிரிவிற்கு உண்மை நகல் எடுக்க வேண்டி அனுப்பப்படும்.

## V. நிதி அதிகாரம்.

1. வளர்ச்சி வட்டார அதிகாரி/ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் வளர்ச்சி வட்டாரத்தின்/ஊராட்சி ஒன்றியத்தின் பணம் எடுக்கும் அதிகாரியாகத் தொடர்ந்து பணியாற்றுவார்.

2. தொகை கொடுப்பதற்காக வரும் பட்டியல்கள் முதலியவற்றைப் பல்வேறு பிரிவுகள் ஆய்வு செய்து தங்களது குறிப்புரையுடன் கணக்காளருக்கு அனுப்பி வைக்கும்.

3. கணக்காளர் அவைகளைப் பார்வையிட்டு மேலாளருக்கு அனுப்பி வைப்பார்.

4. மேலாளர் அவைகளைப் பார்வையிட்டு ஆணையாளருக்கு அனுப்பிவைப்பார்

[1972 டிசம்பர் 13

தமிழ்நாடு அரசு

சுருக்கம்.

சமுதாய வளர்ச்சித் திட்டம்—தமிழ்நாடு—வளர்ச்சி வட்டார அளவில் நிர்வாக அமைப்பைச் சீரமைத்து, வட்டாரத்தில் பல்வேறு தரங்களில் உள்ள அதிகாரிகளுக்கு பிரதேச–அலுவல் ரீதியான அதிகார வரம்பை அளித்தல். மேற்கொண்டும் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை.

அரசு ஆணை எண் : 236. நாள் : 9—2—1972.

கீழ்க்கண்டவற்றைப் படிக்க :—

1. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 3—8—1971-ஆம் நாளிட்ட 1805-ஆம் அரசு ஆணை எண்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து வந்த 14—10—1971-ஆம் நாளிட்ட ஆர்.ஓ.சி. 128651/71-சி 5-ஆம் எண்ணுள்ள நேர்முகக் கடிதம்.

வளர்ச்சி வட்டார அளவில் நிர்வாக அமைப்பை நான்கு பிரிவுகளாகப் பிரித்து சீரமைப்பதற்கும், வளர்ச்சி அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட பொறுப்புகளை ஒப்படைப்பதற்கும், கிராம வளர்ச்சி–உள்ளாட்சித் துறையின் 3—8—1971-ஆம் நாளிட்ட 1805-ஆம் அரசு ஆணை எண்ணில் அரசு ஆணை பிறப்பித்தது. வளர்ச்சி வட்டார அளவில் நிர்வாகத்தைச் சீரமைப்பது குறித்து மேலே கூறப்பட்ட அரசு ஆணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எந்த அளவுக்குச் சிறந்த முறையில் செயல்படுத்தவியலும் என்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அவர் நடத்திய ஆய்வின் விளைவாக, எளிதாகவும், விரைவாகவும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகக் குறிப்பிட்ட சில கருத்துரைகளை அவர் வழங்கினார். இத்திட்டமானது ஊராட்சி ஒன்றியங்களில் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பது குறித்து சில வளர்ச்சி வட்டாரங்களை கிராம வளர்ச்சி–உள்ளாட்சித் துறையின் அரசுச் செயலாளர் ஆய்வு செய்தார். அவர்களுடைய ஆய்வின் அடிப்படையில் மேலே கூறப்பட்ட அரசு ஆணையில் ஒரு சில மாற்றங்களைச் செய்து, கீழ்க்காணும் ஆணைகளை அரசு பிறப்பிக்கிறது.

ள நடைமுறையே தொடர்ந்து செயலிலிருக்கும்

அமைப்பையும், பல்வேறு பிரிவுகளின் நிர்வாக கணோட்டத்தில் குறிப்பிடுகின்றன.

பல்முறை அமைப்புகள்

பகுதிகளில்
த் திட்டங்

பொதுப் பிரிவு

1. பொதுவான கட்டுப்பாடு.
2. ஊராட்சி ஒன்றியக் குழு.
3. ஊராட்சி நிர்வாகமும் தணிக்கையும்.
4. வரைபடங்கள்.
5. கணக்குகள்–தணிக்கைப் பிரிவு.
6. கடன்கள்—புதிய இணைறுகள் நிதி உதவித் திட்டம், நில வள வங்கி ஆகியவை.
7. குடும்பநலம்.
8. சுகாதாரம்.
9. சிறப்பு இயக்கங்கள்.
10. மகளிர் நலம்.
11. கிராமப்புறத் தொழில்கள்.
12. ஏனைய பிரிவுகளுக்கு ஒதுக்கப் படாத பிற திட்டங்கள்.

அமைப்பு முறை




வியாளர்களும், 5 கிராம நலப் பணியாளர்



1972 டிசம்பர் 13]

(1) வளர்ச்சி வட்டாரத்தில் இக்குழுவின் தலைவராகவும், இத் திட்டங்களை ஒருங்கிணைப்பவராகவுமுள்ள வட்டார வளர்ச்சி அதிகாரியின் நிலை, பெருகிவரும் பொறுப்புகளையும், வளர்ந்து வரும் சிக்கல்களையும் கவனிக்க வேண்டிய நிலையாகும். ஆகவே, எழுத்தர் பணியும் நிர்வாகப் பணியும் அளித்து அவரை அலுவலகத்திலேயே கட்டிப்போட முடியாது. ஆகவே, வளர்ச்சி அதிகாரிகள், பத்திரிகைகள், வழக்கமான வரைவுகள் ஆகியவற்றிற்கு ஏற்பளித்து, தெளிவான நகல்களை வட்டார வளர்ச்சி அதிகாரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்பிவைப்பதோடு, அவர்களுடைய கிளைகளைப் பொறுத்தமட்டில் எல்லா கடிதத் தொடர்புகளையும் வட்டார வளர்ச்சி அதிகாரியின் பெயரிலேயே நடத்த வேண்டும். கோப்புகள், வட்டார வளர்ச்சி அதிகாரியின் ஏற்பளிப்பைப் பெற்ற பிறகே, இறுதியில் முடிவு செய்யப்பட வேண்டும். வட்டார வளர்ச்சி அதிகாரி சார்பாக, வளர்ச்சி அதிகாரிகள் நடத்தும் கடிதத் தொடர்பு அனைத்துக்கும் அவர்களே முழுதும், சொந்தமாகவும் பொறுப் புள்ளவர்களாவர்.

(2) வளர்ச்சிப் பகுதியானது, ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரி, வளர்ச்சி அதிகாரி (வேளாண்மை) ஆகியோரிடையே பிரித் தளிக்கப்பட வேண்டும். அவ்வாறு பிரித்தளிக்கப்பட்ட அந்தந்தப் பகுதியில் ஏற்கெனவே கட்டளை பிறப்பிக்கப்பட்ட பணிக்கு அந்த ஒவ்வொருவரும் பொறுப்புடையோராவர், ஊராட்சி ஒன்றிய வேளாண்மை அதிகாரியின் அதிகாரவரம்புப் பகுதியானது ஏனைய வளர்ச்சி அதிகாரிகளின் (வேளாண்மை) அதிகார வரம்புப் பகுதிகளை விடக் குறைவாக இருக்கலாம். இப்பகுதியானது, தலைமையிடத்தில் அவருக்குள்ள அலுவலகப் பணிக்கிணங்க பொருத்தமாக வரையறுக் கப்படலாம்.

(3) அதிக அளவு ஆண்டுகள் பணிபுரிந்துள்ள வளர்ச்சி அதிகாரிக்கு (கால்நடை வளர்ப்பு) ஊராட்சி ஒன்றியக் கால்நடை வளர்ப்பு அதிகாரி என்று பதவியில் பெயர் கொடுக்கப்பட்டு கால்நடை வளர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைப் பவராக வளர்ச்சி வட்டாரத்திலுள்ள தலைமையிடத்தில் பதவியில் அமர்த்தப்பட வேண்டும்.

(4) ஊர் நல உதவியாளர்கள் பொதுப் பிரிவு, உற்பத்திப் பிரிவு ஆகிய இரு பிரிவுகளிலுமுள்ள பணியைக் கற்றுணர்ந்தவர் களாக ஆக்கும் வண்ணம், பொதுப் பிரிவிலுள்ள ஊர் நல உதவி யாளர்களை உற்பத்திப் பிரிவுக்கும், உற்பத்திப் பிரிவிலுள்ள ஊர் நல உதவியாளர்களைப் பொதுப் பிரிவுக்கும் எளிதில் மாற்றக்கூடிய

[1972 டிசம்பர் 13

அளவுக்கு இருக்கவேண்டும். ஆனால், உற்பத்திப் பிரிவில் நியமிக்கப் பட்ட ஒரு ஊர் நல உதவியாளரைக் குறைந்தது இரண்டு ஆண்டு களுக்காவது மாற்றாது இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(5) வேளாண்மைத்துறையின் ஒட்டுமொத்த செயல் திறமைக்கு பொறுப்பேற்கும் வண்ணம், வளர்ச்சி வட்டாரப் பகுதியிலுள்ள வேளாண்மைத் திட்டங்கள் முழுவதையும் தெரிந்திருப்பதோடு, அவற்றை நுட்பமாகவும் அறிந்திருக்க வேண்டும். அவர், மாவட்ட வேளாண்மை அதிகாரியுடன் எப்போதும் தொடர்பு வைத்துக் கொள்வதோடு, வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தவறு அல்லது போதாமை காணப்பட்டால் அவற்றை அவருடைய கவனத்திற்கும் கொண்டுவர வேண்டும். வளர்ச்சி வட்டாரப் பகுதியை மாவட்ட வேளாண்மை அதிகாரி பார்வையிடும்போது அவரும் உடன் செல்ல வேண்டும்.

(6) வேளாண்மைப் பணியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காகக் கூட்டப்படும் மாதக் கூட்டங்களில் தங்களது வளர்ச்சி அதிகாரிகளுடன் கலந்துகொள்ளுமாறு வட்டார வளர்ச்சி அதிகாரிகளை மாவட்ட வேளாண்மை அதிகாரி அழைக்க வேண்டும்.

(7) வளர்ச்சி அதிகாரி (தொழில்) "உற்பத்திப் பிரிவு" என்னும் நிர்வாக அமைப்பு முறையின்கீழ் "கிராமத் தொழிலோடு" நியமிக்கப்பட்டுள்ளார்.

(8) இரண்டு பிரிவுகள், அதாவது, வளர்ச்சி அதிகாரியின் (ஊராட்சிகள்) கீழ் ஊராட்சி நிர்வாகப் பிரிவு, வளர்ச்சி அதிகாரி யின் (கூட்டுறவு) கீழ் கூட்டுறவுப் பிரிவு ஆகிய இவ்விரு பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும். அபாயகரமான—அருவருக்கத்தக்க தொழில் கள்போன்ற தொழில்களுக்குப் பல்வேறு சட்டங்களின்கீழ் உரிமம் வழங்குவது தொடர்பான பணியை வளர்ச்சி அதிகாரியிடம் (ஊராட்சிகள்) ஒப்படைக்கவேண்டும். அபாயகரமான—அருவருக் கத்தக்க தொழில்கள் சம்பந்தமான கோப்புகளை வளர்ச்சி அதிகாரியின் (ஊராட்சி) கீழ்ப் பணிபுரியும் எழுத்தர் கவனித்துக்கொள்ள வேண்டும் ஊராட்சிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்தல்—ஆய்வு செய்தல் தொடர்பான கோப்புகள் மேலாளர் மூலம் அனுப்பி வைக்காமல் வளர்ச்சி அதிகாரியின் மூலம் (ஊராட்சி) ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும். வளர்ச்சி அதிகாரி (கூட்டுறவு) இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள விவரக் குறிப்பு 1-ல் குறிப்பிட்டுள்ளவாறுள்ள பணிகளைக் கவனிப்பார். கூட்டுறவுப் பிரிவில் ஓர் எழுத்தர் அல்லது ஒரு கூட்டுறவுச் சங்கங்கள் இளநிலை இன்ஸ்பெக்டர், அரசுக் கடைநிலை ஊழியர் ஒருவர்



1972 டிசம்பர் 13]

ஆகியோரை நியமிப்பதற்கு ஏற்பளிப்பது குறித்து அரசுக் கூட்டுறவுத் துறையில் தனியாக கருதிப்பார்க்கப்படுகிறது.

(9) "குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு, மகளிர் நலன்" ஆகிய பணிகளைக் கல்வித் துறையின்கீழ்க் கொண்டுவர வேண்டும். முக்கிய சேவிகைகள், ஊர் நல உதவியாளர்கள் ஆகியோரும் கல்விப் பிரிவில் பணிபுரிய வேண்டும்.

(10) பணிப் பிரிவிலுள்ள இளநிலை உதவியாளரை, கல்விப் பிரிவில் பணிபுரிவதற்கு மாற்றவேண்டும். பொதுப் பிரிவிலுள்ள நான்கு இளநிலை உதவியாளர்களில், ஒரு இளநிலை உதவியாளரை ஊராட்சி நிர்வாகப் பிரிவிற்கு ஒதுக்க வேண்டும். அப்பிரிவை ஏற்படுத்த கட்டளையிடப்பட்டுள்ளது. கடன்கள் குறித்து, பொதுப் பிரிவிலுள்ள எழுத்தர் ஒருவர் கவனிக்கவேண்டும்.

(11) பணியாளர்கள் கூட்டங்களை நடத்தும் வட்டார வளர்ச்சி அதிகாரி—ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், பிற்பகலில், கல்விப் பிரிவு, பணிப் பிரிவு, பொதுப் பிரிவு, ஊராட்சி நிர்வாகப் பிரிவு கூட்டுறவுப் பிரிவு ஆகிய ஐந்து பிரிவுகளின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க வேண்டும்.

(12) எழுத்தர்களின் தன் பதிவேடுகள், குறித்த கால அறிக்கை கள் ஆகியவற்றை முதல் 15 நாட்களில் சம்பந்தப்பட்ட பிரிவு அதிகாரிகளும், இரண்டாவது 15 நாட்களில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும் சரிபார்க்க வேண்டும்.

2. மேற்கூறிய மாற்றங்களுடன் கூடிய இத்திட்டம், வட்டார வளர்ச்சி அதிகாரியின் பணிச் சுமையைப் பகிர்ந்தளிப்பதோடு, அவருடைய பொறுப்புகளை, அவருடைய முதல் உதவியாளர்களான வளர்ச்சிப் பணி அதிகாரிகளிடம் பரவலாகக் கொடுக்க வகை செய் கிறது. ஆனால் இது, வட்டார வளர்ச்சி அதிகாரியின் முக்கியத் துவத்தைக் குறைக்காமலும், வளர்ச்சிப் பணி அதிகாரிகள் மீதுள்ள அவருடைய கட்டுப்பாட்டை விட்டுக் கொடுக்காமலும், செய்யப்படு கிறது. ஆனால், அதே நேரத்தில், வளர்ச்சி வட்டாரத்தில், குழுவின் தலைவராகவும் திட்டத்தை ஒருங்கிணைப்பராகவுமுள்ள அவருடைய மத்திய அதிகாரத்தை அப்படியே அவர் வகிக்கிறார்.

3. மேலே பத்தி ஒன்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் அடிப் படையில் இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள I, II-வது விவரக் குறிப்புகள், வட்டார அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளிலுள்ள திருத்தியமைக்கப்பட்ட செயல் அமைப்பு முறை, வட்டார அலுவல கத்தின் பல்வேறு பிரிவுகளிலுள்ள திருத்தியமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பு முறை ஆகியவற்றைக் காட்டுகின்றன.

[1972 டிசம்பர் 13

4. மாவட்டங்களில் உள்ள வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் இத்திட்டத்தைக் கொண்டுவர உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமாறும், ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை ஒன்றை சுமார் ஒரு திங்களில் அனுப்பிவைக்குமாறும் கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இ. சி. பி பிரபாகர்,
அரசுச் செயலாளர்.

(தமிழாக்கம்)

இயக்குநர்,
பொதுத் (மொழி பெயர்ப்பு) துறை.

இணைப்பு விளக்க அட்டவணை- I

விளக்க அட்டவணை- II

ஊரக வளர்ச்சி–உள்ளாட்சித்துறை குறிப்பாணை எண் 47469/ ஈ 5/72-2, 21—4—1972.

பொருள் : சமுதாய வளர்ச்சித் திட்டம்—

தமிழ்நாடு–வட்டார அளவில் நிர்வாக அமைப்பை மாற்றியமைத்தலும் வட்டாரத்திலுள்ள பல வகை அதிகாரிகளுக்கு ஆட்சிப் பகுதி, செயல்முறை அதிகாரங்களை வழங்குதலும்—திருத்தம் செய்யப்படுகிறது.

கிராம வளர்ச்சி–உள்ளாட்சித் துறையின் 9—2—1972 நாளிட்ட 236-வது எண் அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின் விளைவாக வட்டார அளவில் மகளிர், குழந்தைகள் நலத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்புள்ள, ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ், பொதுப் பிரிவில் பணியாற்றும் முக்கிய சேவிகாக்கள், ஊர்நல உதவியாளர்கள் ஆகியோர் வட்டார அமைப்பின் கல்விப் பிரிவின் பொறுப்புடைய ஒன்றியக் கல்வியதிகாரியின் கீழ் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இந்த ஏற்பாடு முக்கிய சேவகிகளை ஒன்றியக் கல்வியதிகாரிக்குக் கீழ்பட்டவர்களாக்கி விடுகிறது. ஒன்றியக் கல்வி அதிகாரி வட்டார அமைப்பின் எல்லா வகைகளிலும் முக்கிய சேவிகைகளுக்கு மேலாக அங்கம் வகிக்கிறார். இந்த ஏற்பாடு ...ய சேவிகைகளின் மனப்பாங்கையும் திறமையையும் பாதிக்கும்



1972 டிசம்பர் 13]

எனவே, மேற்சொன்ன ஆணைகள் மாற்றியமைக்கப்பட்டு, அவர்களுடைய பணித் திட்டங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒன்றியக் கல்வி அதிகாரியின் தகுதிக்கு இணையாக வைக்கப்படலாமென்றும், வட்டார அமைப்பின் கல்விப் பிரிவின்கீழ் தனியொரு அமைப்பாகச் செயல்படலாமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

2. அரசு மேற்கண்ட வேண்டுகோளை ஆய்வு செய்து, அந்த அரசாணையில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள கல்விப் பிரிவில் ஒரு பகுதியாகவுள்ள முக்கிய சேவகிகளும், கிராம சேவகிகளும், "நலப்பிரிவு" என்னும் தனிப்பிரிவின் பொறுப்புள்ளவர்களாகப் பணியிலமர்த்தப்படுவார்கள் எனக் கட்டளையிடுகிறது. எனினும், அவர்கள் மேற்கண்ட ஆணையின் I விளக்க அட்டவணையில் கல்விப் பிரிவின் கீழ்க் கூறப்பட்டுள்ள (மகளிர், குழந்தைகள் நலத் திட்டம் உட்பட) பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பை இனியும் தொடர்ந்து மேற்கொண்டுவருவார்கள். பொதுவான பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டிய நேர்வில் ஒன்றியக் கல்வி அதிகாரிகளும், முக்கிய சேவகிகளும் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயல்படவேண்டும்; முக்கிய சேவகிகளுக்கும், கிராம சேவகிகளுக்கும், தற்போதுள்ளவாறே தொடர்ந்து எழுத்தர் உதவியும் அளிக்கப்படும்; அதாவது கல்விப் பிரிவிலுள்ள தலைமை எழுத்தரும், எழுத்தர்கள் இருவரும் முக்கிய சேவகிகள், கிராம சேவகிகள் ஆகியோருடைய பணிகளைக் கவனிப்பர் என்றும் கட்டளையிடுகிறது.

3. இரண்டாவதாக உள்ள ஆணையின் பகுதி மாற்றத்திற்கேற்ப புதிதாக அமைக்கப்பட்டுள்ள "நலப் பிரிவு" மேற்சொன்ன ஆணையின் II விளக்க அட்டவணையில் 3 (எ) என்று இலக்கமிடப்பட வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது. இந்த ஏற்பாடு கீழ்க் கண்டவாறு இருக்கும்.

| (3) | 3 (எ) |
|---|---|
| கல்விப் பிரிவு | நலப் பிரிவு |
| ஒன்றியக் கல்வி அதிகாரிகள்<br>சமூக நலப்பணியாளர்கள். | முக்கிய சேவகிகள்<br>கிராம சேவகிகள் |

இ. சி. பி. பிரபாகர்,
அரசுச் செயலாளர்.

(தமிழாக்கம்)

இயக்குநர்,
பொதுத் (மொழி பெயர்ப்பு) துறை.

[1972 டிசம்பர் 1

இணைப்பு 2

[6-ம் பக்கத்தில் 151-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடப்பட்ட வினாவுக்குரிய விடையைக் காண்க.]

*Answer*—

(*a*) Yes.

(b) The Plantations Labour Advisory Committee has been reconstituted for a further period for three years from 1st October 1971. The members of the Committee are as shown below.

*I. Independent Members*—

1. The Commissioner of Labour (Chairman).
2. The Chief Inspector of Plantations (Secretary).
3. The Director of Health Services and Family Planning, Madras-6.

*II. Employers' Representatives*—

4. Chairman, Planters' Association of Tamil Nadu, Coonoor.
5. Vice-Chairman, Planters' Association of Tamil Nadu, Coonoor.
6. Thiru K.R.M. Punja, M/s Kothari and Sons, Madras.
7. Thiru N. H. Sethna, Bombay—Burmah Trading Corporation Limited, Mudis Post, Pollachi.
8. Thiru S. Subramanian, General Manager, The Vaikundam Rubber Company Limited, Pattam Palace (Post), Trivandrum.
9. The Director of Cinchona Department, Ooty.
10. The Conservator of Forests, Government Rubber Plantations, Nagercoil.

*III. Employees Representatives*—

11. Honorary President, Nilgiris District Estate Workers' Union, Rokby, Coonoor.
12. President, Neelamalai Planations Workers' Union, Coonoor.



1972 டிசம்பர் 13]

*III. Employees Representatives*—

13. Working President, Nilgiris Estate Progressive Union, Coonoor.
14. President, Estate Staff Union of South India, Coimbatore.
15. General Secretary, Tamil Nadu Plantation Workers' Union, Valparai, Coimbatore District.
16. Secretary, Annamalai Dravida Thozhilalar Munnetra Sangam, Valparai.
17. President, Kanyakumari District Estate Workers' Union, Thadikarankonam, Nagercoil.

விடை—

(அ) ஆம்.

(இ) மலைத் தோட்டத் தொழிலாளர் நலக்குழு 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்து மேலும் மூன்று ஆண்டுக்காலத்துக்குப் புதுப்பித்து அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் உறுப்பினர் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

தனிப்பட்ட உறுப்பினர்கள்—

1. தொழிலாளர் நல ஆணையாளர் (தலைவர்).

2. மலைத் தோட்டங்கள் தலைமை ஆய்வாளர் (செயலாளர்).

3. மக்கள் நல் வாழ்வு குடும்ப நலத்துறை இயக்குநர், சென்னை-6.

தொழிலதிபர்கள் பிரதிநிதிகள்—

4. தலைவர், தமிழ்நாடு மலைத்தோட்ட அதிபர்கள் சங்கம், குன்னூர்.

5. துணைத் தலைவர், தமிழ்நாடு மலைத்தோட்ட அதிபர்கள் சங்கம், குன்னூர்.

6. திரு. கே. ஆர். எம். பூஞ்சா, திருவாளர்கள் கோத்தாரி சன்ஸ், சென்னை.

7. திரு. என். எச். சேத்னு, பம்பாய்—பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடெட், முடீஸ் அஞ்சல், பொள்ளாச்சி.

8 திரு. எஸ். சுப்பிரமணியம், பொது மேலாளர், வைகுண்டம் ரப்பர் கம்பெனி, பட்டம் அரண்மனை (அஞ்சல்), திருவனந்தபுரம்.

தொழிலாளர் பிரதிநிதிகள்—

9. சின்கோனாத்துறை இயக்குநர், உதகமண்டலம்.

10. வனத்துறைத் தலைவர், அரசினர் ரப்பர் தோட்டங்கள், நாகர் கோவில்.

11. மதிப்புறு தலைவர், நீலகிரி மாவட்ட மலைத்தோட்ட தொழி லாளர் சங்கம், குன்னூர்.

12. தலைவர், நீலமலை மலைத்தோட்டத் தொழிலாளர் சங்கம், குன்னூர்.

13. பணிபுரியும் தலைவர், நீலகிரி மாவட்ட மலைத்தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், குன்னூர்.

14. தலைவர், தென்னிந்திய மலைத்தோட்டப் பணியாளர் சங்கம், கோயம்புத்தூர்.

15. பொதுச் செயலாளர், தமிழ்நாடு மலைத்தோட்டத் தொழி லாளர் சங்கம், வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம்.

16. செயலாளர், ஆனைமலை திராவிடத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், வால்பாறை.

17. தலைவர், கன்னியாகுமரி மாவட்ட எஸ்டேட் தொழிலாளர் சங்கம், தாடிக்காரன்கோணம், நாகர்கோவில்.

சயல் அமைப்பு முறை.

ன்

உற்பத்தி நிர்வாகப் பிரிவு.
(5)

1. உற்பத்தி நிர்வாகப் பிரிவு—தணிக்கை.
2. அபாயகரமான அறுவடைக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம் வழங்குதல்.

பொதுப் பிரிவு.
(6)

1. பொது ஒழுங்கு முறை.
2. உற்பத்தி ஊராட்சி ஒன்றியக் குழு.
3. திட்டங்கள்.
4. கணக்குகள்—தணிக்கைப் பிரிவு.
5. கடன்கள் — புதிய கிணறுகள் வெட்டும் திட்டத்திற்கான உதவித் தொகை.
6. சுகாதாரம்.
7. சிறப்புச் சோதனைகள்.
8. ஏனைய பிரிவுகளுக்கு ஒதுக்கப்படாத ஏனைய திட்டங்கள்.

ை] முறை




கள் 5, கிராம அளவுப் பணியாளர்கள் 5.



**வியாழக்கிழமை, 1972 டிசம்பர் 14.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**1. வினாக்கள்—விடைகள்.**

**வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.**

**பள்ளிகளுக்கான வேலை நாட்கள்**

* 161 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உயர்தர நடுத்தரப் பள்ளிகளுக்கான பாடநாட்களின் கால வரம்பினைத் தமிழ்நாடு அரசு மாற்றி அமைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) பள்ளிகள் (தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும்) ஆண்டொன்றுக்கு வேலை செய்ய வேண்டிய நாட்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு வேலை செய்ய வேண்டிய கால அளவு ஆகியவை பழைய பாடத் திட்டத்தில் இருந்தது போலவே புதிய பாடத்திட்டம் அமுலுக்கு வந்த பின்னரும் நீடிக்கலாம் என்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, எதற்கெடுத்தாலும் மாணவர்களைத் தூண்டிவிடும் சில அரசியல் வாதிகளால், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் ஆகியவை அடிக்கடி மூடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி மூடப்பட்டிருக்கும் நாட்களை ஈடுசெய்ய, பள்ளி, கல்லூரி விடுமுறை நாட்களைக் குறைக்க வேண்டுமென்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளுக்கு 220 நாட்களும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 நாட்களும் கட்டாய வேலை நாட்களாக இருக்கின்றன. எந்தக் காரணத்தினால் பள்ளிகள் மூடப்பட்டாலும், ஆண்டின் இறுதியில் குறைந்த நாட்களுக்கு ஈடுசெய்ய பள்ளிகள் நடைபெற வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, பிற நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது நம்முடைய நாட்டில் பள்ளி வேலை நாட்கள் குறைவு என் ஒரு கருத்து இருந்து கொண்டிருக்கிறதே. அது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அத் அளவு உண்மைதான். பிற நாடுகளில் ஆண்டு ஒன்றுக்கு 234 நாட்கள், 24 நாட்கள், 250 நாட்கள் பள்ளிகள் நடைபெறுகின்றன. நமது இந்தி நாட்டிலும் சில பல மாநிலங்களில் 230, 240 நாட்கள் பள்ளிகள் நடைபெ கின்றன. நமது மாநிலத்திலும் பள்ளி வேலை நாட்களை அதிகமாக்கலாம என்று கேட்டதற்கு ஆசிரியர் சங்கம், தங்களுக்கு வேலைப் பளு அதிகமாகு என்று சொல்லி அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். எனவே, நமத மாநிலத்தில் முன்பு இருந்த முறையிலேயே வேலை நாட்கள் இருந்த வருகின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கோடை கால விடுமுறை நாட்களைக் குறைத்து, பள்ளி வேலை நாட்களை அதிகப்படுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படியானால் அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கோடை விடுமுறையைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. ஆனால் இப்போது ஆரம்பப் பள்ளிகளில் '220 வேலை நாட்கள்' என்பதில் பள்ளித் தேர்வுகள் நடைபெறும் நாட்களும் அடங்கும். தேர்வுகள் நடத்துவதற்கு என்று 20 நாட்கள் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேர்வு நாட்களைத் தள்ளி 220 வேலை நாட்கள் என்று வைக்கலாமா என்று கருத்துக்குக் கூட ஆசிரியர் சங்கம் கூடாது என்று சொல்லியிருக்கிறது. எனவே, இப்பொழுது தேர்வு நாட்களையும் சேர்த்து ஆரம்பப் பள்ளிகளுக்கு 220 நாட்களும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 நாட்களும் வேலை நாட்களாக இருந்து வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, we find frequent changes in the number of School holidays. Sometime back the entire Saturday was declared as holiday and recently it was changed and only half-Saturday has been declared as holiday. May I know the reason for such frequent changes and also why there is difference in the number of holidays between high schools and elementary schools?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்து வருகின்ற சூழ்நிலையில்தான் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. அதிலே மாற்றம் இல்லை.





**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, பள்ளி நாட்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் மாணவர்கள் மெதுவாகப் படித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். எனவே, மாணவர்கள் விரைவாகவும், நன்றாகவும் படிப்பதற்காக பள்ளி வேலை நாட்களைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பள்ளி நாட்களைக் குறைப்பது என்பது மாணவர்களை ஊக்கப்படுத்துவதாக இருக்காது. இப்போது இருக்கின்ற நாட்களே போதாது என்று இருக்கின்ற போது அதைக் குறைப்பது என்பது இயலாது.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, முஸ்லீம் பள்ளிகளில் வெள்ளிக் கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை நாட்களாக இருப்பதால் ஆசிரியர்களுக்கு சில சங்கடங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே மற்ற பள்ளிகளில் இரண்டு நாட்கள் சேர்ந்து விடுவது போலவே, முஸ்லீம் பள்ளிகளிலும் வெள்ளிக்கிழமையிலும், சனிக்கிழமையிலும் விடுமுறை விடச்செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, முஸலீம் பள்ளிகளில்தான் அப்படிச் செய்கிறார்கள் என்றில்லை; மற்றும் பல பள்ளிகளிலும் அப்படிச் செய்கிறார்கள். சில பள்ளிகளிலும் புதன்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை விடுகிறார்கள். சில பள்ளிகளில் செவ்வாய்க் கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் கூட விடுமுறை விடுகிறார்கள். ஆகவே, அது அந்தந்த பள்ளி நிர்வாகிகள், அங்குள்ள ஆசிரியர்களின் வசதிகளைப் பொறுத்து நடைபெறுகிறது. அதிலே அரசாங்கம் ஒன்றும் குறுக்கிடுவதற்கு இயலாது.

## *Conference of Chairman of Panchayat Union Councils*

*162 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether a Conference of the Chairman of Panchayat Union Councils was held at Kodaikanal about the 12th May, 1972: and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்கள், தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோர் களின் மாநாடு ஒன்று கோடைக்கானலில் 1972 மே திங்கள் 12-ஆம் நாள்

முதல் 14-ஆம் நாள் வரையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் ஊராட்சி வளர்ச்சிப் பணியைச் சீரமைத்தல், கிராமப்புற வளர்ச்சித் திட்டம், உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் வாயில்களைப் பெருக்குவதற்கான முறைகள் ஆகியவை தொடர்பான சில முக்கிய பொருள்கள் பற்றிப் பரிசீலிக்கப்பட்டன.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, அந்த மாநாட்டில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகவே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது உண்மையா? அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அந்த மாநாட்டில் இரண்டு கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன. இப்போது இருந்து வருகின்ற, ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையே நீடிக்க வேண்டும் என்றும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகவே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் பெரும்பான்மை முடிவு ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்குத்தான் இருந்தது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தலைவரவர்களே, அந்த மாநாட்டில் நானும் கலந்துகொண்டேன். அதில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதோடு, அந்த மாநாட்டில் ஊராட்சிகளும், ஒன்றியங்களும், பள்ளிக் கட்டடங்கள் கட்டுவது, குடிநீர், வழங்குவது போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு, உதவ 'ரூரல் டெவலப்மென்ட் கார்ப்பொரேஷன்' என்ற ஒன்றை அமைக்க வேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அவைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து என்ன முடிவுக்கு வந்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் எல்லாம் சிபார்சுகளாகவே கருதப்படும். அவை அந்தந்தத் துறைகளின் பரிசீலனையில் இருக்கின்றன. பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும், மற்ற வசதிகளைச் செய்வதற்கும் தனி கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்கும் முயற்சி நடைபெறுகிறது. அதுபற்றி எல்.ஐ.சி.-ஐக் கேட்டிருக்கிறோம். அவர்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி, அதன் பின்னர்தான் ஆராய வேண்டும் என்ற நிலையில் இருக்கிறார்கள். ஆனால் நமது அரசு தொடர்ந்து அதுபற்றி முயற்சி செய்து வருகிறது.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister in pursuance of the decisions taken at Kodaikanal Conference by the officials and non-officials there, how many recommendations have been implemented so far?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதிலே பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. துறையினரால் சிலபல ஆராயப்பட்டு வருகின்றன. சிலபல ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில முக்கியமான கருத்துக்கள் நிர்வாகச் சீரமைப்புக் குழுவினரின் பரிசீலனைக்கு விடப்பட்டிருக்கிறது. எந்த எந்தக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதற்குத் தனியாகக் கேள்விபோட்டால் பதிலளிக்கப்படும்.

**திரு. கே. எ. வகாப்:** ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும், ஆணையர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. மறுபடியும் ஆணையர்களுக்கு மட்டும் அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளின் வாயிலாக அறிகிறோம். பெருந்தலைவர்களது பொறுப்புக்கேற்ப அவர்களுக்கும் அதிக அதிகாரங்களை அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பொதுப்படையாக அப்படிச் சொல்வதற்கில்லை. நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்கு என்ன என்ன அதிகாரங்கள் தேவையோ அவை ஆணையாளர்களிடத்திலும், பெருந்தலைவர்களிடத்திலும் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது. பெருந்தலைவர்கள், ஆணையாளர்கள் ஆகியோரிடத்தில் என்ன என்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதைப்பற்றித்தான் நிர்வாக சீரமைப்புக் குழுவினர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது அறிக்கை கிடைத்த பிறகு அதைப் பரிசீலனை செய்து மேற்கொண்டு முடிவு எடுக்கலாம்.

**திரு. ஆ. பரந்தாமன்:** ஆசிரியர்களை மாற்றுகிற அதிகாரத்தை பெருந்தலைவர்களிடம் இருந்து அரசு எடுத்துவிட்டது என்கிற அதிருப்தியினை ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அந்த மகாநாட்டில் தெரிவித்தார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கருத்து தெரிவித்தார்கள், அதன் அடிப்படையில் தான் சர்வ கட்சித் தலைவர்களை அழைத்து வைத்துப் பேசி, சர்வகட்சித் தலைவர்களின் கருத்துப்படி ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு அரசு இப்போது செயல்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether any recommendation has been made in the Committee so as to separate the Panchayat Union Administration from the Revenue Department? If so, what is the action taken so far?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வருவாய்த்துறை ஒரு பகுதியாகவும், வளர்ச்சித்துறை ஒரு பகுதியாகவும் இருக்க வேண்டுமென்ற கருத்து அந்த மகாநாட்டில் கலந்துகொண்டவர்களாலும், மற்றவர்களாலும் தெரிவிக்கப் பட்டது. கொள்கை அளவில் அதை ஏற்றுக்கொண்டு, அதைப்பற்றி ஆராய நிர்வாகச் சீர் அமைப்புக் குழுவினர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களது அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு அதுபற்றி முடிவு மேற்கொள்ளப்படும்.

### *Widening of Ramakrishna Mutt Road*

* 163 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the total area acquired from private parties for the widening of the Ramakrishna Mutt Road, Mylapore, Madras near Luz; and

(*b*) the details of the compensation paid therefor?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஐந்து மனைகளும் 709 சதுர அடியும் கையகப்படுத்தப்பட்டன.

(இ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளன.

### நகரப் பஞ்சாயத்துக்களுக்கு துப்புரவு ஆய்வாளர்கள்

*** 164. வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு சானிடரி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம்.

**திரு. என். கிட்டப்பா:** அது எப்போது முதல் செயல்பட இருக்கிறது என்பதுபற்றி அரசு அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நமது மாநிலத்தில் 112 துப்புரவாய்வாளர்கள் ஊராட்சி, நகராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். எந்த எந்த ஊராட்சிகளில் துப்புரவு ஆய்வாளர்கள் இல்லையோ

@ 296–299-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





அங்கெல்லாம் ஊராட்சி நிர்வாக அதிகாரிகள் அந்தப் பணியினை மேற்கொண்டு செயல்படுகிறார்கள். ஆனால் துப்புரவாளர்களை போட்டுக்கொள்ளக்கூடிய நிதி வசதியுடைய ஊராட்சி ஒன்றியங்கள் அதுபற்றி வேண்டுமென்று கேட்டால் பரிசிலனை செய்யலாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** ஊராட்சி மன்றங்களில் பணிபுரியும் துப்புரவாய்வாளர்கள் மன்றத் தலைவர்களின் ஆணைகளை மதிக்காமல் செயல்பட்டு வருவதை அரசு அறியுமா? ஆகவே துப்புரவாய்வாளர்களை மன்றத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இ.ஓ., பெருந்தலைவர் ஆகியவர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா? மன்றம் ஏகோபித்து ஒரு தீர்மானம் போட்டால் அந்த இடத்தில் உள்ள துப்புரவாய்வாளரை உடனடியாக அந்த இடத்தை விட்டு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துப்புரவாய்வாளர்களின் பணிகளைக் கட்டுப்படுத்தி, வேலை வாங்கிக் கொள்கிற பொறுப்பு ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஆணையாளரிடம்தான் இருக்கிறது. எங்காவது மதித்து நடக்காமல் இருக்கிறார்கள் என்றால் அது நல்வாழ்வுத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். காரணம் இன்றைக்கு அவர்களை நியமிக்கிற பொறுப்பினை நல்வாழ்வுத்துறை தான் வைத்துக் கொண்டிருக்கிறது.

### சென்னை மாநகரிலுள்ள சிலைகள் பராமரிப்பு

*** 165. வினா—புலவர் சி. பழனிச்சாமி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள சிலைகளை எல்லாம் அடிக்கடி சுத்தம் செய்வதற்கு மாநகராட்சி மூலம் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**புலவர் சி. பழனிச்சாமி:** வள்ளுவர், காந்தியடிகள், அண்ணா போன்றவர்களின் சிலைகளில் உட்கார்ந்து பறவைகள் எச்சமிட்டு அசுத்தப்படுத்துகின்றன. அதைப் பார்க்கும்போதே மனதிற்கு வேதனையாக இருக்கிறது. எனவே மாதத்திற்கு ஒரு முறை, இருமுறை அவைகளைச் சுத்தம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

[1972 டிசம்பர் 14

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இரண்டாவது உலகத் தமிழ் மகாநாட்டின்போது அமைக்கப்பட்ட சிலைகளை பொதுப்பணித் துறை கவனித்துக் கொண்டு வருகிறது. மற்ற சிலைகளைக் கவனித்துக் கொள்கிற பொறுப்பு மாநகராட்சியிடம் இருக்கிறது. சரியான முறையில் அவற்றைப் பாதுகாக்க பொதுப்பணித் துறையும் மாநகராட்சியும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆ. பரந்தாமன் :** கடந்த சில நாட்களாக வன்முறையாளர்களுக்கு என்னவோ தமிழ்நாட்டில் உள்ள சிலைகளின் மீது கோபம் வந்துகொண்டிருக்கிறது. சிலைகளை உடைத்துப் போடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் இருந்து சிலைகளைப் பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக வைக்கப்பட்டுள்ள எல்லாச் சிலைகளையும் பாதுகாக்க காவல் துறையினர்களும், நகராட்சி மன்றங்களும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகின்றன, வன்முறையாளர்கள் எந்தயிடத்தில் வைக்கப்பட்ட சிலையாக இருந்தாலும், அதை உடைக்க முற்பட்டால் காவல்துறையினர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்கின்றனர்.

**திரு. எம். தேவராசன் :** பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் சின்னமாக இன்னமும் விளங்கிக் கொண்டிருக்கிற சிலைகளை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்திய மக்களின் சுதந்திர உணர்ச்சிக்கு விரோதமாக இருந்த அன்னியர்களின் சிலைகள், இந்திய மக்களின் வெறுப்புக்குள்ளான அன்னியர்களின் சிலைகள் ஏற்கெனவே அப்புறப்படுத்தப் பட்டுவிட்டன. ஆயினும் இந்திய மக்களின் நன்மைக்காகப் பாடுபட்ட அன்னியர்களின் சிலைகள்—சர் தாமஸ் மன்றோ போன்றோரின் சிலைகள்—பழைய வரலாற்றை நினைவுபடுத்துகின்ற, தொடர்ப்புபடுத்துகின்ற சின்னமாக இன்னமும் இருக்கின்றன.

**திரு. என். கிட்டப்பா :** நகராட்சிப் பகுதிகளில் சிலைகளை வைக்கும்போதே அவற்றைப் பராமரிக்கின்ற பொறுப்புக்கும் நிதிவசதி செய்யப்படுகிறது. இருந்தும் கூட சில நகராட்சிகள் அந்தப் பகுதியில் வைக்கப்பட்ட சிலைகளைச் சரிவர பராமரிக்காவிட்டால் அவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எந்த இடத்தில் எந்தச் சிலை சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை என்கிற விவரத்தை அளித்தால்



1972 டிசம்பர் 14]

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அண்மையில், தந்தை பெரியார் அவர்களுடைய சிலை ஒரு குறிப்பிட்ட நகரத்தில் சேதப்படுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதிலே ஈடுபட்டிருப்பவர்கள் மீது முறைப்படி காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மேலும் சிலையைப் பழுதுபார்த்து சீர்படுத்துவதற்கான முயற்சியை அந்த நகராட்சி மன்றத்தினரும், அந்த நகரிலுள்ள பெருமக்களும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

## தொத்துநோய் சிகிச்சைக்கு தனி மருத்துவ நிலையங்கள்

**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை

* 166. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொத்து நோய்களுக்கென தாலூகா தலைநகரங்களில் தனி மருத்துவ நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள மாதிரி, புயல், வெள்ளம் வருகின்ற காலத்தில், காலரா, அம்மை போன்ற தொத்து நோய்கள் பரவுவதற்கு ஏதுவாக ஆகிவிடுகிறது. ஆனால், பொது மக்களிலே பலபேர் இந்த நோய்களைத் தடுப்பதற்கு மருத்துவ மனையை அடையாமல், மாரியம்மாவிடத்திலும், காளியம்மாவிடத்திலும் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, குறிப்பிட்ட முறையில், ஒவ்வொரு தாலூகா தலைநகரத்திலாவது இத்தகைய தொத்துநோய் பரவாமல் தடுக்கும் முயற்சிகளை எடுக்க அரசு இனியேனும் முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தொத்து நோய்களைப் பற்றி அடிப்படையான கருத்து, தொத்து நோய் பரவி வருகின்ற காலத்தில், மக்களுக்குத் தடுப்பு ஊசியைப் பரவலாக போடுகின்ற திட்டத்தை நிறைவேற்றுகின்ற நோக்கத்துடன்தான், அண்மையில், தஞ்சையில் ஏற்பட்ட புயலுக்குப் பின் அங்கே காலரா தடுப்பு ஊசி, ஆயிரக்கணக்கான மக்களுக்குப் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் காலரா போன்ற தொத்து நோய்க்கு ஆளானவர்கள், அந்த நோயினை மறைத்து விடுவார்களானால்

அரசாங்கம் ஏதும் செய்ய முடியாது. அந்த உண்மை அரசுக்குத் தெரியுமானால், அவர்களை தனியிடத்தில் வைத்து சிகிச்சை செய்ய முடியும். இப்பொழுது, ஒவ்வொரு தாலூகா மருத்துவ மனையிலும் 6 படுக்கை கொண்ட பகுதி இந்நோயாளிகளுக்காக இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக, தாலூகா தலைநகரங்களில் தனி மருத்துவ நிலையம் ஏற்படுத்துவது என்பது மிகப் பெரிய விரிவான திட்டம். அந்த அளவுக்கு நோயாளிகள் இருக்க மாட்டார்கள்.

## *Tuberculosis Chemotherapy Centre, Madras*

* 167 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether free X-ray check-up was done by the Tuberculosis Chemotherapy Centre at Chetput, Madras during August 1972; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) 1972-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் விடுதலை நாள் வெள்ளி விழா கொண்டாட்டத்தின்போது சுமார் 50 பேர்களுக்கு இலவசமாக எக்ஸ்-கதிர் படங்கள் எடுக்கப்பட்டன.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, பொருளாதார நிலையில் பின்னணியில் இருக்கும் ஏழைகளுக்கு உதவியாக மாநிலத்திலுள்ள ஏனைய பகுதிகளுக்கும் இவ்வசதி விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சில மருத்துவ மனைகளில் இந்த எக்ஸரே-கதிர் படம் எடுக்கின்ற பகுதி இருக்கிறது. அது வசதியற்ற ஏழை மக்களுக்கு இலவசமாகத்தான் இருக்கும். அதற்கான சிகிச்சை முறைப்படி நடைபெறும். ஆனால், இங்கே நடைபெற்ற வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின் அடையாளமாக சென்னையில் கெமோ தொராப்பி சென்டருக்காக செஸ்ட் இன்ஸ்டிட்யூட்டில் 50 புற நோயாளிகளுக்கு கதிர்ப் படம் எடுத்துத் தரவேண்டுமென்று கேட்டார்கள். அது எடுத்து தரப்பட்டிருக்கிறது. அது வெள்ளி விழா நிகழ்ச்சியை ஒட்டி ஏழைகளுக்குச் செய்திருக்கிற சிறப்புப்பணி என்ற முறையிலே செய்யப்பட்டிருக்கிறது.



## *Leprosy Centre, Tiruchengode*

* 168 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that financial assistance is given by the Government to the Leprosy Centre at Gandhi Ashram at Tiruchengode during recent years; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

## ஈரோடு மருத்துவ மனையில் வழங்கப்பட்ட பால்

* **169. வினா—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 ஜூன் மாத மத்தியில் ஈரோடு அரசு மருத்துவ மனையில் வழங்கப்பட்ட பாலைக் குடித்ததால் 100-க்கும் அதிகமானவர்கள் வாந்தியெடுத்தது உண்மையா?

(இ) கெட்டுப்போன பாலை வழங்கியவர் பேரில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) 1—6—1972-ம் நாளிலிருந்து இந்த மருத்துவ மனைக்கு ஈரோடு கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியம் பால் வழங்குகிறது. அதற்குமுன் இரண்டு திங்கள் தனிப்பட்ட குத்தகைக்காரர் ஒருவரால் பால் வழங்கப்பட்டு வந்தது. 1—6—72-ம் நாளிலிருந்து மருத்துவ மனைக்குப் பால் அவர் வழங்கா விட்டாலும், மருத்துவ மனைக்கு வேண்டிய கீரைகள், காய்கறிகள், விறகு போன்றவைகளைக் குத்தகையின் அடிப்படையில் அவர்தான் வழங்கி வருகிறார். 11—6—72-ம் நாள் ஈரோடு பால் வழங்கு ஒன்றியம் வழங்கிய பாலைக் காய்ச்சி நோயாளிகளுக்குக் கொடுத்ததில் அவர்களில் 102 பேர் வாந்தி எடுத்தனர். உடனே அவர்களுக்குத் தகுந்த சிகிச்சையளிக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் குணமடைந்து மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்பட்டுவிட்டனர். இச்சம்பவத்தினால் உயிர்ச் சேதம் எதுவும் இல்லை. ஆயினும், கீரைகள், காய்கறிகள் போன்றவைகளை வழங்கும் குத்தகைக்காரர் மீதும் சம்பவத்தன்று பாலைக் காய்ச்சிய மருத்துவ மனை சமையற்காரர் மீதும் ஐயம் ஏற்பட்டு காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு அத்துறையினர் இது குறித்து புலன் ஆய்வு செய்து வருகின்றனர். அத்துறையின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகின்றது.

[1972 டிசம்பர் 14

*திரு. கே. எ. வகாப் :* தலைவர் அவர்களே, இப்படி விடுதிகளில் தரப்படும், பால், உணவு, போன்றவைகளால் பல நேரங்களில் இப்படி அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. கூடுமானவரையில், இவைகளை நல்லவகையில் பரிசோதனை செய்து, அதற்குப் பிறகு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* தலைவர் அவர்களே, தனிப்பட்ட ஒருவர் தருகிற பாலாக இருந்தாலும் கூட அதுபற்றி ஐயம் அதிகமாக எழ இடம் இருக்கிறது. இது கூட்டுறவுப் பால் வழங்கு ஒன்றியத்தினால் வழங்கப்பட்டது. இந்தப் பால் வேறு சில மருத்துவ மனைகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே யாரும் வாந்தி எடுக்கவில்லை. இங்கே மட்டும் இந்நிலை ஏற்பட்டதற்கு அவர்கள் உண்ட வேறு உணவு காரணமாக இருக்கக் கூடும் என்றும் கூடக் கருதப்படுகிறது. சாதாரணமாக, பால் வழங்குகிறபொழுது, சமையல்காரர்கள் ஒரு குவளை குடிக்கக் கூடும். ஆனால், இந்தக் குறிப்பிட்ட சமையல்காரர் தான் மட்டும் குடிக்காமல், மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். ஆகவே, அதிலே சில ஐயத்திற்கு இடமான சூழ்நிலைகள் இருப்பதால், அதுபற்றி போலீஸ் விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது.

*திருமதி ஜோதி வெங்கடாசலம் :* தலைவர் அவர்களே, இந்தப் பாலைக் காய்ச்சும்பொழுது ஏதோ விஷப் பூச்சி விழுந்ததாகவும், அதை எடுத்துவிட்டு பரிமாறியதாகவும் கேள்விப்பட்டேன். அதைப்பற்றி அரசு ஆராய்ந்ததா ?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* அது தவறி விழுந்ததா என்பதும் தெரியவில்லை, அப்படி விழுந்ததாக ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. ஆனால், சமையல் காரருக்கு, ஏற்கனவே பால் வழங்கிய பால்காரரோடு மிக நெருங்கியத் தொடர்பு இருக்கிறது என்ற ஒரு கருத்து இருக்கிறது. இந்த ஆண்டு பால் வழங்கும் பொறுப்பு கூட்டுறவு ஒன்றியத்திற்குக் கொடுக்கப்பட்டதால், இந்த சமையல்காரர் ஏதாவது தவறு செய்திருக்கக் கூடும் என்ற ஐயத்திற்கு இடமிருக்கிறது. ஏனென்றால், பால் காய்ச்சிய சமையல்காரர் தவிர, மற்ற சமையல் காரர்களெல்லாம் பால் சாப்பிட்டதாகத் தெரிகிறது. அவர் மட்டும் சாப்பிடவில்லை. எனவே, ஐயத்திற்கு இடமிருக்கிறது.

*புலவர் சி. பழனிச்சாமி :* தலைவர் அவர்களே, அரசினர் மருத்துவ மனைகளில் பால், பழம் போன்றவற்றைக் கொடுக்கின்ற குத்தகைகாரர்கள், லாப நோக்கத்தைக் கருத்தில் கொண்டு தரமில்லாத பொருள்களாகக் கொடுக்கிறார்கள். அதை மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* தலைவர் அவர்களே, குத்தகைக்காரர்கள் தவறு செய்யக் கூடிய நிலைமைக்கு ஏதாவது ஒரு காரணம் இருக்குமானால், அது அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய பொறுப்பிலேயுள்ள பணியாளர்கள் பொறுப்



1972 டிசம்பர் 14]

புணர்ச்சி இழந்திருப்பதுதான். அப்படி இருப்பவர்கள் எளிய சாதாரண நிலையிலிருப்பதால், அவர்கள்மீது அந்தக் குற்றச்சாட்டை வைத்து நட வடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. அவ்வப்போது சென்று பார்வையிட்டு, ஒவ்வொரு பொறுப்பிலும் குறைகள் இருந்தால், சுட்டிக்காட்டுவதற்கு அந்த இலாக்காவில் அதற்கென்றே தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேற்பார்வைச் செலவு பொது மக்களுக்கு ஆகின்ற பணிச் செலவை நோக்க மிகக் குறைவாகவே இருக்கவேண்டும். அதிகம் ஆகக் கூடாது என்ற காரணத் தினால் அதை அதிகமாக்க முடியவில்லை. மேற்பார்வைக்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

*திரு. ஆ. பரந்தாமன் :* மருத்துவ மனைகளுக்கு வழங்குகின்ற பாலையும் மற்ற உணவுப் பொருள்களையும் முன்னதாகவே பரிசோதிக்க மருத்துவர்கள் இருக் கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* உள்ளபடியே பால் தரமான பாலா என்று சோதிக்கப்படுகிறது. ஸ்பெசிபிக் கிராவிட்டி, அடர்த்தி பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் பாலைப் பார்த்தாலே அதன் தரம்பற்றித் தெரியும். சந்தேகம் ஏற்பட்டால் பரிசோதிக்க முடியும். மருத்துவ மனைகளில் கொடுக்கப்படும் பாலே கெட்டதாக இருந்தால், பிறகு மக்கள் பாலும் சாப்பிட முடியாது, மோரும் சாப்பிட முடியாது. ஒவ்வொரு வீட்டிலும் பரிசோதிக்க முடியாது. மனிதனே ஒரு பரிசோதனைச் சாலையாக இருக்கிறான், இந்தப் பரிசோதனையிலே அவன் வெற்றி பெறுவான் என்று கருதுகிறேன்.

**இராணிப்பேட்டையில் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக்குக் கட்டடம்**

*** 170. வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக்காக இராணிப்பேட்டையில் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீட்டு தொகை என்ன ?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* (அ) ஆம்.

(இ) ரூ. 15 இலட்சம்.

*திரு. கே. எ. வகாப் :* தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் எப்பொழுது முடிக்கப்படும் ? அது முடிவடைந்தால், அங்கே கால்நடை மருத்துவ ஆராய்ச்சியை எப்பொழுது ஆரம்பிக்கத் திட்டமிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** தலைவர் அவர்களே, இப்பொழுதே ஏறத்தாழ 3-லே 2 பங்கு அளவு கட்டிடப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அந்தக் கட்டிடப் பணிக்கு 11—8—1972 அன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டிடம் முடிந்ததற்குப் பின்னரும் குளிர்சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும். ஏனென்றால், வாக்சின், சீரம் போன்ற பொருள்கள் பாதுகாத்து வைக்கப்படுவதும் அது போன்று மருந்துப் பொருள்கள் பாதுகாத்து வைக்கப்படுவதும் மிக அவசியம். எனவே, அதற்கான விரிவான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அவைகள் அனைத்தையும் சேர்த்து அங்கே முறையாக அமைக்க இன்னும் சில காலமாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know the names of places where arrangements have been made to carry on Veterinary research work in our State ?

மு.ப. 9-00 THE HON. THIRU K. ANBAZHAGAN : Most of the vaccines are prepared only at Ranipet in the Veterinary Research Institute. Other research stations are connected with farm work concerning Animal Husbandry.

***திரு. கா. வேழவேந்தன் :*** இந்த ராணிப்பேட்டையில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் தயாரிக்கப்படுகிற மருந்துகளுக்கு மற்ற மாநிலங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. இதை விரிவுபடுத்தும் அளவில் ஆய்வு செய்யப்படுகிற இந்த மருந்துகளையும் அதிகமான அளவில் உற்பத்தி செய்ய அரசு முன் வருமா ? அதற்கு என்று ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்படுமா ?

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** அந்த அடிப்படையில்தான் ஏற்கனவே உள்ள கட்டடமும் அதிலுள்ள அமைப்புகளும் எந்தவிதமான வளர்ச்சிக்கும் ஈடு கட்டாது என்ற நோக்கத்தோடு இந்தப் பெரிய கட்டடமும் பல்வேறு பகுதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றும் தொடங்கப்பட்டு ஒவ்வொரு கட்டமாக விரிவுபடுத்த முடியும். பல்வேறு கட்டடங்களில் விரிவுபடுத்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

THIRU B. VENKATASWAMY : Sir, cross-breed animals are getting foot and mouth disease and many of them have died due to that disease. So may I know whether there is any proposal to conduct research on the foot and mouth disease at Ranipet ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : There is a section which is going on with the research programme for the prevention of foot and mouth disease. I do not know the actual position as to has succeeded.



### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனைகளுக்கு பெண் டாக்டர்கள்

* 171. வினா—***திரு. சு. துரைசாமி :*** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள E.S.I. மருத்துவமனைகளில் M.B., B.S. படித்த பெண் டாக்டர்கள் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :*** (அ) & (இ) உண்மை இல்லை. இம்மாநிலத்தில் மூன்று இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் உள்ளன. மூன்றிலும் பெண் டாக்டர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதன் விபரம் பின்வருமாறு :—

| மருத்துவ மனையின் பெயர் | வேலையில் அமர்த்தப்பட்டிருக்கும் பெண் டாக்டர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| மருத்துவமனை, சென்னை | 24 |
| மருத்துவமனை, கோயம்புத்தூர் | 16 |
| மருத்துவமனை, மதுரை | 2 |

எல்லாப் பெண் டாக்டர்களும் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள்.

### *Mukhyasevikas absorbed in Women's Welfare Department*

* 172 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) the number of "Mukhyasevikas" who were under the services of the State Social Welfare Advisory Board till 31st March 1961 and absorbed in the Women's Welfare Department as per G.O. Ms. No. 2078, dated 22nd July 1961 of the Rural Development and Local Administration Department; and

(b) whether they have been given weightage and increment from the date of their absorption?

***மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :*** (அ) 20.

(இ) இல்லை.

THIRU N. DENNIS: Sir, may I know from the Hon. Minister whether the Government are aware that there are still aggrieved 'Mukhyasevikas' whose services have not been regularised from the date of appointment in the Social Welfare Board as per the protection given in the concerned Government Order?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இந்த முக்கிய சேவிகாக்கள் 1961-ம் ஆண்டு வரையில் தனிப்பட்ட முறையில் மத்திய அரசாங்கத்தின் சமூக நல பணித் திட்டத்தின் கீழ் பணி புரிந்தவர்கள். ப்ராஜக்ட் இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி மூலம் அவர்கள் வேலை செய்தார்கள். ஊதியமும் தரப்பட்டிருக்கிறது. ப்ராஜக்ட் இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி மூலம் பணியாற்றியவர்களுக்கு அரசாங்கச் சார்பில் கொடுக்கப்படுகிற ஊதிய உயர்வு தரமுடியவில்லை என்று இயக்குநர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள், அதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. வீ. மலைக்கண்ணன் :** இந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற முக்கிய சேவிகாக்களின் பணிகள், ஊராட்சி ஒன்றியங்களில் அவர்கள் தேவை இல்லை என்று கருதப்படுகிறது. ஆதலால் வேறு தகுதியான துறைகளுக்கு அவர்களை மாற்றி பதவி தரும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படி எந்த ஊராட்சி ஒன்றியமும் முக்கிய சேவிகாக்களின் பணி தேவையில்லை என்று யாரும் கூறவில்லை. அவர்களின் பணி அதிகமாகியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பல்வேறு பணிகளை, மகளிர்க்குள்ள நல்ல பல்வேறு பணிகளை, முக்கிய சேவிகாக்கள்தான் முன் நின்று கிராமங்களில் செய்து வருகிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்போது ஒருசில முக்கிய சேவிகாக்கள் அவர்களுக்குரிய சம்பளம் கிடைக்கவில்லை என்று ஒரு புகார் சொல்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படுமானால், அது சம்பந்தமாக எவ்வளவு பணம் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படும்? அதிகப் பணம் இழப்பு ஏற்படவில்லை என்று சொன்னால் அவர்கள் எப்போது போர்ட் சர்வீஸில் ஏறினார்களோ, அந்தத் தேதி முதல் ரெகுலரைசேஷன் செய்து கொடுப்பதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் ஏற்படும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அந்த வாரியத்தின் அடிப்படையில் பணியாற்றுகிற எல்லோருக்குமே ப்ராஜக்ட் இம்ப்ளிமென்டேஷன் கமிட்டி மூலம் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அரசுப்



பணியாளர்களாகக் கருதப் பணியாளர்களாகக் கருதப்படவில்லை. அரசுப் பட்டால்தான் ஊதிய உயர்வு போன்ற அதற்குரிய வகைகள் செய்யப்படும். அதனால் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது.

THIRU N. DENNIS: Sir, may I know whether any represen-tation was received by the Government from the aggrieved 'Mukh-yasevikas' duly recommended by the Collectors for the regulari-sation of their services as per the protection given in the Govern-ment Order from the date of their appointment in the Social Welfare Board ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அவர்கள் கோரிக்கை ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கிடைக்கும் பாறைப்படிவங்கள்

* 173. வினா—**திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருகத்தில் கிடைக்கும் பாறைகள் சலவைக் கற்கள் தயாரிக்கப் பயன்படுவதாக சொல்லப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) தென் ஆற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள வீர சோழபுரம், நத்தம், பணயங்கல், தியாகதுருகத்திற்கு அருகிலுள்ள கொங்கராய பாளையம் ஆகிய கிராமங்களில் டாலிரைட் என்னும் கருவண்ணமுறைப் பாறைகள் சிற்சிறு படிவங்களாகக் கிடைக்கின்றன.

### சைக்கிள் தொழிற்சாலைகள்

* 174. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் புதிய சைக்கிள் தொழிற்சாலைகளைத் துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூரில் ஒரு சைக்கிள் தொழிற்சாலை கூட்டுறவுமுறையில் துவக்கப்பட்டது. அந்தத் தொழிற்சாலை இன்று இயங்குகிறதா ? ஆமெனில் அது லாபத்தில் நடைபெறுகிறதா,

நஷ்டத்தில் நடைபெறுகிறதா என்பதையும் தமிழ்நாட்டில் தற்போது ஆண் தோறும் எவ்வளவு சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதையு அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :**

| | Per annum |
|---|---|
| Complete Bicycles inclusive of components ... | 7,00,000 Nos |
| B. B. Fittings ... ... ... ... | 50,000 sets |
| B. B. Axles ... ... ... ... | 3,00,000 Nos |
| Bicycle Free Wheels ... ... ... | 3,00,000 Nos |

ஏராளமான சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தஞ்சாவூரி அஸெம்பளிங் செக்ஷன் நம் அரசு சார்பில் இருந்ததாக நினைவு. விவரம் இல்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** டி.ஐ. சைக்கிள்ஸ் மூலம் தயாரிக்கப்பட்டு வருகி சைக்கிள்களுக்கு வெளி நாடுகளில் நல்ல சந்தை இருப்பதாகத் தெரிகிறது ஆகவே தமிழ்நாடு அரசே டிட்கோ மூலம் ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது டி.ஐ. சைக்கிள்ஸ் தொழி சாலையில் கிட்டத்தட்ட இரண்டு லட்சத்திலிருந்து மூன்று லட்சம் சைக்கிள்கள் உற்பத்தி செய்யக்கூடிய அனுமதியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். வெளி நாடுகளுக்குச் சென்று தங்கள் கிளைகளை அங்கு தொடங்கலாம் என்ற முயற் யில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**திரு. கோ. இளங்கோவன் :** புதுத் தொழிற்சாலைகள் உண்டாக்கப்போவ தில்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பழைய தொழிற்சாலைகளை யாவது விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்பு கூறியபடி இப்போது மூன்று லட்சத்திற்கு நமக்கு அனுமதி இருக்கிறது. நம்முடைய தேவை போக வேறு மாநிலங்களில் இந்தத் தொழிற்சாலையை விரிவுபடுத்துகிற முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்த அளவிற் குள்ள உற்பத்தி நம்முடைய தேவையைப் பூர்ணமாகப் பூர்த்தி செய்கிறது என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is a cycle manufacturing unit in the Industrial Estate at Krishnagiri. It is stated that there is no demand in the market for the cycles manu-



factured there. May I know from the Hon. Minister whether it is a fact and whether he had occasion to know it during one of his visits to that place?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சைக்கிள் அஸெம்பளிங் யூனிட், இது போன்ற பெரிய கம்பனிகளோடு சிறிய தொழிற்சாலைகள் போட்டியிட முடிய வில்லை என்பதும் உண்மை. அரசாங்கத்தின் சார்பில் நடத்தப்படுகிற அஸெம்பளிங் செக்ஷன்கூட நஷ்டத்தில் இருப்பதும் உண்மை.

### *Industrial Training Institute, Hosur.*

* 175 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to introduce radio mechanism course in the Industrial Training Institute, Hosur; and

(b) if so, from when?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, there is a large demand for radio mechanism course all over the State especially in the Hosur taluk and people are willing to take to that course. So, will the Hon. Minister introduce that course in the State? Also television is being introduced in India and there is also a large demand for it. So, may I know from the Hon. Minister whether he will introduce this kind of mechanism in all the Industrial Training Institutes of Tamil Nadu especially in the Hosur taluk?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, ஓசூர் ஐ.டி.ஐ.-யில் 1973-74 ஆண்டில் எலெக்ட்ரிஷியன் என்ற ஒரு புதிய கோர்ஸ் சுமார் ரூ. 42,200 செலவில் தொடங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்து இருக்கிறது. ரேடியோ மெகானிசம் கோர்ஸ் தேவை என்று அரசாங்கம் தற்போது கருதுகிறது. இப்போது நான்கு ஐ.டி.ஐ.-யில்—அதாவது அம்பத்தூர், கோயம்புத்தூர் இன்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்களிலும், இன்டஸ்டிரியல் டிரெயினிங் சென்டர் பார் விமன், சென்னை, இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் சென்டர், கேளிபி யும்—ரேடியோ மெகானிசம் கோர்ஸ் இருக்கிறது. வேறு இடங்களில் இதை மறுபடியும் டைவர்சிபிகேஷன் கொண்டு வரலாமா என்பது பற்றியும் நம் முடைய அரசாங்கம் தற்போது பரிசீலித்து வருகிறது.

THIRU B. VENKATASWAMY : There is a great demand for Radio Supervisors in Bangalore. So may I know from the Hon. Minister, since most of the people trained in Industrial Training Institutes are unemployed, whether he would introduce this course in Industrial Training Institute, Hosur, so that many people will be benefitted ?

THE HON. THIRU S. MADHAVAN : I have already explained that this course of ' electrician ' is being introduced in Industrial Training Institute, Hosur. It will be implemented in 1973–74. In the Fifth Five-Year Plan, we are going to examine the introduction of ' Radio Mechanism ' Course in some other Industrial Training Institutes. We are already having this course in four Industrial Training Institutes in our State.

### கைதிகளுக்கு பள்ளிப் படிப்பு

*176. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய சிறைச்சாலைகளில் கல்வி பயில விரும்பும் நீண்டகால கைதிகளுக்குச் சிறைச்சாலைகளில் பள்ளிகளை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை. எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் ஆரம்பப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. மற்றும் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) அல்லது தமிழாசிரியர் தேர்வுகள் எழுத விரும்பும் கைதிகளுக்குச் சிறைப் பள்ளிகளில் அலுவல் புரியும் ஆசிரியர்களைக் கொண்டும் சிறைச்சாலையின் பட்டதாரி அதிகாரிகளைக் கொண்டும், சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், தேர்வுக் கட்டணம் ஆகியவைகள் அரசு செலவில் வழங்கப்பட்டு அதைச் சார்ந்த மற்ற செலவினங்களையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு சிறைச்சாலையிலும் எல்லா மொழிகளிலுமாக ஏறக்குறைய 10,000 நூல்கள் கொண்டு நூலகமும், கைதிகளின் கல்வி அறிவையும் பொது அறிவையும் வளர்க்க வேலூர் மத்திய சிறைச் சாலையில் இரவுப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் துவக்கப் பள்ளிகள் மத்திய சிறைச்சாலையில் நிறுவுவதாகச் சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், நீண்டகாலக் கைதிகளுக்கு அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா ? 1967-க்கு முன்னால்





பல தடவைகள் சிறைச்சாலை செல்ல நேரிட்டபோது பார்த்து இருக்கிறேன், அங்கே மிக மோசமான புத்தகங்களை, கிழிந்து போன புத்தகங்களை, கைதிகளுக்கு அறிவை புகட்டக்கூடிய முறையில் இல்லாத புத்தகங்களை அதிகமாக வைத்து இருந்தார்கள். அத்தகைய நிலைமைகளை மாற்ற நம்முடைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இப்போது கல்வி கற்பதற்கு ஏராளமான வசதிகள் செய்து கொடுத்து இருக்கிறோம். தொடக்கப்பள்ளி கல்வி எல்லா சிறைச்சாலைகளிலும் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படிக்க விரும்புகிறவர்களுக்குச் சிறைச்சாலைகளிலேயே சிறப்புப் பயிற்சி அளித்து ஊக்கம் தருகிறோம். அதன் விளைவாக 1970-ம் ஆண்டுகூட கைதிகள் ஏழு பேர் மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதி தேர்வு பெற்று இருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் தேர்வு எழுதி ஏழு பேர் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். இதுபோன்ற பல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இப்போது புதிதாக இரவுப் பள்ளிகளும் தொடங்கப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. நூலகத்திலுள்ள நூல்களைப் படித்து சிறைக் கைதிகள் இப்போது நல்ல வகையில் பயன் பெற்று வருகிறார்கள் என்றே கருதுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இவ்வாறு சிறைச்சாலையில் நடத்தப்படும் பள்ளிகளில் நீண்டகாலக் கைதிகள் தேர்வுகள் எழுதித் தேறி இருந்தால், அவர்களே அந்தப் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது ஒரு பெரிய பிரச்னையாகிக் கொண்டிருக்கிறது. சிறைத் தண்டனை பெற்றவர்கள் என்ற காரணத்தால் அவர்களை அரசு அலுவலர்களாகச் சேர்க்கக் கூடாது என்ற ஒரு கருத்தும், சேர்க்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தும் இருந்து வருகிறது. பொதுவாக இப்படிப்பட்டவர்களுக்குக் கருணை காட்டுவது நியாயம் என்றே அரசு கருதுகிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, இப்படிச் சிறைச்சாலையில் அளிக்கப்படும் கல்வி போதனைகளில், மார்க்க போதனைகள் அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்களுக்கு அளிக்கப்படுகிறதா ? அப்படியில்லையென்றால், இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர்களுக்கு குரானும், கிருஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கு பைபிளும், ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கு திருக்குறள், கீதை போன்றவைகளையும் போதிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்கள் அப்படிப்பட்ட சலுகைகள் வேண்டுமென்று கேட்டால், செய்து தா இப்போது கூட வழி இருக்கிறது.

**புலவர் திரு. சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் புலவர் பட்டம் பெற்று பல பேர் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படிப் பட்டம் பெற்றவர்களுக்கு உடனடியாக வேலை தேடித்தர அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் படித்து வெளியே வருகிறவர்களுக்குத் தனி கவனம் செலுத்த வேண்டுமென்பது உண்மை தான். அதை ஒப்புக்கொண்டிருக்கிறோம். தமிழ்ப் புலவர்களைப் பொறுத்த வரையில், ஏற்கனவே உலகத் தமிழ் மாநாட்டில் தங்களுடைய கவிதைகளை வெளியிட வேண்டுமென்று கேட்டதற்கிணங்க, அது செய்யப்பட்டது. வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில் பொதுவாக நாட்டில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தே இதுவும் அமைந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் மார்க்கங்கள் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் படிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போலவே, பகுத்தறிவு சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் போதிப்பதற்கும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, கைதிகள் அவர்கள் எழுதுகின்ற தேர்வுக்கு ஏற்றவாறு என்னென்ன புத்தகங்கள் வேண்டுமென்று கேட்கிறார்களோ அவற்றைக் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இப்போது பள்ளி அளவில் கைதிகளுக்குப் பாட போதனைகள் கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். பள்ளி அளவுவரை சிலர் தேறியிருக்கிறார்கள். பட்டப்படிப்பு படிக்கவும், தொழில் சம்பந்தமாகப் படிக்கவும் அரசு வழி செய்து கொடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, தொழில் நிலைப் பயிற்சி இப்போதே கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் வெளியே சென்று பட்டப் படிப்பு செய்ய வேண்டுமென்றால், அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. வெளியே சென்று படிப்பது என்றால் தொடர்ந்து அவர்கள் வெளியே சென்று படித்துக் கொண்டு வரவேண்டும். இவற்றில் சிக்கல்கள் இருப்பினும், கைதிகள் அத்தகைய படிப்பில் ஆர்வம் காட்டினால், நிச்சயம் அரசாங்கம் இது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவரவர்களே, அவ்வாறு போதனைகள் செய்யப்படுவது ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்கும், பல ஆண்டுகள் "ண்டனை பெற்ற கைதிகளுக்கும் மட்டும்தானா அல்லது ஒரு வருடத்திற்குள்



தண்டனை பெற்ற கைதிகளுக்கும் கொடுக்கப்படுகிறதா ? மேலும், இந்த வசதி சென்டிரல் ஜெயிலில் மட்டும் தான் இருக்கிறதா ? இதை சப்-ஜெயில்களில் விரிவு படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மத்திய சிறைச்சாலையில் தான் இந்த வசதியிருக்கிறது. கொஞ்சம் அதிகமாகத் தண்டனை பெற்றவர்களுக்குத்தான்—அதாவது ஒரு வருடத்திற்கு மேல்—இந்தப் பயிற்சி அளிக்கப் படுகிறது. அப்போது தான் அவர்கள் இந்த வசதியைத் தொடர்ந்து பயன் படுத்திக்கொள்ள முடியும்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, நீண்டகால தண்டனை பெற்ற கைதிகள் பலர் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற பிறகு வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் சிறைக்குச் சென்றவர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, இது போன்ற கைதிகளுக்கு உடனடியாக வேலை கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இந்தப் பிரச்னைக்கு நான் ஏற்கனவே பதில் சொன்னேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள்தான் இந்தப் பிரச்னையைச் சில ஆண்டுகளுக்கு முன்பாக எழுப்பினார்கள். கைதிகளின் குற்றத்தினுடைய தாரதம்மியத்தைப் பார்த்துத்தான் அரசாங்கம் வேலை கொடுக்க முடியும்.

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் கல்வி வசதி பற்றிச் சொன்னார்கள். நீண்டகால தண்டனை பெற்ற கைதி சிறைச்சாலையில் படித்து, வக்கீல் பட்டம் பெற்று இப்போது உயர் நீதிமன்றத்திலே, சென்னை நீதிமன்றத்திலே வக்கீலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது போன்று பல் வேறு துறைகளிலும் கைதிகள் பட்டம் பெறக்கூடிய வகையில் வசதிகள் செய்து தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறைச்சாலைகளில் எத்தகைய வசதிகள் இருக்கின்றன என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். இது போன்று முயற்சி எடுத்து, கல்வி கற்கவேண்டுமென்ற அடிப்படையில் வந்தால் அவர்களுக்குத் தகுந்த முயற்சிகளைச் செய்து தருவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விரும்புகிறவர்களுக்குக் கற்க வசதி இருக்கிறது என்று சொன்னார்கள். கைதிகளுக்கு நிறைய ஓய்வு இருக்கிறது. அந்தக் காரணத்தால் எல்லாக் கைதிகளுக்கும் தினமும் ஒரு மணி நேரம் கட்டாயக் கல்வி என்ற முறையைப் புகுத்தும் திட்டத்தை அரசு வகுக்குமா ?

**புலவர் திரு. சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் புலவர் பட்டம் பெற்று பல பேர் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படிப் பட்டம் பெற்றவர்களுக்கு உடனடியாக வேலை தேடித்தர அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் படித்து வெளியே வருகிறவர்களுக்குத் தனி கவனம் செலுத்த வேண்டுமென்பது உண்மை தான். அதை ஒப்புக்கொண்டிருக்கிறோம். தமிழ்ப் புலவர்களைப் பொறுத்த வரையில், ஏற்கனவே உலகத் தமிழ் மாநாட்டில் தங்களுடைய கவிதைகளை வெளியிட வேண்டுமென்று கேட்டதற்கிணங்க, அது செய்யப்பட்டது. வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில் பொதுவாக நாட்டில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தே இதுவும் அமைந்திருக்கிறது என்று கருது கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் மார்க்கங்கள் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் படிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்திருப் பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போலவே, பகுத்தறிவு சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் போதிப்பதற்கும் அரசு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, கைதிகள் அவர்கள் எழுதுகின்ற தேர்வுக்கு ஏற்றவாறு என்னென்ன புத்தகங்கள் வேண்டுமென்று கேட்கிறார்களோ அவற்றைக் கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இப்போது பள்ளி அளவில் கைதி களுக்குப் பாட போதனைகள் கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். பள்ளி அளவுவரை சிலர் தேறியிருக்கிறார்கள். பட்டப்படிப்பு படிக்கவும், தொழில் சம்பந்தமாகப் படிக்கவும் அரசு வழி செய்து கொடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, தொழில் நிலைப் பயிற்சி இப்போதே கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் வெளியே சென்று பட்டப் படிப்பு செய்ய வேண்டுமென்றால், அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. வெளியே சென்று படிப்பது என்றால் தொடர்ந்து அவர்கள் வெளியே சென்று படித்துக் கொண்டு வரவேண்டும். இவற்றில் சிக்கல்கள் இருப்பினும், கைதிகள் அத்தகைய படிப்பில் ஆர்வம் காட்டினால், நிச்சயம் அரசாங்கம் இது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவரவர்களே, அவ்வாறு போதனைகள் செய்யப்படுவது ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்கும், பல ஆண்டுகள் தண்டனை பெற்ற கைதிகளுக்கும் மட்டும்தானா அல்லது ஒரு வருடத்திற்குள்



தண்டனை பெற்ற கைதிகளுக்கும் கொடுக்கப்படுகிறதா ? மேலும், இந்த வசதி சென்டிரல் ஜெயிலில் மட்டும் தான் இருக்கிறதா ? இதை சப்-ஜெயில்களில் விரிவு படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மத்திய சிறைச்சாலையில் தான் இந்த வசதியிருக்கிறது. கொஞ்சம் அதிகமாகத் தண்டனை பெற்றவர் களுக்குத்தான்—அதாவது ஒரு வருடத்திற்கு மேல்—இந்தப் பயிற்சி அளிக்கப் படுகிறது. அப்போது தான் அவர்கள் இந்த வசதியைத் தொடர்ந்து பயன் படுத்திக்கொள்ள முடியும்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, நீண்டகால தண்டனை பெற்ற கைதிகள் பலர் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற பிறகு வேலை கிடைக்காமல் இருக கிறார்கள். ஏனென்றால் அவர்கள் சிறைக்குச் சென்றவர்கள் என்ற காரணத்தால் அவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, இது போன்ற கைதி களுக்கு உடனடியாக வேலை கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இந்தப் பிரச்னைக்கு நான் ஏற்கனவே பதில் சொன்னேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள்தான் இந்தப் பிரச்னையைச் சில ஆண்டுகளுக்கு முன்பாக எழுப்பினார்கள். கைதிகளின் குற்றத்தினுடைய தாரதம்மியத்தைப் பார்த்துத்தான் அரசாங்கம் வேலை கொடுக்க முடியும்.

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, சிறைச்சாலையில் கல்வி வசதி பற்றிச் சொன்னார்கள். நீண்டகால தண்டனை பெற்ற கைதி சிறைச்சாலையில் படித்து, வக்கீல் பட்டம் பெற்று இப்போது உயர் நீதிமன்றத்திலே, சென்னை நீதிமன்றத் திலே வக்கீலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது போன்று பல் வேறு துறைகளிலும் கைதிகள் பட்டம் பெறக்கூடிய வகையில் வசதிகள் செய்து தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறைச்சாலைகளில் எத்தகைய வசதிகள் இருக்கின்றன என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். இது போன்று முயற்சி எடுத்து, கல்வி கற்கவேண்டுமென்ற அடிப்படையில் வந்தால் அவர்களுக்குத் தகுந்த முயற்சிகளைச் செய்து தருவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விரும்புகிற வர்களுக்குக் கற்க வசதி இருக்கிறது என்று சொன்னார்கள். கைதிகளுக்கு நிறைய ஓய்வு இருக்கிறது. அந்தக் காரணத்தால் எல்லாக் கைதிகளுக்கும் தினமும் ஒரு மணி நேரம் கட்டாயக் கல்வி என்ற முறையைப் புகுத்தும் திட்டத்தை அரசு வகுக்குமா ?

[1972 டிசம்பர் 1

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, அதற்காகத்தா இப்போது இரவுப் பள்ளித் திட்டத்தை அமல் நடத்தி வருகிறோம். அதன மூலமாக விருப்பம் ஏற்படுகின்ற எல்லாக் கைதிகளும் பயிற்சி பெறுவதற் வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, கடத்தல் மன்னன் வால்கா சிறையிலே இருந்தபோது அரசியல் சட்டத்தையும், ஏனைய ப்ரோசீஜர் கோ களையும் படித்த காரணத்தால் கோர்ட்டில் வாதாடியதாகப் பத்திரிக்கைகளி பார்த்தோம். அந்த வசதி வட நாட்டுச் சிறைகளில் மட்டும் தான் உள்ளதா நம்முடைய சிறைச்சாலைகளிலும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, அவர் கடைசியா சென்னைச் சிறைச்சாலையில் தான் இருந்தார்கள். கைதிகள் வாதாடுவதற்கு தேவையான புத்தகங்கள் கேட்டால் கொடுக்கப்படும்.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, கலைத் துறையில் ஆர்வம் கொண்ட கைதிகளுக்கு அத்தகைய துறைகளில் பயிற்சி அளிக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவர்கள் சில விழாக்களின் போது எந்தெந்தக் கலைகளில் ஆற்றல் பெற்று இருக்கிறார்களோ அவற்றைப் பயன் படுத்த வாய்ப்புத் தரப்படுகிறது.

### தென்னை பயிரிடக் கடன்கள்

* 177. வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னை பயிரிடுவதற்காக நிலவள வங்கிகள் மூலம் கடன் கொடுப்பது குறித்த செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஆம்.

**திரு. பி. எஸ். மணியன் :** இந்தக் கடன் ஏக்கர் அளவிலா அல்லது தென்னை மரத்தின் எண்ணிக்கை அளவிலா ? எத்தனை ஆண்டுகளில் திரும்பித்தரப்பட வேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த நிதி உதவி ஏக்கர் அளவு. முன்னால் ஒரு ஏக்கருக்கு ரூ. 2,700 வரையில் கொடுக்கப்பட்டு வந்தது. புதிய தாக அதை நான் ரூ. 4,000 என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறேன். முதல் வருடத்தில் ரூ. 1,200, 2, 3, 4, 5 வருடங்களில் வருடம் ஒன்றுக்கு ரூ. 700



1972 டிசம்பர் 14]

வீதம், ரூ. 2,800, ஆக ரூ. 4,000 வரையில் நிதி உதவி செய்யப்படுகிறது. அதற்குப் பிறகு ஒரு வருடம் விட்டுவிட்டு, பிறகு ஐந்து வருடங்களில் திரும்பப் பெறப்படுகிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தென்னை மரம் பயிரிடுவதற்கு நிலவள வங்கி கடன் கொடுத்து வருகிறது என்று சொன்னார்கள். அந்த உத்தரவு எப்பொழுது போட்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்தத் திட்டம் 1971-லிருந்து இருந்து வருகிறது, அதற்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், 1969-லிருந்து கூட, தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. கு. காமாட்சி :** தென்னை வளர்ந்து பலன் தருவதற்கு ஏறத்தாழ 5 ஆண்டுகள் ஆகும். கொடுக்கப்பட்ட கடனை இந்த 5 ஆண்டுகளுக்கு மேல் வசூலிப்பதற்கு, நீண்ட காலத் தவணையாக இது மாற்றி அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஐந்து ஆண்டுகள் ஆகும் தென்னை மரம் வளர்வதற்கு, பயன் கொடுப்பதற்கு என்பதனால் தான் முதல் வருடத்தில் ரூ. 1,200, பிறகு 2, 3, 4, 5-வது வருடங்களில் வருடம் ஒன்றுக்கு ரூ. 700 கொடுக்கப்படுகிறது என்று சொன்னேன். பிறகு ஒரு வருடம் இடைவெளி விட்டு ஐந்து ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெறப்படுகிறது. தென்னை மரத்திலிருந்து கிடைக்கின்ற வருவாயைப் பார்த்தால், ஐந்து வருடங் களில் அந்தப் பணம் வெகு லெகுவாகக் கொடுக்கப்பட முடியும்.

**திரு. அ. தேவேந்திரன் :** தென்னை நிறைந்து உள்ள தஞ்சை மாவட்டத்தில் அபரிதமான வளர்ச்சி இருந்து வருவதால், நிலவள வங்கி இன்னும் அதிகமாகப் பணம் கொடுத்து உதவி செய்வதற்கான சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசாங் கத்தினிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கடலோரப் பகுதியில் உள்ள மாவட்டங்கள் எல்லாமே தென்னை மரங்கள் வளர்ப்பதற்குச் சிறந்த மாவட்டங் களாக இருக்கின்றன. அதனால் அதற்குரிய திட்டம் ஒன்று ஒன்றாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுது கன்னியாகுமரி, நெல்லை, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தென்னை மர வளர்ப்புக்கான திட்டத்தின் கீழ் அரசாங்கம் 1971-லிருந்து கடன்கள் வழங்கி வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒரு வருடத்தில் கொடுக்கப்பட்ட கடன் தொகையின் மதிப்பு என்ன ? மாவட்டவாரியாக இதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா ?

[1972 டிசம்பர் 14

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** 1971-ம் ஆண்டில் தீட்டப்பட்டது என்று சொன்னேன். இந்த வருடம் அது அமுலுக்கு வந்திருக்கிறது. கன்னியாகுமரியில் குறிப்பாக இந்த வருடத்தில் செயல்பட இருக்கிறது. மதுரை, நெல்லை மாவட்டங்களில் இன்னும் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் தீர்ந்த பிறகு அது செயல்படத் தொடங்கும்?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தென்னை பயிர் செய்வதற்குக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. அப்படிக் கடனாகக் கொடுக்கிற பணத்தை 'ஈல்டு' வரும் வரையில் முதல் 5 ஆண்டுகள் அல்லது 7 ஆண்டுகள் வரையில் வட்டி இல்லாத முறையில் இந்தக் கடன் கொடுக்கப்படுகிறதா? அல்லது ஆரம்பம் முதல் வட்டி வசூலிக்கப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு ரப்பர் பயிர் செய்வதற்கு ரப்பர் போர்டிலிருந்து கடன் கொடுக்கிறார்கள். அது போன்று தென்னைக்கும் கடன் கொடுக்கும்பொழுது முதல் 5 அல்லது 7 ஆண்டுகளுக்கு வட்டி இல்லாமல் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தென்னை வளர்ப்பைப் பொறுத்த வரையில் நான் சொன்னேன். முதல் ஆண்டில் ரூ. 1,200, இரண்டாவது ஆண்டில் அதற்குரிய ஒரு வருட வட்டி வசூலிக்கப்படுகிறது என்றாலும், விவசாயிகளுக்கு ரூ. 700, 700, 700, 700 என்று நான்கு ஆண்டுகளுக்குக் கடன் கொடுக்கப்படுவதால், அதிலிருந்து சிறிய வட்டித் தொகையைக் கொடுக்க முடியும். அதற்குப் பிறகு தான் வட்டியும், அசலும் என்று ஐந்து ஆண்டுகளில் திரும்பப் பெறப்படுகிறது. ரப்பரைப்பற்றிச் சொன்னார்கள். அது உண்மை, இலவசமாகப் பணம் கொடுக்கிறார்கள். ஆனால், ரப்பர் போர்டு அதைக் கொடுக்கிறது. நிலவள வங்கிகள் மூலம் கொடுப்பதில்லை.

**திரு. ப. முத்துசாமி:** கடன் வசதிகள் செய்யப்படுவதில் ஒவ்வொரு வட்டாரத்திலும் தகுதியுள்ள நிலவள வங்கிகள் இருக்கிற ஏரியாவைத் தேர்ந்தெடுத்து அளிக்கப்படுகிறதா, அல்லது மாவட்டத்தில் எல்லா வங்கிகளிலும் இது கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்:** இதற்கு முன்னால் சில வங்கிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவைகளெல்லாம் தகுதி உள்ளவை என்று பிரிக்கப்பட்டன. இப்பொழுது எந்த நிலவள வங்கி அந்தப் பகுதியிலே இருந்தாலும், அதற்குப் பணம், நிதி உதவி அளிக்கப்படுகிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister for Co-operation whether high-brid coconut is



1972 டிசம்பர் 14]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தென்னை மரக் கன்றுகளைப் பொறுத்த வரையில் ஆங்காங்கு வளர்ப்புப் பண்ணைகள் இருக்கின்றன. வளர்ப்புப் பண்ணையில் உள்ள தென்னை மரங்கள் நன்கு நடப்படுகின்றன. ஒன்று சொல்ல வேண்டும். நண்பர் வருகின்ற தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. காரணம், ஒரு ஆண்டுக்கு ஒரு தென்னை மரத்திற்கு 12 காய், 15 காய், 16 காய், 20 காய்-க்கு மேல் இல்லை என்ற நிலை வருகின்றபொழுது, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தென்னை மரத்திற்கு 200 காய் என்றால், அவ்வளவு குறைவாகவா என்று கேட்பார்கள். ஆகவே, இதைக் கடலோரப் பகுதி உள்ள மாவட்டங்களில் இப்பொழுது அமுல் படுத்திக்கொண்டு வருகிறோம்.

THIRU B. VENKATASWAMY: Sir, I am very sorry to note that the Hon. Minister has given a reply stating that only 12 or 15 coconuts are found in each tree in Dharmapuri District. I can show even 150 to 200 coconut in the plantations in Dharmapuri District. This is for the information of the Hon. Minister.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அப்படி சிற்சில பகுதிகள் இருக்கும். அந்தப் பகுதிகளைக் குறிப்பிட்டு அதற்கான திட்டம் வகுக்கிறோம், மாவட்ட வாரியாக கணக்கிட்டு. கடலோரப் பகுதிகளில் தென்னை மரங்கள் அதிகப் பலன் கொடுப்பது கண்கூடாகப் பார்க்கின்ற உண்மை. கடலோரப் பகுதிகள் உள்ள மாவட்டங்களில் இந்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

* 178 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. Minister for Co-operation be pleased to state whether there are proposals under the consideration of the Government to increase the coconut plantation in Kanyakumari District?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஆம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இப்பொழுது நிலவள வங்கிகள் மூலம் இந்தக் கடனைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. பிளாக் மூலம் கொடுப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அதுமட்டுமல்லாமல் இப்பொழுது கொடுக்கிற தொகை போதாது. இதைக் கொஞ்சம் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பிளாக் மூலமாகச் சில பஞ்சாயத்துகளுக்கு ஏதாவது உதவி செய்கிறார்களா என்பதைப்பற்றி மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள். தனியாகக் கேள்வி கேட்டால் அவர் அதற்கு பதில் சொல்லுவார்கள் நான் ஏற்கனவே சொன்னேன்.

முன்னால் இருந்த திட்டம் மொத்தம் ரூ. 2,700 4, 5 ஆண்டுகளுக்குக் கொடுப்பது. அந்தத் திட்டத்தை மாற்றி, கன்யாகுமரி மாவட்டத்தைக் குறிப்பாக மனதில் வைத்துக் கொண்டு ரூ. 4,000 அளவுக்கு, ஒரு ஏக்கருக்கு முதல் வருடம் ரூ. 1,200, பிறகு நான்கு வருடங்களில் வருடம் ஒன்றுக்கு ரூ. 700. ஆக ரூ. 2,800 பிளஸ் ரூ. 1,200, ரூ. 4,000 கொடுக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தமாக 3 கோடி ரூபாய் முதலீட்டில் 7,500 ஏக்கரிலே திட்டம் தீட்டப்பட்டு, அது இப்பொழுது உடனடியாக தொடங்கப்பட்டிருக்கிறது.

THIRU N. DENNIS: Sir, may I know the extent that will benefit under the Scheme?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இப்பொழுதுள்ள திட்டத்தின்படி 7,500 ஏக்கர். அதை இன்னும் அதிகம் செய்ய முடியும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுதுள்ள திட்டப்படி ஏறத்தாழ ரூ. 300 லட்சம், ரூ. 3 கோடி கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலவள வங்கி கொடுக்கின்ற பணம் பம்பாயில் உள்ள விவசாய மறு நிதி உதவிக் கழகத்தின் மூலம் பெறப்படுகிறது. இப்பொழுது அதற்குத்தான் ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். இதற்குப் பிறகு இன்னும் பல திட்டங்கள் தீட்ட முடியும் என்பதை நான் நன்றாக அறிவேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நமது மாநிலத்தில் உற்பத்தி ஆகின்ற தேங்காய்கள் நமது மாநிலத்தில் உள்ள தேவைக்குப் போதுமானதாக இருக்கிறதா? இல்லை என்று சொன்னால் எந்த அளவுக்குப் பற்றாக்குறை இருக்கிறது என்பதனை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இதைப்பற்றி எனக்குச் சரியான தகவல் இல்லை.

**திரு. ஆ. பரந்தாமன்:** கடந்த பல நாட்களாகவே ரிசர்வ் வங்கி பல விதிமுறைகளை வகுத்திருக்கிறார்கள். நில்வள வங்கிகள் மூலம் நமக்குக் கடனைக் கொடுக்கிற நேரத்தில் பல சங்கடங்கள் இருந்து வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களோடு பேசி, கலந்து ஆலோசித்து இந்த விதி
10–00 மு.ப. முறைகளைத் தளர்த்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, நான் இந்த வினாவுக்குச் சொல்லக்கூடிய விடை எல்லாம் ரிசர்வ் வங்கியோ அல்லது விவசாய மறுநிதிக் கழகமோ போடுகின்ற அந்த விதிமுறைகள் எல்லாம் அவ்வளவு கடினமானவை அல்ல. அவற்றை முதலில் தெரிந்து கொள்வது சற்றுக் கடினமாக இருக்குமே தவிர, தெரிந்து கொண்ட பிறகு இலகுவாக இருக்கும்.





ஹரியானா போன்ற மாநிலங்களில் இதே திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி இருக்கிறார்கள். அதன்படி நாமும் செய்ய முடியும். அதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in the Dharmapuri district especially in the Veppanapalli and Burgur firkas there are thousands of cocoanut trees and detailed accounts about them may have not been given by the officers. So may I know from the Hon. Minister whether he will instruct the Collector, Dharmapuri to send special report about it and arrange to give loans to the people there?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, if in the Burgur firka it is possible to formulate a scheme for the growing of cocoanuts, I will look into it and see whether it is possible to do it. So far as I could see in the Dharmapuri district the tobacco scheme is getting on well and also the Mulbery (Silk) Scheme is getting on well. So far as cocoanuts are concerned, we have not thought about the Dharmapuri district as one of the cocoanut-producing districts because we have been under the impression that only coastal districts produce sufficient quantities of cocoanuts from the trees.

**திரு. த. சோனையா:** தென்னை பயிரிடும் திட்டத்தைப் பற்றிச் சொல்லுகிற போது மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி பற்றிச் சொன்னார்கள். இந்த மாநிலத்தில் பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற இராமநாதபுரத்தில் கடலோரப் பகுதியில் தென்னை வளர்ப்புக்கு வாய்ப்பான நிலங்கள் இருக்கின்றன. வைகையின் இருமருங்கிலும் வண்டல் நிறைந்த பூமிகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியில் தென்னை வளர்க்க விசேஷச் சலுகை கொடுத்து அரசு ஊக்குவிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இராமநாதபுரத்தில் தென்னை வளர்ப்புத் திட்டம் வெற்றிகரமாக நடக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்குரிய திட்டம் தயாரிப்பில் இருக்கிறது. இராமநாதபுரமும் தென்னை வளர்ப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் எல்லா மாவட்டங்களிலும் கடலோரப் பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதிகப்படியான சலுகை கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அதிகப்படியான சலுகை ஏற்கனவே கொடுக்கப்பட்டு வருகிறது. 2,700 ரூபாய் என்பது 4,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் தேவை என்றால் அதைப் பற்றிக் குறிப்பிட்டு அனுப்புங்கள். முதலில் 1,200 ரூபாய்; பிறகு நான்கு ஆண்டுகளுக்கு 700 ரூபாய் வீதம் கொடுப்பது போதுமானதாகக் கருதுகிறேன்.

[1972 டிசம்பர் 14

**திரு. கு. காமாட்சி :** ஒரு ஏக்கருக்கு 4,000 ரூபாய் கடன் தருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி எத்தனை ஏக்கர் வரை வைக்கலாம் என்பதற்கு உச்ச வரம்பு இருக்கிறதா? கொடுக்கப்படுகின்ற கடனுக்கு உச்ச வரம்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மற்றத் திட்டங்கள் எல்லாம் தயாரிப்பில் இருக்கின்றன. ஏற்கனவே எடுத்துக் கொண்டு ஓரளவு நிறைவேற்றப்பட்டிருக்கும் திட்டங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் 7,500 ஏக்கர்; மதுரை மாவட்டத்தில் 145 லட்சம் ரூபாய் முதலீட்டில் 5,000 ஏக்கர்; நெல்லை மாவட்டத்தில் 162.5 லட்சம் முதலீட்டில் 2,000 ஏக்கர்; இவை எல்லாம் ஏறத்தாழ நிறைவேறி வருகிற பருவத்தில் இருக்கின்றன. மற்றத் திட்டங்கள் தயாரிப்பில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

### அரசுப் பேருந்துகளில் விளம்பரங்கள்

* 179. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுக்குச் சொந்தமான பேருந்துகளில் விளம்பரங்கள் செய்ய அனுமதிக்கப்படுகின்றதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆம்.

**திரு. என். கிட்டப்பா :** பேருந்துகளில் செய்யப்படும் விளம்பரங்களின் மூலமாக அரசுக்கு இந்த ஆண்டு கிடைத்திருக்கும் வருமானத்தின் அளவை அறிவிக்க இயலுமா? சில அரசியல் கட்சிப் போராட்டங்களுக்கு அரசுப் பேருந்துகளை விளம்பரப் பலகையாக மாற்றிவிட்டிருக்கிறார்கள். அத்தகைய வன்முறையாளர்களிடமிருந்து பேருந்துகளைக் காக்க அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கையினை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கடந்த 1971-72-ம் ஆண்டுக்கு விளம்பரத்தின் மூலம் அரசாங்கப் போக்குவரத்துக்குக் கிடைத்த வருவாய் 71,043 ரூபாய் ஆகும். சில அரசியல் கட்சிகளும் வன்முறையாளர்களும் பல்வேறாகப் பேருந்துகளில் போராட்டங்களின்போது எழுதுகிறார்களே என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இது அவரவர்களுடைய தரத்தைக் காட்டுவதே தவிர, வேறல்ல.



1972 டிசம்பர் 14]

**திரு. கா. வேழவேந்தன் :** இப்படி அரசுப் பேருந்துகளில் தனியாருடைய விளம்பரங்களைப் போடுவது போல் மகாபலிபுரம், வேடந்தாங்கல், காஞ்சிபுரம் போன்ற இடங்களுக்கு எவ்வப்போது பேருந்துகள் விடப்படுகின்றன என்ற விவரங்களை எல்லாம் விளம்பரமாகப் போட்டால் அந்த இடங்களுக்கெல்லாம் அதிகமாகப் பயணிகள் செல்ல வசதியாக இருக்கும். அரசு அதற்கு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பொதுவாக, சுற்றுலா இடங்களைப் பற்றிய விளம்பரங்களைச் சுற்றுலாத் துறைதான் மேற்கொள்கிறது. போக்குவரத்துத் துறை தனியாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. விளம்பரம் செய்யத் தனியாருக்கு மட்டும்தான் அனுமதி அளிக்கிறோம் என்று பொருள் அல்ல. அரசாங்கத் துறையில்கூட தொழிற் துறையில் சிமெண்ட் போன்ற பொருள்களுக்கு விளம்பரங்கள் கொடுத்தால் அதைப் போடுவதற்கான வசதிகள் செய்து தரப்படுகின்றன.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** இந்த அரசுக்குச் சொந்தமான பேருந்துகளிலும் தனியாருக்குச் சொந்தமான பேருந்துகளிலும் விளம்பரங்களில் பெண் இனக் கவர்ச்சியும், ஆபாசமான விளம்பரங்களும் இல்லாத அளவுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அத்தகைய கவர்ச்சிகரமான படங்களை விளம்பரப்படுத்துவதாகத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் தகவல் இருக்குமானால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கவனிக்கப்படும். ஆபாசம் பற்றி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது அவரவர்களுடைய மன நிலையைப் பொறுத்ததாகும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** அரசாங்கப் பேருந்துகளில் ஒழுக்கம், மற்ற நல்ல கருத்துக்களைப் போதிக்கின்ற வகையில் பெரியார், அண்ணா போன்ற தலைவர்களின் பொன்மொழிகளைப் பொறிக்கும்படி அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசாங்கப் பேருந்துகளில் உலகப் பொதுமறையாகிய திருக்குறளில் இருந்து அவ்வப்போது குறள்கள் எழுதப்பட்டு வருகின்றன. திருவள்ளுவர் படமும் இருக்கிறது. அவ்வாறே நமக்கு வழிகாட்டி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருடைய கருத்துக்கள் எல்லாம் அந்தக் குறள்களிலேயே இடம் பெற்றிருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேருந்துகளின் உள்ளே 'திருக்குறள்' எழுதப்படுகின்றது. சில பேருந்துகளின் வெளியே 'தெருக் குறள்' எழுதப்படுகிறது. (சிரிப்பு)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பேருந்துகளின் வெளியே ஆபாச[illegible] [illegible] காணப்படுகின்றன. அவற்றை உடனுக்குடன் அழிப்பதற்கு [illegible] வடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தமிழ்நாட்டில் ஆபாசமானவர்கள் சிலர் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட கொஞ்சம் அவகாசம் தருகிறார்கள் என்று கருதுகிறேன். விரைவில் அழித்து விடுவார்கள்.

**திரு. எம். தேவராசன் :** பேருந்துகளில் எல்லாம் ஒரு நடிகருடைய படம் ஒரே மாதிரியாக ஒட்டப்பட்டிருக்கிறது. அது சென்னையிலிருந்து அனுப்பப் பட்டதா ? அல்லது அந்தந்த மாவட்டங்களிலேயே அச்சிடப்பட்டு ஒட்டப் பட்டதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒட்டிக் கொண்டிருப்பவர்களைக் கேட்க வேண்டிய கேள்வி.

**திரு. அ. தேவேந்திரன் :** காலையில் சட்டமன்றத்திற்கு வருகிறபோது கூட ஒரு பேருந்தில் பார்த்தேன். அதிலே படிப்பதற்கு அசிங்கமான வார்த்தைகளால் எழுதியிருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் அதைப் பார்க்கிற போது, உள்ளபடியே சொன்னால் கோபம் வருகிறது. அவற்றை உடனடியாக அழிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அசிங்கத்தைப் பார்த்து கோபம் வரக்கூடாது; வெறுப்புத்தான் ஏற்பட வேண்டும்.

**திரு. எம். ஏ. அபுசாலி :** எங்களுடைய தலைவரைப் பற்றிப் பலவேறான முறையில் மோசமாக, எங்களுக்கு வேகம் வரக்கூடிய நிலையில் எழுதப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக அகற்ற அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அத்தகைய வாசகங்களை எல்லாம் உடனுக்குடன் அழித்துவிட வேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. மறுபடியும் எங்காவது சில இடங்களில் ஆர்ப் பாட்டக்காரர்கள், கிளர்ச்சிக்காரர்கள் தொடர்ந்து இத்தகைய காரியங்களில் ஈடுபடுகிறார்கள். நேற்றையதினம் கூட—மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன்—கோவில்பட்டியில் விரைவுப் பேருந்து ஒன்றை நிறுத்தி தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள். ஒரு கடிதத்தையும் கண்டக்டரிடம் கொடுத்து போலீசாரிடம் கொடுங்கள் என்று சொல்லி விட்டுப் போகிறார்கள். இதெல்லாம் நம்முடைய நாட்டிலிருக்கும் சில வன்முறையாளர்களின் தகுதியைத்தான் காட்டுவதாக இருக்கிறது. இதிலே தகுந்த நட[illegible]க்கை எடுக்க அரசு ஆவன செய்யும்.



**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, தேர்தல் காலத்தில் ஒரு குறிப் பிட்ட கட்சியினுடைய சுவரொட்டியைத்தான் தனியார் பஸ்களில் விளம்பரப் படுத்துகிறார்கள். இது மற்றக் கட்சிகளுக்கு வேதனையை அளிக்கிறது. ஆகவே இதைத் தவிர்க்க அரசு தக்க உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பொதுவாக தனியார் பேருந்து களில் விளம்பரம் செய்வதற்குப் போக்குவரத்துத் துறையினுடைய அனுமதி தேவை. அப்படி எழுதுவது விளம்பரம் செய்வது ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மட்டும் தான் இடம் தருவோம் என்று புகார் வந்தால் அந்தப் புகாரின் மீது அரசாங்கப் போக்குவரத்து ஆர். டி. ஓ. இலாக்கா நடவடிக்கை எடுக்க நிச்சய மாக அதிகாரம் இருக்கிறது.

**திரு. கு. காமாட்சி :** இந்த மன்றத்தில் இருக்கிற ஒரு உறுப்பினர், நடிகர் அவருடைய படம் சில பஸ்களில் விளம்பரமாக வருகிறது. அந்த விளம்பரத் திற்காக இந்த அரசிற்கு வருமானம் உண்டா அல்லது இழப்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அது பற்றிய விவரம் என்னிடத் தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் யாரும் இடம் மாறி உட்காரக் கூடாது.

*Mylapore, Thyagarayanagar bus terminals*

* 180 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that space at the T. Nagar and Mylapore Transport Terminus buildings have been rented out to private parties ; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) தியாகராய நகர் பேருந்து நிலையத்தில் நான்கு கடைகளும், மந்தைவெளி பேருந்து நிலையத்தில் நான்கு கடைகளும் உள்ளன. ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்ட பின்னர் இந்தக் கடைகள் தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டன. மயிலாப்பூரில் பேருந்து நிறுத்தி வைக்கப்படும் இடத்தில் கடைகள் எவையும் இல்லை.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, இதனால் கிடைக்கக் கூடிய வருமானம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

[1972 டிசம்பர் 14

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தியாகராய நகரைப் பொறுத்தவரையில் நாலு ஸ்டால்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 600 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மந்தைவெளியில் உள்ள நாலு கடைகளில் இரண்டு கடைகளை வாடகைக்கு எடுக்க யாரும் இன்னும் முன்வரவில்லை. மீதி இரண்டு கடைகளின் மூலம் 330 ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விணாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் * வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

(2) தகவல் கோரல்.

(அ) பேரவைத் துணைத் தலைவர் மீது கொடுக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Chair when the no-confidence motion against you is scheduled to be taken up ? Will there be any special session or are we extending the session? That is a matter which you may please let us know.

DR. H. V. HANDE : We were told in the Business Advisory Committee that we are going to meet on 15th also and that would be the last day. Notice for no-confidence motion against the Deputy Speaker has been given. I understand that the 14 days' notice actually expires on 22nd or so. If that is the case, will the Hon. Deputy Speaker or Hon. Leader of the House give us an indication whether we are going to meet again on 22nd to dispose of this particular motion, or whether it is possible for the Hon. Deputy Speaker to waive some of the rules and have it earlier, if possible on 15th. The Hon. Chief Minister also gave us an indication sometime ago that he would place on the table of the House the reply with regard to the number of charges that were given to the Hon. President of India by some members. . . . .

MR. DEPUTY SPEAKER : One issue at a time. With regard to the 'removal motion' I would like to state that the 14 days notice has not expired. Dr. Hande had raised the point whether we cannot waive it. But let me state that it is a consti-



1972 டிசம்பர் 14] [Dr. H. V. Hande]

tutional provision. We cannot waive it. After the expiry of 14 da
I will consult the Hon. Leader of the House and announce t
date. Members will be intimated regarding the next session.

(ஆ) அமைச்சரவை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பட்டியல் பேரவை
முன் வைக்கப்படுவது குறித்தும், அதற்கான பதிலை இந்தியப் பிரதமருக்
அனுப்பிவைப்பது குறித்தும்.

DR. H. V. HANDE : The Hon. Chief Minister has told
previously that he would try to place a copy of the charges again
the Government on the table of the House and that he was
touch with the Prime Minister to get her permission for the sam
He also told us that the DMK party leader in Parliament was a
in touch with the Prime Minister. This has become a most imp
tant matter and the fate of Tamil Nadu hinges on this pivotal is
of list of charges. May I know what prevents this Governme
from placing the list of charges on the table of the House and a
the replies of Government so that we could discuss the whole thi
and if necessary certain other charges also that may be level
against the Government ?

Also another point, Sir. With regard to the list of charges,
reply of the Chief Minister in response to the request of the Pri
Minister should have been normally sent very early. But it is n
more than three weeks since the charges have been sent to
Chief Minister by the Prime Minister, for his comments. St
we understand from reliable authority that the Chief Minister
not sent his reply to the Centre. What is the reason for
abnormal delay, we would like to know all the mysteries ?

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த அமை
ரவை மீது திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. கலியாணசுந்த
அவர்களும், அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சிலரும் கையெழுத்தி
ஜனாதிபதியிடம் கொடுத்த குற்றச்சாட்டுகளின் பட்டியலை இந்த மன்றத்
வைப்பதற்கு ஏன் தயங்குகிறீர்கள் என்ற கேள்வியைக் கடந்த சில நாட்கள
நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அ
களும், மற்றும் எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் இந்த மன்றத்தில் கே
வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் திரு. ஹாண்டே அவர்கள் அதே பிரச்சனை
எழுப்பி அந்தப் பட்டியலை வைப்பதற்கு என்ன பயம், ஏன் தயக்கம் எ
கேள்விக் கணைகளை விடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே, பிரதமரு

நான் டாக்டர் ஹாண்டே அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அன்றைக்கே இந்தப் பிரச்சனையை எழுப்பி இதை அரசின் சார்பில் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர்களுக்கும், அரசின் சார்பில் வைக்க வேண்டுமென்று இந்த அவைக்கு வராமல் அறிக்கை விட்டிருக்கிற கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன். இன்று அல்லது நாளை அந்தப் பட்டியலும், அதற்கு அரசு தருகிற பதிலும் இணைத்து, இங்கே அவையில் வைக்கப்படும் என்று கூறி, அவர்களுடைய குற்றப் பட்டியல் தனியாக வைக்கப்படும், அந்தக் குற்றசாட்டுகளுக்கான குறிப்பும், அதற்கான அரசாங்கத்தின் பதிலும் இந்த மன்றத்தில், இன்றைக்கு, தவறினால் நாளைக் காலையில், வைக்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பேரவை உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மீது பாராளு மன்றத்தில் சுமத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அவையிலே இருக்கிறவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தாங்கள் தான் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். நம்முடைய பேரவையிலே உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு 'டைரக்டரேட் ஆஃப் என்போர்ஸ்மென்ட்' டிலிருந்து 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 30 குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. நேற்றையதினம் திரு. எம். ஜி. ஆர். மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி பாராளுமன்றத்திலே கேள்விகள் கேட்டு, விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் அடங்கிய பட்டியல் காப்பி ஒன்று என்னிடத்தில் இருக்கிறது. தாங்கள் அனுமதித்தால் அதை இந்த அவையிலே வைக்கவும் தயாராக இருக்கிறேன்.

இந்த மன்றத்தின் உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஜப்பான் நாட்டுக்குச் சென்றபோது ஒரு லட்சம் ரூபாய்க்கு 'பாரின் எக்சேஞ்ச்' அனுமதிக்கப்பட்டது. ஆனால் அங்கே அவர், இந்தியாவிலே இருக்கக்கூடிய பல கம்பெனிகளின் பெயரால் சுமார் 10 லட்சம் ரூபாய்க்கு ரிசர்வ் பாங்கின் அனுமதி இல்லாமலேயே பெற்றிருக்கிறார் எனத் தெரியவருகிறது. வெளிநாட்டு பாங்கில் ரிசர்வ் பாங்கின் அனுமதி இல்லாமல் கணக்கு வைத்திருக்கிறார். இன்னும் இப்படிப்பட்ட 30 குற்றச்சாட்கள் அவர்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. நான் எம். ஜி. ஆரைக் குறை சொல்லவேண்டும் என்பதற்காக



இதைச் சொல்லவில்லை. இந்த அவையிலே உறுப்பினராக இருக்கக்கூடிய ஒருவர்மீது இத்தனைக் குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றனவே, அவைகளைக் கண்டுபிடித்து, இந்தச் சபையின் தலைவராகிய தாங்கள் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கின்ற திரு. அரங்கண்ணல்மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டபோது, அவர்களே நேரடியாக இந்த மன்றத்தில் விளக்கம் அளித்தார்கள். அதைப்போன்று தாங்கள் எம். ஜி. ஆரை அழைத்து, அவருடைய விளக்கத்தை இந்த மன்றத்திலே அளிக்கச் சொல்லலாம், அல்லது அவருடைய விளக்கத்தைப் பெற்று இந்த மன்றத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். பாராளுமன்றத்தில் ஒரு மரபைக் கடைப்பிடிக்கிறார்கள். ஒரு உறுப்பினர்மீது புகார் கூறப்பட்டால், பாராளுமன்றத் தலைவர் அந்த உறுப்பினரை அழைத்து தனிப்பட்ட முறையில் அவருடைய விளக்கத்தைக் கேட்டு, அதற்குப் பின்னால் அதைச் சபையில் வைப்பதா கூடாதா என்பதை முடிவு செய்கிறார். அந்த முறையை இந்த மன்றத்திலும் கடைப்பிடித்தால் நலமாக இருக்கும் என்ற என்னுடைய யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எம். ஜி. ஆர். அவர்களை நேரடியாக இந்தச் சபையில் விளக்கம் சொல்லவோ அல்லது அவருடைய விளக்கத்தைப் பெற்றோ இந்தச் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய ஒருவர் சுமார் 10 லட்சம் ரூபாய்க்குமேல் 'ஃபாரின் எக்சேஞ்ச்' மீறல்செய்திருக்கிறார் என்றால் அது சாதாரண விஷயம் அல்ல. இந்தக் குற்றச்சாட்டு நிரூபணம் ஆகிவிட்டால் அவருக்கு 10 ஆண்டுக் காலம் சிறைத்தண்டனை கொடுக்கலாம். அதோடு எம்.எல்.ஏ. பதவிகூடப் பறிபோகலாம். இது மிக முக்கியமான விஷயமாக இருப்பதால் தாங்கள் இதுபற்றிய தீர்ப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: On a point of order, Sir, I would like been saying in the past five minutes in this House, comes within the purview of this House and is it in order for this House to discuss that matter here. (Interruption) I am explaining my point of order. Whether it is in order for him to raise it in this House and............

MR. DEPUTY SPEAKER: I have given him permission to speak.

Dr. H. V. HANDE: I am not questioning your permission Sir. (Interruption) Let me complete. My point is because the matter had been raised in this House, I want to know whether it is in order. The issue is the subject-matter of a question in Parliament and that is with regard to action taken by the Central Enforcement Directorate under the Foreign Exchange Regulations. I want to know whether this is not a matter falling within the purview of Parliament and whether it is in order for us to discuss the matter in this House. I would like to make it quite clear that I am not in the least defending anybody, I want to make it clear that I would like that to go on record. (Interruption)

Mr. DEPUTY SPEAKER: This is not a matter for discussion in this House. We are very clear about what happened in Parliament; moreover, it is not proper to discuss the matter which took place in the other House. The second point is Mr. Krishnamurthi said that the rights of the member had been affected. I do not think the rights of Mr. M.G.R. as a member of this House has been affected. It is not a point to be discussed here.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** திரு. அரங்கண்ணல் அவர்கள் மீது குற்றச்சாட்டு வந்தபோது அவர் நேரடியாகவே இந்த மன்றத்தில் அதற்கு விளக்கம் அளித்தார்கள். அதைப்போன்று. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அரங்கண்ணல் அவர்கள் இந்த மன்றத்தின் உறுப்பினராக இருந்து, அரசாங்கப் பொறுப்பிலும் இருந்த காரணத்தினால் அவர் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டவர்; விளக்கம் சொன்னார். ஆனால் எம். ஜி. ஆர். மீது சுமத்தப்பட்டிருப்பது இந்த மன்றத்தின் உறுப்பினர் என்ற முறையிலோ அல்லது அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ளவர் என்ற முறையிலோ அல்ல. தனிப்பட்ட முறையில், வியாபார முறையில் ஏற்பட்ட குற்றச்சாட்டுகள் எம்.ஜி.ஆர். மீது சுமத்தப்பட்டிருப்பது. அதுபற்றிப் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டது பற்றியோ, விவாதித்தது பற்றியோ நாம் இங்கே விவாதிக்கக் கூடாது. விவாதிக்க சட்டமன்ற விதிகள் அனுமதிக்கவில்லை. அதனால் இந்தப் பேரவையில் அதைப்பற்றி விவாதிக்க அனுமதி அளிக்க இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** பேரவைத் துணைத்தலைவர் எம்.ஜி.ஆரிடம் நேரிடையாக விசாரித்துக்கூட அந்தத் தகவலை இங்கே அளிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர் **மு.ப.**
களுக்கு விருப்பம் இருந்தால், அவரே அதுபற்றி தனிப்பட்ட முறையில் சென்று **10-30**
கேட்டுக்கொள்ளலாம்.

### (3) அறிவிப்புகள்

### (அ) சில உரிமைப் பிரச்சினைகள் ஒற்றிவைக்கப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, சில உரிமைப் பிரச்சினைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திரு. கணபதி அவர்கள் குமுதம் பத்திரிகையின் மீதுகூட ஒரு உரிமைப் பிரச்சினை தந்திருக்கிறார்கள். இந்த உரிமைப் பிரச்சினைகள் எல்லாம் ஒவ்வொரு வகையில் இன்றைக்கு நீதிமன்றத்தின் முன்னால் உள்ள வழக்குக்கு சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தினால் அவற்றை எடுத்துக் கொண்டு இங்கே விவாதிப்பது உசிதமாக இருக்காது. எனவே, இந்த உரிமைப் பிரச்சினைகளைப் பின்னால் எடுத்துக்கொள்ளலாம் என்கிற என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

**திரு. இராம அரங்கண்ணல்:** சார் ஆன் ய பாயின்ட் ஆப் ஆர்டர். உரிமைப் பிரச்சினைகளை எடுத்துக்கொள்வது நீதிமன்றத்தின் முன்னால் இருக்கும் வழக்கை பாதிக்கக் கூடாது என்கிற காரணத்தினால் அவற்றைப் பின்னால் எடுத்துக் கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. வழக்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாத உரிமைப் பிரச்சினைகள்கூட இருக்கின்றன. சட்டமன்றத்தை, சட்டமன்ற உறுப்பினர்களின் கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் உள்ளதுபற்றி கொண்டுவரப்பட்ட உரிமைப் பிரச்சினைகளை எடுத்துக் கொள்ளலாம். விவாதம் வழக்கு சம்பந்தமாக எந்தவகையிலும் போகாது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

Thiru R. PONNAPPA NADAR: Sir, now that the Deputy Speaker has given the ruling, is it fair on our part to talk about any collateral proceeding and I would like to have clarification about it. So far as the matter which is pending before the court is concerned. It is pointed out that we do not discuss in full the details regarding the article or comments made in that particular paper. So, it is better that we do not rake up the controversy even though this House is paramount and

supreme. It is pointed out that we should wait till the decision has been rendered, and that is the proper course that is open to us. I would like to have further clarification from the Chair.

DR. H. V. HANDE: Sir, I also support the view that till the court decides we should postpone discussion on the matter. After the court decides in favour of the decision of the Deputy Speaker, we can take action and till then we can defer action in the matter.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, மற்ற உரிமைப் பிரச்சினைகள் எப்படி இருந்தாலும் நான் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை—இந்த அவை உறுப்பினர்களின் கௌரவத்தை, கண்ணியத்தைப் பாதுகாக்கக் கொண்டுவரப் பட்டுள்ளதாக அமைந்திருக்கிறது. இது நேரிடையாகவோ, மறைமுகமாகவோ நீதிமன்றத்தில் உள்ள வழக்குக்கு எந்தவகையிலும் சம்பந்தப்பட்டதாகக் கருத முடியாது. ஆகவே இதை மட்டுமாவது எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான், கொடுக்கப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினைகள் பற்றி அவைக்கு நேரிடையாகச் சொல்லாமல் சொன்னேன். காரணம் நீதிமன்றத்தின் முன்னால் உள்ள வழக்குபற்றி பேசக் கூடாது என்பது என் கருத்து. அதன் காரணமாக நமக்கே இந்த அவையில் 2-ம் தேதி நடந்த நிகழ்ச்சிகள் பற்றி ஐயப்பாடு இருப்பதாக அர்த்தம் இல்லை. அந்தப் பொருளிலும் நான் சொல்லவில்லை. நமது அரசியல் சட்ட அமைப்பின் படி நீதி மன்றத்திற்கு நாம் அளிக்கக்கூடிய கௌரவம், மரியாதை காரணமாக —நீதிமன்றத்தின் முன்னால் உள்ள வழக்குபற்றி விவாதத்தில் வந்துவிடக்கூடிய பிரச்சினைகளை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது என்றுதான் குறிப் பிட்டேன். திரு. கணபதி அவர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை நான் படித்தேன். அதை எடுத்துக் கொண்டாலும் நிச்சயமாக யாராவது ஒரு உறுப்பினர் வழக்குபற்றி பேசாமல் இருக்கமாட்டார். உடனே நான் அதைப் பேரவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட உத்தரவிட வேண்டியதாகத்தான் அமையும். ஒரு பத்திரிகையில் உறுப்பினர்கள் 'அநாகரீகமாக' நடந்து கொண்டார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதை எடுத்துக் கொண்டால் 'நாகரீகம் எது, அநாகரீகம் எது' என்கிற விவாதம் வருகிறபோது 2-ஆம் தேதி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி வரத்தான் செய்யும். ஆகவேதான் இந்த உரிமைப் பிரச்சினைகளை எல்லாம் பின்னால் எடுத்துக்கொள்ளலாம் என்பதாக நான் தீர்ப்பு அளிக்கிறேன். பேரவை உறுப்பினர்களும் இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.



## (4) ஒற்றிவைப்புத் தீர்மானம்

### அம்பத்தூர் டன்லப் ரப்பர் கம்பெனியாரின் கதவடைப்பும், தொழிலாளர் பாதிப்பும்.

MR. DEPUTY SPEAKER: The hon. Member, Dr. H. V. Hande has given notice of an adjournment motion regarding the lock-out declared by the management of Dunlop Rubber Company and the consequent hardship caused to the labourers. Dr. Hande.

DR. H. V. HANDE: Sir, I request that the House be adjourned to discuss a most important matter namely, the lock-out declared by the management of Messrs. Dunlop Rubber Company Limited, Ambattur and the consequent hardship caused to the labourers. I shall be happy if the Hon. Minister for Labour gives serious consideration to certain points which I am going to raise now. The total number of employees is about 2,000. The workers were on stay-in-strike from 13th December 1972. The management declared lock-out on 22nd November 1972 and the lock-out is not yet lifted.

The factory was under lock-out for about 45 days during the months of February and March because of the non-acceptance of the demands of the Union by the management. Then the management entered into an agreement with the Union which is valid for four years. But unfortunately the management has gone back on the agreement. On certain demands such as fixation of D.A., housing facilities, school and E.S.I., the Union could not arrive at a compromise and it was left to the discretion of the Labour Minister. Therefore the Labour Minister is the pivotal point and he has to decide the whole matter.

The most important thing is D.A. The ceiling agreed to by the management and the Labour Minister on the basis of the cost of living index is 1,050. Now the cost of living index is 960. For the past several years the cost of index has shown a minimum increase of 50 points per year. At this rate by the end of the expiry of the present agreement, the cost of index will go up to a minimum of 1,200 points. If the ceiling is fixed at 1,050 the workers will be at a terrible disadvantage. This should be reconsidered.

[Dr. H. V. Hande] [1972 டிசம்பர் 14

As regards housing, the management has accepted the scheme and asked the Union to give detailed proposals. When the Union gave a number of proposals, the management turned them down and offered a sum of Rs. 2.5 lakhs. They said that they would give only Rs. 2.5 lakhs. But the demand of the Union is that the management should sanction loan towards construction of houses and the loan can be deducted from the workers in instalments. In this connection, I would like to point out that in the case of a big company, normally the provident fund amount is kept with the Government and whenever workers want loan from their provident fund, it is given to them. But the Dunlop Company is an exception. They applied to the Central Government and got exemption from the provision that the provident fund amount should be kept with the Government. The Company has kept a sum of Rs. 2.5 crores collected towards the provident fund and refused to give a loan of Rs. 10,000 per worker. Such a simple request of the workers has been turned down by the management.

Then as regards E.S.I., those who come under the E.S.I. Scheme are eligible for 56 days with half-pay. For others the Company gives holidays for 28 days with a sum of Rs. 550 towards medical expenses. But the same benefit is not extended to operators who do not come under E.S.I. The operators should enjoy the benefit of non E.S.I. Members without any discrimination.

As regards school facilities, the management should immediately arrange for educational facilities to the employees' children.

The salary for the four weeks ending 20th November should be paid immediately. The management gave an excuse that because the staff were on strike, they could not pay the salary. The Union agreed to give necessary staff on 20th November 1972 but the management declared a lock-out on 22nd November 1972. This is a very humane cause and a large number of workers are involved. But the management is taking up a dictatorial attitude. So, I request that the House do stand adjourned to discuss this matter further and solve the problem



1972 டிசம்பர் 14]

*** மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, டன்லப் தொழிற்சாலை சங்கத்திற்கும் நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட சில வேறுபாடு களின் காரணமாக, 7 கோரிக்கைகளை தொழிற்சங்கம் முன் வைத்து தொழில் தகராறை எழுப்பியிருக்கிறது. அந்தக் கோரிக்கைகள் வீட்டு வசதி, பள்ளிக் கூடம் அளித்தல், பணியாளர்களின் சம்பளத்தை சீராக்கிக் கொடுத்தல், அம்பத்தூர் தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி அளித்தல், மருத்துவ விடுப்பு அளித்தல் போன்ற கோரிக்கைகளை தொழிற் சங்கம் பிரச்சினையாக வைத்து இதைப்பற்றி ஒரு தீர்வு காண வேண்டும் என்று விரும்பினார்கள், இரு தரப்பினரும் பேச்சு வார்த்தைகள் நடத்தியும் ஒத்துவராததால், 13—11—1972 முதல் வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. அதையொட்டி, நிர்வாகத்தினர் 27—11—1972 முதல் தொழிற்சாலையைக் கதவடைப்பு செய்தனர். இரு தரப்பு பேச்சு வார்த்தைகளைப் பற்றியும், தொழிலாளர் நல ஆணையாளர் அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார். தொழிலாளர் நல ஆணையாளரின் பரிந்துரை களும் அரசுக்குக் கிடைத்துள்ளன. அவை அரசின் பரிசிலனையில் உள்ளன. அவரும் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால் முடிவு ஒன்றும் ஏற்படவில்லை.

தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறைச் செயலாளர் தொழிற் சங்கத்தி னருடனும், நிர்வாகத்தினருடனும் 8—12—1972 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். ஊதியம் வழங்கப்படாத நாட்களுக்கு ஊதியம் வழங்கிட வேண்டு மென்று சங்கத் தலைவர் கருத்துத் தெரிவித்தார். தொழிற்சாலையில் கதவடைப்பு செய்யவேண்டிய ஒரு சூழ்நிலையை தொழிலாளர்கள் ஏற்படுத்தியுள்ளனர், சுமுக மான சூழ்நிலை ஏற்பட்டு, பணி தொடர்ந்தாலன்றி, ஊதியத்தை வழங்கிட இயலாதென்ற நிலையிலே நிர்வாகத்தினர் நின்றனர். நேற்று நான், இரு சாராரையும் அழைத்து அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினேன். இப் பொழுது தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இந்த 7 கோரிக்கைகள் பற்றியும் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று கூறியதற்கு நிர்வாகத்தினரும், தொழிற் சங்கத்தினரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஊதியம், இன்னும் ஒரு வாரத் திற்குள்ளாகக் கொடுக்கப்படும். அந்த ஒரு வாரத்திற்குள் அவர்கள் இந்தச் சம்பளத்திற்கான விவரங்களையெல்லாம் திரட்ட வேண்டிய அலுவலாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் முன்பு

அவர்கள் அனுமதிக்கப்படாமல், டயர்களை யெல்லாம் கிழித்துவிட்டதாகத் தொழிற்சாலை நிர்வாகிகள் கூறினர். ஆனால், இவைகளில் எல்லாம் எது உண்மையோ, இல்லையோ, இனி வழங்கவேண்டிய ஊதியத்தை வழங்கத் தக்க முறைகளை எடுத்துக்கொள்ளப்படுமென்று நிர்வாகத்தினர் உறுதி கூறியிருக்கிறார்கள். ஆக, இன்னும் ஒரு வாரத்திற்குள்ளாக அது வழங்கப்படும். தொடர்ந்து சுமுகமான நல்ல முடிவை ஏற்படுத்துவதற்கு நான் இரு சார்பினரும் ஒத்துழைக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளேன். ஆகவே, இதற்காக அவையை ஒத்திவைக்க விவாதிக்கத் தேவையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ரூ. 2 கோடி சொச்சம் தொழிலாளர்களின் பிராவிடன்ட் ஃபண்ட் அரசாங்கத்தின் கையில் இருக்க வேண்டும். ஆனால், அந்தப் பணத்தை, அந்தக் கம்பெனியார் ஸ்பெஷல் எக்ஸம்ஷன் வாங்கிக் கொண்டு, ஒரு நாமினல் இன்டரஸ்டுக்காகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணத்தை, ரிலீஸ் செய்துவிட்டால், தொழிலாளர்கள் வீடுகள் கட்டுவதற்கு சௌகரியமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கும் செலவு கிடையாது, கம்பெனிக்கும் செலவு கிடையாது. தொழிலாளர் பணத்தை, ஒருவருக்கு ரூ. 10,000 என்று கொடுத்தால், அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு சௌகரியமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதை யாவது உடனடியாகச் செய்வதற்கு அரசு வற்புறுத்த முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவுக்கு இந்த அரசாங்கம் உதவி செய்து வரும் என்பதை நாடு அறிந்திருக்கிறது, டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறிய கருத்தை, தொழிற்சங்கம் என்னிடத்திலே பேச்சு வார்த்தை நடத்துகிற சமயத்தில் தெரிவிக்கவில்லை. இருந்தாலும், அவர் சொன்ன கருத்தை அடுத்து பேச்சுவார்த்தை நடத்தும்பொழுது கவனித்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இது பற்றித் தனியாக விவாதிக்க வேண்டியதில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையை ஒத்திவைத்து இதை விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.



## (5) கவன ஈர்ப்பு

**'சிம்சன் குரூப்' கம்பெனிகளின் நிர்வாகத்தினர் வாக்குறுதிகளை நிறைவேற்றாமையும், அதன் காரணமாகத் தொழிலாளர்களிடையே நிலவும் பதட்ட நிலையும் குறித்து.**

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the unrest prevailing among the workers of Simpson Group of Companies due to non-fulfilment of assurances given by the management that the departmental enquiry against 184 suspended workers will be completed within 45 days and will be forwarded to the Chief Minister for taking final decision.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, சிம்சன் கம்பெனி நிர்வாகத்தினர் 15—6—1972-ம் தேதி நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து, அண்ணா சாலையிலும், செம்பியத்திலும் உள்ள தங்களது நிறுவனங்களை மூடிவிட்டனர். மறுபடியும் 23—8—1972 முதல் தங்களது மூடிய நிறுவனங்களைத் திறந்தனர். சில தொழிலாளிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள தற்காலிக வேலை நீக்க உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும் எனக் கோரி தொழிலாளர்களில் ஒருசாரார் வேலைக்கு வரவில்லை.

மாண்புமிகு முதல்வருடைய நல்லுரையின் அடிப்படையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் 22—9—1972 நடந்த பேச்சு வார்த்தையின்போது ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதற்கேற்ப வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அனைவரும் 25—9—1972-ம் தேதி வேலைக்குத் திரும்பவேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படியே 25—9—1972-ம் தேதி முதல் சுமுகமான நிலை உருவாகியது.

தொழிலாளர் நல அமைச்சர் முன்னிலையில் ஏற்பட்ட உடன்பாட்டின் விவரங்கள் வருமாறு:—

(1) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள எல்லா தொழிலாளர்களும் 25—9—1972 அன்று வேலைக்குத் திரும்பவேண்டும்.

(2) தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட 376 தொழிலாளர்களுக்கும் முழுச் சம்பளமும், பஞ்சப்படியும் தற்காலிக வேலைநீக்க காலத்தில் கொடுக்கப்படும்.

(3) 184 தொழிலாளர்கள் மீது நிர்வாகம் தொடுத்துள்ள குற்றங்களின் பேரில் விசாரணை 45 நாட்களில் முடிவடையும். விசாரணையின் முன்னேற்றத்தை 15 தினங்களுக்கு ஒருமுறை தொழிலாளர் நல ஆணையர் பரிசீலிப்பார். நிர்வாகத்தினருடைய விசாரணையின் முடிவு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கும் தெரிவிக்கப்படும். தொழிலாளர்கள் பழிவாங்கப்படாமலிருக்க வேண்டி, முதலமைச்சர் நிர்வாகத்தின் தீர்ப்பைப் பரிசீலித்த பிறகே அவை நடைமுறைக்கு வரும். இரு தரப்பினரும் முதலமைச்சருடைய இம்முடிவை ஏற்றுக்கொண்டவர்களாவர். போலீஸ் வழக்கில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் அந்த வழக்குகளின் தீர்ப்பு வரும்வரை காத்திருக்கவேண்டும்.

(4) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக எந்தத் தொழிலாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. சம்பள முன்பணம் தரப்படமாட்டாது.

(5) ஜூன் திங்களுக்குரிய சம்பளம் 27—9—1972 அன்று கொடுக்கப்பட்டது.

(6) இரு தரப்பினரும் 1971-ல் ஏற்பட்ட உடன்பாடு, போனஸ், உற்பத்தி ஊக்க நிலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பேசி சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், அதற்காக தொழிற்சாலையில் உற்பத்திக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் எந்தவிதமான வன்முறையிலும் ஈடுபடக்கூடாது என்றும் ஒப்புக் கொண்டனர்.

ஒப்பந்தத்தின் இரண்டாவது பிரிவின்படி தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 376. நிர்வாகம் தனது 29—11—1972 தேதியிட்ட கடிதத்தில் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 369 என்று தெரிவித்திருக்கிறது.

ஒப்பந்தத்தின் 3-ம் பிரிவின்படி நிர்வாகம் 184 தொழிலாளர்களின்மீது குற்றம் சுமத்தப்பட்டதில் 155 வழக்குகள் சென்னையிலுள்ள நிறுவனங்களைச் சேர்ந்தது. மற்றும் 3 வழக்குகளில் ஒரு தற்காலிக தொழிலாளியின் வேலை காலம் முடிவடைந்து விட்டது. மற்றொருவர் தற்காலிக தொழிலாளர். இவர்கள் இரண்டு பேரும் இந்தியா பிஸ்டன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்தவர். இவர்கள் இருவர் மீதும் வழக்கு தொடருவதாக இல்லை. மற்றொரு தொழிலாளி வேலையை ராஜிநாமா செய்துவிட்டார். எஞ்சியுள்ள 26 வழக்குகளும் சென்னைக்கு வெளியில் மாற்றப்பட்டுள்ள நிறுவனங்களைச் சார்ந்தவை.





போலீஸ் வழக்குகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 249, கொலை வழக்கு நீங்கலாக. நிர்வாகம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியவை 181. இதுவரை நிர்வாகம் 45 வழக்குகளை விசாரணைசெய்து முடித்துள்ளது. விசாரணையில் இதுவரையில் கண்டுள்ள முன்னேற்றம் போதியதாக இல்லை. 25—11—1972-ம் தேதிவரை நடத்தப்பட்ட விசாரணையின் முன்னேற்றம் பின்வருமாறு :

(1) தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை—369.

(2) போலீஸ் வழக்குகள் தொடரப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை—244.

—5.

(2 A) கொலை வழக்கில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை

(3) நிர்வாகம் வழக்குகள் தொடுத்து தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ள தொழிலாளர் எண்ணிக்கை—181.

(4) இருதரப்பான வழக்குகளிலும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை—62.

(5) மொத்தம் விசாரணை நடத்தப்பட வேண்டியவை—181.

(6) சென்னையில் உள்ள நிறுவனங்களைச் சார்ந்த வழக்குகளின் எண்ணிக்கை—155.

(7) வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ள நிறுவனங்களைச் சார்ந்த வழக்குகள்—26.

(8) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை—133.

(9) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை—3.

(10) விசாரணைகள் இதுவரை முற்றுப்பெற்ற வழக்குகள்—45.

சிம்சன் நிர்வாகம் விசாரணையில் ஏற்படும் கால தாமதத்திற்கு கீழ்க்கண்ட காரணங்களைக் காட்டியுள்ளது :—

(1) வேலை நிறுத்தம் கைவிடப்பட்ட தேதியான செப்டம்பர் 25-க்கும் அக்டோபர் 1-க்கும் இடைப்பட்ட தேதிகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை விசாரணைக்கு வரும்படி தகவல்கள் அனுப்புவதில் தவிர்க்கமுடியாத காலதாமதமாகியது.

(2) நிலையான ஆணைகளின் ஷரத்துக்களுக்கு உட்படாத நபர்களின் உதவியை நாடியோ அல்லது வாய்தா கேட்டோ அல்லது விசாரணைக்கு வராமலோ சில தொழிலாளர்கள் இருந்தனர்.

(3) தவிர, தொழிற்சங்கமும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை அல்லது விடுமுறை நாட்களில் விசாரணையை போடவேண்டாம் என்று கேட்டுக் கொண்டது.

(4) ஆரம்ப கட்டத்தில் தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்புவதற்கான நாட்களையும் விசாரணை நடக்கும் காலத்தில் இடையில் வரும் விடுமுறை நாட்களையும் (விசாரணை 45 நாட்களுக்குள் முடிவடைய வேண்டும் என்று கணக்கிடும்போது) கணக்கில் சேர்க்கக்கூடாது என்பதே நிர்வாகத்தினரின் வேண்டுகோளாகும்.

(5) விசாரணைக்கு ஒரே ஒரு அதிகாரி மட்டும் நியமிக்கப்பட்டு இருப்பதும், மேற்பட்ட தொழிலாளர்களுக்கும் பஞ்சப்படியுடன் முழுச் சம்பளம் கொடுப்பதுதான் விசாரணையில் காலதாமதங்கள் ஏற்படுகின்றன என்று தொழிலாளர் நல ஆணையாளர் கூறியுள்ளார்.

181 வழக்குகளில் இதுவரை 45 வழக்குகளே முடிந்துள்ளன என்றும், சென்னை நிறுவனங்களிலும் அதற்கு வெளியே உள்ள நிறுவனங்களிலும் சம்பந்தப்பட்ட எஞ்சியுள்ள 136 வழக்குகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரிப்பது சாத்தியமில்லை என்றும் தொழிலாளர் நல ஆணையாளர் மேலும் கூறியுள்ளார். விசாரணைகளை முடிப்பதில் நிர்வாகத்துடன் ஒத்துழைக்கும்படியும் தவிர்க்கக்கூடிய வாய்தாக்களை கேட்க வேண்டாம் என்று தொழிலாளருக்குச் (அறிவுறுத்தும்படியும்) சொல்லும்படியும் சிம்சன் தொழிற்சங்க உதவித் தலைவர் திரு. வி. பி. சிந்தன் அவர்களை அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். அவ்வாறு வேண்டுகோள் விடுத்தும் சுமுகமான விசாரணைகளை முடிப்பதில் தேவையான நடவடிக்கைகளும் கணிசமான முன்னேற்றங்களும் காணப்படவில்லை என்று தொழிலாளர் நல ஆணையாளர் சுட்டிக்காட்டுகிறார்.

நிர்வாகத்தினர் முன்பு வரையறுக்கப்பட்ட 45 நாட்கள் கெடுவை தளர்த்தி விசாரணையை இன்னும் சில நாட்கள் நடத்த அனுமதிக்க வேண்டும் என்று 13—11—1972 தேதிய கடிதத்தில் தொழிலாளர் நல அமைச்சரை வேண்டிக் கொண்டுள்ளனர்.





எனவே இரு தரப்பினர்களையும் அரசு மட்டத்தில் விவாதத்திற்கு அழைத்து 181 வழக்குகளையும் விரைவில் விசாரித்து தீர்வு காண சரியாகக் குறிப்புரைகள் அளிக்கப்பட வேண்டும் என்று தொழிலாளர் நல ஆணையாளர் தெரிவித்துள்ளார் இதுவரையில் விசாரணையில் கண்டுள்ள முன்னேற்றங்களைப் பரிசீலிக்கவும், எஞ்சிய விசாரணைகளை விரைவில் முடிப்பதற்கும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் 7—12—1972 அன்று இரு தரப்பினரிடையும் பேச்சுவார்த்தை நடத்தினர். நிர்வாகம் விசாரணைகள் எவ்வாறு அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளுகின்றன என்பதை விளக்கிற்று. தொழிலாளர் நல அமைச்சருடைய ஆலோசனையின் பேரில் எஞ்சியுள்ள வழக்குகளை 31—12—1972-ம் தேதிக்குள் முடிவுக்குக் கொண்டுவர நிர்வாகமும் தொழிற்சங்கமும் ஒத்துக்கொண்டன.

DR. H. V. HANDE : May I know whether it is not possible for Government to suggest one thing to the management ? The Hon. Labour Minister has told us that things are quite normal and we are happy if that is so. May I know whether it is not possible to persuade the management to be lenient about the whole thing and to excuse the persons against whom there are enquiries, so that the whole thing is finished as early as possible and there could be 100 per cent normaly in the company.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது போல் ஏற்கனவே நம்முடைய முதல்வர் அவர்கள் விசாரணையின் முடிவை அவர்கள் பார்த்த பிறகுதான் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் மீது காட்டுகின்ற அக்கறையின் காரணமாக அவர்களுடைய நலன் பாதிக்கப்படாமல் ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்

#### (அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இச் சட்ட முன்வடிவை இப் பேரவையின் முன் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு இப் பேரவைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இரண்டாம் துணை நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் நடைபெறும்.

**(7) 1972-73-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.**

THIRU B. VENKATASWAMY : I thank the Deputy Speaker for giving me an opportunity to speak about this supplementary statement of expenditure for 1972–73. Apart from the supplementary statement, there have been many schemes and new services, which we had approved in the detailed budget presented earlier in the year. In this supplementary estimates also, certain new services are there.

I want to stress many things about agriculture. As regards flower development, sun flower has been introduced and I want to stress that sun flower development may be extended to Dharmapuri district very early and subsidies given to the ryots for its development in that district.

Regarding milk development, I want to stress that it should be given prime importance. Even though Dr. Kurien, Chairman, All India Dairy Development Corporation, said that Rs. 10 crores had been sanctioned for Tamil Nadu, the amount sanctioned for Dharmapuri district had been diverted to other areas. I represented about this to the Hon. Minister concerned and also to the Chief Secretary. But so far no decision has been regarding it. So I request Government to extend the operational flood scheme to areas where potentialities for development are there, leaving aside political differences.

Regarding drought relief, some amount had been sanctioned but the same had not been utilised. I request the Water and Drainage Board to take up schemes in Dharmapuri district so that water supply may be there in the entire district. Then people may



not suffer from drought. Government should extend the scheme (water and drainage schemes) first to Hosur and Denkanikota taluks.

As far as Slum Clearance Board is concerned, I can charge this Government that they are using tax-payers' money only to beautify Madras City. I no doubt welcome slum improvement scheme in Madras City. But at the same time Government should see that it is implemented in the districts also.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சென்னை மாநகரத்தில் மட்டும்தான் குடிசை மாற்று வாரியம் பணியாற்றி வருகிறதே தவிர, மற்றப் பகுதிகளில் இல்லை. தமிழ்நாடு எங்கும் குடிசைகளைத் திருத்தியமைக்கும் வேலையை வீட்டு வசதி வாரியம் செய்து வருகிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Even though it has been included in the Housing Board, no hut has been converted into a house in the rural areas, in the village side, whether Housing Board or Slum Board executes the schemes in rural areas.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் குடிசைகளை மாற்றியமைக்கும் பொறுப்பு மாவட்டத் தலைநகரங்களில்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட காரியங்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. மு.ப. 11–0
நம்முடைய தமிழகத்தில் மட்டும்தான் இருக்கிறது. கிராமப் பகுதியில் உள்ளவர்களுக்கு வீடு கட்டித் தருவதற்காக ரூரல் ஹௌசிங் யூனிட் இயங்கி வருகிறது. அதன்மூலம் பெரிய அளவில் காரியங்கள் செய்யலாம் என்று அரசு ஆலோசித்து வருகிறது.

THIRU B. VENKATASWAMY : I welcome it. You must take up such kind of schemes. You are talking about low-income persons and backward classes but you have forgotton about the poor coolies who earn only Re. 1 or Rs. 2 per day and who are struggling for their livelihood. In towns a person is able to earn Rs. 10 to Rs. 15 per day but it is not so in the rural areas. So, the Government should introduce any scheme which would help the poor people in the rural areas.

Then, regarding the International Trade Fair held in Delhi, a sum of Rs. 5 lakhs has been sanctioned by the Government. I want to know whether we are going to get any return from that amount and whether we will be able to sell our produce in the international market.

[Thiru B. Venkataswamy] [1972 டிசம்பர் 14

Regarding roads, we have no roads in the rural areas. Of course, the Government of India sanctioned a crash programme and under that scheme something is being done. But there are so many villagers without roads not even kucha roads. So I request the Hon. Minister concerned to conduct a survey of the rural roads and do justice to the rural areas.

As regards drought relief, yesterday in reply to a question it was stated that a crore of rupees has been sanctioned to the entire State. Recently a committee from Delhi has studied the condition of Dharmapuri district and I do not know what has happened to its report. So far, no scheme has been implemented and the people there are suffering a lot. The Crash programme also is about to end in all the blocks. I want to know whether any amount has been sanctioned to the Dharmapuri and Ramanathapuram districts and what are the schemes that are going to be taken up there.

Regarding afforestation, I want to point out that the entire avenue trees have been cut. Sir, avenue trees prevent soil erosion. Recently I had a talk with one of the important persons, General Kumaramangalam and it seems that he has written a letter to the Hon. Chief Minister about raising avenue trees on the roads so that we can prevent soil erosion. Also we can get income from trees like tamarind tree. I request the Government to formulate a comprehensive scheme in regard to this matter.

As regards industries, even this morning I requested the Hon. Minister for Industries to introduce Radio Mechanism course in the Industrial Training Institute in the Hosur taluk. As there is such a course in the Institute at Bangalore, the people in our taluk which is nearest to Bangalore, go there for training. So, I request the Hon. Minister to introduce that course in our I.T.I. along with the Electrical Course which he proposed to introduce there. Sir, our place has been entirely neglected and I have been pointing it for the last four or five years but so far nothing has been done. Our Hon. Minister, Thiru Rajaram knows about it as he was once an M.P. of that area. Recently the report of the Techno-Economic Survey of the entire State has been published in 'The Indian Express' and according to it, Dharmapuri district has got the potential resources for



1972 டிசம்பர் 14] [Thiru B. Venkataswamy]

development. Cigarette factory can be started there and the Hon. Minister for Co-operation has stated this morning that tobacco can be produced there. So I request the Government to take immediate steps to open a cigarette factory there. Also I request the Government to conduct a detailed survey of the district so that we can know which industries can be started by the State and the Central Governments.

As regards sericulture, there is great scope for development there. In this connection, I want to point that permanent pattas should be given to the growers of mulberry or atleast pattas should be given after a period of five years. Two days ago I read an article wherein it is stated that there is much scope for export of silk and so we can earn foreign exchange by producing silk. With these words, I conclude my speech.

### (6) அமைச்சரவைமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பட்டியலையும் அதற்கான பதில் பட்டியலையும் பேரவை முன் வைத்தல்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு நான் அளித்த விளக்கத்தின் அடிப்படையில் இப்போது ஜனாதிபதியிடத்தில் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களும் மற்றவர்களும் அளித்த பட்டியலையும், அதற்கு அரசாங்கச் சார்பில் அளிக்கப்பட்ட, பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள பதில் பட்டியலையும்@ இந்தப் பேரவையின் முன்னால் இப்போது வைக்கிறேன். (ஆரவாரம்.)

### (7) 1972-73-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. பொ. பத்மனாபன்:** தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு துணை மதிப்பீட்டுக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தில் தாமிரவருணி நதி நீர்ப்பாசனத்தில் முறைபோ மேலிருந்து கீழ் வரிசைக்கிரமமாகக் குளங்களுக்குத் தண்ணீர் விடாமல் திருவைகுண்டம், திருச்செந்தூர் பகுதிகளில் பழந்தொழி என்ற முறையில் கடந்த கார் பருவத்தில் தண்ணீரை வீணாக்கி மேல்பகுதியில் உள்ள

@14—12—1972-ம் தேதி பேரவை முன் வைக்கப்பட்டது.

நிலங்களின் விளைவுகள் பாதிக்கப்பட்டு அம்பாசமுத்திரம். சேர்மாதேவி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் கொதிப்படைந்து வருகிறார்கள். என்னைப் போன்ற அரசியல்வாதிகளும் பொதுமக்களும் அரசுக்கு எடுத்துச் சொல்லியும் இந்த நிலை நீடித்து வருகிறது. பழந்தொழி என்ற முறையை மாற்றிக் குளங்களுக்குத் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்வதோடு எக்காரணத்தைக் கொண்டும் பழந்தொழி என்ற பேரால் நினைத்த நேரமெல்லாம் பயிரிட்டுக்கொண்டு செல்வாக்கு உள்ளவர்கள் தண்ணீர் கொண்டு போவதைத் தடுத்து மேல் பகுதியில் உள்ள பாசனங்களில் திவுகரிவு இல்லாமல் இருப்பதற்கு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெல்லைத் தொகுதியில் உள்ள பேட்டை, பெரியகுளம், தாமரைக்குளம், முள்ளிகுளம், கிருஷ்ணபேரிகுளம், கண்டியப்பேரி; இளம்புதுக்குளம், நயினார் குளம் ஆகிய குளங்கள் இருபோகம் விளையக்கூடிய நிலங்களுக்குத் தாயாக இருந்தும் அவைகள் பல ஆண்டுகளாக மராமத்து செய்யப்படாமல் குளங்கள் மேடாக இருக்கின்றன. இதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. மராமத்து செய்தால் சுமார் 25 நாட்களுக்கு ஒரு தடவை குளம் பெருகினால் போதுமான தாக இருக்கும். இப்போது ஒரு வாரம், ஏழ நாட்களுக்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே உடனடியாக மராமத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லா மாநிலங்களாலும் பாராட்டு பெற்று தமிழ்நாட்டில் முன்னோடியாக விளங்கிவரும் குடிசை மாற்று வாரியத் திட்டத்தை நெல்லை மாவட்டத்தில் நகர்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் குடியிருப்புக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க நெல்லை தொகுதியில் வீட்டுவசதி வாரியத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு தலைவரவர்களே, 1972-73-ஆம் ஆண்டுக்கான துணை மானிய மதிப்பீட்டில் பேசுகிற வாய்ப்புப் பெற்றமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் 4.7 கோடி ரூபாய்க்கு வரவு செலவுத் திட்டங் களுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. 2.82 கோடி ரூபாய் அளவில் மத்திய அரசிடமிருந்து நாம் உதவி எதிர் பார்த்தாலும் கூட தைரியமாக அவசரமான, அத்தியாவசியமான தேவைகளை மனதில் கொண்டு 4.7 கோடி ரூபாய்க்கு ஒதுக் கீடு செய்து இருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒன்றாகும்.



குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க முதல் தவணையாக ரூ. 25 லட்சத்தை ஒதுக்கி இருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். அதிலேயே ஊருணி, சிறு பாசன வசதி, புதிய கிணறுகள் தோண்டுதல், தூர் துடைப்புப் பணிகள் போன்றவற்றிற்கும் மத்திய அரசின் நிதி உதவியை எதிர்நோக்கி மேலும் ரூ. 1 கோடி ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டு கிறேன். நன்றி செலுத்திக் கொள்கிறேன். தனி நபர் குழு ஒன்று அமைத்து அரசு பணியாளர்களின் தரங்கள், தகுதி ஆகியவற்றை மாற்றியமைத்ததன் வாயிலாக நமக்கு மொத்தம் ரூ. 5 கோடி செலவாகிறது என்றாலும், உடனடியாக ரூ. 50 லட்சம் தந்து இருப்பதற்காக உள்ளபடியே பாராட்டுகிறேன். விடுதலைப் போராட்ட வீரர்களுக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ரூ. 75 மாதத் தொகையாக உயர்த்தி இருப்பது வரவேற்கத்தக்கது. அதற்காக ரூ. 27.48 லட்சம் ஒதுக்கியிருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு அதற் காக என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடும் வகையில் தொழில் கல்வி பெற்ற 200 பேர்களுக்குப் பயிற்சி அளித்தல் பல்வேறு தொழில்பேட்டைகளில், 43 தொழிற்கூடங்களில் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க ரூ. 28.30 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக சிறு தொழில் கழகத்தின் மூலமாக தொழில் பட்டம் பெற்றவர்களுக்கு இயந்திரம் வழங்கும் சிறப்பான அம்சத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைப்போலவே 1972-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் நாள் முதல் விரைந்து விரிவு அடைந்து வரும் தொடக்கக் கல்வியின் தேவைகளை நிறைவு செய்ய கூடுதலாக 900 பட்டதாரி ஆசிரியர்களையும் தேவையான கூடுதல் பணியாளர்களையும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் அரசு நியமித்துள்ளதை வரவேற்கிறேன். அதற்காக 45.76 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதற்காகப் பாராட்டுகிறேன். ஐந்து மாவட்டங்களில் பெருமளவில் தெளிப்பான்களைப் பயன்படுத்தி ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிர் பாது காப்பு முறைகளை மேற்கொண்டு இந்த நாட்டில் பசுமைப் புரட்சியை விஸ்தரிக்க வேண்டுமென்பதற்காக முயற்சி எடுத்து இருப்பது வரவேற்கத்தக்கதாகும். இன்னும் சொல்லப்போனால் தமிழ் நாட்டில் இருக்கிற அதிகம் பேர்களுக்கு வயிற்றுக் கோளாறு இருக்கிறது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். அந்த வயிற்றுக் கோளாறை போக்குவதற்கான வகையில் சூரியகாந்தி செடி வளர்ப்புச் சிறப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ. 31.06 இலட்சம் ஒதுக்கியிருக் கிறார்கள்: அதற்காக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தை இரண்டு போலீஸ் மாவட்டமாக மாற்றி இருப்பதைப் போல், கோவை மாவட்டத்தையும் இரண்டு போலீஸ் மாவட்டமாகப் பிரித்து அதோடு மாநிலக் காவல் துறையை நவீனமயமாக்குவதற்காக திட்டத்தைத் தீட்டியிருப்பதை வரவேற்கிறேன். இன்று இந்த நாட்டில் இருக்கும் சூழ்நிலையில் என்னென்னவோ செய்கிறார்கள், அவைகளெல்லாம் சிறப்பாக சமாளிப்பதற்காக வேண்டி காவல் துறையை நவீன மயமாக்கி மேம்படுத்துவது சிறப்பானதொன்றாகும். இதற்காக ரூ. 42.50 இலட்சம் ஒதுக்கியிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். கைத்தறி நெசவாளர்களுடைய துயர் துடைப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம், இன்றையதினம் ஆளும் கட்சியாக இருப்பதால் மட்டுமல்ல, அதற்கு முன்னமேயே நம்முடைய தலைவர்கள் எல்லாம் தலையில் கைத்தறித் துணிகளைச் சுமந்து அதன் விற்பனையை அதிகரித்து இருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்து விட முடியாது. அண்மையில் கூட அது மாதிரி ஒரு காரியத்தை அமைச்சர்கள் செய்து இருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நல்ல உள்ளம் கொண்டோர் அனைவரும் பாராட்டுகின்றனர். அப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காக ரூ. 20 இலட்சத்தை அந்தக் கைத்தறி நெசவாளர்களின் சங்கத்திற்குக் கூடுதல் பங்கு முதலீடாக அரசு அளித்திருப்பதைப் பாராட்டுகிறேன். சிறு பிள்ளைகள் எல்லாம் சிறு பிராயத்தில் இளம் பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு அவர்கள் வாழ்க்கையில் கஷ்டப்படுவதைக் கண்ணுற்ற நம்முடைய கலைஞர் அவர்கள், இளமைப் பருவத்தில் வலிவுமிகு உடலுடன் விளங்குவது வளமான வருங்கால வாழ்வுக்கு அடிப்படையான ஒன்று என்ற கருத்தின் அடிப்படையில் சென்னை மாநகரிலுள்ள பள்ளிகளில் 1 முதல் 6 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உடல் நலப் பரிசோதனை செய்யும் திட்டத்திற்காக ரூ. 3 இலட்சம் ஒதுக்கியிருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒன்றாகும். கிராமப்புறத்தில் குடிநீர் வழங்குத் திட்டத்தை விரைவு படுத்துவதற்காக தமிழ் நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு ரூ. 25 இலட்சம் முதல் தவணையாக அரசு வழங்கியிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கிறேன். குடிசைப் பகுதியை மாற்றியமைக்கும் திட்டங்களுடன் சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளில் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 84 இலட்சம் ஒதுக்கியிருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். இதற்கென முதற்கட்டமாக ரூ. 21 இலட்சம் ஒதுக்கியிருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் அசாதாரண நிலையில் இருப்பவர்கள் இதனை மதிப்பிட்டுப் பார்க்க வேண்டும். நாட்டில் பாட்டாளி மக்கள், ஏழை எளிய மக்கள் நம்முடைய கலைஞர் ஆட்சியைப்





பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சாதாரண நிலையில் உள்ளவர்களுக்குக், கலைஞர் அவர்களின் ஆட்சி எந்த முறையில் நல்ல காரியங்களைச் செய்து வருகிறது என்பது புரிகிறது. ஆகவே தான் அசாதாரண நிலையில் இருப்பவர்கள் இது பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஒரு நீதிமன்றம் கூட இல்லை. இதை நான் இந்த மன்றத்தில் பல முறை தலைவரவர்களே, உங்கள் மூலமாக வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். உடனடியாக நடப்பு ஆண்டிலேயே வழக்கு மன்றங்கள், ஜுடிசியல் கோர்ட்டாக இருந்தாலும் சரி, வேறு கோர்ட்டாக இருந்தாலும் சரி, ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே தாலுக்காவின் தலைநகராக இருக்கும் நன்னிலத்தில் ஒரு பயர் சர்வீஸ் ஸ்டேஷன் நீண்ட நெடுங்காலமாக வேண்டுமென்று சொல்லியும் ஏற்படுத்தித் தரவில்லை. இந்த ஆண்டே அதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலவள வங்கிகள் யூனியனுக்கு ஒன்றாக இருக்க வேண்டுமென்று அரசு கொள்கை வகுத்திருந்தபோதிலும் நன்னிலம் யூனியனுக்கு ஒரு நில வள வங்கி ஏற்படுத்தவில்லை. அதையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு சிறப்பான ஒரு துணை மானிய மதிப்பீட்டை அளித்திருக்கும் கலைஞர் அவர்களை வாயார நெஞ்சாரப் பாராட்டி, பாட்டாளி மக்கள் படும் துயர் துடைத்து, நாட்டிலே இன்ப பொன்னிலே பொங்க மூட்டுவோம் முயற்சித் தீயே என்று சபதம் கொண்டிருக்கும் கலைஞரின் கரத்தை வலுப்படுத்துவோம், நாம் அனைவரும் ஒத்துழைப்புத் தருவோம் என்று சொல்லி, சாதாரண நிலையில் இருக்கிறவர்களுக்குத்தான் இது புரியும். அசாதாரண நிலையில் இருப்பவர்கள் இதைத் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பினைத் தந்த தலைவரவர்களே உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

* **திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவரவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியில் விவசாயிகள் தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். அவர்களின் குறைகளைப்பற்றி நான் இங்கே பலமுறை பேசியிருக்கிறேன். சென்ற கார் பருவத்தில் பாபநாசம், மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தின் மூலம் பயனடையும் பாசனங்கள் குறிப்பாக மேற்கத்திய விவசாயம் மிகவும் பாதித்துவிட்டது. கூட்டுறவுத் இந்த வாசு மேல்பகுதி பாசனத்தைச் சரிவர கவனிக்கவில்லை.

துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்திருந்தபோது கூட அவர்களிடத்தில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் கூட அதையெல்லாம் பார்த்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். குறிப்பாக வடக்குக் கோடை மேல் அழகியன் கால்வாய்—இந்தப் பெயர் வந்த காரணமே கோடைகாலத்திலும் அங்கு நல்ல விளைச்சல் வரும் என்பதால் தான்—பகுதியில் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டதால் விவசாயிகள் அரசின் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அட்வான்ஸ்காருக்குத் தண்ணீர் கொடுப்பதிலே மேற்கத்திப் பாசனம் பாதிக்காமல் இருக்க கவனித்துக் கொள்ள வேண்டும். மேலும் அரசு அட்வான்ஸ்காருக்கு ஏப்ரல், மே மாதத்தில் தண்ணீர் கொடுக்கும் பொழுது, தேக்கத்தின் நீர்த்தேவை நிலையைக் கவனிப்பது மிகவும் அவசியம். அட்வான்ஸ் கார் என்பது மின்சாரத்திற்குப் பயன்படக்கூடிய தண்ணீர் வீணாகாமல் இருக்கும் பொருட்டு கொடுக்கப்பட்டது.

மின்சாரத்திற்கு எவ்வளவு தண்ணீர் செலவழிக்கப்படுகிறதோ அந்தத் தண்ணீரைக் கணக்கிட்டு, அதற்குரிய ஏக்கரா மட்டும் பயிர் செய்யச் சொல்வதே நியாயமாகும். மேலும், அட்வான்ஸ் கார் என்பது ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களுக்குள் குறுகிய கால விதைகளைப் பயிர் செய்யச் சொல்வது மிகவும் நலமாக இருக்கும். அப்படியில்லாமல் 4, 5 மாத காலப் பயிர் செய்தால் மேற்கத்திய பாசனத்திற்கு ஜூன் 1-ஆம் தேதி தண்ணீர் கொடுக்க வேண்டிய நிலைமை வரும்போது கீழ்ப்பாசனமும் பாதிக்கப்படும். இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இது பல வருடங்களாகப் பெரும் குறையாகவே இருந்து கொண்டுவருகிறது. தயவு செய்து இதை அமைச்சர் அவர்கள் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மணிமுத்தாறு நீர்த்தக்கம் விவசாயத்திற்காகக் கட்டப்பட்ட அணை, அட்வான்ஸ்காருக்கு இந்த அணையிலிருந்து தண்ணீர் கொடுக்கப்பட்டதால் ஆரம்பத்தில் உள்ள மேற்கத்தியக் கால்வாய்கள், குறிப்பாக வாகைக்குளம், மன்னார் கோவில், ஜமீன் சிங்கம்பட்டி, அயன் சிங்கம்பட்டி, தெற்குப் பாப்பன்குளம், போன்ற கிராமங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் உள்ள பயிர்கள் அனேகம் தீய்ந்து போய்விட்டன. அந்தப் பகுதி விவசாயிகள் பெரிதும் வேதனை அடைந்துள்ளனர். எனவே, மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் மேற்கத்தியப் பாசனத்திற்காகத் தண்ணீர் சுமார் 50 அடிக்குக் குறையாது பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் 50 அடிக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்று



இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் பூரா தண்ணீரும், அந்த அணையிலிருந்து திறந்து விடப்பட்டிருக்கிறது. அம்பாசமுத்திரம் பகுதியைப் பொறுத்தவரையில் அங்கு அனேக கிராமங்கள் இனாம் கிராமங்களாக இருக்கின்றன.

இனாம் கிராமங்களில் அரசினரால் செய்யக்கூடிய உதவிகளை அப்பகுதி மக்கள் அடைய முடியவில்லை. இனாம் கிராமங்களில் பஞ்சாயத்துக்களிலிருந்தும் கூட ஒன்றும் செய்ய முடியவில்லை. குழாய்க்கிணறுகள் ரோடு போன்ற வசதிகள் செய்ய முடியவில்லை. இது மாதிரி பல கஷ்டங்கள் இருந்து வருகின்றன. இனாம் கிராமங்கள் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இனாம் ஒழிப்புச் சட்டம் சரிவர நிறைவேற்றப்படாமல் இருப்பதால் இனாம் கிராமங்களில் உள்ள விவசாயிகள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். இனாம் ஒழிப்புச் சட்டப்படி பயிரிடும் விவசாயிகளுக்கு ரயத்துவாரி பட்டா கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரபரணி ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் வாடர் ரேட் நிலங்கள் இருக்கின்றன. இதனால் மற்ற நிலங்களுக்கு எந்த விதமான பாதகமும் கிடையாது. சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வாடர்ரேட் தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. நீர் ஊற்றின் காரணமாக புஞ்சைச் சாகுபடியும் செய்ய முடியாது. இம்மாதிரி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. நீண்ட காலமாக தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. இதை ரத்து செய்து இந்த நிலங்களுக்கெல்லாம் நஞ்சைக்குரிய பட்டா வழங்க வேண்டும் என்று பல வருடங்காலமாக அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இனாம் கிராமங்களில் விவசாயிகளின் பேரில் கோர்ட்டுகளில் பலவிதமான கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. நமது சட்டமன்றத்தில் உயர்நீதிமன்றம் பட்டா யாருக்கு என்று சொல்லும் வரையில் விவசாயிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தக் கூடாது என்று சட்டமாக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் கோடாரங்குளம், சிலந்திபுரம் கிராமங்களில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஆதரைஸ்டு கோர்ட்டு மூலம் எவிக்ஷன் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இனாம் கிராமங்களில் உள்ள விவசாயிகளை எவிக்ஷன் செய்யப்படுவதிலிருந்து போதிய பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோக அம்பாசமுத்திரம் ஒரு பெரிய டவுன் பஞ்சாயத்து, அந்த நகரத்தில் இதுவரையிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் இல்லாதது குறித்து அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். குடிநீர்த்

திட்டத்தை விரைவிலேயே நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அம்பாசமுத்திரத்தில் கலைக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு இருக் கிறது. ஆரம்பிக்கப்பட்ட காலம் முதற்கொண்டு சரிவர நடத்த முடியாமல் அங்குள்ள ஆசிரியர்கள் கடந்த சுமார் 6 மாதங்களாக சம்பளம் வாங்காமல் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கலைக் கல்லூரியை நமது அரசே ஏற்று நடத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். சேர்வலார் ஸ்கீம்—இந்த நீர்த்தேக்கம்—மின் சாரத்திற்காகக் கட்டக்கூடியதாக இருக்கிறது. இந்த ஸ்கீம் தற்பொழுது நிறுத்தப்பட்டு இருப்பதாகத் தெரி கிறது. என்ன காரணத்தினால் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. அங்கே வேலை செய்கிறவர்கள் எவ்வித வேலையும் இல்லாமல் அப்படியே தங்கி யிருக்கிறார்கள் என்று பேசப்படுகிறது. சேர்வலார் ஸ்கீம் வேலை ஒரு முக்கிய மான நீர்த்தேக்கம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோக, திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் மார்க்கமாக தென்காசி செல்லும் பிரதான ரோடில் திருநெல்வேலிக்குப் பக்கத்தில் தறுவை தாமபோதி ஒன்று இருக்கிறது. சமீபத்தில் 10, 15 நாட்களாக தொடர்ச்சி யாகப் பெய்த மழையின் காரணமாக அந்தப் பகுதியில் போக்குவரத்து போக முடியாமல் பெரும் கஷ்டமான நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்தத் தறுவை தாம்போதியில் ஒரு மேம்பாலம் கட்டிக் கொடுத்தால் போக்குவரத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது போக கடயம் யூனியன் பகுதி ஒரு வறண்ட பிரதேசம் ஆகும். அந்தப் பகுதியில் கடந்த 10, 15 வருடங்களாக நல்ல மழை யில்லாத காரணத்தினால் நல்ல விளைச்சல் இல்லாமல் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு எந்தத் தொழிலும் கிடையாது. பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட கடன் வசூலில் கொஞ்சம் அதிகமாகக் கெடுபிடி இருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது மழை பெய்திருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களில் கிடைக் கின்ற வருமானத்தைக் கொண்டு அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். கெடுபிடி இல்லாமல் அவர்களுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுத்து 6 மாத காலமாவது பொறுத்து கடனை வசூல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கடனாநதி நீர்த்தேக்கம், ராமநதி நீர்த்தேக்கம் போன்ற திட்ட வேலைகள் கடந்த பல வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் அவை இன்னும் முடிந்தபாடில்லை. அவற்றை விரைவிலே முடித்துக் கொடுத்து, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நீர்த்தேக்கத்திலிருந்து விரைவிலே தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது போக, கடனாநதி நீர்த்தேக்கத்திலிருந்து மேட்டுக் கால்வாய் ஒன்று அமைத்து வடமலை சமுத்திரம், ஐயனார்குளம் போன்ற பகுதிகளுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு போதிய வசதி இருக்கிறது. அங்கே மானாவாரி குளங்கள் சுமார் 15 குளங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் அங்கே ஒரு மேட்டுக் கால் வாய் அமைத்து, தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை கள் அனுப்பியிருக்கிறார்கள். அதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தற்பொழுது பெய்த மழையில் கடனாநதி நீர்த்தேக்கத்தில் ஒரு நாள் மழையிலேயே அணை பூராவும் நிறையக்கூடிய அளவு தண்ணீர் இருந்திருக்கிறது. ஆகவே, தேவையான தண்ணீரை அங்கே பெறு வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ந. நாச்சியப்பன்:** பேரன்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, 1972-73-க்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கையின்மீது அதை வர வேற்று என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 4-40 பி.ப.

சென்ற நிதி நிலை அறிக்கையின்மீது பேசுகின்ற நேரத்தில் என்னுடைய தொகுதியில் சில திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். அதை மீண்டும் வற்புறுத்துகின்ற வகையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சங்கராபுரம் பகுதியில் மணி நதியில் ஒரு நீர்த்தேக்கம் வேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த நீர்த் தேக்கம் கட்டுவதற்காக பொதுப்பணித்துறை மேற்பார்வை பொறியாளர் திருச்சி அலுவலகத்திலிருந்து அதனுடைய பொறியாளர் ஆய்வு வேலைகளை முடித்து இன்றையதினம் மதிப்பீடுகளைத் தயாரித்துக்கொண்டு இருக்கிற நிலைமை இருக்கிறது. அதைத் துரிதமாக நிறைவேற்றிக் கொடுத்தால் அந்த தொகுதியில் இருக்கிற பல்லாயிரக்கணக்கான புஞ்சை நிலங்கள் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்படும். அதை இந்த ஆண்டிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முகுந்தா நதித் திட்டம் என்ற பேரால் 14 லட்சம் ரூபாய் ஆகின்ற மதிப்பீடு கள் தயாரிக்கப்பட்டு பல ஆண்டுகளாக வேலை தொடங்காமல் இருக்கிறது. அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணையிலிருந்து வலதுபுறம் வாய்க்கால் மூலமாக கள்ளக்குறிச்சிப் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி ஏற்பட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிதிநிலை அனுமதி தராததால் தேங்கிக்கிடப்பதாக அறிகிறேன். அதை மாண்புமிகு முதல்வர் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது குறிப்பிட்டது மாதிரி கள்ளக்குறிச்சி கச்சராபாளையம் பகுதியில் இருக்கிற பல்லாயிரக்கணக்கான மலை வாழ் மக்கள் வருவதற்கு ஏற்ற வகையில் மேம்பாலத்தைக் கட்டித்தரவேண்டும். செப்டம்பரத்தில் நடந்த விவசாயக் கருத்தரங்கில்கூட முதலமைச்சர் கலைஞர் உறுதியளித்தார்கள். இது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதையும் நிறைவேற்றித்தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பினால் பெருவாரியாக தென்னாற்காடு மாவட்டத்தில் மிக அதிகமாக சேதம் ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக கள்ளக்குறிச்சி பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் அரசுக்கு ஒரு கோடிக்கு மேல் இருக்கும். பாலங்களும், சிறிய அணைக்கட்டுகளும், சிறிய நீர்ப்பாசன ஏரிகளும் பொதுப் பணித்துறையை சார்ந்த ஏரிகளும் உடைப்பு ஏற்பட்டு சாலைகள் அறுத்துச் சென்று இருக்கிற நிலையும் இருக்கிறது. மூங்கில்துறைப்பட்டியில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்புகிற விவசாயிகள் ஏறக்குறைய 3½—4¼ லட்சம் ரூபாய் வரையில் இழப்பு ஏற்படுகிற வகையில் நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. கள்ளக்குறிச்சி—சங்கராபுரம் பாதையில் கோமுகிபாலம் அருகே அந்தப்பக்கத்திலும் இந்த பக்கத்திலும் உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது. அது செப்பனிடப்படவேண்டும். மூங்கில்துறைப்பட்டு அருகே மூன்று இடங்களில் மூங்கில்துறைப்பட்டு பாலத்திலும் வடபொன்பரப்பி பாலத்திலும் உடைப்புகள் ஏற்பட்டு பெருத்த சேதம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த வட பொன்பரப்பி பாலம் 10 ஆண்டுகளுக்கு முன்னால் 15 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டதாகும்.

அந்த நேரத்தில் திட்டமிட்டது சரியாக இல்லாததால் அதை மாற்றி வேறு பாலம் புதிதாகக் கட்டப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் 20-25 ஆயிரம் ரூபாய் செலவு வைத்துக் கொண்டிருக்கிறது. அப்படிச் செலவு செய்தாலும் ஆண்டுதோறும் உடைப்பு ஏற்படுகிறது. ஆகவே அதை வேறு முறையில் வேறு இடத்தில் பாலத்தை அமைத்தாலொழிய வடபொன்பரப்பி பாலம் பிரயோஜனப்படாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



உளுந்தூர்பேட்டை—தியாகதுர்கம் பாதையில் மணிமுத்தா பாலம் வருகிறது. அதற்கு ஒவ்வொரு ஆண்டும் 30 ஆயிரம் ரூபாய் வரை செலவிட்டு பழுது பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்கு இதுவரை செலவிட்ட தொகையில் ஒரு புதுப் பாலமே கட்டி இருக்கலாம். சேலம் செல்லுவதற்கு அது தான் பாதை. ஆகவே, அதற்கென்று ஒரு விரிவான திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை அவசியம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் போலவே ஒன்றியங்களில் இருக்கிற சாலைகள் சீர்செய்யப்பட வேண்டும். கரும்பாலைக்குச் செல்ல வேண்டிய கரும்புகள் எடுத்துச் செல்லப்பட முடியாமல் இந்த சாலைகள் சீரடைந்து இருக்கின்றன. இந்தப் பகுதிகள் எல்லாம் மிகவும் பிற்பட்ட பகுதிகள் என்ற காரணத்தால் இருக்கிற நிலைமைகளே மேலும் சீர்கேடு அடையக் கூடாது என்ற காரணத்தால் இப்படிப்பட்ட திட்டங்களுக்கு முதல்வர் நிதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோமுகி அணையில் வெள்ளப்பெருக்கால் அதிகமாக உடைபட்டு பெரிய சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது. பல உயிர்சேதம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. இதைச் சரி செய்ய 16 லட்சத்திற்கு மேல் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவு பெருத்த சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதைப்போலவே தியாகராஜபுரம் நபாண்டலம், மணலூர் எஸ்குளத்தூர் போன்ற இடங்களில் எல்லாம் உடைப்பு ஏற்பட்டு அவை எல்லாம் மண் மேடாக இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அந்த மணல் மேடாக இருக்கிற அந்த நிலங்களுக்கு, கடல் நுழைகிற இடங்களில் போடப்படுகின்ற முறை போன்று, ஒரு திட்டத்தின்மூலம் கவனிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று கள்ளக்குறிச்சி பகுதியில் இரண்டாயிரத்திற்கு மேல் கூரை வீடுகள் அழிந்து குடியிருக்க வசதி இல்லாமல் தவிக்கின்ற நிலை ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. மூங்கில்துறைப்பட்டு, அக்கராபாளையம், யாதவச் சேரி, இன்னும் சில ஊர்களில் பெண்ணையாறின் ஓரங்களில் குடியிருக்கின்ற குடும்பங்கள் பெருத்த பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றன. அப்படி தாழ்வான இடங்களில் குடியிருக்கிறவர்களுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு மேடான இடங்களில் குடியிருக்க நிலமளித்து பட்டா வழங்க அரசு உதவி செய்யவேண்டும். அப்படி மேடான இடங்களில் நிலமளிப்பது ஹரிஜனங்களுக்கு மட்டும் தான் அளிக்கலாம் என்று அரசு ஆணை இருப்பதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவிக்கின்றார். அதை வடஆற்காடு, தென்னாற்காடு எல்லைபாகத்தில் பெண்ணையாற்றங்கரைகளில் குடியிருக்கின்ற குடும்பங்களுக்காக மட்டும் மாற்றி மேட்டுப்பாங்கான இடங்களில் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறே

அதைபோலவே விடிழந்து தவித்துக்கொண்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு, அவர்கள் சொத்தின்பேரில் கடன் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்தகைய சூழ்நிலையிலும் நமது அரசாங்கம் முடிந்தவரையில் உதவி புரிந்து வருகிறது. இப்படிச் செய்கின்ற உதவிகளை இயன்றவரையில் விரைவாகச் செய்து கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொண்டு, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையை வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு துணை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சுதந்திரம் அடைந்தபிறகு, அதற்குக் காரணமாய் இருந்து தங்களுடைய இன்னுயிரையும் பாராமல் போராடிய வீரர்களுக்கு, எண்ணற்ற தியாகிகளுக்கு—அந்த வீரர்களுக்கு இன்றையதினம் தமிழக அரசானது இதுவரை அவர்களுக்கு அளித்துவந்த உதவித் தொகையை அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்துடன் ரூ. 75 ஆக உயர்த்தியிருக்கிறது. இது தமிழக அரசு இந்த நாட்டு சுதந்திர போராட்ட வீரர்களை எந்த அளவுக்குப் பாராட்டுகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. மேலும் இந்த நாட்டிலே வாழ்ந்து வருகின்ற ஏழை எளிய மக்கள், குடிசைகளிலே வாழ்கின்ற மக்கள், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற மக்கள்—அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருவதற்காக அந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகளை எல்லாம் சீர்படுத்த குடிசைமாற்று வாரியம் என்ற ஒரு அமைப்பை நமது அரசு அமைத்திருக்கிறது. அந்த அமைப்பின்மூலம் அவர்களுடைய குடிசைகளை எல்லாம் அகற்றி, நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறது இந்த அரசு. அதனால் அந்த மக்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள்.

மேலும் இந்தக் குடிசைப் பகுதிகளின் சுகாதார மேம்பாட்டுப் பணிக்காக இந்த அரசு 84 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக இந்த துணை நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஏழை எளிய மக்கள்மீது இந்த அரசு எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. உள்ளபடியே அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். இந்த அளவிலே இந்த நாட்டினுடைய ஏழை எளிய மக்கள் எல்லாம் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியை தமிழக மக்கள் அத்தனை பேரும் பாராட்டுகிறார்கள்.





அடுத்து, இந்த நாட்டு மக்கள் அத்தனைபேருக்கும் தங்குதடையின்றி உணவு வழங்கப்பட வேண்டுமென்ற முறையில் வேளாண்மைத் துறை மூலம் நமது அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. வேளாண்மையில் முன்னேற்றம் காண வேண்டுமென்ற ஆர்வத்திற்கு ஏற்ப விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய உரம் போன்ற விவசாயப் பொருட்கள் காலாகாலத்தில் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. குறிப்பாக உரம் கிடைப்பது மிகவும் பற்றுக்குறையாக இருக்கிறது. அதனால் போதிய அளவு உணவு உற்பத்தியாகவில்லை. உற்பத்திக் குறைவினால் நாம் உணவு தானியங்களை வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யக் கூடிய நிலையில் இருக்கிறோம். இந்தக் குறையைப் போக்குவதற்காக இன்றைக்கு நமது அரசு பசுமைப்புரட்சித் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பசுமைப் புரட்சித் திட்டத்தின்மூலம் இன்றையதினம் விவசாயிகளுக்கு புதிய ரக வித்துக்களைக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கிட வகை செய்திருக்கிறது நமது அரசு. அதுமட்டுமல்ல. இன்றைக்கு வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு வேளாண்மைத்துறையில் நாம் முன்னேறியிருக்கிறோம்.

வேளாண்மைத் துறையில் இந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருந்த போதிலும் இதுசம்பந்தமாக சில குறைகளையும் சொல்லவிரும்புகிறேன். ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்ற புதிய ரக வித்துக்களை எல்லாம் கொடுத்து விவசாய உற்பத்தி பெருகி வருகின்ற நேரத்தில், விவசாயிகளுக்கு உரிய காலத்தில் ஏற்ற உரம் போதுமான அளவில் கிடைக்கவில்லை என்ற பெரும் குறை இருந்து கொண்டிருக்கிறது. உள்ளபடியே இது வருந்தத்தக்க ஒரு செய்தியாகும்.

அதிலும் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அங்கே இருக்கின்ற மார்க்கெட்டிங் சொசைட்டியின் மூலம் என்னுடைய தொகுதியிலுள்ள எல்லா மக்களுக்கும் உரம் கொடுக்கமுடியாமல் இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்திலே, நல்ல ரக விதைகளை மட்டும் கொடுத்து விட்டால் போதாது. போதிய அளவுக்கு உரங்களும் அவ்வப்போது கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்ப்பார்க்கும் உற்பத்தியைப் பெற முடியும். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் குறிப்பாக யூரியா உரம் கிடைப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் நான் இந்த மன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எல்லா மக்களுக்கும்—குறிப்பாக எல்லா விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் உரிய காலத்தில் போதுமான அளவுக்கு

[திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்] [1972 டிசம்பர் 14

உரம் கிடைப்பதற்கு, ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒவ்வொரு கோவாப்பரேட்டிவ் சொசைட்டியை ஏற்படுத்தி, அதன் மூலம் உரம் விநியோகம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் பச்சையாற்றுத் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தைப்பற்றி நான் இந்த மன்றத்திலே இதற்கு முன்பு பல தடவை சொல்லியிருக்கிறேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்திலும் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இத்திட்டம் மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது, அனுமதி கிடைத்தவுடன் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அது இன்னும் முடிவுறாத நிலையில் இருக்கிறது. ஆகவே, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, இத்திட்டத்தை மிக விரைவில் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சையாற்றுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் நாங்குனேரி பகுதியில் 7, 8 ஆயிரம் எக்கர் தரிசு நிலங்கள் பாசனம் பெறும். வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் அந்தப் பகுதி மக்களுக்கு இது பேருதவியாக இருக்கும். அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு என்றும் நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் விவசாயிகளுக்கு அடுத்தபடியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்தான் அதிகம். குறிப்பாக மேலப்பாளையத்தில் 20,000-க்கு மேற்பட்ட நெசவாளர்கள் இருக்கிறார்கள். நெசவுத் தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலும் அங்கு செய்வதற்கு தற்போது வசதியில்லை. நெசவாளர் குடும்பங்கள் முன்னேறுகின்ற வகையில் இந்த அரசானது பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. என்னுடைய தொகுதியில் இந்த நெசவாளர்கள் முன்னேற்றத்திற்காக ஒரு நூற்பாலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பெரிய ஆலையாக இல்லாவிட்டாலும் சிறிய அளவிலாவது ஏற்படுத்தவேண்டும். அதாவது சிறு தொழில்களை ஆரம்பிக்கும் போது நெசவாளர்களுக்கு என்று ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தித் தந்தால் நலமாக இருக்கும். அந்த மக்கள் இந்த அரசாங்கத்திற்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள். எனவே, இந்த நெசவாளர்களின் துயர் தணிப்பிற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த துணை நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



1972 டிசம்பர் 14]

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே விவாதத்தில் இருக்கக்கூடிய துணை நிதி நிலை அறிக்கையை நான் மனதார ஆதரிக்கிறேன். அதிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அண்மையிலே தமிழகத்திலே ஏற்பட்ட பெருமழையாலும், புயலாலும், தென்னாற்காடு, சேலம், வட ஆற்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதோடு பலர் உயிரிழக்க நேரிட்டதையும் நாம் கண்ணாரக் கண்டோம். மதிப்பிற்குரிய நமது முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நிவாரண வேலைகளை மேற்கொள்வது என்றும், அதற்கு ஏறக்குறைய 3 கோடி ரூபாய் ஆகும் என்றும், 19-ஆம் தேதியன்று கலெக்டர் மகாநாட்டின் மூலமாக உண்மை நிலையைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் அதற்காக நான் என் வணக்கத்தையும், மரியாதையையும் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மக்களுக்கு உடனடியாக நிவாரண வேலைகளை அளிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இதைச் சொல்லுகின்ற சமயத்தில் எனக்கே ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. இப்பேர்ப்பட்ட இன்னல்கள் ஏன் ஏற்பட்டன என்கிற வருந்தத்தக்க காரியங்களை நாம் கவனித்தாகவேண்டும். வங்கக் கடலில் உருவான புயல் காற்று அழுத்தம்பற்றி மணிக்கு மணி வானொலியில் சொன்னார்கள். டிசம்பர் மாதம் 3-ஆம் தேதியில் இருந்து புயல் அடிக்கப் போகிறது, புயல் அடிக்கப் போகிறது என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து புயல் அடிக்கிறது—கடலூரைக் கடந்து செல்கிறது. சாத்தனூரைக் கடந்து செல்கிறது. மேற்கு நோக்கி நகர்ந்து அதன் வலு குன்றுகிறது. இதுபற்றி எல்லாம் வானொலியில் இப்படி—இந்தத் திசை நோக்கி வீசும் என்பதாக எல்லாம் எச்சரிக்கை கொடுத்து வந்திருக்கிறார்கள். அவர்களது எச்சரிக்கை காரணமாகத்தான் எங்கள் கடற்கரைப் பகுதியில் வாழ்கிற மீனவர்கள் தப்பிக்கொள்ள முடிந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இப்படி வானொலியில் மணிக்கொரு முறை எச்சரிக்கை கொடுத்துக்கொண்டிருந்தார்களே, பொதுப்பணித் துறை என்ஜினியர்கள் குறிப்பாக அணைகளை நிர்வகிக்கின்ற என்ஜினியர்கள் என்ன நடவடிக்கைகள் எச்சரிக்கையாக எடுத்தார்கள் என்று கேட்கவிரும்புகிறேன். அவர்கள் மட்டும் முன்கூட்டியே எச்சரிக்கையாக நடந்துகொண்டிருந்தால் இன்றைக்கு ஏற்பட்டுள்ள பேரபாயத்தை ஓரளவு குறைத்திருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன்.

நான் இங்கே சொல்வதன் காரணம் 7-ஆம் தேதி வியாழக்கிழமை நானும், திருக்கோயிலூர் சட்டமன்ற உறுப்பினரும், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினரும் சேர்ந்து என்னுடைய காரில் பகல் 1 மணிக்கு தொகுதியைப் பார்த்து வரப்போகிறோம். மாலை 7½ மணிக்கு பண்ருட்டியை அடைந்தோம். புயல் அடித்து இரண்டு நாட்கள் ஆகிறது. அந்த இரண்டு தினங்களாக பெண்ணாற்றில் தண்ணீர் இல்லை. கன்ரக்கோட்டை காஸ்வே வழியாகப் போகிறோம். நான் காரை ஓட்டிக் கொண்டுபோகிறேன். அரையடித் தண்ணீர் இல்லை. ஆனால் அந்தப் பகுதியில் பின்னர் ஏற்பட்ட பெருஞ்சேதத்திற்குக் காரணம் என்ன சொன்னார்கள், புயல் அடித்து மழை மிக அதிகமாகப் பெய்த காரணத்தினால் தண்ணீர் வந்து சாத்தனூர் டாம் பாதித்து இந்தப் பகுதிகள் எல்லாம் வெள்ளக் காடாகத் துண்டிக்கப்பட்டன என்கிறார்கள். முன்னால்தான் புயல் அடிக்கப் போகிறது, பெரு மழை ஏற்படப்போகிறது என்று எச்சரிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறதே, அணைக்கட்டு என்ஜினியர்கள் முன்கூட்டியே அணைக்கட்டு நீரை திறந்துவிட்டிருந்தால் இந்த அளவுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருக்குமா என்று கேட்க விரும்புகிறேன். பெருமழையின் காரணமாகத்தானே பெண்ணையாற்றில் வெள்ளம் இருகரைகளையும் அடித்துக்கொண்டுபோகக்கூடிய அளவில் ஏற்பட்டது. நான் பொதுப்பணித் துறை இலாக்காவின் மீது குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். கிருஷ்ணகிரி அணை, சாத்தனூர் அணை ஆகியவற்றை நிர்வகித்து வரும் என்ஜினியர்கள் முன்னேற்பாடான நடவடிக்கை எதையும் எடுத்துக் கொள்ளாது ஏன் சும்மா இருந்தார்கள்? மழைத் தண்ணீர் அணைக்கு வந்து அணையையே உடைத்துக்கொண்டு போகாதிருக்க அவர்கள் எடுத்துக் கொண்ட முன் நடவடிக்கைகள் என்ன? அவர்கள் தக்க முன்நடவடிக்கை எடுத்திருந்தால் தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம், திருக்கோயிலூர் பகுதிகள் பெருமளவு நாசமாகியிருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. திருக்கோயிலூர் அணை உடைபட்டுப்போயிருக்காது. என் தொகுதியை எடுத்துக்கொண்டால் பத்து கிராமங்களுக்கு மேல் வெள்ளத்தினால் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் பக்கத்திலும் தண்ணீர். எல்லாப் பக்கமும் தண்ணீரால் சூழப்பட்டிருக்கிற கள்ளிப்பட்டு கிராமத்தில் மட்டும் இரண்டாயிரம் ஜனங்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். குறத்தி கிராமத்தில் ஆயிரத்து ஐநூறு பேர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அக்கடவல்லி கிராமத்து மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். புல்வனூர் அரிசன காலனி அடைந்திருக்கிற கஷ்டம் சொல்ல முடியவில்லை. மேல்குமாரமங்கலம் என்னுடைய ஊர். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மாடிகளில் ஏறிநின்று கொண்டிருந்தார்கள். தட்டாம்பாளையத்தில் வெள்ளம்—எல்லாவீட்டுக் கூரைகளையும் அடித்துக்கொண்டுபோய் இருக்கிறது. பகண்டை விஸ்வநாதபுரம் கிராமத்திற்கும் நானும், பையர் ஆபீசரும் உள்ளே போக





டியவில்லை. இந்த புயல், மழையினால் மக்கள் அடைந்துள்ள துன்பங்கள் காஞ்சநஞ்சமல்ல. கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள சொத்துக்கள் சதமாகியிருக்கின்றன. நெல், கரும்பு பயிர்கள் மிக்க சேதமடைந்திருக்கின்றன. வற்றிலைக்கொடிக் காலுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் மட்டும் இருபது லட்சத் ற்கு மேல் இருக்கும். மொத்தம் ஏற்பட்டுள்ள சேதங்களை எல்லாம் எடுத்துப் ார்த்தால் மூன்று, நான்கு கோடிகளுக்கு மேல் இருக்கும். நான் மிக மிகத் ாழ்மையாக துணைச்சபாநாயகர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அணை ளைப் பராமரிக்கின்ற என்ஜினியர்கள் மட்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை ாக சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருப்பார்களானால்—அணைக்கு ாக்கூடும் என்று ஓரளவு எதிர்பார்த்து முன்கூட்டியே தண்ணீரைத் திறந்து ிட்டிருப்பார்களானால் இந்த அளவுக்குச் சேதம் ஏற்பட்டிருக்காது. பெண்ணை ாற்றின் வடகரை, தென்கரை எல்லாம் உடைந்துவிட்டது. ஆகவே தலமைச்சர் அவர்கள் தயவு செய்து இதைப்பற்றி விசாரணை நடத்த வண்டும். இதற்குக் காரணமான அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும். ிரு. ஹாண்டே சிரிக்கிறார். சென்னையில் தண்ணீர் என்றால் எத்தனை த்திரிகை நிருபர்கள் சென்று பார்க்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதிக்கு ந்து பாருங்கள். எங்கே பார்த்தாலும் ஓரே வெள்ளம்—இனிமேலாவது இது பான்ற வெள்ளம் ஏற்படக்கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன். இது ற்றி உடனடியாக விசாரணை நடத்தி, இதற்குக் காரணமான அதிகாரிகள் ண்டிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது, நாஷனல் ஹைவேஸ் என்று இருக்கிறது. இங்கிருந்து திருச்சி வரை உடைப்பு—அங்கே உள்ள டிவிஷனுக்கு சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர் இங்கே சென்னையில் சைதாப்பேட்டையில் இருக்கிறார். நான் கேட்கிறேன். இவர்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்? இங்கே இருந்து செல்லக் கூடிய சாலை —மாமண்டூர் அருகே நன்றாக இருந்த 2 பாலங்களை உடைத்துப் போட்டிருக் கிறார்கள். மத்திய சர்க்கார் பணம் கொடுக்கிறது என்பதற்காக நன்றாக இருக்கும் பாலங்களை எல்லாம் உடைத்துப்போட வேண்டுமா? உடைக்கட்டும். மழை, வெள்ளம் ஏற்படாத ஏப்ரல், மே மாதங்களில் உடைக்கக் கூடாதா? உடைத்தார்களே வேறு பாதையாவது ஏற்படுத்திவிட்டு உடைத்தார்களா? வம்பர் 5-ஆம் தேதி கல்வி அமைச்சர் எங்கள் ஊருக்கு வருகிறார். பாலம் உடைக்கப்பட்டு கிடக்கிறது, அங்கே வந்து டூரை கான்சல் செய்துவிட்டு சென்னைக்குத் திரும்பி வருகிறார். நேற்று வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்ட நான் விருத்தாசலம் வந்து சுற்றி வருகிறேன். சேந்தனூர் ரெயில் பாலம் அடித்துக்கொண்டு போகப்பட்டுவிட்டது. எங்களுக்கும் விழுப்புரத்திற்கும் ரட்டு நாட்களாகத் தொடர்பு இல்லை.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1972 டிசம்பர் 1

ந.ப. 12-00 அதுபோலவே, நம்முடைய அரசூருக்குப் பக்கத்திலே மலட்டாறு பால இருக்கிறது. அதை உடைத்துவிட்டார்கள். நாங்கள் கஷ்டப்படுகிறோம். லாரிக போகமுடியவில்லை. எங்களை விட்டுவிடுங்கள், வெளிநாட்டிலிருந்து டூரிஸ்ட் ஒரு வெள்ளைக்காரர் வருகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர் எப்படி செல்வது? கார் எப்படிச் செல்லும்? ஏன் பை-பாஸ் போடாமல் உடைத்துவைக் வேண்டும்? இது எவ்வளவு நாட்களாக இருக்கிறது? 3 மாதம், 4 மாதமா இருக்கிறது. அதிகாரிகள் வேண்டுமென்றே இதைச் செய்கிறார்கள். இப்படி பட்ட அவல நிலையை உண்டாக்குகின்ற இன்ஜினியர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். பல அதிகாரிகள் அரசாங்கத்தினுடைய இலாகாவி இருந்துகொண்டு, இந்த அரசாங்க உத்தியோகத்திலிருந்து கொண்டு, இந் மாதிரி சபைக்கு கெட்டபெயர் உண்டுபண்ண வேண்டுமென்ற காரணத்தின தங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்யாத காரணத்தினால் மக்களுக் இப்படிப்பட்ட இன்னல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றுதான் நான் கரு கின்றேன.

இதனால் எத்தனை விவசாயிகளுக்கு மகசூல் போய்விட்டது. அரசாங்க கொடுக்க முடியுமா? 4 கோடி, 5 கோடி ரூபாய் நஷ்டம். பயிர்ப் பாதுகாப் திட்டம் இல்லை. அது இல்லாத காரணத்தினால், என்னுடைய தொகுதியி ரூ. 20,000 மகசூல் போனவர்கள் இருக்கிறார்கள், ரூபாய் 30,000 மகசூ போனவர்கள் இருக்கிறார்கள், ரூ. 50,000 மகசூல் போனவர்கள் இருக் கிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய்களைப் பெறக்கூடிய மகசூலை இழந் வர்கள் இருக்கிறார்கள், அப்படிப்பட்ட வெற்றிலைத் தோட்டங்கள் அழிந்து விட்டன. யார் கொடுக்கப் போகிறார்கள்? அவன் இன்சால்வட்தான். ஒ ஏக்கர், இரண்டு ஏக்கர் வரிவஜாதான் அளிக்க முடியும். இந்த அதிகாரிகள் முன்னெச்சரிக்கையாக நடந்துகொண்டிருந்தால் இப்படிப்பட்ட நிலை இந்த பக்கத்திலே வந்திருக்க முடியாது. இப்படிப்பட்ட அதிகாரிகளைப்பற்றி இன மேலாவது விசாரணை செய்து, பொறுப்பை அவர்கள் மீது சுமத்த வேண்டும் அப்படி இருந்தால்தான் எதிர்காலத்திலே அந்தத் தவறைச் செய்ய மாட்டா கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19-ம் தேதி கூட்டுகின்ற கூட்டத்தி எங்களுடைய கஷ்டங்களை எல்லாம் எடுத்துச்சொல்ல வேண்டும். நாங்கள் எங்களுடைய சேவைகளைத் தருகிறோம். தாங்கள் தாய்மை உள்ளத்தோ பரிசிலனை செய்து, இனிமேல் இவ்வாறு ஏற்படாமல், எங்களுடைய உயிருக்கும் சொத்துக்கும், பயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1972 டிசம்பர் 14]

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I wish to briefly touch upon only a few points, with regard to the Supplementary Budget that is before the House.

First of all, I would like to clear one wrong impression that was created while I was speaking on the Confidence Motion in this House the other day. I had presented before the House a telegram sent to me by the Bar Association of Tirunelveli and then a question was raised whether it was the original telegram or not. I then stuck to my point and said that it was the original telegram and that it was sent by the Secretary of the Bar Council. A discussion then took place and a hon. Member refuted my statement, describing it as fictitious and incorrect. But subsequently, without my having to write to the Bar Association—they must have got the information from the press—they have sent another telegram to me. I would not like to read it here as I would not like to wound the hon. Member and that is not my object also. I only want to stress that whatever I bring in to this House, it is all done with all validity and with all authority and only after checking the contents and the sender of the communication, I take it to the House. For instance, the reply telegram has been sent by one Mr. Sivasubramaniam Pillai, President of the Bar Association, Tirunelveli. He has sent the telegram in very strong terms and he has said that it was a telegram which had originally been sent to the Hon. Chief Minister and only a copy of that telegram had been sent to me and to the Inspector-General of Police and others. That is what he says. He also regrets that nothing has been done about it. Then again he also sent another communication. I want to prove to this House that I have received a copy of the Resolution passed by this Bar Association. The Secretary of the Association has sent a copy of the resolution and the original has been sent to the Hon. Chief Minister and others. There they have strongly condemned the action of the Police within the court premises, threatening the lawyers there and thrashing them and pelting stones at them within the Court premises. I only want to bring home the fact that eventhough............(interruption)........ only a Commission has been appointed—I want to stress how the lawyers of Tirunelveli feel about it. All this has happened within the court premises, the police threatening the lawyers and applying physical force on lawyers. Lawyers are the persons who are there to argue on behalf of their clients or petitioners and to file

petitions and counter-petitions. Within the Court premises, if this is the law and order situation where lawyers and the Bar Association are there I think lawyers everywhere irrespective of party affiliation should strongly condemn this. I hope hon. Members will agree with me. That is what I feel about it.

Apart from that, the temerity and boldness with which the police have gone there and entered the court premises—I do not know how they can do that—to subdue the lawyers only shows to what extent the police people do things and how they imagine that Government would give them protection. That is the significant point. I would like the Government to consider that also. I have also received—I am receiving everyday a number of petitions from a number of people—petitions regarding the breakdown of law and order in various parts of the State. I would stress that law and order situation is well out of the grip of the Hon. Chief Minister. That is my submission.

Even with regard to the Clive's Hostel incident, again and again there is a different version from the Sub-warden and warden and Principal which is entirely different from the version that is fed to the Hon. Chief Minnster by the police officials and by the Collector. I maintain that the information they had given to the Chief Minister is far from truth and is at variance with truth. That is a serious point.

The Sub-warden has sent photo copies of how boys were beaten; they are here and I can show to the Chief Minister and the Deputy Speaker and a number of persons have been beaten there. In other words a sort of barbarian type of violence has been unleashed by the police inside the hostel premises without even waiting...... ...... (Interruption) I have got here a number of decisions, I have got the All India Reports to show that a judicial enquiry cannot preclude a discussion of it in the House. There have been cases where such discussions had taken place in other Assemblies. I am clear about it and I have various documents to support me. If necessary I will place them before the Hon. Deputy Speaker and through him before the Hon. Chief Minister. Therefore the mere appointment of an Enquiry Commission does not prevent a frank and free discussion of the matter in the Assembly. On the other hand, such a discussion will be useful and helpful to the enquiry



MR. DEPUTY SPEAKER : There is no bar or I do not prevent the hon. Member from referring to it or discussing any matter of the kind. But it is not good practice.

DR. H. V. HANDE : Actually it is being discussed outside the House. When such a freedom is given, perhaps at least we should have freedom to discuss the matter here. Outside, it is coming in the papers also almost everyday...........

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, I think the hon. Members inside the House have more responsibility than Members outside the House.

DR. H. V. HANDE : I will quote all the precedents, if you allow me. I know there will be no objection ......

MR. DEPUTY SPEAKER : I do not forbid any Member. But you have to see whether it is good.

THIRU R. PONNAPPA NADAR : Without interrupting, I would cite one thing. In A.I.R. 1960, it is said that when a Commission of Enquiry is appointed under the Act, it is only a fact-finding body. It is neither a Civil Court nor its proceedings judicial; nor the provisions of the Cr. P.C. or the Evidence Act apply to its proceedings.

DR. H. V. HANDE : Section 4 is clear. For a Commission of Enquiry it does not confer the status of a Court. It is only sub-section (4) of Section 5 .........

MR. DEPUTY SPEAKER : I do not positively stop the hon. Member from giving any particulars. But I only request him . . . . .

DR. H. V. HANDE : I have the greatest regard for your opinion, Sir. I am not trying to overdo it.

THIRU N. GANAPATHY : With your permission, Sir, though there is no legal bar to comment upon the subject-matter of a Judicial Enquiry in any forum, there is a moral bar placed upon the members not to comment upon or give any opinion which will ultimately adversely affect this way or that way the enquiry and the findings of the judicial enquiry. I may bring to the notice of this House one thing. In 1968, there was a clash between

students and busmen and then there was an enquiry. The case was taken to the High Court in which it was stated clearly that it will amount to contempt of court.

There the whole position was thrashed out and they stated that as a matter of courtesy and as a matter of moral bar, the members and the public should not comment upon the subject-matter of a judicial enquiry. Therefore, I request you not to permit any such discussion about the subject-matter of judicial enquiry.

* THIRU M. A. LATHEEF : If a judicial commission is instituted under section 6 of the Judicial Commission of Enquiry Act, it has been now well established that that forms a court of law and it is also opined by the High Court of Madras in the case mentioned by my learned Friend, Thiru Ganapathi—the Enquiry Commission conducted by Thiru Somasundaram in 1968—that during the pendency of certain disputes and during the enquiry by a judicial commission, any comment upon it is uncalled for, and in so far as the Commission itself attracts the mischief of section 6 of the Judicial Enquiry Act, it functions as a judicial tribunal. That is the opinion given by the High Court of Madras.

DR. H. V. HANDE : Now I will only quote the opinion of the highest court in India. It clearly states—

'Section 4 only clothes the Commission with certain powers of a Civil Court but does not confer on it the status of a Court. It is only under sub-section (4) of section 5 that the Commission is deemed to be a Civil Court and sub-section (5) imparts to the proceeding before it the character of a judicial proceeding. However, these provisions only create a fiction which cannot extend the purpose for which it is created.

It would not be correct to contend that the expression "the Commission shall be deemed to be a Civil Court" occurring in section 5 (4) is full and complete in itself. The Commission is fictionally a Civil Court only for limited purposes enumerated in the sub-section ...'



MR. DEPUTY SPEAKER : You need not go to the Supreme Court. Our Assembly rules are clear. Rule 67 (1) says—

'A member, while speaking must not—

(i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending; ... '

Further, Rule 68 (5) says—

'No motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate, any matter shall ordinarily be permitted to be moved.'

So, we must see whether the discussion in this House will adversely affect the enquiry to be held.

DR. H. V. HANDE : I will definitely see to it ......

THIRU M. A. LATHEEF : Sir, on a point of order ......

DR. H. V. HANDE : If it is a point of order I will have to resume my seat but I request the hon. Member not to raise it now as there is not much of time for discussion ...

THIRU M. A. LATHEEF : Sir, a similar point of law was raised under the same circumstances before the Somasundaram Commission in the year 1968. What happened was that at that time certain statements were made by the then Hon. Chief Minister, the late lamented Anna and also the then Transport Minister, Dr. Kalaignar Karunanidhi on the floor of the House. An incident took place in the Law College hostel campus at that time. A petition was preferred by Thiru Srinivasan, Counsel for the Tamil Nadu Congress Committee before the Enquiry Commission. I appeared as an advocate for the late Thiru Anna and Dr. Karunanidhi and I myself argued before the Tribunal that no Minister can be asked to appear before a court or a tribunal on enquiry commission simply because he made a statement on the floor of the House. This point has been upheld in 1935 by the Queen's Bench of the Privy Council and it was opined that a Minister cannot be called to appear before any court of law on account of the statement made on the floor of the House. But the Commission has held that though any statements made by Ministers or Members of the House is protected under Article 194

of the Constitution and they cannot be called to appear before the court, those statements may be taken judicial cognisance. So the court or the enquiry commission is entitled to take judicial cognisance of the statements made by the Ministers and the Members inside the House and it will definitely affect the course of enquiry. That is my submission and I expect a ruling from the Chair.

DR. H. V. HANDE: Sir, he accepts that judicial cognisance would be taken. He also accepts that a judicial enquiry has a separate status and the court a separate status. Article 212 of the Constitution does not allow the court to discuss anything that happened in the House and so much blanket freedom is given to the Members of the Assembly that the court cannot touch them with a pair of tongs. If that is the position with regard to the highest court, how could this be applied to a judicial enquiry? It is stated in the A.I.R. Manual—

"The Contempt of Courts Act, 1952, however, does contemplate a 'Court of Justice' which as defined in Section 20, Penal Code, 1860, denotes a 'A Judge who is empowered by law to act judicially'."

"The least that is required of a court... (it is not a court at all) is the capacity to deliver a 'definitive judgment' (here the judicial enquiry does not give a judgment) and unless this power vests in a tribunal in any particular case, the mere fact that the procedure adopted by it is of a legal character and it has the power to administer on oath will not impart to it the status of a Court......"

That is one point.

Now I take the advice of the Deputy Speaker because I would like to give respect to the observation made by him. What I am going to say would not be considered as *sub-judice*. The point is that the atmosphere in Tiruchirappalli is surcharged with tension. Even day before yesterday, there was a hartal and the people there and for that matter all over the State are very much agitated. Also students of the colleges and schools are very much worried about the whole matter.

In other words what I am trying to point out is the manner in which the police have taken action has to be discussed. The



our opinions here. The discussion here may be taken judicial note of by the Enquiry Commission and it may help them to come to some decision. I may not be able to go to Enquiry Commission and give evidence. Similarly the Chief Minister may not be able to go and give evidence. He can talk here on the information available to him. Similarly we can have discussion on the materials we possess. That may help the enquiry that is being conducted.

Secondly, the surcharged emotion let loose all over Tamil Nadu is a very important thing. The Chief Minister must take note of that. By the time the Jundicial Commission completes its enquiry and gives its report, the whole thing would have become stale and people will lose track of the events. Therefore it is very important that something should be done immediately before the judicial enquiry gives its verdict. Action should be taken against the R.D.O., at least temporary suspension or something should be ordered. Or, he may be removed from that place so that sentiments that have been whipped up in that place is quietened and there will be then better law and order. Students are very much upset about the whole thing in Tiruchirappalli and it has spread all over Tamil Nadu. All over the State, students are very much agitated.

(The Deputy Speaker sounded the gong)

I shall try to finish in three minutes.

I am getting number of telegrams about official corruption at the lower levels. I have received a telegram. I will not read it fully. One Subbayya Ambalam has been sanctioned an I.M.S. loan. It had been granted by Kannankudi Panchayat Union Commissioner. But Rs. 2 per every Rs. 100 is now demanded as graft. Action should be taken against the officer who is demanding such payment. I am passing on the telegram to the Hon. Chief Minister for taking necessary action.

Coming to Education Ministry, the Harijans have not received scholarship, I mean Harijan students studying in Anna Tamil College, Mettupalayam, Coimbatore district. Last year orders sanctioning the scholarship were received in time. But this year, in spite of their request to the Harijan Welfare Officer concerned,

orders had not been issued. They are suffering very much because of this. These are small cases and it would help these poor Harijan Students if scholarships are granted in time. I request the Hon. Minister to take note of this and do the needful.

Today the Hon. Chief Minister has placed on the table of the House copies of the complaints by Mr. Kalyanasundaram and Mr. M. G. Ramachandran and also the reply by Government. He has also questioned in his reply the right of the Central Government to constitute Enquiry Commissions against State Governments. I would like to differ from the contents of the letter written by the Chief Minister in that particular book. The Prime Minister has got every right, the Central Government has got every right to constitute a Commission of Enquiry. I am clear about it. But under what circumstances the Prime Minister should hold the enquiry—there might be difference of opinion. Whether the Prime Minister should appoint the Commission of Enquiry straightaway or she should go through the whole answers given by Government and then decide the matter—on these there may be difference of opinion. But she has the right to appoint the Enquiry Commission. That is my submission. What are the ingredients for holding an Enquiry Commission. That first thing is there should be a *prima facie* case.

THE HON. THIRU SI. PA. ADITANAR: I rise on a point of order. Rule 160 of our rules says—

"The demands for supplementary or additional grants shall be dealt with as if they were demands for grants:

Provided that the discussion of a demand for a supplementary or additional grant shall be confined to the details of which it is composed."

What the hon. Member is speaking is not on one of the details contained in the additional supplementary estimates.

DR. H. V. HANDE: For instance the hon. Mr. Krishnamoorthi was talking about floods even though the additional financial estimates do not contain that item. All these are technical things. I hope the Hon. Minister is not worried about my raising this point. (The Hon. Thiru Si. Pa. Aditanar: I am worried about the time). I am also aware of it. If you were worried about the time, you need not have interrupted me and wasted my time. I would have finished in two minutes.



What I was saying is that a *prima facie* case should first be established if Enquiry Commission were to be appointed. I hope the Hon. Chief Minister is also agreed on that point. What I say is, without waiting for the Prime Minister, this Government itself can appoint a Commission of Enquiry. The Ministers can have thorough discussion of the subject and the persons concerned can bring their charges. Government can bring in their files rebutting the charges and the whole thing can be done before the Deputy Speaker. We have done such a thing before when charges were made against Government. What prevents this Government from doing that? Waiting for the Prime Minister is different. Now we have a book containing the charges and another book giving reply to the charges. We do not know whether the reply given is complete. Fresh queries may be raised and fresh books may be printed and there will not be an end to this. So, let us stop the whole thing by the State Government appointing an Enquiry Commission. That is my submission. With these words, I wind up.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த வாதத்தில் ஓரிரு முக்கியமான கருத்துக்களைப்பற்றிக் கூற விரும்புகிறேன்.

இன்று தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான பிரச்னை இருக்கிறதென்றால் அது வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டுத் தமிழ் பெருமக்கள் இன்று அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதாகும். அவர்களுடைய அல்லல்களைத் துடைப்பதற்கு அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். மத்திய அரசும் இதற்கு நல்லமுறையில் தாராள மனப்பான்மையோடு அதிகமாகப் பணம் கொடுக்கவேண்டும். எப்படி பிறரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிக நிவாரணம் அளித்தார்களோ அதேபோன்று தமிழ் மக்களுக்கும் நீதியும் நியாயமும் வழங்குவதற்கு மத்திய அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் தெரியப்படுத்திக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னென்ன வகைகளில் நிவாரணம் அளிக்கவேண்டும் என்பதையெல்லாம் இன்று அரசு ஆய்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் விவரங்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாக எனக்கு வந்த ஒரு தகவலை மட்டும் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பல கிராமங்கள் இருக்கின்றன, பல தாலுகாக்கள் இருக்கின்றன, பல ஜில்லாக்

கள் இருக்கின்றன, என் தமிழ்நாடு முழுமையுமே பாதிக்கப்பட்டிருக்கிறது. பவானி தாலுகாவில் தளவாய்பேட்டை என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அது முழுமையும் பவானி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்களுக்குத் துரிதமாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களுக்குத் தந்தி அனுப்பியிருக்கிறார்கள். எனக்கும் அதன் நகல் வந்திருக்கிறது. வேணுகோபால் என்பவர் அனுப்பியிருக்கிறார். இதை அனுதாபத்துடனும் பரிவுணர்ச்சியோடும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-30 பி.ப. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 19-ம் தேதி அன்று இங்கு வந்து ஆலோசனை கூறுவதற்கு இருக்கிறார்கள். எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த அளவிற்குச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை ஆய்வதற்காகத் துரித நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக என் தொகுதியில் உள்ள நிலைமை என்னவென்றால் வெள்ளத்தால் அங்கு பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக நான் 41-வது விதியின்கீழ் ஒரு கால் அட்டென்ஷன் நோட்டீஸ் கூட இந்த மன்றத்தில் கொடுத்திருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு மனு கொடுத்து இருக்கிறேன். அதுமாதிரி எந்தெந்தப் பகுதியில் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து உடனடியாக ஆதரவைத் தெரிவிக்க அரசு முனைய வேண்டும்.

இடப்பாடி என்ற பகுதியில் நவம்பர் மாதச் சம்பளம் முனிசிபல் ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற ஒரு புகார் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக செக்ரடரி, தமிழ்நாடு எலிமென்டரி ஸ்கூல் டீச்சர்ஸ் பெடரேஷன் எனக்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கு உடனடியாகச் சம்பளம் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உள்துறை அமைச்சர் மூலமாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் இலாகாவைப்பற்றி பலவிதமான ஆட்சேபங்கள் இங்கே தெரிவிக்கப்பட்டன. இதற்கு முன்பும் நாங்கள் எடுத்துக் கூறினோம். பல காரியங்களில் நீதி விசாரணை நடைபெற்று இருக்கிறது. குறிப்பாக இந்த பாளையங்கோட்டை சம்பவம்பற்றி மறுமுறையும் விளக்க விரும்புகிறேன். பாளையங்கோட்டை சீனிவாசனையும் நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். முதலமைச்சர் அவர்கள் வேறு கேசில் அதை ரிஜிஸ்டர் செய்து இருப்பதால் நீதி விசாரணையில் அதை தொடர்புபடுத்த முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இரண்டு போலீசார்மீது இப்போது வழக்குப் பதிவாகியிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படுவது என்றால் அந்தப் பதிவான வழக்கு ரத்தாகி விடும். வழக்கு ரத்தாகிச் சில பேர் மீது போடப்பட்டிருக்கும் கிரிமினல் கேசும் ரத்தாகி விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** வழக்கு பாதிக்காது. இது கமிஷன் ஆப் இன்கொயரிதான். அங்கே கொடுத்து இருக்கும் எப்.ஐ.ஆர்., தொடர்ந்து கோர்ட்டில் இருக்கும். அதனால் இன்வஸ்டிகேஷன் பாதிக்காது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பாளையங்கோட்டை தகராறைப் பொறுத்தவரையில் ஊர்துநாதன் சாவு குறித்துத்தான் நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சி சேர்த்து வைக்கப்படவில்லை. அப்படி வைக்கவேண்டுமென்று சொன்னால், அதை வைப்பதற்கு அரசாங்கத்திற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, இப்போது இரண்டு போலீஸ் அதிகாரிகள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அது பாதிக்கப்படக் கூடும் என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம். அது பாதிக்கப்படாது, அல்லது பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் கருதுவார்களானால் முதல் நாள் நிகழ்ச்சிகளிலிருந்தே, அதாவது பேராசிரியர் சீனிவாசன் தாக்கப்பட்டார், அல்லது அவர்களை இரண்டு மாணவர்கள் தாக்கினார்கள், மாணவருடைய தகப்பனார் தாக்கினார் என்ற நிகழ்ச்சியிலிருந்தே நீதி விசாரணை வைப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த நீதி விசாரணை பேராசிரியர் சீனிவாசன் தாக்கப்பட்டதிலிருந்து வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். எந்தவிதமான வழக்கு சம்பந்தப்பட்டவைகளும், இந்த நீதி விசாரணை நடப்பதாலே, தடைபடாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வழக்கு பின்னாலே வைக்கலாம் என்று வைத்து விட்டு, பேராசிரியர் சீனிவாசனுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறிலிருந்து, ஊர்துநாதன் தண்ணீரில் விழுந்து இறந்த நிகழ்ச்சி வரை நீதி விசாரணை நடத்துவதற்கு ஆட்சேபணையில்லை. அதற்காக ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அது ஒருபுறம் இருக்க. அடுத்தபடியாக இந்த நீதி விசாரணை தொடங்குகிற காரணத்தால் அந்தக் குற்றம்புரிந்தவர்களை விட்டு விடவேண்டுமென்று நான் வாதாட வரவில்லை. அதை ஒரு சட்டப் பூர்வமான நிலையில் ஆராய்ந்து சட்ட இலாகா செயல்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீதி விசாரணை நடக்கிற காரணத்தால் அவர்கள் இந்த வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் ஒப்புக்கொண்டு விட்டேன். அதற்காக அவர்களுடைய நன்றியைத்தான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நீதி விசாரணை நடத்துவதற்கு ஒப்புக் கொண்டதற்காக நன்றியை ஏற்கனவே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் எந்த அடிப்படையில் நீதிவிசாரணை நடக்கவேண்டுமென்றால், 'ஜெனிஸிஸ் ஆப் தி டிராபிள்' என்று சொல்வார்கள், அந்த முதல் நாள் நிகழ்ச்சியிலிருந்தே நடத்துவதுதான் பொருத்தம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் கூறியது போலவே, ஆரம்பக் கட்டத்திலிருந்து நீதி விசாரணை நடத்தப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்போது சில அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். சிலர் அங்கேயே இன்னும் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அங்கே அவர்கள் இருப்பதால், நீதி விசாரணை ஒழுங்காக நடக்க முடியாது. போதிய சாட்சியங்கள் வர மாட்டார்கள். அவர்கள்மீது நான் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. குற்றம் புரிந்தவர்கள் தண்டனை பெற்று ஆகவேண்டும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, நீதி விசாரணை கேட்கப் பட்டதே இதில் குற்றம் புரிந்தவர்கள் யார் என்பதைத் தீர்மானிப்பதற்குத் தான். குற்றம் புரிந்தவர்கள் யார் என்பதைத் தீர்மானிப்பதற்காக நீதி விசாரணை நடைபெறுகிறது என்று சொல்லிவிட்டு இடையிலே அரசாங்கம் தலையிட்டுத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கலாமா என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நீதி விசாரணை நடத்தப்படுகிற இடைக் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. இந்த நேரத்தில் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். கமிஷன் ஆப் இன் கொயரி போட்டதினாலே நீதித்துறையில் இருக்கிற வேறு கேஸ்கள் ஸ்டே ஆகி விடாது. ரத்தாகிவிடாது என்றே கருதுகிறேன். எப்.ஐ.ஆர். ' எல்லாம்



கோர்ட்டில்தான் இருக்கும். நீதி விசாரணை முடிந்து, எதையெதை அவர்கள் பரிந்துரை செய்கிறார்களோ அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவும் கூடும், ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கும். அரசாங்கம் என்ன செய்யவேண்டுமென்பதற்குத்தான் சிலவற்றைக் கூறினேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இன்னொன்றையும் நான் கொண்டுவர விரும்புகிறேன். விளாத்திகுளம் போலீஸ் நிலையத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி குறித்து எனக்குத் தகவல் வந்திருக்கிறது. நாகம்மாள், அவளது கணவனையும், மகனையும் போலீஸ் தாக்கியதாகப் புகார் கூறி இருக்கிறார்கள். அவர்களுடைய மகன் காணாமல் போய் இருக்கிறான். அது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. ஒரு வேளை பௌல் பிளே இருக்குமோ என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடக்கக் கூடாது. ஆகவே, இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பகுதியில் ஒரு லாக்கப்பில் ஒருவர் இறந்ததாக ஆர்.டி.ஓ. விசாரணை நடந்தது. பல மாதங்கள் ஆகிவிட்டது அவர்கள் ரிப்போர்ட் அரசாங்கத்திற்குக் கொடுத்து, ரிப்போர்ட் விஷயமாக நான் முன்பு ஒரு முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறேன். அந்த ரிப்போர்ட் மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. இதுகாறும் தெரியவில்லை. பெரிய அதிகாரிகள் குற்றம் புரிந்தவர்களாக இருக்கிறார்கள் என்று பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா? இதுகுறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக நான் குறிப்பிட விரும்புவது, ஒரு மாத வெளியீடு, 'கலைஞர் இன்டர்நேஷனல்' என்று வருகிறது. அதற்கு அரசாங்கம் ஃபேவர்டிசம் கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். ஆகஸ்ட் 1972-ல் அவர்கள் வெளியிட்ட பிரசுரத்திலே பக்கம் 17, 59-ல் தமிழ்நாடு ஹௌசிங் போர்டின் விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. பக்கம் 29-ல் டான்சியின் விளம்பரம், பக்கம் 43-ல் டிட்கோவின் விளம்பரம், பக்கம் 49-ல் சிட்கோவின் விளம்பரம். இப்படிப்பார்த்தால் அது அரசாங்க ஏடுபோல் தோற்றம் அளிக்கிறது. பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் அது பல மாதிரியாக இருக்கிறது. அதைப்பற்றி மக்கள் நல்லமுறையில் புரிந்து வைத்திருக்கிறார்கள். இந்த மாதிரி அந்தப் பத்திரிகையை ஊக்குவிக்கிற நிலையில் அதற்கு விளம்பரம் தரப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறேன். ஹௌசிங் போர்டிலிருந்து அவர்கள் கட்டடம் கட்டுவதற்கு மனுச் செய்து இருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறேன். அதற்கும் அந்த போர்டு அனுமதி அளித்திருக்கிறது என்று கருது

கிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த மாதிரியான விளம்பரங்கள் இப்படிப்பட்ட பத்திரிகைகளுக்குக் கொடுக்கிறபோது, ஏன் ஸ்டான்டர்டு பத்திரிகைகளுக்கு அரசு கொடுப்பதில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியம் யாருக்கு வேண்டுமானாலும் நிலம் கொடுக்கும். வாரியத்திற்கு யார் பணம் கட்டினாலும் இடம் தரலாம். பணம் வந்து விடுகிற காரணத்தால் அதிலே எந்த விதமான குழப்பமும் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** விளக்கத்திற்கு நன்றி. இம்மாதிரி விளம்பரம் அளிப்பதில் ஏன் பாரபட்சம் என்பதுதான் என்னுடைய ஆட்சேபணை. நான் விளம்பரம் கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. கொடுக்கவேண்டியதுதான். அப்படி அவ்வளவு விளம்பரத்தையும் ஒரு பத்திரிகைக்குத்தான் கொடுக்க வேண்டுமா, அதுவும் அந்தப் பத்திரிகைக்குத்தான் கொடுக்க வேண்டுமா என்பதுதான் என்னுடைய ஆட்சேபணை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு அந்தப் பெயர் பிடிக்காத காரணத்தினால் இவ்வளவு விளம்பரம் கொடுக்கலாமா என்று கேட்கிறாரா? அவர் ஆலோசனை சொல்லி பெயரை வேண்டுமானால் மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பெயரைப்பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. கருத்தைப்பற்றி எனக்கு அபிப்பிராய பேதம் இருக்கலாம். ஆனால் பெயரைப்பற்றி நான் எந்தவிதமான ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்பதை மறுபடியும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, துணைமானியக் கோரிக்கையிலே இருக்கிற ஒரு சில காரியங்களை நான் கூறவேண்டும் என்று நினைக்கிறேன். என்னுடைய ஜில்லாப் பிரச்னை என்ற காரணத்தினால் அதைக் கூற விரும்புகிறேன். லாண்டு ரெவின்யூ என்ற தலைப்பில், லாண்டு ரெவின்யூ, கிராண்டு நெம்பர் 1-ல் செட்டில்மெண்டு இலாகாவைப்பற்றி ஒரு சில குறிப்புகள் அதிலே கூறப்பட்டிருக்கின்றன. நாகர்கோவிலில் ஒரு செட்டில்மெண்டு ஆபீஸ் இருக்கிறது. இப்பொழுது அந்த ஆபீஸ் சரியான முறையில் இயங்க முடியாமல் இருக்கிறது. பட்டா கொடுப்பதிலே பலவிதமான தகராறுகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல. நில அளவு சம்பந்தமாகவும் பல தகராறுகள் இருக்கின்றன. அந்தத் தகராறுகள் அங்கிருக்கிற விவசாயிகளை வெகுவாகப் பாதிக்கின்றன. அந்த விஷயத்தை ரெவின்யூ அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துக் கூறினோம். ரெவிஷன் பெட்டிஷன் கொடுப்பதற்கு உள்ள கால கெடுவை ரெவின்யூ அமைச்சர் அவர்கள் மிகவும் பரிவோடு எங்களுக்கு நீட்டித்



தந்தார்கள். அதன் காரணமாக இன்று 1½ லட்சம் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக ஆய்வு நடத்துவதற்கு இப்பொழுது தலைமை ஆபிஸ் மதுரையில் இருக்கிறது. நாகர்கோவிலில் ஒரு பிராஞ்சு ஆபிஸ் போட்டு, இந்த வழக்குகளை விசாரிக்கவேண்டும். அது அல்லாமல் இருந்தால் 1½ லட்சம் மக்களும் மதுரைக்குச் செல்வது என்று சொன்னால், மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆதலால், இது ஒரு பிரதேசப் பிரச்னையாக இருந்தாலும், இதில் முக்கியமாகக் கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய அளவில் காரியங்கள் செய்ய வேண்டும். பொதுவாக, இந்த ரயத்வாரி செட்டில்மெண்டு, சர்வே மிகவும் நல்ல முறையில் நடத்தப்படவில்லை. பல்வேறு தப்புகள் இந்த பட்டா கொடுபபதிலே நடந்திருக்கிறது என்று மனுக்களெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் பழைய திருவாங்கூர், கொச்சி ரெவின்யூ ரெகார்டுகளை இதற்கு ஆதாரமாக வைக்க வேண்டும். அதில் சிலவற்றை டெஸ்ட்ராய் செய்வதற்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அம்மாதிரியான ரெகார்டுகள், மிகவும் முக்கியமான தஸ்தாவேஜுகள் , அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். ஏனென்றால், நீதிமன்றங்களுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், அதற்கு ஆதாரமாக முன்னுள் தஸ்தாவேஜுகள் இருந்தால்தான், இம்மாதிரியான காரியங்களில் நமக்கு சரியான சாட்சிகள் சான்றுகள் கிடைக்கும். ஆதலால், இந்த தஸ்தாவேஜுகளை அழிக்கக்கூடாது என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சோதனைச் சாவடிகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எங்கள் ஜில்லாவிலும் பல இடங்களில் சேல்ஸ் டாக்ஸ் சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. அந்தச் சாவடிகளில் மக்களுக்கு இன்னும் பல கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. கன்னியாகுமரியிலிருந்து எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் 10 லிட்டர் அரிசி வரைக்கும் எடுத்துக் கொண்டு போகலாம் என்ற விதி இருக்கிறது. இருந்தாலும், 10 லிட்டர்கள் எடுத்துக்கொண்டு போவதற்குக் கூட பல தடஸ்தங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, நாகர்கோவிலில் எங்கு வேண்டுமானாலும் எவ்வளவு அரிசி வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு போகலாம். ஆனால், இந்த அரிசியை அதிகாரிகள் பறிமுதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால் அவர்கள் இதெல்லாம் கோளவுக்குப் போகிறது, ஆதலால் பறிமுதல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 டிசம்பர் 14

உதாரணத்திற்கு நான் ஒரு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நான் காரில் வந்துகொண்டிருக்கும் பொழுது இந்த சிப்பந்திகள் அந்த அரிசியை மடக்கிப் பறிப்பதற்கு வந்தார்கள். நான் அவர்களிடத்தில் குறுக்கிட்டு இந்த இடத்தில் 10 லிட்டர் வரையில் கொண்டு செல்வதற்கு எந்தவிதமான தடஸ்தமும் இல்லையே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டவுடன், அவர்கள் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இது மாதிரி தடஸ்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் ஏழைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். தன்னுடைய வீட்டு அவசியத்திற்காக 10 லிட்டர்களுக்குக் குறைவாக கொண்டு போவதற்கு எந்தவிதமான தடஸ்தமும் இருக்கக்கூடாது. அப்படி தடஸ்தம் இருந்தால் அது சட்டப் பூர்வமாக இல்லை. இப்படிப் பல அதிகாரிகள் தங்களுடைய அதிகார வரம்பை மீறி நடந்துகொண்டிருக்கிறார்கள். ஆதலால் அதற்கு வேண்டிய பரிகாரம் வேண்டும் என்று இங்கே நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இன்னொரு விஷயத்தைமட்டும் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். திருச்சி சம்பவத்தைப்பற்றி அதன் விவரங்களைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. மாறுபட்ட கருத்துக்களை அந்த கிளைவ் ஹாஸ்டல் வார்டன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் எடுத்துப் பார்க்க வேண்டும். மன்றத்திற்குத் தந்த தகவல்களுக்குப் புறம்பாக சில தகவல்கள் வந்திருக்கின்றன. எந்த வெர்ஷன் சரியான வெர்ஷன் என்று ஆராய்வது கஷ்டமாக இருக்கிறது. இம்மாதிரியான நிலை ஏற்படுகிறபொழுது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அங்கே இருக்கக் கூடாது என்று நான் முன்பே கூறினேன். அங்கு இருக்கும் டி.ஐ.ஜி., ஆர்.டி.ஓ., ஆகியோர்களைப்பற்றித் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் அவர்கள் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அங்குள்ள அந்த அதிகாரிகளை அங்கிருந்து மாற்றவேண்டும், மாற்றினால்தான், மாற்றிய பிறகு அந்த நீதி விசாரணை நடந்தால்தான் மிகவும் பொருத்தமாக இருக்கும். இல்லை என்றால், நீதி விசாரணை ஒரு ஃபார்சாக முடிந்துவிடும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால், இந்தக் கருத்துக்களையெல்லாம் மனதில்கொண்டு, அரசாங்கம் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒரு மணிக்குள் வாக்கெடுப்பு நடக்கவேண்டியிருப்பதால் நான் இத்தோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர்.

(Thiru M. A. LATHEEF stood in his seat).



14]

**...து பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு நிமிஷத்திற்குள் உறுப்பினர் ...த்துக்கொள்ளவேண்டும். ஒரு மணிக்கு துணை மானியக் கோரிக் ... வாக்கெடுப்பு நடக்க வேண்டியிருப்பதால், மாண்புமிகு முதல் ...வர்களுக்கு 10 நிமிடங்களாவது கொடுக்க வேண்டாமா?

...M. A. LATHEEF : If there is no time, I will speak ...n the Appropriation Bill.

**...து டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இரண்டாவது ...டுகள்பற்றிய கருத்துக்களைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர் ...திராக் கட்சியின் தலைவர் அவர்களும், ஆளும் கட்சியிலும், எதிர்க் ... உள்ள உறுப்பினர்களும் இங்கே விவாதித்திருக்கிறார்கள். ...துணை மதிப்பீடுகள்பற்றிய விவரங்களிலே யாரும் அதிகமாக நுழை ...னப் பயன்படுத்திக்கொண்டு, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற ...ங்காற்று ஆகியவைகளினால் உருவான பாதிப்புகளிலிருந்து மக்களை ...ம் என்கின்ற கருத்தினையும், தங்கள் தங்கள் தொகுதிகளில் ... காரியங்களையும், இனி செய்யப்பட வேண்டிய காரியங்களையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதத்தைத் தொடங்கிய நம்முடைய சுதந்திராக் கட்சி உறுப்பினர் நண்பர் வெங்கடசாமி அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்குப் போதிய நிதி உதவி கொடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டோடு தன்னுடைய பேச்சைத் தொடங்கினார்கள். தர்மபுரி மாவட்டத்திற்கு ஏற்கனவே வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட தொகை, ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2 கோடி என்பதையும், அதற்கான வேலைகள் அங்கே வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மேலும், ரூ. 5 கோடி அளவுக்கு ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் உலக வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக நமக்கு ஆறுதல் வழங்கக்கூடிய ஒப்புதலும் விரைவிலே கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஹொசூரில் சிறப்புப் பால் திட்டம் நடைபெறவில்லை என்று அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டார்கள். இதற்கு அனைத்து இந்திய பால் பண்ணைக் கழகத்தின் ஒப்புதல் கோரி நாம் தொடர்புகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். விரைவிலே அந்த ஒப்புதல் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

உதாரணத்திற்கு நான் ஒரு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நான் காரில் வந்துகொண்டிருக்கும் பொழுது இந்த சிப்பந்திகள் அந்த அரிசியை மடக்கிப் பறிப்பதற்கு வந்தார்கள். நான் அவர்களிடத்தில் குறுக்கிட்டு இந்த இடத்தில் 10 லிட்டர் வரையில் கொண்டு செல்வதற்கு எந்தவிதமான தடஸ்தமும் இல்லையே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டவுடன், அவர்கள் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இது மாதிரி தடஸ்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் ஏழைகள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். தன்னுடைய வீட்டு அவசியத்திற்காக 10 லிட்டர்களுக்குக் குறைவாக கொண்டு போவதற்கு எந்தவிதமான தடஸ்தமும் இருக்கக்கூடாது. அப்படி தடஸ்தம் இருந்தால் அது சட்டப் பூர்வமாக இல்லை. இப்படிப் பல அதிகாரிகள் தங்களுடைய அதிகார வரம்பை மீறி நடந்துகொண்டிருக்கிறார்கள். ஆதலால் அதற்கு வேண்டிய பரிகாரம் வேண்டும் என்று இங்கே நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இன்னொரு விஷயத்தைமட்டும் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். திருச்சி சம்பவத்தைப்பற்றி அதன் விவரங்களைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. மாறுபட்ட கருத்துக்களை அந்த கிளைவ் ஹாஸ்டல் வார்டன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் எடுத்துப் பார்க்க வேண்டும். மன்றத்திற்குத் தந்த தகவல்களுக்குப் புறம்பாக சில தகவல்கள் வந்திருக்கின்றன. எந்த வெர்ஷன் சரியான வெர்ஷன் என்று ஆராய்வது கஷ்டமாக இருக்கிறது. இம்மாதிரியான நிலை ஏற்படுகிறபொழுது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அங்கே இருக்கக் கூடாது என்று நான் முன்பே கூறினேன். அங்கு இருக்கும் டி.ஐ.ஜி., ஆர்.டி.ஓ., ஆகியோர்களைப்பற்றித் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் அவர்கள் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அங்குள்ள அந்த அதிகாரிகளை அங்கிருந்து மாற்றவேண்டும், மாற்றினால்தான், மாற்றிய பிறகு அந்த நீதி விசாரணை நடந்தால்தான் மிகவும் பொருத்தமாக இருக்கும். இல்லை என்றால், நீதி விசாரணை ஒரு ஃபார்சாக முடிந்துவிடும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால், இந்தக் கருத்துக்களையெல்லாம் மனதில்கொண்டு, அரசாங்கம் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஒரு மணிக்குள் வாக்கெடுப்பு நடக்கவேண்டியிருப்பதால் நான் இத்தோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல் அமைச்சர்.

(Thiru M. A. LATHEEF stood in his seat).





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிஷத்திற்குள் உறுப்பினர் அவர்கள் முடித்துக்கொள்ளவேண்டும். ஒரு மணிக்கு துணை மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு நடக்க வேண்டியிருப்பதால், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு 10 நிமிடங்களாவது கொடுக்க வேண்டாமா?

THIRU M. A. LATHEEF: If there is no time, I will speak tomorrow on the Appropriation Bill.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இரண்டாவது துணை மதிப்பீடுகள்பற்றிய கருத்துக்களைக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களும், சுதந்திராக் கட்சியின் தலைவர் அவர்களும், ஆளும் கட்சியிலும், எதிர்க் கட்சிகளிலும் உள்ள உறுப்பினர்களும் இங்கே விவாதித்திருக்கிறார்கள். குறிப்பாக, துணை மதிப்பீடுகள்பற்றிய விவரங்களிலே யாரும் அதிகமாக நுழையாமல், இதனைப் பயன்படுத்திக்கொண்டு, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற மழை, பெருங்காற்று ஆகியவைகளினால் உருவான பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்கவேண்டும் என்கின்ற கருத்தினையும், தங்கள் தங்கள் தொகுதிகளில் செய்யப்பட்ட காரியங்களையும், இனி செய்யப்பட வேண்டிய காரியங்களையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவாதத்தைத் தொடங்கிய நம்முடைய சுதந்திராக் கட்சி உறுப்பினர் நண்பர் வெங்கடசாமி அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்குப் போதிய நிதி உதவி கொடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டோடு தன்னுடைய பேச்சைத் தொடங்கினார்கள். தர்மபுரி மாவட்டத்திற்கு ஏற்கனவே வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட தொகை, ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2 கோடி என்பதையும், அதற்கான வேலைகள் அங்கே வெகு வேகமாக நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மேலும், ரூ. 5 கோடி அளவுக்கு ஒரு சிறப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டம் உலக வங்கியின் ஒப்புதலைப் பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக நமக்கு ஆறுதல் வழங்கக்கூடிய ஒப்புதலும் விரைவிலே கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஹொசூரில் சிறப்புப் பால் திட்டம் நடைபெறவில்லை என்று அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டார்கள். இதற்கு அனைத்து இந்திய பால் பண்ணைக் கழகத்தின் ஒப்புதல் கோரி நாம் தொடர்புகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். விரைவிலே அந்த ஒப்புதல் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

வேறு பல மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதிகளில் நடைபெற வேண்டிய காரியங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மணிக்குள்ளாக என்னுடைய பதிலை முடிக்க வேண்டியிருக்கிற காரணத்தினால் அந்த விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு நேரம் இல்லை என்பதை குறிப்பிட்டுவிட்டு, அவை குறிப்பு ஏடுகளில் ஏற்றப்பட்டிருக்கிற நிலைமையில் அவைகளை ஆராய்ந்து, ஏற்ற முடிவுகள் எடுக்கப்படும் என்பதை மாத்திரம் அந்தக் கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அண்மையிலே ஏற்பட்ட வெள்ளத்தில் அதிகாரிகள், குறிப்பாகப் பொறியாளர்கள் தங்களுடைய கடமையைச் செம்மையாகச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே கடுமையாகத் தெரிவித்தார்கள். அந்த அதிகாரிகளின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எல்லாம் குறிப்பிட்டார்கள். அதுபற்றி நான் மேலும் விவரங்களைக் கோரி இருக்கிறேன் என்றாலும், எனக்குக் கிடைத்திருக்கிற இந்தத் தகவல்களை இந்த மன்றத்தில் வைப்பது கடுமையாக கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குற்றம் சாட்டியிருக்கிற காரணத்தினால் இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீரை முதலிலேயே திறந்து விட்டிருந்தால், இப்படிப்பட்ட தீங்கு ஏற்பட்டிருக்காது என்பது நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வாதமாகும். ஆனால், சாத்தனூர் அணைக்கட்டுக்கு இரண்டு நாட்களில் வந்த தண்ணீர் அணைக்கட்டு கொள்ளக்கூடிய தண்ணீரைப்போல 5 மடங்கு அதிகமான தண்ணீராகும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அப்படியும் எட்டு மணி நேரத்திற்கு ஒரு முறை அணைக்கட்டு நிரம்பி தண்ணீர் ஐந்து முறை திறந்து விடப்பட்டு அணைக்கட்டிலிருந்து வெளியே அனுப்பப்பட்டு இருக்கிறது. சாத்தனூர் அணை கொள்ளக்கூடிய அளவு 7,500 மில்லியன் கன அடி அளவாகும். மழை ஆரம்பிப்பதற்கு முன்னால் அதிலிருந்த தண்ணீர் சுமார் 4,000 மில்லியன் கன அடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இரண்டு நாளில் பெரு மழையின் காரணத்தால் வந்த தண்ணீர் 37,500 மில்லியன் கன அடிக்கு அதிகமாகும். எனவே 4,000 மில்லியன் கன அடி நீரைத் திறந்து விட்டு இருந்தாலும் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தைத் தடுத்து இருக்க முடியாது. இதையே முடிந்த முடிவாகச் சொல்வதாக நீங்கள் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. மேலும் இதுபற்றிய விவரங்களை ஆராய்வதற்கு நானும் இந்த அரசும் கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



இதைப்போலவே அவர்கள் தேசீய நெஞ்சாலைகளில் பாலங்கள் மழைக் காலத்தில் பழுது பார்க்கும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்ற குற்றச்சாட்டையும் கூறியிருக்கிறார்கள். குற்றச்சாட்டில் கூறப்பட்ட அவை உண்மையாக இருந்தால் அதற்கு ஏற்ற நடவடிக்கையை அந்த அதிகாரிகள்மீது எடுக்க அரசு தயங்காது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம்முடைய சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் நெல்லையில் நடைபெற்ற சம்பவம், திருச்சியில் நடைபெற்ற கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் இவைகளைப்பற்றி விவாதித்தார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் இங்கே அந்த விவரங்களைச் சொன்னார்கள். எனக்கு இருக்கிற வேதனை எல்லாம் இன்றைக்கு திருச்சியிலிருந்து வேறு சில கடிதங்களும் வந்தனவே டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு, அதைப்பற்றி எடுத்து வாதாடவில்லையே என்பதுதான் என்னுடைய வருத்தமாகும். திருச்சியில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி 11-ம் தேதி ஒரு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஹர்த்தால் கட்சி வேறுபாடு இல்லாமல் கூட அனைவரும் கலந்துகொண்டு இருக்கிறார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் திருச்சியில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அங்கே நடைபெற்ற சர்வே கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதாகவும் ஆவன செய்வதாகவும் உறுதிமொழி கூறியிருக்கிறார். மாணவர்கள் அடிபடுவதைக்கண்டு யாரும் வேதனைப்படாமல் இல்லை. அதைக் கண்டு மகிழ்ச்சி அடையவும் இல்லை. அதைக் கண்டு அரசு வருத்தப்படுகிறது, வேதனைப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதைப்போல எல்லா வேதனை அளிக்கத்தக்க விஷயங்களிலும் மற்றவர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும், பங்கிட்டுக்கொள்ள வேண்டும். யாருக்குத் தொந்தரவு வந்தாலும் அரசாங்கத் தரப்பில் ஆகட்டும் அல்லது எதிர் தரப்பில் ஆகட்டும் அப்படி பங்கிட்டுக் கொண்டால்தான் வன்முறையற்ற நிலைமை, சுமுகமான சூழ்நிலை பரவக்கூடிய நிலை உருவாக முடியும். '11-ம் தேதி நடைபெற்ற ஹர்த்தாலில் திருச்சியில் ஒரு ஊர்வலம் நடைபெற்று இருக்கிறது. அந்த ஊர்வலம் போலீஸ் பாதுகாப்போடு நடைபெற்று ஒரு இடத்தில் கூடி கூட்டம் கலைந்திருக்கிறது. அது வரையில் அமைதியாக இருந்தவர்கள்—கலைந்து விட்டார்கள் என்ற செய்தியையும் போலீசார் அறிவித்து விட்டார்கள், நான் கூட பேரவையில் மகிழ்ச்சியோடு எடுத்துரைத்தேன். ஆனால் கலைந்து சென்றவர்களில் ஒரு பகுதி மூடப்பட்டு இருக்கிற பல்வேறு கடைகளில் புகுந்து நாசம் செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர்

ராபி கடைக்குச் சென்று—அவருடைய கடை ஹர்த்தாலை முன்னிட்டு மூடப்பட்டு இருக்கிறது—அவருடைய கடையைத் திறந்து உள்ளே இருக்கிற பொருள்களைச் சேதப்படுத்தி இருக்கிறார்கள். பத்தாயிரம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அவர் ஒலி பெருக்கி வியாபாரம் செய்கிறவர். ஒலி பெருக்கி இயந்திரங்கள் அத்தனையும் உடைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புகைப்படங்கள் எல்லாம்கூட எடுத்து அனுப்பி இருக்கிறார்கள். அதே நாளில் சென்னை மாநகரத்தில் துறைமுகத்தில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

நேற்று கோவில்பட்டியில் பஸ்ஸை எரிப்பதற்கு மாணவர்கள் மற்றவர்கள் முயன்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வன்முறைச் செயல்களில் சிலர் ஈடுபடுகிறார்கள் என்பதை இந்த அவையில் உள்ள எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. அரசாங்கத்திற்கு எதிராக ஒரு காரியம் நடைபெற்றால் அது தீய காரியமாக இருந்தாலும் அது ஆளுகிறவர்களுக்கு எதிராகத்தானே நடைபெறுகிறது என்று அதை உசுப்பி விடவோ அல்லது ஊக்குவிப்பதோ அல்லது ஒன்றும் அறியாதவர்கள் போல இருந்துவிடுவதோ நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருச்சிபற்றிய சம்பவங்கள்பேரில் டாக்டர் ஹாண்டே அவர்கள் மேலும் தகவல்களைப் பெற வேண்டும் என்ற வகையில் திருப்பி திருப்பி அதை வலியுறுத்தினார். ஏற்கெனவே தகவல்கள் வந்துவிட்டன என்று அவர் வலியுறுத்தியதைப் புறக்கணித்துவிடவில்லை. மேலும் தகவல் பெறப்பட்டது. வந்த பிறகு எது சரி எது சரியல்ல என்ற ஆராய்ச்சியில் நாம் ஈடுபடுவதைவிட ஒரு நீதி விசாரணை வைக்கலாம் என்ற அந்தக் கோரிக்கைக்கும் இந்த அரசாங்கம் இணக்கம் தெரிவித்து நீதி விசாரணை கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டது. நீதி விசாரணை வைக்கப்பட்டது என்ற செய்தி வந்தவுடனே ஹர்த்தால் நிறுத்தப்பட்டு இருக்கலாம். ஆனால் அதை நடத்தியே தீர வேண்டும் என்ற அரசியல் நோக்கம் அதை நடத்துகின்றவர்கள் சிலருக்கு இருந்த காரணத்தால் பல வன்முறைச் செயல்கள் செய்ய முடிந்திருக்கிறது. நீதி விசாரணை ஏற்பாடு செய்த பிறகும், ஆர்.டி.ஓ.வை மாற்றவேண்டும் சஸ்பெண்ட் செய்யவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த ஆர்.டி.ஓ. யார்; அவர் ஒரு கட்சிக்காரர் அல்ல; அவர் சபரி மலைக்குக்கூட செல்லக் கூடியவர் என்று திரு. காமாட்சி அவர்கள் சொன்னதற்குக் காரணம் அவர் நம் கட்சிக்காரர் அல்ல என்பதற்காகத்தான். நம் நாடார் அவர்கள்கூட சபரி மலைக்கு இரண்டு நாளைக்குப் பிறகு போகிறார். அந்த அளவு பக்தியுடையவர்தான் அந்த ஆர்.டி.ஓ.



திருச்சியில் அன்று நடந்த சம்பவம் மூன்று டிரைவர்களைக் காணவில்லை என்ற புரளி, செய்தி கிளப்பப்பட்டது. மேலவையில் பேசிய திரு. தீட்சதர் அவர்கள்கூடச் சொன்னார் மூன்று டிரைவர்களை மாணவர்கள் அழைத்துச் சென்றிருக்கிறார்கள் என்ற புரளி கிளப்பப்பட்டது உண்மைதான் என்று. எனவே, அப்படிப்பட்ட புரளி எப்படிப்பட்ட கொந்தளிப்பை, உணர்ச்சிகளை ஏற்படுத்தும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆர்.டி.ஓ. தனியாகச் சென்று அந்த டிரைவர்கள் உள்ளே இருக்கிறார்களா என்று பார்க்கப் போனார். அப்படிப் போன ஆர்.டி.ஓ.வை மாணவர்கள் தாக்கியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி வந்த தகவல்களில் எவை எல்லாம் சரி, எவை சரியல்ல என்று பார்ப்பதற்காகத்தான் நீதி விசாரணை. அதற்குப் பிறகும் திருச்சி சம்பவம், பாளையங்கோட்டை சம்பவம் தொடர்ந்து புதிய புதிய சம்பவங்கள்மூலம் வன்முறைகள் தூண்டப்படுகின்ற நேரத்தில் பொறுப்பு வாய்ந்த எதிர்க் கட்சிகள் அதற்கு ஊக்கம் அளிக்காமல் இருக்க வேண்டும் என்று மிக மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே வைக்கப்பட்டு இருக்கிற பட்டியலைப்பற்றி ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். பல நாட்களாகக் கேட்டு கேட்டு நாங்களும் தயங்கித் தயங்கி—தயங்கக் காரணம் பிரதமருக்கு அளிக்க வேண்டிய மதிப்பு—அதற்குப் பிறகு பட்டியலைக் கொடுத்தவர்களே வெளியிட்டு விட்ட காரணத்தாலும் அரசாங்கத்தின் சார்பாக வை பார்க்கலாம் என்று கே.டி.கே. தங்கமணி அறிக்கைவிட்டு விட்ட காரணத்தாலும் இன்றைக்கு அந்தப் பட்டியல் வைக்கப்பட்டு இருக்கிறது. அரசாங்கச் சார்பு பதில்களோடு அந்தப் பட்டியல் வைக்கப்பட்டு இருக்கிறது. இதுவும் போதாது நீங்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நான் இந்த மாமன்றத்தில் மெத்தப் பணிவோடு ஜனநாயக உணர்வோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதிலே இருக்கிற விஷயங்களில் உங்களுக்கு எதெதில் இன்னும் சந்தேகம் இருக்கிறதோ மேலான ஆதாரங்கள் குற்றச்சாட்டுகளுக்கு இருக்குமானால் அந்த ஆதாரங்களை நீங்கள் இந்த அவையில் சமர்ப்பிக்கலாம். அதற்கு எந்த விதமான தடையும் இல்லை. இதிலே இந்தக் குற்றச்சாட்டுகள் எப்படிப்பட்டவை என்பதை நீங்களே தெரிந்துகொள்ளலாம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்களே அதைப்போல இங்கே கூறப்பட்டிருப்பதில் ஒன்று முதலமைச்சர் கருணாநிதிக்கு சொந்தமான திருவாரூரில் 10—20 ஆண்டிற்கு முன்னால் 3,500 ரூபாய்க்கு வாங்கப்பட்ட ஒரு வீடு 94-ம் நம்பர் தெற்கு வீதி, இந்த வீடு பல லட்சக்கணக்கான ரூபாயில் கட்டப்பட்டு இருக்கிறது என்பதாகும். அந்த வீடு எப்படியிருக்கிறது என்பதற்காகச் சில நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட அந்த வீட்டின் போட்டோவையே அந்தப் பதிலில் இணைத்து வைத்திருக்கிறோம். அதிலிருந்து அது எப்படிப்

பட்ட வீடு என்பதை அறியலாம். அந்த வீட்டில் குடியிருப்பவர்கள் இதைப் பழுது பார்த்துத் தருகிறாயா? அல்லது வேறு வீட்டிற்குப் போகட்டுமா என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வீடு பல லட்ச ரூபாயில் கட்டப்பட்டிருக்கிறது என்பது குற்றச்சாட்டுகளில் ஒன்று.

அருணா ஓட்டல் கருணாநிதிக்குச் சொந்தம்; ஸ்பென்சர் அண்டு கோ, கருணாநிதிக்குச் சொந்தம்; பைலட் தியேட்டர் கருணாநிதிக்குச் சொந்தம்; இப்படியெல்லாம் சொல்லப்பட்டு வந்தது. இப்போது அதையெல்லாம் விட்டுவிட்டு, புதிதாகக் குற்றச்சாட்டில் அண்ணா தியேட்டர் கருணாநிதிக்குச் சொந்தம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் போய் அந்த தியேட்டர் எனக்குச் சொந்தம் என்று சொன்னால், அந்தத் தியேட்டரின் உரிமையாளர் உதைக்க வரக்கூடிய நிலைமை; இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள்தான் அதில் அடங்கியிருக்கின்றன.

இதற்கு மேல் ஆதாரம் எங்களிடம் இருக்கிறது என்று சொன்னால் அதைத் தாருங்கள். குற்றச்சாட்டுகளைக் கொடுத்தவர்கள் அதை வந்து இங்கே சொல்ல மாட்டார்கள். வெளியிலே தான் வீரம் பேசுவார்கள். உள்ளே வந்து பிரச்னைகளை நேருக்கு நேர் சந்திக்க அவர்கள் அஞ்சுகிறார்கள் என்பது தெரிந்து விட்டது.

டாக்டர் ஹாண்டே போன்றவர்களுக்கு நல்ல எண்ணத்தோடு ஏதாவது சந்தேகம் இருக்கலாம். கருணாநிதிக்கு இந்தப் பெயர் வரலாமா என்ற எண்ணத்தின் காரணமாகச் சந்தேகம் தோன்றலாம். அதைப்போலவே பொன்னப்ப நாடார் அவர்கள் தமிழ்நாட்டு அரசாங்கத்தின்மீது களங்கம் வரலாமா என்று நினைக்கலாம். அப்படிப்பட்ட சந்தேகம் இருந்தால், புதிதாக உங்களுக்கு ஆதாரம் கிடைத்தாலும், அல்லது குற்றம் சாட்டியவர்கள் உங்களிடம் அந்த ஆதாரங்களைக் கொடுத்தாலும்கூட, நீங்கள் அதை அளித்தால், அதற்கான என்னென்ன ஆதாரங்கள் உங்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் தேவை என்று கருதுகிறீர்களோ அவைகளை அளிக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்பதை எடுத்துச் சொல்லி, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கருத்து தெரிவித்த அனைவருக்கும் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது மணி ஒன்று ஆகிவிட்டது. சரியாக ஒரு மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறவேண்டியிருப்பதால் இத்துடன் விவாதங்கள் முடிவுற்றன. அடுத்து, வாக்கெடுப்பு.



**9. 1972-73-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான நிதிக் கோரிக்கைமீது வாக்கெடுப்பு.**

**கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,71,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது. பி.ப 1-0

**கோரிக்கை எண். 6—மாநிலச் சட்டமன்றம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,50.000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 8—ஆளுநர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 8.—ஆளுநர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10.66,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 9.—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,29,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 9-எ—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 9-எ—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 12.—காவல்துறை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 12.—காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 45,74,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 13—கல்வி.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 50,42,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 14—மருத்துவம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,16,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 25,00,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



**கோரிக்கை எண் 16—வேளாண்மை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 16.—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 45,64,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண். 18—கால்நடை வளர்ப்பு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 20—தொழில்கள்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,90,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி —

"கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 41,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 25-எ—பின்தங்கிய வகுப்பினர் நலன்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 25-எ—பின் தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 35,200-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும்,
கருவிகளும், இயந்திர சாதனங்களும்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,69,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியம்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 29 பொதுப்பணிகள்—உதவி மானியம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 31—பஞ்சத் துயர் தணிப்பு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 31—பஞ்சத் துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,25,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 33—பல்வகை**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,16,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."



நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 40—தொழில் வளர்ச்சிக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 42,50,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,88,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,43,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 43—சாலைகள் நீர்வழிப் போக்குவரத்துத்
திட்டங்கள் மீதான மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 43—சாலைகள் நீர்வழிப் போக்குவரத்துத் திட்டங்கள் மீதான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,10,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்.

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

*(3) அறிவிப்புகள் (தொடர்ச்சி)*

*(ஆ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (4-ம் எண்) சட்ட முன்வடிவு.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (4-ம் எண்) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவினை அளித்துள்ளார்கள்.

*(6) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)*

*(ஆ) தமிழ் நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (4-ம் எண்) சட்ட முன்வடிவு.*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (4-ம் எண்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.



*(10) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.*

A. *Statutory Rules and Orders.*

43. Notification issued with G.O. Ms. No. 2729, Revenue, dated the 19th October 1972 in regard to date of commencement of the Tamil Nadu Betting Tax (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 9 of 1972). [Laid on the Table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935).]

44. Notification issued with G.O. Ms. No. 2782, Revenue, dated the 24th October 1972, in regard to exemption from payment of sales tax by any dealer on the sales of goods to the Assistant High Commissioner for Malasia at Madras for his official use. [Laid on the Table of the House under seciton 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

45. Notification issued with G.O. Ms. No. 2730, Revenue, dated the 19th October 1972 in regard to date of commencement of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 8 of 1972). [Laid on the Table of the House under section 29 (2) of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act 6 of 1939).]

B. *Reports, Notifications and Other Papers.*

'Nil'

## இணைப்பு I

[200-ஆம் பக்கத்தில் 163-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

| ஆர். எஸ். எண். | பரப்பு மனை | ச. அடி. | தொகை. ரூ. | பை. | தீர்ப்பு வழங்கப்பட்டவரின் பெயர். | தொகை செலுத்துவது எந்த நிலையில் உள்ள தென்பது, நாள். |
|---|---|---|---|---|---|---|
| தீர்ப்பு எண் 14/1971, நாள் 31—8—1971 | | | | | | |
| 1. 3308/3 .. | 0 | 558 | 4,830 | 89 | இந்தியன் டேங்க் .. .. | 1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ந் தேதியில் செலுத்தப்பட்டது. |
| 2. 3308/4 .. | 0 | 567 | 18,547 | 48 | ஜானகி அம்மாளும் மற்றும் ஐவர் | 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ந் தேதியில் செலுத்தப்பட்டது. |
| 3. 3308/5 .. | 0 | 165 | 1,745 | 45 | | |
| 4. 3309/3 .. | 0 | 502 | 9,800 | 50 | ஜி. கோபாலசாமியும் மற்றொரு வரும். | நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 31 (2) பிரிவின் கீழ் மாநகர சிவில் நீதி மன்றத்தில் தொகை வைப்பீடு செய்யப்பட்டது. |
| 5. 3324/2 .. | 1 | 281 | 37,934 | 58 | பர்துஜகான் வக்.'.ப் ஒளலால் அறங்காவலர்கள். | ஷை |
| 6. 3325/6 .. | 0 | 195 | 787 | 72 | டி. எஸ். ராமசாமி ஐயரும் மற்றும் எழுவரும். | ஷை |
| 7. 3327/2 .. | 2 | 426 | 70,443 | 82 | டி. எஸ். முத்துசாமியும் ஏனை யோரும். | ஷை |
| 8. பொருள்களை மற்றோரிடத் திற்குக் கொண்டு செல் வதற்கான செலவு. | | | 25 | 00 | .. | .. |



| ஆர். எஸ். எண். | பரப்பு மனை | ச. அடி. | தொகை. ரூ. | பை. | தீர்ப்பு வழங்கப்பட்டவரின் பெயர். | தொகை செலுத்துவது எந்த நிலையில் உள்ள தென்பது, நாள். |
|---|---|---|---|---|---|---|
| தீர்ப்பு எண் 22/71, நாள் 31—12—1971. | | | | | | |
| 1. 3348/2 .. | 0 | 477 | 20,511 | 26 | இந்திரா .. .. .. .. | 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ந் தேதியில் செலுத்தப்பட்டது. |
| 2. 3349/2 .. | 0 | 63 | 604 | 46 | நொடித்தவர் சொத்தாட்சியர் (Official Assignee). | நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 31 (2) பிரிவின் கீழ் மாநகர சிவில் நீதி மன்றத்தில் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ந் தேதியில் தொகை வைப்பீடு செய்யப்பட்டது. |
| 3. 3347/9 .. | 0 | 2275 | 29,857 | 96 | ஸ்ரீகபாலீஸ்வரர் கோயில் தேவஸ் தானம். | ரிட் மனு ஒன்று உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய் யப்பட்டு அது விசாரணை யில் உள்ளதால் இழப் பீட்டுத் தொகை இன்னும் கொடுக்கப்படவில்லை. |
| மொத்தம் | 5 | 0709 | 1,95,089 | 12 | | |

## இணைப்பு I

[200-ஆம் பக்கத்தில் 163-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

| ஆர். எஸ். எண். | பரப்பு மனை | ச. அடி. | தொகை. ரூ. | பை. | தீர்ப்பு வழங்கப்பட்டவரின் பெயர். | தொகை செலுத்துவது எந்த நிலையில் உள்ளது என்பது, நாள். |
|---|---|---|---|---|---|---|
| **தீர்ப்பு எண் 14/1971, நாள் 31—8—1971** | | | | | | |
| 1. 3308/3 .. | 0 | 558 | 4,830 | 89 | இந்தியன் டேங்க் .. .. | 1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ந் தேதியில் செலுத்தப்பட்டது. |
| 2. 3308/4 .. | 0 | 567 | 18,547 | 48 | ஜானகி அம்மாளும் மற்றும் ஐவர் | 1972 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ந் தேதியில் செலுத்தப்பட்டது. |
| 3. 3308/5 .. | 0 | 165 | 1,745 | 45 | | |
| 4. 3309/3 .. | 0 | 502 | 9,800 | 50 | ஜி. கோபாலசாமியும் மற்றொருவரும். | நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 31 (2) பிரிவின் கீழ் மாநகர சிவில் நீதி மன்றத்தில் தொகை வைப்பீடு செய்யப்பட்டது. |
| 3324/2 .. | 1 | 281 | 37,934 | 58 | பர்துஜகான் வக்:ப் ஔலால் அறங்காவலர்கள். | ஷை |
| 3325/6 .. | 0 | 195 | 787 | 72 | டி. எஸ். ராமசாமி ஐயரும் மற்றும் எழுவரும். | ஷை |
| 3327/2 .. | 2 | 426 | 70,443 | 82 | டி. எஸ். முத்துசாமியும் ஏனையோரும். | ஷை |
| பொருள்களை மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்வதற்கான செலவு. | | | 25 | 00 | .. | .. |
| **தீர்ப்பு எண் 22/71, நாள் 31—12—1971.** | | | | | | |
| 1. 3348/2 .. | 0 | 477 | 20,511 | 26 | இந்திரா .. .. .. .. | 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ந் தேதியில் செலுத்தப்பட்டது. |
| 2. 3349/2 .. | 0 | 63 | 604 | 46 | நொடித்தவர் சொத்தாட்சியர் (Official Assignee). | நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் 31 (2) பிரிவின் கீழ் மாநகர சிவில் நீதி மன்றத்தில் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ந் தேதியில் தொகை வைப்பீடு செய்யப்பட்டது. |
| 3. 3347/9 .. | 0 | 2275 | 29,857 | 96 | ஸ்ரீகபாலீஸ்வரர் கோயில் தேவஸ்தானம். | ரிட் மனு ஒன்று உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அது விசாரணையில் உள்ளதால் இழப்பீட்டுத் தொகை இன்னும் கொடுக்கப்படவில்லை. |
| மொத்தம் | 5 | 0709 | 1,95,089 | 12 | | |

| R. S. No. | Extent. | | Amount. | | Name of the Awardee. | Stage of payment. |
|---|---|---|---|---|---|---|
| *Award No. 14/71, dated 31st August 1971.* | | | | | | |
| | G. | SQ.FT. | RS. | NP. | | |
| . 3308/3 .. | 0 | 558 | 4,830 | 89 | Indian Bank .. .. .. | Paid on 4th November 1971. |
| . 3308/4 .. | 0 | 567 | 18,547 | 48 | Janaki Ammal and five others (for 3308/4 and 3308/5) | Paid on 17th February 1972. |
| . 3308/5 .. | 0 | 165 | 1,745 | 45 | | |
| . 3309/3 .. | 0 | 502 | 9,800 | 50 | G. Gopalaswami and another | Deposited in the City Civil Court under section 31 (2) of the L.A. Act. |
| . 3324/2 .. | 1 | 281 | 37,934 | 58 | Trustees of Bardujehan Wakf Aulal. | Do. |
| . 3325/6 .. | 0 | 195 | 787 | 72 | T. S. Ramaswami Iyer and 7 others. | Do. |
| . 3327/2 .. | 2 | 426 | 70,443 | 82 | T. S. Muthuswami and others | Do. |
| Shifting Charges | | | 25 | 00 | .. | .. |
| *Award No. 22/71, dated 31st December 1971.* | | | | | | |
| . 3348/2 .. | 0 | 477 | 20,511 | 26 | Indira .. .. .. .. | Paid on 1st March 1972. |
| . 3349/2 .. | 0 | 63 | 604 | 46 | Official Assignee .. .. | Deposited in the City Civil Court under section 31 (2) of the L.A. Act on 17th Febuary 1972. |
| 3. 3347/9 – | 0 | 2275 | 29,857 | 96 | Sri Kabaleswarer Temple Devesthanam. | Not yet paid, as there is a writ petition pending in the High Court. |
| Total – | 5 | 0709 | 1,95,089 | 12 | | |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

### வெள்ளிக்கிழமை, 1972 டிசம்பர் 15

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்–விடைகள்

### வெள்ளிகுறியிட்ட வினாக்கள்

### உருது பயிற்றுமொழிப் பள்ளிகளுக்கு மானியம்

* 181 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உருதுமொழி பாடசாலைகளுக்கு அரசாங்கம் மானியம் ஏதும் வழங்குகிறதா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆசிரியர்களின் மாத ஊதியம் பூராவும் முழு மானியமாக கொடுக்கப்படுகிறது. விதி முறைகளின்படி நிர்வாக மானியமும் வழங்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : அண்மைக் காலத்தில் தமிழ்மொழி போதிக்கின்ற இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் முதல்நிலை தமிழாசிரியர்கள் பதவிக்கு உயர்த்தப்பட்டு வருகிறார்கள். அதேநேரத்தில் உருது மொழி போதிக்கக்கூடிய முதல் நிலை ஆசிரியர்கள்கூட—திருச்சி போன்ற இடங்களில்—இரண்டாம் நிலைக்குத் தாழ்த்தப்பட்டிருக்கிறார்களே, இது எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது? இந்தக் குறையை அகற்றி அவர்களையும் முதல்நிலைக்கு உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதல்நிலை தமிழாசிரியர்களாக நியமிக்கப்படுவதற்குரிய தகுதியைப் பெற்று இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களை

ஆண்டுக்கு இவ்வளவு பேர் என்கிற அடிப்படையில் முதல்நிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு செய்யப்படுகிறார்கள். உருது போதிக்கின்ற ஆசிரியர்களின் விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. அது பற்றி தனிக் கேள்வி போட்டால்—உருது போதிக்கின்ற ஆசிரியர்கள் எங்கெங்கே எவ்வளவுபேர்கள் இருக்கிறார்கள் என்பது அறிந்து அது விவரம் அளிக்க முடியும்.

திரு. என். கிட்டப்பா : உருதுமொழி பாடசாலைகளுக்கு அரசாங்கம் எந்த அளவுக்கு மானியத் தொகை அளிக்கிறதோ அது போல தமிழல்லாத மற்ற மொழி போதிக்கும் பாடசாலைகளுக்கும் அரசாங்கம் மானியம் அளிக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : திருச்சியிலுள்ள முஸ்லீம் மகளிர் கல்லூரியில் முதல்நிலை உருது ஆசிரியர் ஒருவர் இரண்டாம் நிலைக்கு தாழ்த்தப்பட்டிருக்கிறார். சென்னை ஒபர்ட் உயர்நிலைப் பள்ளியில் முதல்நிலை முன்ஷியாகப் பணியாற்றி வந்திருப்பவரை, இரண்டாம் நிலைக்குத் தாழ்த்தியிருக்கிறார்கள். இது எந்த அடிப்படையில் செய்யப்படுகிறது? இதனால் உருதுமொழி போதிக்கும் ஆசிரியர் உருதுமொழி பேசும் மக்களிடையே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசு தமிழ்மொழி பேசும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை இவர்களுக்கும் வழங்கி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி பரிகாரம் தேடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை, தனிக் கேள்வி போட்டால் விவரங்களை சேகரித்து அளிக்கலாம்.

*Telugu teachers*

* 182. *Q.*—Thiru B. VENKATASWAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of Secondary Grade passed teachers who are now working as Grade II Telugu Pandits in Government High Schools of Tamil Nadu?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 19.





Thiru B. VENKATASWAMI : Grade II Telugu Pandits are appointed as teachers in schools. But when secondary grade posts are falling vacant, these pandits are not appointed in high schools regularly? May I know the reason?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இரண்டாம்நிலை தெலுங்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்கள் கிடைக்காத காரணத்தினால் இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். தகுதி பெற்றவர்கள் கிடைக்கும் போது அவர்களை நியமிக்க வாய்ப்பு ஏற்படும்.

Thiru B. VENKATASWAMI : Due to dearth of Telugu Pandits, secondary grade Teugu teachers are appointed as Grade II Pandits. But when regular vacancies occur in high schools, these grade II pandits are not regularly appointed in those vacancies After all, Grade II Telugu pandits posts are purely temporary ones.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டாம்நிலை ஆசிரியர்கள் கிடைப்பார்களானால் ஏற்றுக்கொண்டு, இடைநிலை ஆசிரியர்கள் விலக்கப்படுவார்கள்.

Thiru K. S. KOTHANDARAMIAH : I am conducting Telugu Pandit Examination in Hosur and it has been recognised by Government. We have one examination centre in Hosur for the whole State. Secondary grade teachers and higher grade teachers sit for the examination and nearly 150 boys pass the examination every year. They are appointed as Telugu Pandits but most of them are ousted during summer vacation. This causes difficulties for them. May I know from the Hon Minister whether he would see that these people are not disturbed but are continued as secondary grade pandits in high schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விண்ணப்பம் தருவார்களானால் கல்வி இயக்குநரைக் கலந்து கொண்டு பரிசீலிக்கலாம்.

[1972 டிசம்பர் 15

முதுநிலை ஆசிரியர் பதவிகள்

* 183 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1971–72-ம் ஆண்டில் முதுநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று இளநிலைப் பதவியிலுள்ள ஆசிரியர்களில் எத்தனை பேர் முதுநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1971–72-ஆம் ஆண்டில் முதுநிலை பயிற்சி பெற்று இளநிலை ஆசிரியர் பதவியிலுள்ள ஆசிரியர் எவரும் முதுநிலை ஆசிரியராக நியமிக்கப்படவில்லை. ஆயினும் 1972–73-ல் மேற்கூறிய ஆசிரியர்கள் 5,000 பேர் முதுநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் இன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகையால் ஆசிரியர் மாணவர்கள் விகிதத்தைக் குறைத்து, நிறையப் பேர் ஆசிரியர் வேலையில் அமரும் வாய்ப்பை உண்டாக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் 5 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள் இவ்வாண்டு ஈர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டுக்கு 5 ஆயிரம் ஆசிரியர்களை எடுத்துக் கொள்ளும் திட்டமும் இருக்கிறது. பொதுவாக நிதி நிலை வசதி பெருகினால்தான் மாணவர்கள் ஆசிரியர் விகிதத்தை மாற்றுவதுபற்றி கவனம் செலுத்த முடியும்.

திரு. டி. கணபதி : பல நடுநிலைப் பள்ளிகளில் பி.டி. படித்தவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். அதை அரசு அறியுமா ? அவர்களை பி.டி. போஸ்டில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பி. டி. படித்தவர்கள் இருக்க மாட்டார்கள். செகண்டரி கிரேடாக இருந்தவர்கள் பி.டி.யாக தங்களை உயர்த்திக் கொண்டு இருப்பார்கள். வாய்ப்பு ஏற்படும்போது இவர்களுக்கு முதற் சலுகை தரப்படுகிறது



1972 டிசம்பர் 15]

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்களில், தேர்ச்சி பெற்றுள்ள முதுநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர் ஸ்தானங்களில் நியமிக்கப்படக் கூடாது என்று ஜி.ஓ. போடப்பட்டது. இதற்குப் பின்னால் முதுநிலை ஆசிரியர்கள் இளநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் சில இளநிலை ஆசிரியர்கள் ஊஸ்ட் செய்யப்பட்டு, வேலையில்லாமலிருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருப்பதால், அவர்களுக்கு விதிவிலக்கு தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இளநிலை ஆசிரியர்கள் முதுநிலை பயிற்சி பெற்றிருந்தால், அவர்களைத் தான் அந்தப் பதவிகளில் போடவேண்டும். இளநிலை ஆசிரியர்களைப் போடக் கூடாது என்றுதான் இப்பொழுது இருக்கிறது. பயிற்சி பெற்றவர்கள் கிடைக்காவிட்டால்தான் விதிவிலக்கு கொடுத்து இளநிலை ஆசிரியர்களைப் போடலாம் என்று இருக்கிறது. எங்கேனும் தனிப்பட்ட முறையில் அவர்களுக்குக் கேடு இருந்தால், அதுபற்றி அவர்கள் விண்ணப்பித்தால், முறைப்படி, சட்டப்படி அரசு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் தமிழக அரசில், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தகுதி வாய்ந்த தமிழ்ப் புலவர்கள் யாரேனும் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்களா? அப்படி இல்லையானால், இனியேனும் அந்த மாதிரி நியமிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களாவதற்குரிய தகுதிபெற்ற தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சில பல பள்ளிகளில் அப்படிப்பட்டவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அதுபற்றி தனிக்கேள்வி போட்டால், விவரம் அளிக்கலாம்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இளநிலை ஆசிரியர்கள் முதுநிலை ஆசியர்களாகப் புரமோஷன் கொடுக்கப்படுவதற்கு, பயிற்சி பெற்ற காலத்திலிருந்து கணக்கெடுக்க வேண்டுமென்கிறார்கள்.

வேறு சிலர், ஆசிரியராகச் சேர்ந்த தேதியிலிருந்து கணக்கெடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, அதை எப்படி அரசு ஆராயப் போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

*Course of Cosmetology*

* 181. *Q.*—Thiru N. Dennis : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Women's Polytechnic in Madras has started a course in Cosmetology; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1971–72-ஆம் ஆண்டு முதல் சென்னை மகளிர் பல்தொழிற் பயிற்சி கூடத்தில் ஒரு ஆண்டுகால ஒப்பனைப்பட்டப் படிப்பு பெண்களுக்காகவே நடத்தப்பட்டு வருகிறது. இப்பட்டப் படிப்பிற்கு வயது வரம்பு ஏதுமில்லை, புகுமுக வகுப்பு தேறியிருத்தல் வேண்டும். கல்விக் கட்டணம் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படவில்லை.

Thiru N. Dennis : Sir, may I know the employment prospects of those who undergo this training?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய முழுவிவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. ஆனால், ஒப்பனை கலையிலே தேர்ந்தவர்கள் ஆங்காங்கு ஒப்பனைக் கூடங்கள் வைக்கிறார்கள். வேறு பல இடங்களில், சினிமாத் தொழில் போன்ற மற்றவைகளுக்குப் போவதற்குக்கூட இந்த ஒப்பனைத் தொழில் மிக மிகப் பயன்படுகிறது. தனியாகவும் தொழில் கூடங்கள் வைத்திருக்கிறார்கள். ஆக, தனியாகத் தொழில் நடத்தவும் பயன்படுகிறது. வேலை வாய்ப்புகள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்று தனிக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒப்பனை செய்து கொள்வது என்பது நாட்டிலே, ஆண்களும், பெண்களும்—எல்லோருக்கும் பொதுவாக வரக்கூடிய நிலைமை இருக்கிறது. சில சமயத்தில்



ஆண்கள், பெண்களோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கும், பெண்கள், ஆண்களோ என்று சந்தேகப்படக்கூடிய அளவுக்கும் ஒப்பனையினுடைய தன்மைகள் மாறி இருக்கின்றன. ஆகவே, பெண்களுக்கு மட்டுமல்லாமல், ஆண்களுக்கும்கூட, வாய்ப்பினை அளிக்கின்ற வகையில், ஒப்பனைக் கூடங்களை ஏற்படுத்துவதன் மூலமாக, இதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்களுக்கும்கூட ஒப்பனைக் கூடங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. சில முடி திருத்தகங்கள் ஆண்கள் எப்படித் தயார் செய்து அனுப்பலாம் என்று அதிலே ஈடுபட்டிருக்கின்றன. சில ஒப்பனைக் கூடங்களிலே ஆண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தப் புதுமுறையான ஒப்பனைக் கல்வி பயிற்றுவிக்கப்படுவது வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கிற காரணத்தாலும், சென்னையிலே இருக்கிற திரைப்பட ஸ்டுடியோக்களில் கண்டிப்பாக இதிலே பட்டம் பெற்ற ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்று வகுத்து, அப்பயிற்சி பெற்றவர்களுக்கு வேண்டிய தொழில் வாய்ப்புகளை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அத்தகைய சூழ்நிலை ஏற்படும்பொழுது அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஒப்பனைக் கலை, சொல்லித் தராமலே நகர்ப்புறங்களில் தேர்ச்சி பெற்றிருக்கிற காரணத்தினால், கிராமங்களில் அந்த வசதி இல்லாததால், கிராமப் புறங்களில் இதுபோன்ற பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பயிற்சியை, பாலிடெக்னிக் தான் ஆரம்பிக்க முடியும். பயிற்சி பெற்றவர்கள், அவர்களுடைய தொழிலை எங்கு வேண்டுமானாலும் நடத்தலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பேரவை உறுப்பினர்கள், சட்டப்பேரவைக்கு வரும்பொழுது ஒப்பனை செய்து கொண்டு வருவதற்கு வழி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 டிசம்பர் 15

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுதே எல்லோரும் ஒப்பனை செய்துகொண்டு தான் வருகிறார்கள். அவரவர்கள் தங்கள் தங்கள் நிலைக்கு ஏற்ப ஒப்பனை செய்து கொண்டுதான் வருகிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற பயிற்சிக் கூடத்தில் ஆண்களுக்கு அழகூட்டும் பவுடர்களைத் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, facial therapy, bleaching, art of make-up, hair dressing, styling and designing, scalp and hair treatment and good grooming department)என்ற அளவுக்குப் பாடத்திட்டத்திலே சேர்த்து இந்தப் பாடங்களெல்லாம் பயிற்சியாக அளிக்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : பெண்களுக்காக தமிழ்நாட்டிலே கையாளப்பட்டு வருகின்ற முறைகள் மிகச் சிறந்த முறைகள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த முறைகளெல்லாம் படிப்படியாக மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகின்றன. உதாரணமாக, பெண்கள் மஞ்சள் பூசிக் கொள்வது, மருதானி பூசிக் கொள்வதெல்லாம் நல்ல ஒப்பனை முறைகள் என்று கூறப்படுகிறது. இன்றைய நாகரீகப் பெண்கள் இவற்றை உபயோகிப்பதில்லை யென்று சொல்லப்படுவதால், அவர்கள் அவற்றைப் பயன்படுத்த அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒப்பனை முறைகளிலே புதிய முறைகள் போய், பழைய முறைகள் மீண்டும் வருகின்றன. நல்ல செல்வாக்குப் பெற்ற, புகழ்பெற்ற இரண்டு பேர் இந்த முறைகளைப் பின்பற்றத் தொடங்குவார்களானால் அதைப் பின்பற்றி மற்றவர்கள் தொடருவார்கள். இப்பொழுதுகூட, ஹிப்பீஸ் என்ற வகைகளிலே, 17-ம் நூற்றாண்டு, 18-ம் நூற்றாண்டுகளில் எப்படித் தலை மயிரை வளர்த்து வைத்திருந்தார்களோ அப்படித்தான் இப்பொழுது வந்திருக்கிறது. கொஞ்ச காலமாக, 19-ம் நூற்றாண்டிலே இருந்த முறை மாறியிருந்தது, இப்பொழுது மறுபடியும் 17-ம் நூற்றாண்டு முறை வந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.



1972 டிசம்பர் 15]

## தஞ்சை மாவட்டத்திலுள்ள விரிவாக்க அதிகாரிகள்

* 185 வினா.—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அதிகாரிகள் [Extension Officers (Revenue)] நியமிக்கப்பட்டுள்ளனர் ?

(இ) எந்த அடிப்படையில் இந்த நியமனம் செய்யப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தற்போது 5 (ஐந்து).

(இ) பொதுவாக ஊராட்சி வரி நிலுவை, கடன் வசூலிப்பு முதலியன அதிகமாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் இத்தகைய விரிவாக்க அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : இந்த ஈ.ஓ. (ரெவின்யூ)க்களை சில ஒன்றியங்களிலே மட்டும் நாம் நியமித்திருக்கிறோம். ஆனால், பொதுவாக, எல்லா ஒன்றியங்களிலும், 100-க்கு 60-க்கு மேல் ரெவின்யூ பாக்கி இருக்கிற காரணத்தால், முழு வரியை வசூலிக்க முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், எல்லா ஒன்றியங்களிலும் இது போன்ற ஈ.ஓ. (ரெவின்யூ)க்களை நியமிக்க திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்த எந்த ஒன்றியங்களிலே அதிகமான அளவுக்குப் பாக்கி இருக்கிறதோ அந்த அந்த ஒன்றியங்களில் மட்டுமே துணை தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி 100 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களையே நியமிப்பதா அல்லது வேறு முறையில் நியமிப்பதா என்று இலாகாவினர் ஆலோசித்துக் கொண்டு வருகிறார்கள். எல்லா ஒன்றியத்திற்கும் அவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை இந்த இலாக்காவினர் ஏற்றுக்கொள்ளவில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : விரிவாக்க அதிகாரிகள் முன்பு ஆசிரியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பணி கொடுக்கப்பட்டு வந்தார்கள். இப்பொழுது அது நிறுத்தப்பட்டு வருகிறது என்று கேள்விப்படுகிறேன். மீண்டும், ஆசிரியர்களுக்கு விரிவாக்க

[1972 டிசம்பர் 15

அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்ற வாய்ப்பை அரசு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இங்கே இருக்கிற கேள்வி, வருவாய்த் துறை விரிவாக்க அதிகாரிகள் பற்றியது. உறுப்பினர் கல்வித்துறை விரிவாக்க அதிகாரிகள் பற்றிக் கேட்கிறார் என்று நினைக்கிறேன். அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தேர்தலுக்குப் பிறகு எல்லாக் கிராமங்களிலும் கிராம அதிகாரிகளுக்கும் ஊராட்சித் தலைவர்களுக்கும் கசப்புணர்ச்சி இருக்கிறது. இந்த நிலையில் கிராம அதிகாரிகள் வரிவசூலில் சரியாக ஈடுபடுவதில்லை. இதனால் ஊராட்சிகளில் வருமானம் பாதிக்கப்படுகிறது. எனவே, மேல் மட்ட அதிகாரிகளை நியமித்து வசூலிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த வரி வசூல் பாக்கியில்லாத அளவிற்கு வசூலிப்பதற்கு உள்ளாட்சித் துறையினரும், வருவாய்த் துறையினரும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின்கீழ் உள்ள வருவாய்த் துறை அதிகாரிகளும், கோட்டாட்சித் தலைவர்களும் தக்க நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக ஓரளவிற்கு அந்தப் பணிகள் சீராக்கப்பட்டு வருகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளித்தபொழுது நியமிக்கப்பட்ட இ.ஓ. (ரெவின்யூ) க்களைக்கூட எடுத்துவிடலாமா என்ற எண்ணத்தில் இருப்பதுபோலச் சொன்னார்கள். அப்படியானால், அவர்கள் எந்தக் காரணத்திற்காக நியமிக்கப்பட்டார்களோ அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தினால் இதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தை அரசு கொண்டு வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாற்றுத் திட்டம் ஒன்று வகுத்துக்கொண்டுதான் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யலாமா என்பதை அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. வரி வசூலைத் திறமையாகவும், முழுமையாகவும் செய்ய என்ன என்ன வழிகளைச் செய்யலாம் என்பதும் பரிசீலிக்கப்படுகிறது. இதைப்பற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினரும் ஆராய்ந்து அறிக்கை கொடுக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள்.



1972 டிசம்பர் 15]

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் நிலவரி வசூலிப்பதிலே காட்டுகிற அக்கறை வீட்டுவரி வசூலிப்பதிலே காட்டுவதில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. கிராம அதிகாரிகள் சில இடங்களில் மறுக்கக் கூடச் செய்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒவ்வொரு பில் கலெக்டரை குறைந்த சம்பளத்தில் நியமித்து, பஞ்சாயத்து வரிகளை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வரி வசூலிப்பதைப் பொறுத்தவரையில் இரண்டுவிதக் கருத்துக்கள் இருக்கின்றன. கிராம அதிகாரிகள் வசூலிப்பதன் மூலமாகத்தான் நல்ல முறையில் செய்ய முடியும், நடவடிக்கை எடுக்க முடியும் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அடுத்து, இரண்டு மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்து, ஒரு பில் கலெக்டர் நியமித்து, வசூலிக்கலாம் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. அதைப்பற்றி நிர்வாக சீர்திருத்தக் குழுவினரும் அறிக்கை தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு அரசு அதைப்பற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று இருக்கிறது.

## திருவல்லிக்கேணியிலுள்ள கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை

* 186 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள்—நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பெண்கள் கோஷா ஆஸ்பத்திரியில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(இ) அதை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 635.

(இ) ஆம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, திருவல்லிக்கேணியில் உள்ள கோஷா ஆஸ்பத்திரி சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னதாகக் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது முன்பிருந்த படுக்கை அளவு மிக அதிகமாக ஆக்கப்படவில்லை. மக்கள் தொகை 5 லட்சமாக முன்பு இருந்தது, 25 லட்சமாக சென்னையிலே

[1972 டிசம்பர் 15

இன்றைக்குப் பெருகியிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, தாய்மார்களுக்கு அதிகமாக வசதிகள் செய்து தரக்கூடிய முறையில் அதை விரிவுபடுத்த அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கே புதிதாக சில மருத்துவமனைப் பகுதிகள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

Premature Baby Unit and a new Ante-Natal Ward with 50 beds at a cost of Rs. 2 lakhs. Another proposal for the construction of a new O.P. Block.

புறநோயாளிகளுக்காக 6 லட்சம் ரூபாயில் கட்டடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடத்திற்குள் எவ்வளவு விரிவுபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு விரிவுபடுத்து வதற்கான நடைமுறை இருக்கிறது.

## மாயூரம் அரசு மருத்துவ மனை

* 187 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது மாயூரம் அரசினர் மருத்துவமனையினை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விஸ்தரிப்பு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புதிய விஸ்த ரிப்புக்கான செயற்குறிப்பு இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இப்பொழுது 32க்கும் அதிகமான படுக்கைகளைக் கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப் படுகிறது என்றாலும், வெளி நோயாளிகளைக் கவனிப்பதற்கான சூழ் நிலையில் அந்த மருத்துவமனை இல்லை என்பதை அரசு அறியுமா? அந்த மருத்துவமனையில் ரத்த சேமிப்பு நிலையம் ஒன்றை உருவாக்கு வதற்கு நீண்டகாலமாக முயற்சி எடுக்கப்பட்டிருந்தும், தேவையான பொருட்கள் கொடுத்தும்கூட, இன்னும் செயல்படுத்தப்படாமல் இருப்பதற்கான காரணத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 32 படுக்கைகள் கொண்ட ஒரு வார்ட் 2 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. 6 படுக்கைகள் கொண்ட தொத்து



1972 டிசம்பர் 15]

நோய்ப் பிரிவு ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. எக்ஸ்ரே பிளாக் 37 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இப்படி எவை யெவை முன்னுரிமை பெறுகின்றனவோ அவற்றை விரிவுபடுத்துவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, மாயூரம் நகரம் பர்ஸ்ட் கிரேட் முனிசிபாலிட்டியாக ஆகியிருக்கிறது. ஜனத்தொகை அங்கே அதிகமாகயிருக்கிறது. அந்த மருத்துவமனையை இன்னும் சிறப்பான முறையில் விஸ்தரிப்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு தனிக் கவனம் செலுத்து வது என்பது மிக எளிதான காரியம். ஆனால் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டிய இடங்கள் பலவாக வந்துவிடுகின்ற காரணத்தினால் அவற்றுள் ஒவ்வொரு கட்டத்திலும் முன்னுரிமை தரப்பட வேண்டியிருக்கிறது. மாயூரம் பெரிய நகராட்சியாகி விட்டது என்றும், அங்கே மக்கள் தொகை அதிகமாகிவிட்டது என்றும் தெரிவித்தார்கள். அதற்காகத்தான் அங்கே குடும்பக் கட்டுப்பாடு தீவிர வாரம் நடந்து கொண்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் அரசு மருத்துவ மனையில் ஒரு பிளட் பேங்க் அமைப்பதற்காக அங்கேயிருக் கின்ற ரோட்டரி கிளப் போன்ற நிறுவனங்கள் தொகை உதவி செய்து இருக்கின்றன. அந்தத் தொகையும் கொடுக்கப்பட்டு ஒரு ஆண்டு காலத்திற்கும் மேலாக ஆகிறது. மாயூரம், தாலூகாவின் தலைநகராக இருப்பதால் அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

## ஊத்துக்கோட்டை அரசு மருத்துவ மனை

* 188 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டையில் உள்ள அரசினர் மருத்துவமனைக்குரிய புதிய கட்டடம் அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

[1972 டிசம்பர் 15

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது அம்மாதிரித் திட்டம் பரிசீலனையில் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஊத்துக் கோட்டையிலே அமைக்கப்பட்டிருக்கிற மருத்துவமனை பஞ்சாயத்து கட்டடத்தில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அங்கே இப்பொழுது போதுமான வசதிகள் இல்லை. நெருக்கடியான நிலைமை இருக்கிறது. நோயாளிகள் வராண்டாவில் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. பஞ்சாயத்து உறுப்பினர்கள் உட்கார்ந்து கூட்டம் நடத்துகிற இடத்தில் அது நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து 1973–74-ஆம் ஆண்டிலேயாவது இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த ஒன்றியத்தில் பிரைமரி ஹெல்த் சென்டர் மற்றொரு இடத்தில் அமைக்கப்பட்டதன் காரணமாக அந்த இடத்திலே டிஸ்பென்சரி வைத்துக்கொள்வதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால் ஆண்டொன்றுக்கு 45 ஆயிரம் ரூபாய் செலவாகும். கட்டடம் வேண்டுமென்று விரும்புவார்களானால் மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அதற்குத் தேவையான நிதி திரட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் கலந்துகொள்வார்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே பள்ளிக் கட்டடத்திற்காக நாங்கள் நிதி திரட்டியிருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று கல்வியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மருத்துவமனைக்காக பொதுமக்களின் நிதியுதவியைக் கேட்காமல் இதை ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்துக் கொண்டு, அந்தப் பகுதி ஆந்திர எல்லையில் இருக்கின்ற நிலையில் அரசாங்கமே மானியம் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தவேண்டுமென்ற கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது ஏற்றுக்கொள்ளப்படுமானால் மருத்துவமனையல்ல, உள்ளது மருந்தகம், அந்த மருந்தகத்தை புதிய கட்டடத்திலே அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கலாம்.



1972 டிசம்பர் 15]

ஆண்டிப்பட்டிக்கு அரசு மருத்துவமனை.

* 189 வினா.—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், ஆண்டிப்பட்டியில் அரசினர் மருத்துவமனை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அத்தகைய செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*Prevention of water and air pollution*

* 190. Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state the steps taken by the Government to prevent pollution of water and air in the State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்டப் பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நாட்டிலுள்ள அத்தகை பெருக்கும் நீரும், காற்றும் அவசியமாக இருப்பதால் இதைப்பற்றி பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்களுக்கு மத்தியில் மாரல் வகுப்புகளில் இப்படிப்பட்ட பாடங்களை விளக்கிப் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் செய்ய அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி மிகவும் பொதுத் தன்மை படைத்ததாக அமைந்திருக்கிறது. எந்த அளவிற்குப் பாடத்திட்டத்தில் புகுத்தப்படும் என்பதைப்பற்றி இனி மேல்தான் ஆலோசிக்க வேண்டும். ஆனால் இங்கே தரப்பட்ட கேள்வியும், விடையும் காற்று, தண்ணீர் கெடுவதற்கான காரணங்களைக் குறித்தவை. சிலவகைத் தொழில் வளர்ச்சி, அல்லது போக்குவரத்துப் பெருக்கம் இவைகளினால் சென்னையில் காற்று தூய்மை கெடுவதை எந்த அளவிற்குத் தூய்மை கெடாமல் தடுக்க முடியும் என்பதுபற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் விளைவாக சில செயல்கள் அண்மையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

@ 414-ம் பக்கங்களில் இணைப்பு-1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1972 டிசம்பர் 15

அதைப்போலவே மிகப் பெரிய தொழிற்சாலைகளின் விளைவாக நீரின் தூய்மை கெடுக்கப்பட்டு மக்கள் நல்வாழ்வு கெடும் என்பதால் அதைத் தடுக்க நடவடிக்கைகளை எடுக்க ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி" நிலைக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி விவரம் தரப் பட்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, வெளிநாடுகளில் சில பெரிய நகரங்களில் காற்றின் தூய்மை கெடாமல் இருப்பதற்காக, திங்களுக்கு ஒரு முறையோ இருமுறையோ அந்த நகரங்களில் வண்டி, வாகனங்கள் ஓடக் கூடாது என்று சட்டம் இருக்கிறதாம். அதே போல் நமது பெரிய நகரங்களிலும் திங்களுக்கு ஒருநாள் வண்டி வாகனங்கள் ஓடக் கூடாது என்ற முறை கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாதத்தில் 29 நாட்கள் காற்றின் தூய்மை கெட்டு, ஒருநாள் காற்று துப்புரவு செய்யப்படுவது விஞ்ஞான முறையில்லை. அது எந்த அடிப்படையில் பொருந்தும் என்பது தெரியவில்லை. மிகப்பெரிய நகரங்களில், சான்-பிரான்சிஸ்கோ போன்ற நகரங்களில் இலட்சக்கணக்கான கார்கள் நகரங்களுக்குள் வருவதால், காற்றின் தூய்மை கெடுவதைத் தடுப் பதற்காக கார்கள் வராமல் இருக்கவும், உள்ளே வரவேண்டியவர்கள் பஸ்களிலே மட்டும் போக வேண்டுமென்ற முறையை வைத்திருக் கிறார்கள். இங்கு அப்படிப்பட்ட முறை கையாளப்படக் கூடியதாக இல்லை. ஆனால் மோட்டார் வாகனங்களினால் காற்றின் தூய்மை கெடுவதைத் தடுக்க, கடந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 4,584 மோட்டார் வாகனங்கள் அதிகப் புகை கக்கியதற்கான நடவடிக்கைக்கு உள்ளாகியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சப்ளிமெண்டரியை முன்னுரையில்லாமல் கேளுங்கள்.

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள தலைமை மருத்துவமனையில் சுற்றுப்புறத்திலும், அதன் அருகாமையி லும் காற்றின் தூய்மை வெகுவாகக் கெட்டிருக்கிறது என்று ஏற்கனவே நடத்தப்பட்ட சில ஆய்வுகளிலிருந்து தெரிகிறது. அதற்கு முக்கியமான காரணம், அதன் அருகிலுள்ள மத்திய இரயில் நிலையம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது குறித்து நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா ?



1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மருத்துவ மனையின் உள்ளுக்குள் இருக்கின்ற நோயாளிகள் பாதிக்கின்ற அளவில் அங்கே புகை இல்லை என்றாலும், அந்த நெடுஞ்சாலையில் புகை மிகுதி யாக இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டு, அதன் காரணமாக இரயில்வே இலாக்காவினர் அந்த சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வரும் புகை கக்கும் எஞ்சின்களுக்குப் பதிலாக, கூடுமானவரையில் டீசல் எஞ்சின்களைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற சில ஆலோசனைகள் வழங்கப்பட் டிருக்கின்றன.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, திருச்சியில் எரி சாராயம் காய்ச்சுவதால் உண்டாகும் கழிவுநீர் காவிரி நதியில்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : தண்ணீரைப்பற்றி இருக்கிறது. திருச்சியில் எரிசாராயம் காய்ச்சுவதால் உண்டாகும் கழிவு நீரைக் காவிரியில் விடுவதால் ஆற்று நீர் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா ? அப்படியெனில் அதற்காக என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த வடி சாலை தொழிற்சாலையிலிருந்து வரும் நீரை வெளியேற்றும் பொழுது மிகக் கெடுதலாக இல்லாமல் அவ்வப்பொழுது பல்வேறு முறைகளின் மூலம் வடிக்கப் பெற்று, ஓரளவிற்குத் தூய்மை செய்யப்பட்டு ஆற்றில் கலக்கவிடும் முறை இப்பொழுது கையாளப்படுகிறது. அவ்வப்பொழுது ஒரு துணை பொறியியல் மேற்பார்வையாளரால் சரிபார்க்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இராணிப்பேட்டைக்கு அருகில் தோல் பதனிடும் தொழிற்சாலைக்கு அருகில் தண்ணீர் கெடுதலாக இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அது சம்பந்தமாக மத்திய அரசு ஒரு குழு அமைத்து அது சில சிபார்சு களைச் செய்திருக்கிறது என்று அறிகிறேன். அதுபற்றி அரசுக்குத் தகவல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சில ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆலோசனைகளின்

அடிப்படையில் "Water pollution Standing Committee" என்று அண்மையில் ஏற்படுத்தப்பட்டு சிறந்த அறிவாற்றல் படைத்த பொறியாளரும் அந்தக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் இன்னும் கடமையை நிறைவேற்றத் தொடங்கவில்லை, வேறு கடமைக்குச் சென்றிருக்கிறார். அவர் வந்த பிறகு அந்தக் கடமைகளை நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கிறோம் அந்தக் குழுவின்மூலம் தக்க ஆலோசனை பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, சென்னை நகரத்தில் நாற்றம் எடுக்கக்கூடிய அளவில் கூவம் நதியினால் பெரும் நாற்றம் ஏற்பட்டு காற்று கெட்டுப் போயுள்ளது என்று சொல்லப்பட்டதே, அந்த நதியில் நாற்றம் இப்பொழுது குறைந்திருக்கிறதா? அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்தத் திட்டம் முழுவதும் இன்னும் நிறைவேற்றி முடிக்கப்படவில்லை. இடையிலே ஏற்பட்ட கடும் மழையின் காரணமாக வேலைகள் தாமதப்பட்டிருக்கின்றன. திட்டம் முடிந்த பிறகு பலன் நிச்சயமாகத் தெரியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, காற்று, நீர் கெடுவதற்கான காரண காரியங்களை அறிந்து, அவைகளைப் போக்குகின்ற வழி முறைகளைக் காண ஒரு குழு அமைக்கப்பட்டு, பொறியாளரும்கூட நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட அந்தக் குழு பலதரப்பட்ட மக்களையும் சந்திப்பதற்காகப் பலயிடங்களுக்கும் சென்று ஆய்வுரை செய்து பொதுமக்களுக்கும் வாய்ப்பளித்து, பிறகு அதன் பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும் வகையில் உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த நிலைக் குழு, டெக்னிகல் கமிட்டி என்ற முறையில் அமைந்தது. எங்கே எந்த ஒரு தொழிற்சாலையை நடத்த நேரிட்டாலும் அதனால் அந்தப் பகுதியின் நீர் கெட நேரிடுமா, நேரிடாதா என்பதைப் பரீட்சார்த்தமாக ஆராய்வார்கள். அப்படி ஆராயும்பொழுது தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் நீர் எந்த அளவிற்கு அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும், எந்த அளவிற்கு அது பரவும், எந்த அளவிற்கு நிலத்தின் அடியிலே சென்று தங்கும், அதன் விளைவுகள் என்ன என்பது பரிசீலிக்கப்பட்டு, அந்தத் தொழிற்சாலை என்ன முறைகளைக் கையாள்வதால் அவைகளைத் தடுக்க முடியும் என்பதை ஆராயும். மரவள்ளிக் கிழங்குத் தொழிற்சாலையிலிருந்து வெளிவருவதையும் ஆராய்வார்கள். பெரிய ஸல்ப்யூரிக் ஆசிட் தொழிற்சாலையிலிருந்து வரும் நீரைப்பற்றியும் ஆராய்வார்கள். ஆகவே பொல்யூஷனுக்குக் காரணமாக இருக்கும் நிலைமைகளை ஆராய்ந்து ஆலோசனை வழங்குவார்கள்.



திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, காற்றின் தூய்மை அந்த விஷக்காற்று ஆகாயத்திற்குச் சென்று பிறகு பூமிக்குத் திரும்புகிறது என்றும், இன்னும் சில ஆண்டுகளில் அந்த விஷக்காற்று எல்லோரையும் மாய்த்துவிடும் என்றும் ஒரு மாபெரும் விஞ்ஞானி தெரிவித்து இருக்கிறாரே. அந்த விஷக் காற்றைத் தடுக்க முயற்சிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வியை மறுபடியும் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, காற்றின் தூய்மை அந்த விஷக்காற்று ஆகாயத்திற்குச் சென்று பூமிக்குத் திரும்புகிறது என்றும், இன்னும் சில ஆண்டுகளில் பூமிக்கு வந்துவிடும் என்றும், அப்பொழுது யாருமே இருக்க முடியாது என்றும் மாபெரும் விஞ்ஞானி ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன் தெரிவித்திருக்கிறார்களே, அந்த விஷக்காற்றைத் தடுக்க விஞ்ஞானிகளை நியமிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட கருத்து அணுகுண்டு, ஹைட்ரஜன் பாம்களைப் பயன்படுத்துவதால் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் "அப்போது யாருமே இருக்கமுடியாது" என்றும் சொன்னார். அது எல்லோருக்கும் நிம்மதியான காலம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The problem of air pollution and water pollution has become universal. The problem is not only in our country but is there in every country. Each country has to deal with this problem. Moreover, it is not confined only to our State. It is there in other States also and rivers flowing through other States and starting from one State, may come to our State and may in its train bring water pollution. So, the

problem has to be tackled on an all-India basis. Will this Government take this as an all-India problem and see that something is done in this direction in our State also?

THE HON. THIRU K. ANBAZHAGAN : The magnitude of the problem is not so much here as in developed countries which are highly industrialised. It is only a proportion in India. No doubt the State Government will take up the problem with the Centre so that other States also may follow and Tamil Nadu also will get some benefit out of it.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கேஷ்யூ தொழிற்சாலையில் புகை வருவதால் அருகிலுள்ள காற்று பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் மக்கள் சுகாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைத் தடுக்க என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, புகையினால் ஏற்படும் விளைவுகளை இனிதான் பரிசீலிக்க வேண்டும். ஆனால் கேஷ்யூ இண்டஸ்ட்ரீஸ், அந்த முந்திரிக்கொட்டைத் தொழிற்சாலையில் பணியாற்றும் சிறுவர்கள், சிறுமிகளின் கை அந்த எண்ணெயின் காரணமாக புண்ணாகிறது என்று அரசாங்கத்திற்கு அங்கிருந்த சுகாதார அதிகாரி தெரிவித்து, என்ன செய்யலாம் என்று ஆலோசிக்கப்படுகிறது. ஆலோசனை செய்து சுகாதார இலாக்கா நடவடிக்கை எடுத்தால் அந்தத் தொழிற்சாலையை நடத்துபவர்கள் அதற்கு உட்படாமல் எதிர்க்க முயற்சிப்பார்கள். அப்போது நடவடிக்கை எடுப்பதற்கு முன் எதிர்க்கட்சித் தலைவரும் ஆலோசிக்கப்படுவார். தகுந்த ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : திருச்சியில் எரிசாராயத் தொழிற்சாலையின் கழிவுநீர் உய்யகொண்டான் ஆற்றில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு கலந்து குழாய் மூலம் கல்லுக்குழியில் ஒரு பகுதியில் ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்படுகிறது. அதை விவசாயத்திற்குப் பயன்படுத்த கலெக்டரிடமிருந்து ஏதாவது திட்டம் வந்திருக்கிறதா ? அத் திட்டம் பற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படி எந்த ஒரு திட்டமும் அரசுக்கு வந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை.



திரு. கே. எ. வகாப் : சென்னையில் உள்ள காற்று கெடுவதற்கு முக்கிய காரணம் லாரிகளில் டீசல் எண்ணைக்குப் பதிலாக மண்ணெண்ணெய் போட்டு ஓட்டுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த லாரிகள் குறைந்த பட்சம் நகரத்திற்குள் அதிகமாக நடமாடாமல் இருக்கச் செய்வதற்கு வழிவகைகள் வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படி புகை கக்கும் மோட்டார் வாகனங்கள் 4,584 மீது கடந்த 1972 ஆகஸ்ட் மாதம் வரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சிலர் வார்னிங் செய்யப்பட்டிருக்கிறார்கள். வேறு சிலருக்கு ஐந்து ரூபாயிலிருந்து ஐம்பது ரூபாய் வரை அபராதம் போடப்பட்டிருக்கிறது. ரூ. 12,542 அபராதத்தின் மூலம் போலீஸ் இலாகாவினால் வசூலிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் மூலம் அவர்கள் திருந்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஓட்டல் தொழிலாளருக்கு ஊதியக்குழு

* 191 வினா.—திரு. அ. தேவேந்திரன்
திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஓட்டல் தொழிலாளருக்கான ஊதியக்குழு ஏதேனும் நிறுவப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : குழு அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தமிழ்நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கான ஹோட்டல் தொழிலாளர்களுக்கு சரியான ஊதிய வசதி இல்லை. பல ஹோட்டல் முதலாளிகள் அவர்களுக்குரிய ஊதியத்தை வழங்காமல் அவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றதொரு புகார் ஹோட்டல் தொழிலாளர்கள் மாநாட்டில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களிடம்கூட ஹோட்டல் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் ஒரு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே விரைவாக அக்குழு அமைக்கப்பட்டு குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் முடிவு தெரிவிப்பதற்குரிய வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் எண்ணப்படி அக்குழு விரைவில் அமைக்கப்படும்.

[1972 டிசம்பர் 15

திரு. அ. தேவேந்திரன் : எல்லாப் பிரச்னைகளையும் விரைவாக தீர்த்திடும் நமது அரசு நீண்ட நெடுங்காலமாக தீர்க்கப்படாமல் இருக்கிற இந்த ஹோட்டல் தொழிலாளர்கள் பிரச்னையை விரைவாகத் தீர்க்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஹோட்டல் தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியம் பற்றி அதற்கான அட்டவணையைக் கொடுப்பதில் காலதாமதம் இருந்தது. அது இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே பிரச்னை விரைவில் தீர்க்கப்படும்.

திரு. மு. சுருளிவேல் : நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டில் our first step is to demolish monopoly houses என்று கூறினார்கள். அதேபோல் தென் பாண்டி மண்டலத்தில்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா, ஹோட்டல் தொழிலாளர்களைப் பற்றியது. நேரடியாகக் கேள்வி கேளுங்கள். அதற்கு முன்னுரை வேண்டாம். ஹோட்டலுக்கு வாருங்கள் நேராக.

திரு. மு. சுருளிவேல் : பஸ்களைத் தேசியமயமாக்கும் முற்போக்குக் கொள்கையினை கடைப்பிடித்தார்கள் நம் அரசினர். இன்று இந்த நாட்டிலுள்ள முதலாளி வர்க்கத்தில் அங்கம் வகிக்கக்கூடிய ஓட்டல் அதிபர்கள் அவ்வளவு பலஹீனமான நிலையில் இல்லை. எவ்வளவோ கன்சீலியேஷன் தீர்ப்புகளை அவர்கள் தூக்கி எறிந்திருக்கிறார்கள். எவ்வளவோ தீர்ப்புக்களை அவர்கள் அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள். எனவே, இப்படி ஒரு குழு அமைக்கும்போது அதன் தீர்ப்புக்களை அமல்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் நினைவில் வைத்துக்கொள்ளப்பட்டு தக்க சமயத்தில் ஆவன செய்யப்படும்.

## மத்திய அரசுத் தேர்வுகளுக்கான பயிற்சி நிலையம்

* 192 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற மத்திய அரசுப் பணிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையத்திற்கு தேவையான தாழ்த்தப்பட்ட, மலைவாசி மாணவர்கள் முன் வருவதில்லை என்பது உண்மையா ?



1972 டிசம்பர் 15]

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 3 ஆண்டு பட்டப்படிப்பு ஒரு ஆண்டு பயிற்சிக்கும் பிறகு இந்திய ஆட்சி மற்றும் காவல் பணிகளில் வேலை கிடைக்கும் என்று உறுதி இல்லாத காரணத்தாலும், பரவிவரும் வேலை இன்மை காரணத்தாலும், அரிசன மாணவர்கள் உடனடியாக வேலையில் அமர ஆர்வமாக இருப்பதாலும், பயிற்சி நிலையத்திற்கு அரிசன மாணவர்கள் வர விரும்புவதில்லை என கருதப்படுகின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் மலைவாழ் இனத்தைச் சார்ந்த பட்டதாரி மாணவர்கள் தகுந்த எண்ணிக்கை கிடையாது. பெரும் விளம்பரங்கள் செய்தபோதிலும் பிற மாநிலங்களில் இருந்து மாணவர்கள் வராமைக்கு காரணம் தெரியவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி நிலையங்களில் 1967-ல் இருந்து எவ்வளவு மாணவர்கள் பயிற்சி பெற்றார்கள்? அதில் எவ்வளவு மாணவர்கள் தேறினார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1966–67-ல் சேர்ந்த மாணவர்கள் 42, தேர்வு எழுதியவர்கள் 42, ஆனால் ஒருவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. 1967–68-ல் சேர்ந்த மாணவர்கள் 38, தேர்வு எழுதியவர்கள் 34, போட்டிக்குத் தகுதியானவர்கள் இந்திய ஆட்சிப் பணிக்கு 6 பேர், காவல் பணிக்கு 3 பேர், வேலை வாய்ப்பு ஒருவருக்குத்தான் கொடுக்கப்பட்டது. 1968–69-ல் சேர்ந்தவர்கள் 27, எழுதியவர்கள் 27, அதில் ஆட்சிப் பணிக்கு ஒருவரும், காவல் பணிக்கு ஒருவரும் தேர்வு பெற்றார்கள். ஒருவருக்கு மட்டும் ஆட்சிப் பணியில் வேலை கொடுக்கப்பட்டது. 1969–70-ல் சேர்ந்தவர்கள் 23, எழுதியவர்கள் 23, இரண்டு பேர் ஆட்சிப் பணிக்குத் தேர்வு பெற்றார்கள், ஒருவருக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டது. 1970–71-ல் சேர்ந்தவர்கள் 25, எழுதியவர்கள் 25, அதில் இருவருக்கு வேலை கொடுக்கப்பட்டது. 1971-க்குப் பிறகு ஏழு பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. செபமாலை : ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்றவற்றிற்கு அதிகப்படியான ஹரிஜன மாணவர்கள் பயிற்சிபெற வராததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் ஏற்கனவே முதலில் பதில் சொன்னேன். பட்டதாரிகளாக இருக்கிற ஹரிஜன மாணவர்கள் ஓரளவிற்குப் பட்டம் பெற்றுவிட்ட பிறகு வேறு வேலை தேடிக் கொண்டு செல்வதில்தான் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர மேற்கொண்டு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பரீட்சைகள் எழுது வதில் ஆர்வம் காட்டுவதில்லை. எனவேதான் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இருந்தாலும் அவர்களை ஊக்குவித்து அதிகப்படியானவர் களைக் கொண்டுவர முயற்சிக்கிறோம்.

*Housing schemes for Harijans in Sanarapatty Union area*

* 193 *Q*.—THIRU K. NAGARAJAN : Will the Hon. Minister for Harijan Welfare be pleased to state the stage of the proposal to construct housing colonies to Harijans at Andipatti and Narivilapatti of Sanarapatty Panchayat Union, Dindigul taluk, Madurai district?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபோன்ற திட்டம் ஒன்றும் அரசு மட்டத்தில் நிலுவையில் இல்லை.

திரு. க. நாகராஜன் : இந்தத் திட்டத்திற்கான வேண்டுகோள் பல நாட்களுக்கு முன்பாகவே கேட்கப்பட்டிருக்கிறது. எனவே ஏழை ஹரிஜனங்களுக்கு அப் பகுதியில் இத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆண்டிப்பட்டிக் கிராமத் தில் ஹரிஜனங்கள் இல்லை என்று விவரம் இருக்கிறது. ஆனால் நரி விலாப்பட்டியில் கிட்டத்தட்ட இருபது வீடுகள் இருக்கின்றன. அதில் 12 பேர்கள் போக எட்டு பேர்களுக்கு வீட்டு மனை இல்லை. அந்த எட்டு பேர்களுக்கும் வீட்டு மனை கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

அன்னப்பநாயக்கன் குப்பத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள்

* 194 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், அன்னப்பநாயக்கன் குப்பம் காலனியில் 1—4—1972-ல் எரிந்துபோன 80 வீடுகளை மானியத் தொகையுடன் புதுப்பித்துக் கட்டும் திட்டம் எப்பொழுது முடிவடை யும் ?



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ரூ. 1,26,400 செலவில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 79 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நிலை எண் 847, ச. ந., நாள் 15—9—1972-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாண்டுக்குள் இவ்வேலை முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : முயற்சி எடுத்துக்கொண்டுள்ள முதல் அமைச்சர் அவர்களுக்கும் அரிசன நல அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும்போது இந்த ஆண்டு இறுதிக் குள்ளாக அத் திட்டத்தை நிறைவேற்றித் தரமுடியுமா? இன்னும் கட்டட வேலை ஆரம்பிக்கப்படவில்லை. கடைகால் கூட போட படவில்லை. ஆகவே இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவாவது அவற்றை முடிப்பதற்குரிய விதத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்க அரசு தனி உத்தரவு வழங்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டு என்றால் மார்ச் 31-ம் தேதி வரை இருக்கிறது. நிதி ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. அதற்குள் முடிவு அடையும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Harijan Welfare whether this method of constructing by Government houses destroyed by fire would be extended to other areas also?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மற்றயிடங்கள் தீ விபத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றால் அரசு பரிசீலித்து நிதி ஒதுக்கீடு செய்து புது வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 154, 195, எண் வினாக்கள் இரண்டும் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

சேலம் உருக்காலைத் திட்டம்

* 196 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் உருக்காலைத் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை லட்சம் டன் உருக்கு உற்பத்தி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது ?

[1972 டிசம்பர் 15

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு 1,95,000 டன்கள் கலப்பு, தனிரக எஃகு (Alloy and special steel) உற்பத்திச் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. சோ. கருணைநாதன் : சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் முழு ஆதரவாக இருக்கிறதா அல்லது இடையூறாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தை அவர்களே நிறைவேற்றுகிறார்கள்.

(சில உறுப்பினர்கள் அமைச்சர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரம் முடிகிற வரையில் அமைச்சர்களுக்குப் பின்னால் யாரும் உட்கார்ந்து பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I would like to know the exact stage in which the Salem Steel Plant stands. Also, whether it is a fact that there is inordinate delay in its execution because of non-co-operation from the State Government in regard to acquisition of lands and other things ? Also whether it is a fact that the Central Government have asked for certain facilities from the State Government and whether the State Government have given all the facilities that have been sought by the Central Government? Also, may I know how many years it will take for the Plant to achieve full production?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசு மத்திய அரசு சண்டையாக சில அரசியல்வாதிகள் உருவாக்க விரும்புகிறார்கள். நில ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே விளக்கமாக இந்த மன்றத்தில் பதில் சொல்லியிருக்கிறேன். பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களைப் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே எடுக்க முயற்சி எடுத்திருக்கிறோம். எந்தெந்த நிலங்கள் வேண்டுமென்று சொல்லு கிறார்களோ அதை மட்டும் அப்போதைக்கப்போது இறுதியாக எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். எந்த விதமான குறை பாட்டையும் நில ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரையில் மத்திய



1972 டிசம்பர் 15]

அரசினர் சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்தத் தொழிற்சாலையை நிறுவும் பொறுப்பு முழுவதையும் மத்திய அரசு எடுத்துக் கொண்டுவிட்டது. நமக்கு எந்தவிதமான பொறுப்பும் கிடையாது. அண்மையில் அந்த அமைச்சரவை அறிவித்தபடி இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக உற்பத்தி தொடங்கும் என்று அறிவித் திருக்கிறார்கள். எப்போது தொடங்கும், என்ன முயற்சிகள் எடுக்கப் படும் என்ற விவரங்கள் எல்லாம் இங்கு தெரிவிப்பது சரியல்ல என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த நிறுவனத்திற்கு பிராடக்ட் மிக்ஸ் பற்றி நிபுணர் அறிக்கை வந்ததா ? அது சம்பந்தமாக நமது அரசாங்கத்திற்குத் தகவல் உண்டா ? எப்போது இயங்கும் என்பதற்கு வேறு ஏதாவது விவரங்கள் தர முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றிய ஏராளமான விவரங்களை வெளியிட்டால் மாநில அரசு மத்திய அரசு முரண்பாடு வெளிப் படும். நமக்கு வந்த தகவல்படி ஸ்டெய்ன்ஸ்லெஸ் ஸ்டீல் 70,000 டன்; சிலிகன் 75,000 டன்; ப்ரி கார்பன் 30,000 டன்; மைல்டு ஸ்டீல் 20,000 டன்; உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, even though the State Government are not able to give other details, may I know whether they are being consulted by the Central Government at every stage and whether the Central Government have taken the State Government into their confidence and whether the Minister for Industries has been consulted by his counterpart in the Centre?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசு மாநில அரசை அப்போதைக்கப்போது இதுபற்றிக் கலந்து விவாதங்கள் நடைபெற் றிருக்கின்றன. டில்லியில் விவாதம் நடைபெறுகிறபோது நம்முடைய செயலாளர் அவர்கள் அழைக்கப்படுகிறார்கள். பிராடக்ட் மிக்ஸ் பற்றி முடிவு செய்யும்போதும், நில ஆர்ஜிதம் சம்பந்தமாகவும், மற்றச் சமயங்களிலும் மாநில அரசை அப்போதைக்கப்போது கலந்து பேசு கிறார்கள். சேலத்தில் நடைபெறுகிற இந்த நிறுவனத்தில் மாநில அரசின் பிரதிநிதி இருக்க வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் நடை பெறமுடியும், விரைவாக நடைபெற முடியும் என்ற ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறோம்.

*Notification of vacancies*

* 197. *Q.*—Dr. H. V. HANDE :
Thiru D. S. A. SIVAPRAKASAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government has directed the Director of Employment and Training to request the employers to notify vacancies well in advance and to allow the candidates sufficient time both for interview and appointment; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இது குறித்து 5—8—1971-ம் நாளிட்ட தொழிலாளர் நலத்துறையின் குறிப்பாணை எண் 30524/எப்-2/71-2ன்படி @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, may I know whether the Government are aware of the number of irregularities committed by the management in the matter of notifying the number of vacancies. Also, may I know the method by which the Employment Exchange notifies vacancies to the persons who have registered their names. For instance, when a particular person has been notified about a particular job which will last for only 15 days, he will have to register his name again. So, whether it is possible to streamline the method of sending notifications to the persons who have registered their names in the Employment Exchange.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்வி தனியார் துறை நிறுவனங்கள் வேலைக்காக நம்முடைய எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ் சேஞ்சில் இருந்து பெயர்களைக் கேட்கும்பொழுது, காலதாமதமாகக் கேட்கிறார்கள், அல்லது குறுகிய கால இடைவெளியில் கேட்கிறார்கள், ஆகவே, அவர்களுக்கு ஒரு டைரக்ஷன் கொடுத்து கொஞ்சம் முன் கூட்டியே கேட்பார்களானால் அவர்கள் பெயர்களை அனுப்பி வைக்கவும், பதிவு செய்துகொண்டவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பும் ஏற்படும் என்பதுதான் இதிலுள்ள பிரச்சினை. மற்ற விவரங்கள் இப்போது இல்லை.

@ 415–417-ம் பக்கங்களில் இணைப்பு–2 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



*Employment opportunities for physically disabled.*

* 198 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Union Government have directed the State Government to offer first priority to the disabled in the matter of recruitment to the State Services without any reference to the Employment Exchanges; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ் : உடல் ஊனமுற்றவர்களுக்கு நியமனங்களில் முன் உரிமை கொடுக்க அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்சாலைகளில் எல்லாம் அப்படிப்பட்டவர்களுக்கு ஓரளவுக்காவது வேலைகள் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து வருகிறோம். கட்டாயப்படுத்த முடியாது.

சிறைச்சாலைகளில் தயாரிக்கப்பட்ட துணி

* 199 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971–72-ஆம் ஆண்டில் தமிழக மத்திய சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளால் மொத்தம் எவ்வளவு மீட்டர் துணி நெய்யப்பட்டது ?

(இ) அவைகளின் மதிப்பீட்டுத்தொகை சிறைச்சாலைவாரியாக எவ்வளவு ?

(உ) அவைகள் எந்தெந்த வகையில் பயன்படுத்தப்பட்டன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சபை முன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : மத்திய சிறைச்சாலைகளில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் தொகை என்ன ? நெசவுத்

@ 417–418-ம் பக்கங்களில் இணைப்பு–3 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

தொழிலில் அதிகமாகப் பழக்கம் இல்லாதவர்களுக்கு அங்கு பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதா ? எவ்வளவு பேருக்கு எந்தெந்தத் தொழிற்சாலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதிலே பணி புரிபவர்களின் எண்ணிக்கை அப்போதைக்கப்போது சிறைச்சாலைகளில் இருப்பவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். எந்தெந்த சிறைச்சாலைகளில் எவ்வளவு பேர் இதிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. இந்தப் பயிற்சி பெரும்பாலும் சென்னை, மதுரை சேலம், கோவை, திருச்சி, பாளையங்கோட்டை, கடலூர், வேலூர் போன்ற இடங்களில் அளிக்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி : மத்திய சிறைச்சாலைகளில் கைதிகள் வேறு என்னென்ன கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள்? கற்று வெளியே வந்த பிறகு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கார்ப்பண்டரி தொழிற்சாலை இருக்கிறது, துணி உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை இருக்கிறது. விவசாய வேலைகளில் ஈடுபடுத்தும் வாய்ப்பும் இருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : துணி நெய்ய பயிற்சி அளிப்பதுபோல் கோரைப்பாய் நெய்கின்ற பயிற்சியும் அளிக்கப்படுமா ? இப்போதே அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

### *Soil and agricultural studies in Cauvery Delta*

* 200 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the findings of the United Nations Development Programme of the soil and agricultural studies in Cauvery Delta area?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நில நீர்த்திட்டத்தின் இரண்டாம் நிலையாக 1969–72 வரை காவிரி கயவாய்ப் பகுதியில் நிலநீர் ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஐக்கியநாடுகள் நிறுவனப்பணியாளர்கள், நிலநீர்ப்பணியில் அவர்களுக்கு நிகரான நம்நாட்டுப் பணியாளர்கள் ஆகியோரின் இணைந்த முயற்சியில் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு



ஏற்புக்காக ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டது. ஐக்கியநாடுகள் நிறுவனம் இந்த அறிக்கைக்கு ஏற்பு அளித்த பின்னரே விவரங்கள் வெளியிடப்படலாம்.

திரு. கே. கந்தசாமி : மதுரை மாவட்டத்தில் நீர்வளம் குறைவாக இருக்கிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. ஆகவே, கேரளத்தில் கடலில் வீணாகச் சென்று கலக்கும் தண்ணீரைத் தமிழகத்தில் மதுரை மாவட்டத்திற்குத் திருப்பிவிட கேரள அரசாங்கத்தோடு நம்முடைய அரசு பேச்சுவார்த்தை நடத்த திட்டம் உண்டா ? அது என்ன நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மூலக் கேள்விக்கும் நீங்கள் கேட்கின்ற துணைக் கேள்விக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது ?

### தஞ்சை மாவட்டத்தில் வாய்க்கால்கள் தூர் எடுத்தல்

* 201 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள "ஏ" பிரிவு வாய்க்கால்கள் எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை தூர் வாரப்படுகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உழவர்கள் ஆண்டு தோறும் குடிமராமத்தின்கீழ் "ஏ" வகுப்பு வாய்க்கால்களில் தூர் வாரவேண்டும். ஆனால் இப்பணி நீண்ட காலமாகச் செய்யப்படவில்லை. எனவே தஞ்சை மாவட்டத்தில் உள்ள "ஏ" வகுப்பு வாய்க்கால்களில் தூர் வாரும் பணியை நிறைவேற்ற அரசு ஒப்பளிப்பு வழங்கியது. அதன் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | தூர் வாரப்பட்ட அல்லது தூர் வாரப்பட வேண்டிய 'ஏ' வகுப்பு வாய்க்கால்களின் எண்ணிக்கை. | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1964 | 123 | ரூ. 5 லட்சம் |
| 1971–72 | 555 | ரூ. 10 லட்சம் |
| 1972–73 | 547 | ரூ. 7·5 லட்சம் |

[1972 டிசம்பர் 15

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் "ஏ" பிரிவு வாய்க்கால்களில் தூர் எடுக்கும் பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் நடைபெறுகிறது என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் விரிவான திட்டத்தை இங்கே எடுத்துச் சொல்லி, பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதையும் சொல்லியிருக்கிறார்கள். இந்த "ஏ" பிரிவு வாய்க்கால்களில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தூர் எடுப்பது என்பதை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை தூர் எடுப்பது என்று மாற்றி அமைத்தால், அங்கே இன்னும் அதிகமான அளவில் உற்பத்தியைப் பெருக்க வசதியாக இருக்கும். அதை மாற்றியமைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தூர் வார வேண்டிய காரியங்கள் விவசாயிகள் செய்ய வேண்டியதொன்றாகும். மொத்தம் இருக்கின்ற 1,555 வாய்க்கால்களில் 137 வாய்க்கால்கள் தான் பொதுப்பணித்துறையினருக்குச் சொந்தமானது. நம்முடைய அரசாங்கம் இருக்கின்ற நிலைமையை அனுசரித்து கடந்த ஆண்டு 10 லட்ச ரூபாயும், இந்த ஆண்டு 7.5 லட்சம் ரூபாயும் ஒதுக்கி அந்தப் பணிகளைச் செய்து வருகிறது. அரசாங்கம் தேவையான பங்குக்கு அதிகமாகவே செலவு செய்து வருகிறது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தூர் வாரப்பட வேண்டுமென்று இருந்தாலும், கடந்த 2 ஆண்டுகளில் பல வாய்க்கால்கள் தூர் வாரப்பட்டிருக்கின்றன.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில், கோபி வட்டத்தில் உள்ள தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்கள் பல்லாண்டுகாலமாக தூர் எடுக்கப்படாத காரணத்தால் பாசனத்திற்கு லாயக்கு இல்லாத நிலையில் இருக்கின்றன. அதை விரைவில் செப்பனிட அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்கால்கள் சேதப்பட்டு இருக்கின்றன. அதிவிரைவில் அது செப்பனிடப்படும். தண்ணீர் போதுமானதாக வரவில்லை என்ற குறை என்னிடத்தில் சொல்லப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மாதிரி தனிக் கேள்வி போடக் கூடாது. குறிப்பிட்ட அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர் பதில் சொல்கிறார்.



1972 டிசம்பர் 15]

## ராயபுரம்—தண்டையார்பேட்டை கரைப்பகுதியில் கடலரிப்பு

* 202 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை ராயபுரம்—தண்டையார்பேட்டைப் பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ராயபுரம்—தண்டையார்பேட்டை கடற்கரைப் பகுதியில் 3,500 அடி நீளமுள்ள சுவர் ஒன்று ரூ. 18,36,450 மதிப்பீட்டில் 7 கட்டங்களில் அமைப்பதற்கு ஒப்பளிக்கப்பட்டு 1, 2, 3, 7 கட்டங்களில் மட்டும் சுவர் எழுப்பப்பட்டு இதற்கிடையே எஞ்சியுள்ள 4, 5, 6 கட்டங்களில் சுவர் எழுப்பும் வேலை மீன்பிடி துறைமுகம் கட்டும் திட்டம் அமல் செய்யப்படவிருக்கும் காரணத்தால் கைவிடப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னை ராயபுரம், தண்டையார்பேட்டை போன்ற பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன் வந்துள்ளது. இதுபோன்ற கடல் அரிப்புள்ள இடங்களிலும் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அரசு ஆலோசித்து வருகிறதா என்பதையும், அப்படித் தடுப்புச் சுவர்களைக் கட்டுவதற்கு நமது மாநில அரசுக்கு மத்திய அரசு ஏதேனும் உதவி செய்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய விவரம் இல்லை. அரிப்பு ஏற்படும்போது இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீடித்துக்கொள்கிறேன்.

## பரப்பலாறு நீர்த்தேக்கம்

* 203 வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரப்பலாறு நீர்த்தேக்கக் கொள் அளவை கூடுதலாக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா?

[1972 டிசம்பர் 15

(இ) ஆம் எனில், இது குறித்து அரசின் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, தற்போது நடைபெற்று வரும் பரப்பலாறு திட்டத்தில் நங்கனியாற்றில் 6–7 சிறிய அணைக்கட்டுகள் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் ஆகின்றன. பள்ளிப்பட்டி வாய்க்கால் உடைந்து விட்டது. இத் திட்டத்தில் அது சேர்க்கப்படவில்லை. பள்ளிப்பட்டியில் அணை கட்ட வேண்டுமென்று அத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் விடுத்திருக்கிறாரா ? அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அது போன்று ஒரு வேண்டுகோளை விடுத்து இருக்கிறார்கள். அது தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. அவர் அறிக்கை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

## செங்கற்பட்டுக்கருகே மேம்பாலம்

* 204 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு அருகே சென்னை–செங்கற்பட்டு சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, செங்கற்பட்டுக்கு அருகே சென்னை–செங்கற்பட்டு சாலையில் ரயில்வே மேம்பாலம் கட்ட மதிப்பீடு எவ்வளவு என்று அரசு அறிவிக்குமா ? இதைப்போலவே தமிழ்நாட்டில் ரயில் பாதை கடக்கும் இடங்களில் மேம்பாலம் கட்டுவதற்கு தமிழக அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



1972 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டம் இப்போது மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மேம்பாலத்திற்குப் பதிலாக சப்–வே போடலாம் என்று இப்போது சொல்லப்படுகிறது. சப்–வேக்கு 27 லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே போட்ட ஓவர்பிரிட்ஜ் கட்ட வேண்டுமானால் பல கட்டங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்படும் செலவு அதிகமாகிறது. அதைக் கணக்கில் கொண்டு தலைமைப் பொறியாளர் தற்போது ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்.

In view of this the Chief Engineer has now suggested a sub-way instead of an overbridge taking into account the following advantages :—

(i) It avoids costly acquisition of lands.

(ii) It passes through low lying areas and therefore is ideally suited for sub-way.

(iii) It requires no division during construction stage as the existing road is not affected by the construction of sub-way.

## நவ்லாக் அரசாங்க விதைப்பண்ணை

* 159 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராணிப்பேட்டை அருகே உள்ள நவ்லாக் அரசாங்க விதைப்பண்ணைக்கு மேலும் நில ஆர்ஜிதம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் ? எப்போது செய்யப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சுமார் 524.16 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு இயங்கா உடமைகளைக் கேட்டுப் பெறுதல்—கையகப்படுத்தல் சட்டத்தின்கீழ் கைப்பற்றும்படி ஆணையிடப்பட்டுள்ளது (Tamil Nadu Requisitioning and Acquisition of Immovable Property Act, 1956.) நில அளவை வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. மேற்படி வேலைகள் முடிவுற்றபின் நிலச் சொந்தக்காரர்களுக்கு நிலத்தைக் கைப்பற்றுதல் பற்றி அறிவிப்புகள் அலுவலர்களால் அனுப்பப்படும்.

திரு. கே. எ. வகாப் : இந்த நவ்லாக் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்காக பல ஆண்டுகளாக முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்த நிலத்தை எடுப்பதற்கு சில தனிப்பட்டவர்கள் செய்கிற தகராறின் காரணமாக அது தாமதப்படுகிறது. ஆகவே, அரசு அதற்காக உடனடியாகத் தீவிர முயற்சி எடுத்து ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்த நவ்லாக் பண்ணை 1960-ம் ஆண்டிலிருந்து 76.39 ஏக்கர் பரப்பளவில் ஒரு பண்ணையாக இயங்கி வருகிறது. பண்ணையை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் லார்ட் மோகன் கிருஷ்ணதாஸுக்கும் மற்றும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் சொந்தமான 524.16 ஏக்கர் நிலம் அதிகப்படியாக தமிழ்நாடு 1956-ம் ஆண்டு இயங்கா உடைமைகளைக் கேட்டுப் பெறுதல், கையகப்படுத்துதல் சட்டத்தின்கீழ் கேட்டுப்பெறுமாறு வேளாண்மை இயக்குநர் ஒரு திட்டம் தயார் செய்தார். கேட்டுப் பெறும் ஆணையை எதிர்த்து நில உடமைளார்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்தனர். மேற்படி வழக்கை விசாரித்து நீதி மன்றம் சட்டத்தின்கீழ் கேட்டுப்பெறுவதற்குச் சரியான முறையில் நில உடைமையாளர்களுக்கு நோட்டீஸ் பிறப்பிக்கவில்லை என்ற காரணத்திற்காக கேட்டுப் பெறுதல் முறை செல்லாது என்று தீர்ப்புக் கூறியது. ஆகவே, நிலம் கேட்டுப்பெறுதல் குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்தது. இப்போது அரசு தீவிரமான திட்டம் தயாரித்து உடனடியாக எடுத்துக் கொள்வதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது. அதற்கு வேண்டிய ரெவின்யூ அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் கையகப்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

## எல்லாபுரம் ஒன்றியத்திற்கு துணை விவசாயக் கிடங்கு

* 160 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விவசாயக் கிடங்குக்கு இடவசதி போதாமையால், துணைக்கிடங்குக் கட்டடம் கட்டும்



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம். செங்கை மாவட்ட ஆட்சியாளர் 1972–73-ம் ஆண்டில் வகும்கப்பட்ட விவசாய மானியத்தின்கீழ் எல்லாபுரத்தில் துணை விவசாய கிடங்கு கட்டுவதற்கான செயற்குறிப்பை செங்கை மாவட்ட வேளாண்மை அதிகாரி இடம் கேட்டுள்ளார். இத்துணைக்கிடங்கு கட்டுவதற்காக ரூ. 12,208 ஒதுக்கப்பட்டுள்ளது. செயற்குறிப்பு கிடைக்கப்பெற்றதும் துணை கிடங்கு கட்டுவதற்கான நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்போது ஒதுக்கப்பட்டு இருக்கிற 12,208 ரூபாய் முதல் கட்டமாக வேலைகள் எடுத்துக் கொள்வதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, அடுத்த ஆண்டுக்குள் அந்த வேலையை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : உடனடியாகக் கட்ட வேண்டுமென்பதற்காகத்தான் கோட்ட ஆட்சியாளரிடம் ரூ. 12,208 ஒப்படைக்கப்பட்டுள்ளது. 31—1—1973-க்குள் அந்த வேலையை முடிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முடிவடையும் என்று நம்புகிறேன்.

*Tractor service by Agro-Industries Corporation*

* 205. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the tractor service provided at present by the Agro-Industries Corporation in this State?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவையின் முன் அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது போன்ற கழகங்களை எல்லாம் மாவட்டங்களிலும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்துவதற்கு இப்போது திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதை விஸ்தரிக்கவும் நடவடிக்கைகள் விரிவாக எடுக்கப்படும்.

@ 418–426-ம் பக்கங்களில் இணைப்பு—4 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, இந்த பவர் ஸ்ப்ரேயர்களை ரிப்பேர் செய்வதற்கென்று அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் மூலமாகச் சிறிய அளவிலே ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஒர்க்-ஷாப் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே வேளாண்மை துறை மூலமாக ஒன்றியங்களில் உள்ள மஸ்தூர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இருக்கும் 374 ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒவ்வொருவர் பயிற்சி பெற்று இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சியின் காரணமாகப் பழுது பார்க்கும் பணி இப்போது ஒன்றியங்களிலேயே எடுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நடமாடும் ஊர்திகள் மூலமாக அப்படி பழுதடைந்த கருவிகளைப் பார்ப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : பலவிதமான டிராக்டர்களை வழங்குவதிலே அவைகளுக்குப் பழுது நேரும்பொழுது, அந்த ஊர்தி அதற்கு வேண்டிய கருவிகள் வழங்காத காரணத்தினால் பல டிராக்டர்கள் பழுதடைந்த நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, நல்ல டிராக்டர்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நல்ல டிராக்டர்கள்தான் வழங்கப்படுகின்றன. பழுதடைந்ததையெல்லாம் பழுது பார்ப்பதற்கும், அதற்கு வேண்டிய துணைக் கருவிகளை வாங்கி வைப்பதற்கும், அக்ரோ–இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனால் நிதி ஒதுக்கப்பட்டு, அவர்கள் இப்பொழுது ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி வைத்து, அந்த வேலைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆங்காங்கு வேண்டிய துணைக் கருவிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ஜி.டி.ஆர். டிராக்டர்கள் சீக்கிரம் பழுதடைந்துவிடுகின்றன. அவற்றை பழுது பார்ப்பதற்கு சிரமாக இருக்கிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா? அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் குறிப்பு வரவில்லை. அதைப்பற்றி கவனப்படுத்தினால், அதற்கான நடவடிக்கை எடுத்து, துரிதப்படுத்தப்படும்.



## கோவில்பட்டி மண் பரிசோதனை நிலையம்

* 206 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியில் உள்ள மண் பரிசோதனைக் கூடத்தில் கடந்த ஆண்டில் எத்தனை ஆய்வுகள் நடத்தப்பட்டன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டியில் உள்ள மண் பரிசோதனைக் கூடத்தில் கடந்த ஆண்டு 34,138 மண் மாதிரிகளும், 214 நீர் மாதிரிகளும் ஆய்வு செய்யப்பட்டன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : கோவில்பட்டியில் அமைந்திருக்கிற மண் ஆராய்ச்சி நிலையம் ஜில்லாவில் ஒரு கோடியில் அமைந்திருப்பதால் மற்றப் பகுதிகளிலும் இதனுடைய பிரிவு விஸ்தரிக்கப்படுமா? அதோடு, தமிழகத்தில் எங்கெங்கே இம்மாதிரி ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழகத்தில் கோயம்புத்தூர், ஆடுதுரை, கோவில்பட்டி, கடலூர், மேலாளத்தூர், காஞ்சிபுரம், மதுரை, சேலம், பரமக்குடி, திருச்சி, ஊட்டி ஆகிய 11 இடங்களில் இந்த மண் பரிசோதனை நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. மேலும் பல திறப்பதற்கு, கூடுமான வரையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று திறக்க வேண்டும் என்று அரசு அக்கறை கொண்டிருக்கிறது. இப்பொழுதே அதற்காகத்தான் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. 1971-ஆம் ஆண்டு இந்திய அரசினால் அளிக்கப்பட்ட நடமாடும் மண் ஆய்வு ஊர்த்தி, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் பணியாற்றி வருகிறது. அண்மையில் மத்திய அரசினால் அளிக்கப்பட்ட மற்றொரு மண் ஆய்வு ஊர்தி திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டியில் விரைவில் பணியைத் துவங்க இருக்கிறது. மேலும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

THIRU B. VENKATASWAMY : Sir, in Dharmapuri district there is no soil testing unit. I want to know whether the mobile unit would be diverted to Dharmapuri District also ?

[1972 டிசம்பர் 15

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தர்மபுரி மாவட்டத்திற்கு என்று ஒரு தனி மண் ஆராய்ச்சிக் கூடம் நிறுவுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுவரையில் தாமதம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்பொழுது சேலத்தோடு தர்மபுரி மாவட்டத்தை இணைத்திருக்கிறோம். விரைவிலே துவக்குவதற்கு வேண்டிய செயற்குறிப்பு இருக்கிறது.

மதுரையில் கதர் இயக்குநர் அலுவலகம்

* 207 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மண்டல காதி இயக்குநர் அலுவலகக் கட்டடத்திற்கு மாதம் எவ்வளவு வாடகைத் தரப்படுகிறது ?

(இ) நகரின் மத்தியில் இருந்த இவ்வலுவலகத்தை தற்போது உள்ள இடத்திற்கு மாற்றக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) மாதம் ஒன்றுக்கு ரூ. 250 கொடுக்கப்படுகிறது.

(இ) முன்னாள் இவ்வலுவலகம் இயங்கிவந்த கட்டடம் பல விதங்களில் வசதிக் குறைவாக இருந்தது. எனவே, தற்போதைய இடத்துக்கு அலுவலகம் மாற்றப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : இப்பொழுது இருக்கிற காதி விற்பனை நிலையம் தொலைவிலே இருக்கிறது, அதனால் விற்பனை குறைந்திருக்கிறது என்று கூறப்படுகிறது. விற்பனையை அதிகப்படுத்துவதற்கு, மக்கள் அதிகமாக இருக்கிற கடைவீதிப் பகுதியிலே அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலில் இருந்த இடம் மக்கள் குறைவாக வருகிற குறுகலான சந்துக்குள்ளே இருந்தது. அங்கு வாகனங்கள் வருவதற்கும், அதிகமாக மக்கள் வருவதற்கும் வசதியில்லாமல் இருந்தது. அதிலே இருந்த இட வசதி 800 சதுரடிகள்தான். முதலில் மாதம் ரூ. 220 வாடகை கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது உள்ள இடத்தில் 1,700 சதுர அடிகள் இட வசதி இருக்கிறது. பொதுமக்கள் வந்து வாங்குவதற்கு வசதியான பெரிய கட்டடம். அலுவலர்கள் இருப்பதற்கும் வசதியான கட்டடம். மாதம் ரூ. 250 வாடகை கொடுக்கப்படுகிறது.



1972 டிசம்பர் 15]

பதனியிலிருந்து இனிப்பு வகைகள் தயாரிப்பு

* 208 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பதனியில் இருந்து சாக்லட், பெப்பர்மிண்ட் முதலிய பொருள்கள் செய்யும் குடிசைத் தொழில்கள் அரசாங்கத்தாரால் எந்தெந்த இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பதனியிலிருந்து சாக்லட், பெப்பர்மிண்ட் முதலிய பொருள்களைத் தயாரிக்கும் தொழில் கிராமத் தொழிலாக கீழ்வரும் இடங்களில் நடத்தப்படுகிறது :

செங்கற்பட்டு மாவட்டம், மாதவரத்திலுள்ள குமரப்பாபுரம் (சாக்லட், பெப்பர்மின்ட், பனங்கற்கண்டு ஆகியவை இங்கு தயாரிக்கப்படுகின்றன).

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர் (பனங்கற்கண்டு தயாரித்தல்).

மதுரை மாவட்டத்திலுள்ள வத்தலகுண்டு (சர்பத், பழரசம், பழப்பாகு தயாரித்தல்).

திரு. என். கிட்டப்பா : மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட காரணத்தினால் பதநீர் கள்ளாக மாற்றப்படுவது வெகுவாகக் குறைந்துவிட்டது என்பதை அறிய முடியும். எனவே, பதநீரைக் கொண்டு ஜீனி தயாரிக்கும் ஒரு முறை இருக்கிற காரணத்தினால் ஜீனி பற்றாக் குறையைப் போக்குவதற்கு பதநீரை உபயோகப்படுத்துவதற்கு அரசு ஆலோசிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பதநீரிலிருந்து சர்க்கரைதான் தயாரித்து வந்தார்கள். இதிலிருந்து தயாரிக்கப்படும் ஜீனிக்கும், கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் ஜீனிக்கும் உற்பத்திச் செலவில் வித்தியாசம் இருக்கிறது. பதநீரிலிருந்து தயாரிக்கப்படும் ஜீனிக்கு உற்பத்திச் செலவு ரூ. 1-50-க்கு மேலே ஆகிறது. அதை மார்க்கெட்டில் விற்பது என்று சொன்னால் மக்களுக்கு சல்லிசாகக் கொடுக்க முடியாது. அதன் காரணமாக அதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த மூன்று இயந்திர சாலைகளும் இப்பொழுது மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்பொழுது பொது மார்க்கெட்டில் விற்கப்படும் நிலை பதநீரினால் தயாரிக்கப்படும் சர்க்கரைக்கு இல்லை.

திரு. நி. சி. ஆ. சிவப்பிரகாசம்: பதநீரிலிருந்து தயார் செய்யப்படுகின்ற சாக்லெட், பெப்பர்மிண்ட் முதலிய பொருள்களுக்கு எக்ஸ்போர்ட் மார்க்கெட் இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? இதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பதநீரிலிருந்து உற்பத்தி செய்த சர்க்கரையை மார்க்கெட்டில் விற்க முடியாத ஒரே காரணத்தினால் இதை என்ன செய்வது என்று சொல்லி, இருந்த 25 டன் சர்க்கரையை சாக்லெட் ஆகவும், பழ ரசம், பாம் கோலா என்ற பானமாகவும் தயார் செய்து இங்குள்ள காதி விற்பனை நிலையத்தில் வைத்து அவைகளை விற்றார்கள். இப்பொழுது அந்த ஜீனி குறைந்துவிட்டது. மேலும் இப்பொழுது பதநீர் இறக்குவதற்கும் செலவு அதிகமாக ஆகிறது. காரணம், பதநீர் இறக்குகின்ற தொழிலாளிகளுக்கு முன்பு கூலி ரூ. 3.50 ஆக இருந்தது, இப்பொழுது மது விலக்கை ஒத்திவைத்த பிறகு ரூ. 7 ஆக உயர்ந்துவிட்ட காரணத்தினால், அந்த அளவுக்குப் பதநீர் சர்க்கரை உற்பத்தி செய்வது என்றால் கூட, அதனுடைய உற்பத்திச் செலவு அதிகமாக ஆகின்ற காரணத்தினால், உள்ளூர் மார்க்கெட்டிலேயே விற்பது கடினமாக இருக்கும். வெளி மார்க்கெட் ஏற்படுகின்ற அளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமா என்ற யோசனையும் இருக்கிறது. இப்பொழுது சர்க்கரை இல்லாத காரணத்தினால் கூட இது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

### *Taking over of Temples*

* 209. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any financial limit has been prescribed for taking over temples by the Hindu Religious and Charitable Endowments Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: வரையறுக்கப்பட்ட நிதிநிலை இருந்தும் சில ஆலயங்கள் இத்துறையினரால் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றன என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அறநிலையத் துறையில் கோவில்களைச் சேர்த்துக்கொள்வதற்கு வருமானத்தை வரையறுக்க வேண்டிய அவசியமில்லை என்பதை, அரசாங்கத்தின் ஒரு கொள்கையாக வைத்திருக்கிறோம். ரூ. 200-க்கு மேல் வருமானம் வருகிற கோவில்களை தற்பொழுது அரசின் நிர்வாகத்தில் எடுத்துக் கொள்வது என்ற நிலைமையில் நாம் இப்பொழுது சேர்த்துக் கொண்டிருக்கிறோம். ஏதாவது கோவில்கள் விடப்பட்டிருந்தால், அவைகளைச் சேர்த்துக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய கோயில்களின் நிர்வாகத்தை அரசாங்கமே எடுத்துக் கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அதற்குக் குறைந்த வருமானம் வரக்கூடிய கோயில்களில் இருக்கும் ஆண்டவனுக்கு சக்தி இல்லையா? சக்தி அதிகமாக இருக்கும் ஆண்டவன் இருக்கின்ற கோயில்களுக்குத்தான் மக்கள் போகிறார்களா? அப்படியானால் வருமானம் இல்லாமல் இருக்கின்ற தொழிற்சாலைகளை மூடிவிடுவதுபோல், சக்தி இல்லாமல், அதனால் வருமானம் குறைவாகக் கிடைக்கக்கூடிய கோயில்களையும் மூடிவிட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இப்போது 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய கோயில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்வது என்ற கொள்கை இருக்கிறது. அதற்காக மற்ற கோயில்களை மூடிவிட வேண்டும் என்பது சரியல்ல. வருமானம் குறைவாக வரக்கூடியக் கோயில்களுக்கு, வருமானத்தைப் பெருக்குவதற்கு வேண்டுமானால் நண்பர் துரைமுருகன் சென்று வரலாம்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய கோயில்களில் நிர்வாகத்தை அறநிலையத்துறை ஏற்றுக்கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி இல்லாமல் எந்தெந்த கோயில்களுக்கு நியாயமான பாதுகாப்பு கொடுக்க வேண்டும், மக்கள் அதிகமாக சென்று வருவதற்கு என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று பார்த்து, கோயில்களின் வருமானத்தைப் பெருக்க அறநிலையத்துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, எல்லாக் கோயில்களையும் நம்முடைய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்

[1972 டிசம்பர் 15

கீழ் கொண்டுவர வேண்டுமென்று ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் முதல் கட்டமாக 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய கோயில்களை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வருமானத்தை மட்டும் வைத்து கோயில் நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் சரியல்ல. கோயில்களின் தன்மை, எப்போது கட்டப்பட்டது, சரித்திர முக்கியத்துவம் இவைகளையும் கருத்திற்கொண்டு அந்தக் கோயில்கள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, படிப்படியாக எல்லாக் கோயில்களையும் எடுத்துக்கொள்வதுதான் அறநிலையத் துறையின் நோக்கமாக இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இன்னும் பல கோயில்களில் வட மொழியில்தான் அர்ச்சனை நடைபெறுகிறது. அதை தடை செய்து, எல்லாக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதல்ல.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக மாயூரத்தில் சில கோயில்களில் உண்டி மூலமாக வாரந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. அதற்குச் சரியான கணக்கு வைக்கப்படவில்லை. அங்கே இருப்பவர்கள் அதைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோயில்களுக்கு எல்லாம் "எக்சிகியூட்டிவ் ஆபீசர்களைப்" போட்டு கணக்குகளைச் சரியாக வைத்து நிர்வகிக்க வேண்டுமென்று கும்பகோணத்தில் இருக்கின்ற அசிஸ்டன்ட் கமிஷனருக்கு பலமுறை எடுத்துச் சொல்லியும் இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, அந்தக் கோயில்களுக்கு உடனடியாக எக்சிகியூட்டிவ் ஆபீசர்களைப் போட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, எல்லாக் கோயில்களையும் அரசாங்கமே நிர்வகிக்க வேண்டுமென்ற பொதுவான ஒரு எண்ணம் இருக்கிறது. சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற நிர்வாக அதிகாரிகளின் மாநாட்டில் கூட எல்லாக் கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகளைப் போட வேண்டுமென்ற இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது எந்த அளவுக்கு விரைவில் முடியுமோ அந்த அளவுக்குச் செயல்படுத்தப்படும்.



1972 டிசம்பர் 15]

அப்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய யோசனையும் கருத்திற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, வருமானம் குறைந்த கோயில்களின் வருமானத்தைப் பெருக்க, அந்தந்த கோயில் நிர்வாகத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சில கோயில்களில் வருமானம் இல்லை; பிற்படுத்தப்பட்ட கோயில் என்று சொல்லிக் கொண்டு, வரக்கூடிய வருமானத்தை எல்லாம் அங்கிருப்பவர்களே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட கோயில்களில் கணக்குகள் சரியாக வைக்கப்படுகின்றதா, எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை அறிய ஒரு சி.ஐ.டி.யை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு இந்தத் தகவல் தெரிந்திருப்பதால், எந்த எந்தக் கோயில்களில் வருமானம் சரியாகக் காட்டப்படாமல் கையாளப்படுகிறது என்று குறிப்பிட்டுச் சொல்வாரானால் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, அறநிலையத் துறையின் கீழ் வராத கோயில்களையும் இந்தத்துறையில் கொண்டு வருவதற்கு, குறிப்பாக கோவை மாவட்டத்திலுள்ள சில குறிப்பிட்ட கோயில்களைக் கொண்டு வருவதற்கு சிறப்பு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, 200 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் உள்ள கோயில்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒருசில இடங்களில்

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

திராவிட முன்னேற்றக் கழக "நம்நாடு" பத்திரிகை நிறுத்தப் பட்டதும், அதனுல் தொழிலாளர்கள் வேலே இழந்திருப்பதும் குறித்து.

MR. DEPUTY SPEAKER: The hon. Member, Thiru R. Ponnappa Nadar has given notice of the following matter under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules :—

'The sudden closure of 'NAM NADU' (Tamil Daily) the Official Organ of the D.M.K. Party without any notice to the employees. As a result of the closure many of the employees were thrown out of employment.'

The hon. Member, Dr. Hande, has also given a similar notice.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir, I have given notice of the following motion.

'That the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, viz., the sudden closure of 'Nam Nadu' and the consequent hardship to many employees who have been thrown out of employment.'

Sir, this newspaper was started on 15th June 1953 and it was functioning properly. Suddenly on 6th December 1972 this newspaper was closed and no notice was served on the workers. The Labour Inspector also conducted an enquiry and he also submitted certain reports but nothing tangible has been achieved so far. So far as the staff are concerned, they are put to very great difficulties. There are seven compositors, one Sub-Editor, one Store-Keeper, one binder, one clerk, etc. No reason was given for the sudden closure. So far as this institution is concerned, workers are put to very great loss and difficulties. No notice was given and no wages were paid and there was sudden closure. So I would request the Government to adjourn this House to discuss this matter so that relief may be given to the workers who have been thrown out of employment. Their plight is pitiable and I hope the Hon. Chief Minister and his Government would take prompt and immediate steps so that the sufferings of these people are alleviated. I request the Hon. Chief Minister to make a statement in regard to this matter.



டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்லி அதன் மூலமாகச் சபையின் நடவடிக்கையை ஒத்திவைக்க வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

இந்த "நம் நாடு" என்ற பத்திரிக்கை பல ஆண்டுகளுக்கு முன்பு, 1953-ம் ஆண்டு, அண்ணு அவர்களால் துவக்கப்பட்டு நடந்துவந்த பத்திரிக்கை என்று கருதுகிறேன். அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு அபிஷியல் ஆர்கனுக, ஆளும் கட்சியினுடைய கழகத்தினுடைய அபிஷியல் ஆர்கனுக இருந்து வந்தது. அதே நேரத்தில் அவர்களுக்கு வேறு பல பத்திரிகைகள் இன்னும் இருக்க லாம். இருந்தாலும் கூட இது ஏன் மூடப்பட்டது என்று தெரிய வில்லை. இதற்கு சர்குலேஷன் இல்லை என்ற காரணத்தாலா அல்லது வேறு காரணத்தாலா அல்லது மற்ற பத்திரிகைகளுக்கு வலிவு கொடுக்க வேண்டியது அதனுடைய சர்குலேஷன் குறையக் கூடாது என்பதற்காகவா என்று நமக்கு எல்லாம் தெரியவில்லை. அது தான், என்ன மோடிவ் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொழிலாளர்கள் பிரச்னையாக இதைக் கொண்டு வருகிறீர்கள், மோடிவ்வைப்பற்றி அவசியம் இல்லை.

THIRU M. A. LATHEEF: There are norms and ways in which Rule 42 should be invoked. Rule 42 can be invoked exclusively for the purpose of enabling a discussion. Whether that rule is applied or not the purpose of bringing a motion under Rule 42 is only to draw the attention of Government and extract a statement from the concerned Minister. So far as that matter is concerned, it must be a matter of urgent public importance affecting major portion of the public and thereby inviting the immediate attention of the House as well as immediate action on the part of Government. Now in this case while raising a point of order the reasons for invoking Rule 42 has been adduced by my learned friend here wherein some political matter has been raised. I would like to know whether probing into the mind of a particular party will come under Rule 42?

MR. DEPUTY SPEAKER: You are raising a very delicate question. It will amount to questioning the decision of the Chair.

[1972 டிசம்பர் 15

THIRU M. A. LATHEEF : I want your clear decision as otherwise we cannot function.

MR. DEPUTY SPEAKER : The adjournment motion has been taken up by the Chair for consideration I am asking Hon. Members to explain under what circumstances they want to adjourn the other business of the House to discuss this matter. The hon. Member has explained and the Hon. Minister will give reply. Then the Chair will give its ruling.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆகவே, எந்த காரணத்தின் அடிப்படையில் நடந்தது என்று கேட்கிறேன். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்திருப்பதன் அடையாளம் எங்களுக்கு எந்தக் கட்சியின் மீதும் பாரபட்சம் இல்லை என்பதற்காகத்தான். ஆளும் கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நடுநிலையாளர்களாக இருந்தாலும் தொழிலாளர்கள், அவர்களுடைய நலன்கள் என்று வரும்போது அதை எல்லாம் பார்ப்பது இல்லை. இதைப்போல அன்று சுதேசமித்திரன் மூடிக்கிடந்தபோது எதிர்க்கட்சி சார்பாக ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவந்தோம். இன்றைக்கு நவமணிக்காக கூட ஒரு காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பொதுவாக இந்தப் பத்திரிக்கைகள் மூடுவது சர்குலேஷன் அடிப்படையிலா? அல்லது வேறு ஏதாவது அரசியல் அடிப்படையிலா என்று மிக விளக்கமாகப் பதில் வந்தால் அதன் பேரில் நம் சபைத் துணைத் தலைவரவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரில் முடிவு சொல்ல வேண்டும் என்று கருதுகிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : டாக்டர் ஹாண்டே அவர்களும் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் முக்கியமாகக் கேட்கப்பட வேண்டியது தொழிலாளர் பிரச்னையாகும். அதை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆனால் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசிய பேச்சில் தொழிலாளர் மீது கவலை இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ பத்திரிக்கைப் போட்டி இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே தொழிலாளர் நலன் பற்றி நாட்டம் இருக்குமானால் அவர்களுடைய பாதுகாப்பைப் பற்றிச் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானமாகும்.



1972 டிசம்பர் 15]

டாக்டர் எச். வி. ஹாண்டே : பொதுவாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிற நேரத்தில் அரசாங்கத்தின் தகவல்கள் மட்டும் பெறப்படுவதில்லை. அதற்கு விதி 41 இருக்கிறது. இது விதி 42ன் கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட்டு ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. ஆகவே தொழிலாளர் பிரச்னையை நாங்கள் கிளப்பி இருக்கிறோம். ஒரு பகுதியை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பெயர்களை எல்லாம் நானும் படித்தால் ரெப்படிஷனாக இருக்கப் போகிறது என்பதற்காகத்தான் நான் அந்தத் தொழிலாளர்கள் லிஸ்டை எல்லாம் படிக்கவில்லை, இதற்குள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று குறுக்கிட்டு சொல்லப்படுகிற கருத்துக்கள் தடுக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக இதைச் சொல்லுகிறேன். நாங்கள் கூறுவதைக் கேட்டு விட்டு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கேட்கப்படவேண்டிய ஒன்று தானா என்று துணைச் சபாநாயகர் சொல்லட்டும்; நாங்கள் கட்டுப்படுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூல் 42 என்று சொல்லும்போது அதன் ப்ரொவிஷன்ஸ் ரொம்ப கிளியராக இருக்கின்றன. 'Matter of urgent public importance'. பத்திரிக்கை நிறுத்தப்படுவதால் தொழிலாளர் பிரச்னை வருகிறது. அதனால் இன்னொரு பத்திரிகை வளருகிறதா தளருகிறதா என்பது is not a matter of public importance. The House has no concern for it.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரில் பதில் சொல்ல வேண்டியது அமைச்சர். ஒத்திவைப்புத் தேவை தானா இல்லையா என்று பார்த்து ரூலிங் பிறப்பிக்க வேண்டியது பேரவைத் துணைத் தலைவர். ஆனால் இந்த நேரத்தில் இன்னொரு கட்சியிலிருந்து பாயிண்ட் ஆப் ஆர்டர் கொண்டு வருவதற்கு ரைட் இருக்கிறதோ இல்லையோ பல முறை இது மாதிரி கடந்த காலங்களில் கொண்டு வந்திருக்கிறோம். இப்படிப்பட்ட கேள்வி இடையில் எழுப்பியது இல்லை. வரலாற்றில் கிடையாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பேரில் சொல்லப்பட்ட விஷயங்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் இந்த மாதிரி பிரச்னைக்கு அப்பாற் சென்று பேசப்படுவது பற்றி பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கிளப்புவதற்கு உரிமை இருக்கிறது. ஆகவே ஒத்திவைப்புத் தீர்மானத்தின்

பேரில் இஷ்டம் போல் எதை வேண்டும் என்றாலும் பேசலாம் என்று அறுதியிட்டுக் கூறுவது முறையல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் பதிலைக் கொடுக்கலாம். ஒத்திவைப்புத் தீர்மானத்தின் போது இப்படிப்பட்ட பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது என்பது ஒரு ப்ராக்டிசாகப் போய் விட்டால்...

MR. DEPUTY SPEAKER: I am not allowing it. I have not appreciated it also.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பது பற்றி முடிவு எடுப்பது பேரவைத் துணைத் தலைவர். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான காரணங்கள் என்று இப்போது கேட்டிருக்கிறார்கள்? காரணங்களைச் சொன்ன தற்குப் பிறகு அவசியம் இருக்கிறதா என்பதைப்பற்றி முடிவுகட்ட வேண்டியது துணைத் தலைவர். பாயிண்ட் ஆப் ஆர்டரை அனுமதிப் பது துணைத் தலைவர். ஆகவே அத்தனைக்கும் தீர்ப்பு அளிக்க வேண்டியவர் துணைத் தலைவர்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். எந்த அளவு அது அவசரமும் முக்கியத் துவமும் வாய்ந்தது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பதில் அளிக்க வேண்டியது அமைச்சர் அவர்கள். தீர்ப்பு வழங்க வேண்டியது பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். இடையில் ஒரு அங்கத்தினர் குறுக்கிட்டுக் கூறுகிறார் என்றால் அமைச்சரவர்களுக்குப் பதிலாக இவர் பதில் கொடுக்கிறார் என்று கருதப்படுமே தவிர வேறு விதமாக எடுத்துக் கொள்ள முடியாது. அது மட்டுமல்லாமல் துணைத் தலைவர் அனுமதிக்க வேண்டியதைப்பற்றிக் கேட்பது முறையா? நண்பர் திரு. லத்தீப் அவர்கள் கூறியது முறையற்றது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அவர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னை சரியல்ல என்று சொல்வதும், அவர் நீங்கள் கூறியது சரியல்ல என்று சொல்வதும் சரியானதல்ல. ஒழுங்குப் பிரச்னைக்கான கருத்தைத்தான் நீங்கள் சொல்லலாமே தவிர முரண் பட்டது என்றோ இல்லை என்றோ சொல்வது சரியல்ல only the Chair has got the right to decide that.



ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான காரணங்களை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டியது தலைவரின் பொறுப்பாகும்.

* மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. ஹாண்டே அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலுள்ள விஷயத்தைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். இப்படித்தான் ஒவ்வொரு விஷயத்தி லும் உண்மை ஒன்று இருக்க, அதற்கு நேர் மாறாக ஒரு விஷயத்தைச் சொல்வது என்ற போக்கினை மேற்கொள்வதாகத் தெரிகிறது. இது சபைக்கு நல்லது அல்ல. யாரிடத்தில் இவர்கள் அக்கறை தெரிவிக்கத் தீர்மானம் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கும் பலனளிக்காது.

"நம்நாடு" இதழ் மிகுந்த நட்டத்தில் நடந்து கொண்டிருந்தது. ஆகவே, அதுபற்றி பரிசீலிப்பதற்கு ஆறு மாதத்திற்கு முன்பே தி.மு.க. பொதுக் குழுவால் ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. அதைப் பற்றி அந்தக் கமிட்டியினர் பரிசீலனை செய்து, "நம்நாடு" இதழை நிறுத்தி விடவேண்டும், லாபம் இல்லை யென்றாலும் பெருமளவில் நட்டம் வந்து கொண்டிருக்கிறது, அந்த நட்டத்தைத் தவிர்க்க அதை மூடிவிடுவதுதான் சரி என்று சொன்னார்கள். அதன்பேரில்தான் அதை மூடிவிட முடிவெடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நோட்டீசே கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். பொதுவாக, எந்தப் பிரச்சினையை வலியுறுத்துவதாக இருந்தாலும் அதற்கு ஆதாரம் வைத்துக் கொண்டு அவர்கள் அந்தக் கருத்தைச் சபையில் சொன்னால் அது அவர்களுக்கும் பெருமை, சபைக்கும் பெருமை. பிரச்சினை தீர வழி கிடைக்கும். அதுபற்றிய விவரங்களை நான் இப்போது இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். 11—12—1972 அன்று கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச்செயலாளர் டாக்டர் நாவலர் அவர்களுக்கும் "நம்நாடு ஊழியர்கள் வணக்கத் துடன் தெரிவிக்கும் வேண்டுகோள் "என்று மடல் மூலமாகத் தந்திருக்கிறார்கள்." ஐயன்மீர், வணக்கம். கடந்த பல ஆண்டுகளாக நமது நம்நாடு அலுவலகம் நடத்தப்பட்டுவரும் நெருக்கடியான நிலையை ஒட்டியும், எங்களுடன் நிர்வாகியும் அவ்வப்போது கலந்து பேசியதற்கேற்பவும், துணைப் பொதுச்செயலாளர் மாண்புமிகு

[திரு. என். வி. நடராசன்] [1972 டிசம்பர் 15

என்.வி.என். அவர்கள் முன்னிலையில் நாங்களும், நிர்வாகியும் சம்பந்தப்பட்ட லேபர் ஆபீசரிடம் கலந்துபேசி கருத்தறிந்ததற் கேற்பவும், நம்நாடு இதழ் 9—12—72 ஆம் நாள் முதல் நிறுத்தப் பட்டதாக நிர்வாகியால் எங்களுக்கு முறைப்படி அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி எங்களுக்கான நோட்டீஞ் காலமான இரண்டு மாதம் கணக்கிடப்பட்டு 8—12—72 வரையிலான சொச்சச் சம்பளத்தை 9—12—72 அன்று அனைவரும் பெற்றுக் கொண்டோம்.

எங்கள் சர்வீஸ்களுக்குத் தகுந்தாற்போல் சேரவேண்டிய சட்டப் படியான கிராஜுயுடி, லீவ் சம்பளம், மற்றுமுள்ள முறைப்படியான தொகைகளை 9—12—72 முதல் எங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இரண்டு மாத நோட்டீஸ் காலமான 8—2—1973 ஆம் நாளுக்குள் கணக்குத் தீர்த்துக் கொடுப்பதாக நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதன்படியே நாங்கள் ஒப்புக் கொண்டுள்ளோம். இத்தனை ஆண்டுக் காலம் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக் கிடையிலும் எங்களுக்குப் பேராதரவு அளித்த தங்களுக்கு எங்கள் பணிவான வணக்கத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்" என்று குறிப்பிட்டு அந்த மடலில் எல்லோரும் கையெழுத்துப்போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஒருவர்தான் கையெழுத்திடவில்லை.

இந்த ஒப்புதல் முடங்கலில் 11 பேர்கள் கையெழுத்திட்டிருக் கிறார்கள். இரண்டுமாதம் அவர்களிடம் வேலை வாங்கிக் கொண்டு சம்பளம் கொடுக்கலாம். அப்படியின்றி வேலையில்லாமல் இரண்டு மாதச் சம்பளம், க்ராஜுயுடியும் ஒவ்வொருவருக்கும் கொடுப்பதற்குக் கணக்கிடப்பட்டு ஒருவருக்கு 2,477 ரூபாயில் இருந்து 6,941 ரூபாய் வரை—ஆக மொத்தம் ஏறத்தாழ 56 ஆயிரம் ரூபாய் கணக்கிட்டு, இந்த் இரண்டு மாதங்களுக்குள் அளிக்கப்பட இருக்கிறது. ஆக, இவ்வளவு விவரங்களையும் பொறுப்புள்ள தலைவர்கள் தெரிந்து கொண்டு அவர்கள் கருத்தை வலியுறுத்தியிருந்தால் நன்றாக இருக்கும். எந்த விஷயத்தைப் பார்த்தாலும் ஆதாரம் இல்லாமல் பேசுவதன் காரணமாகத்தான் கட்டிடம் சரிந்து விழுவதுபோல எங்களுக்கு எதிர்தரப்பிலே உள்ள தலைவர்களின் போக்கு இருந்து வருகிறது. எதிர்காலத்திலாவது இந்த நிலை வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அரசியல் நோக்கத்தோடு இந்தத் தீர்மானத்தைக்



1972 டிசம்பர் 15] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கொண்டுவந்திருப்பதுபோலக் கூறியிருக்கிறார்கள். ஆதாரமின்றி கொண்டு வந்திருப்பதாக கூறியிருக்கிறார்கள். அமைச்சர் அவர் களிடத்தில் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். அவர்களுக்கு என்றைக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது, சட்டப்படியாக கால கெடு கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஒன்பதாம் தேதியே நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் 11 பேர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள கடிதத்தைத்தான் நான் படித்தேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இரண்டு மாத நோட்டீஸ் கொடுக்கப்பட்டதா? காரணம் இதை அரசியல் நோக்கத்தோடோ, ஆதாரமின்றியோ கொண்டுவரவில்லை. எங்களுக்குக் கிடைத்த தகவல்களின்பேரில்தான் கொண்டுவந்தோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இவ்வளவு விளக்கம் அளித்த பிறகும் ஒருவேளை காதில் வாங்கிக் கொள்ளாமலோ என்னவோ மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் முன்பு சொன்ன பிரச் சினையையே இங்கு எடுத்துச் சொல்கிறார். நல்லவேளையாக இதற்கு ஒரு நீதி விசாரணை கோரவில்லை. தொழிலாளர்களுக்கு 9—12—72 அன்றே நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"நமது நம்நாடு நாளிதழ் கடந்த பல ஆண்டுகளாகவே கடுமையான பொருளாதார நெருக்கடியுடன் பெரும் நஷ்டத்தில் நடந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். இனியும் தொடர்ந்து அதேபோல் பெரும் நஷ்டத்தில் இதழை நடத்துவதற்கு இயலாது என்று ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு நிர்வாகம் முடிவு செய்கிறது. எனவே, இன்றுமுதல் (9—12—72) நம்நாடு இதழ் வெளியீடு நிறுத் தப்படுவதுடன் நிறுவனமும் மூடப்படுகிறது என்பதும் இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது." என்பதாக நோட்டீஸ் நம்நாடு நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் பணியாற்றி வந்த திரு. இராமலிங்கம், திரு. சங்கரநாராயணன், திரு. ஏ. ஜே. ராபர்ட், திரு. எஸ். இராமச்சந்திரன், திரு. கே. முத்துவேலு, திரு. எம். கணபதி, திரு. கே. குப்புசாமி, திரு. எல். கோபாலன், திரு. எம். செங்குந்துராம், திரு. எம். சண்முகம், திரு. எஸ். தேவராஜன், திரு. கே. சிவஞானம் ஆகிய பன்னிரண்டு பேர்களும் நோட்டீஸ் பெற்றுக்

கொண்டதற்கு கையொப்பமிருக்கிறது. ஆகவே நோட்டீஸ் கொடுக் கப்படவில்லை என்கிற புகாருக்கு இடமில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதற்குப் பிறகு அவர்களுக்குச் சேர வேண்டிய ஊதியம், க்ராஜுயுடி சம்பந்தமாகவும் கணக்கிடப்பட்டு ரூ. 55,740-67 காசு அவர்களுக்கு இரண்டு மாத காலத்திற்குள் தரப்பட இருக்கிறது. இதற்கும் அந்தத் தொழிலாளர்கள் தங்களது ஒப்புதலை அளித்துள்ள கடிதத்தைத்தான் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் படித்துக் காட்டினர்கள்.

மேலும் 9—12—72 அன்றைக்கு, "ஐயா, நமது நம்நாடு அலுவல கத்துக்குத் தொடர்ந்து ஏற்பட்டு வரும் கடுமையான பொருளாதார நெருக்கடியின் காரணமாக இன்று முதல் நம்நாடு நிறுத்தப்படுவ தாகவும், இன்று முதற் கொண்டு இரண்டுமாத காலத்தை சட்டப்படி எங்களுக்கான நோட்டீஸ் காலமாகக் கொள்ளுமாறும் தாங்கள் இன்று அறிவித்து இருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறேம்.

நம் அலுவலகத்துக்குச் சம்பந்தப்பட்ட லேபர் ஆபீசரிடம் நாம் கலந்து பேசிய விவரப்படி, முறைப்படி எங்களுக்குச் சேர வேண்டிய கிராஜுயுடி குளோசர் காம்பென்சேஷன், லீவ் சம்பளம் முதலியவை களை எங்களுக்கு இன்று அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு மாத நோட்டீஸ் காலமான 8—2—1973க்குள் தாங்கள் தெரிவிக்கும் நாளில் முறைப்படி பெற்றுக் கொண்டு கணக்குத் தீர்த்துக் கொள்கிறேம் என்பதை இதன் மூலம் ஏற்று ஒப்புக் கொள்கிறேம்" என்பதாகத் தொழிலாளர்கள் கையொப்பமிட்டு அளித்துள்ள ஒப்புதல் முடங்கல் ஒன்றும் இருக்கிறது.

ஆகவே, அதற்குமேல் எந்தப் பிரச்சினையும் இல்லை. திரு. ஹாண்டே அவர்கள் சொன்னர், ஏதோ சில பத்திரிகைகள் நடப் பதற்காக இந்தப் பத்திரிகையை மூடுகிறர்கள் என்று. கழகத்தினுடைய பொதுக் குழுவிலே, யாரோ சில அதிருப்தி அடைந் தவர்கள் இருந்தால், அவர்கள் கேட்க வேண்டிய கேள்வியை திரு. ஹாண்டே அவர்கள் கேட்டிருக்கிறர்கள். தெரிந்தோ, தெரியாமலோ ஹாண்டே அவர்கள் கேட்டிருக்கிறர்கள். எங்கே யாரேனும் வெளியிலே பேசுவார்களோ, ஏதோ சில பத்திரிகைகளை நடத்து வதற்காக கட்சியினுடைய அதிகார பூர்வமான பத்திரிகையை மூடி விட்டார்களென்று பேசுவார்களோ என்று, அதற்கு விளக்கம்,





இன்றே, முன்கூட்டியே, தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையின் காரணமாகத்தான் திரு. ஹாண்டே அவர்கள் இதைக் கிளப்பியிருக்கிறர்கள். எங்கள் மீது அவ்வளவு அன்பு அவர்களுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் அறியாமல் இல்லை. இதற்காக, நாங்கள் யாருமில்லாது, ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஏறத்தாழ 6, 7 மாதங்களுக்கு முன்பு, இப்பொழுது அல்ல, அப்பொழுதே (குறுக்கீடு) அக்டோபருக்கு முன்பே அமைக் கப்பட்டு, அந்த குழு "நம்நாடு" இதழைத் தொடர்ந்து நடத்த முடியுமா என்கின்ற அந்தப் பிரச்சினையை மிக ஆழமாக ஆராய்ந்தது. மாதம் ஒன்றுக்கு ரூ. 3,000, ரூ. 4,000 நஷ்டத்தில் அந்தப் பத்திரிகையை நடத்த வேண்டிய அவசியம் இல்லையென்ற காரணத்தினலும், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 30,000, ரூ. 40,000 நஷ்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத காரணத்தினலும், இது நிறுத்தப்படுவதைத் தவிர வேறு வழியில்லையென்று திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுவிற்கும், பொதுக்குழுவிற்கும் பரிந்துரை செய்தது. அதைப்பற்றி முடிவு செய்ய, தலைவருக்கும், பொதுச் செயலாளருக்கும் செயற்குழு அவர்களுடைய அதிகாரத்தை வழங்கியிருக்கிறது. அதை ஒட்டித்தான் நிர்வாகிகள் அந்த நடவடிக்கையை எடுத்தார்கள். இதனல் தொழி லாளிகள் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் அரசாங்கம் நிச்சயம் பார்த்துக் கொள்ளும் என்ற உறுதியினை நான் தெரிவித்துக்கொள் கிறேன். ஆக, இவ்வளவு தூரம் விவாதித்த பிறகு இந்த அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய தேவையில்லை யென்று தலைவர் அவர்களே, தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர், முதலமைச்சர் ஆகியோர் தந்த விளக்கங் களுக்குப் பிறகு, இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லையென்று கருதி, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (3) அரசினர் தீர்மானம்

### (அ) விதி 41(3)ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே: சட்டப் பேரவையின் விதிகளின் 244-வது விதி யின்கீழ் "பேரவையின் 41-வது விதி பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்

தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (4) கவன ஈர்ப்பு

### (அ) திராவிட முன்னேற்றக் கழக முன்னணி உறுப்பினர்களின் கடைகள் சூறையாடப்பட்டதன் காரணமாக திருச்சிராப்பள்ளி நகருக்குள்ளும் வெளியிலும் நிலவும் பதட்டநிலை குறித்து.

THIRU V. M. ABDUL JABBAR: Sir, I wish to call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, namely, the tension prevailing in and around Tiruchirappalli Town subsequent to the looting of the shops belonging to leading members of D.M.K.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 11—12—72 அன்று திருச்சியில் மாணவர்களுடைய ஊர்வலமும், அர்த்தாலும் நடைபெற்று மாணவர்கள் கூட்டம் பிற்பகல் சுமார் 1-30 மணிக்கு முடிந்த பின்பு சில வன்முறைச் செயல்கள் நிகழ்ந்துள்ளன. பிற்பகல் சுமார் 2 மணிக்கு சுமார் 50 பேர் கொண்ட கூட்ட மொன்று இஸ்மாயில் பார்க்கில் இருந்து புறப்பட்டு மெயின் கார்ட் கேட் அருகிலுள்ள போக்குவரத்து மரக்குடைக்கு பெட்ரோல் ஊற்றித் தீயிட்டனர்.

பிறகு அந்தக் கூட்டம் திருச்சி நகர 29-வது வட்ட தி.மு.க. கிளைச் செயலாளர் திரு. பி. எல். எஸ். சிங்காரம் அவர்களுக்கு உரிமையான "அன்பு லாட்ஜ்" என்ற கட்டடத்தைத் தாக்கினர். அந்தக் கட்டடம் பூட்டப்பட்டிருந்தாலும் கூட அதன் கதவுகள் இடைவெளி கொண்ட கதவாக (கொலாப்ஸிபில் கேட்டாக) இருந்த காரணத்தால் அந்தக் கதவுகளின் மூலமாக கற்களை எறிந்து கண்ணாடி சன்னல்களையும், படங்களையும், சேதப்படுத்தினர். இந்தத் தாக்குதலின் விளைவாகச் சுமார் ஓர் ஆயிரத்திற்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று மதிப்



பிறகு இந்தக் கூட்டம் தி.மு.க.வில் முக்கியப் பிரமுகர்களான திரு. பி. பாண்டுரங்கன், திரு. பி. கஸ்தூரி ரங்கன் ஆகியவர்களுக்கு உரிமையான "நாதன் அண்டு கம்பெனி" என்ற கட்டிடத்தைத் தாக்கினர். அந்தக் கட்டிடம் பூட்டப்பட்டிருந்தாலும் கூட பூட்டை உடைத்து கட்டிடத்திற்குள் கூட்டத்தினர் சென்று அங்கிருந்த கழகத் தலைவர்களின் படங்களையும் மற்றப் படங்களையும் மற்றுமுள்ள பொருள்களையும் உடைத்துச் சேதப்படுத்தினர்.

அதன் பிறகு திருச்சி நகர தி.மு.க. செயலாளர் எஸ். ஏ. ஜி. ராபி அவர்களின் ஒலிபெருக்கிக் கடையைத் தாக்கினர். இந்தக் கடை பூட்டப்பட்டிருந்தது. ஆனால் கூட்டத்தினர் பூட்டை உடைத்து உள்ளே சென்று அங்கிருந்த ஒலிபெருக்கிக் கருவிகள், படங்கள், தொலைபேசி, மற்றப் பொருள்களை யெல்லாம் உடைத்து நாசப்படுத்தினர். மேலும் அங்கிருந்து ஏராமான பொருள்களைச் சூறையாடிச் சென்றனர். இந்த தாக்குதலின் விளைவாக 74 ரிக்கார்டுகள், 2 ஒலி பெருக்கி மைக்குகள், 1 ஆம்பிளிஃபையர், ஒரு ரிக்கார்ட் பிளேயர்: 30 சீரியல் விளக்கு செட்டுக்கள் ஆகியவை திருடு போய்விட்டதாகத் தெரிகிறது. இந்தத் தாக்குதலின் விளைவாக சுமார் ரூ. 10,000 நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக அதன் உரிமையாளர்கள் புகார் கொடுத்துள்ளார்கள். இந்தப் பல்வேறு வன்முறைச் செயல்களுக்கும் போலீசார் வழக்குகள் பதிவு செய்து இதுவரை 12 பேர்களைக் கைது செய்துள்ளார்கள். "ராபி" கடை தாக்குதலில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. வழக்குகள் புலன் விசாரணையில் இருக்கின்றன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, திருச்சி போன்றிருக்கிற பெரிய நகரிலேயே தொடர்ச்சியாக, 3, 4 இடங்களில் வன்முறையாளர்களால் கட்சிக்காரர்கள் தாக்கப்பட்டும் காவலர்கள் அதைத் தடுக்காதது எங்களுக் கெல்லாம் பெருத்த அச்சத்தைத் தருகிறது. அது மாத்திரமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள், அச்சுறுத்தப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். காவலர்களும் தாங்கள் பலமான குறைபாடுகளுக்கு ஆளாகி விட்டதனால், இம்மாதிரியான விஷயங்களில் ஒதுங்கி நிற்கின்றார்களோ என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது. இந்த அச்சத்தைப் போக்க, இம்மாதிரிச் சம்பவங்களில், அரசு காவலர்களுக்கு தக்க தாக்கீது பிறப்பிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முதலமைச்சர் அவர்களுக்கு விடுக்கின்றேன்.

[1972 டிசம்பர் 15

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது போன்ற வன்முறை வெறியாட்டங்களில் வன்முறையாளர்கள் ஈடுபடுகின்ற பொழுது போலீசார் அவ்வப்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளுகின்றார்கள். ஆனால், சில நேரங்களில், சில இடங்களில், திடீரென்று, மின்னல் வேகத்திலே, இம்மாதிரி நடைபெறுவதால், போலீசாரால் அவைகளைத் தடுக்க முடியவில்லை. எதிர்பாராது நடைபெறும்போது கண்காணிப்பைச் செய்வதற்கு இயலாத நிலையிலேதான் போலீசார் இருக்கிறார்கள். ஆனால், நிகழ்ச்சிகள் நடைபெற்ற சில இடங்களிலே, மீண்டும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அந்த இடங்களிலே, தண்டிக்கப்பட்டும் இருக்கிறார்கள். சாதாரணமாக, போலீசார் இங்கே இன்னது நடைபெறும் என்று நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் இன்னின்ன இங்கிங்கு நடைபெறும் என்று முன்கூட்டியே போலீசார் அறிந்துகொள்வது எல்லா நேரங்களிலும் இயலாது என்பதை நாம் மறந்திட முடியாது.

ஊர்வலம் நடந்து, அது கலைந்து சென்ற பிறகு, வன்முறையாளர்கள் சிலபேர் திட்டமிட்டு இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். பெரிய கலவரங்கள் செய்தல், திருட்டு, கொள்ளை என்கின்ற அளவுக்கு திருச்சி நகரத்திலே இந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது. போலீசார் புலன் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் மீது வழக்குகள் தொடரப்படும் என்று மாமன்றத்திற்கு உறுதி அளிக்கின்றேன்.

## (ஆ) சென்னை நகரில் ஏற்பட்ட மர்ம வெடிவிபத்தும் அதன் விளைவுகளும் குறித்து.

THIRU M. A. LATHEEF: Sir, I wish to call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, namely, the mysterious explosion of a bomb of a mysterious type in Madras City and the consequent death of a lady and the serious injuries to many.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ராயபுரம், பழைய ஆட்டுத் தொட்டிச்சாலை (ஸ்லாட்டர் ஹவுஸ்





சாலை, எண் 26 ஆஞ்சநேயர் நகர், 6-வது சந்தில் 12—12—1972-ல் மாலை சுமார் 4-30 மணிக்கு வெடி விபத்து ஒன்று ஏற்பட்டது. இதன் விளைவாக மாதம்மாள் (வயது 10) ராணி (வயது 2) என்ற இரு பெண்கள் இறந்தனர். ஏனைய 6 பேர் காயமடைந்தனர். அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் 3 பெண்களும், ஓர் ஆணும் அகநிலை நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். எஞ்சிய இரு ஆண்கள் புறநிலை நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டனர். அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட மூன்று பெண்டிருள் முனியம்மாள் (வயது 50) என்பவர் 13—12—1972 இரவு 12-15 மணிக்குக் காலமானார். மற்ற இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

தகவல் கிடைத்ததும், இ.பி.கோ. 304(எ), 286, 338-வது பிரிவுகளின் கீழும் இந்திய வெடிமருந்துகள் சட்டத்தின் 5-வது பிரிவின் கீழும் 12—12—1972-ல் காவலர்கள் வழக்கு ஒன்று பதிவு செய்தனர். தெற்குவட்டம் வெடிமருந்துகள் முதுநிலை ஆய்வாளர் மற்றும் தமிழ்நாடு குற்றவியல் மருத்துவ ஆய்வுக்கூட வல்லுநர்களின் ஒத்துழைப்புடன் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாநகராட்சித் துப்புரவுப் பணியாளராகிய திரு. பாகா ராமசாமி குடியிருக்கும் ராயபுரம், பழைய ஆட்டுத் தொட்டிசாலை (ஸ்லாட்டர் ஹவுஸ் சாலை, ஆஞ்சநேயர் நகர், 6-வது சந்து, 26-ம் எண் வீட்டு முகப்பில் இவ் வெடி விபத்து நடைபெற்றது. எனினும், அந் நிகழ்ச்சி நடந்தபோது அவர் இல்லை. பாறை உடைப்பதற்கென பயன்படுத்தப்படும் வெடிகள் அந்த இடத்தில் இருந்ததாகவும் அவற்றிலிருந்து வெடி விபத்து ஏற்பட்டதாகவும் தொடக்கப் புலனாய்விலிருந்து தெரிய வருகிறது. இந்த வெடிகள் எந்த இடத்திலிருந்து அங்கு வந்தன என்பது குறித்துப் புலனாய்வு நடந்து வருகிறது. மர்மமான வெடி குண்டு எதனாலும் இந்த வெடி விபத்து ஏற்படவில்லை.

சட்டம், ஒழுங்கு (வடக்கு) காவல்துறை டெபுடி கமிஷனர் 13—12—1972-ல் நிகழ்ச்சி நடந்த இடத்தைப் பார்வையிட்டார். மேற்கொண்டு புலனாய்வு செய்வதற்கு அவர் உதவி புரிந்து வருகிறார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மு.ப. 11-00

திரு. எம். ஏ. லத்தீப்: அந்த வெடிகுண்டு ஏதோ ஒரு பந்தைப் போல் இருந்ததாகவும் அதைக் குழந்தைகள் எடுத்து விளையாடிக் கொண்டு ஒருவருக்கொருவர் வீசிக் கொண்டிருந்ததாகவும் அந்தக் குண்டு கீழே விழுந்தவுடன் வெடித்ததாகவும் தெரிகிறது. கற்களை

உடைப்பதற்காக உள்ள வெடிகுண்டாக இருந்தாலும் அஜாக்கிரதையாக குழந்தைகள் கைக்கு எப்படி வந்தது? வெடிமருந்து பந்து உருவத்தில் இருக்குமா என்பதைப்பற்றி யெல்லாம் விபரங்கள் தற்போது சொல்ல இயலாவிட்டாலும் விபத்து ஏற்பட்டதற்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: நான், அது புலனாய்விலே இருப்பதாகச் சொல்லியிருக்கிறேன், மேற்கொண்டு விவரங்களைச் சொல்வதற்கு இயலாது.

## (5) <u>அமைச்சர் அறிக்கை—கண்ணங்குடி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் மீது சாட்டப்பட்ட லஞ்சப் புகார் குறித்து</u>

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் இந்தப் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிக்க விரும்புகிறேன். நேற்றைய தினம் கண்ணங்குடி பி.டி.ஓ. அவர்கள்மீது லஞ்சப் புகார் தெரிவித்து வந்த ஒரு தந்தியை டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள். அதைப்பற்றிய விளக்கத்தைத் தெரிவிக்கிறேன்.

தேவகோட்டை டிவிஷனில் உள்ள கண்ணங்குடி பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர் (பி.டி.ஓ.) ஐ.எம்.எஸ். கடனை சாங்ஷன் செய்து பின் அதற்குரிய பெர்மிட்டைத் தருவதற்கு ரூ. 100க்கு 2 ரூபாய் லஞ்சம் கேட்டதாக நடகுடி வி. சுப்பையா அம்பலம் தந்தி கொடுத்திருப்பதாக நேற்று இங்கே தெரிவித்தார்கள். உடனடியாக தேவகோட்டை ஆர்.டி.ஓ. அவர்களை இதுபற்றி விசாரிக்குமாறு கேட்கப் பட்டது. நேற்று ஆர்.டி.ஓ. விசாரணை செய்ததில் இந்தப் புகார் ஆதாரமற்றது என்று கூறியுள்ளார். திரு. சுப்பையா அம்பலம் ரூ. 300க்கு ஐ.எம்.எஸ். கடன் கேட்டு விண்ணப்பம் செய்த தேதி 17—11—1972. கடன் சாங்ஷன் செய்த தேதி 25—11—1972. பெர்மிட் சுப்பையா அம்பலம் பெற்றுக்கொண்ட தேதி





27—11—1972. எனவே கடன் சாங்ஷன் செய்த இரண்டு நாட்களுக்குள் பெர்மிட் அவரிடம் நேரில் தரப்பட்டுள்ளது. திரு. சுப்பையா அம்பலமே கையெழுத்திட்டு பெர்மிட்டை 27—11—1972-ல் பெற்றுக் கொண்டுள்ளார் என்று ஆர்.டி.ஓ. கூறியுள்ளார். எனவே, அந்தப் புகாருக்கு ஆதாரம் இல்லை என்று ஆர்.டி.ஓ. தெரிவித்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## <u>(4) கவன ஈர்ப்பு</u>—தொடர்ச்சி

### <u>(இ) "நவமணி" ஊழியர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.</u>

Dr. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the feeling of insecurity, frustration and unrest prevailing among the employees of the Tamil evening daily "Nava Mani" at Madras.

* <u>மாண்புமிகு திரு. என். வி. நடராசன்</u>: சென்னை கூட்டுறவு அச்சக வெளியீட்டுச் சங்கம், நாளிதழ்கள், புத்தகங்கள், துண்டு வெளியீடுகள் முதலியவற்றை அச்சிட்டு வெளியிடும் பணியை மேற்கொள்வதன் வாயிலாகத் தமது உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடன் 1959 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இச் சங்கம் " நவமணி " என்னும் தமிழ் நாளிதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. 30—6—1972 அன்றுள்ளபடி இச் சங்கத்தில் 290 உறுப்பினர்கள் இருந்தனர்; இதற்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 84,675 ஆகும். இச் சங்கம் 93 உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

சங்கத்தின் அலுவல்களை நிர்வகிக்கும் அதிகாரம் இயக்குநர்கள் குழுவிடம் இருக்கிறது. இக் குழுவில் 11 இயக்குநர்கள் உள்ளனர். இதில் எட்டுப் பேர் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; இருவர் சென்னை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியினால் நியமிக்கப் பட்டவர்கள்; குழுவினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்—உறுப்பினர் ஒருவர். சங்கத்தின் தலைவர் திரு. எஸ். வி. ஜி. சௌரிராஜுலு இந்த நாளிதழை அச்சிட்டு வெளியிடுபவர் ஆவார். இவர் பத்திரிக்கை ஆசிரியர்கள் குழுவின் தலைமை ஆசிரியராவார்.

14—11—1972-ம் நாளன்று வெளியான “ நவமணி ” இதழில் (இளநிலையாளராக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள) உதவித் தலைவர் திரு. ஏ. ராஜவேலு, செய்தி ஆசிரியர் பதவிக்குப் பொறுப்பு வகித்த வரும் துணை ஆசிரியர்களில் ஒருவருமான திரு. பி. நாராயணசுவாமி ஆகிய இருவரும் கூட்டாகச் சேர்ந்து, தலைவருக்கு எதிராகக் கடுமை யான குற்றச்சாட்டுகள் சிலவற்றைச் செய்து, முன்னவரின் பெயரில் அறிக்கை ஒன்றை வெளியிட ஏற்பாடு செய்தனர். இந்த அறிக்கை தலைமை ஆசிரியருக்குத் தெரியாமலேயே வெளியிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே, தலைவர் (தலைமை ஆசிரியர்) அவர்கள் இருவரையும் 15—11—1972-ல் பணியிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்ததோடு, விசாரணை முடியும்வரை அலுவலகத்திற்குள் வர வேண்டாம் என்றும் அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

பணியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட பணியாளர்—உறுப்பினர் கள் இருவரும் தொடர்ந்து அலுவலகத்திற்கு வந்து கொண்டிருந் ததாலும் அதனால் பிற பணியாளர்களின் ஒழுக்கம் பாதிக்கப்படும் என்று தெரிய வந்ததாலும் தலைவர் காவலரின் உதவியைக் கோரிய தாகக் கூறப்படுகிறது. மேற்சொன்ன இரண்டு பணியாளர்களும் அலுவலகத்தினுள் வருவதற்கு ஆதரவளித்ததோடு சங்கம் வழக்க மாகச் செயல்படுவதற்குத் தடை செய்த பணியாளர்—உறுப்பினர்கள் 10 பேரும் 17—11—1972-ல் பணியிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டனர். பணியிலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டவர்களை மீண்டும் வேலையில் சேர்க்கவேண்டுமெனக் கோரி நவமணி நாளிதழின் பணியாளர்—உறுப்பினர்கள் 18—11—1972 முதல் பணிக்குச் செல்லாமல் இருக்கின்றனர்.

வேலை நிறுத்தம் பற்றி அறிவிப்பும் சங்கத்திற்குக் கொடுக்கப்பட வில்லை ; தொழிலாளர் நல அதிகாரி அல்லது துணைப்பதிவாளர் முன்பு தகராறும் எழுப்பப்படவில்லை. பணியாளர்கள், தொழிலாளர் நல அதிகாரியிடம் புகார் ஒன்றைக்கூடக் கொடுக்கவில்லை.

இணக்கமான தீர்வு ஒன்றைக் காணும்பொருட்டு 27—11—1972 இல் நடந்த சங்கத்தினர் இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில், கீழ்க் காணும் நால்வரைக் கொண்ட சமரசக்குழு ஒன்றை மேற்படி குழு அமைத்தது :—

1. திரு. சி. ஆர். கோட்டீஸ்வரன்.
2. திரு. டி. வி. நடேச முதலியார்.





3. திரு. டி. சுப்பிரமணியன்.
4. திரு. ஆர். இராமசாமி.

இயக்குநர்கள் குழுவின் கூட்டம் நடைபெற்ற சமயத்தில் மேற்படி சமரசக் குழுவில் பணியாற்ற திரு. இராமசாமி ஒப்புக் கொண்டாலும், பின்னர், மேற்படிக் குழுவில் பணியாற்ற தமக்கு விருப்பமில்லை யெனத் தெரிவித்து 27—11—1972-ல் கடிதம் ஒன்றை அவர் அனுப்பினார். இத் தகராறுக்குத் தீர்வுகாண குழுவினால் முடியவில்லை. தீர்வு காணு வதற்காக மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்பற்றிப் பரிசீலிக்க சங்கக் குழுவின் மற்றுமொரு கூட்டம் 8—12—1972 இல் கூட்டப் பட்டது. இக்கூட்டத்தில் தொழிலாளர்களின் குறைகளைத் தெரிவிக்க வும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. பேச்சு வார்த்தைகள் 9—12—1972 அன்றும் தொடர்ந்து நடந்தன. ஆனால் இறுதி உடன்பாடு ஏதும் காண முடியவில்லை.

தொழிலாளர்களிடையே ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு தலைவர், குறைந்தது நால்வர் மீதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க விரும்பினார். தொழிலாளர் பிரதிநிதிகள் தங்களின் கருத்தை வெளி யிட சிறிது அவகாசம் வேண்டினர். ஆனால், அவர்கள் தங்கள் கருத்தை இன்னும் அனுப்பி வைக்கவில்லை.

18—11—1972 முதல் “ நவமணி ” இதழ் வெளியிடப்படவில்லை. தனியார் அச்சகத்தில் (நுங்கம்பாக்கம், சரவணா அச்சகம்) இந்த நாளிதழ் அச்சிடப்பட்டு 25—11—1972 அன்று மீண்டும் வெளியிடப் பட்டது. 2—12—1972, 3—12—1972 ஆகிய நாட்களில் நவமணி இதழ் வெளியிடப்படவில்லை. 4—12—1972, 5—12—1972 ஆகிய நாட்களில் “ நவமணி ” இதழ் வெளியிடப்பட்ட பின்னர் 6—12—1972 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

சங்கத்தின் ஓர் உறுப்பினர் ஆகிய திரு. டி. தெய்வசிகாமணி என்பவர் 21—11—1972 அன்று உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். பொதுக் குழுக் கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறும், 21—11—1972 அன்று நடக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்ட இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தையும் புதிய உறுப் பினர்களைச் சேர்த்துக் கொள்வதுபற்றி விவாதித்து முடிவு செய்ய இயக்குநர்கள் குழுவின் கூட்டம் எதனையும் சங்கமும் தலைவரும் கூட்டாவண்ணம் தடைசெய்யுமாறும் சென்னைத் துணைப் பதிவாள ருக்குக் கட்டளையிட்டு மாண்டமஸ் ரிட் ஒன்றைப் பிறப்பிக்குமாறு அந்த மனுவில் மனுதாரர் கேட்டிருந்தார். உயர்நீதிமன்றம் பின்வரு மாறு ஆணையிட்டது. குழுவின் கூட்டம் நடைபெறலாம். புதிய

[திரு. என். வி. நடராசன்] [1972 டிசம்பர் 15

உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டால், நீதிமன்றத்தின் முடிவை எதிர்பார்த்தே அவர்கள் சேர்த்துக் கொள்ளப் பட வேண்டும்.

21—11—1972 அன்று கூடிய குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப் பட்ட தென்றும், அதன்பின்னர் 27—11—1972 அன்று நடந்த குழு வின் கூட்டத்தில், உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற் காக 103 பேர்களிடமிருந்து வந்த விண்ணப்பங்கள் பற்றிப் பரிசீலிக் கப்பட்டன என்றும், உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்குட்பட்டு அவர் களைச் சேர்த்துக்கொள்ள குழு முடிவு செய்ததாகவும் கூறப்படுகிறது. ரிட் மனு விசாரணையில் இருக்கிறது.

Dr. H. V. HANDE: Sir, is it a fact that the President of the paper 'Nava Mani', Mr. Sourirajan, tried to bring in new members without taking care to see that the applications were all in order. In other words, the list of members he gave and enrolled as members was different from the list of 103 members given by the Vice-President which were in order with application forms duly filled in. In spite of the fact that the Vice-President's list was in order and the list of the President was not in order, whether it is a fact that the President's members were given preference and they were made members and the Vice-President's list of members were not allowed to become members, thereby by this devious method a majority was got just before the election and efforts are being made to see that the General Body meeting does not take place. I want to know whether these are facts.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்தப் பிரச்னை நீதி மன்றத்திலே இருப்பதால் நாம் அதைப்பற்றி இங்கு மேலும் விவாதிப் பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: I am not going to the court aspect of it. But arising out of the statement made by the Hon. Minister, I am only trying to get my doubt clarified and want to know whether it is a fact that the two directors of the Bank who are not supposed to interfere in the day-to-day administration of the paper and the editorial policy, are actually taking decisions and trying to increase the majority in favour of the Government. They are there only to see that the financial matters are properly carried on. When the paper published news items in favour of the Government the circulation came down from its original figure of 40,000



1972 டிசம்பர் 15] [Dr. H. V. Hande]

to 9,000. Instead, the press wanted to publish in a neutral manner. May I know whether through the Bank Directors, Government did not allow it in that way and they are interfering in the day-to-day administration of the paper?

* மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, எதற்கெடுத் தாலும் அரசியலைக் கொண்டுவந்து சேர்க்கக் கூடாது. நவமணி கூட்டுறவுச் சங்கத்தில் இன்றல்ல, பல ஆண்டுகளாகப் போராட்டம் நடைபெற்று வருகிறது. ஓர்க்கர்ஸ் மெம்பர்ஸ்க்கு அதிகாரம் உண்டா, நான்-ஒர்க்கர்ஸ் மெம்பர்ஸ்க்கு அதிகாரம் உண்டா, யார் மெஜாரிட்டி கண்ட்ரோல் செய்வது என்ற பிரச்னை இருக்கிறது. ஆகவே, அங்கத்தினர்கள் சேர்ப்பதில் சண்டை வருகிறது. பை-லா வின் எல்லைக்குள் சேர்க்கலாம் என்றிருக்கிறது. சரியா, தவறா என்று கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். கடைசியாகப் போயிருப்பது நவமணி தலைவரும், அவரைச் சேர்ந்த இயக்குநரும். "போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ்" முடிவெடுத்து இருக்கிறார்கள் சில பேர்களைச் சேர்க்கலாம் என்று. சேர்க்கக் கூடாது என்று ரிட் போட்டிருக் கிறார்கள். உயர்நீதி மன்றம் இடைக் காலமாகச் சேர்த்தாலும் உயர் நீதிமன்ற இறுதி உத்தரவுதான் செல்லும் என்று இருக்கிறது. எனவே, அதில் அரசாங்கத்திற்குச் சம்பந்தமில்லை.

போர்ட் நிர்வாக இயக்குநர்கள் இரண்டு பகுதி. ஒருவருக்கொரு வர் கருத்து வேறுபாடு, எனவே, நமக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. அரசாங்கச் சார்பு, எதிர்ப்பு என்றெல்லாம் சொல்வது பொருத்தமாக யில்லை. அவர்களுடைய விருப்பம், யார் பக்கத்திலே இருக்கிறார்கள் என்பது அவர்கள் விருப்பம். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூடச் சேரலாம். ஆட்சேபணை இல்லை. எந்தக் கட்சி சேர்ந்தாலும் ஆட்சேபணை இல்லை. ஆகவே, தொழிலாளர்கள் பிரச்சினை பற்றி எழுப்பப்பட்டதற்குத் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தலையிடுகிறது என்று சொல்வதைக் கடுமையாக நாங்கள் மறுக்கிறோம்.

Dr. H. V. HANDE: On November 15, Rajavelu, who is also the Assistant Foreman and Narayaswamy, News Editor were suspended following publication of the statement issued by them. After that the Police came and took control over telephone switch-board and did not give any connection to the Editorial Department. On 18th November, Narayanaswami and Rajavelu attended office for the third day after suspension. They were not allowed to

work as the police had told them the previous evening that they could go to office as shareholders but should not work as employees. Thus the police unlawfully prevented these persons from going to the office. Then cases have been foisted wilfully and unnecessarily on the employees there.

* மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, போலீஸ் துறையிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி. ஆனால் இம் மாதிரியான ஒரு பழியை, போலீசார்மீது எதற்கெடுத்தாலும் சுமத்துவது சரியா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே நிர்வாகத்தில் இருப்பவர்கள்—நிர்வாகம் தலைவரிடத்தில் இருக்கிறது. நிர்வாகத்தில் உள்ளவர்கள் போலீசுக்கு மனுக் கொடுக்கிறார்கள். இம்மாதிரி சட்டப்படி நீக்கியிருக்கிறோம். அதை மீறி ஆக்ரமித்துத் தொல்லை கொடுக்கிறார்கள் என்று மனுக் கொடுக்கிறார்கள். அதன் சார்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறதே தவிர நிர்வாகத்திற்கு உள்ளே போலீஸ் உட்கார்ந்து கொண்டு அவர்களுடைய தொலை பேசியில், நவமணியினுடைய தொலை பேசியில் பேச வேண்டிய துர்பாக்கியமோ, பிறர் பேசாமல் தடுக்க வேண்டிய துர்பாக்கியமோ போலீசாருக்குக் கிடையாது. நிர்வாகத்தில் இன்னின்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதை மீறி பலாத்காரமாகச் செய்யப்படுகிறது என்று கம்ப்ளெயின்ட் கொடுத்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பிறகு அவர்களே வெளியே, வேலைக்குச் செல்லாமல் நின்று விட்டார்கள். மறு நாள் அந்தப் பிரச்னை இல்லை. ஆனால் முதல்நாள்தான் சட்டப்படி உத்தரவை மீறி, "டிரஸ்பாஸ்" செய்யலாமா என்ற பிரச்னையிருந்தது. அதுகூட நீதிமன்றத்தில் இருப்பதால் விரிவாக விவாதிப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சார்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ரூல் 41-லே எவ்வளவு கேள்விகள்? போதும்.

## (6) நடைமுறைக் கேள்விகள்

### (அ) பேரவை நடவடிக்கை குறித்து, திருநெல்வேலி வழக்குரைஞர்கள் கழகம் பேரவை உறுப்பினருக்கு அனுப்பியுள்ள தந்தி குறித்து

* THIRU M. A. LATHEEF: Sir, on 9th December 1972 while participating in the debate on the Confidence Motion, Dr. Hande, in furtherance of his argument against the Government produced a



telegram purported to have been sent by the Bar Association of Tirunelveli. I did not make any comment about the Bar Association of Tirunelveli or its members on my own accord. Because a particular document was produced by Dr. Hande before the House, I was entitled to make certain comments as a Member of this House. While making that comment, I made certain general observations about the formalities that should be observed by bodies particularly responsible bodies like the Bar Association while sending a communication to responsible persons. No doubt I accept that it has been sent to a responsible Member, Dr. Hande by a responsible body like the Bar Association of Tirunelveli. I seriously doubted the veracity of that telegram because it lacked the necessary formalities with which the Bar Association should have sent that telegram to a responsible Member.

I did not question its validity. I did not question the right of that Association to send such a telegram. What I submitted was that there should have been a specific name even though the Bar Association is a corpus body. The corpus body should always be represented by an accredited individual who happens to be its spokesman. Either the President or the Secretary should have sent that telegram with his name included. Because it lacked the name, I questioned its veracity. I can appreciate lapses on the part of a layman but I do not know how a responsible body representing advocates can commit lapses. That was my submission.

Now I am entitled to make certain observations with regard to that. After that what had happened? Mr. Deputy Speaker, you must protect my right. You must protect the rights of the House. You must protect the immunities, privileges and the functions of the legislators as legislators. We are all protected under Article 194 of the Constitution. We are all immune from any judicial action or some comment outside about our conduct inside the House. That being the case day before yesterday, a telegram has been sent to me with copies to many. If they have sent it to me alone, I do not mind it because that does not attract the mischief of the relevant provisions. But this has been sent to

many persons including Dr. Hande, myself and my leader and, I understand, to the Chair also. It is stated in the telegram—

'This Association condemns his (my) conduct as most irresponsible. This Association hereby calls upon Mr. Latheef to tender his unqualified apology to this Association.'

Here is my grievance. An Association which represents only advocates I do not say that the Association lacks legal acumen and legal knowledge—has sent this telegram signed by Thiru Sivasubramaniam Pillai, President, Bar Association, Tirunelveli. The same thing could have been done to the other telegram. In that telegram the name has not been mentioned. Therefore I thought that it would have been proper if the telegram had been signed by the accredited representative of the Bar Association. Whatever that may be, I now come to the crucial point. What I state in this House was stated with *bone fide* intention.

I have got the highest regard for the advocates' body and I have not cast aspersions on that body. I made certain observations in this House; as a Member of this House I am protected by article, 194 of the Constitution. But on what I speak in this House is this. If this sort of thing is allowed from outside, it is definitely outraging the sphere of my privilege as a member of House. This President of Tirunelveli Bar Association, Mr. Sivasubramaniam Pillai has outraged the privileges which I enjoy as a member of this august House. He has sent me a sort of notice asking me to tender an unconditional apology for what I have spoken in this House. It looks like an Advocate's notice, I appeal to all members, including Dr. Hande and Ponnappa Nadar, that what happens inside the House can never be questioned outside the House. Therefore even though I can bring a privilege motion under Rule 184 of the Assembly Rules, I do not want to bring any formal motion. I do not want to bring the responsible Bar Association of Tirunelveli, to book. I condemn the action of the President. I refrain from bringing in a privilege motion under Rule 184 because I have got the highest respect to the Advocate's Body. Even though my rights have been questioned, out of my respect for the Advocates' Body, I am not bringing in a privilege motion. The action of he President of the Association **is most outrageous, most irresponsible most detestables and most**



abominable and should be condemned by this House wholeheartedly and unanimously. I request the Chair to give his ruling on **this.**

DR. H.V. HANDE: The second point raised by Mr. Latheef is........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ப்ரிவிலேஜ் மோஷன் கொண்டு வந்து ஒரு உறுப்பினர் பேசினால் அதன்மீது மற்றவர்கள் பேச வாய்ப்பு இருக்கிறது. ஆனால் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து திரு. லத்தீப் அவர்கள் பேசவில்லை. தமக்கு வந்திருக்கின்ற தந்தியைப் பற்றி பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனைக் கொடுத்திருக்கிறார்கள். அதோடு அது முடிந்துவிட வேண்டுமேயல்லாது அதனை விவாதமாக்குவது சரியல்ல.

DR. H. V. HANDE: On a point of Order, Sir, I am giving a personal explanation because it is connected with the point raised by Mr. Latheef. I received a telegram from the Bar Association, Tirunelveli. I mentioned it. It was in my file and I did not bring it to the House then. When I mentioned it I also said that I was saying it with full authority,...............

MR. DEPUTY SPEAKER: You need not go into that point now. Mr. Latheef has raised a point. The motive behind that telegram may be right or wrong. The question is whether anybody can say such things about what happened inside the House.

DR. H. V. HANDE: I am not going into that aspect. I am only trying to point out that there is difference from what Mr. Latheef said the other day and from what he is saying now. I would like to point out......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. லத்தீப் அவர்கள் அன்று பேசியது டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியது போல் வேறுபட்டு இருக்கலாம். அப்படி வேறுபட்டுப் பேசியிருந்தாலும் கூட, இப்போதுள்ள பிரச்சினை பார் அசோசியேஷன் இங்கிருக்கும் மாண்புமிகு உறுப்பினரை நிபந்தனையற்ற முறையில் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்ற முறையில் தந்தி கொடுத்திருப்பதாகும். அது சரியா, தவறா அதை டாக்டர் ஹாண்டே அவர்கள் எந்த வகையில் எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்று கூறினால் நன்றாக இருக்கும்.

Dr. H. V. HANDE : But when I was speaking, the hon. Member said that he doubted the very *bona fide* of the telegram.

Thiru M. A. LATHEEF : I used the word ' veracity '.

Mr. DEPUTY SPEAKER : Dr. Hande, you are not at all coming to the point.

Dr. H. V. HANDE : When I was speaking, the very veracity of the telegram was questioned ; The veracity of my statement was questioned. I am also a member of this House. Has not my privilege also been questioned ? What I say is, such instances should be avoided.

Mr. DEPUTY SPEAKER : You are side tracking the issue.

Dr. H. V. HANDE : I am not doing it, you must hear me fully.

Thiru M. A. LATHEEF : My right should be protected.

Dr. H.V. HANDE : So also my right.

Mr. DEPUTY SPEAKER : I am here to protect the right of every member.

Dr. H.V. HANDE : You have to hear me fully, before you give your ruling. Are you not going to hear me?

Mr. DEPUTY SPEAKER : You are not to question the Chair?

Dr. H.V. HANDE : Should I not be heard? Am I being ordered?

Mr. DEPUTY SPEAKER : I order you to sit down. You must obey the Chair.

Dr. H. V. HANDE : So my veracity can be questioned by another member. I must be heard fully.

Mr. DEPUTY SPEAKER : On any account the Chair does not nvite advice from the hon. Member. The Chair's decision should be obeyed.

Mr. Ponnappa Nadar may now speak.



Thiru R. PONNAPPA NADAR : I was listening with rapt attention to the charge made by the hon. Member Thiru M. A. Latheef when he said that his freedom has been curtailed (Dr. H. V. Hande : What about our freedom?). The freedom of other members also must be protected. Every member's freedom must be protected. So far as the veracity of that telegram is concerned it is a matter of verification and method of proof will be one of the methods that can be insisted upon.

So far as the matter before the House is concerned, I would only say that certain expressions have been used in the telegram, which may not be happy and proper for the Bar Association to have used such words as ' irresponsible ' ' that the member should tender his apology unconditionally ', etc.

The freedom of speech that is enjoyed by a member of this House is governed by Article 194 and so far as our function inside this House is concerned, I think it is subject to certain laws which are governing in this country. What is freedom of speech that is available to our speeches, is it qualified or absolute privilege—that is a legal question to which I am not going to dwell at present. Suffice it for me to say that freedom of speech that has been exercised by the member. Dr. Hande is also being challenged in a collateral way. It is better we do not enter into any controversy.

Mr. M. A. Latheef has not brought in a motion to refer the matter to Privileges Committee and I think it is better that we do not refer this matter to the Privileges Committee. Probably, this may be due to their being not conversant with provisions of law concerning freedom of speech inside this House, such expressions have been used. The Bar Association has sent the telegram and it has not been made public by Dr. Hande before the House. I think Mr. M. A. Latheef need not take offence to it. It has been sent to the Chair as well, Any confidential communication levelling charges need not be a ground for impeching the right or affecting the rights of a Member.

I would once again refer to Art. 194 to show whether we come within that ambit.

Section 194 (1) says subject to the provisions of this constitution, and to the rules and standing orders regulating the procedure of the Legislature, there shall be freedom of speech in the Legislature of every State.

(2) No member of the Legislature of a State shall be liable to any proceedings in any court in respect of anything said or any vote given by him in the legislature or any committee thereof, and no persons shall be so liable in respect of the publication by or under the authority of a House of such Legislature of any report, paper, votes or proceedings.

(3) In other respects, the powers, privileges and immunities of a House of the Legislature of State, and of the members and the committees of a House of such Legislature shall be such as may from time to time be defined by the Legislature by law, and, until so defined, shall be those of the House of Commons of the Parliament of the United Kingdom, and of its members and committees, at the commencement of this Consititution.

Sir, so far as the telegram is concerned, of course, it cannot be denied that there are objectionable portions. I do not say that there is nothing objectionable. It is better that this House do not proceed with further discussion on the matter and we shall leave the matter at this juncture so that the rights of both parties are protected. Dr. Hande would say that he has got the telegram and relied on it and that cannot be challenged. The only thing is that the subsequent telegram which has been sent is only objectionable. The House will take note of it and the Chair would give a proper ruling. I wish that it need not go to the Privileges Committee and that is the view which I take, Sir.

Dr. H.V. HANDE : Sir, my question was this. My rights in this House are as supreme and paramount and equally important as those of the other hon. Members. When I was quoting a telegram, the veracity itself was questioned. That hurt me. I have already mentioned the authority for it and I have checked it up I have sent persons to verify and I have myself telephoned and I know my telegram was authoritative, valid and true. In spite of that he questioned the truth of the telegram. He has also received some communication from somebody and that was mentioned.



<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> ஒரு சின்னக் கேள்விக்கு பதில் சொன்னால் போதும். இப்போது எடுத்திருக்கிற இஷ்யூவிற்கும் நீங்கள் சொல்கிற இஷ்யூவிற்கும் சம்பந்தமே கிடையாது.

This is between two Members of the House. When the right of a Member is affected within the House, you are accusing another Member. That we can discuss and decide. That is an easy matter. (Interruption by Dr. Hande) I will tell you, Dr. Hande. Nobody questioned the veracity of your telegram. The other member has got a telegram, letter, a bit of paper or any evidence. You can argue on that point. But the question now is when a Member utters some words here–that may be acceptable or may not be acceptable to you and you may differ—a body outside this House, the so-called Bar Association, whether that can condemn the activities of that Member and demand an apology from him. That you have to consider.

Dr. H. V. HANDE : Sir, my only submission in that context in this. Let us try to come to a decision after taking the entire discussion on that day and the Bar Association 's telegram. Let us send this matter to the Privileges Committee and let it discuss the whole thing as one unit and then come to a decision.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, இது உரிமைப் பிரச்னையாகவும் கொண்டுவரப்படவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கு எடுத்துக்காட்டியதுபோல், இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டாமென்று சொன்னார்கள். அது உரிமைப் பிரச்னையாகக் கொண்டுவரப்படாத காரணத்தால் அதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய நிலையிலும் இல்லை. இதற்கிடையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு தந்தியை இங்கு வெளியிட்ட போது அந்தத் தந்தி உண்மையானதல்ல அல்லது ஹாண்டே அவர்களுக்கு வந்த தந்தி பார் அசோசியேஷன் கொடுத்ததல்ல என்ற கருத்துக்களை திரு. லத்தீப் அவர்கள் சொல்லியிருந்தால் உடனடியாக அது தன்னுடைய உரிமையைப் பாதிக்கக்கூடியது என்ற பிரச்னையை திரு. ஹாண்டே அவர்கள் நேற்றே எழுப்பியிருக்கலாம். அதை திரு. லத்தீப் பேசியபோதே எழுப்பியிருக்கலாம். எழுப்பி அதற்கான ரூலிங்கை சபாநாயகர் அவர்களிடமிருந்து பெற்றிருக்கலாம்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 டிசம்பர் 15

நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும், தலைவர் அவர்கள் மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பிரச்னை எழும்போது அந்தப் பிரச்னைபற்றி தங்கள் தீர்ப்பு என்ன என்பதைத்தான் மற்றவர்கள் கவனிக்க வேண்டும்; அல்லது அந்தப் பிரச்னையில் ஏதாவது கருத்துக்கள் சொல்ல வேண்டுமென்றால் சொல்லவேண்டுமே தவிர அந்தப் பிரச்னைக்கு ரூலிங் கொடுக்கும் நேரத்தில் எனக்கும் ஒரு பிரச்னை இருக்கிறது, அதற்கும் ரூலிங் கொடுங்கள் என்று இரண்டு தீர்ப்புகளை அளிக்க தலைவரை வற்புறுத்துவது சரியானதல்ல.

டாக்டர் ஹாண்டே அவர்கள் நேற்றே அப்பிரச்னையை எழுப்பியிருக்கலாம். அல்லது திரு. லத்தீப் பிரச்னைக்கு தீர்ப்பு கூறி முடித்த பிறகு ஹாண்டே அவர்கள் பிரச்னையை எழுப்பலாம். ஒவ்வொரு பிரச்னை எழும்போது அதற்குள் நுழைந்து வேறு பிரச்னையை எழுப்பி சபையின் நேரத்தை, வேறு விஷயங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தைக் குறைத்துக் கொள்வது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பியதைப் பொறுத்து உறுப்பினர் லத்தீப் அவர்கள் ஒரு ஐயப்பாட்டை எழுப்பினார்கள். இந்த அவையில் உறுப்பினர்கள் ஐயப்பாட்டை எழுப்பவும் அதற்குப் பதில் சொல்லவும் உரிமை இருக்கிறது. பார் அசோசியேஷன் தந்தி ஒன்றை அவர்கள்தான் கொடுத்தார்களா அல்லது மற்றவர்கள் கொடுத்தார்களா என்ற ஐயப்பாட்டினை எழுப்பினார்கள். இல்லை, இல்லை, அதற்கான ஆதாரம் இருக்கிறது என்று சொல்லக்கூடிய உரிமை டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, உரிமை பாதிக்கப்பட்டதாகச் சொல்வதற்கு இல்லை. ஐயப்பாட்டினை எழுப்பினால் அதற்கு பதில் உரைத்து—ஐயப்பாட்டிற்கு இடமில்லை, ஆதாரமிருக்கிறது என்று சொன்னார்கள். பிரச்னை அதோடு தீர்ந்து விட்டது. அதை மீண்டும் திரு. லத்தீப் அவர்கள் கிளப்பவில்லை. முதலில் சொன்னபோது டாக்டர் ஹாண்டே அவர்கள் தந்தி மட்டுமல்ல, கடிதமும் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். பிறகு திரு. லத்தீப் அவர்கள் அந்தப் பிரச்னையைக் கிளப்பவில்லை. ஐயப்பாட்டிற்குப் பதில் தந்த பிறகு அந்த அளவோடு பிரச்னை தீர்ந்து விட்டது. ஆகவே அதில் உரிமைப் பிரச்னை இல்லை.



1972 டிசம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது எழுந்துள்ள பிரச்னை—திரு. லத்தீப் அவர்களை விட்டு விடுங்கள்—இந்தப் பேரவையில் ஒரு உறுப்பினர் தெரிவிக்கிற கருத்துபற்றி வெளியிலே இருக்கிற ஒருவர் அல்லது ஒரு அமைப்பு கருத்து சொல்வதற்கு உரிமை இருக்கிறதா என்பதுதான். அரசியலமைப்புச் சட்டத்தின்படியும் அல்லது நம் பேரவையில் முன்னால் தெரிவிக்கப்பட்டுள்ள பல முடிவுகளின்படியும் இது மிக மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஒரு நிகழ்ச்சி என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்).

டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு உள்ளபடியே வருந்துகிறேன். இரண்டு மூன்று முறை நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். எழுப்பப்பட்டிருக்கிற, அதாவது தாங்கள் எழுப்பியிருக்கிற பிரச்னை தனிப்பட்ட, உங்களுக்கும் திரு. லத்தீப் அவர்களுக்கும் இடையே உள்ள ஒரு சின்னப் பிரச்னை. அன்றே அவர்கள் வற்புறுத்தியிருக்கலாம். அல்லது மறுநாள்கூட தெரிவித்திருக்கலாம். ஆனால் வெளியே இருக்கிற பார் அசோசியேஷன் என்ற ஒரு அமைப்பு எனக்கே கூட அவர்கள் தந்தி அனுப்பியிருக்கிறார்கள். முதலில் எனக்குத்தான் அனுப்பியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனக்கு அனுப்பி விட்டு அதன் நகலை திரு. லத்தீப் அவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். இதில் அவர்கள் உபயோகித்திருக்கும் வார்த்தைகள் மிக மிகக் கடுமையானவை. அவை எவருடைய உள்ளத்தையும் புண்படுத்தக் கூடியவை. திரு. லத்தீப் அவர்கள் ஒரு வழக்கறிஞர், அவர்கள் இது குறித்து ஒரு ப்ரிவிலேஜ் இஷ்யூ கொண்டுவராததற்கு அவர்களைப் பாராட்டுகிறேன், நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு பெரிய சிக்கலாக வளர்ந்துவிடும். இந்தப் பேரவை சார்பில் அந்த பார் அசோசியேஷனுக்கும், சம்பந்தப்பட்ட திரு. சிவசுப்பிரமண்ய பிள்ளை என்ற அந்த பார் அசோசியேஷன் தலைவருக்கும் இந்தப் பேரவையின் வன்மையான கண்டனத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்). இப்படி பேரவை உறுப்பினர்களின் உரிமைகளில் தலையிடுவதற்கு இந்தப் பேரவையைத் தவிர வெளியிலே இருக்கிற எவ்வளவு பிரம்மாண்டமான சக்திக்கும் நிச்சயமாக உரிமை இல்லை என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்).

இந்தப் பேரவையில் ஏற்கனவே 1960-ம் ஆண்டில் ஒரு விவாதம் நடந்திருக்கிறது. இங்கு நடந்ததுபற்றி நகராட்சிமன்றத்தில் தாக்கி அல்லது விமர்சித்து சிலர் பேசியிருக்கிறார்கள். மாநகராட்சி

மன்றத்தில் சில உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் எப்படிப் பேசலாம் என்று கேட்டதை இங்கு பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரப் பட்டு மாநகராட்சி மன்றத்தில் எழுந்த விவாதம் வன்மையாகக் கண்டிக்கப்பட்டு அவர்கள் அதைத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய மாநகராட்சிமன்றமே இந்தப் பேரவை விவாதத்தில் தலையிடுவதற்கு உரிமை இல்லை என்று சொல்லும்போது ஒரு பார் அசோசியேஷன் நிச்சயமாக தலையிடுவது அவ்வளவு சரியல்ல. எனவே இதுகுறித்து இதையே அவர்கள் ஒரு வேண்டுகோளாக எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது விளக்கமாக எடுத்துக் கொண்டாலும் சரி இதை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு இப்படிப்பட்ட விவாதங்களில் ஈடுபடக் கூடாது என்று இதன் மூலம் இப்படி ஈடுபடும் எண்ணமுள்ள எந்த அமைப்பிற்கும் இந்தப் பேரவை மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) “ராஜமன்னார் குழு” அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தக் கூட்டத்தொடரின் கடைசி நாளான இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத்தொடரில் குறிப்பிட்ட ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ராஜமன்னார் குழு அறிக்கை இந்தக் கூட்டத்தொடரில் வைத்து விவாதிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தக் கூட்டத் தொடரில் ஏன் விவாதிக்கவில்லையென்றால், அப் போது சமயம் இல்லை, அடுத்த கூட்டத்தொடரில் அல்லது சமயம் வரும்போது வைத்து விவாதிக்கலாம் என்று கூறினார்கள். இப்போது அதற்கு அவசியம் ஏற்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது புகார் மனுக் களுக்கு அனுப்பிய பதிலில் மத்திய அரசாங்கத்திற்கு என்கொயரி கமிஷன் நியமிப்பதற்கு அதிகாரம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு டெல்லி வட்டாரங்களில் இருந்து கூட பதில் கூறியிருக் கிறார்கள். அதை இன்றைய பத்திரிகைகளில் பார்த்தேன். அதாவது, மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசின் மீது ஒரு என்கொயரி கமிஷன் நியமிப்பதற்கு உள்ள சக்தி, அதிகாரம் இருக்கிறது என்று டெல்லி வட்டாரங்களில் கூறப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது. அந்த நிலையில், இந்த அரசாங்கத்தின் வரம்பு என்ன, மத்திய அரசாங் கத்தின் அதிகார வரம்பு என்ன என்பதை தெளிவுபட அறிந்து கொள்ள, நம்முடைய மாநிலத்தின் 3 பெரிய தலைவர்களால் தயார் செய்யப்பட்ட அந்த அறிக்கையை இந்த மன்றத்தில்



செய்யப்பட்ட அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்து விவா வைத்து தற்போது விவாதிக்கலாமா? ஆம் என்றால், எப்போது அதை விவாதிப்பது என்பதை முதலமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் ராஜமன்னார் குழு அறிக்கை பற்றி விவாதிப்பது பற்றியும், பேரவையில் வைப்பது பற்றியும் நான் குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டி, இந்தக் கூட்டத்தொடரில் ஏன் வைக்கவில்லை என்று கேட்டு இருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக்குழு கூட்டம் நடைபெறுகிற நேரத்தில் எதிர்க்கட்சியில் இருந்த தலைவர்கள் அதை ஞாபகப்படுத்தி யிருக்க வேண்டும். அல்லது நண்பர் ஜேம்ஸ் அவர்களாவது அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறுகிற நேரத்தில் கட்சித் தலைவர் களிடத்தில் நினைவுபடுத்தியிருந்தால், அவர்கள் அலுவல் ஆய்வுக்குழு வில் அந்தக் கருத்தை வெளியிட்டு இருக்கக்கூடும். மற்ற கட்சித் தலைவர்கள் நினைவுபடுத்தாத காரணத்தாலும், வேறு பல அலுவல்கள் இந்தக் கூட்டத்தொடரில் இருந்த காரணத்தாலும், ராஜமன்னார் குழு அறிக்கை இந்தக் கூட்டத்தொடரில் நாம் வைப்பதற்கு இயலாமல் போய்விட்டது. அடுத்த கூட்ட நிகழ்ச்சியில், அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்து கொண்டு, எப்போது அதை எடுத்துக்கொள்ளலாம் என்கிற முடிவை எடுப்பதற்கும், அதற்குக் கட்டுப்படுவதற்கும் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏதோ விசாரணைக் குழு அமைப்பதைப் பற்றி டெல்லி வட்டாரங் களின் பேச்சு பத்திரிகைகளில் வந்து இருப்பதாகச் சொன்னார்கள். வட்டாரங்களின் பேச்சு வட்டாரத்தில் நடைபெற்றாலும், நடைபெறா விட்டாலும் பத்திரிகைகளில் சொல்லப்படும். பத்திரிகைகளின் திறமை எனக்கு நன்றாகத் தெரியும். ஆசிரியர் கடிதங்கள், வட்டாரங் களின் பேச்சுக்கள் இவைகளெல்லாம் வந்தாலும் வராவிட்டாலும் அதைத் தயாரித்துக்கொள்கிற திறமை, ஆற்றல் பத்திரிகை நடத்துகிற வர்களுக்கு உண்டு என்பதை நானும் கடந்த காலத்தில் பத்திரிகை நடத்தியவன் என்ற முறையில் நன்றாக அறிவேன். ஆகவே, டெல்லி வட்டாரங்களின் பேச்சு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டாலும், நான் பிரதமருக்குச் சுட்டிகாட்டியிருப்பது ஒன்றும் மிரட்டல் அல்ல, அல்லது மீறி நடப்போம் என்ற அளவுக்கு விடப்பட்ட எச்சரிக்கையும் அல்ல. அரசியல் சட்டத்தின்படி ஸ்டேட் லிஸ்ட், சென்ட்ரல் லிஸ்ட், கன்கரண்ட் லிஸ்ட் என்று மூன்று லிஸ்ட்கள் இருக்கின்றன. அதிலே ஸ்டேட் லிஸ்டிலே உள்ள உரிமைகளில் தலையிடுவதற்கு உரிமை இல்லை என்கிற விளக்கத்தைத்தான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் எழுதியிருக்கிறோம் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

## (7) தகவல் கோரல்.

## "விசாரணைக் கமிஷன் சட்டம்" குறித்து.

DR. H.V. HANDE : Sir, I want an explanation from the Hon. Minister for Law. There is an Act called, the Commission of Enquiry Act. I would like to know whether the 'Oozhal Pattiyal' and the reply of the Government could be brought within the purview of this Act and whether the Central Government are authorised to go into it. Also whether it is possible or not possible for the Central Government to appoint a Commission of enquiry under this Act?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அளிக்கப்படுகின்ற புகார், குற்றச்சாட்டுகளை விசாரிக்கின்ற உரிமை அவர்கள் குறிப்பிட்ட கமிஷன் ஆப் இன்கொயரி ஆக்ட்டுக்கு உண்டு. ஆனால் அரசியல் அமைப்புச்சட்டப்படி அந்த ஆக்ட் கேள்விக்குரியதாக இருக்கிறது. அதைத்தான் சுட்டிக்காட்டினேன்.

DR. H. V. HANDE : The Commission of Enquiry Act is a Central Act and we cannot question a statute which is already in the Statute Book unless that statute is removed from it. So, how can you object to the Central Government from utilising that particular Act and appointing a Commission of Enquiry.

THIRU R. PONNAPPA NADAR : Sir, so far as the Commission of Enquiry Act of 1952 is concerned, the Central Government have formulated rules whereas our State Government have not formulated rules so far. This aspect of the matter has been made mention of by Mr. Justice Ramakrishnan in one of the enquiries conducted by him. So will it not be better for the State Government to frame rules for the working of this Act? Whether the Central Act is valid or not is a moot question which has to be decided by the Supreme Court. So far it has not been challenged and so it would be better that its validity need not be challenged in this forum. I hope the Hon. Minister will enlighten me on this point.

THIRU M. A. LATHEEF : Sir, with regard to the Commission of Enquiry Act, its constitutionality or validity is not questionable here nor is it questioned now. The pertinent point that has been raised by Dr. Hande is, whether the so-called charges made against the Ministry can be enquired into within the ambit of the Act.





The point is whether a group of persons of institutions can be brought within the purview of the Central Act or the State Act or relevant provisions of the items falling within the exclusive authority of the Union or State Governments.

Now the Union Government can institute an Enquiry Commission under the Act of 1952 if they so deemed fit. The question is now about the State Government. The charges have been levelled against the State Government which functions here within the ambit of the Constitution. Some imaginary or fictitious or concocted charges have been levelled by some persons or group of persons and on the basis of that, whether an Enquiry commission under this Act of 1952 can be instituted by the Union Government against the State Government. There is no provision whatsoever. This is the legal position. This is not applicable and not relevant to the State Government. That is my submission.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்று ஒரு "அகெடமிக் டிஸ்கஷன் ஆன் இண்டர்பிரடேஷன் ஆஃப் தி கான்ஸ்டிட்யூஷன்" இங்கே நடந்திருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர்கள் இதைப்பற்றிச் சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விதிகளைப் பற்றிச் சொன்னார்கள். அது பரிசீலிக்கப்படும். இந்த மாநில அரசு, இந்தப் பிரச்னையைப் பொறுத்த அளவுக்கு மத்திய அரசினுடைய அதிகாரம், மாநில அரசினுடைய உரிமை, இவைகளை எடுத்துக்கொண்டு, இதை ஒரு மத்திய-மாநில அரசுப் பிரச்னையாக ஆக்குவதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறோம்.

ஆனால், அதே சமயத்தில் அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் உள்ள உரிமைகளை நாம் மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அவ்வளவுதான் இப்பொழுதுள்ள பிரச்சினையாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு என்று ஒரு தனி அதிகாரம் "ஸ்டேட் லிஸ்டு" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநில சட்ட மன்றத்திற்கும் ஒரு "சுப்ரீம் ஸாவெரினிடி" கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. அதைப்போலவே மத்திய அரசுக்கும், பாராளுமன்றத்திற்கும் "சுப்ரீம் ஸாவெரினிடி" கொடுக்கப்பட்டு, அவர்களுக்கும் "யூனியன் லிஸ்டு" என்ற முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டிற்கும் அதிகாரம் உள்ள "கன்கரண்டு லிஸ்டும்" கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் எழுப்பியுள்ள பிரச்னையெல்லாம், இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி முழு உரிமையோடு, "ஸாவெரினிடி"-யோடு நடைபெறுகிற ஒரு அரசை

[திரு. செ. மாதவன்] [1972 டிசம்பர் 15

இந்தச் சட்ட மன்றம் கண்காணிக்கலாம். இந்தச் சட்டமன்றம் இந்த ஆட்சியைக் கண்காணிக்கலாம் என்பதுதான் அரசியல் அமைப்புச் சட்டம். அதுதான் கூட்டாட்சித் தத்துவம். அதை மாற்றி, இந்த மன்றத்திற்குக் கட்டுப்பட்ட ஒரு அரசை, அமைச்சர் அவையை வேறு ஒருவர், வெளியே இருந்து ஒருவர்—அது மத்திய அரசாக இருக்கலாம், அல்லது வேறு யாராவது இருக்கலாம்—வேறு யாருமே வெளியே நின்று கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டா என்பதுதான் நாங்கள் எழுப்பியிருக்கிற பிரச்னே. அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் விவாதத்திற்குரிய பிரச்னே. இதை நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும். எங்களைப் பொறுத்த அளவுக்கு ...... (குறுக்கீடு) எந்தச் சட்டமாக இருந்தாலும் அதை யாரும் செல்லுமா, செல்லாதா என்று கேட்பதற்கு உரிமை உண்டு. அதிகாரம் உண்டு. இந்தச் சட்டத்தைப்பற்றி நாங்கள் யாரும் குறிப்பிடவில்லை. இப்பொழுதும் குறிப்பிடவில்லை. நாங்கள் சொல்வதெல்லாம், அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் இந்தச் சட்டமன்றத்தின் அனுமதியைப் பெற்று, நடைபெறுகிற இந்த அரசை, அமைச்சரவையைக் கண்காணிப்பதற்கு வெளியிலே இருக்கிற தனிப்பட்ட நபர்களுக்கும், மத்திய அரசுக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதுதான் எங்களுடைய வாதம். அந்த வாதத்திற்கு மத்திய அரசு பதில் சொல்லலாம். நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கலாம். எங்களைப் பொறுத்த அளவிலே அதைத்தான் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்தோடு இந்தப் பிரச்னையை விட்டுவிடலாம்.

## (8) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 54/72)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே "தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

DR. H. V. HANDE: I would not like to take much of the time of the House.



1972 டிசம்பர் 15] [Dr. H. V. Hande]

With regard to cyclone relief, even though the Hon. Chief Minister said the other day that some amount will be allotted and relief given, I find from the proceedings of Parliament that nearly Rs. 20 crores is the damage caused by the recent cyclone. The Supplementary Budget has given some amount. I would like the Hon. Chief Minister to bring in more supplementary provisions later. The whole climate, political climate has been surcharged with emotion that this most important thing cyclone has been lost sight of. I fully agree with the Chief Minister that this demands all party unanimous action. At least for one or two weeks, let us forget about other things and all parties must co-operate in alleviating the sufferings of persons affected by this cyclone. Why I say is, from the fund of reports we are getting, we imagine that the loss has been terrible and let us not give a feeling to those people that we are oblivious to their sufferings. During the Cauvery water dispute the Chief Minister called for all party meeting and we used to meet. Just like that, to discuss this matter also. let us meet once in ten days or once a week. If we have all party meeting, different party leaders might give their assessment of the situation and it may be useful in altering the present political climate also. The Hon. Chief Minister may consider this request also.

There is another problem. It concerns about Vyasarpadi, division No. 42. I had given a petition to the Chief Minister some time ago. He had sent it to the Collector. The Collector was probably taking action on it. But Members of the ruling party (I do not want to specify 'who' without verifying the fact) had prevented the Collector from taking action on my petition to the Chief Minister stating that then it will be the Opposition party that would be getting the good name. The result is, persons entitled to get the amount earlier are not getting it at all. Today is the last day. The Hon. Chief Minister may kindly look into the question and see that the amount is disbursed today itself so that the problem is solved.

Regarding Walajapet Co-operative Society there is the possibility of its being liquidated. This is causing worry to depositors. Since they are not shareholders, they fear their voice will not be heard during share-holders' meeting, when liquidation would be decided upon. The Chief Minister may immediately

pass orders that the interests of depositors will be completely looked after.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : I would explain that even though depositors are not share-holders, yet they are creditors. As such, they get priority and they ought to be consulted at the time of liquidation.

DR. H. V. HANDE : No FIR has been filed till now. I do not know the reason. No action seems to have been taken against the alleged persons. I want the Hon. Minister for Co-operation to find out why action has not been taken so far. I want immediate action. Will the Minister give a categorical assurance?

THE HON. THIRU Si. PA. ADITANAR : I want to say that any one who commits any sort of misappropriation or wrong connected with any co-operative, will not be spared. Anyone who is guilty of misdemeanour or misappropriation will certainly be brought to book. With regard to this Walajapet Co-operative Bank the matter is under investigation by the Police. The main person who is supposed to have done all these things is the Secretary and he is reported to be dead. But the dead body has not been found. That is the reason for the delay in initiating prosecution. If the dead body has been located somewhere, we can leave the Secretary out. Or if he is found to be alive, he can be included in the list of accused. That is the reason for the delay as reported by the Police.

DR. H. V. HANDE : I want the Minister to give an assurance that the interests of depositors would be safe. That assurance has not been forthcoming. I want the Chief Minister to take immediate action with regard to the three or four points I have mentioned.

நண்பகல் 12-00

Thank you.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, பொதுவாக அப்ரோப்ரியேஷன் பில்லிலே அதிக விஷயங்களைக் கிளப்ப வேண்டியது அவசியமில்லை என்றாலும், சில கருத்துக்களைக் கூற மனமுவந்து அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வெள்ளப்பெருக்கு சமயத்தில், பல போலீஸ் அதிகாரிகள், பண்ருட்டியில், நெல்லிக்குப்பத்தில் இருக்கின்ற போலீஸ் அதிகாரிகள், சப் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம்





வெள்ளத்திலிருந்து பாதுகாப்பதற்கு என்னோடு சேர்ந்து பணியாற்றினார்கள். அந்தப் போலீஸ் அதிகாரிகளை, என் தொகுதியைச் சேர்ந்த அவர்களை இந்த அப்ரோபிரியேஷன் பில் மேல் பேசுவதன் மூலமாக பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்—அவர் நிதி அமைச்சராகவும், போலீஸ் அமைச்சராகவும் இருப்பதால் இன்றைக்கு இருக்கிற சி.ஐ.டி. இலாகாவை மேலும் பலப்படுத்த வேண்டும், செயல்படுத்த வேண்டும் என்பது தான்.

நேற்று எம்.ஜி.ஆர்.-ஐப் பற்றி மன்றத்தில் சொன்னார்கள். இது மத்திய அரசாங்கம் விவகாரம், ஆகவே இதில் தலையிட உரிமை கிடையாது என்று பேசப்பட்டது. நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புவது என்னவென்றால் பம்பாய் போன்ற இடங்களில் ஸ்டேட் போலீஸ் இருக்கிறது. கஸ்டம்ஸ் செய்யக்கூடிய வேலைகளை எல்லாம் கூட ஸ்டேட் போலீஸ் செய்கிறது. கள்ளக்கடத்தலைக் கூட பிடிக்கிறார்கள். கள்ளப்பணம் வைத்திருப்பதை, இன்கம்டாக்ஸ் கட்டாமல் ஏமாற்றுகிறவர்களை எல்லாம் கூட ஸ்டேட் போலீஸ் அங்கே பிடிக்கிறது. அதன்மூலம் ஸ்டேட் போலீசுக்கு மூன்று கோடி நான்கு கோடி என்று வெகுமதியாகக் கொடுக்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட கீழக்கரை, சிதம்பரம் போன்ற இடங்களில் கள்ளக்கடத்தல் நடத்தப்படுகின்ற இடங்கள் உள்ளனவே, அந்த இடங்களில்கூட பல சந்தர்ப்பங்களில் ஸ்டேட் போலீஸ்தான் பிடிக்கிறது. கள்ளத் தங்கம் ஏற்றிப்பெருகிறவனைப் பிடிக்க கஸ்டம்ஸ் வர வேண்டும் என்று நம் போலீஸ் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பதில்லை. அது தான் முக்கியம். ஆகவே ஸ்டேட் போலீசுக்கு மத்திய அரசாங்கத் துறையில் ஈடுபட உரிமை இல்லை என்றாலும் குற்றம் செய்பவரை பிடிப்பது என்பது மேண்டேட்டரி ட்யூட்டி. மாநில போலீஸ் துறை அந்த வேலையைச் சரியாக செய்யவேண்டும் என்பதுதான் நோக்கம். சினிமாத்துறையில் உள்ளவர்கள், டாக்டர்கள், வக்கீல்கள் இவர்களிடம் பல பேருக்கு கள்ளப் பணம் இருக்கிறது. மாதச் சம்பளம் வாங்குகிறவர்களிடம் அப்படிக் கள்ளப் பணம் இருப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் சம்பளத்திலேயே வருமான வரியைப் பிடித்து விடுகிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவரவர்களே, சினிமாத்துறையில் எல்லாருமே கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள் அல்ல. சில தயாரிப்பாளர்கள் கடனாளியாகக் கூட இருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : வக்கீல் துறையில் உள்ளவர்களிடம் கள்ளப் பணம் இருக்கிறது என்று உறுப்பினர் சொல்லுகிறார்கள். வக்கீலாக இருக்கிறவர்கள் கணக்கு வைக்கவேண்டும் என்று ஒரு விதி இருக்கிறது. அப்படி கணக்கு வைக்காதவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, பொதுவாக டாக்டர்கள் என்று சொல்வதை விட யாராவது தனிப்பட்ட ஒருவராக இருந்தால் அவரைச் சொல்வது நன்றாக இருக்கும். பொதுவாகச் சொல்லி டாக்டர்களை எல்லாம் விரோதித்துக் கொள்ளாதீர்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இன்னும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னைப் போன்ற வக்கீல்கள், அரசியல் வாதிகள் எப்படிப்பட்ட விசாரணைக்கும் தயார் என்பதையும் இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சட்டமன்ற உறுப்பினர்கள் சொத்து சேர்த்திருக்கிறார்கள் என்றெல்லாம் பொதுவாகச் சொல்வதைவிட குறிப்பிட்டு எங்களிடமே இந்த அவையிலேயே சொல்லுங்கள், பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். இதற்கு ஓம்புட்ஸ்மேன் எல்லாம் தேவை இல்லை. 3000 அல்லது 4000 ஆயிரம் என்று சம்பளம் வாங்குகிறவர்களிடம் கூட சம்பளத்திலேயே வருமான வரி பிடித்துவிடுகிறார்கள். ஆனால் பிசினஸ் பீப்பிளிடம் கறுப்பு பணம் இருக்கிறது. இப்படி பிளாக் மணியை எடுப்பதற்கு ஸ்டேட் போலீசிற்கும் உரிமை இருக்கிறது. அந்த உரிமையை செயல்படுத்த நிதியமைச்சர், முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். நான் நேற்றைய தினம் சொன்னேன் அல்லவா, பம்பாய் போலீசார் பல மத்திய அரசாங்க வேலைகளை செய்து வருகிறார்கள். அதற்காக பல கோடிக்கணக்கான ரூபாய்களை மத்திய அரசாங்கம் ஸ்டேட் போலீசுக்கு வெகுமதியாகத் தருகிறது. கள்ளக்கடத்தல்காரர்களை கண்டுபிடிப்பது எல்லாம் பெரும்பாலும் ஸ்டேட் போலீஸ்தான் பம்பாயில் செய்கிறது. அதையே நாம் செய்ய வேண்டும் என்றுதான் வற்புறுத்துகிறேன். திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மீது பல குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட் அவர் மீது பல குற்றச்சாட்டுகளை லிஸ்டாக கொடுத்திருக்கிறது.





திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது நேற்றைய தினம் அனுமதிக்காத விஷயம். மறுபடி திரும்பவும் அதை வேறு விதமாக நுழைப்பது சரியா என்று நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் சொல்வது போலீஸ் அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதற்குத்தான். இன்பார்மேஷனை பாஸ் செய்வது தவறல்ல. இதைப்பற்றி நான் பாரின் எக்சேஞ்ச் செக்ஷனைப் படிக்கிறேன். .........

Section 4 of the Law relating to Foreign Exchange in India:

Sub-section (2): No person other than an authorised dealer shall buy or otherwise acquire or borrow from or sell or otherwise transfer or lend to, or exchange with any person not being an authorised dealer, any foreign exchange.

Sub-section (3): If any person is found or is proved to have been in possession of any foreign exchange, the burden of proving that the foreign exchange came into his possession lawfully shall be on him.

Sub-section (4): If any person contravenes any of the provisions of this rule, he shall be punishable with imprisonment for a term which may extend to two years or with fine or with both.

Sub-section (5): Any Police officer not below the rank of Inspector of Police, any officer of the Central Excise not below the rank of Deputy Superintendent, any officer of the Central Customs not below the rank of Preventive Inspector, any officer of the Directorate of Enforcement not below the rank of Enforcement Officer or any other officer of the Central Government or a State Government authorised by the Central Government in this behalf may enter any public place and search and arrest without warrant any person found therein who is reasonably suspected of having committed or of committing or of being about to commit a contravention of this rule.

அதோடு மட்டுமல்ல, மத்திய அரசாங்கம் மட்டும் தான், குமாரதான், கணேஷ்தான், சவான்தான் செய்யவேண்டும் என்று இல்லை.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1972 டிசம்பர் 15

செக்ஷன் 5......எனி போலீஸ் ஆபீசர்......எந்த போலீஸ் அதிகாரியாக இருந்தாலும் மத்திய அரசாங்கம் செய்கிற காரியத்தில் அசிஸ்ட் செய்யலாம். அவர்களை உரியவர்கள் மூலமாக கோர்ட்டிற்கு அனுப்பலாம். பாரின் எக்சேஞ் வயலேஷன் இருந்தால் இரண்டாண்டு சிறைத் தண்டனை உண்டு.

பம்பாயில் இருக்கிற போலீஸ் செய்வதைத் தமிழ்நாட்டில் இருக்கிற சி.ஐ.டி. செய்ய வேண்டும் என்றுதான் முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்துகிறேன். இன்றைக்கு மர்மப்பேழையாக இல்லை, கவர்ன்மெண்டிலிருந்து அபிஷியலாக ஷோ காஷ் நோட்டீஸ் 30 சார்ஜஸ் போட்டு அதற்கு ஆகஸ்ட் மாதம் சார்ஜ் மெமோ வந்து அதை வி.பி. இராமன் வாங்கி ஒரு தடவை இரண்டு தடவை என்று இடை உத்தரவு வாங்கி இரகசிய பேரம் நடந்து இந்தக் கட்சியை க்ளோஸ் பண்ணுகிறார். இப்படிப்பட்ட நிலைமை இந்தக் கூட்டத் தொடர் ஆரம்பத்தில் நடந்திருக்கிறது. இந்த நேரத்தில் நான் டில்லியில் இருந்திருந்தால்......இருக்கிற கஷ்டம் நான் இப்போது சட்ட மன்றத்தில் இருக்கிறேன்.........நடக்கிற காரியமே வேறாக இருந்திருக்கும். இன்றைக்கு எங்கே இருந்து சம்மன்ஸ் வந்திருக்கிறது என்றால் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா என்போர்ஸ்மெண்ட் டைரக்டரேட்டிலிருந்து சாஸ்திரி பவனிலிருந்து ஷோ காஷ் நோட்டீஸ் இஷ்யூ பண்ணி இருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, on a point of order, Sir. The hon. Member is reading from a paper.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, if anybody challenges it, I take full responsibility for it.

DR. H. V. HANDE : Let me finish my point of order.

The Hon. Deputy Speaker has given the ruling that normally these things have to be shown to him in advance. Further, from what record he is reading and how he got that record which belongs to the Central Government. These are all mysteries about which I am quite sure the Hon. Deputy Speaker will be worried. So my point is whether it is in order to read that in this House and whether it is necessary.

MR. DEPUTY SPEAKER : I do not think it is our duty to ask how he got that document. It is the responsibility of the



1972 டிசம்பர் 15] [Deputy Speaker]

officer or the department concerned to see that no secret document escapes. When an hon. Member asks my permission to read from a valid document, I have to allow it.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்திலே ஆதாரத்தோடு குற்றச்சாட்டுகளைச் சொல்லும் போது இந்த ஆதாரம் எப்படிக் கிடைத்தது என்று ஒரு உறுப்பினர் கேட்கலாமா ?

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்; ஒரு உறுப்பினர் ஆதாரத்தோடு பேசும்போது அதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்பதற்கு டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால் எப்படி ஆதாரம் கிடைத்தது என்று கேட்பதற்கு உரிமை இல்லை. பாராளுமன்றத்திலும் டாக்குமெண்ட்ஸ் வந்தபோது அப்படித்தான் சொல்லி என்று யிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் கேட்கக் கூடாது சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது இந்த மன்றத்தில் கேட்பது சரியா ?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் இப்போது இந்த "ஷோ காஷ் நோட்டீஸை" பற்றிச் சுருக்கமாக தங்கள் அனுமதியுடன் படித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் படிப்பதைவிட சுருக்கமாகச் சொல்லிவிடுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கொஞ்சம் நேரம் கொடுங்கள். அந்த பாயிண்ட்ஸை மட்டும் படித்துவிடுகிறேன்......

Whereas the Central Government considers it necessary/expedient/necessary and expedient for the purpose of the Foreign Exchange Regulation Act, 1947 (VII of 1947) to obtain and examine the information book(s) and other document(s) specified in the scheduled to this order :

And whereas the Central Government is of the opinion that it is possible for Mr. M. G. Ramachandran to obtain and furnish the information, book(s) and other document(s) specified in the said schedule

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1972 டிசம்பர் 15

Now, therefore, in exercise of the powers conferred by sub-section (2) of section 19 of the said Act, the Central Government hereby requires the said M. G. Ramachandran to obtain and furnish to the Central Government the said information book(s) and other document(s) within fifteen days from the date of this order:

THE SCHEDULE.

In connection with your visit to Japan during Expo 70 for shooting a colour film—

1. The date of the Reserve Bank permit issued to you for release and exchange.

2. The amount for which Reserve Bank has issued you the permit. Please furnish a copy of the permit.

3. The number of artistes and others that accompanied you and their names and addresses.

4. Whether any Reserve Bank permit was issued to them and release of foreign exchange and whether any foreign exchange has been released to them and if so give details.

5. What are the countries visited by you and your group and what are the places visited in various countries—give details with dates.

6. Give details of places and addresses where you and your group stayed in the various places including details of hotels.

7. What was the expenditure incurred for the stay of your group in the various countries—produce receipts.

8. Were the bills to the various hotels paid in cash or in cheques or travellers cheques—give details.

9. Apart from the stay what arrangements you made in various countries for your movement and transport.

10. Whether you engaged the services of any company or firm for transport, if so give names and addresses.

11. Whether you paid for the above in cheque or cash?



1972 டிசம்பர் 15] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

12. Whether you engaged the services of any technician or artiste anywhere outside Japan.

13. In Japan what are the places you and your group visited.

14. In Japan which are the hotels you and your group stayed and details of expenditure whether paid in cash or cheque.

15. For your shooting whether you engaged the services of any technician or other persons—give the names and addresses.

16. Whether you entered into any contract for the services of anybody in connection with the shooting.

17. How much of money you spent towards payment to their services.

18. Whether you paid in cash or cheque—receipts and vouchers to be produced.

19. Whether you engaged the services of any artistes abroad in connection with your shooting—if so give details of terms of contract, details of payment made and produce copies of any contract and produce vouchers and receipts.

20. Have you maintained any accounts relating to the above expenses and if so produce copy.

21. Apart from shooting your film have you taken part in any acting or cultural programmes or gave any public performance.

22. If so have you received any gate collections.

23. Have you in any manner acquired any foreign exchange abroad.

24. Have you repatriated any such foreign exchange.

25. Have you presented any money in foreign exchange to anybody when abroad.

26. When you returned; what were the articles you brought back with you—if so give details and value.

27. Did you surrender any foreign exchange on your return.

28. How many feet of film you have shot abroad.

How does the argument come inside the purview of Assembly discussion?
நேற்று நான் பேசுகிறபோது அதற்கும் இந்த அவைக்கும் என்ன சம்பந்தம் என்றெல்லாம் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறிய கூற்றுக்கும் இந்தத் தமிழ்நாடு சட்டசபைக்கும் என்ன சம்பந்தம் ?.

அடுத்து உறுப்பினர் படித்த டாக்குமெண்டு ஆதண்டிகேடட் டாக்குமெண்டுதானு ? டைப் அடித்துக்கொண்டுகூட வரலாம். அடுத்து உறுப்பினர் படித்தவைகள் எல்லாம் கேள்விகள்தான்—அந்தக் கேள்விகள் எதிலும் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

They are not charges. They are only queries.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : My point is they are charges and these have been framed after verifying facts.
இந்தக் கேள்விகளை ஆதாரம் இல்லாமல் கேட்கமாட்டார்கள். ஹாங்காங் எம்பசி, சிங்கப்பூர் எம்பசிகள் எல்லாம் எம்.ஜி.ஆர். பற்றிய அவ்விடத்து விவரங்களைச் சேகரித்து இரகசியமாக அனுப்பியிருப்பதன் காரணமாகத்தான் இந்த குற்றச்சாட்டே சுமத்தப்பட்டிருக்கின்றது. அப்போது எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் மிக்க பலமாக இருந்தார். ஆகவேதான் கண்ணும்கருத்துமாக இந்தக் குற்றச்சாட்டுகளை அவர்மீது திரு. கணேஷ், திரு. சி. எஸ். ஆகியவர்கள் ஜோடித்தார்கள். நெருப்பு இல்லாமல் புகையாது. இன்பர்மேஷன் இல்லாமல் கேள்வி வராது. இந்த ரெக்கார்டுகளை அழித்துவிட முடியாது. இது க்வாசி ஜுடிஷியல் ப்ரொசீஜர். பார்லிமெண்டிலும் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலும் விடமாட்டார்கள். அதற்கும் இந்தச் சபைக்கும் என்ன சம்பந்தம் என்ருல் மத்திய அரசாங்கம் விடுவதாக இருந்தாலும் நாம் விடக் கூடாது, கோடிக்கணக்கான ரூபாய்களை நம்முடைய மாநிலப் போலீஸ் துறைக்காகச் செலவிடுகிறேம். இவர்கள் இதுபற்றியும் கள்ளக் கடத்தல்பற்றியும் விசாரிக்கவில்லை, அதுபோல கள்ளத்தனமாக பாரின் எக்ஸ்சேஞ்ச் பற்றி விசாரிக்க வேண்டும் என்று சொன்னேன்.

திரு. எம். ஏ. அபுசாலி : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, கடந்த வார வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள்பற்றிச் சில குறிப்புகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக கடந்த வார வெள்ளத்தால்



ளது புவனகிரித் தொகுதியில் 36 கிராமங்களுக்கு மேல் வெள்ளத்தில் ழ்கிப் பாழடைந்துள்ளன. இன்னும் பல கிராமங்களில் தண்ணீரை கற்ற வேண்டிய நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. இன்று ட எனது தொகுதியைச் சேர்ந்த நான்கைந்து கிராமங்களில் உள்ள ர்கள் வந்து அதுபற்றி முதலமைச்சரிடம் சொல்லவேண்டுமென்று கட்டார்கள். நான் நேற்றையதினமே அதுபற்றி முதலமைச்சரிடம் ரு குறிப்புக் கொடுத்திருக்கிறேன், அதை மீண்டும் சொல்ல வேண்டிய ல்லை என்று வற்புறுத்தியிருக்கிறேன்.

குறிப்பாக, நான் சட்டமன்றத்திற்கு வந்ததில் இருந்து புவனகிரி ல் அடைக்கப்படாமல் இருந்துகொண்டிருந்த ஒரு இடத்தைப் ற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். முன்பே அந்த உடைப்பை அடைத் ருந்தால் இந்த மழையினுல் பெருமளவு சேதம் ஏற்பட்டிருக்காது. ந்த உடைப்பு அடைக்கப்படாத காரணத்தினுல் 36-க்கும் மேற்பட்ட ராமங்கள் பாதிக்கப்பட்டுவிட்டன. வீராணம் ஏரியின் மேற்குப் க்கத்து உடைப்பு லாலாப்பேட்டை, வீராணம், திருநாரையூர் ஆகிய குதிகள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கும் நிலையை ஏற்படுத்தியிருக் றது. உரையூர் பக்கத்தில் கொள்ளிடத்தில் ஒரு மதகு இருக்கிறது. ந்த மதகைத் திறந்துவிட்டால் அந்தப் பக்கம் உள்ள தண்ணீர் டிந்துவிடும். இதுபற்றியெல்லாம் நான் அதிகப்படி சொல்லத் தவையில்லாவிட்டாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச ாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : தலைவர் அவர்களே, இந்த தி ஒதுக்கீடு மசோதாவில் மாண்புமிகு உறுப்பினர்கள் இதனைப் யன்படுத்திக்கொண்டு பல்வேறு விஷயங்களை எடுத்துச் சொல்லி ருக்கிறர்கள். குறிப்பாக மழையாலும், காற்றுலும் பாதிக்கப் ட்டுள்ள பகுதிகளுக்கு உடனடியாக நிவாரணம் அளித்து ஆவன சய்வதற்கு அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளுக்கு ல்லாக் கட்சிகளின் சார்பிலும், ஊக்கமும் உறுதுணையும் அளிக்க வண்டுமென்று நான் இந்த மன்றத்தில் பலமுறை கேட்டுக்கொண் ருக்கிறேன்.

நேற்றையதினம் மேலவையில் துணை மானியக் கோரிக்கையின்மீது ான் பதில் கூறிப் பேசுகின்றபோதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட க்களுக்கும், பகுதிகளுக்கும் நிவாரணம் அளிக்கின்ற பணியினை அரசாங்கம் ஒரு போர்க்கால நடவடிக்கைபோல மேற்கொள்ள

இருக்கிறது, மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்காகத்தான் வருகிற 19-ம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் சென்னை மாநகரில் நடைபெற இருக்கிறது. அதற்குள்ளாக ஆங்காங்கு ஏற்பட்டுள்ள சேத விவரங்களை எல்லாம் எல்லா உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் அளித்து, ஆட்சித் தலைவர்கள் இங்கே கூட்டத்திற்கு வருகிற நேரத்தில் தங்கள் தங்கள் மாவட்டம்பற்றிய முழு விவரங்களுடன் வருவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்தப் பேரவையிலும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மேலவையிலும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அல்லாது பாராளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஊராட்சி, பேருராட்சித் தலைவர்களும்கூட அப்படிப்பட்ட மன்ற விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கிவிட வேண்டும். 19-ம் தேதி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சென்னை வருகிறபோது அவர்களிடம் எல்லா விவரங்களும் இருக்கத்தக்க வகையில் விவரங்களைச்
பி.ப. சேகரித்துத் தருகிற பொறுப்பினை ஏற்றுக்கொண்டு வேகமாகச்
12-30 செயல்பட வேண்டுமென்று எல்லோரும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பாராளுமன்றத்திலே, நேற்றையதினம் தமிழ்நாட்டிலே வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம், இழப்பு ரூ. 20 கோடி அளவிற்கு இருக்கும் என்ற தகவல் அறிவிக்கப்பட்டதாக திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அந்தத் தகவல்களை அவர்கள் தமிழ்நாடு அரசாங்கத்தின் வாயிலாகத்தான் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நான் இங்கே வைத்த அறிவிப்பிலேகூட முதல் கட்டமாக ரூ. 3 கோடி தேவைப்படுகிறது என்றும் ஒரு கோடி உடனடியாகச் செலவழிக்க அனுமதிக்கப்படுகிறது என்றும் அறிவித்து இருக்கிறேன். அந்தச் செலவுகள் அங்கங்கே செய்யப்பட்டு உடனடிச் சீரமைப்புப் பணிகள் எல்லா இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், 19-ம் தேதிக்குப் பிறகு விரைந்து இந்தப் பணிகளை முடிக்க முதல் கட்டமாக அரசே, ரூ. 3 கோடி போதாது என்பதையும் பல கோடி ரூபாய் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற இந்த வெள்ள நிவாரணத்திற்காகச் செலவழிக்க வேண்டுமென்பதையும் உடனடியாக மத்திய அரசு தகுந்த நிதியினை மாநில அரசுக்குத் தந்திட வேண்டுமென்பதையும் நாம் தொடர்ந்து வலியுறுத்தி இருக்கிறோம் என்பதையும் நான் இங்கே கூற விரும்புகிறேன்.



மாநகராட்சி சுற்றறிக்கைக்கு உட்பட்டு.பல பகுதிகளில் மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுகின்ற விவரங்களும் இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் 42-வது வட்டத்திலேயுள்ள கக்கன் காலனியில் நிவாரணப் பணம் தருவதைச் சிலபேர் தடுக்கிறார்கள் என்கின்ற புகாரைச் சொன்னார்கள். அவர்கள், என்னிடத்திலே கக்கன் காலனியிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற ஒரு மனுவினைத் தந்தார்கள். அதன்படி உடனடியாக நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அதனை அனுப்பி நடவடிக்கை எடுக்கச் சொன்னேன். அவர்கள், இப்பொழுது பேசிய பிறகும் நான் அதனுடைய உண்மையை தெரிந்துகொள்ளவேண்டி, நான் விடுத்த அறிவிப்புக்கிணங்கி அவர்கள் தந்துள்ள விவரத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கக்கன் காலனியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடிசைகளின் கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 309 குடிசைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இன்னும் சுமார் 100 குடிசைகள் தண்ணீருக்குள் மூழ்கி இருக்கின்ற காரணத்தால்தான் அவைகளைக் கணக்கெடுப்பது தாமதிக்கப்படுகிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்த புகாரின்மேல் 12-ம் தேதி மாலையே கலெக்டர் ஒரு டெப்டி கலெக்டரையும் தாசில்தாரையும் கக்கன் காலனிக்கு அனுப்பி வைத்தார். மனுக் கொடுத்தவர்கள் குடிசைகள் தண்ணீருக்குள் மூழ்கி இருந்த காரணத்தால் கணக்கு எடுக்க முடியவில்லை. இன்று அதிகாரிகள் அங்கு சென்றிருக்கிறார்கள். எல்லாக் குடிசைகளும் கணக்கு எடுத்த பின்பு எல்லோருக்கும் ஒன்றாகப் பணத்தை விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருப்பதால்தான் யாருக்கும் இதுவரையிலே பணம் விநியோகிக்கப்படவில்லை. யார் குடிசையையும் கணக்கு எடுப்பதைத் தடுக்கவோ—யாருக்கும் பணம் கொடுப்பதைத் தடுக்கவோ—யாரும் முயற்சி செய்யவில்லை என்றும்—எல்லாக் குடிசைகளின் கணக்கும் எடுத்து முடிந்த பின்பு எல்லோருக்கும் பணம் தரப்படும் என்றும் கலெக்டர் அறிவித்திருக்கிறார். இதற்கிடையிலே சில பேர், ஏதாவது சொல்லிப் புரளிகளை நம்பிக்கொண்டு சட்டமன்ற உறுப்பினர்களை அணுகுகிறார்கள். அந்த வகையிலேதான் இந்தப் புகார் கூறப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல என்பதையும் நான் இங்கே எடுத்துக் கூறுகின்றேன்.

மற்றும் இந்த வெள்ளச் சேதத்தின்பொழுது போலீசார், அதிகாரிகள் தாமே முன்வந்து அபரிதமான ஒத்துழைப்புத் தந்ததை உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெரிதும் பாராட்டியிருக்

கிறார்கள். நேற்றைய பேச்சில் பொறியாளர்களுக்குக் கண்டனம் இன்றைய பேச்சில் போலீசாருக்குப் பாராட்டு; ஆக, ஆரம்பத்திலிருந்து கண்டனமும் பாராட்டும் கலந்திருந்தாலும், திரு. கிருஷ்ணமூர்த்தியைப் பொறுத்தவரையிலே பாராட்டோடு முடிகிறது என்கிற வகையிலே நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர்கள் வேறு சில வேண்டுகோள்கள் விடுத்தார்கள். அந்த விவகாரங்கள், நாட்டிலே, பொதுவாக, பரவலாகப் பேசப்படுகிற விவகாரங்கள். அதிலே நான் தலையிட்டு அதைப்பற்றி விளக்க விரும்பவில்லை என்பதையும் எடுத்துக்காட்டி, நண்பர் அபுசாலி அவர்கள் தன்னுடைய தொகுதியைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள், அனைவருடைய தொகுதிகளையும் வெள்ள நிவாரணத்தின்பொழுது இந்த அரசு கவனிக்கும் என்ற உறுதியினைத் தெரிவித்து இந்த அளவில் முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—" தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, முதல் பிரிவு, அட்டவணை, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/72)

* மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த)



சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட வரைவு எண் 51/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

ஒரு மனைக்கு மேற்பட்ட நகர்ப்புற நிலங்களுக்குப் படிப்படியான நிலைகளில் வரி விதிப்பு முறையைச் செயல்படுத்துவதுமூலம் மாநிலத்தில் வருவாயைப் பெருக்க 1971-ல் தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் திருத்தப்பட்டது. அதே நேரத்தில் நகர்ப்புற சிறு நில உடைமையாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, ஒரு மனையும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்திருப்பவர்களுக்கு 1381-ஆம் பசலி ஆண்டிலிருந்து (1971-72 லிருந்து) நகர்ப்புற நிலவரி விதிப்பிலிருந்து அரசு விலக்கு அளித்தது.

1971-ஆம் ஆண்டு 30-வது சட்டத்தால் திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தைச் செயல்படுத்துவதனால், தங்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகள்குறித்து வரி செலுத்துவோர் செய்துகொண்ட முறையீடுகளின் பேரில் வரி விலக்கு உச்சவரம்பை ஒரு மனையிலிருந்து இரண்டு மனையாக உயர்த்தவும், இரண்டு மனைகளுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களைப் பொறுத்தவரையில், இரண்டு மனைக்கு மேற்பட்டு அவர்கள் வைத்திருக்கும் நகர நிலங்களின் மொத்த பரப்பின்மீது அவர்களுக்கு நகர்ப்புற நிலவரி விதிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. நகர்ப்புற நிலங்களில் குடியிருப்பதற்காகவென்றே அவற்றின் சொந்தக்காரர்கள் கட்டடங்களை கட்டிக்கொண்டு அவர்களே அவற்றில் வசித்து வரும் பட்சத்தில், அந்த நிலங்களுக்குச் சட்டத்தின்கீழ் 25 சதவீதமாக அனுமதிக்கப்பட்டுவந்த வரி விலக்கினை 50 சதவீதமாக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள விதித்துறைகளின்கீழ் தரும நிலையங்கள் வைத்திருக்கும் நிலங்களுக்குமட்டுமே இதுவரை வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்துள்ளது. இதற்குப் பதிலாக, சமய, அற அல்லது தரும நிலையங்களான அரசு அறிவித்துள்ள நிலையங்களுக்குச் சொந்தமாகவுள்ள அனைத்து நிலங்களுக்கும் இந்த விலக்கு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற நிலச் சொந்தக்காரர்கள் விவரக் கணக்குகளைத் தாக்கல் செய்வதற்கான கால வரையறையை நீட்டிக்கவும் சட்டத்தில் சில விதித்துறைகளைச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. மேலும்,

* 12—12—1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றை ஆணை ஒன்றின்மூலம் நீக்க சட்டத்தின் 44-வது பிரிவு அரசுக்கு அதிகாரமளிக்கிறது. ஆனால், இந்த அதிகாரம் நிர்வாக அதிகாரிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட இயலாது என்று தலைமை உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியதனால் இப்பிரிவை மேற்படி சட்டத்திலிருந்து நீக்கிவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ், மத்தியச் சட்டம், மாநிலச் சட்டத்தைவிட மேலோங்கி நிற்கும் என்பதனால், மத்திய அரசுக்குச் சேரவேண்டிய வரிகளையே முதலில் செலுத்தியாக வேண்டும். அதற்கிணங்க, ஐயத்திற்கு இடமின்றி வகைசெய்வதற்காக இந்த நிலையைத் தெளிவாக்கும்பொருட்டு, சட்டத்தின் 17-வது பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவு, மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது.

இச்சட்ட வரைவினை ஏற்குமாறு இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to offer certain remarks regarding the Bill which is now before the House.

So far as exemption is concerned, a new clause, clause 29 (a) has been inserted. So far as Section 29 (a) is concerned, I would say that many members on the floor of this House have said that extension to two grounds should be given. That was then turned down. At least now, wisdom has dawned and I am very happy to see that that request has now been acceded to by the Government. Ordinarily a person owning two grounds of land should be exempt from the payment of urban land tax and that was the contention raised by Thirumathi Anandanayaki so stoutly, but the Chief Minister was not then amenable to that and he said that he himself would be eligible for the exemption in case the limit was raised from one ground to two grounds and on that very ground he did not concede that then. Now that has been accepted and that is the provision 29 (a).

There are one or two provisions which are said to be modified. That is already stated in the Objects and Reasons and that has been printed along with this Bill. One point I want to stress is



that certain persons have remitted the fees under the old provision when exemption limit was low. Now what is the provision that has been made or what is the arrangement that had been made for the refund of those amounts which have been paid. Supposing I had $1\frac{1}{2}$ grounds and I had paid land tax. What is the machinery or method by which that payment would be refunded to me or adjusted in future. I hope that the Law Minister would clarify that matter. If we approach the authorities there is so much of delay in the disbursement or refund of the payment that has been made earlier. Care should be taken to see that such complaints are avoided and that the amendments that have been brought forward in the parent Act should not cause undue hardship to the people. That is my only point.

Now, Sir, there is also rebate that has been provided for in Clause 26 (1) of the Act. Now, 25 per cent has been increased to 50 per cent. This is a good concession and people who get the benefit will be very thankful to the Government. That is a reasonable, logical tenable thing and this is a welcome measure.

So far as Trusts are concerned, I have got one or two points which I have to make. So far as formation of trusts is concerned many trusts are cropping up and it is better that we watch the movement and growth or formation of these trusts so that the trusts shall not get the benefit. It is better that the assessing authority bestows proper thought and care and attention to see that the trusts which have been formed for evasion of these taxes are guarded against.

So far as the other provisions are concerned, I think it is a welcome measure and so I welcome the Bill *in toto*, if I may say so, and with these observations I commend this Bill for the acceptance of this House.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இந்த விதிவிலக்கு பற்றி சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் மத்தியதர மக்கள் இந்த அரசைப் பாராட்டி வரவேற்பார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நகர்ப்புற மனைகளுக்கு வரி போடுகின்ற சட்டம் ஆளும் கட்சியினாலே பெருத்த நம்பிக்கையோடு கொண்டுவரப்படுவதற்குக் காரணமே சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ஒரு வீடு இருக்கும், வீட்டின் அளவு அரை கிரவுண்ட்தான்

இருக்கும், ஆனால் வீட்டைச் சுற்றி 100 கிரவுண்ட், 150 கிரவுண்ட் என்று இருக்கின்ற அளவிற்கு பெரிய பெரிய பங்களாக்கள்தான் இருக்கும், அந்த பங்களாக்களில் வீடு அளவிற்குப் போக மிச்சம் இருக்கிற இடங்கள் எல்லாம் எந்தவிதப் பயனும் இல்லாமல் வாழ்கின்றவர்களுக்கு இடம் தரப்படாத நிலையில் காலியாக இருந்தன. நாங்கள் எதிர்க் கட்சி வரிசையிலே இருந்தபொழுது அப்பொழுதிருந்த காங்கிரஸ் சர்க்காரை நான் கேட்டேன். சோஷலிஸம் பேசுகிறோம். ஆனால் தனிப்பட்டவர்கள் ஏராளமான காலி நிலங்களை வைத்துக் கொண்டு இருக்க வேண்டுமா? அதைப்பற்றி சர்வே செய்யலாமா என்று கேட்டேன். அதற்குக்கூட அப்பொழுது இருந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை, நாங்கள் பணக்காரர்களின் வீடுகளில் சர்வே செய்ய மாட்டோம் என்ற பதில்தான் எனக்குக் கிடைத்தது.

இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட நேரத்திலே ஒரே ஒரு மனைக்குத்தான் விதிவிலக்கு என்று சொன்னார்கள் என்று கூறினார்கள். ஆனால் "டாப் தி ரிச் அண்ட் பேட் தி பூவர்" என்று எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் வழி வகுத்துத் தந்திருக்கிறார்கள். ஏழைகளுக்குச் சலுகைகளை வழங்க வேண்டும். பணக்காரர்கள் மத்தியிலே இருக்கிற செல்வத்தை அவர்களுக்குப் போக மிஞ்சியிருப்பதை யெல்லாம் எடுத்து ஏழைகளுக்குக் கொடுத்து நல்ல வசதிகளைச் செய்துதர வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அதை மனதில் வைத்துத்தான் ஒரு மனைக்கு விதிவிலக்குக் கொடுத்தோம். சின்னஞ்சிறிய வீடுகளையும் அதைச் சுற்றி பெரிய தோட்டம், துரவுகளையும் வைத்துக் கொண்டிருந்த மாளிகை சீமான்கள், பணக்காரர்கள் எல்லாம் தங்களுடைய மனைகளை யெல்லாம் பங்கு போட்டு, ஆங்காங்கே விற்கக்கூடிய நிலையை இன்றைய தினம் காண்கிறோம். சட்டத்தினால் மட்டும் சோஷலிஸம் வந்து விடாது. நாம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளையும் அது பொறுத்தது. அது இன்றைய தினம் காரியசித்தியாகிவிட்ட காரணத்தினால் ஒரு மனை என்று விதிவிலக்கு இருந்ததை இரண்டு மனை என்று விதிவிலக்குக் கொடுத்திருக்கிறோம். அதனால் ஏழை எளிய மக்கள் இந்த அரசை வாழ்த்துகிறார்கள். இன்றைக்கு மத்திய தர மக்களும் வாழ்த்துவார்கள். ஆகவே இந்தத் திருத்தம் ஒரு நல்ல திருத்தம் என்பதைச் சொல்லி அதனை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற இந்தத் திருத்த மசோதாவை



மனப்பூர்வமாக வரவேற்கிற நேரத்திலே இந்த நாட்டிலே இதனால் நடுத்தர மக்கள் எவ்வளவு தூரம் பயனடைவார்கள் என்பதை யெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதை உண்மையாகக் கொண்டு ஏழை மக்கள் மட்டுமல்ல, நடுத்தர மக்களுக்கும் எல்லா வசதிகளையும் அளிக்க வேண்டுமென்ற முறையிலேதான் இது அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஒரு மனை என்று இருந்ததை 1½ ஆக்க வேண்டுமென்று முன்னாலே சொல்லப்பட்டது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். முன்பு கேட்டார்கள் கொடுக்கவில்லை. அவர்கள் இன்றைய தினம் மக்களுடைய மனப்பான்மையைக் கண்டு மாற்றிக் கொண்டார்கள் என்றால் அதைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்க வேண்டும். ஒன்றரை கூட அல்ல, இரண்டு மனை என்று கொடுத்திருப்பதை நடுத்தர மக்கள் வரவேற்பார்கள், வாழ்த்துவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டாவிட்டாலும் குறை சொல்லாமலாவது இருக்கிற மனப்பான்மை வேண்டும்.

பாராட்டுவதற்கு எவ்வளவோ இருக்கிறபோது பாராட்டாமல் ஏதோ ஊழல், குற்றங்கள், குறைகள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நான் உண்மையிலேயே தெரிவித்துக்கொள்கிறேன், நம்பிக்கைத் தீர்மானத்தில் அன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் இறுதியுரை ஆற்றுகிறபொழுது அந்தப் பேச்சு இந்த மன்றத்தை மட்டுமல்ல, நாட்டுமக்களின் இதயத்தைத் தொட்டு நெஞ்சை நெக்குருகச் செய்யும் உறுதிமொழியாக இருந்தது என்பதை அவர்கள் தலைமையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை எளிய மக்களும், நடுத்தர மக்களும் வாழ்வதற்கு வாய்ப்பை எடுத்துக் காட்டும் மாபெரும் பேச்சாக இருந்தது. சரித்திரத்திலே கிரேக்க நாட்டிலே வரலாற்றுச் சிறப்பு மிக்க பேச்சுக்கள் உண்டு. பேரறிஞர் அண்ணா அவர்கள் சமுதாயத்தை மாற்றியமைக்க அப்படிப்பட்ட பேச்சுக்களை ஆற்றினார்கள். ஏழை எளிய மக்களுக்கு அவர்கள் அன்றைக்கு ஆற்றிய உரையின் மூலம் அளித்த உறுதி கண்ணீர் வருகின்ற அளவிற்கு இதயத்தைத் தொடுகின்ற பேச்சாக இருந்தது என்றால் அதை எல்லோரும் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ஆட்சியாளர்கள் ஆண்டவனை நம்புகிறார்களோ இல்லையோ, நம்புகிறவர்களுக்கு வழிவிடுகிற நிலைமையில் மத ஸ்தாபனங்களுக்கு விதிவிலக்குக் கொடுத்திருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

மத ஸ்தாபனங்களைச் சேர்ந்த சமய ஸ்தாபனங்களைச் சேர்ந்த நிலங்களுக்கு விலக்கு அளித்து இருப்பது ஒரு நல்ல அம்சமாக இருக்கிறது என்பதைக் கூறி இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

* THIRU M. A. LATHEEF : Mr. Deputy Speaker, Sir, I welcome this Bill. This is one more measure which bears testimony to the democratic temperament of this Government which is always inclined to accede to the demands of the public and members of this House. This measure is in furtherance of the concept of welfare State as such I welcome this amending Bill.

The salient features of this amending Bill have been laid down in Sections 29 (*a*), 26 (1) and 29 (*k*).

Under section 29 (*a*), the Bill seeks to enhance the limit of exemption from one ground to two grounds. This is indeed an accomplishment of a long-felt desire of the public. But at the same time, I would like to ask whether it would bring similar benefit to all the people, because, the sound principle of any law is that people situated under smlar crcumstances should always be treated similarly.

Now what happens in this case is, on a particular ground in a Central place of the city a big building might have been constructed which might have been rented out for a large amount and the income from it might have been substantial. But in some places even in the central part of the city, so many hutments have come up and the income from the grounds on which these hutments have sprung up would be very, very low, very nominal rent is received from the dwellers of the hutments. So the benefit to one people would be more and the benefit to the other people would not be substantial. So, while framing the rules, this aspect of the matter may be kept in mind, so far as Section 29-A is concerned.

As regards section 26 (1) wherein the limit of rebate is sought to be enhanced from 25 per cent to 50 per cent, I would like to submit that there are persons who have other avocations in life—businessmen, commercial magnates and enterpreneurs—who just own property and get additional income and who do not depend upon that rental income alone. But there are other persons like



orphans and those who have lost their parents or husbands who depend entirely on the rental income and they should be taxed less.

The poor and the weakest section of the community should be taxed less. It has not been admitted that out State is a Welfare State and we must contrive only welfare measure. So this aspect of the matter should be kept in view and I hope the Hon. Minister will bestow sufficient attention to it.

Section 29 (*k*) should be welcomed by all. As Thiru Ponnappa Nadar has observed, this is a welcome provision. It exhibits a sense of accommodation which the Ministry shows to the various shades of public opinion. Now exemption is given to all lands owned by religious, philanthropic or charitable institutions instead of only to those lands used by philanthropic institutions. Thus, the Government have rendered yeoman service to these institutions by giving this relief. With these observations I welcome the amending Bill which is far-reaching in its consequnces and in its economic, social and religious outlook.

Thank you, Sir.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவைப் பூரண மனதோடு நான் வரவேற்கிறேன். குறிப்பாகத் தமிழகத்தில் வளர்ந்து வரும் மாநகரங்கள் அல்லது புதிதாக மாநகராட்சியாக்கப்பட்ட மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் அங்கு பணிபுரியும் அரசு ஊழியர்களாலும், டாக்டர்களாலும், வழக்கறிஞர்களாலும் அவர்கள் பெரும்பாலும் இரண்டு கிரவுண்டுக்குக் கீழாகத்தான் பெற்றிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாகவும், அதே சமயத்தில் விதிவிலக்கு அளித்திருப்பது அவர்களுக்கு மகிழ்ச்சிகரமாகவும் இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் பெரும்பாலும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் இவ்வாறு இரண்டு கிரவுண்டிற்குக் குறைவாக வைத்திருப்பவர்கள். அவர்களுக்கு இந்தத் திருத்த மசோதா நல்லமுறையிலே வாய்ப்புத் தந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, தொடர்கூட்டம் முடியக்கூடிய இந்த நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் முழுமனதுடன் ' In toto I welcome the provisions of the Bill '. என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதுபோன்ற இந்த நல்ல காரியங்களை அரசு செய்யும்பொழுது மன முவந்து வரவேற்பார்கள் என்று கூறி நானும் இதை முழுமனதோடு ஆதரித்து உரையை முடிக்கிறேன்.

* மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த மசோதா எல்லாத் தரப்பிலும் வரவேற்கப்பட்டது. ஆகவே, அதிகமாக விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். 1972-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து இந்த மசோதா அமலுக்கு வருகிறது. அதற்குப் பிறகு வரி பாக்கி பழைய விகிதாசாரப்படி கட்டப்பட்டிருந்தால், அதிகப்படியாக செலுத்தப்பட்ட தொகை மறுபடியும் கட்ட வேண்டிய பாக்கிக்குக் கழித்துக் கொள்ளலாம். திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் சந்தேகத்திற்குப் பதிலாக அளித்து இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் னுள்ள கேள்வி : "தமிழ்நாடு, 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.





(3) அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

## (ஆ) 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971) சம்பந்தமான வரைவுத் திருத்தம் குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 431-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்கீழ் அச்சட்டத்தின் III ஆம் அட்டவணையைச் சேர்ந்த III ஆம் பாகத்தின் 17-வது விதியிலுள்ள (d) துணை விதியை மாற்றுவதற்காக தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

## வரைவுத் திருத்தம்

1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) III ஆம் அட்டவணையைச் சேர்ந்த III ஆம் பகுதியின் 17-வது விதியிலுள்ள (d) துணை விதியின்கீழ் ஒரு நிதி யாண்டிற்கான இறுதித் தணிக்கை அறிக்கையை மேற்படி மாநகராட்சியின் நிலைக்குழுவிற்கும் அதன் நகலை அரசிற்கும் தணிக் கையாளர்கள் பணிந்தனுப்ப வேண்டிய கால அளவு அந்த நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து எட்டு திங்களுக்குள் இருக்க வேண்டுமென தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் இதனல் அறிவிக்கிருர் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சித் சட்டத்தின் 111-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 111-வது பாகத்தின் 17 (d) விதியில் மதுரை மாநகராட்சி சம்பந்தப்பட்ட கணக்குகளின் தணிக்கை பற்றிய விவர அறிக்கையை நிதி ஆண்டு முடிவிலிருந்து 3 திங்களுக் குள்ளாயினும் அல்லது அரசு அறிவிக்கக்கூடிய வேறு கால அளவிற் குள்ளாயினும் அந்த மாநகராட்சியின் நிலைக் குழுவுக்கும் அந்த அறிக்கையின் இரண்டாவது படியை அரசிற்கும் தணிக்கையாளர்கள் பணிந்தனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. தணிக்கை யாளர்கள் இறுதித் தணிக்கை அறிக்கை அனுப்புவதற்கு இவ் விதியில் குறிப்பிட்டுள்ள 3 திங்கள் கால அளவு மிகக் குறைவு என்று உள்ளாட்சி நிதிக் கணக்கு ஆராய்வாளர் எடுத்துக் கூறி சென்னை மாநகராட்சியில் உள்ளது போல் 8 திங்கள் காலத்தை இதற்கென வரையறுக்கலாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார். இவரது

வேண்டுகோள் நியாயமானதெனக் கருதப்படுகிறது. இதற்கிணங்க, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சித் சட்டத்தின் 17(d) விதியை மாற்றியமைப்பதென்று கருதப்படுகிறது. இச்சட்டத்தில் V, VI விவர அட்டவணைகள் நீங்கலாக, எந்த ஒரு விவர அட்டவணையையும் திருத்தியோ, சேர்த்தோ அல்லது ரத்து செய்தோ 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 431-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அரசு விதிகள் இயற்றலாம். ஆனால், 111-வது விவர அட்டவணையின் 111-ம் பாகத்தில் 17 (d) விதியை மாற்றியமைத்ததற்காகச் செய்யக் கருதியுள்ள ஒரு திருத்தத்தின் வரைவு இந்தச் சட்டத்தின் 431 பிரிவின் (5) உட்பிரிவின்படி சட்டமன்ற இரு அவைகளின் முன் வைக்கப்பட்டு அவற்றின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

இதற்கிணங்க செய்யக் கருதியுள்ள வரைவுத் திருத்தத்திற்கு இம் மன்றம் ஒப்புதலளிக்குமாறு வேண்டுகிறேன்.

இதிலே முக்கியமானது, தணிக்கையாளர்கள் கணக்கைத் தணிக்கை செய்து மூன்று மாதங்களுக்குள் அரசுக்கு வர வேண்டுமென்று மதுரை மாநகராட்சிச் சட்டத்தில் இருக்கிறது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 8 மாத காலம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று மாத காலம் போதாது, சென்னையைப் போல் 8 மாத காலம் கொடுத்தால்தான் முறையாக வைக்க வாய்ப்பு ஏற்படும் என்று கேட்டிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சிக்கு அந்தக் கால அளவைத் தருவதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடர் இன்றோடு முடிவடைகிறது. பேரவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை காலவரையறையின்றி பிற்பகல் 1.03-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.





## 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

46. Notification issued with G.O. Ms. No. 2511, Home, dated the 28th September 1972, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).

47. Notification issued with G.O. Ms. No. 2100, Rural Development and Local Administration, dated the 1st October 1972, in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from the 3rd October 1972. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

### B. *Reports, Notifications and other papers.*

33. Return of Assets submitted to the House by the Hon. Deputy Speaker and Members of the Legislative Assembly *Vide* names below).

As on 31st March 1971—

1. Hon. Thiru P. Seenivasan, *Deputy Speaker.*

*Members.*

1. Thiru S. Alagu Thevar.
2. Thiru D. Irajarathinam.
3. Thiru N. Ganapathy.
4. Thiru N. Kasiraman.
5. Thiru K. R. Krishnan.
6. Thiru G. Sivaperumal.
7. Thiru V. Chinnasamy.
8. Thiru V. Subramaniam.
9. Thiru E. S. Thyagarajan.
10. Thiru Durai Murugan.
11. Thiru Pon Chockkalingam.
12. Thiru S. Murugaiyan.

13. Thiru N. Veerasamy.
14. Thiru K. Jayaraman.
15. Thiru V. Krishnamoorthy.
16. Thiru V. Muthu.
17. Thiru Kadher Batcha alias Vellaichamy.
18. Thiru G. R. Edmund.
19. Thiru S. Subbiah.
20. Thiru N. Muthuvel.
21. Thiru N. Rajangam.
22. Thirumathi A. G. Padmavathi.
23. Thiru T. Sonhiah.

34. One return of Asset as on 31st March 1967 to 1972, one return of Asset as on 31st March 1971, 21 return of Assets as on 31st March 1972 and two return of assets as on 30th April 1972 of the Hon. Minister and Members of the Legislative Council.

35. Return of Assets submitted to the House by Hon. Ministers and Members of the Legislative Assembly (*vide* names below).

As on 31st March 1972—

1. Hon. Dr. M. Karunanidhi, *Chief Minister.*
2. Hon. Dr. V. R. Nedunchezhiyan, *Minister for Education and Local Administration.*
3. Hon. Thiru K. Anbazhagan, *Minister for Public Health.*
4. Hon. Thirumathi Satyavanimuthu, *Minister for Harijan Welfare.*
5. Hon. Thiru P. U. Shamungam, *Minister for Revenue.*
6. Hon. Thiru S. Madhavan, *Minister for Industries.*
7. Hon. Thiru S. J. Sadiq Pasha, *Minister for Public Works.*
8. Hon. Thiru Si. Pa. Aditanar, *Minister for Co-operation.*
9. Hon. Thiru A. P. Dharmalingam, *Minister for Agriculture.*
10. Hon. Thiru K. Rajaram, *Minister for Backward Classes.*
11. Hon. Thiru O. P. Raman, *Minister for Electricity.*
12. Hon. Thiru S. Ramachandran, *Minister for Transport.*
13. Hon. Thiru P. Seenivasan, *Deputy Speaker.*



*Members.*

1. Thiru Rama Arangannal.
2. Thiru S. Alagu Thevar.
3. Thiru S. Arumugam.
4. Thiru C. Arumugam.
5. Thiru A. Rajamanickam.
6. Thiru D. Irajarathinam.
7. Thiru S. Ramanathan.
8. Thiru N. Ganapathy.
9. Thiru K. M. Kathiravan.
10. Thiru N. Kasiraman.
11. Thiru K. R. Krishnan.
12. Thiru V. C. Govindasamy.
13. Thiru R. Govindaraj.
14. Pulavar K. Govindan.
15. Thiru S. Sahadevan.
16. Thiru S. Sangumuthu Thevar.
17. Thiru S. Sadasivam.
18. Thiru P. R. Shanmugam.
19. Thiru M. Sathiamoorthy.
20. Thiru M. S. K. Sathiyendran.
21. Thiru T. V. Sampath.
22. Thiru T. K. Siraimeettan.
23. Thiru T. P. Srinivasan.
24. Thiru A. Chinnasamy.
25. Thiru C. Chinna Vellaiyan.
26. Thiru O. N. Sundaram.
27. Thiru S. K. Subramaniam.
28. Thiru M. Subramanian.
29. Thiru A. K. Subbiah.
30. Thiru M. Surulivel.
31. Thiru A. Swamidhas.
32. Thiru P. Soundrapandiyan.

33. Thiru K. T. K. Tangamani.
34. Thiru E. S. Thyagarajan.
35. Thiru E. K. Duraisami.
36. Thiru S. Duraisamy.
37. Thiru Durai Murugan.
38. Thiru A. M. T. Nachiappan.
39. Dr. R. Nainamalai.
40. Thiru N. S. Balaraman.
41. Thiru Pon Chockkalingam.
42. Thiru P. S. Maniyan.
43. Thiru K. A. Mathialagan.
44. Thiru V Malaikkannan.
45. Thiru N. Manickam.
46. Thiru M. Muthiah.
47. Thiru V. Muthu.
48. Thiru S. Murugaiyan.
49. Thiru K. Ranganathan.
50. Thiru A. M. Raja.
51. Thiru S. K. Vadivelu.
52. Thiru N. Veerasami.
53. Thiru A. Velladurai.
54. Thiru N. Nachiappan.
55. Thiru V. Krishnamoorthy (Tiruchi).
56. Thiru G. R. Edmund.
57. Dr. H. V. Hande.
58. Thiru N. Krishnan.
59. Dr. S. A. Chinnaraju.
60. Thiru C. Palanisamy.
61. Thiru A. Parandhaman.
62. Thiru E. M. Natarajan.
63. Thiru M. Vedachalam.
64. Thiru J. James.
65. Thiru N. Muthuvel.



66. Thiru S. Subbiah.
67. Thiru N. Rajangam.
68. Thiru C. Kaverimanian.
69. Thiru A. Muniyandi.
70. Thiru P. Muthuswamy.
71. Thiru A. M. Moideen.
72. Thiru M. V. Narayanaswamy.
73. Thiru M. Kandaswamy.

@ 36. The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 51 of 1972) with Annexure.

£ 37. The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1972 (L.A. Bill No. 54 of 1972).

& 38. Memoranda presented to the President of India by Thiruvalargal M. G. Ramachandran, M. Kalyanasundaram and others and the reply of the Government thereon sent to the Prime Minister of India.

---

@ Despatched to Members on 13th December 1972.
£ Despatched to Members on 14th December 1972.
& Placed on the Table of the House on 14th December 1972.

[1972 டிசம்பர் 15

## இணைப்பு 1

[315-ம் பக்கத்தில் 190-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

காற்றுத் தூய்மைக் கேட்டைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை: காற்றுத் தூய்மைக் கேடு எவ்வாறு ஏற்படுகிறது, அது ஏற்படக் காரணமாயிருப்பவை யாவை, என்பவை குறித்து விரிவாக ஆராயவும், முதலில் சென்னை மாநகரில் காற்றுத் தூய்மைக் கேட்டைத் தடுக்க எடுக்கப்படவிருக்கும் ஏற்பாடுகள் குறித்து திட்டவட்டமான, நடைமுறையில் சாத்தியமாகக்கூடிய கருத்துரைகளைக் கூறவும் அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. கெடுதி விளைவிக்கும் புகைகளை வெளி விட்டுச் செல்லும் மோட்டார் வண்டிகளின் சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் பேரில், தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளின் 323-வது விதியின் கீழும் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 112-வது பிரிவின் கீழும் வழக்குத் தொடரப்படுகின்றது. 1972 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஆகஸ்டு வரை இத்தகைய 4,584 வண்டிகளின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு, இதுவரை ரூ. 5 முதல் ரூ. 50 வரையிலான அளவில் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. காவல் துறையால் ரூ. 12,542 அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. தீங்கு விளைவிக்கும் புகைகளை வெளியிட்டுச் செல்லுகின்ற அரசுப் போக்குவரத்துத் துறைப் பேருந்துகளைப் பொறுத்தவரை நடவடிக்கை எடுப்பதற்காக காவல்துறை கமிஷனர் அரசுப் போக்குவரத்து இயக்குநருக்கு அறிக்கை அனுப்பியுள்ளார்.

நீர்த்தூய்மைக் கேட்டைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை: தொழிற்சாலைக் கழிவுகளாலும், ஏனைய கழிவுகளாலும் விளைகின்ற நீர்த்தூய்மைக் கேட்டுப் பிரச்னையைத் தீர்க்க ஏற்கனவே நீர் கழிவு நீர்க்கால் தூய்மைப்படுத்தல் குழு ஒன்று உள்ளது. இக்குழு அண்மையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இக்குழு ஒரு நிலைக்குழுவாக இருக்கும். தூய்மைக் கேடு குறித்த அனைத்துக் கூறுகளையும் பற்றிக் கவனிக்கும் அதிகாரங்களை இக்குழு பெற்றிருக்கும். மேலும் இம்மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்குவதற்காக உரிமங்கள் வழங்கும் விஷயத்தில் அரசால் கலந்தாலோசிக்கப்படுகிற முகவரமைப்பு என்ற வகையிலும் இக்குழு அதிகாரங்களைப் பெற்றிருக்கும்.



1972 டிசம்பர் 15]

*Air pollution.*—The Government have constituted a Committee to examine thoroughly the question as to how the Pollution of air is cased and the various agencies causing the Pollution, and to make concrete and practical suggestions regarding the measures to be taken to prevent the Pollution of Air, first in the city of Madras. The report of the Committee has been received and it is under the consideration of Government. Action is taken against the owners of Motor Vehicles emiting noxious gases and they are charged under Rule 323 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 read with section 112 of Motor Vehicle Act. In this year from January to August 1972 the owners of 4,584 of such vehicles have been prosecuted and fined ranging from Rs. 5 to 50 so far. A sum of Rs. 12,542 has been collected by way of fines by the Police Department. In regard to the Government Transport emiting noxious gases the Commissioner of Police has sent the report to the Director of State Transport for action.

*Water Pollution.*—There is already a water and sewage purification Committee to tackle the problem of Water Pollution caused by industrial and other wastes. This Committee has recently been reconstituted. This Committee will be a Standing Committee with powers to look after all aspects of Pollution, as well as an agency to be consulted by Government in the matter of issuing of licences for starting of new industries in the State.

## இணைப்பு 2

[328-ம் பக்கத்தில் 197-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க].

5—8—1971 ஆம் நாளிட்ட குறிப்பாணை எண் 30524/ F.II/71-2.

பொருள் :—வேலைவாய்ப்பு அலுவலகங்கள்—நடைமுறை—நேர்முகத் தேர்வுக்கு வருகைதர விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நேர்முகத் தேர்வுக்காக, வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வருமாறு அஞ்சல் மூலம் விண்ணப்பதாரர்கள் பணிக்கப்படும் பொழுதெல்லாம், போதுமான அவகாசம் அவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. ஆகவே, அவர்கள் உரிய நேரத்தில் நேர்முகத் தேர்வுக்கு வர இயலுவதில்லை என்று கூறப்படுகிறது. வேலை அளிப்போர் மிகக்

குறுகிய காலத்தில் அறிவிப்புக் கொடுப்பதும், விண்ணப்பதாரர் களுக்கு முன்கூட்டியே தகவல் அறிவிப்பதற்கு, வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குக் கொடுக்கப்பட்ட காலம் மிகக் குறைவாக இருந்தாலும், விண்ணப்பதாரர்களை அனுப்பி வைக்குமாறு வேலை அளிப்போர் வேலைவாய்ப்பு அலுவலகங்களை அவசரப்படுத்துவதுமாகிய இதுபோன்ற நேர்வுகளே இவ்வாறு நடப்பதற்கு முக்கிய காரணமாகவுள்ளது என்று, இது குறித்து வேலைவாய்ப்பு–பயிற்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். அதுபோன்ற நேர்வுகளில் இதுபோன்ற தகவல் அறிவிப்புகள் உரிய காலத்தில் விண்ணப்பதாரர்களுக்குக் கிடைக்கப் பெருமலிருப்பதற்கும் வழியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

2. விண்ணப்பதாரர்களுக்கு தகவல் கடிதங்கள் உரிய காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் அனுப்பப்படுவதற்கு இயலும் பொருட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அறிவிப்பு வந்து சேர்ந்த நாளிலிருந்து போதிய காலத்தைக் கொடுக்குமாறும் வரையறுக்கப்பட்ட படிவத்தில் வேலைக் காலியிடங்களைப் பற்றிய முழு விவரங்களுடன் அறிவிக்குமாறும், வேலை அளிப்போரைக் கேட்டுக்கொள்ளலாம் என்று வேலைவாய்ப்பு–பயிற்சி இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

3. இது குறித்து விவரமாக அரசு ஆய்ந்துள்ளது. வரையறுக்கப்பட்ட படிவத்தில் வேலைக் காலியிடங்களைப்பற்றி வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு முன்கூட்டியே அறிவிக்குமாறும், இந்த அறிவிப்பு வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வந்து சேர்ந்த நாளுக்கும், விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்குச் செல்லும் நாளுக்கும் இடையில் குறைந்தது 15 நாட்களாவது இடைவெளி அளிக்குமாறும், வேலை அளிப்போரை வேலைவாய்ப்பு–பயிற்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளலாம் என்று அரசு கட்டளையிட்டுள்ளது. விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்படும் தகவல் அறிவிப்புக் கடிதம், நேர்முகத் தேர்வு நடப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்பு வேலைவாய்ப்பு–பயிற்சி இயக்குநரால் அனுப்பப்பட வேண்டும்.

Memo. No. 30524/F-II/71-2, dated 5th August 1971.

*Sub.* : Employment Exchanges—Procedure—Notice given to applicants for appearing for interviews—Instructions issued.

It has been observed that whenever applicants are directed for interview by post or called to report at the Employment Exchanges, adequate time not given to them and hence they have not been able to report for interview in time. The Director of Employment and Training has stated in this connection that this





happens mainly in such cases where the employers give very short notice of time and almost press the Employment Exchanges to sponsor candidate even though the time given is inadequate for Employment Exchanges to send intimations to applicants in advance. He has stated that in such cases, there is the possibility of candidates not getting such intimation letters, in time.

2. The Director of Employment and Training has suggested that employers may be required to give adequate time from the date of receipt of the notification at the Employment Exchanges and also notify the vacancies in the prescribed form giving full details so that the intimation letters to the candidates may be sent by the Employment Exchanbes, in time.

3. The Government have examined the matter in detail. They direct that the Director of Employment and Training may request the employers to notify the vacancies in the prescribed form to the Employment Exchanges well in advance and to allow an interval of atleast 15 days from the date of issue of the notification to the Employment Exchanges to the date of interview of the candidates. The letter of intimation to the candidates should be despatched by the Director of Employment and Training ten days before the interview.

## இணைப்பு-3.

[329-ம் பக்கத்தில் 199-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) தமிழக மத்திய சிறைச்சாலைகளில் பிப்ரவரி 1972 முடிய 1971–72-ம் ஆண்டில் தயார் செய்யப்பட்ட துணியின் மொத்த அளவு 2,701,572·720 மீட்டர்களாகும்.

(இ) அவைகளின் மதிப்பீட்டுத் தொகை சிறைச்சாலை வாரியாக :—

| | | | ரூ. | பை. |
|---|---|---|---|---|
| 1 | மத்திய சிறை, | மதுரை .. .. | 5,28,720 | 00 |
| 2 | ,, | வேலூர் .. .. | 71,335 | 50 |
| 3 | ,, | சேலம் .. .. | 3,57,840 | 00 |
| 4 | ,, | கோயமுத்தூர் .. | 14,96,971 | 00 |
| 5 | ,, | திருச்சிராப்பள்ளி .. | 59,027 | 00 |
| 6 | ,, | கடலூர் .. .. | 94,085 | 50 |
| 7 | ,, | பாளையங்கோட்டை .. | 1,42,187 | 20 |
| 8 | மாநில மகளிர் சிறை, வேலூர் | .. | 12,488 | 40 |

(உ) சிறைச்சாலையில் நெய்யப்படும் துணி காவல்துறை, தீயணைப்புத்துறை, வனத் துறை, ஊர்க்காவல்படை, சிறைத் துறை முதலியவற்றின் பணியாளர்களின் சீருடைகளைத் தைக்கவும் கைதிகளின் உடைகளைத் தைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. காயக் கட்டுத் துணியும், மருந்து வலைத் துணியும், துவாலைகளும் மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படுகின்றன.

(a) The quantity of cloth produced in Jails during 1971-72 up to February, 1972 was 2,701,572.720 metres.

(b) The value of cloth produced in each Jail during that period :—

| | | | RS. | P. |
|---|---|---|---|---|
| 1 | Central Jail, Madurai | .. | 5,28,720 | 00 |
| 2 | ,, Vellore | .. | 71,335 | 50 |
| 3 | ,, Salem | .. | 3,57,840 | 00 |
| 4 | ,, Coimbatore | .. | 14,96,971 | 00 |
| 5 | ,, Tiruchirappalli | .. | 59,027 | 00 |
| 6 | ,, Cuddalore | .. | 94,085 | 50 |
| 7 | ,, Palayamkottai | .. | 1,42,187 | 20 |
| 8 | State Jail for Women, Vellore | .. | 12,488 | 40 |

(c) The cloth produced by the Jails was utilised for stitching garments for the entire Police, Fire Service, Forest Departments and also for House Guards, Convicts and Jail staff. The Hospitals are supplied with gauze, bandage cloth and towels.

## இணைப்பு 4

[337-ம் பக்கத்தில் 205-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க].

டிராக்டர்களை வாடகைக்குக் கொடுத்தல்—பழுது பார்த்தல் நிலையங்கள் ஐந்தினைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் கீழ்க்காணும் இடங்களில் அமைத்துள்ளது :—

| | இடத்தின் பெயர். | | பயன்பெறும் மாவட்டங்கள். |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | .. .. | செங்கற்பட்டு, வட ஆர்க்காடு. |
| 2 | சேலம் | .. .. | சேலம், தருமபுரி, கோயமுத்தூர், நீலகிரி. |
| 3 | திருச்சிராப்பள்ளி | .. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர். |
| 4 | மதுரை | .. .. | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி. |
| 5 | விழுப்புரம் | .. .. | தென் ஆர்க்காடு. |

மேலும், டிராக்டர் வாடகைக்குக் கொடுத்தல்-பழுதுபார்த்தல் நிலையம் ஒன்றை கோயம்புத்தூரில் விரைவில் ஏற்படுத்த தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் திட்டமிட்டுள்ளது.



ஒவ்வொரு தலைமை நிலையத்தின் கீழும் மூன்று துணை நிலைய களைத் தொடங்க தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் திட் மிட்டுள்ளது. இவ்வாறு செய்தால் மேற்படிக் கழகம் அளித்துவரு டிராக்டர்களை உழவர்கள் அண்மையிலுள்ள இடத்திலேயே பெற்று கொள்ள இயலும், இந்தத் துணை நிலையங்கள் ஏற்கெனவே பொன்னேரி, மதுராந்தகம், திருவண்ணாமலை, தேனீ, பரமக்கு புதுக்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. ஏனை இடங்களில் இந்தத் துணை நிலையங்கள் வருங்காலத்தில் தொடங்க படும்.

குறிப்பு :

டிராக்டர் வாடகைக்குக் கொடுத்தல்-பழுது பார்த்தல் வட்டா நிலையங்களின் அலுவல்கள் பின்வருமாறு :—

(1) டிராக்டர்களை அவற்றுக்குப் பொருத்தமான கருவிக தொடர் வண்டிகளுடன் வாடகைக்குக் கொடுத்தல்.

(2) விசை உழு கருவிகளை வாடகைக்குக் கொடுத்தல்.

(3) ஆழமான துளைக் கிணறுகள் தோண்டுவதற்கு விசை துளையிடு கருவிகளை வாடகைக்குக் கொடுத்தல்.

(4) இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களுக்காகப் பதி செய்தலும் அந்த டிராக்டர்களின் விற்பனையும்.

(5) உத்தரவாதம் அளித்துள்ள காலத்தில் டிராக்டர்க பழுது பார்க்கக் கொண்டு வரப்பட்டால் அவற்றை இலவசமாக பழுது பார்த்துக் கொடுத்தல்.

(6) உழவர்கள் நேரடியாக வாங்கியுள்ள டிராக்டர்கள் உட பட டிராக்டர்கள் அனைத்தையும் இலவசமாகப் பழுது பார்த்து கொடுத்தல்.

(7) கூண்டுச் சக்கரம், சாகுபடிக் கருவிகள், இழு வண்டிக ஆகியவற்றை விற்பனை செய்தல்.

(8) விசை உழு கருவிகளை விற்பனை செய்தல்.

(9) உதிரிப் பாகங்கள், டயர்கள், டியூப்புகள், வேளாண்மை வட்டுகள், குழாய்கள் ஆகியவற்றை விற்பனை செய்தல்.

மேற்சொன்ன வட்டார நிலையங்களுடன் பணிக்களரிகளை இணை கக் கருதப்பட்டுள்ளது. ஆயினும், துணை நிலையங்களில் தற்போது முழு அளவிலான பணிக்களரிகள் இல்லை.

ஒவ்வொரு வட்டார நிலையத்திலும் துணை நிலையத்திலும் உழவர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்காகக் குறைந்தது ஐந்து டிராக்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டும் டிராக்டர்களுக்காக ஏற்படும் தேவையை யொட்டி ஒவ்வொரு நிலையத்திலும் உள்ள டிராக்டர்களின் எண்ணிக்கையை உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. ஐந்து வட்டார நிலையங்களிலிருந்தும் துணை நிலையங்களிலிருந்தும் சக்கரங்கள் கொண்ட 71 டிராக்டர்கள் உழவர்களுக்கு வாடகைக்குத் தற்போது கொடுக்கப்பட்டு வருகின்றன. டிராக்டர்கள் வாடகைக்குக் கொடுப்பதற்கான கட்டண வீதங்கள் பற்றிய விவரங்கள் இக்குறிப்புடன் கூடிய இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மை–தொழில் கழகத்தினால் இயக்கப்பட்டு வரும் டிராக்டர் வாடகை விடும் நிலையங்களின் மூலம், மார்ச் 1971 முதல் ஜூலை 1972 வரை பயனடைந்துள்ள மொத்த ஏக்கராவின் அளவு மற்றும் பயனடைந்துள்ள மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| பிராந்தியக் கூடத்தின் பெயர். | பணிபுரியும் மாவட்டங்கள். | பயனடைந்துள்ள மொத்த ஏக்கராவின் அளவு | பயனடைந்துள்ள மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| காஞ்சிபுரம் .. | செங்கல்பட்டு, வட ஆர்க்காடு | 6,751 | 1,154 |
| சேலம் .. | சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி. | 1,555 | 699 |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் | 2,596 | 673 |
| மதுரை .. | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி. | 2,725 | 769 |
| விழுப்புரம் .. | தென்னாற்காடு | 3,695 | 1,022 |

வண்டி நிலையங்களில், விசை உழு கருவிகளும் உழவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இந்த வட்டார நிலையங்களில் பணிக்களரி வசதிகளையும் கருவிகளையும் கொடுத்திருப்பதன் பயனாக, உழவர்களுக்கு டிராக்டர்களை விற்ற பின்னர் அவற்றில் பழுது ஏற்பட்டு உழவர்கள் கொண்டு வந்தால் அவற்றைப் பழுது பார்த்துக் கொடுக்கவும், அதோடு தனியார் டிராக்டர்களைப் பழுது பார்த்துக் கொடுக்கவும் முடியும்.



டிராக்டர் சொந்தக்காரர்கள் தங்கள் பண்ணைகளிலேயே தங்கள் டிராக்டர்களைப் பழுது பார்த்துக் கொள்வதற்கு இயலும் வகையில் பழுது பார்த்தல் இயல் ஊர்தி ஒன்றைத் தொடங்கவும் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் திட்டமிட்டுள்ளது.

உழவர்களுக்கு மேற்கண்ட வசதிகளை அளிப்பதோடு, வண்டல் மண் பகுதிகளில் துளைக் கிணறுகள் தோண்டவும், பாறைமிகுந்த பகுதிகளில் குழாய்க் கிணறுகள் தோண்டவும் துளையிடு விசைகருவிகளையும் தமிழ்நாடு வேளாண்மை-தொழில் கழகம் வாடகைக்குக் கொடுக்கிறது. தமிழ்நாடு வேளாண்மை–தொழில் கழகத்திடம் தற்போது துளையியிடும் சுழற்கருவிகள் (Rotary drilling rigs) மூன்றும் சம்மட்டி வகையைச் சேர்ந்த துளையிடும் கருவி (Hammer drill) ஒன்றும் உள்ளன. கழகம் விரைவில் மேலும் இரண்டு சம்மட்டி வகை துளையிடும் கருவிகளை வாங்கும். துளையிடும் சுழற் கருவிக்குரிய வாடகைக் கட்டணம் ஓர் அடி துளையிட ரூ. 23-ம் சம்மட்டி வகை துளையிடும் கருவிக்கு ஓர் அடி துளையிட ரூ. 40-ம் ஆகும்.

தமிழ்நாடு வேளாண்மை-தொழில் கழகம் தமக்குச் சொந்தமான துளையிடு கருவிகளைக் கொண்டு இதுவரை மேற்கொண்ட பணியின் அளவினைப் பின்வரும் விவர அறிக்கையில் காணலாம் :—

| துளையிடும் கருவியின் பெயர். | பணியின் கால அளவு. | தோண்டப்பட்ட துளைக் கிணறுகளின் எண்ணிக்கை. | துளையிடப்பட்ட மொத்த ஆழம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | அடி. |
| 1 துளையிடும் சுழற் கருவி DRD—I | 23—9—1970 முதல் 18—4—1972 வரை. | 14 | 5,798 |
| 2 துளையிடும் கருவி DRD—II | 17—10—1970 முதல் 27—4—1972 வரை. | 11 | 4,596 |
| 3 துளையிடும் கருவி DRD—III | 27—9—1970 முதல் 21—3—1972 வரை. | 6 | 2,710 |
| 4 சம்மட்டி வகை துளையிடு கருவி HD—I | 19—8—1970 முதல் 18—6—1971 வரை. | 13 | 3,561 |
| | மொத்தம் .. | 44 | 16,665 |

பிற்சேர்க்கை.

டிராக்டர்களுக்கான வாடகைக் கட்டண வீதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 | கூண்டுச் சக்கரங்களுடன் நன்செய் நிலத்தைச் சேருக்குதல் (ஒரு முறை). | எக்கர் ஒன்றுக்கு ரூ. 20. |
| 2 | சாய்வான வட்டத் தகடுள்ள இயந்திரக் கலப்பை அல்லது பயிரிடு கருவியைக் கொண்டு பரம்படித்தல் அல்லது பயிர் செய்தல் (ஒரு முறை). | எக்கர் ஒன்றுக்கு ரூ, 20. |
| 3 | இரண்டு அல்லது மூன்று சாய்வான வட்டத் தகடுகளுள்ள இயந்திரக் கலப்பையைக் கொண்டு உழுதல். | எக்கர் ஒன்றுக்கு ரூ. 50. |
| 4 | நன்செய் நிலங்களில் தொடக்க நிலையிலும் குறுக்காகவும் பரம்படித்தல், பயிர் செய்தல் அல்லது தொடக்க நிலையிலும் குறுக்காகவும் சேருக்குதல். | எககர் ஒன்றுக்கு ரூ. 27. |
| 5 | 5/6 டன் எடையுள்ள இழு வண்டியைக் கொண்டு பொருள்களை ஏற்றிச் செல்லுதல். | மணிக்கு ரூ. 15 அல்லது ஒரு நாளில் 8 மணி நேரத்திற்கு ரூ. 100. |

குறிப்பு.—ஒரே நாளில் 8 மணி நேரத்திற்கு மேற்பட்டு கூடுதலாகும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூ. 10.

| | | |
|---|---|---|
| 6 | 10/12 டன் எடையுள்ள இழு வண்டியைக் கொண்டு பொருள்களை ஏற்றிச் செல்லுதல். | மணிக்கு ரூ. 25 அல்லது ஒரு நாளில் 8 மணி நேரத்திற்கு ரூ. 200. |
| 7 | கதிரடிக்கும் காரியத்திற்காகக் கருவிகள் இன்றியும் நீர் இறைப்பதற்காக வார்ப் பட்டை கொண்ட உருளைகளுடன் கூடிய டிராக்டர்களை வாடகைக்குக் கொடுத்தல். | 25 பரித்திறனுள்ள (Zetor 2011 டிராக்டருக்கு மணிக்கு ரூ, 20. 50 பரித்திறனுள்ள (பைலாரஸ்) டிராக்டருக்கு மணிக்கு ரூ. 25. |
| 8 | சமப்படுத்துதல் .. .. .. .. | ஜிடார் 2011 டிராக்டர் (25 பரித்திறன்) மணிக்கு ரூ. 15. பைலாரஸ் டிராக்டர்கள் (50 பரித்திறன்) மணிக்கு ரூ. 25. |
| 9 | **விதை உழுகருவி** .. .. .. .. | **எக்கர் ஒன்றுக்கு ரூ. 25.** |



*Answer* :

The Tamil Nadu Agro-Industries Corporation Limited has established five Tractor Hiring-*cum*-Servicing Centres at the following places :

| *Name of place.* | | *District served* |
|---|---|---|
| 1 Kancheepuram | .. .. | Chingleput, North Arcot. |
| 2 Salem | .. .. .. | Salem, Dharmapuri, Coimbatore The Nilgiris. |
| 3 Tiruchirappalli | .. .. | Tiruchirappalli, Thanjavur |
| 4 Madurai | .. .. .. | Madurai, Ramanathapuram, Tirunelveli, Kanyakumari. |
| 5 Villupuram | .. .. | South Arcot. |

One more Tractor Hiring-*cum*-Servicing Centre is proposed to be established at Coimbatore by the Tamil Nadu Agro-Industries Corporation Limited shortly.

Under each main Centre, the Tamil Nadu Agro-Industries Corporation Limited has proposed to start three sub-centres so as to enable the ryots to avail of the tractor service provided by the Corporation within their easy reach. Such Centres are already functioning at Ponneri, Madurantakam, Tiruvannamalai, Theni, Paramakudi and Pudukkottai. Sub-Centres at other places will be started in future.

*Note.*—

The Regional Tractor Hiring-*cum*-servicing Centres are attending to the following activities :—

(1) Hiring of tractors with matched implements and trailers.

(2) Hiring of power tillers.

(3) Hiring of power drills for sinking deep tube wells.

(4) Registration for the sale of imported tractors and actual sales.

(5) Free services during the warranty period.

(6) Repairs and servicing of all tractors including those purchased by farmers direct.

(7) Sale of implements like cage wheels, cultivators and trailers.

(8) Sale of power tillers.

(9) Sale of spare parts, tyres and tubes, agricultural discs, pipes, etc.

The above Regional Centres are proposed to be attached with workshop facilities. However, the sub-centres do not have full scale workshops at present.

At each Regional Centre and Sub-Centre, a minimum of five tractors are stationer for hiring out to ryots. The number of tractors at each centre are proposed to be increased according to the demand for more units. At present, 71 wheeled type tractors are being hired out to ryots from the five Regional Centres and sub-centres. The details about the rate of hire charges for tractors are indicated in the annexure to this note.

The total acreage covered and the total number of farmers benefited under the Tractor Hiring Scheme operated by the Tamil Nadu Agro-Industries Corporation Limited for the period from March 1971 to July 1972 are given below :—

| *Name of centre.* | *Districts served.* | *Total acreage covered.* | *Total number of farmers benefited.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| Kancheepuram .. | Chingleput, North Arcot. | 6,751 | 1,154 |
| Salem .. .. | Salem, Dharmapuri. Coimbatore, The Nilgiris. | 1,666 | 699 |
| Tiruchirappalli .. | Tiruchirappalli, Thanjavur. | 2,596 | 673 |
| Madurai .. .. | Madurai, Ramanathapuram, Tirunelveli Kanyakumari. | 2,726 | 769 |
| Villupuram .. .. | South Arcot .. .. | 3,696 | 1,022 |

At the Regional Centres, power tillers are also hired out to the ryots. With the provision of workshop facilities and tools to render after-sales to the ryots as well as to render repairing and servicing of private tractors.



The Tamil Nadu Agro-Industries Corporation Limited, has proposed to commission a Mobile Service Van so as to enable the tractor owners to have the repairing and servicing facilities at their own farms.

Apart from the above facilities provided to the ryots, the Tamil Nadu Agro-Industries Corporation is also hiring out power drills for sinking bore-wells in alluvial soils and for sinking tube-wells in rocky areas. The Tamil Nadu Agro-Industries Corporation is now in possession of three Rotary Drilling Rigs and one Hammer Drill. Two more Hammer Drills will be procured by the Corporation shortly. The hire charge for Rotary Drill is Rs. 23 per foot and Rs. 40 per foot for Hammer Drill.

The following statement will indicate the quantum of work undertaken by the Tamil Nadu Agro-Industries Corporation Limited so far with the Drilling Rigs owned by it :—

| *Name of drill* | *Period of work.* | *Number Bore wells sunk.* | *Total depth drilled.* |
|---|---|---|---|
| | | | FEET. |
| 1 Rotary Drill DRD-I | 23rd September 1970 to 18th April 1972 | 14 | 6,798 |
| 2 Rotary Drill DRD-II | 17th October 1970 to 27th April 1973. | 11 | 4,596 |
| 3 Rotary Drill DRD-III | 27th September 1970 to 21st March 1972 | 6 | 2,710 |
| 4 Hammer Drill HD-I | 19th August 1970 to 18th June 1971. | 13 | 3,561 |
| | Total .. | 44 | 16,665 |

## ANNEXURE.

### Rates of Hire Charges for Tractors.

| | |
|---|---|
| 1 Puddling of wet land with cage wheels (single operation). | Rs. 20 per acre. |
| 2 Harrowing or cultivating with disc horrow or cultivator (single operation). | Rs. 20 per acre. |

| | |
|---|---|
| 3 Ploughing with disc plough two discs or three discs. | Rs. 50 per acre. |
| 4 Combined initial and cross horrowing and cultivating or combined initial and cross pudding of wet lands. | Rs. 27 per acre. |
| 5 Transporting with 5/6 Ton Trailor .. | Rs. 15 per hour or Rs. 1 per day of 8 hours. NOTE.—In respect of eve hour over and above hours on the same d at Rs. 10 per hour f the extra hour. |
| 6 Transporting with 10/12 Ton Trailor .. | Rs. 25 per hour or Rs. 2 per day of 8 hours. |
| 7 Hiring of Tractor without implements for thrashing purposes and with a belt pulley for lifting water, .. .. | 25 h.p. (Zetor 2011 Tra tor, Rs. 20 per ho 50 h.p. (Byelarus) tract Rs. 26 per hour. |
| 8 Leveller .. .. .. .. .. | Zetor 2011 Tractor (2 h.p.) Rs. 15 per hour. Byelarus Tractors (50 h.p Rs. 25 per hour. |
| 9 Power Tiller | Rs. 25 per acre. |

---

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading " Bill(s) ".

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., **" Committee(s) ", " Council(s) ", " Corporation(s) ", etc.**

**Various subjects like Schools, Colleges, Conferences, Ports,** Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... | ... Announcement. |
| B.O.H. ... | ... Business of the House. |
| C.A. ... | ... Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. ... | Calling Attention Statement. |
